எஸ். செல்வராஜா

ஈழத்தின் தமிழ் வெளியீட்டுப் பெருவெளி:

ஒரு நூலகவியலாளரின் பார்வை

ஈழத்தின் தமிழ் வெளியீட்டுப் பெருவெளி

ஒரு நூலகவியலாளரின் பார்வை

ஈழத்தின் தமிழ் வெளியீட்டுப் பெருவெளி

ஒரு நூலகவியலாளரின் பார்வை

என்.செல்வராஜா

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2016

ஈழத்தின் தமிழ் வெளியீட்டுப் பெருவெளி: ஒரு நூலகவியலாளரின் பார்வை
எழுதியது என்.செல்வராஜா
பதிப்பு : பங்குனி 2016 ©

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 236 4550, மி.அஞ்சல்: kumbhlk@gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Ealaththil Tamil Veliyeeddup Peruveli: Oru Noolakaviyalaalarin Paarvai
By N. Selvaraja
Edition : March 2016 ©

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 011 236 4550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: 699

ISBN 978-955-659-511-6

அணிந்துரை

சமகால ஈழத்து இலக்கியச் சூழலில் வித்தியாசமான, தனித்துவமான ஆளுமை கொண்டவராக நான் கருதுகின்ற திரு. என். செல்வராசாவினது இந்நூலிற்கு அணிந்துரை எழுதுவது மனநிறைவளிக்கின்ற ஒன்றாகவுள்ளது.

அந்நிலைக்கு நான் உள்ளாவதற்கான பின்புலம் யாது என்பது பற்றி முதலில் குறிப்பிடுவது அவசியமானதாக எனக்குப்படுகின்றது.

நூலக சேவையில் ஈடுபடுவதென்பது சமூகத்திற்கு ஆற்றுகின்ற உன்னதமான பணியாகும். அதற்கான காரணம் பற்றி எடுத்துரைக்க வேண்டியது அவசியமன்று. அத்தகைய பணியில் ஈடுபடுவோர் பலர் கடினமான அப்பணி காரணமாக களைப்புற்று அப்பணியை ஆற்றுவதோடு மட்டும் ஓய்ந்து விடுகின்றனர். இந்நூலாசிரியர் அதற்கு மாறானவர். நூலக சேவையோடு தொடர்புபட்ட பல்வேறு விடயங்களைச் செயற்படுத்தி வருபவராகத் திகழ்கின்றார்.

மேற்கூறியவற்றுளொன்றுதான், அவரது ''நூல் தேட்ட'' முயற்சிகள். ஆய்வுப் பணியில் ஈடுபடுபவருக்குத்தான் தெரியும் அதன் முக்கியத்துவம் பற்றி. முழுமையானதும் தொடர்ச்சியானதும் உயிர்ப்புடையதுமான ஆய்வுகளை நூல் வெளியீடுகள் பற்றிய தகவலின்றிச் செய்யவியலாது. கடந்த முப்பதாண்டுக்கால ஈழத்து அரசியல் சூழலில், ஈழத்திலிருப்பவருக்கே ஏனைய பிரதேச நூல் வெளியீடுகள் பற்றி அறியும் வாய்ப்பு அரிதாகவே இருந்து வந்துள்ள நிலையில் நூல் தேட்டத்தின் வரவுகள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. சிறப்பு மலர்களில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பற்றிய அவரது நூல் தேட்ட முயற்சி பலரும் நினைத்துப் பார்க்க முடியாதது, பயன்மிக்கது.

இவரது நூல்தேட்ட முயற்சிகள் ஈழத்துடன் மட்டும் நின்றுவிடாது மலேசிய சிங்கப்பூர் நாடுகளுக்கும் அகன்றிருப்பது பாராட்டப்பட வேண்டியதே. இவரது நூல் தேட்ட முயற்சிகளை மனங்கொண்டு தான் இந்நூலாசிரியரை ஓரிடத்தில் 'ஆய்வாளர்களுக்கு ஆய்வாளர்' என்று நான் குறிப்பிட்டிருந்தமை இவ்வேளை நினைவுக்கு வருகின்றது.

ஈழத்தில் அதுவும் அண்மைக் காலமாக நூலக சேவையில் நுழைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனினும், அத்துறைசார் நூல்கள் தமிழில் அவ்வப்போது வெளிவரினும் அவற்றின் வரவுபோதியதன்று. அவ்

விதத்தில் நூலியல் சார்ந்த நூல்கள் சிலவற்றை அவ்வப்போது இந்நூலாசிரியர் வெளியிட்டு வருவதும் கவனத்திற்குரியது!

மேற்கூறியவாறான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் அவற்றுடன் அமைதி ஓய்வு பெற்றுவரும் நிலையில் இந்நூலாசிரியர் அந்நூல்களை உசாத்துணை களாக்கி ஈழத்து இலக்கியம் சார்ந்த பயனுள்ள கட்டுரைகள் பலவற்றை எழுதி வருகின்றார். அவை புதிய தகவல்கள், புதிய பார்வைகள் கொண்டனவாக விருப்பது கண்கூடு. புதிய தகவல்களுள் சில, உதாரணமாக வேரோடி விழு தெறிந்து நூலிலுள்ள கட்டுரைகள், ஏனைய இலக்கிய ஆர்வலர்கள் இலகுவில் எழுதிவிடக்கூடிய விடயங்களன்று என்பதையும் இவ்வேளையில் குறிப் பிடுவது அவசியந்தான்!

நிற்க, இனி இந்நூலிற்கு வருகின்றேன். இந்நூலிலுள்ள கட்டுரைகளை எழுந்தமானதாகவன்றி உள்ளடக்க ரீதியில் கட்டுரைகள், போக்குகள், நூல் மதிப்பீடுகள், ஆளுமைகள் என வகுத்துத் தந்திருப்பதே இந்நூலிற்கு ஒரு கனதி சேர்க்கின்றது. இலக்கிய ஆர்வலருக்கும் ஆய்வாளருக்கும் அது பயன் தரக்கூடியது!

இந்நூலிலுள்ள கட்டுரைகளை உள்ளடக்க ரீதியில் உற்றுநோக்கும் போது அவற்றுள் நூலகங்கள், வெளியீடுகள், விநியோகம் முதலியன சார்ந்தவை ஒருவகையின. நூல்களை ஆவணப்படுத்தல், ஈழத்து வெளியீட்டுத் துறையின் வெளிப்பாடுகள், பாடசாலை நூலகங்கள், நூல் விநியோகம் என்றவாறு அவை பன்முகப்பார்வை கொண்டனவாக வெளிப்பட்டுள்ளன. நூல்கள் பல மறையும் சூழலில், தேட வேண்டிய பழைய நூல்கள் பல இருக்கின்ற சூழலில், நூல்கள் பேணப்பட வேண்டிய அவசியம் பரவலாக அறியப்படாத நிலையில், அவை பற்றி சிரத்தையின்றி பல நூல் வெளியீட்டுத் திருவிழாக்கள் நிகழ்கின்ற அவலமான நிலையில் அவை பற்றி வாசகரைச் சிந்திக்கத் தூண்டுவதாகவுள்ளது, இப்பகுதியிலுள்ள கட்டுரைகள்.

'ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட' என்ற பகுதியிலுள்ள கட்டுரைகளும் முற்றிலும் வெவ்வேறுபட்ட விடயங்களை பற்றி பேசுவனவாகவுள்ளன. இந்திய அமைதிகாக்கும் படையின் செயற்பாடுகள் பற்றிய நூல்களின் வரவு முற்றிலும் புதிய விடயமாகின்றது. பரிசோதனை இலக்கியங்கள் புதிய பார்வையாகின்றது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சூழலில் எழுந்த நூல்கள் நிச்சயம் பலரும் அறியாதவை. சமகால புலப்பெயர்வு இலக்கியங்கள் தொடர் பான புதிய விடயங்கள் பலவும் ஈழத்தில் இருப்போரால் நிச்சயம் அறிய முடியாதவை. ஆக, இப்பகுதி, இலக்கிய ஆர்வலர்களின் தேடல்களுக்கு வழிகோலுபவை என்பதில் ஐயமில்லை.

நூல் மதிப்பீடுகள் பகுதியிலுள்ள கட்டுரைகளும் பயன்மிகுந்தவை. தேடல் மிகுந்த இலக்கிய ஆர்வலர்கள் கூட அறியாத முற்றிலும் புதியதும் வெவ்வேறு துறைசார்ந்ததுமான நூல்கள் பற்றிய மதிப்பீடுகள் இப்பகுதியிலிடம் பெற்றிருப்பது மனங் கொள்ளத்தக்கது. மிக அண்மைக்கால நூல்கள் பற்றி (உ-ம்: வெற்றிச் செல்வி, குணாகவியழகன் படைப்புகள்) சுடச்சுடக் கவனத் திற்குட்படுத்தியிருப்பது விதந்துரைக்கப்பட வேண்டியதே.

ஆளுமைகள் பற்றிய பகுதியிலிடம் பெற்றிருப்பவர்கள் ஐவரும் மிக முக்கியமான ஆளுமைகளாக அறியப்பட்டவர்கள். நூலாசிரியர் தமது கட்டுரைத் தலைப்புக்களை மேலெழுந்தவாரியாகவன்றி தேர்வுக்குள்ளாக்கிய பின்பே எழுத முற்படுகின்றவர் என்பதற்கான சான்றாக இப்பகுதிக் கட்டுரைகள் விளங்குகின்றன என்பது எனது கணிப்பு.

ஆக, ஆரம்ப நிலைப்பட்ட இலக்கிய ஆர்வலர்கள் தொடக்கம் முதிர்ந்த ஆய்வாளர்கள் வரை பலரதும் சிந்தனைக்கும் தேடலுக்குமான பல் துறைசார்ந்த புதிய தகவல்கள், புதிய உள்ளடக்கங்கள், புதிய தேடல்கள் கொண்ட தொகுப்பு நூலாக இந்நூல் விளங்குகின்றதென்று துணிந்து குறிப்பிடலாம்.

நூலாசிரியரது நூல் தேட்டப் பணிகள் சார்ந்து இறுதியாக ஒரு வேண்டு கோள். சிறப்பு மலர்களைத் தேடித் தொகுத்த நீங்கள், ஈழத்தில் நீண்டகாலமாக வெளிவந்து நின்றுபோய்விட்ட முக்கியமான சஞ்சிகைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகள் பற்றிய தொகுப்பு ஒன்றை ஏன் தரக் கூடாது? என்பதே அது வாகும்.

வாழ்த்துக்களுடன்

பேராசிரியர் செ. யோகராசா

முன்னுரை

இன்று ஈழத்துத் தமிழ் வெளியீட்டுப் பெருவெளியின் முக்கிய பாத்திரமாகத் தோற்றுபவர்கள் வாசகர்களே. அவர்களுக்காகவே படைப்பாளிகள் எழுது கிறார்கள்; அவர்களுக்காகவே வெளியீட்டாளர்கள் பதிப்பித்து வெளியிடு கின்றார்கள். இன்று வாசிப்பு எம்மவரிடையே அருகிவருகின்றது என்று மேடைகளிலும், நூல்களிலும் ஓலமிடுபவர்கள் தங்கள் வாழ்வில் எத்தனை பேரை வாசகர்களாக்கியிருக்கிறார்கள் என்று கேட்பதற்கு எம்மவர்களிடம் துணிச்சலுமில்லை, ஓலமிடுபவர்களிடம் பதிலும் இல்லை.

இன்று தம்மிடம் நூலகங்களைக் கொண்டுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் திறந்த வாசிப்பு முறைக்கு எத்தனை அதிபர்கள் தயாராகவுள்ளார்கள்? புத்தகக் கொள்வனவில் பாடவிதானத்துடன் தொடர்புடைய பயிற்சிப் புத்தகங் களைத் தவிர, விரிந்த வாசனைக்கான நூல்களைக் கொள்வனவு செய்வதில் எத்தனை பாடசாலைகள் அக்கறை செலுத்துகின்றன? பள்ளிச்சிறார்களுக்குப் பாடம் நடத்தும் எத்தனை ஆசிரியர்கள் தங்களை நல்ல வாசகர் என்று சொல்லிக்கொள்ளும் திராணியுள்ளவராக இருக்கிறார்கள்? கேள்விகள் நிறையவே உள்ளன. பதில் தான் சங்கடத்தை உருவாக்கும்.

யாழ்ப்பாணத்தில் சுமார் 50 நூலகத்துறை மாணவர்கள் குழுமியிருந்த ஒரு அரங்கில் ''எத்தனை பேர் கடந்த மூன்று மாதங்களில் ஒரு நூலையாவது, தமது பாடவிதானத்துக்கு அப்பால் வாசித்தீர்கள்'' என்ற கேள்விக்கு சாதகமான பதிலை ஆறுபேர் தான் துணிந்து வழங்கியிருந்தார்கள். இந் நிலையில் எதிர்கால நூலக சமூகம் எப்படி நல்ல வாசகர்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை பிறக்கும்?

இன்று ஈழத் தமிழ்ச் சிறார்களுக்கு ஆரம்பக் கல்வியுடன் பொது வாசிப்பையும் ஊக்குவிக்கும் சிந்தனை விருத்தி எமது கல்வியாளர்களிடம் ஏற்படவில்லை. ஒரு நூலகத்துறை மாணவர், நல்ல வாசகராகவும் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லாததுபோலவே, ஆசிரியராகப் பயிற்சிபெறும் ஒருவர் விரிந்த வாசிப்புத்திறனை வளர்த்துக்கொண்டவராக இருக்க வேண்டும் என்ற நியதியும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் இன்று இல்லை. ஒருவேளை, தகுதிகாண் நேர்முகப் பரீட்சைகளில் இக்கேள்வி அத்தியாவசியமாக்கப் பட்டால், இலங்கையில் ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு எற்பட்டுவிடும்.

பாடசாலைகளில் விரிந்த வாசிப்புக்கான களத்தை அமைத்துக்கொடுத்து ஊக்கப்படுத்தினால், அங்கு நல்ல வாசகர்கள் உருவாகுவார்கள். நல்ல வாச

கர்கள் எம்மிடையே உருவாகினால் அவர்களுக்குப் படையலிடும் வகையில் தீவிரமான படைப்பாளிகள் உருவாகுவார்கள். படைப்பாளிகள் பெருக வெளியீட்டுத்துறை புத்துயிர்பெறும். வெளியீட்டுத்துறையின் வளர்ச்சி நாட்டின் அறிவியல் வளர்ச்சிக்குத் துணைபோகும்.

இலங்கையில் தமிழ் வெளியீட்டுப் பெருவெளியில் இன்று நடப்பதென்ன? நல்ல வாசகர் அணி இல்லாததால் வெளியீட்டுத்துறை தேடுவாரற்று நலிந்துசெல்கின்றது. ஒரு நூலில் ஆயிரம் பிரதிகள் அச்சடிப்பதே சிக்கலாக உள்ளது. 200 அல்லது 300 பிரதிகள் அச்சிடப்படும் நூல்களே எராளம். விநியோகச் சிக்கல்கள், சந்தைவாய்ப்பின்மை என்று காரணங்கள் பல.

இலங்கையின் பிரபல தமிழ் நூல் விற்பனையாளர்கள் உள்ளூர் நூல்களின் விற்பனையில் அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள்; தமிழகத்து நூல்களை தரம்பாராது விலைகொடுத்து வாங்கித் தமது தட்டுகளை நிரப்புவதில் தான் அவர்களது அக்கறை காணப்படுகின்றது என்ற குற்றச்சாட்டொன்றும் உள்ளது. இலாபநோக்கம் கொண்ட வியாபாரிகளான அவர்களும் என்ன செய்வார்கள்? ஈழத்துப் பதிப்புலகம் பற்றி அவர்களுக்கு ஏது அக்கறை? அதிகமாக விற் பனையாகும் பாடநூல்களை அச்சிட்டு வரும் நிரந்தர வருவாயை மட்டுமே அவர்கள் உள்ளூரில் எதிர்பார்க்கிறார்கள்.

இன்று சிறுவர் இலக்கியம் பற்றிப் பேச்செடுத்தால், அங்கு சிறுவர் பாடல்களும், நீதி நூல்களும்தான் 'பழைய கள்ளு புதிய மொந்தை' என்ற பாணியில் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் உலக நடப்புகளைத்தர ஏன் எமது சிறுவர் நூல் படைப்பாளிகள் முன்வருவதில்லை? முன்னர் செங்கை ஆழியான் சில நூல்களை சிறுவர் களுக்காக வெளியிட்டார். சந்திரனின் கதை, சூரியனின் கதை, பூமியின் கதை போன்ற சிறுவர் அறிவு நூல்களை தனது துறைசார்ந்து வெளியிட்டிருந்தார். அந்நூல்களே பல சிறார்களைப் பின்னாளில் உயர்கல்வியில் புவியியல் துறையை நாட வழிவகுத்தது.

உலகெங்கும் சிறுவர்களுக்கான நூல்களை பல்வேறு துறைசார் வல்லுநர்களும் மேதாவிகளும் முன்வந்து எழுதிக் குவிக்கிறார்கள். அவர்களது துறையின் பல்வேறு பரிமாணங்களையும் சிறுவர்களுக்கேற்ற வகையில் எளிமையாகச் சொல்கிறார்கள். இன்று இலங்கையின் தமிழ் வரலாற்றாசிரியர்கள், ஊடகவியலாளர்கள், சமூகவியலாளர்கள், விஞ்ஞானத்துறை விரிவுரை யாளர்கள் என்போர் தத்தமது துறைகள் பற்றி, மாணவர்களின் பாடப்பரப்பிற்கு அப்பால் நின்று எழுதத் துணியாமைக்கு என்ன காரணம்? தமது தரம் தாழ்ந்து விடும் என்ற எண்ணமா? தத்தமது துறைகள் பற்றிய அக்கறையை இள

வயதினரிடம் ஏற்படுத்தினால்தானே பின்னாளில் வளர்ந்து அவர்களிற் சிலராவது அத்துறையை மன விருப்புடன் நாடுவார்கள்?

இன்று இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை கணிசமானது. இவர்கள் கடந்த 30 ஆண்டு காலமாக உருவாக்கியுள்ள சந்தை வாய்ப்பை சில்லறை வர்த்தகர்கள், மரக்கறி மற்றும் மீன் வியாபாரிகள் பயன்படுத்திய அளவுக்கு, ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளோ வெளியீட்டாளர்களோ பயன்படுத்தவில்லை. தமிழகத்துப் படைப்பாளிகள் எம்மவரின் தமிழ்த்தேசிய உணர்வினை நன்றாக உள்வாங்கி வெளியீட்டுத் துறையில் தமிழகத்திலும், புகலிடத்திலும் அதிக லாபமீட்டிக்கொள்ளும் அளவுக்கு எம்மவர்கள் சிந்தித்துச் செயலாற்றும் அக்கறை கொண்டவர்களாக இல்லை. இது வேதனைக்குரிய விடயமாகும்.

இத்தகையதொரு தாயகத்தின் வரட்சியான வெளியீட்டுப் பெருவெளியில் நின்று ஈழத்து இலக்கிய முயற்சிகளை உலகின் பிற மூலைகளுக்கு எடுத்துச் சென்று அங்குள்ள எம்தமிழினத்தின் வாயிலில் சேர்க்கும் முயற்சியே என்னுடைய இச்சிறு தனிமனித முயற்சியாகும். இம்முயற்சியின் ஒரு பகுதியாகவே உலகத் தமிழ் ஊடகங்களிலும் மின் ஊடகங்களிலும் அண்மைக் காலத்தில் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளின் தேர்ந்த தொகுப்பாக இந்நுல் வெளிவருகின்றது.

எனது படைப்புகளை கட்டுரைகள், போக்குகள், நூல்மதிப்பீடுகள், ஆளுமைகள் என நான்கு பகுதிகளாகப் பிரித்து, அவற்றில் எனது 35 கட்டுரைகளைத் தேர்ந்து தொகுத்திருக்கும் திரு.க. குமரன் அவர்களுக்கும், இந்நுலை செவ்வனே வெளியிட உதவிய கொழும்பு குமரன் புத்தக இல்லத்தின் நூலாக்கக் குழுவினருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

லண்டன் **என்.செல்வராஜா**

20.10.2015

பொருளடக்கம்

அணிந்துரை v

முன்னுரை viii

கட்டுரைகள்

1. ஈழத்தமிழரின் நூல்களை ஆவணப்படுத்துவதில் நூல்தேட்டத்தின் பங்களிப்பும் அது எதிர்கொள்ளும் சவால்களும் 1

2. இலங்கைத் தமிழ் வெளியீட்டுத் துறையின் எதிர்காலம் 20

3. தமிழியல் வெளியீட்டுத் தொடர்பகம் இன்றைய அவசரத் தேவை 26

4. பாடசாலை நூலகங்களும் எமது சமூகத்தின் வாசிப்புத் திறனும் 30

5. இலக்கியப் படைப்பாளிகள் மட்டும் தான் எழுத்தாளர்களா? 39

6. பிரித்தானியாவில் தமிழரின் நூல் வெளியீடுகளும் வெளியீட்டு விழாக்களும் 43

7. தமிழாராய்ச்சி மாநாடுகளும் தமிழின் பெருமைபேசும் மாநாடுகளும் காலத்தின் தேவை என்ன? 48

8. 'புக்ஸ் எப்ரோட்' அமைப்பும் இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களில் அதன் பணியும் 56

போக்குகள்

9. பல்கலைக்கழகப் பின்புலத்தில் உருவான சில சிறுகதைத் தொகுதிகள் 65

10. ஈழத்தின் பிரதேச வரலாறு: ஓர் அறிமுகம் 70

11. அண்மைக் காலத்தில் வெளிவந்த ஈழத்தவரின் சில மொழிபெயர்ப்பு நாடக நூல்கள் 81

12. ஈழமண்ணில் இந்திய இராணுவம் நூல்வழிப் பதிவுகள் பற்றியதொரு தேடல் 86

13. ஈழத்துத் தமிழ் நூல்களினூடாக மாற்றுக் கருத்துக்கள் பற்றிய ஒரு வரலாற்று நோக்கு 117

14. புதுமை விரும்பிகளின் பரிசோதனை இலக்கியங்கள் 125

15. ஈழத்தமிழரின் புலப்பெயர்வு இலக்கியச் செல்நெறியின் சில தடப்பதிவுகள் 133

16. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின் எழுந்த ஈழத்தவர்களினதும் அவர்கள் சார்ந்ததுமான குரல்கள்: ஒரு நூலியல் தேடல் 164

17. யாழ்ப்பாணம் சிவயோகர் சுவாமிகளைப் பற்றி ஈழத்தில் எழுந்த சில நூல்கள்: ஒரு நூலியல் பதிவு 178

நூல் மதிப்பீடுகள்

18. மேழிக் குமரனின் 'காலடிச் சுவடுகள் இளவாலைக் குறிப்பேடு' 187

19. சிவ. தியாகராஜாவின் 'புராதனகால இலங்கையும் பூர்வீக மக்களின் பண்பாடும்' இலங்கையின் புராதன வரலாற்றைப் புரட்டிப்போடும் புதியதொரு ஆய்வு நூல் 192

20. பேராசிரியர் கோபன் மகாதேவாவின் பதிப்பும், படைப்பும் 'பூந்துணர் 2010', 'கோபன் மகாதேவா: சிறுகதைகளும் நாடகங்களும்' ஆகிய இரு நூல்கள் பற்றிய பார்வை 197

21. 'பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும்': ஒரு நூலியல் பார்வை 205

22. சங்க இலக்கிய நுகர்வாளர் நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவரது இரு நூல்கள் பற்றியதோர் அறிமுகம் 210

23. புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் உரைகல் ஒன்று
ஈழத்துப் படைப்பாளி சு. குணேஸ்வரன் பற்றிய ஒரு பார்வை 214

24. தமிழரின் உணர்வுகளை உரத்துச் சொல்லும்
இரு சிங்களப் படைப்பாளிகளும் அவர்களது நூல்களும் 221

25. ஒரு முன்னாள் போராளியின் முள்ளிவாய்க்கால் நினைவுகள்
'முயற்சித் திருமகள்' வெற்றிச்செல்வியின் படைப்பாளுமை 227

26. 'வெற்றிமணி'யின் வெளியீட்டுப் பாரம்பரியம்
மு.க. சுப்பிரமணியம் முதல் மு.க.சு. சிவகுமாரன் வரை 231

27. இலக்கியப் பதிவுகளினூடாக நீர்கொழும்பூர் நினைவுகள்
லெ. முருகபூபதியின் படைப்பிலக்கியத்தின் வழியான
ஒரு பார்வை 248

28. குரு-அரவிந்தனின் படைப்பிலக்கியப் பணிகள் 257

29. 'முகடு': பாரிசிலிருந்து ஒரு இளையோர் சஞ்சிகை 260

30. 'நஞ்சுண்டகாடு':ஒரு போரிலக்கிய நாவலின் மீள் உயிர்ப்பு 268

ஆளுமைகள்

31. தனிநாயகம் அடிகளார் 276

32. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி: வாழ்வும் பணிகளும் 287

33. அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி
ஈழத்தமிழ்ச் சமூகத்தின் அணையா விளக்கு 290

34. எஸ்பொ: வரலாற்றில் வாழ்பவர் 301

35. மலையகத்தின் இலக்கிய ஆளுமை
அமரர் சாரல்நாடனின் வாழ்வும் பணியும் 306

கட்டுரைகள்

1

ஈழத்தமிழரின் நூல்களை ஆவணப்படுத்துவதில் நூல்தேட்டத்தின் பங்களிப்பும் அது எதிர்கொள்ளும் சவால்களும்

அறிமுகம்

நூல்கள் எமது இனத்தின் பண்பாட்டை, கலாச்சார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பதிவு எமது வளத்தை, அறிவின் தேட்டத்தை எமது தலைமுறைக்கும், அடுத்து வரும் தலைமுறைக்கும் எடுத்துச் சொல்லும் வல்லமை படைத்தன. இத்தகைய பதிவுகள் நாகரீகம் மிக்க ஒவ்வொரு இனத்திற்கும் மிக அவசிய மானதாகும். நேற்றைய பதிவுகள் இன்றைய வரலாறு. இன்றைய பதிவுகள் நாளைய வரலாற்றாசிரியர்களுக்கு ஆதாரங்களாக இருக்கப்போகின்றன.

ஒரு நாட்டின், ஒரு தேசியத்தின் அறிவேடுகளைப் பதிவுசெய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்டவையே உலகநாடுகளில் இயங்கி வருகின்ற ஆவணக் காப்பகங்களும், தேசிய நூலகங்களுமாகும். உலக நாடுகளைப் பொறுத்த வரையில் தத்தம் தேசிய இனங்களின் அறிவுத்தேட்டத்தை பாதுகாத்துக் கொள்ளவும் அவற்றைப் பதிந்து கொள்ளவும் அதிகாரபூர்வமான இத்தகைய நிறுவனங்களை நிறுவி, அதற்கான சட்டப்பாதுகாப்பையும் வழங்கி, தத்தம் தேசிய இனத்தின் அறிவேடுகளை ஆண்டாண்டு காலமாகப் பேணிவருகின்றன. தமிழர்களான எம்மைப் பொறுத்தவரை எமக்கென்றொரு நாடின்றி உலகமெல்லாம் குடியேறிப் பரந்து வாழும் இனமாக எம்மை அடையாளப் படுத்திக் கொண்டிருக்கின்றோம். எமது அறிவியல் வளங்களைப் பேண

நாம் சார்ந்துள்ள நாடுகளின் பிரதான தேசிய இனங்களின் நிழலில் இத்தகைய சட்டப்பாதுகாப்புடன் கூடிய அமைப்புக்களின் வாயிலாகவே அவர்களது ஆவணங்களுடன், எமது ஆவணங்களையும் சேர்த்து, அவர்களே பதிவு செய்யவும் பாதுகாக்கவும் விட்டுவிடுகின்றோம்.

நூற்பட்டியல் வரலாறு

தேசிய நூல்விபரப்பட்டியல் முயற்சியென்பது எமக்குப் புதியதொன்றல்ல. இலங்கையில் இதற்காக, 19ம் நூற்றாண்டிலேயே வழிகோலப்பட்டு விட்டது. 1885இல் உருவாக்கம் பெற்ற அச்சக வெளியீட்டகச் சட்டமூலத்தின் (அத்தியாயம் 179) வாயிலாக இலங்கையில் அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினதும் விபரம் இலங்கையில் அச்சிட்ட நூல்களின் பட்டியலாகப் பதிவு செய்யப்பட்டு காலாண்டுக்கொருமுறை அரசாங்க வர்த்தமானியின் (Government Gazette) ஐந்தாவது பிரிவாக வெளியிடப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. செப்டெம்பர் 1949 இல் இலங்கை, UNESCO அமைப்பின் அங்கத்துவ நாடாகிய பின்னர், நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூற்பட்டியலின் தேவை வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. அக்காலகட்டத்தில் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தம் மற்றும் அரசியல் மாற்றங்கள் காரணமாக நூலியல் தேவைகளும், வழங்கல்களும் துரிதமாக அதிகரித்தன.

இதன் விளைவாக, 1952இல் இலங்கைத் தேசியநூல்விபரப்பட்டியலுக்கான உப ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் பரிந்துரையின் பேரில் இலங்கை வெளியீடுகளுக்கும் இலங்கை தொடர்பான பன்னாட்டு வெளியீடு களுக்குமான ஒரு தேசிய நூல்விபரப்பட்டியல், சர்வதேசத் தராதரத்துடன் ஒத்தியையக்கூடியதாக உருவாக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

அக்காலப்பகுதியில் இலங்கையின் சுவடிகள் காப்பகத்தினால் அரசாங்க வர்த்தமானியின் ஐந்தாவது பிரிவாக வெளியிடப்பட்டுவந்த **இலங்கையில் அச்சிட்ட நூல்களின் பட்டியலும்,** இலங்கைப் பல்கலைக்கழக நூலகத்தினால் மாதாந்தம் தொகுக்கப்பெற்றுப் பிரபல்யமடைந்திருந்த **பல்கலைக்கழக நூலகத்தின் புதிய நூற்சேர்க்கைக்கான பட்டியலும்** ஒருங்கிணைந்ததாக தேசிய நூற்பட்டியலைத் தயாரிப்பதென முடிவாயிற்று. பதிப்பகச் சட்டத்தின் மூலம் பெறப்படும் அனைத்து நூற்பிரதிகளிலும் ஒவ்வொன்று இலங்கைப் பல் கலைக்கழகத்திற்கும் பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டு வந்தமையால் தேசிய நூற்பட்டியலுக்கான நூல்களின் விபரங்களைத் தொகுப்பது அங்கு எளிதா யிற்று. நீண்டகாலப் பாரம்பரியமுள்ள பிரித்தானிய தேசிய நூற் பட்டியலின் பிரதம ஆசிரியராகவிருந்த A.J. வெல்ஸ் அவர்களின் சேவையும் ஆரம்ப

கட்டத்தில் இதற்காகப்பெறப்பட்டது. இலங்கைத் தேசிய நூற்பட்டியல் தொகுப்பிற்குப் பொருத்தமான அலுவலகம் போராதனையில், பல்கலைக் கழகத்திலேயே அமைக்கப்பட்டது. முதலாவது இதழ் நவம்பர் 1962 இல் வெளிவந்தது.

இலங்கைத் தேசிய நூல்விபரப்பட்டியல்

தற்போது, கொழும்பு சுதந்திரச் சதுக்கத்திலுள்ள இலங்கைத் தேசியநூலகத்தின் பொறுப்பில் இது வெளியிடப்படுகின்றது. உரியகாலத்தில் பிரசுரமாகாமலும், பரவலாக விநியோகிக்கப்படாமலும், இழுத்தடிப்புச் செய்யப்படுவதாலும் முழுமையான நூல்களின் பட்டியலை என்றுமே வெளியிடமுடியாமல் போன தாலும் இலங்கைத்தேசிய நூற்பட்டியல் இலங்கையில் பிரபல்யமாகவில்லை. மாறாக, பேராதனை பல்கலைக்கழக நூலகராகவிருந்த எச்.ஏ.ஐ.குணத்திலக்கவின் A Bibliography of Ceylon: a systematic guide to the literature on the land, people, history and culture published in the Western languages from the sixteenth century to the present day என்ற ஆங்கில நூல்களுக்கான நூற்பட்டியல் 1970-1983 காலப்பகுதியில் 5 தொகுதிகள் வெளிவந்து சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உசாத்துணை நூலாக இன்றும் திகழ்கின்றது. அமரர் இயன் குணத்திலக்கா தொகுத்து அச்சிடப்படாமல் விட்டுச்சென்ற மேலும் பல தொகுதிகளுக்குத் தேவையான பதிவுகள் கவனிப்பாரற்று பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் 27 வருடங்களாக இன்றும் தேங்கிக் கிடக்கின்றன. அவருக்குப் பின்னர் அந்தத் தொகுப்பு முயற்சியை முன்னெடுத்துச்செல்ல பின்னாளில் வந்த நூலகர்கள் இன்றளவில் முன்வராதது பெருங்குறையாகும்.

இலங்கைத் தேசிய நூற்பட்டியலில் மொழிவேறுபாடின்றி, மும்மொழி நூல்களுக்கும் கொள்கையளவில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பினும், தமிழ் நூற்பிரிவில் அரசாங்கப் பிரசுரங்களும் ஒரு சில தமிழ் நூல்களுமே இடம் பெற்றுவந்துள்ளன. அச்சக, வெளியீட்டாளர் சட்டமூலத்தை மதித்து சுவடிகள் காப்பகத்துக்கு ஒழுங்காக நூல்களை அனுப்பிவைக்கத் தமிழ்ப்பிரதேச அச்சகங்களோ, வெளியீட்டாளர்களோ எழுத்தாளர்களோ முன்வராமையால் அங்கு தமிழ் நூல்கள் இடம்பெற வாய்ப்பில்லை என்பது ஒருசாரார் வாதம். அனுப்பிவைக்கப்படும் தமிழ் நூல்களைப் பட்டியலிடக்கூடிய ஆட்பலம் இல்லாததால் தமிழ்நூல்கள் தேசிய நூலகத்தில் கேட்பாரற்று முடக்கப்படுகின்றன என்பது மறுசாரார் வாதம்.

ஈழத்தவரின் தமிழ் நூல் பதிவு

இன்றைய யதார்த்தநிலை என்னவெனில் ஈழத்துத் தமிழ் நூல்களில் பெரும் பான்மையானவை இலங்கைக்கு வெளியே தமிழகத்திலும் புகலிடத்திலும் அச்சிடப்படுவதாகும். வெளியீட்டாளர்கள் பெரும்பாலும் நூலாசிரியராகவே இருப்பதால், வெளியீட்டுச் செலவைக் குறைக்கவும், தமிழகச் சந்தை வாய்ப்பைப் பெறவும் தமது நூலைத் தமிழகத்தில் அச்சிடுகின்றார்கள். தாயகத்தில் உருவான அச்சகங்கள் பல இன்றைய நிலையில் தமிழகத்திலும் வேரூன்றியுள்ளதால் ஈழத்து வெளியீட்டாளர்கள் தமிழகத்தில் தம் நூலைப் பதிப்பிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதில்லை. ஈழத்தமிழர்களின் தமிழக வெளியீடுகள் இலங்கை அச்சகச்சட்டத்தின் புவியியல்ரீதியான வரையரைக்குள் அகப்படுவதில்லை. தமிழகத்தின் தேசிய நூற்பட்டியலிலும் இவை அனைத்தும் சேர்த்துக்கொள்ளப்படுவதுமில்லை. தமது நூலை வரலாற்றுப் பதிவாக்குவதில் எமது எழுத்தாளர்கள் சிலரின் அக்கறையின்மையும் இங்கு சுட்டிக்காட்டப்படல் வேண்டியது காலத்தின் தேவையாகும்.

பிரித்தானிய பதிப்பகச் சட்டம் மொழிகளின் எல்லை கடந்து நூல்களைத் தேசியநூலக வைப்பகத்திற்கு ஏற்றுக்கொள்கின்றன. மொழிவழியிலல்லாது, பிரித்தானியாவில் அச்சிடப்படும் அல்லது விநியோகிக்கப்படும் எம் மொழியிலான நூல்களையும் தேசியநூலகம் ஏற்றுக்கொள்கின்றது. இன்றுவரை இலண்டனில் வெளியிடப்பட்ட தமிழ் நூல்களில் விரல்விட்டெண்ணக்கூடிய நூல்களே பிரித்தானிய பதிப்பகச் சட்டத்தின் கீழ் பிரித்தானிய தேசிய நூலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்நிலையே உலகின் பிறநாடுகளிலும் வெளியாகும் தமிழ்நூல்களினதும் நிலையாகும். இங்கு நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், இன்று தாயகத்திலும்சரி புகலிடத்திலும்சரி வெளியிடப்படும் எந்தவொரு தமிழ் நூலும் தனது வெளியீடு பற்றிய பதிவை உலகில் எங்குமே மேற்கொள்ளும் சக்தியற்றுக் காணப்படுவதாகும்.

விநியோகக் குறைபாடு

ஒரு குறிப்பிட்ட நாட்டில் வெளியிடப்படும் ஈழத்துத் தமிழ் நூலொன்றினை இன்னொரு நாட்டில் வாழும் தமிழர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இன்று அரிதாகவேயுள்ளது. நூல் மட்டுமல்ல, நூல் பற்றிய செய்திகளே உரியகாலத்தில் வந்து சேர்வதென்பது அரிதாகவுள்ளது. தாயகத்திலும், புகலிடத்திலும் வெளிவரும் சஞ்சிகைகள் இவ்விடயத்தில் ஓரளவு ஆக்க

பூர்வமான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதை அவதானிக்க முடிந்தாலும், அவைகூட விநியோகச் சிக்கலுக்குள் அல்லலுற்றுக் குறுகிய வாசகர் வட்டத்துக்குள் தம்மை அடக்கிக்கொள்கின்றன. அவற்றால் வாசகருக்குத் தாம் அறிமுகம் செய்யும் நூலைப் பெற்றுக்கொடுக்கவும் முடிவதில்லை.

தமிழில் நூற்பட்டியல் முயற்சிகள்

உலகெங்கும் சிதறுண்டு கிடக்கும் எமது அறிவுத்தேட்டங்களைத் தேடித் தொகுத்து வகைதொகையாகப் பிரித்து வரலாற்று ஆவண மூலமாக மாற்றும் ஆரோக்கியமான முயற்சி எதுவும் தாயக மண்ணில் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும், சிறுசிறு முயற்சிகளாக காலத்துக்குக்காலம் இலக்கியகர்த்தாக்கள் சில வரையறைகளுக்குள் இயங்கி, நூல்களைத் தேர்ந்து அவற்றைப் பதிவு செய்து வந்துள்ளமையை அறிய முடிகின்றது. எப்.எக்.சி. நடராஜா, கனக.செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன், செங்கை ஆழியான், நா.சுப்பிரமணியன் போன்றோரை இப்பட்டியலில் அடக்கமுடிகின்றது.

இவ்வகையில் படைப்பிலக்கியங்களை பட்டியல்களாக்கித் தந்த தனிநபர் நூல்விபரப்பட்டியல்கள், கண்காட்சி மலர்கள், தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுமலர்கள், பிரதேசவாரியான நூல்விபரப்பட்டியல்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இதை விட, இலங்கை நூலகச்சங்கத்தின் இடைநிலைப் பரீட்சையின் ஒரு அங்கமாகப் பரீட்சார்த்திகள் சமர்ப்பித்து வரும் நூல் விபரப்பட்டியல்களில் பல தமிழ்ப்பிரதேசங்களுக்குரிய நூற்பட்டியல்களும் அடங்குகின்றன. இவை கையெழுத்துப்பிரதிகளாக இலங்கை நூலகச் சங்கத்தின் கோவைகளில் இன்றும் தூங்கிக்கொண்டிருக்கின்றன. மேற்கண்ட முயற்சிகள் எதுவும் ஈழத்துத் தமிழ்நூல்கள் பற்றிய ஒரு முழுமையான வரலாற்றுப் பார்வையைப்பெற உதவும் என்று கூறமுடியாதுள்ளது. யானையைப் பார்த்த குருடனின் கதையாகவே ஈழத்துத் தமிழ் நூல்விபரங்களின் பதிவுகள் அமைந்துவிட்டன.

தமிழ்த் தேசிய நூற்பட்டியலின் அவசியம்

எமது பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களைப் பாதுகாத்து வைத்தலும் அவை பற்றிய வரலாற்றுக்குறிப்புகளைப் பேணுவதும் எமது தார்மீகக் கடமையாகும். எமக்காக அதை அந்நியர் ஒருவர் செய்வார் என்று எண்ணிக் காத்திருப்பது மிகத்தவறானதாகும். இந்நிலை தொடரின் அது எதிர்காலத்தில்

எமது பண்பாட்டுத் தற்கொலைக்கு வழி கோலியதாகவே முடியும். 1981 ஜூன் முதலாம் நாளில் தாயக மண்ணில் ஸ்ரீலங்கா அரசபடைகளால் நிகழ்த்தப் பட்ட யாழ். நூலக எரிப்பைப் பண்பாட்டுப் படுகொலை என்று இன்றும் நினைவு கூருகின்றோம். அன்று நடந்த பண்பாட்டுப்படுகொலையாயினும் சரி, இன்று நாம் பாராமுகமாக இருப்பதன் மூலம் மேற்கொள்ளவிழையும் பண்பாட்டுத் தற்கொலையாயினும் சரி, பாதிக்கப்படப்போவது ஈழத்துத் தமிழ்த் தேசியஇனமே.

இந்நிலையில் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான ஒரு சர்வ தேசரீதியிலமைந்த தொகுப்பு முயற்சியின் தேவையை இங்கே வலியுறுத்துவது அவசியமாகின்றது. தாயகத்திலும், தமிழகத்திலும் மற்றும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட நூல்கள் அனைத்தும் புகலிட நாடொன்றில் ஆவணக்காப்பகமொன்றில் சேகரிக்கஒழுங்கு செய்யப்படல் வேண்டும். இந்நிறுவனத்தின் சேகரிப்புக்கள் அனைத்தும் ஈழத்துத் தமிழ்த்தேசிய நூற்பட்டியலாக பதியப்பட்டுக் காலத்துக் குக்காலம் வெளியிடப்பட வேண்டும். உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் நம்பகத்துக்குரிய ஆவணக்காப்பகமாக அது எழும்வேளை அதுவே ஈழத்தமிழரின் தேசிய நூலகத்தின் அத்திவாரமாக மலரும்.

நூல்தேட்டத்தின் வரவு

இத்தகையதொரு வரலாற்றுப் பின்புலத்திலேயே நூல்தேட்டத்தின் வருகை இடம்பெற்றுள்ளது. ஆரம்பத்தில் எனது (கட்டுரையாளரின்) வரையறுக்கப்பட்ட பொருளாதார வசதிகளுடன் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு காலாண்டு இதழாக நூல்தேட்டத்தினை வெளியிடும் ஆரம்ப முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். 50 நூல்களுக்கான பதிவுகளுடன் ஏப்ரல் 1990இலும் பின்னர் அதன் தொடர்ச்சி யாக 51-112 வரையான தொடர் இலக்கமிடப்பட்ட 62 நூல்களுக்கான பதிவுகளுடன் ஜூலை 1990இலும் சிறுசஞ்சிகை உருவில் நூல்தேட்டம் இரண்டு இதழ்கள் வெளிவந்திருந்தன. தொடர்ந்து எனது உள்ளகப் புலப் பெயர்வின்போது கொழும்பிலிருந்து மூன்றாவது இதழுக்கான நூல் விபரங்களைத் தேடமுற்படும்வேளையில் ஒரு நூலகரான என் கண்களுக்கு அன்றுவரை தட்டுப்படாத ஏராளமான புதிய நூல்களின் வருகை என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. கொழும்பில் தங்கியிருந்தவேளையில் எனது பொருளாதார வளங்கள் மிகவும் வரையறைக்குள்ளானதால், நூல்தேட்டத்தைத் தொடரும் திட்டத்தை தற்காலிகமாகக் கைவிடவேண்டிய துர்ப்பாக்கியநிலை

ஏற்பட்டது. இருப்பினும், எதிர்காலத் தேவை கருதி நூல்களுக்கான பதிவுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டுவந்தேன்.

பின்னாளில் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்தபோது சில ஆண்டுகளின் பின்னர் மீண்டும் நூல்தேட்டத்தைத் தொடர எனது புகலிடப் பொருளாதார வளம் இடம்கொடுத்தது. இதன் பயனாக, முன்னைய காலாண்டுத் திட்டத்தைக் கைவிட்டு தொகுதிக்கு 1000 நூல்பதிவுகளாக நூல் தேட்டத்தை புதிய வடிவில் வெளியிடத் தொடங்கினேன். நூல்களைத் தேடிப்பெறுவதே பெரும்பாடாகவிருந்தது. இதற்காக பல்வேறு நாடுகளுக்கும் பெரும் பணச்செலவுக்குரிய பயணங்களை மேற்கொள்ளவேண்டியிருந்தது. பல தனிப்பட்டவர்களின் சேகரிப்புகளைத் தேடிச்சென்று பார்வையிட வேண்டியிருந்தது.

இத்தகைய கடின உழைப்பின் விளைவாக, நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி ஜூன் 2002 இலும் இரண்டாவது தொகுதி மே 2004 இலும் மூன்றாவது தொகுதி ஓகஸ்ட் 2005 இலும் நான்காவது தொகுதி டிசம்பர் 2006 இலும் ஐந்தாவது தொகுதி ஜூலை 2008 இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான ஆறாவது தொகுதி குமரன் புத்தக இல்லத்தின் பதிப்பகத்தில் வெளிவரும் தறுவாயில் உள்ளது. ஏழாவது தொகுதிக்கான 1000 நூல்பதிவுகள் கடந்த ஆண்டு இலங்கைக்கு வந்து பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பகுதி நூலகத்தில் முழுமையாக எனது நேரத்தைச் செலவிட்டு சேகரித்துள்ளேன். தற்போது பதிவுகளைப் படிப்படியாகத் தட்டச் சிடுவதில் எனது ஓய்வு நேரத்தைச் செலவிட்டு வருகின்றேன். இத்தொகுதி 2011 நடுப்பகுதியில் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறேன். இந்நிலையில் எட்டாவது தொகுதிக்கான 475 நூல்கள் வரையில் தகவல்களாகவும், நூல்களாகவும் சேகரிக்கப்பட்டு பதிவுக்காகக் காத்திருக்கின்றன. இக்கட்டுரை எழுதும் வேளையில் 7475 நூல்களைப் பார்வையிட்டு அவை பற்றிய நூலியல் தகவல்களையும், நூல்பற்றிய குறிப்புகளையும் தயாரித்து விட்டேன். லண்டனில் ஒரு முழுநேரத்தொழிலை (பிரித்தானிய தபால் திணைக்களத்தில்) வாழ்வாதாரத்திற்காக மேற்கொண்டபடி, எஞ்சிய வேளையில் எனது இனத் திற்காக இப்பணியைத் தனித்துச் சுமக்கவேண்டிய நிலை இன்றுள்ளது.

இதே வேளையில் கடந்தநவம்பர் 2007இல் மலேசிய சிங்கப்புர் நூல்தேட்டம் ஒன்றினையும் தயாரித்து வழங்கியிருந்தேன். சிங்கப்புர் தேசிய நூலகத்தினால் சிங்கப்பூரிலும், மலேசிய தேசிய நில நிதிக் கூட்டுறவு மையத் தினால் கோலாலம்பூரிலும் (மலேசியா), இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. ஈழத்தமிழரின் ஆங்கில நூல்களுக்கான நூல்விபரப்பட்டியல் கடந்த டிசம்பர்

2009இல் லண்டன் ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும் என்ற அமைப்பினால் (European Tamil Documentation and Research Centre ETDRC) வெளியிடப்பட்டிருந்தது.

நூல்தேட்டத் தொகுதிகளில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக்குறிப்பும் இடம் பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சி யாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் ஆறாவது தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 5001 இலிருந்து 6000 வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. இவ்வகையில் ஒவ்வொரு தொகுதியின் பக்கங்களினதும் எண்ணிக்கை 500 பக்கங்கள் வரையில் விரிகின்றன.

தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்பட வில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத்தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகை கள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட் டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதி யில் சேர்த்துக்கொண்டுள்ளேன்.

இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித காலஎல்லைகளுக்குள்ளும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரு ம்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும்

குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன.

ஏற்கெனவே நூல்தேட்டப் பதிவிலக்கத்தைப் பெற்ற நூல்கள் பின்னாளில் மீள்பதிப்புக்களாக வெளியிடப்பட்டாலோ, முன்னைய பதிப்புகள் காலக்கிரமத்தில் என் கைக்கெட்டினாலோ பின்னிணைப்பில் அவை தரப்பட்டுள்ளன. அவற்றிற்கு புதிய தொடர் இலக்கம் வழங்கப்படமாட்டாது.

பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகர வரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கிலேயே அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவைகருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளேன்.

நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனைபெயர் பற்றிய குறிப்புகளும் (கிடைக்கப்பெறுமிடத்து) தரப்பட்டுள்ளன. பதிவுக் குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப் பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட் டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளி யீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட் டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல்

நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும் பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன. வெளியீட்டாளர்கள் தமது வெளியீட்டகத்தின் முதற்பதிப்பாக ஒருநூலைக் குறிப்பிடுவதாக தவறான வியாக்கியானத்தை மேற்கொள்வதும் இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டியுள்ளது. உண்மையில் ஒரு நூலின் பதிப்பு ஆண்டென்பது உலகில் எங்காவது முதன்முதலாக அந்நூல் வெளியானபோது வழங்கப் படும் பதிப்பையே குறிக்கும். அந்நூல் பின்னர் ஏதாவது பதிப்பகத்தால் மீள்பிரசுரம் செய்யப்படும்போது அது முதற்பதிப்பாகாது. இலங்கைத் தமிழர்கள் வட கிழக்கில் அல்லது கொழும்பில் ஒரு நூலை முதற்பதிப்பாக வெளியிட்டபின்னர், பல ஆண்டுகள் கழிந்த நிலையில் தமிழகத்தில் அந்நூலை மீள்பதிப்புச் செய்யும்போது முதற்பதிப்பு என்று தெரிந்தே பதிகிறார்கள். பின்னாளில் இவரது நூல்விபரத்தைக் குறிக்கும் ஒருவர் இதனால் குழப்பமடையக்கூடும். எதிர்காலத்தில் நூலியல் ஆய்வினை மேற்கொள்ளப் போகும் ஒரு ஆய்வாளர் ஈழத்தமிழர்களின் நூல்கள் பெரும்பாலும் தமிழகத்திலேயே அச்சிடப்பட்டனவென்று கருத வாய்ப்புண்டு.

நூல்தேட்டப்பதிவில் நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. நூலின் பக்கங்கள் மூன்று வகையில் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் அல்லது தமிழ் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ் விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப் படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன. 19ம் நூற்றாண்டின் கடைக்கூறிலும், இருபதாம் நூற் றாண்டின் ஆரம்பத்திலும் ஈழத்தவரின் நூல்கள் தமிழகத்தை அடியொற்றி

தமிழில் இலக்கமிடப்பட்டுள்ளன. நவீன வாசகரின் பயன்பாடு கருதி இவ் விலக்கங்கள் அரபிலக்கங்களாகத் தரப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்த அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. (உதாரணமாக இந்திய ரூபா.) இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் (Location) இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

பகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டீவியின்

தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன் படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமான தொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்ப தாகும். ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளா கின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியா விடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர் களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின்போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப்பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக் கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது.

இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்

நூல்தேட்டத்தின் இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப் பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர் சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத் திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும்

மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அது பற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளேன்.

குறைபாடுகள்

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவன ரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதனால் கண்ணுக்குப் புலப்படாததொரு தடுப்புச்சுவர், எப்பொழுதும் எனது திட்டங்களை முழுச் சுதந்திரத்துடன் நினைத்த மாத்திரத்தில் முன்னெடுத்துச்செல்லமுடியாதவாறு அவ்வப்போது அமைந்து எனது பணியின் வேகத்தைக் குறைப்பதுண்டு. இதனைத் தாண்டி வெற்றிகொண்டு அடுத்தகட்டத்தை நோக்கி நகர்வதே பெரும்பாடாகச் சிலவேளைகளில் உள்ளது.

நூல்தேட்டத்தின் பதிவுகள் ஆண்டு ஒழுங்கில் மேற்கொள்ளப்படவில்லை என்ற குறையை நூல்தேட்டத்தின் முதல் நான்கு தொகுதிகளையும் திறனாய்வுசெய்து ''நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி'' என்ற தலைப்பில் 2007இல் தனி நூலாக வெளியிட்டிருந்த கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். இன்று நூல்தேட்டத்தின் பதிவுகள் ஒவ்வொன்றும் ஆங்காங்கே தேடித்தேடித் தொகுக்கப்படுகின்றன. கிடைக்கும் ஒழுங்கிலேயே

அவை பதியப்பட்டு தொகுப்புக்களாக்கப்படுகின்றன. எனது வரையறைக்குட்பட்ட காலகட்டத்தில் என்னால் முடிந்தவரையில் நூல்களைத் தேடித்தொகுத்து அச்சுருவில் அதன் விபரங்களை முதன்மைப்பதிவுகளாக வழங்குவதே எனது இலக்காகவிருக்கும். எதிர்காலத்தில் நூல்தேட்டத்தை மீள்பதிப்புச் செய்ய முன்வருவோர் அதனை ஆண்டுவாரியாகத் தொகுப்பதிலோ ஆசிரியர் வாரியாகத் தொகுப்பதிலோ எவ்வித தடங்கலும் இராது என்பதே எனது கருத்தாகும். இன்றைய நிலையில் - ஈழத்தமிழர் எத்தனை நூல்களை எழுதியிருக்கிறார்கள் என்ற தகவலை எந்தவொரு ஆய்வாளராலும் ஆணித்தரமாகக் கூறமுடியாத சூழலே காணப்படுகின்றது. அந்தக் கேள்விக்கான பதிலாகவே நூல்தேட்டத்தின் பதிவு அமையும்.

நன்றிக்குரியவர்கள்

நூல்தேட்டப் பதிவுகளுக்காக இலங்கை, கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், நோர்வே மலேசியா என்று எனது தனிப்பட்ட பொருட்செலவில் சென்றிருந்த வேளையில், எனது நிலைமையை உணர்ந்து, ஒவ்வொரு நாட்டிலும் என்னை வரவேற்றுத் தம்மில்லத்திலேயே இருப்பிடம் வழங்கி நல்விருந்தோம்பியதுடன் நான் பதிவுசெய்ய வசதியாகத் தனிப்பட்ட நூல் சேகரிப்பாளர்களை அறிமுகப்படுத்தி எனது பணிக்கு உரமும், நம்பிக்கையும் ஊட்டியவர்களை இவ்வேளையில் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். தமது நூல்களை அவை வெளிவந்த சூடாறும் முன்னதாகவே தபாலில் எனக்கு அனுப்பிவைத்து, அதனை நூல்தேட்டத்தில் பதிவாக்குவதற்கு வசதிசெய்து தந்த சில படைப்பாளிகளும் உள்ளார்கள். குமரன் புத்தக இல்லம், மலையக வெளியீட்டகம், சேமமடு பொத்தகசாலை, ஞானம் பதிப்பகம், புரவலர் புத்தகப்பூங்கா ஆகிய நிறுவனங்கள் தமது வெளியீடுகளின் ஒவ்வொரு பிரதிகளைக் காலத்துக்குக் காலம் எனக்கு அனுப்பிவைக்கின்றன. இவ்வேளையில் வர்த்தக நோக்கத்திற்காகத் தமது நூல்களை எனக்கு அனுப்பிவைக்கத் தயங்கிநிற்கும் பிரபலமான ஒரு சில அச்சக உரிமையாளர்களும் உள்ளதை மறுக்கமுடியாது.

தடைகளும் சவால்களும்

ஈழத்தமிழர் தமது அரசியல், சமூக, சமய வாழ்வியல் நாளைய தலைமுறையினரால் வரலாறாகப் பயிலவேண்டிவரும் என்ற உணர்வுடன் அவற்றைப் பதிவதில் நாட்டம் கொள்வதில்லை என்பது வெளிப்படையாக வழங்கப்பட்

டுவரும் ஒரு குற்றச்சாட்டாகும். இதனை எனது நூல்தேட்டப் பதிவு முயற்சி களின்போது நேரடியாகக் கண்டுணர்ந்து நொந்துள்ளேன். அவற்றையும் இங்கு பதிவுக்காக விட்டுச்செல்லவேண்டும் என்று கருதுகின்றேன். ஒரு பொது நூலகத்தில் உள்ளதைவிட அதிகப் பெறுமதியான நூல்கள் ஈழத்தமிழர் களின் தனிப்பட்ட குடும்ப நூலகங்களிலேயே உள்ளன என்பது அதிசயத்துக் குரிய தகவல் அல்ல. நூல்தேட்டப் பதிவை ஈழத்து நூலகங்களையும், இலங்கைத் தேசிய நூலகத்தையும் மட்டும் நம்பி ஒருபோதும் முழுமை யாகச் செயற்படுத்த முடியாது.

எனது பதிவு முயற்சிகளை ஏதோ பிரித்தானிய அரசின் மானியத்தைப் பெற்று தனிமனிதனொருவன் மேற்கொள்வதாகக் கருதி பதிவுக்குட்படுத்த விரும்பும் தனது நூல்களை என்னை விலைகொடுத்து வாங்கிப் பதியுமாறு இன்றும் எம்மிடையே வலம்வரும் ஒரு பிரபல எழுத்தாளர் என்னிடம் நேரிலேயே கேட்டு அதிர்ச்சியைத் தந்தார்.

பல்கலைக்கழக ஆய்வுக்காகவோ, சுயலாபத்திற்காகவோ இத்திட்டம் என்னால் தனித்து மேற்கொள்ளப்படுவதாகவும், நான் அதற்காக நூல்களை கஷ்டப்பட்டுத் தேடிப்பெறலாமேயன்றி தன்னால் எனக்குத் தனது நூல்களை வழங்கி எனது வேலையை இலகுவாக்கமுடியாது என்றும் இன்று மறைந்து விட்ட ஒரு பிரபல கவிஞர், எனது பிரதிநிதியாகத் தன்னை அணுகிய யாழ்ப்பாணத்துக் கவிஞர் ஒருவரிடம் கடுப்புடன் தெரிவித்து உதவ மறுத்ததாக அக்கவிஞர் எழுதிய கடிதம் இன்னும் என்னிடம் பத்திரமாக உள்ளது.

தான் பாடுபட்டு காலாதிகாலமாக விலைகொடுத்து வாங்கிச் சேகரித்து வைத்திருக்கும் நூல்களை லேசாக வந்திருந்து பதிந்து புத்தகமாக்கிப் பெயர்பெறுகின்றார் என்றுகூறி, எனது தொகுப்புப்பணிக்குக் கதவடைத்த பிரகிருதிகளையும் நான் எனது தேடலின்போது சந்தித்திருக்கின்றேன்.

ஒரு சில படைப்பாளிகள் தமது நூல்களை ஏதோ ஒரு தொகுதியில் மட்டும் பார்வையிட்டுவிட்டு அதில் தமது நூல்பதிவு இடம்பெறாததைக் கண்டு தான் சார்ந்த பத்திரிகைகளிலெல்லாம் நான் தம்மை இருட்டடிப்புச் செய்துவிட்டதாக எழுதியதை இங்கு பலரும் அறிந்திருப்பீர்கள். குறைந்தபட்சம் 5 தொகுதிகளையாவது அவர்களால் பார்வையிட்டுத் தமது நூல் நூல்தேட்டப் பதிவில் இடம்பெற்றுள்ளதா என்பதை அறிந்துகொள்ளும் பொறுமை இல்லாதது மட்டுமல்ல, எந்தவிதமான தரப்படுத்தல்களுக்கும் உட்படாமல் நூலியல் பதிவுகளை மேற்கொள்ளும் எனது பணியைக் கொச்சைப்படுத்து வதாகவும், நூலைப் பதிவுக்குள்ளாக்குவதில் தமது பங்களிப்பும் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கடுகளவிலும் ஏற்றுக்கொள்ளாத நிலையே ஈழத்து

எழுத்தாளர்களில் பெரும்பாலோரிடையே காணப்படும் உணர்வினையே இங்கு கவனத்திற்கெடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

2010 இல் கொழும்பில் இடம்பெற்றதொரு நூல்வெளியீட்டுவிழாவில் உரையாற்றிய சில முன்னணி எழுத்தாளர்களும், ஈழத்தமிழ் நூல்களின் விபரத்தைப் பதிவாக்கும் முயற்சியில் பலரும் ஈடுபட்டதாகப் பட்டியலிடும் போது எப்.எக்.சி. நடராஜா, கனக. செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன் போன்றோரை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டதுடன், ஈழத்தமிழப் படைப்பிலக்கியம் பற்றிய ஆய்வைத் தாம் இருட்டறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடும் முயற்சியாகவே மேற்கொள்வதாகத் தெரிவித்ததை பார்வையாளர்களுள் ஒருவராக இருந்து கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. ஈழத்து முன்னணிப் படைப்பிலக்கிவாதிகளுக்கும் பல்கலைக்கழக அறிவுஜீவிகளுக்கும் நூல்தேட் டத்தின் இருப்பு பற்றிய தகவல் இன்றளவில் முழுமையாகச் சென்றடையாமைக் கான காரணங்களைத் தேடுவது மற்றொரு ஆய்வாகமுடியும் என்பதால் இங்கு அதைத் தவிர்ப்போம்.

இன்று நூல்தேட்டத்தை தேனிபோலச் சேகரித்துக் கட்டியெழுப்பிவந்தாலும் அவற்றை பெருமளவு பணச்செலவுசெய்து அந்த நூல்களை தாயகப் பற்றுடன் இலங்கையில் அச்சிட்டாலும் தமிழ் நூல்களை கொள்வனவு செய்யும் இலங்கையின் பிரதான நூலகங்களே அவற்றை முன்வந்து கொள்வனவு செய்யாதிருப்பது வேதனையளிப்பதாக உள்ளது. ஈழத்தின் முன்னணி நூல் விற்பனையாளர்கள்கூட தமிழகத்தின் ஜனரஞ்சக இலக்கியங்களுக்குத் தமது சொந்தச் செலவில் விளம்பரம் தரும்அளவிற்கு என்றாவது ஒருதடவையாவது நூல்தேட்டம் தொகுதிக்கு விளம்பரத்தைத் தரத்தவறிவிட்டார்கள்.

இன்று இலங்கையின் பிரதான பொது நூலகங்களும், பல்கலைக்கழக நூலகங்களும், பிரதான பாடசாலை உயர்கல்வி நூலகங்களும் மாத்திரம் நூல்தேட்டத்தின் பிரதிகளை கொள்வனவு செய்தாலேயே இன்றளவில் நூல்தேட்டத்தின் 15 தொகுதிகளையாவது என்னால் முடித்து எனது இனத் திற்காகக் கையளித்திருக்க முடியும். ஆனால் நடைமுறையில் எனது பணிகள் ஆமைவேகத்தில் நகர்வதற்கு தமிழ்ப் படைப்புலகச் சமூகமும், பதிப்புலகமும், விற்பனையாளர்களும் நூலகங்களும் நிறுவனரீதியாக அக்கறைகொள்ளாமையே முக்கிய காரணமாகும்.

எனது பணியை எனது வாழ்நாளிலேயே முடிந்தவரையில் முழுமை யடைந்த பணியாகவே விட்டுச்செல்ல விரும்புகின்றேன். ஐக்கிய நாடுகள் அமைப்பின் விரிவான நிதியுதவியுடன் எச்.ஏ.ஐ குணத்திலக்கா பேராதனைப் பல்கலைக்கழகப் பின்னணியில் முன்னெடுத்த பணியே அவரது மறைவின்

பின்னர் முன்னெடுக்காமல் போய்விட்ட நிலையில், எனது நூல்தேட்டப் பணிகளும் எனது மறைவின்பின்னர் முன்னெடுக்கபடமாட்டாது என்பதே எனது ஆணித்தரமான கணிப்பாகும்.

எதிர்பார்ப்புகள்

நூல்தேட்டம் ஒரு தனிமனித முய்ற்சியாயினும் அது ஈழத்தமிழச் சமூகத்தின் பொதுச்சொத்தாகக் கருதப்பட்டு அதனை முன்னெடுக்கத் துணிந்து அதற்கான பாதையை அமைத்து வாழ்நாள் முழுவதும் அதனூடே பயணிக்கும் ஒருதனிமனிதனுக்குத் தோள்கொடுக்க ஈழத்துத் தமிழ்ச்சமூகம் முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளையே இந்த சர்வதேச எழுத்தாளர் விழாவிலே முன்வைக்க விரும்புகின்றேன்.

எழுத்தாளர்களும் புத்திஜீவிகளும் வழங்கும் வெறும் பாராட்டுகளாலும், வாழ்த்துகளாலும் இதனை நடைமுறைப்படுத்த இயலாது.

1. ஈழத்துப் பதிப்பகங்கள், அச்சகங்கள் தனிமனித வெளியீட்டாளர்கள் அனைவரும் தமது வெளியீடுகளின் ஒவ்வொரு பிரதியை நான் கேட்டு, இரந்து அலையும்வரை காத்திராமல் தாமாக உணர்ந்து என்னிடம் சேர்ப்பிக்க முன்வர வேண்டும்.

2. ஈழத்து எழுத்தாளர்கள் தாம் எழுதிய நூல்கள் நூல்தேட்டத்தில் பதிவுக் குள்ளாக்கப்பட்டுள்ளனவா என்பதை நூல்தேட்டத்தின் ஆசிரியர் வழிகாட்டி, தலைப்பு வழிகாட்டி ஆகியவற்றையாவது பார்த்துத் தெரிந்துகொண்டு, பதியப்படாத நூல்களை எனக்கு அனுப்பிவைக்க முன்வரவேண்டும். நூல்கள் கைவசம் இல்லாதுவிட்டால் அந்நூல் பற்றிய நூல்விபரத்தை உரிய படிவத்தை நிரப்பி தபாலில் அனுப்புவதன்மூலம் எனக்குக் கிடைக்க வழிசெய்யவேண்டும்.

3. ஈழத்தின் பிரதான நூல்விற்பனையாளர்கள் தமது வர்த்தக நூற்பட்டியல் களிலும், ஊடக விளம்பரங்களிலும் நூல்தேட்டத்தையும் இணைத்துக் கொள்ளவேண்டும். கல்வி நிறுவனங்களுக்கான வருடாந்த நூற் கொள் வனவுப்பட்டியலை நூல்விற்பனையாளர் தயாரிக்கும்போதும் அதில் நூல்தேட்டமும் உள்ளடங்கியுள்ளது என்பதை உறுதிப்படுத்தும்படி தமது ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும்.

4. பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், பொது நூலகங்கள், மாகாண நூலகங்கள், இலங்கைத் தேசிய நூலகம் என்பன தமது நூலகங்

களில் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் உசாத்துணை நூல்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதையும் அவை பாவனைக்குரிய நிலையில் உள்ளன என்பதையும் நூலகர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

5. பல்கலைக்கழக, உயர்கல்வி நிறுவன மாணவர்களுக்கும், பிற ஆய்வாளர்களுக்கும் நூல்தேட்டத்தின் இருப்பு பற்றிய தகவல்களை விரிவுரையாளர்களும், ஆசிரியர்களும் வழங்கவேண்டும். பல்கலைக்கழக புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு நூலகர்கள் தமது நூலக வளங்களை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்விலேயே இதனைத் தொடங்கிவிட வேண்டும். நூல்தேட்டத்தை தம் ஆய்வுத்தேடலுக்கான உசாத்துணைக்கருவியாக பயன்படுத்தும் ஆய்வாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, நூலகங்களும் நூல்தேட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கும்.

இன்றளவில் ஈழத்தமிழர்களின் உலகளாவிய தமிழ் ஆங்கில நூல்களை முழுமையாகப் பதிந்துவைக்கும் வகையில் எனது பணிக்கு முடிந்தவரை நிதியுதவி வழங்க முன்வரவேண்டும். தனிமனிதர்களாக இதன் பிரதிகளை வாங்குவதைவிட தான் சார்ந்த நூலகங்கள் இதனை வாங்கிவைக்க வேண்டும் என்று அழுத்தம் தருவதே நிதிரீதியாக நீங்கள் செய்யும் பங்களிப்பாக அமையும்.

எமக்கான வரலாற்றை நாமே எழுதவேண்டும். அதனை அந்நியன் ஒருவன் எழுதிவைக்க அதை ஏற்றுத் தலைமேற்கொண்ட காலம் போய்த்தொலையட்டும். நாமே எமது படைப்புகளின் வரலாற்றைப் பதிந்து வைப்போம். எதிர்காலச் சந்ததியினராவது இருட்டறைக்குள் கறுப்புப் பூனைகளைத் தேடாது போகட்டும்.

(சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011.
இலங்கை: கட்டுரைக்கோவை: பக்கம் 21-35)

2

இலங்கைத் தமிழ் வெளியீட்டுத் துறையின் எதிர்காலம்

ஒரு ஆக்க இலக்கியப் படைப்பாளியாக இல்லாது போனாலும், 25 ஆண்டுகள் நூலகராக இருந்த அனுபவம், பத்தாண்டுகளாக நூல்தேட்டம் என்ற ஈழத்துத் தமிழ் நூற்பட்டியலைத் தொகுத்து 8000 ஈழத்துத் தமிழ் நூல்களைப் பதிவுசெய்து வழங்கிய அனுபவம், இரண்டொரு ஈழத்துத் தமிழ்ப் பதிப்பாளர்களுடன் இணைந்து கடந்த இரு ஆண்டுகளாக லண்டனில் ஈழத்துத் தமிழ்ப் புத்தகச் சந்தையை பல இடங்களிலும் நடத்தி சராசரி வாசகர்கள் பற்றிப் பெற்றுக்கொண்ட அனுபவம் இவை அனைத்தும் என்னை இக்கட்டுரையை எழுதத் தூண்டியுள்ளது.

எம்மவரிடையே வாசிப்புத் தரம் குறைந்துவிட்டது என்று வெளிப்படையான உண்மையைச் சொல்லி ஒதுங்கிக்கொள்ள நான் விரும்பவில்லை. அதிலிருந்து எவ்வாறு மீளலாம் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இக் கருத்துக்கள்.

வாசிப்பு என்பது கல்வித் தேவைகளுக்காகவும், அதற்கப்பால் உள்ள விரிந்த தேடலுக்கும் என இரண்டு வகைகளில் இங்கு நிகழ்கின்றது. இங்கு பொதுவான வாசகர்கள் பற்றிய மதிப்பீடு இரண்டாவது ''விரிந்த அறிவுத் தேடலுக்கான'' வாசிப்பு என்ற பரப்புக்குள் அடங்குகின்றது. பொழுதுபோக்குக்காகவும், தம்மைச்சுற்றி உலகில் நடந்தேறும் விடயங்களை விரிவாகவும் ஆழமாகவும் அறிந்து கொள்வதற்காகவும், புரியாதவற்றைப் புரிந்து தெளிவு பெறவும் ஒருவருக்கு ஆழமான வாசிப்புத் தேவைப்படுகின்றது. பொது அறிவு- கேள்வி பதில் புத்தகத்தை எடுத்து வாசித்ததும் பொது அறிவு எமக்கு வந்துசேர்ந்து விடுகின்றது என்று இன்றுவரை நம்பிக்கொள்கின்றோம். அதனால் தான் இன்று புத்தக விற்பனை நிலையங்களில் சிறியதும் பெரியதுமாக இரண்டு வரிகளில் பதில் தரும் பொது அறிவுக் களஞ்சியங்களும் பொது அறிவுப் பெட்டகங்களும் வாசகருக்குத் தயாராகக் காத்திருக்கின்றன. ஒரு பரீட்சைத் தேவைக்கு வேண்டுமானால் இந்தப் பொது அறிவு நூல்கள் ஓரளவு தகவல்களை வழங்கலாம். ஆனால் ஆழ்ந்த அகன்ற வாசிப்பே ஒருவரை தன்னைச் சார்ந்த சமூகத்தையும், தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும்

கூர்ந்து அவதானித்துப் புரிந்துகொள்ள உதவுகின்றது. அதற்கான தேவையை யும், ஆர்வத்தையும் வளர்த்தெடுப்பதே எம்முன்னுள்ள சமூகக் கடமையாகும்.

தமிழ்ச் சமூகத்தில் பெரும்பாலோரின் ஆர்வம் கல்வித் தேவைகளுக்கான வாசிப்புடன் நின்றுவிடுகின்றது . அதற்கப்பால் ஏற்படும் வாசிப்பு நிலை ஒருவனுக்கு சிறுபராயத்திலேயே அவனது பெற்றோராலும், ஆசிரியர்களாலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தடுக்கப்பட்டு விடுகின்றது. பாடசாலைக் கல்வி முறையும், அதற்கப்பால் தொடரும் டியுஷன் கல்வித் திட்டங்களும் அவர்களை பாடக்குறிப்புகளை மட்டும் (Notes) நம்பிய மாணவர் சமூகமாக வளர்த்தெடுக்கிறது. இந்நிலை பல்கலைக்கழகங்கள் வரையும் பரவியுள்ளதை இன்று காணக்கிடைக்கும் சில நூல்கள் எமக்குக் காட்டுகின்றன.

விதிவிலக்கான ஒருசிலரே நல்ல வாசகர்களாக மிளிர்கின்றனர். அதற்குப் பெற்றோரும் ஆசிரியர்களும் முக்கியமாகத் துணைநின்றிருக்கிறார்கள். எமது ஈழத்துப் பலர் கல்வியுலகில் ஆசிரியர்களாக இருந்தும் கல்விச் சாலைகளில் நூலகங்கள் நலிந்து கிடக்கின்றன. நூல்கள் அலுமாரிகளில் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. சாவி தலைமை ஆசிரியரிடம் அடைக்கலமாகி விடுகின்றது. தான் ஓய்வுபெற்றுப் போகும் வரை அதிபரும் புத்தகங்களைப் பூதம் காத்த புதையல் போலப் பாதுகாத்து புதிய அதிபரிடம் கையளிக்கின்றார். தனது ஓய்வுதியம் தாமதமாகக்கூடாதென்ற கவலை அவருக்கு. இதுதான் காலாதிகாலமான நடைமுறை. இன்றைய ஈழத்துத் தமிழ்ப்பாடசாலைகளில் திறந்த வாசிப்புமுறையுள்ள பாடசாலை நூலகங்களை விரல்விட்டு எண்ணலாம். பாடசாலைகளில் நூலகத்தின் நூற்றொகை என்பது நிலையான சொத்துகளாகக் (Fixed assets) கணிப்பிடும் முறை நீங்கி அவை அழியும் நுகர்பொருட்களாகக் (consumable) கணிப்பிடும் வகையில் நூலக விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டும். அப்பொழுது தான் அதிபரின் பொறுப்பில் பாதுகாக்கப்படும் நூலகச் சாவிக்கொத்து, நூலகரிடம் கைமாறும் நிலை உருவாகும். பாடசாலை களில் நூல்கள் பாவனைக்கு விடப்பட்டு காலக்கிரமத்தில் பழுதடைந்து பெறு மானத் தேய்வுகண்டால், புதிய நூல்விற்பனைக்கான சந்தை வாய்ப்பினையும் அது விரிவுபடுத்தும். இறைத்த கிணறே ஊறும் என்பது மூத்தோர் பொன் மொழியல்லவா?

எம்மிடையே வாழும் தமிழ் பாடசாலை ஆசிரியர்களில் எத்தனை பேர் பொதுவாசிப்பில் அக்கறையுடன் ஈடுபடுகின்றார்கள் என்பதை இலங்கையில் ஆண்டுதோறும் நடைபெறும் BMICH புத்தகச் சந்தைகளில் அவர்கள் தமது நூலகங்களுக்காக வாங்கும் பொது வாசிப்பு நூல்களின் எண்ணிக்கையிலிருந்து மதிப்பிடலாம். இதை எமது தமிழ்ப் பதிப்பாளர்களும் படைப்பாளிகளும்

அறியாமலில்லை. பாடம்சார்ந்த துறைகளுக்கு அப்பால் செல்ல அவர்களது கைகள் கூசுவதை அத்தகையதொரு நூற்சந்தையில் நேரில் கண்டவன் நான். இது வருத்தத்துக்குரியது. கல்வித் தேவைகளுக்கு அப்பாலும் வாசிப்பு விரியவேண்டும் என்று ஒவ்வொரு ஆசிரியரும் பெற்றோரும் நினைத்தால்- அதற்கான வாய்ப்புகளை அவர்கள் தமது பிள்ளைகளுக்கு வழங்கினால் எமது வாசிப்பு நிலை அதிசயிக்கத்தக்க அளவில் மாறும். வரையறுக்கப்பட்ட நிதி வசதி என்பது இரண்டாம் பட்சமே. பதிப்பாளர்கள் மறைமுகமாக வழங்கும் கொமிஷன்களும் (லஞ்சம் என்றும் சொல்லலாம்) நியாயமானதும் ஆரோக்கியமானதும் நேர்மையானதுமான நூல்கொள்வனவுகளைக் கல்வி நிறுவன நூலகங்கள் மேற்கொள்ளத் தடையாக உள்ளன.

படைப்பாளிகளும், பதிப்பாளர்களும் சிறுவர் நூல்கள் என்றால் கற்பனை வளம்மிக்க சிறுவர் பாடல்களும், சிறுவர் கதைகளும் தான் என்ற மாயையி லிருந்தும் இன்று விடுபடவேண்டும். அறிவியல்சார்ந்த படைப்புகளை அவர்கள் சிறுவர்களுக்காகப் படைக்க வேண்டும். ஈராக் யுத்தம் பற்றி அல்லது இலங்கையின் ஆர்தர் சீ கிளார்க்கின் வாழ்வும் பணியும் பற்றி ஒரு சிறுவனுக்கு விளங்கக்கூடியவகையில் படங்களுடன் அழகாக ஒரு நூலை ஆராய்ந்து எழுதவேண்டும் என்று எமது எழுத்தாளர்கள் என்று தீர்மானிக் கிறார்களோ அன்றுதான் எமது வாசிப்புத்திறன் சர்வதேசத் தரத்தை எட்டும்.

இன்று இலங்கையில் Room to read திட்டத்தின் கீழ் தமிழ்ப் பதிப்பகங்களால் வெளியிடப்பட்டுள்ள தமிழ் நூல்களின் தலைப்புகளையும் பாடத்துறையையும் மேலோட்டமாகப் பார்த்தாலே இளையோர் அறிவியல்நூல்களுக்கு நாம் வழங்கும் முக்கியத்துவம் புரியும். இன்று வளரும் சிறுவனே நாளைய வளர்ந்த வாசகன். பறக்கத்துடிக்கும் பறவையின் சிறகுகளைக் கத்தரித்துவிட்டு அது பறக்கவில்லையே என்று வருத்தப்படும் சமூகக்கோளாறு மாறவேண்டும். எமது கவனம் ஒட்டுமொத்தமாக சிறுவர்களைப் பரந்த வாசிப்புக்கு இட்டுச் செல்லும் வழிமுறைகள் பற்றிச் சிந்தித்தால் இந்தத் தலைமுறையிலேயே விடிவைக் காணலாம். பாடசாலைகளும் ஆசிரியர்களும் கல்வித்துறையும்தான் இதனைச் செய்யவேண்டும் என்ற வழமையான ''மற்றவர் செய்யட்டும் நாம் வேடிக்கை பார்ப்போம்'' என்ற போக்கை விட்டு- ஒவ்வொருவரும் தமது பங்கை செயல்படுத்தவேண்டும். மேலைத்தேயங்களில் கோடி கோடியாக அதில்தான் கொட்டுகிறார்கள். பாடசாலை நூலகங்களுக்கு அப்பால் வகுப் பறை நூலகங்கள் செழிப்புடன் செயற்படுகின்றன. அவற்றின் பொறுப்பை பெற்றோரும் வகுப்பாசிரியர்களுமே பெரும்பாலும் ஏற்கிறார்கள். அதன் ஒரு வெளிப்பாடு தான் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Room

to read என்ற இலங்கைத் திட்டம். அதையும் நாங்கள் சரிவரப் புரிந்துகொள்ள வில்லை என்பதே எனது கருத்து.

எமது எழுத்தாளர்களைப் பற்றியும் எனக்கு ஒரு கசப்பான அபிப்பிராயம் உள்ளது. தனது நூல்களைத்தவிர அடுத்தவரின் நூல்களையும் வாங்கிப் படிக்கும் படைப்பாளிகளை எம்மிடையே விரல்விட்டு எண்ணிவிடலாம். இன்று ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளும் பலதரப்பட்ட எழுத்தாளர்களின் எண்ணிக்கையை வைத்தும் எனது கருத்தைப் புரிந்துகொள்ளலாம். எத்தனை குழுக்கள், எத்தனை பிரிவுகள்? இந்நிலை ஈழத்தில் மாத்திரமல்ல. புலம்பெயர்ந்து நாம் வாழும் மண்ணிலும்தான் தொடர்கின்றது. காழ்ப்புணர்வற்ற தமது பரந்த வாசிப்பை எழுத்தாளர்களும் விமர்சகர்களும் மேற்கொள்ளும்போது புத்தகக் கலாச்சாரம் செழுமையடையும்.

நூலகத்துறையில் ஒரு பொன்மொழியுண்டு. ''நூலகங்களை நாடி வாசகர் வராவிட்டால் வாசகரை நாடி நூல்கள் சென்றடைய வேண்டும்''- இது நூலகவியலின் தந்தை என்று உலகமே வர்ணிக்கும் நம்மவரான எஸ். ஆர். இரங்கநாதன் சொன்னது. இந்தக் கருத்தே பதிப்பகங்களுக்கும் பொருந்தும். தமது பதிப்புக்களை நாடி மக்கள் வராவிட்டால், அவர்களை நாடி ஏன் பதிப்பகங்கள் செல்லக்கூடாது. சிறிய அளவில் நடமாடும் நூற் சந்தைகளை ஏன் இலங்கையில் தொடர்ந்து நடத்தக்கூடாது. பாடசாலைகளும், சனசமூக நிலையங்களும், பொது நூலகங்களும் இது பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இன்று லண்டனில் அதைத்தான் நான் செய்துவருகின்றேன். ஈழத்து தமிழ் நூல்களின் சந்தை வாய்ப்பினை லண்டனிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் விரிவுபடுத்தும் தனிநபர் முயற்சியாகவே இதனை மேற்கொள் கின்றேன். ஒரு மண்டபத்தை ஒழுங்குசெய்து தரவேண்டியது மட்டுமே அவர்களின் பொறுப்பு. ஊடகங்கள் போதிய விளம்பரங்களை வழங்குகின்றன. என்னளவில் ஓரளவு வெற்றியளித்துள்ள இந்த முயற்சி, அண்மைக்கால ஈழத்துத் தமிழ் நூல்கள் பற்றி அறிய வாய்ப்பில்லாதிருக்கும் புகலிடத்தில் வாழும் எம்மவரிடையே அவற்றை எடுத்துச் சென்று காட்டி, அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்தி பெரும்பாலும் இலங்கை விலையிலேயே (இறக்கு மதிச் செலவையும் சேர்த்து விலை நிர்ணயிக்கப்படுவதால் இலங்கை விலையை விட ஓரிரு பவுண்கள் விலை அதிகமாயிருக்கும்) அவர்களிடம் சேர்ப்பிக்கும் எளிமையான முயற்சி. பல நண்பர்கள் இன்று தொண்டர்களாக என்னுடன் இணைந்து எனது பழுவைக் குறைக்கவும் முன்வந்திருக்கிறார்கள். இது ஈழத்துத் தமிழ் பதிப்புலகம் பற்றிய புதியதொரு நம்பிக்கை ஒளிக்கீற்றை என்னுள் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆக்க இலக்கியம் தவிர்ந்த பல ஆய்வு நூல்களை குமரன் பதிப்பகமும் சேமமடு பதிப்பகமும் சில தனியார் அமைப்புகளும் வெளியிட்டு வருகின்றார்கள். இவர்களின் ஆய்வுநூல்கள் பரந்த அளவில் எடுத்துச் செல்லப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதற்கான முறையான சர்வதேச விநியோகத்திட்டம் எதுவும் எமது பதிப்பாளர்களிடம் இல்லை. அதனைச் செய்யவேண்டிய பொறுப்பு எழுதுபவரின் தலையிலேயே கட்டிவிடப்படுகின்றது. பாவம், புத்திஜீவிகளான அவர்களால் வியாபாரச் சிந்தனையை தமக்குள் வளர்த்துக்கொள்ள முடியாதுள்ளது. ஒரு வெளியீட்டு விழாவுடன் திருப்தி கொண்டு விடுகிறார்கள். லண்டனிலிருந்து கடிதம் எழுதி ஒரு பிரதியைக் கேட்டால்கூட பதில் எழுதவோ, தொடர்புகொள்ளவோகூட அவர்கள் அக்கறைப்படுவதில்லை. இத்தகைய நிலையில் நூல் விநியோகத் திட்டம் பற்றி சிந்தித்து அதனைச் செய்யவெண்டியது பதிப்பகங்களே. முன்னர் ஒரு தடவை பூபாலசிங்கம் பதிப்பகத்தின் மூலம் இத்தகையதொரு கூட்டு விநியோகத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக அறிகின்றேன். அது ஏன் தோல்வியில் முடிந்தது என்பதை நாம் ஆராயவேண்டும். அதன் காரணிகளைக் கண்டறிந்து அதனை வெற்றிகொள்ளத்தக்க மற்றொரு தொடர் முயற்சியை பதிப்பாளர்கள் ஒன்றுசேர்ந்து மேற்கொள்ளவேண்டும்.

புதிதாக ஒரு நூல் வெளிவந்ததும் அது பற்றி அறிமுகத்தையும், விமர்சனத்தையும் பத்திரிகைகளிலும் சிறு சஞ்சிகைகளிலும் பிரசுரித்துவிடுவதால் மாத்திரம் அந்த நூலைத் தேடிச் சென்று வாங்கும் அளவுக்கு எமது வாசகர் சமூகம் உத்வேகம் பெறவில்லை என்ற யதார்த்தத்தை நாம் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். வாசகர்களிடம் நூல்களைக் கொண்டுசேர்க்கும் வழிமுறைகளாக இன்று இருப்பது பதிப்பாளர்களின் புத்தக விலைப் பட்டியல்களும், பதிப்பாளர்களின் சஞ்சிகை விளம்பரங்களுமே. இதற்கப்பால் நூல்களை விநியோகிப்பது தொடர்பாக குறைந்தபட்சம் ஒரு கலந்துரையாடலையாவது பதிப்பகங்கள் ஒற்றுமையுடன் அறிவுஜீவிகளுடன் இணைந்து மேற்கொள்ளவேண்டும்.

தமது சந்தை வாய்ப்பை உலகெங்கும் புலம்பெயர்ந்துள்ள எம்மவரிடையே உருவாக்க நியாயமான விலையில் அவர்களிடம் நூல்களைக் கொண்டு சேர்க்க தனிநபர்களின் உதவும் கரங்களைப் பற்றிப் பிடிக்கவேண்டும். லாபத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு புலம்பெயர் தமிழர்களை நோக்கி நீழும் வர்த்தகக் கரங்கள், தவறான கரங்களையும் பற்றக்கூடிய வாய்ப்பு உள்ளது. புலம்பெயர் தமிழர்களின் அறிவியல் தேவை மற்றும் ஆர்வத்துக்கு தீனியாக அமையும் நூல்களை வெளியிடும் முயற்சிகளிலும் பதிப்பாளர்கள்

இறங்கவேண்டும். குறிப்பாக ஈழத்தவரின் சமூக அரசியல், கலாச்சார, பிரதேச வரலாற்று மூலங்களை அடியொற்றிய தேடல் இன்று புலம்பெயர் தமிழர்களிடம் உண்டு. அதற்கு ஏற்ப வெளிவரும் நூல்களையே அங்கு வெற்றிகரமாகச் சந்தைப்படுத்தும் வாய்ப்புள்ளது. இந்தத் தேவையை நிவர்த்திசெய்வது ஈழத்து பதிப்பகங்களினதும், படைப்பாளிகளினதும் கடமையாகும்.

இன்று மணிமேகலைப்பிரசுரமும், காலச்சுவடு பதிப்பகமும், புதிதாக முளைத்திருக்கும் தமிழகத்தின் பல்வேறு பதிப்பகங்களும் புலம்பெயர்ந்தோரை நோக்கித் தமது சந்தை வாய்ப்பை வலுப்படுத்திவரும் வேளையில் ஈழத்தின் பதிப்பாளர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற சாமான்யனின் கேள்விக்கு அவர்களிடமிருந்து நல்லதொரு பதிலை ஈழத்துத் தமிழ்ப்பதிப்புலகம் இன்று எதிர்பார்த்திருக்கிறது.

(மீட்சி: தமிழர் தகவல் நடுவகத்தின் மாதாந்த வெளியீடு.
மலர் 20 (34), மார்ச் 2013: பக்கம் 10-11)

3

தமிழியல் வெளியீட்டுத் தொடர்பகம்

இன்றைய அவசரத் தேவை

இன்று தமிழர் உலகெங்கும் பரந்து வாழ்கின்றார்கள். புலம் பெயர்ந்து அந்நிய மண்ணில் வாழ்கின்ற போதும் தமிழ் மொழியை, தமிழ் கலை கலாச்சாரத்தை, தமிழ் இலக்கியத்தை மறவாது வாழ்வதில் சிரத்தை கொண் டுள்ளனர். தமிழில் சிறு சஞ்சிகைகளும் நூல்களும் ஒளி, ஒலிப் பேழைகளும் இறுவெட்டுக்களும் என்று அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து உருவாகும் போது அவர்களது ஆதங்கம் அந்த ஊடகங்களின் வாயிலாக தாயகத்தையும் தமிழ் உலகையும் எட்டுகின்றது.

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, சுவிற்சர்லாந்து, கென்யா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, சிங்கப்புர், மலேஷியா, தென்னாபிரிக்கா, பீஜித் தீவுகள், அந்தமான் போன்ற பல்வேறு நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களின் தமிழியல் படைப்புக் களில் எத்தனை அண்டை நாடுகளை அடைந்தன என்பது விடைகாண முடியாத கேள்வியாகும். மேலும் இவர்களை நாடி நமது தமிழியல் படைப்புக் களில் எத்தனை சென்றடைந்தன என்பதும் கேள்விக்குரியதாகும்.

கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்படும் சிறு சஞ்சிகை கள், தமிழ் நூல்கள் போன்றவற்றை அந்தந்த நாடுகளில் சிறு அளவில் சேகரித்துப் பாதுகாத்து ஆவணப்படுத்தி வைக்கும் முயற்சிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது. இவை தனியார் முயற்சி யின் விளைவாக சில தனிப்பட்ட நூலகங்களில் சேகரிக்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றதாயினும், நூலக-ஆவணவியல் தொழில்நுட்ப அறிவுடன் அல்லாது தனிப்பட்ட சுவையின் அடிப்படையில் இவ்வாவணங்கள் தேர்ந் தெடுத்த சிறு சேர்க்கைகளாகவே அமையும் சாத்தியமுள்ளது.

விநியோக வசதிக் குறைவின் காரணமாக புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துத் தமிழ் நூல் எழுத்தாளர்-வெளியீட்டாளர்கள், 500 முதல் 1000 வரையில் சிறிய எண்ணிக்கையிலான பிரதிகளையே அச்சிட்டு தம் முயற்சிக்கு

எட்டியவரையில் பணச்சடங்குகளின் வழியாக விநியோகித்து வருகின்றனர். வெளியிடப்படும் பிரதிகளின் எண்ணிக்கையை அதிகரித்தால் தனிப்பிரதியின் உற்பத்திச் செலவு குறையும் என்ற போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட சந்தை வாய்ப்பிற்கு அஞ்சி அவர்கள் அதிகமான பிரதிகளை அச்சிடத் தயங்குவதை அறியமுடிகின்றது.

இன்று தாயகத்தில், பூபாலசிங்கம், குமரன், ஜெயா, சிந்தனை வட்டம் போன்ற நூல் விற்பனை மையங்கள் கணிசமான அளவில் விநியோகத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். 2005 செப்டெம்பர் 11 முதல் 18 வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்தா மண்டபத்தில் (BMICH) மாபெரும் சர்வதேச புத்தகக் கண்காட்சி, நல்லூர் தேர்த் திருவிழாவை எனக்கு நினைவூட்டியது. தமிழ் நூல் விற்பனையும் கணிசமான அளவில் காணக்கூடியதாக இருந்தது. இது ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக அங்கு நடைபெறுவது ஆரோக்கியமான செய்தியாகும்.

இலங்கையில் நூல் கொள்வனவு முயற்சிகள் கூட்டுக்கொள்வனவுத்திட்ட முறையில் பரவலாக அமுலுக்கு வந்திருப்பது எமது தமிழ் நூல் விற்பனை யாளர்களை மகிழ்வடையச் செய்திருக்கின்றது. பாடசாலை நூலகங்கள், இலங்கைத் தேசிய நூலகம், உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு, யுனெஸ்கோ நிறுவனம் உள்ளிட்ட சமூக சேவைகள் அமைப்புக்கள், வடக்கு - கிழக்கு மாகாண அரசு போன்றவை இத்தகைய கூட்டுக் கொள்வனவுத் திட்டத்தில் அக்கறை காட்டுகின்றன.

கூட்டுக் கொள்வனவு என்ற பேச்சுக்கே இடமில்லாத, ஐரோப்பிய தமிழ் வெளியீடுகளுக்கான சந்தையில் காணப்படும் முக்கிய அம்சம் புதிய கொள்வனவாளர்களை உருவாக்குவதில் காணப்படும் மந்தநிலையாகும். ஏற்கெனவே நூல்கள் மற்றும் வெளியீடுகளை வாங்கியவர்களே திரும்பத் திரும்ப புதிய நூல்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இங்கு காணப் படுகின்றது. வெளியீட்டாளர்- வாசகர் நேரடித் தொடர்பே இதற்கு முக்கிய காரணமாகக் கருதலாம். நூலைப் பற்றி அறியாதவர்களிடம் புதிய நூல் பற்றிய செய்தியைக் கொண்டுசெல்லும் நம்பிக்கைக்குரிய ஊடகம் ஒன்றில்லாமையும் மற்றொரு காரணமாகும். நூலை விற்பனை செய்யும் வர்த்தகர்களையும், அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிவரும் நூல் அறிமுகங்களையும், அறிமுக விழாக்களையுமே நூல் பற்றிய செய்தியை இன்று வாசகர்களிடம் எடுத்துச் செல்லும் ஊடகங்களாகக் காண்கின்றோம். இது எவ்வகையிலும் ஆரோக்கியமானதொரு புத்தகச் சந்தையை உருவாக்கப் போவதில்லை.

இதை இன்று புகலிடத்தில் உள்ள எந்தவொரு எழுத்தாளரும் புரிந்து கொள்வதாகவோ, அதற்கான மாற்று வழியொன்றை, ஆரோக்கியமான சந்தைப்படுத்தல் முறையொன்றை உருவாக்குவது பற்றிச் சிந்திப்பதாகவோ கதைப்பதாகவோ கூடத் தெரியவில்லை. எத்தனை காலம் தான் இப்படி தனி மனிதத் தீவுகளாக எமது தமிழ் எழுத்தாளர்கள் வாழப்பொகின்றார்கள் என்பது கேள்விக்குரியது.

இலங்கை, இந்தியா போலல்லாது ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் லாச் சப்பலைத் தவிர தமிழ் நூல்களுக்கென பிரத்தியேகமான நூல் விற்பனை நிலையங்கள் ஏதும் உள்ளதாகத் தெரியவில்லை. பெரும் பான்மையான தமிழர்கள் வாழும் ஐரோப்பிய நாடுகளில் ஈழத்துத்தமிழ் நூல் விற்பனைக்கு பலசரக்கு வியாபார ஸ்தாபனங்களை நடாத்தும் தமிழ் வர்த்தகர்களையே நாம் நம்ப வேண்டியவர்களாக உள்ளோம். இலக்கிய சிந்தனையற்ற, வெறும் வர்த்தகர்களான இவர்கள் வேண்டாவெறுப்பாக ஒதுக்கும் ஒரு சிறு மூலையையே எம்மவரின் தமிழ்நூல்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் அடைக்கலம் தேடவேண்டிய சோகமான நிலை இன்றுள்ளது. இவர்கள்கூட தென்னிந்திய ஜனரஞ்சக நூல்களையே அக்கறையுடன் தமது தட்டுக்களில் முற்பணம் கொடுத்து வாங்கி அடுக்கி வைக்கிறார்கள். ஈழத்துத் தமிழ் நூல்கள் எவையும் இப்படி வாங்கப்படுவதாக வரலாறே இல்லை. அவை அனைத்தும் Sale or Return எனப்படும் விற்பனை அல்லது திருப்பிப் பெறல் என்ற வர்த்தகனின் முதலீட்டுக்குச் சேதமற்ற வாய்ப்பான வழிமுறை களில் வழங்கப்படுகின்றன. ஈழத்துத் தமிழ் நூலை விளம்பரப்படுத்தி, அதை சந்தைப்படுத்தும் முயற்சி எதுவும் செய்யவேண்டிய ஆர்வத்தை புலம்பெயர்ந்த தமிழ் வியாபாரியிடம் இந்த Sale or Return வர்த்தகக் கொள்கை இல்லாமல் செய்துவிடுகின்றது.

ஈழத்தமிழரின் வெளியீடுகளுக்கு திருப்திகரமானதொரு நூல் சந்தை அமைப்பு ஏற்படாத வரையில் காத்திரமானதொரு சர்வதேச நூல் விநியோக முறையை ஏற்படுத்த முடியாது என்பதுடன் சிதறிக்கிடக்கும் எமது வெளியீடு களை ஒன்று சேர்த்து ஆவணப்படுத்தி ஒரு வரலாற்றுப் பதிவை ஏற்படுத்த முடியாத நிலைமையும் காணப்படும். நீண்டகால நோக்கில் சர்வதேசங்களிலும் பரந்து வாழும் தமிழர்களின் வெளியீடுகளை ஓரிடப்படுத்திச் சேகரிக்கவும் இத்தகையதொரு அமைப்பு அவசியமாகும். இன்று நான் மேற்கொண்டுவரும் வாழ்நாள் முயற்சியான நூல்தேட்டம் என்ற ஈழத்துத் தமிழ்நூல்களை ஆவணப்படுத்தும் பணியில் 5000 நூல்களை பதிவு நூலுருவில் வெளி யிட்டதன் பின்னர், ஆறாவது தொகுதியின் தொகுப்புப் பணிகளில் ஈடுபட்டு

வருகின்றேன். கூட்டங்களிலும், தனிப்பட்ட முறையிலும் என்னைச் சந்திக்கும் பெரும்பான்மையான எழுத்தாளர்கள் என்னிடம் கேட்கும் கேள்வி, இந்த நூல்களை எல்லாம் சேகரித்து ஓரிடத்தில் வைத்திருக்கிறீர்களா என்பது தான். இதை இவர்கள் தமக்குத் தாமே ஒரு தடவை கேட்டுப்பார்க்க வேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள்.

இன்று புகலிட நாடுகளில், எமது தேவைகளை அடுத்தவர் நிறைவேற்றுவார் என்றிராமல் எமது தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள நாமே ஏற்ற வழிகளைத் தேடவேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்நிலையில் தமிழர் செறிந்து வாழும் நாடுகளில் நூல் வெளியீடு, எழுத்துத் துறைகளில் ஈடுபடும் கரிசனை மிக்கவர்கள், தமிழியல் நூல் வெளியீட்டுத் தொடர்பகம் ஒன்றினை அமைத்துச் செயற்படுத்துவதன் மூலம் மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கான தீர்வைக் காணலாம். தொடர்பகங்கள் முதலில் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு, பின்னர் தேசிய மட்டத்தில் இணைந்து தம் நடவடிக்கைகளை விரிவுபடுத்தலாம். இதுவே பின்னர் வளர்ச்சியுற்று சர்வ தேசரீதியில் நாடுகளுக்கிடையே தம் தமிழியல் வெளியீட்டுத் தொடர்புகளை வெற்றிகரமாக மேற்கொள்ள வாய்ப்பாக அமையலாம்.

(பூபாள ராகங்கள் 2006, ஜூலை 2006: பக்கம் 122-128)

4

பாடசாலை நூலகங்களும் எமது சமூகத்தின் வாசிப்புத் திறனும்

ஒரு சமூகத்தின் அறிவு வெறும் பாடப்புத்தகங்களுடன் நின்றுவிடுவதில்லை. ''கண்டதும் கற்கப் பண்டிதனாவான்'' என்ற பழமொழி தமிழிலே தானுண்டு. பாடநூல்களும், பாடவிதானத்துடன் (பாடத்திட்டத்துடன்) தொடர்பான உப பாட நூல்களும் ஒரு மாணவனின் பாடத்திட்டம் தழுவிய செயற்பாட்டுக்கு உதவும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இருக்கமுடியாது. ஆனால் பாடத்திட்டம் தாண்டிய புற உலகின் வளர்ச்சியையும், நவீன மாற்றங்களையும், அன்றாட உலகளாவிய நிகழ்வுகளையும் அறிந்துகொள்வதன்மூலமே ஒருவனின் அறிவும், ஆற்றலும் விரிவுபெறும். ''வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்'' என்ற வாசகம் கூறுவதும் அதையே. வெறும் பாட நூல்களைப் படிப்பதன்மூலமும், இரண்டுவரியில் ஆதாரபூர்வமற்ற அரைகுறைத் தகவல் தரும் பொது அறிவு நூல்களை மனப்பாடம் செய்வதனால் மாத்திரம் பூரணமனிதனாகிவிட முடியாது. ஒருவேளை தோற்றும் பரீட்சையில் சித்தியெய்திவிடலாம். அது மட்டும்தானா வாழ்க்கை?

ஒரு மாணவனின் விரிந்த அறிவுத்தேடலுக்கான வித்து பாடசாலை நூலகங்களிலேயே விதைக்கப்படுகின்றன. அண்மையில் ஒரு இலங்கைச் சமூகவியல் களஆய்வில் ''பாடநூல்களை வீட்டில் வாசிக்கப் பண்ணுவதை பெற்றோர் தண்டனையாகவே குழந்தைகளுக்கு முதலில் அறிமுகப்படுத்து கிறார்கள்'' என்ற செய்தி எம்மளவில் புதுமையானதல்ல. இன்றும் சராசரி வீட்டில் துறுதுறுவென்று குளப்படி செய்துகொண்டிருக்கும் தன் பிள்ளையைக் கட்டுப்படுத்த, அப்பிள்ளையை ஓரிடத்தில் இருத்தி ''நகராமல் இருந்து பாடப் புத்தகத்தை வாசி'' என்று கூறி அடக்கும் பெற்றோரை எமது தமிழ்க் குடும்பங்களில் அன்றாடம் காண்கிறோம். இதன் சமூகப் பாதிப்பு என்ன வென்றால், வாசிப்பை ஒரு தண்டனையாக அக்குழந்தை சிறுவயதிலேயே மனதளவில் ஏற்படுத்திக் கொள்வதேயாகும். அதுமாத்திரமல்லாது, தூக்கம்வராதவர்கள் நூல்வாசித்துத் தம் தூக்கத்தை வரவழைத்துக்கொள்ளும் கெட்ட பழக்கமும் உள்ளது. இவை மிகத் தவறான அணுகுமுறைகளாகும்.

ஒருவரது வாசிப்பு சுதந்திரமானதாக இருக்கவேண்டும். தனக்குத் தெரிந்தவைகளிலிருந்தே ஒரு குழந்தை தெரியாததைக் கற்றுக்கொள்ளும். தனக்கு விரும்பியவைகளை வாசிக்கத் தொடங்குவதன்மூலமே ஒருவன் தான் விரும்பாதவற்றையும் விரும்பி வாசிக்கக் கற்றுக்கொள்வான். எதை வாசிக்கவேண்டும் எதை வாசிக்கக்கூடாது என்ற அறிவையும், எதை வாசித்தால் நல்ல விடயங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவையும் காலக்கிரமத்தில் அவர்கள் வாசிக்கும் நூல்களே அவர்களுக்குப் போதித்து விடுகின்றன. இதனை ஒவ்வொரு நூலகரும்- குறிப்பாக பாடசாலை நூலகரும் தம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

இன்று நூலகர்களாக, நூலகங்களில் வீற்றிருக்கும் பலர் தம்மை புனிதமான- ஆற்றல்மிக்க நூலகர்களாகசுசு எண்ணுவதில்லை என்பது எனது கசப்பான அனுபவமாகும். ஏதோ வருவாய்க்காக, சமூக கௌரவத்துக்காக அக்கதிரையில் இருக்கமுயல்வதும், அதற்குத் தூண்டப்படுவதும் ஆபத்தானது. அனுமானின் வாலில் மறைந்துள்ள சக்தி அவரை கடல்தாண்டிப் பறக்கவைக்கும் வலிமை மிக்கது என்ற செய்தியை இராமர் சொல்லும்வரை அனுமானே அறிந்திருக்கவில்லை என்கிறது இராமாயணம். அதுபோல ஒரு பாடசாலை நூலகரின் சக்தி, சமூகப் பொறுப்பு என்பவை என்ன என்பதை விரிவாகச் சொல்லித்தரும் பொறுப்பை அவர்களை நூலகர்களாகப் பயிற்றுவித்த ஆசான் களான இராமர்கள் நிச்சயம் சொல்லிவைத்திருக்கவேண்டும். இன்று வேறு துறைகளில் கால்பதிக்கமுயன்று தோற்றவர்கள், இலகுவாக நூலகவியல் துறையைக் கண்டறிந்து அதற்கான படிப்பிலீடுபட்டு, ஆரம்ப இடைநிலைப் பரீட்சைகளைச் சித்தியெய்தும் ஒரே நோக்குடன் முயன்று, ஒரு நூலகக் கதிரையை நிரப்பி நூலகராகத் ''தொழில்'' செய்வதையே இன்று பெரும்பாலான நூலகங்களில் காணமுடிகின்றது. அதற்கான எளிதான நோகாதசுசு வழிமுறை களைத் தேடிக்காட்டுபவராகவே அவர்களது விரிவுரையாளர்கள் காணப்படு கின்றார்கள்.

எண்பதுகளில் நான் யாழ்ப்பாணம், திருநெல்வேலி இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நூலகத்தில் பணியாற்றிவந்தேன். அங்கிருந்துதான் ஈழத்தின் முதல் தமிழ் நூலகவியல்துறைசார்ந்த சஞ்சிகையான ''நூலகவியல் காலாண்டிதழ்'' உயிர்பெற்று ஏழாண்டுகள் தொடர்ந்தது. நூலகவியல் கருத்தரங்குகள் விடுமுறை தினங்களில் ஏற்பாடு செய்யப்பட்டன. அன்றுவரை இல்லாதிருந்த தமிழ்மொழிமூலமான நூலகவியல் துறைசார் நூல்கள் பல அயோத்தி நூலக சேவைகள் என்ற எனது வெளியீட்டகத்தின் மூலம் வெளி யிடப்பட்டன.

இந்நூலகத்திற்கு அருகில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில்தான் வார இறுதிகளில் நூலகவியல் கல்வி போதிக்கப்பட்டது. முதலாம் ஆண்டு மாணவர்கள் உசாத்துணை நூல்கள் பற்றிய விரிவான தேடல் அறிவு மிக்கவர் களாக இருக்கவேண்டும். அவர்களது தேடல் நிஜமானதாக இருக்கவேண்டும். வெறும் பாடப்புத்தக ''நோட்ஸ்''களை நம்பியதாக அவர்களது தேடல்கள் இருக்கக் கூடாது என்பதால், நூலகவியல்துறை மாணவர்களை எனது நூலகத் திற்கு வரவழைத்து அவர்களிடம் 40 கேள்விகளைக் கொடுத்து, அதற்கான பதில்களை எனது நூலகத்தில் உள்ள அனைத்து உசாத்துணை நூல்களிலும் இருந்து தேடிப்பதிவுசெய்து வழங்கும் பயிற்சியை வழங்கிவந்தேன். இது ஒரு இலவச சேவையாக, நூலகவியல் மாணவர்களின் கல்வியை சுவாரஸ்யம் மிக்கதாக ஆக்குவதற்கு தூண்டுகோலாக அமையும் என்ற காரணத்தால் எனது மிகக்கடினமான வேலைப்பளுவுக்குள்ளும் இதனைப் பலகாலம் தொடர்ந்து செய்துவந்தேன். இப்பயிற்சியை பெற்றபலர் இன்றும் உங் களிடையே நூலகர்களாகப் பணியாற்றக்கூடும். அவர்களிடம் நீங்கள் அந்த அனுபவத்தைக் கேட்டறிந்துகொள்ளலாம்.

இந்த இனிய அனுபவத்துக்குத் திடீரென்று நூலகவியல்துறை பயிற்சியாளர் ஒருவரால் தடைவிதிக்கப்பட்டது. அம்மாணவர்கள் நூலக வியலில் ''டியூஷன்'' பெறுவதற்காக என்னை அணுகுகின்றார்கள் என்றும், அது தொடர்ந்தால் அங்கு செல்லும் மாணவர்கள் நூலகக் கல்வியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றும் ஒரு கொடுரமான எச்சரிக்கை அவர்களுக்கு விடப்பட்டிருந்தது. இதிலிருந்து சுதந்திரமான அறிவுத் தேடலுக்கு ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் எதிர்ப்பாளர்கள் கல்லிடைத்தேரைகளாக இருந்துவருகிறார்கள் என்பதை அனுமானிக்க முடிகின்றது.

ஒருவர் தம்மை சமூகப் பொறுப்புள்ள ஒரு நூலகராக இனம்காண வேண்டுமானால் துணிச்சலுடன் செயற்படப் பயிற்சி பெறவேண்டும். சுயநல நோக்கின்றி, வெளிப்படையான பணிகளின்மூலம் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கப் பழகிக்கொள்ள வேண்டும். கீழ்க்கண்ட செயற்பாடுகளுக்கு தனது மனச்சாட்சியின் பதிலாக ''ஆம்¨ என்ற பதிலைத் தருபவராக நீங்கள் இருந்தால், உங்களை ஒரு நல்ல நூலகராகச் சமூகத்தில் இனம்காட்டிக் கொள்ளலாம்.

1. உங்கள் விருப்புக்குரிய வாசிப்பாக குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒருநூலையாவது முழுமையாக வாசிப்பராக இருக்கவேண்டும். இங்கு

வாசிப்பு என்பது ''பார்வையிடல்'' என்ற பதத்தைக் குறிப்பிடுவதில்லை. மாதமொரு நூலையாவது வாசித்துக் கிரகித்திருக்க வேணடும். அந்த நூலின் உள்ளடக்கம் பற்றிய உங்கள் நேர்மையான கருத்தை குறைந்த பட்சம் இருவருடனாவது பகிர்ந்துகொண்டிருக்க வேண்டும். சுயமான வாசிப்புக்குத் தானே விரும்பாத ஒருவர் நூலகராக ''வாழும்'' அடிப் படைத் தகுதியற்றவராவார். அவர்களால் நூல்களைக் கட்டிக்காக்கவே முடியும். அதைச் செய்வதற்கு நூலகவியல் கல்விபெற்ற நூலகர் தேவையில்லை. நூலகரல்லாத ஒரு பண்டகசாலைக்காப்பாளராகவே (Store Keeper) இருந்துவிட்டுப் போகலாம். தான் வாசிக்கமுயலாத எவரும் மற்றவர்களை வாசிக்கத்தூண்டுவது கேலிக்குரியதாகிவிடும்.

2. நூலகராகக் கடமையேற்ற முழுமையான காலகட்டத்தில் உங்கள் அங்கத்தவர் பட்டியலில் குறைந்தபட்சம் 10 ''புதிய'' வாசகர்களை உருவாக்கியவராக-அவர்களை சட்டென்று மற்றவர்கள் ''நல்லதொரு வாசகன்/வாசகி இவர்'' என்று இனம்காணக்கூடியவராக மாற்றியமைத்த பெருமைக்குரியவர் நீங்கள் என்று கருதுபவராக ஒரு நூலகர் இருப்பாரானால், அவர் தன்னை ஒரு நல்ல நூலகர் என்று குறிப்பிட்டுக் கொள்ள உரித்துடையவராவார். ஒரு நூலகரின் பணி, நூலகத்தை நாடிவரும் வாசகர்களுக்குப் பணிவிடைசெய்வது மாத்திரமல்ல. புதிய வாசகர்களை சமூகத்தில் உருவாக்கிவிடுவதில் இன்பம் காண்பதாகவும் அமையவேண்டும். உங்களால் வாசகராக உருவாக்கப்படுபவர், நூலகத்தின் அங்கத்தவராக இருக்கவேண்டுமென்பது கூட முக்கியமல்ல. சொந்தத் தாயாராக, தந்தையாக, தம்பி-தங்கைகளாகக் கூட அவர்கள் இருக்கலாம். உங்கள் குடும்ப அங்கத்தவர்களை முதலில் வாசிக்கத் தூண்டி அவர்களை நல்ல வாசகராக மாற்ற முயலவேண்டும். அதைச் செய்ய முயலாதவர்களால், முடியாதவர்களால், சமூகத்தில் வாசிப்பை நேசிக்கும் புதியவர்களையும், வாசிப்புப் பண்பாட்டையும் உருவாக்கும் சக்தியைப் பெற முடியாது போகலாம். ''ஒரு சமூகத்தின் வாசிப்பு ஒவ்வொரு வீட்டின் மூலையிலுமிருந்துதான் உருவாகின்றது''. நீங்கள் புதிய வாசகர்களை சமூகத்துக்கு வழங்குவதில் இதுவரை ஒருபோதாவது வெற்றிகண்டுள்ளீர்களா?

3. நூலகர் தனது நூலகத்தின் சேர்க்கைகளில் அதிக அக்கறை கொண்டவராக இருக்கவேண்டும். அதற்கான வழிமுறைகளை, நிர்வாகத் தொடர்புகளை சமரசமாகப் பேணும் திறன்மிக்கவராக இருக்கவேண்டும். ஒரு நூலகச்

சேர்க்கை காத்திரமானதாகவும், கவர்ச்சிமிக்கதாகவும் இல்லாது போனால் நூலகமும் சோபையிழந்து போகும், அதன் நூலகரும் பொலிவிழந்து போவார். பாடசாலை நூலகக் கொள்வனவில் ஈடுபடுவதில் அதிகமாக அப்பாடசாலையின் அதிபர்களையும், செல்வாக்கு மிக்க ஆசிரியர் களையுமே இலங்கையின் புத்தக நிலையங்களிலும், புத்தகச் சந்தைகளிலும் காணமுடிகின்றது. இது ஆரோக்கியமான செயற்பாடல்ல. ஆசிரியர்களுக்குத் தமது துறைசார்ந்த நூல்களைத் தெரிவுசெய்வதிலேயே அக்கறை மிகுந்திருக்கும். நூலகருக்கோ அவரது நூலகச் சேர்க்கை சார்ந்த அக்கறை விரிந்துபட்டிருக்கும். பாடசாலை நூலகங்களில் பாடங்கள் சார்ந்த நூல்கள் மாத்திரம்தான் வைத்திருக்கவேண்டும் என்ற நிலைப்பாடு எழுபதுகளின் இறுதிப் பகுதிகளிலேயே ஐரோப்பிய நாடுகளில் முடிவுக்கு வந்துவிட்டன. பாடம்சார்ந்த நூல்களுடன் பல்வேறு அறிவியல் நூல்களும் அங்கு இன்று உள்ளன. ஹரிபொட்டர் மாயாஜாலக் கதை நூல்கள் இல்லாத பாடசாலை நூலகங்கள் லண்டனில் இன்று இல்லை. தற்போது ஐரோப்பிய ஊடகங்களில் முக்கிய செய்தியாக அடிபடுவது இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய தகவல்களாகும். இன்று எந்தவொரு நூலகத்துக்கு- அது பாடசாலை நூலகமாகவோ, பொது நூலகமாகவோ இருக்கலாம்- சென்றாலும் முன்னறையில் உங்களை வரவேற்பது அத்துறைசார்ந்த நூல்களும் பத்திரிகை வெட்டுத் துண்டுகளுமே. பாருங்கள், தான் சார்ந்த சமூகத்தின் அறிவை விருத் திசெய்யவேண்டும் என்ற அக்கறை எவ்வளவுதூரம் இந்த நூலகர்களிடம் சுதந்திரமாக நிரம்பி வழிகின்றதென்று. சிறுசிறு முடிவுகளுக்கெல்லாம் நிர்வாகத்தின் அனுமதியைப் பெற்றாகவேண்டும் என்ற அடிமைநிலை நிர்வாகரீதியாக மாற்றப்படவேண்டும். நூலகர்கள் ஒரு வரையறைக்குள் சமூகப் பொறுப்புடனும், சுயசிந்தனையுடனும் செயற்பட வழியமைத் துத்தரப்படவேண்டும். இன்றைய காலகட்டத்தில் நூலகத்தின் நூற்சேர்க்கை களைத் தேர்ந்தெடுக்கும் நிர்வாக அதிகாரம் ஒரு நூலகரிடம் இல்லாத விடத்து அவர் ஒரு நல்ல நூலகராகச் செயற்படமுடியாது.

4. ஒரு நூலகரை மற்றவர்கள் மதிக்கவேண்டுமானால் அது அவரது செயற்பாடுகளினால் மாத்திரமே சாத்தியமாக்க முடியும். சுயநலநோக்கம் கொண்டு நிர்வாகத்தை அணுகாது, பொது நல நோக்கோடு நிர்வாகத்தைத் தட்டிக்கேட்க முற்பட்டால் அதற்கு பொதுமக்களின் ஆதரவும், ஊட கங்களின் ஆதரவும் எளிதில் கிடைத்துவிடும்.

நான் எனது ஆரம்பகால நூலகப் பணியை சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில்தான் ஆரம்பித்தேன். கவனிப்பாரற்றிருந்த அந்த நூலகத் தினை புனரமைக்கும் பணியை என்னிடம் அந்நாளில் வடமாகாண கல்வித் திணைக்கள அதிபரான திரு மாணிக்கவாசகர் அவர்கள் தனிப்பட்டமுறையில் ஒப்படைத்திருந்தார். எனக்கு வழங்கப்பட்ட தற்காலிக வேதனம் ரூபா 125., அந்நாளில் அக்கல்லூரியில் பியூனாகப் பணிபுரிந்தவருக்கு ரூபா 400 மாத வேதனமாக வழங்கப்பட்டதிலிருந்து ஒரு பாடசாலை நூலகரின் வேதன மதிப்பீடு நிர்வாகத்தின் பார்வையில் எப்படி இருந்திருக்கிறது என்பதை அவதானிக்கலாம். அங்கு பணியாற்றிய காலகட்டத்தில் இடம்பெற்ற நிர்வாகப் பிரச்சினை பற்றிய செய்தி இக்கட்டுரைக்கு முக்கியமானது.

அக்காலகட்டத்தில் கல்விப்பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைக்கு மாணவிகள் ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். இராமநாதன் கல்லூரியின் உயர்தர விஞ்ஞான மாணவியர் சிலர் என்னை அணுகி, என்னிடம் *விலங்கு உயிரியல்* என்ற நூலை இரவலாகப் பெற்றுக்கொள்ள முடியுமா என்று கேட்டார்கள். தட்டுகளில் தேடிப்பார்த்தேன் ஒன்றுகூட அகப்படவில்லை. நூற்சேர்க்கைப் பதிவேட்டைப் புரட்டிப்பார்த்ததில் ஏழு பிரதிகள் நூலகத்தில் இருந்தாகவேண்டும். இரவல் வழங்கும் பதிவேடு முறையாகப் பேணப்பட்டி ருக்கவில்லை. அம்மாணவியரிடம் விரைவில் நூல்களைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்தபின்னர், தேடுதல் வேட்டையில் ஈடுபட்டேன். முதற் பணியாக, அந்நூலை கையகப்படுத்தி வைத்திருக்கும் ஆசிரியர்கள் அனைவரும் விலங்கு உயிரியல் நூல் பிரதிகளை நூலகத்தில் மீள ஒப்படைக்குமாறு ஒரு கடிதத்தை எழுதி அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அத்தகைய விண்ணப்பங்களை நான் கோரமுடியாது என்றும் தானே அதனை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இருவாரங்களாக எவ்வித பயனும் இல்லை. மீண்டும் அதிபரிடம் சற்று அழுத்தமாக எனது வேண்டுகோளைத் தெரிவித்தேன். மாணவிகளுக்கு ஒரு பிரதிகூட கையிருப்பில் இல்லாத நிலையில் ஆசிரியர்கள் தமது பிள்ளைகளுக்காக அவற்றை எடுத்துச் செல்வது நியாயமல்ல என்ற போக்கில் எனது வாதம் அமைந்தது. முடிவில் விலங்கு உயிரியலின் ஏழு பிரதிகளும் நூலகத்தில் ஒப்படைக்கப்பட்டன. மாணவியரிடம் அவை வழங்கப்பட்டன. அதன்மூலம் நிர்வாகரீதியில் கசப்பான அனுபவங்களை நான் எதிர்கொண்டபோதிலும், நூலகத்தின் துரித வளர்ச்சி எவரது சீண்டுதலுக்கும் கவசமாக அமைந்து என்னைப் பாதுகாத்தது. பாதிக்கப்பட்ட ஒரு ஆசிரியர் உளவியல்ரீதியாக என்னைப் பாதிக்கும் வகையில் ‘‘125 ரூபா Facilities Fees சம்பளத்தில் இயங்கும் உமக்கு ஏன்

இவ்வளவு அக்கறை?'' என்றும் கேட்டிருந்தார். எமது நகர்வுகள் பொது நோக்கத்தையே முன்னிலைப்படுத்தி அமைந்ததால் நிர்வாகத்தினால் பாதிப்புகளை எதிர்கொள்வதற்குத் தடையாக அன்றைய மாணவியர்களின் படையணியே எனக்குக் கவசமாக அமைந்தது. அக்காலகட்டத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வுசெய்யப்பட்ட மாணவியர் எண்ணிக்கை அதிகரித்திருந்ததாக பின்னாளில் ஒரு இராமநாதன் கல்லூரி ஆசிரியரே என்னிடம் குறிப்பிட்டிருந்தார். அன்று எனது நூலகசேவைகளைப் பெற்றிருந்த உயர்தர கல்வி மாணவியருள் ஒருவரே இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதி நூலகராகவும் பணியாற்றுகின்றார் என்பதும் மனம்கொள்ளத்தக்கது.

முன்னர் குறிப்பிட்டிருந்ததுபோல சுயநலநோக்கம் கொண்டு நிர்வாகத்தை அணுகாது, பொது நல நோக்கோடு நிர்வாகத்தைத் தட்டிக்கேட்க முற்பட்டால் அதற்கு பொதுமக்களின் ஆதரவும், ஊடகங்களின் ஆதரவும் எளிதில் கிடைத்துவிடுவதுடன், நிர்வாகத்தின் செவிப்பறைகளில் அது எளிதில் சென்று தாக்கும் வல்லமை கொண்டதாகும். இத்தகைய சூழலை தன்னளவில் ஏற்படுத்திக்கொள்ளாத நூலகர்கள், நூலகத் தொழிலாளர்களாகவே எஞ்சிய காலத்தைக் கழிக்கநேரிடும். ஒரு நூலகத்தில் கழிவறை இல்லாமல் இருப்பது சமூகக் கொடுமை. இதனை இன்று எத்தனை நூலகர்கள் வெளி உலகிற்குக் கொண்டு வருகிறார்கள். கழிவறை வசதியில்லாத, வாசகர், இருந்து வாசிக்க பொருத்தமான அடிப்படை வசதியில்லாத நூலகங்களை, போதிய தட்டுக்களின்றி நூலக சேவைகளை விரிவுபடுத்தமுடியாத நூலக வசதி யீனங்கள் என்று பலவற்றை நாங்கள் அன்றாடம் கண்டு வருகின்றோம். அத்தகைய வசதியற்ற நூலகங்களில் பணியாற்றும் நூலகர்களில் ஒருவராக நீங்கள் இருந்தால், அத்தகைய சேவைகளை உங்கள் வாசகர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் வெற்றிகண்டு இருக்கிறீர்களா? ஆம் என்று உங்கள் மனச்சாட்சி சொல்லுமாக இருந்தால், நீங்கள் ஒரு சமூக நூலகராக உங்களைக் கருதுவதில் தப்பேயில்லை. குறிப்பிட்ட நிர்வாகிகள் இதற்குத்தடையாக இருக்கிறார்கள் என்று கருதி உங்கள் செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள வழிமுறைகளைத் தேடும் கோழைகளாக நீங்கள் இருந்தால், உங்கள் பதவிக்கு நீங்கள் பொருத்தமானவர்களே இல்லை.

மேற்கண்ட அடிப்படை நான்கு அம்சங்களும் ஒரு நூலக ஊழியரை சிறந்த சமூகப்பொறுப்புள்ள நூலகராக உருமாற்றத் துணை நிற்பவையாகும்.

பாடசாலை நூலகசேவைக்கும் ஈழத்து நூல் பதிப்புத்துறைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இன்று பதிப்புத்துறையின் நலிவுக்கு, பாடசாலை

நூலகங்கள் புதிய வாசகர்களை உருவாக்காமல் புலமைப்பரிசில் பரீட்சைகளைக் கருத்திற்கொண்டு மாணவர்களை இயந்திரங்களாக மாற்றும் சோம்பேறித் தனமான வழிகாட்டலுக்குத் தள்ளப்படுவதை காரணமாகக் குறிப்பிடுகிறார்கள். இன்று புத்தகச் சந்தை கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்படும் நாட்களை மையம்கொண்டு பொது உளச்சார்பு நூல்களும், உப பாடநூல்களும் 70 சதவீதமான அச்சகங்களால் வெளியிடப்பட் டுச் சந்தைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இவை இந்த ஆசிரியர் உலகிற்குத் தீவனமாகவே அமைகின்றன. அவர்களும் தமக்கென ஒதுக்கப்படும் பணத் தொகையில் இத்தகைய நூல்களைப்பெறுவதில் அதீத அக்கறை காட்டுபவராக இருக்கிறார்கள் என்றும், பொது அறிவியல், இலக்கிய நூல்களின்பால் அவர் களின் கவனம் திரும்புவதே இல்லை என்பதும், பிற நூல்பதிப்பாளர்களினதும் ஈழத்து எழுத்தாளர்களினதும் முக்கியமான ஆதங்கமாகச் சொல்லப்படுகின்றன.

இதன் காரணமாக ஈழத்துப் புத்தகச் சந்தையில் சமூக, கலை, இலக்கிய நூல்கள் பெரும்பாலும் ஒரு தலைப்பில் 300 பிரதிகள் அச்சிடப்படுவதே அவர்களுக்கு விநியோகச் சிக்கல்களையும் சந்தைசார் பணமுடைகளையும் தோற்றுவிப்பதாய் அமைந்துள்ளன. இது மிகவும் ஆரோக்கியமற்ற பாரதூரமான நிலைப்பாடாகும். பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் புதிய புதிய தலைப்புகளில் நூல்வெளியீடுகள் வருகின்றன. இதை வைத்துக்கொண்டு ஈழத்துப் பதிப்புலகமும், நூல்வெளியீட்டுத்துறையும் வெகு கோலாகலமாக முன்னேறி வருகின்றன என்று குறிப்பிடுவது ஓர் ஆழப்பார்வையாக இராது. அத்தகைய நூல்களில் எவ்வளவு நூல்கள் பலரது கைகளையும் சென்றடை கின்றன என்ற கேள்விக்கு ஆரோக்கியமான பதில் படைப்பாளியிடம் இராது. யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட சில நூல்கள் யாழ்ப்பாண மாவட்டத்தை விட்டே வெளியில் பரவலாகச் சென்றடைவதில்லை. மலையகத்தில் வெளி யிடப்படும் பல நூல்கள் மலையகத்தவரின் கைகளிலும், இஸ்லாமியரின் தமிழ் நூல்கள் இஸ்லாமிய சமூகத்துக்கப்பால் பரவலாகச் சென்றடைய முடியாத நிலையும் காணப்படுவதை எனது அனுபவ வாயிலாகவே கண்டு ஆரம்பத்தில் அதிர்ந்தவன் நான். இன்று அதுவே இயல்புவாழ்வாகிப் போனதால், நூல்தேட்டத்தின் தகவல் தேவைக்காக இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் தொடர்வதை வழமையாகக் கொண்டுவிட்டேன்.

நூல்களின் பெருமளவிலான உருவாக்கத்திற்கு அந்நூல்களின் பரந்து பட்ட வாசிப்புத்தளம் முக்கியமானது. ஒருவரின் வாசிப்புத்தளத்திற்கு அவரது பாடசாலை வாழ்க்கையிலேயே அத்திவாரமிடப்படல் வேண்டும். அதற்கான வசதியை ஏற்படுத்தவேண்டியது பாடசாலை நூலகங்களின் கடமையாகும்.

இலங்கையின் முன்னணிப் பாடசாலைகளை அவதானித்தால், அதன் நூலகம் செழுமையாக இருப்பதை அவதானிக்கலாம். சில பாடசாலைகளில் நூலகம் பூட்டப்பட்ட அறைகளில் பூதம் காக்கும்புதையல்களாகக் காட்சியளிக்கின்றன. நூலகத்தின் செழுமையே ஒரு பாடசாலையின் மாணவர்களை அறிவாளி களாக்குகின்றன என்றால் அது மிகையாகாது. ஐரோப்பிய பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் நூலகமே முதலில் துலக்கமாகத் தெரிகின்றன. இலங்கையில் இது எத்தனை வீதம் நடைபெறுகின்றது என்பதும் ஒரு கேள்வி யாகும். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் நுழைவாயிலை நூலகம் அலங்கரிப்பதை நாம் இங்கு மனங்கொள்ளவேண்டும். ஒரு பாடசாலை நூலகத்தின் மதிப்பும் முக்கியத்துவமும் கூடக்கூட அப்பாடசாலையின் அறிவார்ந்த மாணவ சமூகத்தின் எண்ணிக்கை பெருகும் என்பது நியதியாகும். இதே சமன்பாட்டை இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களின் ஒவ்வொரு பாடசாலையும் மனதிற் கொள்ள வேண்டும். அர்த்தமற்ற குறுகிய நிர்வாகத் தடைகளைக் களைந்து நூலகரை முழுமையான சுதந்திரத்துடனும் மன ஆரோக்கியத்துடனும் பணியாற்ற வழிவகுக்கும் உள்ளகச் சட்டங்களை பாடசாலை அதிபர்களும், பாடசாலை இயக்குநர் சபையும் அறிமுகப்படுத்து வதால் மட்டுமே பாடசாலை நூலகங்கள் செழுமைபெறும். பரந்து விரிந்த அறிவுமிக்க ஒரு இளைஞர் சமூகம் உருவாகும். இத்தகைய ஆரோக்கிய வளர்ச்சிக்கு குந்தகமாக இருக்கும் எந்தவொரு நிர்வாகச் சட்டமும் அர்த்த மற்றதாகும். அதற்குத் துணைபோகும் நிர்வாகத் தலைவரும், நூலகரும் தாம் அறிந்தோ அறியாமலோ ஒரு சமூகக் கொடுமைக்கு துணைபோகின்றவராவார்.

வரலாறு இவர்களை மன்னிக்கப்போவதில்லை.

(இராமஒளி: இராமநாதன் கல்லூரி மலர், 2014)

5

இலக்கியப் படைப்பாளிகள் மட்டும் தான் எழுத்தாளர்களா?

ஓய்வுபெற்ற இலங்கை வங்கி அதிகாரியான திரு. சி.குமாரலிங்கம் அவர்களை நேரில் எனக்குத் தெரியாது. ஆனால் டிசம்பர் 2011இல் அவர் வெளியிட்ட நூலொன்றை வாசிக்கும் வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிட்டியது. ''உலகமயமாதல்: வாஸ்கொடகாமா முதல் ஒபாமா வரை'' என்ற தலைப்பில் அவர் எழுதிய 41 ஆக்கங்களை 57 பக்கம் கொண்ட அவரது சிறு நூல் உள்ளடக்கியிருந்தது.

உலகமயமாதல், முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம், அபிவிருத்தி, கர்லோ குய்லானி, உலக மயமாதல்-நன்மைகள் பெருத்தன-தீமைகள் மலிந்தன, சோளம், செவ்விந்தியர், பட்டினி உலகம், குளிர்பானங்கள், ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே, சொர்க்கத்திலிருந்து நரகம் வரை, மார்க்கோ போலோ, வாஸ்கொடகாமா, Online Computer மூளை உருவானது, சாதி உருவானது, உயர்ந்தவர்கள், அழகின் விதிகள், அழகின் பெருமை, BRIC, பெண் விடுதலை, அமர்த்திய சென், பொன்னான வாழ்வு மண்ணாகிப் போனால், நான்காவது உலகம், Jack of all trades Master of None, உலக வங்கியின் இரண்டு முகங்கள், பயிற்சிப் பட்டறை, சாலை நெடியது, சோறு, பாலஸ்தீன கவிதை, திருமதி டில்மா றவுசெல்ப், வேகநடை, கார்ள் மார்க்ஸ், ஜோர்ஜ் வாஷிங்டன், சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில், மார்க்கிரட் தச்சர், ஜெனரல் சார்ள்ஸ் டி கோல், சைக்கிள் செயின் ஆகிய 41 தலைப்புகளில் அறிவியல் தகவல்களை கவிதைவடிவில் நம்முடன் அந்த நூல்வழியாக பகிர்ந்துகொண்டிருந்தார்.

இதுவொரு வித்தியாசமான முயற்சி. அறிவியல் தகவல்களை கட்டுரை வடிவில் வாசித்திருக்கிறோம். கவிதை வடிவில்...? ஒரு சில இளையோர் நூல்களில் சிறுவர் அறிவியல் தகவல்களை கவிதை வடிவில் முன்னர் சில படைப்பாளிகள் தந்திருக்கிறார்கள். ச.அருளானந்தம் என்னும் கேணிப்பித்தன் (அறிவைத்தரும் பாடல்கள், அறிவொளிப்பாடல்கள்), செ.யோகராசா (ஈழத்து

சிறுவர் அறிவியல் பாடல்கள்), ஆ.சி.நடராஜா (சிறுவர் சிந்தனைக் கவிதைகள்) என்று நீண்ட ஒரு பட்டியலைப் போடலாம்.

ஆனால் இவை எவையும் வளர்ந்தோருக்கான ''சீரியசான'' விடயங்களைத் தொட்டுச்செல்லவில்லை. சிறுவர்களின் கல்விச் செயற்பாட்டுடன் நேரடியாகப் பரிச்சயமான விடயங்களுக்கு அப்பால் இந்தச்சிறுவர் அறிவியல் விஷயங்கள் எட்டிப்பார்க்கவில்லை.

இந்நிலையில், திரு. சி.குமாரலிங்கம் எழுதிய நூல் எனக்கு முக்கியமானதொரு செய்தியைச் சொல்லியது. உலகமயமாதல் என்ற தனது நூலின் ''என்னுரை'' யையும் ஒரு கவிதையாகவே அவர் தந்திருக்கிறார்.

பலர் எழுதும்
கவிதைக்கு பரிசுண்டு
கதைக்குப் பரிசுண்டு
நாவல் (புதினம்) பரிசு பெறுகிறது
கட்டுரைக்குப் பரிசில்லையா?
கட்டுரைகளை
கவிதைகளாகத் தருகிறேன்
வாசித்தால் போதும்...
மேலும் தகவல் தேவையா...

என்று அமைகின்றது திரு சி.குமாரலிங்கத்தின் ''என்னுரை''. இதில் மிக முக்கியமான ஆதங்கத்தை அவர் பதிவுசெய்திருக்கிறார். உண்மைதான். கட்டுரைகளுக்கு யார் பரிசுகொடுக்கிறார்கள்?

இலங்கையில் ''எழுத்தாளர்'' என்றாலே அவர் கவிதை, கதை, நாவல் என்று ஆக்க இலக்கியம் படைப்பவராகத்தான் இருக்கவேண்டும் என்ற நியதி மேலோங்கியுள்ள எமது தமிழ்ச் சமூகத்தில் கட்டுரைகளை ஆய்ந்தறிந்து எழுதுபவர்களையோ, என்னைப்போன்ற நூற்பட்டியல்களைத் தொகுக்கும் நூலியலாளர்களையோ எழுத்தாளர்கள் என்ற வரையறைக்குள் உள்ளடக்க எமது தமிழ்ச் சமூகம் தயாராகவில்லை. வேண்டுமானால் ''பன்னூலாசிரியர்'' என்ற பதத்தைப் பிரயோகிப்பதுடன் சரி.

கட்டுரைகளையும் அறிவியல் நூல்களையும் எழுதிக்குவிக்கும் ''எழுத்தாளர்களையும்'' மதிப்பளித்து ஊக்குவிக்கும் எவ்விதமான முயற்சி களையும் நாம் இதுவரை எடுக்கத் தவறிவிட்டோம் என்ற உண்மை சற்று நெருடலாகவே உள்ளது. இன்று நல்ல ஆக்க இலக்கியங்களுக்கு சஞ்சிகை களும், ''வட்டங்களும்'' ''மையங்களும்'' வருடாந்தம் பரிசுகொடுத்து

வருவதைப்போல எந்தவொரு ''அமைப்பும்'' அறிவியல்துறையைப் பலவாறாகப் பிரித்து அப்பிரிவுகளுக்குள் அடங்கத்தக்க சிறந்த படைப்பைத் தேர்ந்து பரிசுவழங்கும் திட்டமொன்றையும் இன்றளவில் கொண்டிருக்கவில்லை என்றே நம்புகின்றேன்.

1934 முதல்1964 வரை அறுபதுக்கும் அதிகமான அறிவியல் நூல்களை எழுதிக்குவித்தவர் கந்தரோடையைச் சேர்ந்த நம்மவர் ந.சி.கந்தையாபிள்ளை அவர்கள். அவரை ஒரு எழுத்தாளராக ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகள் சமூகம் உள்வாங்கவில்லை. ஈழத்துத் தமிழ் படைப்புலகம் பற்றிய பட்டியல் களைத் தந்த அன்றைய கனக செந்திநாதனோ, சில்லையூர் செல்வராசனோ, எப்.எக்ஸ்.சி.நடராசாவோ, ஏன் இன்றைய நா.சுப்பிரமணியன், செங்கை ஆழியான் போன்றவர்களோ அமரர் ந.சி. கந்தையாபிள்ளையின் பெயரை தங்கள் நூற் பட்டியலில் சேர்த்துக்கொள்ள முன்வராமைக்கு அவர் கவிதை களையோ, கதைகளையோ படைத்திராமை ஒரு காரணமாகலாம்.

ஆக்க இலக்கிய-ஜனரஞ்சக படைப்பிலக்கியத்துறை, அறிவியல் சார்ந்த எழுத்தாளர்களையும் விரிந்ததொரு பரப்பில் உள்வாங்கி, தனியானதொரு பிரிவாக ''அறிவியல்சார் படைப்பாளிகள்'' என்ற ஒரு பிரிவை உருவாக்கி அவர்களை இடைக்கிடை ஊக்குவிக்க முனைவதையும் அவதானிக்க முடிகின்றது. அப்படி ஒரு துறையாகப்பிரித்துவைப்பதற்கு அறிவியல் படைப்புத்துறை குறுகியதல்ல. எவராவது முன்வந்து எனது நூல்தேட்டத்தின் பொருளடக்கப் பிரிவை உற்று நோக்கினால் அதன் பரந்த விரிவை எளிதில் உணர்ந்துகொள்ளலாம்.

ஈழத்துத் தமிழ் நூல் வெளியீட்டுத்துறையில் 10000 நூல்களைப் பார்த்துப் பட்டியலிட்டவன் என்ற வகையில் என்னால் ஒரு ஆதாரபூர்வமான புள்ளிவிபரத்தை இங்கே வழங்கமுடிகின்றது. இலங்கையின் இந்தப் பத்தாயிரம் நூல்களின் வெளியீட்டில் 65 வீதமான வெளியீடுகள் கவிதைத்தொகுதி, சிறுகதைத் தொகுதி, நாவல் மற்றும் கலை-இலக்கிய ஆய்வு என்ற வரையறைக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன. எஞ்சிய 40 வீதத்தில் 18 சதவீதமான பங்கை சமயப்பிரசுரங்கள் பிடித்துவிடுகின்றன. சமூக விஞ்ஞான, அறிவியல் துறைகளை 22 சதவீதத்திற்கும் குறைவான அறிவியல் படைப்புகளே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவைகூட பெரும்பாலும், சாமான்ய மக்களின் வாசிப்புக்கான, அன்றாட உலக நடவடி க்கைகளை அலசும் அல்லது அவை பற்றிய விரிந்த பார்வையை வழங்கும் நூல்களைவிட ஏதாவதொரு பாடப்பரப்பை ஒட்டிய கல்விசார் தேவைக்குப் பயன்படுத்தப்படும் நோக்கோடுதான் எழுதி வெளியிடப்படுகின்றன.

இந்த நிலையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமாயின், ''யாவும் கற்பனை'' யற்ற அறிவியல்நூல்கள் அதிகமாக வெளியிடப்படவேண்டுமாயின் அறிவியல் படைப்பாளிகளை நாம் உளமார ஊக்குவிக்கவேண்டும். தற்போது கலை இலக்கியத்துறைக்கான பரிசுகளை வழங்கும் அமைப்புகள் அறிவியல், நூலியல்சார் நூல்களுக்கு பத்தோடு ஒன்று பதினொன்றாக விருதுகளை வழங்காமல், தீவிரமான அறிவியல் அறிஞர்குழுக்களின் அனுசரணையுடன் பல்வேறு அறிவியல் துறைகளிலும் தடம்பதித்து எழுதும் எழுத்தாளர்களது சிறந்த நூல்களுக்கு பரிசுகளை வழங்க முன்வரவேண்டும்.

இலங்கையில் பல்துறைசார் அறிஞர்கள் அடங்கிய ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு அவ்வமைப்பின் தீர்வுக்கமைய ஆண்டுதோறும் சிறந்த தமிழ் அறிவியல் நூல்களுக்கான விருதுகளை வழங்க முன்வரலாம். உளவியல், சமயம், சமூக விஞ்ஞானம், மொழியியல், தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், கலைகள், இலக்கியம், வரலாறு, என்று பரந்தபட்ட துறைகளில் இலக்கியத்தை மாத்திரம் வளர்த்துவிட்டு மற்றைய துறைகளை கண்டுகொள்ளாமல் விடுவது நியாயமாகப் படவில்லை. இந்நிலையில் பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற எலிகளின் கேள்வியும் ஒலிக்கத்தான் செய்யும். எங்காவது ஒரு புள்ளியில் தொடங்கத்தானே வேண்டும்?.

(தேசம்நெற் இணையத்தளம் 2014)

6

பிரித்தானியாவில் தமிழரின் நூல் வெளியீடுகளும் வெளியீட்டு விழாக்களும்

பிரித்தானியாவில் தமிழர் என்ற பதம் பொதுவாக, ஈழத்தமிழரைக் குறிக்கும் ஒரு குறியீட்டுச் சொல்லாக மருவிவிட்டது. மலேசியத்தமிழரும் தமிழ்நாட்டவரும் தம்மை இந்தியர் என்றே குறிப்பிடுவதால் அவர்கள் தமிழர்கள் என்ற பெரும்பிரிவுக்குள் தம்மை உள்வாங்கிக்கொள்வதில்லை. இது புள்ளி விபர அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வசதிகளுக்கு, குறிப்பாக பொது நூலகங்களில் தமிழ் நூல்கள் வாங்கப்படும்போது, தமிழ் நூல்களுக்கான ஒதுக்கீட்டை கணிசமாகக் குறைத்துவிடும். இக்கட்டுரையில் பிரித்தானியத் தமிழர் என்ற சொற்பிரயோகத்தை நான் மேற்கொண்டிருப்பினும் அது புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் இலங்கைத் தமிழரையே குறிப்பதாகும்.

இன்று உத்தியோகபூர்வமான திட்டவட்டமான எண்ணிக்கை இல்லாதிருப்பினும் ஏறத்தாழ 175000 ஈழத்தமிழர்கள் பிரித்தானியாவில் வாழ்கிறார்கள் என்று கருதப்படுகின்றது. இதில் 80 வீதமானோர் லண்டன் மாநகரையும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் வாழ்கிறார்கள்.

பிரித்தானியாவில் வாழும் தமிழர்களிடையே ஆங்காங்கே பல புலம் பெயர்ந்த இலக்கியப் படைப்பாளிகளும், பல்துறைசார் எழுத்தாளர்களும், ஊடகவியலாளர்களும் வாழ்ந்துவருகிறார்கள். கி.ஞானசூரியன், க. உமாமகேஸ்வரன், ஞானமணியம், மு.நித்தியானந்தன், சு.மகாலிங்கசிவம், நா.சபேசன் (புதிசு ஆசிரியர்), புலவர் ந. சிவநாதன், செ.சிறிக்கந்தராசா (வித்துவான் வேலனின் மருமகன்), இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அவரது சகோதரர் விமல்குழந்தைவேல், புதினம் பத்திரிகை ஆசிரியர் ஈ.கே. ராஜகோபால், தேசம்நெற் இணையத்தளத்தை நடத்தும் த.ஜெயபாலன், முன்னாள் தினகரன் பத்திரிகையாளர் பொன். பாலசுந்தரம், வி.சிவலிங்கம், பத்மநாப ஐயர், முல்லை அமுதன், சூ.யோ.பற்றிமாகரன், ரீற்றா பற்றிமாகரன், தமிழரசி சிவபாதசுந்தரம், எம்.என்.எம். அனஸ், சையட் பஷீர், மூன்றாவது மனிதன் பௌசர், ரஷ்மி, ஆர். உதயணன், நூல்தேட்டம் தொகுப்பாளர்

நூலகவியலாளர் என்.செல்வராஜா, ஆ.விசாகரத்தினம், கந்தையா நவரேந்திரன், விமல் சொக்கநாதன், இ.நித்தியானந்தன், வைத்திய கலாநிதி எஸ்.தியாகராஜா, யுகசாரதி- எஸ்.கருணானந்தராஜா, கு.அரசேந்திரன், தனபாக்கியம் குணபால சிங்கம், பாலரவி, உதயகுமாரி பரமலிங்கம் (கவிஞர் நிலா), அமரர் அகஸ்தியரின் மகள்- நவஜோதி ஜோகரத்தினம், க.இராஜசிங்கம், வெ.செ. குணரத்தினம், சுடரொளி வெளியீட்டுக்கழக அதிபர் ஐ.தி.சம்பந்தர், தமிழினி வ.மா.குலெந்திரன், கரவை மு.தயாளன், மு.நற்குணதயாளன், மாதவி சிவலீலன், சி.கிருஷ்ணானந்ததேவர், தமிழ் ஓலை வர்த்தக விபரப்பட்டியல் தயாரிப்பாளர் தி.ஸ்ரீகந்தராஜா, சுதுமலைக் கவிஞர் கந்தையா இராஜமனோகரன், ஆகியோர் லண்டனில் வாழ்ந்து நூல்களை எழுதி வெளியிட்டுள்ளவர்களில் நினைவில் வந்தவர்கள். இப்பட்டியல் முழுமையானதல்ல. கவிஞர் நாகேந்திரம், க.நவசோதி, டாக்டர் க.இந்திரகுமார், வித்துவான் க.ந.வெலன், அமுதுப் புலவர், கிருஷ்ணா வைகுந்தவாசன் (ஐ.நா.சபையில் ஒக்டோபர் 5, 1978 இல் ஈழம் பற்றி பிரஸ்தாபித்தவர்), போன்ற சிலர் இந்த மண்ணிலேயே வாழ்ந்தும் மறைந்தும் விட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட அனைவரும் ஈழத்தமிழ்ப் படைப்புலகில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டவர்கள். சிலர் அவர்களது நூலை லண்டன் மண்டபங்களில் வெளியிடக்கண்டவர்கள். பலர் தாயகத்திலும், தமிழகத்திலும் வெளியிடப்பெற்றவர்கள். படைப்பிலக்கியம் மாத்திரமல்லாது, சமயம், சமூகவியல், ஊடகவியல், விஞ்ஞானம், கலை, வரலாறு என்று பல்வேறு துறைகளிலும் தமது நூல்களை இவர்கள் வெளி யிட்டுள்ளார்கள்.

லண்டனில் இலக்கிய வளர்ச்சி பற்றி உற்று நோக்கினால் அது எவ் வகையிலும் காத்திரமானதும், சுதந்திரமானதுமான விரிவான கருத்தாடல் களத்தினூடாக வளர்ந்ததல்ல என்பது கவனத்திற்குரியது. தாம் கற்றதும் பெற்றதுமான அறிவை வைத்து உருவாக்கப்பட்டவையும், தான்தோன்றிக் கவிஞர்களால் இயற்றப்பபெற்றதுமே இவர்களது பிரதான படைப்புக்களாயின. கட்புல செவிப்புல ஊடகங்களோ, பத்திரிகைகளோ ஆரோக்கியமான இலக்கியப் பரிவர்த்தனையை மேற்கொள்ள இவர்களுக்குக் களம் அமைத்துத் தரவில்லை. முழுமையாக ஈழ விடுதலைப் பேராட்டத்தை குவிமையமாகக் கொண்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ந்த ஒரு சமூகத்தில் சமயம், சமூகவியல், இலக்கியம் என்ற அனைத்துத் துறைகளும் அரசியலினூடாகவே பார்க்கப்படவேண்டிய சூழல் உருவாகியிருந்தது. இது பிரித்தானியாவுக்கு

மாத்திரமல்லாது, ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழ்ந்த அனைத்து மேலைத்தேய நாடுகளுக்கும் பொருந்துவதாகவே உள்ளது.

தமிழகத்தைப் போலல்லாது, இலங்கையிலோ அல்லது இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்களிடமோ முழுநேர இலக்கியப் பங்களிப்புக்கான வாய்ப்புகள் காணப்படவில்லை. அவரவர் தமது தொழில்சார் பணிகளுக்குக் காலத்தை ஓதுக்குவதுடன் எஞ்சிய காலத்தில் பகுதிநேர அடிப்படையிலேயே இலக்கியங்களிலும் பிற துறைப் படைப்புகளை உருவாக்குவதிலும் அக்கறை கொண்டிருந்தனர். அதற்கான தீவிரமான வாசகர் சந்திப்புகள் இடம்பெறு வதில்லை. லண்டனைப் பொறுத்தளவில் வேலன் இலக்கிய வட்டம், பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் ஆகியவை சிறியதொரு வட்டத்திற்குள் தமது இலக்கியச் செயற்பாடுகளை வரையறுத்துக்கொண்டன. இலக்கியவாதிகள் தமது இலக்கியப்படைப்புகளையிட்ட திறந்த மனதுடனான விமர்சனத்துக்கு ஏங்கும் நிலையே இன்று பொதுவாக லண்டனில் காணப்படுகின்றது.

ஒரு நூல் பற்றிய விமர்சனமானது அந்த நூலின் வெளியீட்டு மண்டபத்து டன் நின்று விடுகின்றது. அந்த விமர்சனம்கூட, நூலின் படைப்பாளியைநோக்கிய மென்மையான தட்டிக்கொடுக்கும் போக்கிலேயே அமைந்து விடுகின்றது. மாற்றுக்கருத்தாளர்களைத் தமது நூலை விமர்சிக்க அழைப்புவிடும் ஒரு படைப்பாளியை இன்றளவில் லண்டன் மேடைகள் அறியவில்லை என்பது கசப்பான விடயமாகும். அப்படி அழைப்பு விடுத்தாலும் அவர்கள் திறந்த மனதுடன் கலந்துகொள்வாரா என்பதும் கேள்விக்குரியதே.

வெளியீட்டு விழாக்களைப் பொறுத்தளவில், லண்டனில் சைவக் கோவில்களின் மண்டபங்களே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. டூட்டிங் சிவயோகம் மண்டபம், என்பீல்ட் நாகபூஷணி அம்மன் ஆலயம், ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம், லூஷியம் சிவன் கோவில் மண்டபம் என்பன முக்கியமான நூல்வெளியீட்டு விழா அரங்குகளாகும். வாடகை அடிப்படையில் குறைந்த செலவினம் ஏற்படுவதாலும் இலகுவில் கோவில் மண்டபங்களை சென்றடைய முடிவதாலும் இத்தேர்வு உசிதமாகின்றது. மேலும் கோவில் திருவிழாக்கள், விஷேட பூஜைகள் இல்லாத காலங்களிலேயே மண்டபங்களும் வாடகைக்கு விடப்படுகின்றன.

இவ்வழியில் ஈலிங் கனகதர்க்கை அம்மன் ஆலய மண்டபம் நூல் வெளியீடுகளுக்குப் பெயர்பெற்றது. இந்த மண்டபத்தில் 700க்கும் அதிகமான தமிழ் நூல்களுடன் ஒரு நூலகத்தை உருவாக்க பல ஆண்டுகளுக்கு முன்னர் நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டு வெற்றிகரமாகத் திறந்தும் வைக்கப் பட்டது. லண்டன் தமிழ் இலக்கியகர்த்தாக்களின் சந்திப்புக்கும் கலந்துரை

யாடலுக்கும், விரிவான தேடலுக்கும் இந்த நூலகம் வழிசமைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. துர்அதிர்ஷ்டவசமாக குறுகிய காலத்தில் நிர்வாகச் சண்டை காரணமாக நூலகம் திறந்த வேகத்திலேயே மூடப்பட்டுவிட்டது. கனகதுர்க்கை அம்மன் கோவில் மண்டப மேடையில் அமர்ந்து இலக்கியம் பற்றியோ, நூல்கள் பற்றியோ பேசும் எவரது கண்ணையும் இந்த சோபை யிழந்து சிறைப்பிடிக்கப்பட்ட நூலகத் தட்டுக்கள் ஒரு சில மணித்துளிகளாவது பேச்சாளர்களின் மனதை உறுத்தவே செய்யும். இருந்தும் இன்றளவில் எவருமே இந்த நூலகத்தை திறந்து மக்களுக்கு இலக்கியப் பசியாற வாய்ப்பை வழங்கும்படி ஈலிங் கனகதுர்க்கையம்மன் கோவில் நிர்வாகத்திடம் கேட்ட தாகத் தகவலில்லை. நிர்வாகமும் அக்கறைகொண்டதாகத் தெரியவில்லை. இதுவே எமது லண்டன் தமிழரின் அறிவியல்சார் சுயரூபத்தைப் புரிந்து கொள்ளப் போதுமானது.

இன்றைய நூல்வெளியீட்டுவிழாக்கள் பெரும்பாலும் பிரதேசப் பற்றுள்ள விழாக்களாகவும், குடும்ப விழாக்களாகவும் அமைந்துவருவதையும் காண முடிகின்றது. இந்த வழிமுறைகள் ஆரோக்கியமற்றதானாலும், தமிழ் எழுத்தாளர் தனது நூல் வெளியீட்டுவிழாவை நடத்தி சிறிய தொகை நூல்களையாவது அன்றைய தினத்தில் விற்றுத் தனது முதலீட்டின் சிறு பகுதியையேனும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற அங்கலாய்ப்பினால் இத்தகைய நிலைக்குத் தள்ளப்படுவதை காணமுடிகின்றது. மண்டப வாடகை, புகைப்பட வீடியோ ஒலிபெருக்கி வாடகை, வருகைதருவோருக்கான வயிராற உணவு என்று பல செலவுகளும் போக, எஞ்சிய கொஞ்சநஞ்சப்பணம் படைப்பாளியின் புத்தக வெளியீட்டின் சிறுபகுதியை ஈடுசெய்தாலே அது பெருவெற்றியாகிவிடும். இதன்காரணமாக புத்தக வெளியீட்டு விழாக்கள் பெரும்பாலும் பணச்சடங்குகளாகவே மாறிவிடுவதால் பெரும்பாலான படைப்பாளிகள் வெளியீட்டு விழாவில்லாமல் தொலைக்காட்சி, பத்திரிகைச் செய்திகளின் வாயிலாகவும், தனிப்பட்ட கடிதத் தொடர்பின் வாயிலாகவும் தமது நூல்களை அறிமுகம்செய்துகொள்கின்றார்கள்.

ஈழவிடுதலைப் போராட்டம் இராணுவரீதியிலான தோல்வியைத் தழுவிய 2009 மே 18இன் பின்னர் லண்டனிலும் பிற ஐரோப்பிய மண்ணிலும் நூல்வெளியீட்டு விழாக்களில் ஒரு மந்த நிலையைக் காணமுடிகின்றது. முன்னாள் வரை கணிசமான அளவில் வெளிவந்த படைப்பிலக்கிய (கவிதை, சிறுகதை இலக்கியப் படைப்புகளின்) வரவு முற்றாக நின்றுவிட்டது. விடுதலைப்போராட்டம் பற்றிய ஆக்க இலக்கியங்களே அதுவரைகாலமும், நீண்டகாலமாகப் புகலிடத்தில் மேலோங்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

போராட்டத்தின் எதிரபாராத முடிவு தந்த அதிர்ச்சி இக்கவிஞர்களின் கற்பனை ஊற்றுகளை ஸ்தம்பிதமடைய வைத்திருக்கலாம்.

2009 மே 18இன் முன்னதாக எழுதி அச்சிடக் கொடுத்த சில ஈழவிடு தலைப்போராட்டம் சார்ந்த கவிதைத் தொகுதிகளை வெளியிடும் சூழ்நிலை அற்றநிலையில் சில படைப்பாளிகள் அவற்றை வெளியிடமுடியாது திணறு வதையும் அறியமுடிகின்றது. இந்நிலையில் படைப்பிலக்கியம் அல்லாது, அறிவியல் மற்றும் வரலாற்று நூல்கள் சில எதிர்வரும்காலங்களில் வெளிவரும் சாத்தியம் காணப்படுகின்றது. மாற்று அரசியல்வாதிகளினதும், விடுதலைப் புலிகளல்லாத போராளிகளின் போர்க்கால இலக்கியங்களும் இனி படிப் படியாக நூலுருவாகும் வாய்ப்புகள் இங்கு காணப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் 2009 மே 18இன் பின்னர் லண்டனில் வெளிவந்த சிறியளவு எண்ணிக்கையிலான நூல்களைப் பார்க்கும்போது எமது ஸ்தம்பித நிலை புலப்படும். கவிஞர் பாலரவியின் வண்ணங்கள் எண்ணங்கள் கவிதைத் தொகுப்பு (2009), அவுஸ்திரேலியாவிலிருந்து வி.எஸ்.துரைராஜாவின் யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது (2009), ஐ.தி.சம்பந்தரின் கறுப்பு ஜூலை 1983: குற்றச்சாட்டு (2009), நோர்வேயிலிருந்து வைத்தியரட்ணம் பத்மானந்தகுமார் எழுதிய சூழல்சார் சுற்றுலாத்துறை (2010), சூ.யோ.பற்றிமாகரனின் திருக்கோளறு பதிகம்: விளக்கமும் உரையும் (2010), இவை தவிர தமிழாசிரியர் வேந்தனாரின் நான்கு தமிழ் இலக்கண - இலக்கிய நூல்கள் 2010இல் லண்டனில் உள்ள அவரது மகனால் மீள்பிரசுர மாகியுள்ளன. அது பற்றிய விபரமான தகவல் கிடைக்கவில்லை.

(இக்கட்டுரை சர்வதேச தமிழ் இலக்கிய விழாவின்போது பிரசுரிக்கப்படவுள்ள வீரகேசரி சிறப்பிதழுக்காக அவுஸ்திரேலியா திரு முருகபூபதி அவர்களுக்கு 03.10.2010 அன்று அனுப்பிவைக்கப்பட்டது)

7

தமிழாராய்ச்சி மாநாடுகளும் தமிழின் பெருமைபேசும் மாநாடுகளும்

காலத்தின் தேவை என்ன?

இது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டுக் காலம். தாயகத்திலும் தமிழகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இது தொடர்பான மாண்புநயப்பு விழாக்கள் தமிழ் விழாக்களாக ஏராளமான பணச்செலவில் இடம்பெற்று வருகின்றன. அதன் பேராளர்களாக பெரும் பணச்செலவுடன் தமிழ் ஆர்வலர் களும் அறிஞர்களும் நாடுகடந்து இங்கும் அங்குமாகப் பயணித்துக் கொண்டி ருக்கிறார்கள். ஆரவாரமாக இவ்வாண்டில் தமிழ் ஆராயப்பட்டும் தமது இனம் மொழி கலாச்சாரம் பற்றிப் பெருமைப்பட்டுக்கொண்டும் அரங்குகளில் உரையாற்றிவிட்டு நாடு திரும்புகிறார்கள் - வீடு திரும்புகிறார்கள். ஆடம் பரமான இம்மாநாடுகள் உண்மையில் தமிழுக்கு நன்மையைச் செய்கின்றனவா அல்லது அவலை நினைத்து உரலை இடிக்கும் கதைதானா என்ற கேள்வி இன்று பலரது மனதிலும் எழுந்து நிற்கின்றது.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்பது உலகின் பல்வேறு நாடுகளிலும் தமிழை ஆய்வுசெய்யும் பன்னாட்டறிஞர்களையும் இனம்கண்டு, ஒருங் கிணைத்து அவர்கள் தனித்துவமாக மேற்கொண்டுவரும் தமிழாராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும், கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளவும், மேலும் வளப்படுத்தவும் உதவும்நோக்கில் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியின் பெறுபேறாக 1964 இன் ஜனவரி மாதத்தில் 7ம் திகதி புதுடில்லி யில் நடந்த 26ஆவது அகில உலக கீழைத்தேயக் கல்வி ஆய்வாளர் மாநாட்டின்போது உருவாக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்பது இன்று வரலாறாகிவிட்டது.

இம்மன்றத்தினால் தமிழாராய்ச்சி மாநாடு இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு ஆய்வின் முடிவுகள் தமிழறிஞர்களிடையே வெளிப்படுத்தப் பட்டு, அவை விவாதிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு தமிழ் ஆய்வுகள் செப்பனிடப்பட்டும் புத்தாய்வுகளுக்கு வித்திடப்பட்டும் செழுமைமிக்கதொரு வளர்ச்சியை தமிழ் உலகம் கண்டுகளிக்கும் என்று அன்று தமிழறிஞர்

தனிநாயகம் அடிகளார் கனவு கண்டிருந்தார். அவரது கனவு நனவானதா என்பதை காலம் இன்று சொல்கின்றது. தூய தமிழ் ஆராய்ச்சி படிப்படியாக ஒரு அரசியல் மேடையாக ஆக்கிரமிக்கப்பட்ட வரலாற்றை முதலில் பார்ப்போம்.

முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, பல்வேறு தமிழ் மாநாடுகளுக்கும் முன்னோடியாகி நின்று வரலாறு படைத்துவந்துள்ள மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் 1966 இல் நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது மாநாடு 1968 இல் சென்னையில் நடைபெற்றது. அதற்கு முன்னதாக 1967 இல் தமிழகத்தில் பாரிய அரசியல் வெற்றியைப் பெற்றிருந்த அறிஞர் அண்ணாவின் திராவிட முன்னேற்றக்கழகத்தின் வெற்றிவிழாவாகவும் இம்மாநாடு அமைந்துவிட்டமை பின்னாளில் தூய தமிழ்ஆராய்ச்சிக்காக உருவாக்கப்பட்ட தமிழாராய்ச்சி மாநாடுகள் அரசியல் கலப்பிற்கும், அரசியல்வாதிகளின் ஆதிக்கத்துக்கும் உட்பட்டுவிட்டமையை பின்னாளில் நாம் அனுபவபூர்வமாக கண்டறிந்துகொண்டோம். பின்னாளில் தனிநாயகம் அடிகளார் François Gros அவர்களின் துணையுடன் மூன்றாவது மாநாட்டினை அரசியல்வாடையின்றி பாரிசில் 1970 இல் நடத்திவைத்து அதனைத் தூய்மைப்படுத்தமுனைந்தார்.

ஆயினும் யாழ்ப்பாணத்தில் 1974இல் நடந்தேறிய மாநாடு அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் கொழும்பிலா - யாழ்ப்பாணத்திலா நடத்துவது என்ற இழுபறியுடன் தமிழர் இனப்பிரச்சி னையை உலகறியச்செய்யும் மறைமுக அரசியல் நோக்குடன் இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பெற்று பதினொரு தமிழர்களின் உயிர்ப்பலிக்கும் அதன்பின்னரான ஈழவிடுதலைப்போராட்டத்தின் எழுச்சிக்கும் வழிகோலியது.

ஐந்தாவது மாநாடு 1981இல் மீண்டும் தமிழகத்தில் - மதுரையில் நடை பெற்றது. அவ்வேளையில் மற்றொரு தேர்தலை எதிர்கொண்டிருந்த அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையில் தமது அரசியல் வெற்றிக்குத் துணையாக இம்மாநாட்டைத் தமிழர் மாநாடாக கோலாகலமாக நடத்திமுடித்தது. இம்மாநாட்டின் பிரதி நிதிகளாக ஆய்வாளர்களைவிட உள்ளூர் அரசியல்வாதிகளே அதிகளவில் பிரசன்னமாயிருந்தனர் என்பதை மாநாட்டு மலரின் புகைப்பட ஆல்பம் இன்று எமக்குக் காட்டுகின்றது.

1987 இல் மீண்டும் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆறாவது மாநாடு தனிநாயகம் அடிகளாரின் புனித நோக்கினை முன்னெடுக்கும் கனவுடன் அரசியல் கலப்பற்று நடந்து முடிந்த முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டிலிருந்து மிகவும் வித்தியாசமானதொரு பரிமாணத்தில் நடைபெற்றிருந்ததை 1966 இல் நடந்த முதலாவது மாநாட்டையும் மீண்டும் 1987இல் அதே மண்ணில்

பெருந்தொகையான தமிழக - மலேசிய தமிழ்அரசியல்வாதிகளின் பங்கேற் புடன் நடைபெற்றிருந்த ஆறாவது மாநாட்டையும் ஒப்புநோக்கினால் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

ஏழாவது தமிழாராய்ச்சி மாநாடு 1989இல் மொரீஷியஸ் நாட்டின் மோகா (Moka) நகரில் இடம்பெற்றது. கல்வித்துறையில் செழுமைமிக்க மோகா மாவட்டத்தில் தான் மகாத்மாகாந்தி நிறுவனமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. புலம்பெயர்ந்தோரிடையே தமிழின் எதிர்கால அடையாள அழிவுக்கு பீஜித் தீவுகளுக்கு அடுத்தபடியாக உதாரணமாக எம்மவரால் அடிக்கடி எடுத்தாளப்படும் நாடு மொரிஷியஸ். மொரிஷியஸ் தமிழ் இன மக்களின் தமிழ் மூலத்தை மீள்கட்டுமானம் செய்து தமிழுணர்வூட்ட இம்மாநாடு அங்கிருந்த தமிழர்களுக்கு உதவியிருக்கின்றது என்பதில் உண்மையில்லாமல் இல்லை. மொரிஷியஸ் நாட்டில் நடந்தேறிய தமிழாராய்ச்சி மாநாட்டிலே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே இன்று அந்நிறுவனத்தின் தலை வராகப் பணியாற்றும் Dr. Noboru Karashima அவர்களாவார்.

இவரது தலைமையிலேயே எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு தமிழகத் தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1995 இல் நடைபெற்றது. இரண்டு லட்சம் பேர் வரை பங்கேற்ற இம்மாநாட்டின் நிறைவுதினம் வரலாற்றில் பதிவு செய்யப்படும் அதேவேளையில், இம்மாநாட்டில் பங்கேற்கவிடாது ஈழத்துத் தமிழறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் அரசியல் காரணங்களுக்காகத் திருப்பி அனுப்பப்பட்ட வரலாறும் துர்அதிர்ஷ்டவசமாகப் பதிவுசெய்யப்பட்டு விட்டது. இந்நிகழ்வு, உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் தமிழ் ஆராய்ச்சியை விட அரசியல் அபிலாஷைகளுக்கான களமாக ஏற்கப்பட்டுவிட்டதை வெளிப் படையாகப் பறைசாற்றியது.

இந்தப் பின்புலத்தில் தான் ஒன்பதாவது தமிழாராய்ச்சி மாநாடு கோயம் புத்தூரில் அரங்கேற்றம் செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது.

2009இல் கலைஞர் கருணாநிதி தனது ஆட்சியின் போது, முள்ளிவாய்க் காலில் சிந்தப்பட்ட குருதியின் ஈரம் காய்வதற்கு முன்னதாகவே ஒன்பதாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை கோலாகலமாக கோயம்புத்தூரில் 2010இல் நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் அதற்கான அனுமதியைக்கோரி, மேற்படி தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்பின் தலைவராக இன்றிருக்கும் Dr. Noboru Karashima அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். தூயநோக்குடன் சர்வதேச கல்வியாளர்களாலும் மொழி யியலாளர்களாலும் மேற்கொள்ளபட்டிருக்கவேண்டிய தமிழாராய்ச்சியை அரசியல் நலனுக்காகவும், தனிப்பட்டவரின் சமூக இருப்பிற்கான குறுக்கு

வழியாகவும் பயன்படுத்தப்படுவதை கலாநிதி நொபொரு கராஷிமா முற்றாக மறுத்துவிட்டார். மேலும் கலைஞர் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஒரு சர்வதேச அறிஞர்கள் பங்கேற்கும் மாநாட்டை நடத்தமுடியாது எனவும் அவர் அறுதியிட்டுக் கூறிவிட்டார். அதன் விளைவாக தன் முயற்சியில் சற்றும் சளைக்காத அம்புலிமாமா வேதாளக்கதையின் நாயகன் போல, கலைஞர் அவர்கள் தமிழ் செம்மொழி மாநாடாகத் தனது தமிழ் விழாவை கோலாகலமாக நடத்தி முடித்தார். மாநாட்டின் எந்தவொரு அரங்கமும் தனிநாயகம் அடிகளாரின் நினைவையே ஏற்படுத்தாமல் அமைப்பாளர்கள் பார்த்துக்கொண்டார்கள். சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் மட்டு மல்லாது, பங்கேற்ற அறிவுஜீவிகளும் இலங்கையில் அந்நாளில் கொழுந்து விட்டெரிந்த தமிழரின் இனவழிப்பு நடவடிக்கைகள் பற்றி மூச்சுக்கூட விடாத படி சீ பீ ஐ வெளிப்படையாகக் கண்காணித்து வந்தது. கலைஞர் கருணாநிதி ஒன்பதாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை கோயம்புத்தூரில் தனது அரசியல் இருப்புக்கான களியாட்ட நிகழ்வாக உருமாற்றி 2010 இல் அரங்கேற்ற முனைந்த இச்செயற்பாடானது இன்று உலக அரங்கில் பிழை யான செய்தியையும் உற்சாகத்தையும் பல தமிழ் விழா அமைப்பாளர்களுக்கு வழங்கிவிட்டது என்று கருதமுடிகின்றது.

அன்று தமிழாராய்ச்சி மாநாடு என்ற வித்தை ஊன்றிவைத்த தனிநாயகம் அடிகளாரின் நோக்கத்தை இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக் கிறேன். அதனை எவ்வகையிலும் ஈடுசெய்யாத தமிழ் விழாக்களும் தமிழா ராய்ச்சி விழாக்களும் அவரது பெயரில் சுயநல நோக்கம் கொண்ட அரசியல் வாதிகளாலும், சமூக சேவகர்களாகத் தம்மை வரிந்துகொண்டவர்களாலும் பல்வேறு காரணங்களுக்காக மேடையேற்றம்பெறுகின்றன என்பது கசப்பான தொரு உண்மையாகும்.

இந்நிலையில் லண்டனிலும் பாரிய முன்னெடுப்புடனும் பெரும் பண முதலீட்டுடனும் சில தனிநபர்களால் தமிழ்மாநாடொன்று நடத்திமுடிக்கப் பட்டுள்ளது. இந்த மாநாட்டின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதை பொறுத் திருந்து தான் பார்க்கவேண்டும்.

இன்று புலம்பெயர்ந்த வாழ்வியலில் பல்வேறு தமிழ் ஆய்வாளர்களின் ஆய்வுத்தேவைகளுக்காக அணுகப்பட்டவன் என்ற நிலையிலும், தமிழின் ஆய்வுக்கான நிரந்தரக் கட்டமைப்பொன்று எதிர்காலத்தில் இந்த மண்ணில் அவசியம் என்ற கனவினைக் கொண்டவன் என்ற வகையிலும் அதற்கான ஆவணச்சேகரிப்பிலும், பதிவிலும் என் வாழ்வையும் பொருளாதாரத்தையும் எவ்வித சுயநல நோக்கமும் இல்லாமல் எம்மினத்தின் எதிர்காலத்துக்காக வழங்கிவருபவன் என்பதாலும் சில கருத்துக்களை முன்வைக்கக் கடமைப்

பட்டுள்ளேன் இக்கருத்துக்கள் இலங்கை, இந்தியாவுக்கு அப்பால் உள்ள தமிழ் ஆய்வு நிறுவனங்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும் பொருந்தும் என்றாலும், நான் வாழும் லண்டன் மாநகரையே உதாரணத்துக்கு எடுத்துக் கொள்கின்றேன்.

லண்டன் மாநகரில் 40க்கும் அதிகமான தமிழ்ப்பள்ளிகள் உள்ளன. முப்பதுக்கும் அதிகமான தமிழர்களுக்கான சைவ, கிறிஸ்தவ ஆலயங்கள் உள்ளன. நூற்றுக்கும் அதிகமான சமூக நல நிறுவனங்கள் உள்ளன. இவற்றி னிடையே பெயரளவிலேனும் தமிழ் ஆய்வுக்கான ஒரு நிறுவனமோ, தமிழ் அறிவியல் நூலகமோ, நல்ல தமிழ் நூல்களைத் தேர்ந்து வாங்கி வாசிக்க ஒரு புத்தகக்கடையோ இல்லை என்பது முதலில் கவனத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும்.

இத்தகைய நிறுவனங்கள் லண்டன் வாழ் தமிழ்மக்களிடையே இயங்கி வருகின்றபோதிலும் இவ்வமைப்புகளால் தமிழ்மொழியின் பயன்பாட்டையோ, தமிழரின் பண்பாடுபற்றிய அடிப்படை அறிவையோ, தமிழரின் வரலாற்றுப் பாரம்பரியங்களைப் பற்றிய சிந்தனைகளையோ இரண்டாம் தலைமுறை யினரிடையே எடுத்துச் செல்லவும் நிலைநிறுத்தவும் முடியவில்லை. இத்தனை பாடசாலைகள் இங்கு இயங்குகின்ற போதிலும் அதே பாடசாலைத் தமிழ் விழாக்களில் அல்லது திருமணம், பிறந்தநாள் விழா மற்றும் குடும்ப சந்திப்புகளில் அங்கும் இங்கும் ஓடித்திரியும் குழந்தைகள் பேசும் மொழியை உற்று நோக்கினால், தமிழ்ப்பள்ளிகளின் செயற்திறனின் குறைபாடு புரிந்து விடும். எமது இரண்டாம் தலைமுறையினரிடையே அழிந்துவரும் தமிழ் மொழியின் பேச்சுமொழிப் பயன்பாட்டின் தீவிரம் குறைந்து தமிழ் மொழி பேச்சுமொழியாகவாவது நீண்டநாள் வாழ நடைமுறைச் சாத்தியமான என்ன நடவடிக்கைகளை இத்தமிழ்ப்பள்ளிகளின் வாயிலாக இதுவரை எடுத்திருக் கிறோம் என்றால் திருப்திகரமான பதில் கிடையாது.

சைவ சமயத்தை எடுத்துக்கொண்டால், லண்டன் கோயில்கள் மூன்று வேளை பூசையுடன், மூன்றுவேளை உணவுப்பொதிகளையும் வழங்கி எம்மிடையே அட்சயபாத்திரங்களாக விளங்குகின்றன. இதற்கிடையே அகாலவேளையில் உணவுகேட்டுச்சென்ற மனவலுக்குன்றிய ஒருவரை உதைத்துத்தள்ளிய செய்திகளும் காதுக்கெட்டாமல் இல்லை. இந்நிலையில் இக்கோயில் நிர்வாகங்களினால் தமது கண்களுக்கு முன்னே நடக்கும் மதமாற்றங்களைக் கட்டுப்படுத்த முடிந்ததா? குறைந்தபட்சம் கோயில்களுக்கு வரும் பக்தர்களின் குழந்தைகளிடையேயாவது தமிழ்க்கலாச்சாரத்தையும் பணிவையும் போதித்து அவர்களை அமைதியான வழிபாட்டுமுறைக்கு உட்படுத்தமுடிகின்றதா? தாயும் தந்தையும் வழிபாடு செய்ய அவர்களைச்

சுற்றி ஓடியாடி ஜிம்னாஸ்டிக் செய்யும் குழந்தைகள் கோயில் வளாகத்திலேயே பக்தர்களை வெறுப்பேற்றும் காட்சிகள் இன்றளவில் தடுக்கப்பட்டதா? இந் நிலையில் கோயில்கள் தமது சமய கலாச்சார நோக்கங்களில் வெற்றிபெற வில்லை என்றே பொதுவாகக் கருதவேண்டியுள்ளது.

எம்மையும்மீறி எமது இல்லங்களுள் நுழைந்துவிட்ட பல்லினக் கலாச் சாரம் பற்றி நாம் கவலை கொள்வதில்லை. பெரிய பிரித்தானியாவே பல்லினக் கலாச்சாரத்தை வரவேற்கும் போது அங்கு வாழத் தீர்மானித்துவிட்ட தமிழர்களால் அதை தவிர்த்துவாழ முடியாது என்ற வாதம் ஏற்றுக்கொள்ளப் பட்டாலும், தமிழ் மொழியைப் பற்றிய அறிவையும், தமிழர் பண்பாடு அதன் கலாச்சாரம் பற்றிய விழிப்புணர்வினை என்றாவது ஒருநாள் அறிந்து கொள்ள விரும்பும் எமது அடுத்த தலைமுறையினர் எங்கே போவார்கள். எதிர்காலத்தில் கோயில்களும், தமிழ்ப்பள்ளிகளும் நிலைத்து நின்று தமிழ் வளர்க்கப் போவதில்லை. அவை இன்றைய முதலாம் தலைமுறையினரின் ஆத்மதிருப்திக்காக அமைந்தவை. ஆழமான சமூக உணர்வோ சமூகச் சிந்தனையோ அற்ற வெறும் பதவிமோகங்களுக்கும், உள்ளகச் சண்டை களுக்கும் ஆட்பட்டுப் பொருளீட்டும் அமைப்புக்களாகவே இவ்வமைப்புகளின் செயற்பாடுகளைக் கருதவேண்டியுள்ளது.

அதனால் தான் இவை எவற்றுக்கும் வாய்ப்புத் தராத, பயன்படாத, வர்த்தக நோக்கத்துக்கு இடம்கொடுக்கமுடியாத நூலகங்களும், வாசிக சாலைகளும், லாபமீட்டமுடியாத புத்தகச் சந்தைகளும், தமிழாய்வு நிறுவனங்களும் இன்றளவில் எமது சமூகத்தில் ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை. ஆங்காங்கே ஒன்றிரண்டு தனிமனிதர்கள் இதனைப்புரிந்து தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கவுள்ள எதிர்கால ஆபத்தை உணர்ந்து செயற்பட்டாலும்- அவர் களுக்கு எவ்வித பொருளாதார ஆதரவினையும் இந்தப் புலம்பெயர் சமூகம் வழங்காது அவர்களை தனியாளாக நின்று சமூகச் சுமையைத் தாங்கவிட்டு வேடிக்கைபார்க்கின்றோம்.

இத்தகைய சமூகப் பின்புலத்தில் நின்றுதான், தனிநாயகம் அடிகளாரின் பெயரில் தமிழ் வளர்க்க முனையும் எம்மவரின் முயற்சிகளை உற்றுநோக்க வேண்டியுள்ளது. தமிழ்பற்றிய மேலோட்டமான கட்டுரைகளையும், அரைத்த மாவையே அரைக்கும் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதுவதைத்தவிர எமது புத்திஜீவிகளுக்கு புகலிடங்களில் அழிந்துசெல்லும் தமிழ்மொழியிலும், சிதைந்துசெல்லும் தமிழர் கலை கலாச்சாரங்களையும் ஆய்வுசெய்யவும் அதனால் ஏற்பட்டுவரும் பாரிய பிறழ்வுகளையும் தீவிரமாக ஆய்வுசெய்து சமூக விழிப்புணர்வினைத் தூண்டும் வகையில் எழுதவும் என்ன மூலவளம் இங்கே காணக்கிடைக்கின்றது? அரைத்தமாவையே அரைத்து எழுதப்படும்

சங்க இலக்கியஆய்வுகளால் மட்டும் தமிழ் வாழ்ந்து விடுமா என்ன? தமிழர் பண்பாட்டைக்காட்டும் ஊர்திகளால் மட்டும் தமிழ் அறியாத தமிழ்ச் சிறார்களின் மனதில் தமிழ் உணர்வுதான் தோன்றிவிடுமா? ஒரு களியாட்ட விழாவை அல்லது கோயில் தேர்த்திருவிழாவில் இடம்பெறும் தேரோட்டத்தை இங்கு லண்டன் தெருக்களில் நின்று கண்டுகளிக்கும் பன்னாட்டு பார்வையாளர்களைப்போன்ற நிலைமைதானா இத்தகைய பெரும்பணச் செலவில் மேடையேற்றப்படும் தமிழ் மாநாடுகளின் முடிவிலும் ஏற்படப் போகின்றது? ஒருவேளை- சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் சில ''பெரிய மனிதர்கள்'' இத்தகைய விழாக்களால் மேடையின் மத்திக்குத் தற்காலிகமாகத் தருவிக்கப்படலாம். இது எமது புகலிடத் தமிழரின் வளர்ச்சியிலும் வாழ்விலும் என்ன பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடப் போகின்றன?

இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கும், தமிழ் பற்றிய- தமிழ் கலாச்சாரம் பண்பாடு பற்றிய தேடலை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்போகும், அவர்களது பின்னைய தமிழ் தெரியாத தமிழ்த் தலைமுறையினருக்கும் இம்மாநாடுகள் என்ன முதுசொத்தை விட்டுச்செல்லப்போகின்றன என்பது பற்றி நாம் தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டிய தருணமிது. பெரும் எடுப்பில், அதிக பணச்செலவிலும், உடல் உழைப்பிலும் ஆங்காங்கே நடாத்தப்பட்டு வரும் இம்மகாநாடுகள் எமது அடுத்த தலைமுறையினருக்காவது பயன்தருமா என்பதுதான் எம்முன் எழவேண்டிய முக்கிய கேள்வியாகும். நாம் வாழும் பல்லினச் சமூகத்தில் தமிழர் அல்லாதவர்களிடையே தமிழர் யார்? அவர்களது பண்பட்ட கலாச்சாரம் - பண்பாடு என்ன என்பதை அழுத்தமாக இம்மாநாடுகள் கொண்டுசெல்லுமா என்பதைப்பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும். இதற்கு விடை ''ஆம்'' என்றால் எவ்வகையில் அத்தகைய பயன் விளையப்போகின்றது? தமிழில் எழுதப்பெறும் மாநாட்டுக் கட்டுரைகளைக்கொண்ட சிறப்பு மலர்கள் மாத்திரம் தமிழை புகலிடத்தில் வாழவைக்கப்போவதில்லை. தமிழ் பற்றித் தமிழரே தமிழர்மத்தியில் பேச இத்தகைய பெரும் எடுப்பில் பெரும்பணச் செலவுடன் முயற்சிசெய்யவேண்டியதில்லை. அதற்கு ஒரு சிறிய தமிழ் ஆய்வுப் பட்டறை போதுமானது.

இன்று எமக்குத் தேவையானது தமிழையும் தமிழ்க் கலாச்சாரத்தை - பண்பாட்டையும் பன்னாட்டாரும் , எம்மிடையே உருவாகி வளரும் தமிழ் தெரியாத தமிழ்த் தலைமுறையினரும்அறிந்துகொள்ள ஏதுவானதொரு ஆவணக்களஞ்சியமாகும். எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்து, அதன் போக்கினை அலசி, தீர்க்கதரிசனத்துடன் மேற்கொள்ளப்படவேண்டியதொரு பணி. அதுவும் அரசியல்வாதிகளாலும், வர்த்தகச் சமூகத்தினராலும், சமூக அந்தஸ்தை

நாடி நகரும் பிரகிருதிகளாலும் அன்றி, புத்திஜீவிகளால் மாத்திரம் முன் னெடுக்கப்படவேண்டிய முக்கியமான செயற்திட்டம் இது.

தமிழர் புலம்பெயர்ந்த ஒவ்வொரு தேசத்திலும், ஆய்வாளர்களுக்கு உரிய ஆவணங்களை வழங்கும் உசாத்துணை நூலகத்துடன் கூடிய இவ் வாவணச்சாலைகளை தனியானதொரு நிரந்தரமான கட்டிடத்தில் பேணப்பட்டு இன்றைய ஆய்வாளர்களுக்கும் எதிர்காலத்தில் தவிர்க்கமுடியாது உருவாகப்போகும் தமிழ் தெரியாத தமிழர் தலைமுறைக்கும் எமது புலப் பெயர்வு பற்றி மாத்திரமல்லாது அதற்கான காரணங்கள் வரலாறுகள் கலாச்சாரங்கள் என்பவற்றினை அறிந்துகொள்ள வசதியான சுவடிகள், ஆவணங்கள் தமிழ் ஆங்கில மற்றும் அந்தந்த நாட்டுத் தேசிய மொழிகளில் பேணப்படவேண்டும்.

இத்தகைய நாடுவாரியான தமிழ் மொழி ஆவணக்காப்பகத்தில் தமிழர்கள் மாத்திரமல்ல - தமிழியல் கற்கும் அனைத்துலக ஆய்வாளர்களுக்கும் ஈழத் தமிழர் யார், அவர்களது கலாச்சாரம் பண்பாடு பழக்கவழக்கங்கள் என்ன என்பது பற்றி அறிந்துகொள்ளவும், அறிவியல்பூர்வமாக அவற்றை ஆய்வு செய்யவும் பல்கலைக்கழகத் தொடர்புகளினூடாக நவீன வசதிகள் செய்யப்பட வேண்டும். இத்தகைய ஒத்த சிந்தனையுடன் உருவாக்கப்படும் அமைப்புகள் தமக்குள் ஒரு இணைப்பினை ஏற்படுத்தி, தத்தமக்கிடையே அறிவுசார் தொடர்பாடலை ஏற்படுத்தும் வகையில் இணைப்பினை ஏற்படுத்தி ஒரு பாரிய வலையமைப்பை தூய தமிழாய்வு நோக்கத்துடன் உருவாக்கவேண்டும்.

இத்தகைய சிந்தனைப்போக்கினை தமிழ் உணர்வாளர்களிடம் எழுப்ப -விரும்பியோ விரும்பாமலோ இன்று ஆங்காங்கே தனிநாயகம் அடிகளாரின் பெயரில் அவரது அடிப்படை ஆய்வகச் சிந்தனையினை கடுகளவும் கருத்துக் கெடுக்காமல் நடாத்தப்பெற்றுவரும் ''சர்வதேச'' தமிழ் மாநாடுகள் வழி சமைக்குமாக இருந்தால் அது இம்மாநாடுகளின் வெற்றியாகக் கருதலாம். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்று ஒரு முதுமொழி எம்மிடையே உண்டு.

... இது நாள் வரையில் பாதமிதியாத் தளங்களின் மீதும்
கன்னிச் சுவடுகள் பதிப்போம் - இனி
எதிர் வரு நாளில் பதிந்து பதிந்தவை பாதைகளாகப்
புதுயுகத் தடங்கள் விதிப்போம்.

(தேசம்நெற் இணையத்தளம் 2014)

8

‘புக்ஸ் எப்ரோட்’ அமைப்பும் இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களில் அதன் பணியும்

கடந்த 2014 மே மாதம், பிரித்தானியாவின் ஸ்கொட்லண்டில் இயங்கும் புக்ஸ் எப்ரோட் (Books Abroad) நிறுவனம், லண்டன் நூலகவியலாளரும் நூல்தேட்டம் - ஈழத்துத் தமிழ்நூல் தொகுப்பாளருமான திரு என்.செல்வராஜா அவர்களின் அனுசரணையுடன் திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட எண்பத்தி மூன்று பாடசாலைகளுக்கும் யாழ்ப்பாணப் பொதுநூலகத்திற்கும், நல்லூர் பிரதேச சபையின் மூன்று நூலகங்களுக்கும் விநியோகிக்கவென ஒரு கொண்டெய்னர் நிறைந்த சிறுவர், இளையோர்களுக்கான ஆங்கில நூல்களை அனுப்பிவைத்திருந்தது. இத்திட்டத்தின் கீழ் சுமார் ஒருலட்சத்தி ஐம்பதினாயிரம் நூல்கள் வடக்கு கிழக்கை கடந்தமாதம் சென்றடைந்துள்ளன.

புக்ஸ் எப்ரோட் நிறுவனம் பெரிய பொருட்செலவுடன், ஏராளமான நிதிவசதியுடன், ஆரம்பிக்கப்பட்டதொரு சர்வதேச நிறுவனமல்ல. ஸ்கொட் லாந்திலுள்ள கல்விச்சாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் சுமார் முப்பது ஆசிரியர்களின் பகுதிநேர கூட்டு முயற்சியே இது. பிரித்தானிய பாடசாலைகளில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அதன் நூலகச் சேர்க்கை கள் கழிக்கப்பெற்று புதிய நூல்கள் வழங்கப்படும் நடைமுறை உள்ளது. அவ்வாறு கழிக்கப்பெறும் நூல்கள் பிரித்தானிய தெருக்களை அமைக்கும் போது மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும். பெரும்பாலான நூல்கள் கழிவுகளாக (Land fills) நிலங்களைச் சென்றடையும். இப்படிப் பயனற்றுப் போகாமல் அந்த நூல்களைப் பெற்று, அவற்றில் நல்ல நூல்களைத் தேர்ந் தெடுத்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலுள்ள பாடசாலை மற்றும் பொது நூகங்களுக்கு நேரடியாக அனுப்பிவைத்து, அந்நூல்களின் வாழ்வை நீடிக்கச் செய்வதுடன் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கல்வித் துறையின் நூலகச் செலவினத்தையும் கணிசமாகக் குறைக்க வழியமைக்கும் ஒரு பணியையே புக்ஸ் அப்ரோட் மேற்கொள்கின்றது. இந்நிறுவனத்தின் தொண்டுநிலை இணைப்பாளர்களுள் ஒருவராகப் பணியாற்றும் ஒரேயொரு

தமிழராகவும், இலங்கையராகவும் நூலகவியலாளர் என்.செல்வராஜா 2003 முதல் இயங்கி இதுவரை ஏராளமான நூல்களை ஈழத்துப்பாடசாலைகளுக்கும், பொது நூலகங்களுக்கும் அனுப்பிவருகின்றார்.

2004 முதல் இலங்கையின் பல நூலகங்களையும் பாடசாலைகளையும் சென்றடைந்துவரும் இத்திட்டத்தின் கீழ் கடந்த மாதம் சுமார் ஒருலட்சத்தி ஐம்பதினாயிரம் நூல்கள் வடக்கு கிழக்கை சென்றடைந்துள்ளன. 2004 இல் உடத்தலவின்னை சிந்தனைவட்டத்தின் தாபகர் திரு பீ.எம். புன்னியாமீனின் உதவியுடன் மலையகப்பகுதிகளுக்கும், குமரன் புத்தக இல்ல அதிபர் திரு. க. குமரனின் உதவியுடன் தென்னிலங்கைப் பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கும் நூல்கள் அனுப்பிவைக்கப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக இதில் எந்தவொரு பாடசாலையும் பின்னர் புக்ஸ் அப்ரோட் நிறுவனத்துடன் தமது தொடர்புகளை மேற்கொள்ளவில்லை. அதனால் இவை காலக்கிரமத் தில் உதவித் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. பெரும் பொருட்செலவிலும், நேரச்செலவிலும் தாம் தரம்பிரித்து அனுப்பிவைக்கும் நூல்கள் குறித்த நூலகத்தின் வாசகரைச் சென்றடைய வேண்டுமேயொழிய வீணாக அக்கறை யற்று, நூலகப் பத்தகத்தட்டுகளில் தேடுவாரற்றுக் குவிந்து கிடப்பதையோ, பழைய புத்தகச் சந்தையில் விற்பனைக்குத் தள்ளப்படுவதையோ அவர்கள் விரும்புவதில்லை.

போர்ச் சூழலில் வடக்கு கிழக்குக்கு போக்குவரத்து நிலை சீரற்றிருந்ததால் ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே சிறிய எண்ணிக்கையில் புத்தக உதவிகள் வடக்கு-கிழக்கிற்கு வழங்கப்பட்டன. இன்று விரிவான போக்குவரத்து வசதிகள் காரணமாக இவ்வுதவித்திட்டத்தினை பாரிய அளவில் வடக்கு கிழக்குக்கு மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சுமார் ஒருலட்சத்தி ஐம்பதினாயிரம் நூல்கள் வடக்கு கிழக்கை கடந்தமாதம் சென்றடைந்துள்ளன.

திருக்கோணமலை பிரதேசத்திலுள்ள ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, ஓர்ஸ் ஹில் விவேகானந்தா கல்லூரி, ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி, மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரி, ஸாஹிராக் கல்லூரி, உப்புவெளி செல்வ நாயகபுரம் இந்து மகா வித்தியாலயம், புனித பிரான்சிஸ் சேவியர் மகா வித்தியாலயம், நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயம், தம்பலகாமம் ஆதிகோணேஸ்வர மகா வித்தியாலயம், மூதூர் கிளிவெட்டி மகா வித் தியாலயம், தோப்பூர் பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரி, மூதூர் முஸ்லிம் பெண்கள் கல்லூரி, சீனன்குடா நாலந்தா மகா வித்தியாலயம், கிண்ணியா முஸ்லிம் மகா வித்தியாலயம், மூதூர் அன்-நாகர் பெண்கள் மகாவித்தி

யாலயம், பாலையுற்று ஸ்ரீவாணி வித்தியாலயம், பட்டித்திடல் மகா வித்தியாலயம், மூதூர் ஈச்சிலம்பற்று ஸ்ரீ செண்பக மகா வித்தியாலயம், சேனையூர் மத்திய கல்லூரி ஆகிய பத்தொன்பது பாடசாலைகள் இந்நூல்களைப் பெறுகின்றன. திருக்கோணமலை மாவட்டத்தின் பாடசாலைகளைத் தேர்வு செய்வதிலும், அப் பாடசாலைகளுக்கான நூல்களை விநியோகிப்பதிலும் திருக்கோணமலையைத் தளமாகக் கொண்டியங்கும் Genuene Social Observer என்ற தமிழ் இளைஞர் தொண்டரமைப்பு உதவி வருகின்றது. இவ்வமைப்பின் முக்கியஸ்தரும், வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தின் திருக்கோணமலை மாவட்ட அலுவலக இணைப்பாளருமான சஞ்சீவன் துரைநாயகம் இந்நூல்களைக் கொழும்பிலிருந்து பொறுப்பேற்று திருக்கோணமலை, மட்டக்களப்பு, மற்றும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசென்று கையளிக்கும் போக்குவரத்துக் கட்டமைப்பை டோக்கியோ சீமெந்து நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள கிரான் மகாவித்தியாலயம், கோரகல்லிமடு ஸ்ரீ ரமண மகரிஷி வித்தியாலயம், சந்திவெளி சித்திவிநாயகர் வித்தியாலயம், கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம், வம்மிவட்டுவான் வித்தியாலயம், கதிரவெளி விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், குமார வேலியார் சித்திவிநாயகர் வித்தியாலயம், செங்கல்லடி மத்திய கல்லூரி, தன்னாமுனை புனிதவளனார் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, பிள்ளையாரடி நல்லையா வித்தியாலயம், தளவை விக்கினேஸ்வரா வித்தியாலயம், அரசடி மகாஜனா கல்லூரி, திருப்பெருந்துறை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம், ஸ்ரீமாமாங்கேஸ்வரர் வித்தியாலயம், ஏறாவூர் விபுலானந்த வித்தியாலயம், குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம், ஆரையம்பதி மகா வித்தியாலயம், மஞ்சத்தொடுவாய் பாரதி வித்தியாலயம், ஊரணி சரஸ்வதி வித்தியாலயம், மட்டக்களப்பு சென். மைக்கேல் கல்லூரி, மைலம்பாவெளி விபுலானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரி, நாவற்காடு விலவட்டவன் விநாயகர் வித்தியாலயம், ஈச்சந்தீவு ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம், கொக்கட்டிச்சோலை கடுக்காமுனை வித்தியாலயம், கரடியனாறு மகா வித்தியாலயம், பன்குடாவெளி காயங்காடு கண்ணகி வித்தியாலயம், கொக்கட்டிச்சோலை அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், பன்குடாவெளி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கரடியனாறு மரப்பாலம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, பன்குடாவெளி இலுப்பையடிச்சேனை அம்பாள்

வித்தியாலயம், கரடியனாறு கித்துள்வெவ ஸ்ரீகிருஷ்ணா வித்தியாலயம், பெரியபுல்லுமலை ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, செங்கல்லடி உன்னிச்சை அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, கண்ணன்குடா காயன்மடு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, கொக்கட்டிச்சேலை முதலைக் குடா மகா வித்தியாலயம், ஆயித்தியமலை மகிளவெட்டுவான் மகா வித் தியாலயம், முனைக்காடு விவேகானந்த வித்தியாலயம், அம்பிலாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம், கொக்கட்டிச்சோலை - கட்சேனை அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, கொக்கட்டிச்சோலை ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், பண்டாரியாவெளி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, நாவற்காடு நாமகள் வித்தியாலயம், மாவடிமுன்மாரி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம், ஆகிய நாற்பத்தி யெட்டு பாடசாலைகள் இந்நூல்களைப் பெறுகின்றன. மட்டக்களப்பு பிரதேச பாடசாலைகளை தேர்வுசெய்யும் பாரிய பொறுப்பினையும் அதனை பாட சாலைகளுக்கு விநியோகித்து, தொடர்ந்து அவர்களது நூலகங்களுடன் புக்ஸ் அப்ரொட் நிறுவனத்தை இணைப்பில் வைத்திருக்கும் பொறுப்பினையும் மட்டக்களப்பு பிரதேச கல்வித் திணைக்களத்தின் ஆங்கிலக் கல்விப்பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள திரு அன்டனி பென் அவர்களும், அப்பிரதேசத்தின் முக்கிய ஆங்கில ஆசிரியையான திருமதி சுந்தரி கிருஷ்ணபிள்ளையும் ஏற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் 2004 முதல் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்தின் உதவிகள் வழங்கப்பட்டுவந்த போதிலும், பாடசாலை அதிபர்களாலும், கல்வித்துறை அதிகாரிகளாலும் இதில் போதிய அக்கறை காட்டப்படுவதில்லை என்பது கசப்பான அனுபவமாகும். 2004இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 பாடசாலைகளுக்கு உதவிய புக்ஸ் எப்ரோட் நிறுவனம் 2005, 2007, ஆம் ஆண்டுகளில் அதன் உதவியை பாடசாலைகளின் ஒத்துழைப்பின்மையால் படிப்படியாகக் குறைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. குறைந்தபட்சம் நூல்களைப் பெற்றுக்கொண்டோம் என்ற நன்றி அறிதலைக் கூட சில பாடசாலைகள் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்திற்குத் தெரிவிக்கத் தவறிவிட்டன. வடக்கிற்கான தொடர்புகள் முற்றாக நிறுத்தப்படவிருந்த இந்நிலையில், 2010 இல் தனிப்பட்ட முறையில் மேற்படி நிறுவனத்திடமிருந்து நூல்களைப் பொறுப்பேற்று, நூலகவியலாளர் திரு.என்.செல்வராஜா அவர்கள் தனது சொந்த நிதிவளத்தைப் பயன்படுத்தி 2011 இறுதிப் பகுதியில் யாழ்ப் பாணம் இந்து மகளிர் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, மன்னார் புனித சேவியர் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தனிஸ் கல்லூரி,

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, காரைநகர் துரையப்பா மத்திய மகா வித்தியாலயம், யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடக் கல்லூரி, யாழ்ப்பாணப் பொது நூலகம், நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகம் ஆகியவற்றுக்கு தலா ஆறுமுதல் எட்டு பெட்டிகள் வீதம் சிறுவர் நூல்களை விநியோகம் செய்திருந்தார். தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட சில பாடசாலைகள் நூல்கள் கிடைத்தமை பற்றிக் குறிப்பிடத் தவறியமையால் நூல்கள் அப்பாடசாலைகளால் முறையாகப் பயன்படுத்தப் படவில்லை என்ற கசப்பான முடிவினை புக்ஸ் அப்ரோட் நிறுவனம் எடுத்ததுடன், அப்பாடசாலைகளின் பெயர்களையும் தமது தொடர் உதவிப் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டதாக எனக்குத் தெரிவித்திருந்தன. இவ்வாண்டும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நூல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2012 இல் ஜனவரி இறுதியில் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்தின் இயக்குநர் திரு ஜோன் கால்டர் அவர்கள், நூலகவியலாளர் என். செல்வராஜாவுடன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அவ்வேளையில் யாழ்ப்பாண மாவட் டத்திலும் திருக்கோணமலை மாவட்டத்திலும் சில சந்திப்புகளை மேற்கொண்டு தமது நூலக உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை நேரில் கண்டறியமுனைந்தார். ஆளுநரின் சம்மதமின்றி அணுவும் அசையாது என்ற நிலை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் நிலவியதால், கல்வித்திணைக் கள உயர் அதிகாரிகளுடனான சந்திப்பு பயனற்றதாக அமைந்தது. ஆயினும் யாழ்ப்பாணப் பொது நூலகம் மற்றும் சில பாடசாலைகளுக்கு விஜயம் செய்து தமது உதவிகள் அந்நிறுவனங்களுக்குப் பயனளிப்பதை கேட்டறிந்தார். சில உயர்தர பாடசாலைகளில் அதிபர் அறையில் அதிபருக்காகக் காத்திருந்து மிகப் பெறுமதியான எமது நேரத்தை விரயம் செய்து அதிபர்களைச் சந்திக் காமலேயே திரும்பி வந்த கொடுமைகளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எமக்கு நேர்ந்தமை கசப்பான அனுபவமாகும்.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நூலகர் இமெல்டா சந்திரசேகரன், மற்றும் முன்னாள் நூலகர் எஸ். தனபாலசிங்கம் ஆகியோருடனான ஜோன் கால்டரின் சந்திப்பு மிகப் பயனுள்ளதாக அமைந்தது. அதில் சிறுவர்களுக்கான இரவல் வழங்கும் பிரிவொன்றை உருவாக்கும் வகையில் இரண்டு பலட் கொள்ளளவிலான (ஒரு பலட்டில் சராசரி 230 பெட்டிகள் உள்ளடக்கப்படும்) சிறுவர் நூல்களை வழங்குவதற்கும், நல்லூர் பிரதேச சபையின் மூன்று

நூலகங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் வகையில் ஒரு பலட் கொள்ளளவிலான சிறுவர் நூல்களை வழங்குவதற்கும் புக்ஸ் அப்ரோட் நிறுவனம் இணங்கியது. அந்த மூன்று பலட்களுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடக் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தனிஸ் கல்லூரி, யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகிய எட்டு பாடசாலைகளுக்கும் வழங்குவதற்காக ஒரு பலட் நூல்களுமாக மொத்தம் நான்கு பலட்களில் ஏராளமான நூல்கள் யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து உரிய பாடசாலைகளுக்கும் பொது நூலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

போரினால் நலிவுற்ற கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையின் மேம்பாடு பிரத்தியேக கவனிப்புக்குள்ளாக்கப்படவேண்டும் என்ற விடயத்தை, போரினால் அப்பிரதேசம் பாதிக்கப்பட்ட வரலாறு உட்பட அதன் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி தெளிவாக புக்ஸ் எப்ரோட் நிறுவனத்திற்கு நேரில் அறிவுறுத்தப்பட்டது. அங்குள்ள பாடசாலைகள் முறையான தொடர் பாடல்களை புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துடன் மேற்கொள்வதிலுள்ள ஆரம்பச் சிக்கல்கள் பற்றியும் நேரில் எடுத்துரைக்கப்பட்டது. இதன் பெறுபேறாக 2012இல் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை, கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள புனித தெரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, வட்டக்கச்சி மகாவித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளுக்கு லிட்டில் எய்ட்ஸ் நிறுவனத்தினூடாக நூல்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அப்பாடசாலைகள் அனைத்தும் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு தமது நூலகச் செயற்பாடுகள் பற்றிய தொடர்பாடலை ஏற்படுத்தத் தவறிவிட்டன. அதனால் வருடாந்தநிர்வாக சபைக் கூட்டங்களில் நூலகர் என்.செல்வராஜாவுக்கு பலத்த சிரமங்களும் தலைகுனிவுகளும் ஏற்பட்டமை கசப்பான அனுபவமாகும்.

பொதுவாக இலங்கையில் தமிழ்ச் சமூகத்தில் நன்கொடை என்பது ஒரு வழிப்பாதை கொண்ட சித்தாந்தமாகவே அமைந்துவிட்டது. இதனை உதவி வழங்கும் நிறுவனங்கள் ஒரு மரபாகவே வளர்த்துவிட்டுள்ளன. பல்வேறு மறைமுக நோக்கங்களுடன் இயங்கும் இவ்வமைப்புகள் பாடசாலைக்கு நூல்வழங்குவதென்பது அள்ளிக்கொடுத்து கணக்கைத் தீர்க்கும் ஒரு தலை முயற்சியாகவே முடிந்துவிடுகின்றன. அவர்கள் வழங்கும் உதவிகள் எவ்வாறு

பயன்படுத்தப்படுகின்றன என்பதையோ தொடர்ந்து அந்நிறுவனத்தின் உதவியை எவ்வாறு கையாள்வது என்பது பற்றியோ உதவியைப் பெறும் நிறுவனங்கள் அக்கறைப்படுவது கிடையாது. இதுவே வடக்கு-கிழக்கு தமிழர் பிரதேசங்களில் உள்ள சிக்கலான நிலைமையாகும். தங்கமுட்டையிடும் ஒரு வாத்தை, ஒருவருக்கு நீண்டகாலம் தொடர்ந்து தங்கமுட்டைகளைப் பெற்றுக்கொள்ள வழியமைக்கும் நல்லெண்ணத்தில் வழங்கினால், அதன் முட்டைக்குக் காத்திராமல், அதனைக் கொன்று கறிவைத்துப் புசிப்பதுடன் வேறொருவர் தரப்போகும் தங்கவாத்து வரும்வரை தமது கருமங்களைப் பார்த்துச் செல்லமுனையும் ஒரு சில கல்வி நிறுவனங்களால் ஒட்டுமொத்த கல்விச்சேவைக்கும் பாதிப்பு ஏற்படும் ஆபத்துள்ளதென்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாண்டு நூல்களை அனுப்பிவைத்த வேளையில் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப் பணிக்கப்பட்ட முகவர் அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட கவனயீனமான தாமதத்தினால் கொன்டெய்னர் மூன்று மாதங்கள் வரை கொழும்புத் துறைமுகத்தில் தாமதிக்கவேண்டியிருந்தது. இதனால் நூலக வியலாளர் என். செல்வராஜாவுக்கு தனிப்பட்டமுறையில் ஏற்பட்ட பல லட்சம் ரூபா நட்டத்தின் ஒரு பகுதியை கிளிநொச்சிப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினரான திரு. சந்திரகுமார் (அஷோக்) அவர்களின் உதவியால் தவிர்த்துக் கொள்ள முடிந்தது. இதற்கான தொடர்பாடலை ஏற்படுத்தித் தந்த தேசம் இணையத்தின் தாபகர் ஊடகவியலாளர் திரு.த. ஜெயபாலன் நன்றிக் குரியவர். பாராளுமன்ற உறுப்பினர் திரு சந்திரகுமாரின் காலம் கருதிய உதவியின் காரணமாக திருக்கோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நூல்களிலிருந்து ஒரு தொகையை கிளிநொச்சி மாவட்டத்தின் எட்டுப் பாடசாலைகளுக்கு நல்லெண்ண உதவியாக மீண்டும் வழங்கமுடிந்தது. தேசம் இணையத்தள இயக்குநர் த. ஜெயபாலன் மூலம் தேர்வுசெய்யப்பட்ட இப்பாடசாலைகளுக்கு நூல்களை வழங்கும் பொருட்டு இந்நூல்பொதிகள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சந்திரகுமாருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாலயம், பாரதிபுரம் மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அரசாங்க தமிழ்கலவன் பாடசாலை, ஜெயபுரம் மகா வித்தியாலயம், வேராவில் இந்து மகா வித்தியாலயம், இத்தாவில் வேம் பொடுகேணி கத்தேலிக்க தமிழ் கலவன் பாடசாலை, முருகானந்தா பாலர் பாடசாலை, பூநகரி முட்கொம்பன் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை ஆகிய எட்டு பாடசாலைகளுக்கு இந்நூல்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி உள்ளிட்ட மேலே குறிப்பிட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் இந்நூல்களைப் பெற்றுக்கொண்டதுடன் தமது தேவை தீர்ந்துவிட்டதாகக் கருதக்கூடாது என்பதே எனது வேண்டுகோளாகும். தனித்தனியாக தமக்கு இந்நூல்களை வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துக்கு முதலில் ஒரு ஏற்புக் கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதி அனுப்ப வேண்டும். நூல்கள் கிடைக்கப்பெற்ற இரு மாதங்களுக்குள் இக்கடிதம் மேற்படி நிறுவனத்திற்குப் போய்ச் சேராதுவிட்டால், அவர்களது கணனியிலிருந்து இப்பாடசாலைகள் நீக்கப்பட்டுவிடும் ஆபத்துள்ளது.

ஆரம்பத்தில், மேற்படி பாடசாலைகளால் மூன்று பக்க விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டு, அவை புக்ஸ் அப்ரோட்டின் தேர்வுக் குழுவின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உதவி வழங்கும் பாடசாலைகளாகத் தேர்வுசெய்யப்படுவதென்பது நீண்டதொரு வேலைத்திட்டதாகும். இத்திட்டத்தின் கீழ் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இப்பாடசாலைகளுக்கு ஆங்கில மொழியிலான சிறுவர், இளையோர் நூல்களும் உசாத்துணை நூல்களும் பாடசாலையின் சார்பில் எவ்வித பணச் செலவுமின்றி தேர்வு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தமது நூலகத்தின் சேர்க்கைகளை வளர்த்துக்கொள்ள விரும்பும் பாடசாலைகள் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துடன் மூன்று கட்டங்களில் தமது தொடர்பினை மேற்கொள்ள உடன்பட்டாக வேண்டும்.

(1) நூல்கள் கிடைத்ததும் அதனை மேற்படி நிறுவனத்துக்கு மின்னஞ்சல் வாயிலாகவோ தபால் மூலமாகவோ நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும்.

(2) சுமார் மூன்று மாதங்களில் மேற்படி நூல்கள் அனைத்தும் பட்டியல் இடப்பட்டு நூலகச் சேர்க்கையில் இணைக்கப்பட்ட பின்னர் கிடைத்தவற்றுள் மிகவும் பயனுள்ள நூல்கள் சிலவற்றின் விபரத்தையும் (ஆகக் கூடியது 10 நூல்களின் தலைப்பு, ஆசிரியர் பெயர், பாட விடயம் என்பவற்றை குறிப்பிடலாம்), பயனற்றதெனத் தாம் கருதும் நூல்களில் சிலவற்றின் விபரத்தையும் (இதுவும் முன்னையது போன்றே 10 தலைப்புகளில் அமையலாம்) பட்டியலிட்டு ஒரு கடிதத்தை பாடசாலை அதிபர் வாயிலாக அனுப்பவேண்டும்.

(3) நூல்கள் கிடைத்து ஆறு மாதங்கள் கடந்த நிலையில், பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியரின் கண்காணிப்பின்கீழ் மூன்று பிள்ளைகள்,

தாங்கள் கடந்தகாலங்களில் வாசித்த புக்ஸ் எப்ரோட் நிறுவனத்தின் நூல்களில் ஏதாவது ஒரு நூலைத் தேந்தெடுத்து அந்த நூல் என்ன சொல்கிறது? அதில் தாம் விரும்பும் அம்சம் என்ன ஆகிய தகவல்களை உள்ளடக்கி, 20 வரிகளுக்குள் அமையும் சிறு விமர்சனம் ஒன்றை எழுதி (மூன்று மாணவர்களின் மூன்று விமர்சனங்களும் ஒன்றாக அனுப்பப்படவேண்டும்) புக்ஸ் அப்ரோட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இவை தவிர தமது நூல்களை கண்காட்சிப்படுத்தமுனையும் பாடசாலைகள், பொது நூலகங்கள் அதுபற்றிய புகைப்படங்களையும் பிற தொடர்பாடல் களையும் அனுப்பிவைக்கலாம். அத்துடன் தாங்கள் விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய தொடர்பு முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்பட் டால் அதனையும் அவ்வப்போது தெரிவித்து புக்ஸ் அப்ரோட் நிறுவனத்தின் கணனித்தகவல் கோவையில் மாற்றத்தை மேற்கொள்ளப் பணிக்கவேண்டும்.

இத்தகைய மூன்று அடிப்படைத் தொடர்பாடல்களையும் வெற்றிகரமாக மேற்கொள்ளும் ஒரு பாடசாலை அடுத்த இரு ஆண்டுகளில் மேலும் பெருந் தொகுதி நூல்களை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் காத்திருக்கலாம். இதனை செய்யத் தவறுவோர், தங்கமுட்டையிடும் வாத்தை சுவைத்த திருப்தியுடன் எஞ்சிய காலத்தைக் கழிக்கலாம்.

புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துடன் நேரில் தொடர்புகொள்ள விரும்பும் நிறுவனங்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தமது தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். BOOKS ABROAD, Unit 1, Richmond Avenue Industrial Estate, Rhynie, HUNTLY, Aberdeenshire,AB54 4HJ, SCOTLAND, U K.

Tel/Fax: +44 (0)1464 861446. E-mail: info@booksabroad.org.uk

(ஞாயிறு தினக்குரல், 20.7.2014)

போக்குகள்

9

பல்கலைக்கழகப் பின்புலத்தில் உருவான சில சிறுகதைத் தொகுதிகள்

சில காலங்களுக்கு முன்னர் *பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்* என்ற தலைப்பில் ஒரு சிறுகதைத் தொகுப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியம் வெளியீடு செய்துள்ளது. இந்நூல் ஈழத்து ஓவியர் கோ. கைலாசநாதனின் ஓவியங்களுடன் வெளிவந்துள்ளது.

கலைப்பீட மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடான பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது சிறுகதைகளைத் தாங்கிவந்துள்ளது. ச. நிரஞ்சனி, க. சிவதாரணி, ஜெ. கவிதா, ப. உதயசாந்தினி, சி. கோகிலவாணி, த. அஜந்த குமார், ந. வினோதரன், சி. சிவாகர், ந. மயூரரூபன் ஆகியோர் இக்கதைகளை எழுதியிருக்கிறார்கள். பல்கலைக்கழக இளம் படைப்பாளிகளின் இக்கதைகள் ஒவ்வொன்றிலும் தம்மை ஈழத்துப் படைப்பாளிகளாக எதிர்காலத்தில் நிலைநிறுத்திக்கொள்ள முனையும் ஆர்வம் தெரிகின்றது. இக்கட்டுரை இந்த நூலுக்கான விமர்சனம் அல்ல. அந்த நூல் என்னுள் கிளப்பிவிட்ட சில உணர்வுகளைப் பகிர்தலே இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

பசியடங்கா இருளிலிருந்து... குழுவினரைப் போலவே முன்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் ஒரு இளைஞர் குழு முன்னொரு காலகட்டத்தில் சிறுகதை இலக்கியத்தை முன்னெடுத்திருந்தது.

கதைப் பூங்கா என்ற தலைப்பில் க.குணராசா, க.நவசோதி ஆகியோரைத் தொகுப்பாசிரியர்களாகக் கொண்டு பேராதனை: பல்கலை வெளியீடாக, பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் 1962 இல் இந்நூலை வெளியிட்டிருந்தார்கள். இலங்கைப் பல்கலைக்கழக புவியியல் பட்டதாரியான செம்பியன்

செல்வன் பல்கலை வெளியீடு எனும் இந்த அமைப்பின் தாபக அமைப் பாளராவார். யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு 118 பக்கங்களில் வெளியிடப்பெற்றிருந்த அந்நூலில், 12 கதைகள் இடம் பெற்றிருந்தன. பேராசிரியர் க.கைலாசபதியின் முன்னுரையுடன் வெளிவந்த இச்சிறுகதைத் தொகுதியில் எழுதிய பலர் பின்னாளில் ஈழத்துப் படைப் பாளிகளாகப் பிரபல்யம் பெற்றிருந்தார்கள். இவர்களில் செ.யோகநாதன், க. குணராசா (செங்கை ஆழியான்), கோகிலா மகேந்திரன், வெ. கோபால கிருஷ்ணன், அங்கையன் கயிலாயநாதன், செ.கதிர்காமநாதன், எம்.ஏ.எம்.சுக்ரி, அ.சண்முகதாஸ், செம்பியன் செல்வன், முத்து சிவஞானம், க.நவசோதி ஆகியோரை நாம் நன்கு அறிவோம். பின்னாளில் ஈழத்துத் தமிழிலக்கியத் தில் முத்திரை பதித்தவர்களாக இவர்கள் வளர்ந்துள்ளனர்.

அந்நாளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்களுக்கு ஒரு சங்கப்பலகை இருந்து அதன்மூலம் தமது படைப்பிலக்கிய வெளிப்பாடு களை பதிவுசெய்யும் வாய்ப்பும் இருந்தது. அத்துடன் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் படைப்பிலக்கியத்துறைக்கு அவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்தி, அறுபதுகளில் உரமிட்டு வளர்த்து ஈழத்து இலக்கியத்துக்கு வளம்சேர்ப்பவர்களாக மாற்றியிருக்கிறார்கள். அந்த வழியில் ஈழத்து நவீன இலக்கிய வரலாற்றின் செல்நெறியை வகுத்தும் செழுமைப்படுத்தியும் பல்கலைக்கழக அறிவியலாளர்கள் இருந்துவந்தமை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

இத்தகைய இலக்கியப் பாரம்பரியத்தின் வழிவந்த தமிழறிஞர்களான பேராசிரியர்கள் க. கைலாசபதி, சு. வித்தியானந்தன் போன்றோரை துணை வேந்தர்களாகக் கொண்டெழுந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இந்தப் பாரம்பரியம் ஓரளவு தொடர்ந்து வந்திருக்கிறது. இன்று துணை வேந்தராகவிருக்கும் நா.சண்முகலிங்கன் உள்ளிட்ட - இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல் பீடங்களை அலங்கரிக்கும் பலரும் ஈழத்தின் படைப்பிலக்கியத்துறைக்கு தம்மாலான பங்களிப்பை வழங்கி வருபவர்களே. இவர்களது இலக்கிய அனுபவங்களினாலேயே மாணவர்களின் ஆளுமையும் வளர்த்தெடுக்கப்படுகின்றது. கூடவே பெறுமதியான சமூகமயமாக்கலுக்கும் இந்த அனுபவம் இவர்களுக்குத் துணைநிற்கின்றது. இவர்களின் மத்தியில் உருவாகும் இளம் இலக்கியவாதிகளுக்கு உரமிட்டு வளர்க்க வேண்டியதும் அவர்களது பணியாகும்.

கதைப்பூங்காவுக்கு அடுத்ததாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் களின் சிறுகதைத் தொகுதியாக எம்மால் இனம் காணப்படக்கூடியது *மண்ணின்*

மலர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பாகும். சி.சிவானி அவர்கள் தொகுப் பாசிரியராகவிருந்து, கொழும்பு மல்லிகைப்பந்தல் வெளியீடாக இலக்கியவாதி திரு. டொமினிக் ஜீவா அவர்களால் மார்ச் 2001இல் 86 பக்கங்களில் *மண்ணின் மலர்கள்* என்ற மற்றொரு தொகுதி வெளிவந்திருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 13 மாணவர்கள் எழுதிய சிறுகதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்ககழகப் பட்டதாரிகளான இவர்கள் தமிழ்த் துறையிலிருந்து மாத்திரமல்லாது, விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம் ஆகியவவற்றிலிருந்தும் இத்தொகுப்பில் எழுதியிருந்தார்கள். அக்காலத்து சமூக. அரசியல் போக்குகளை நன்கு உணர்ந்தவர்களாகவும், அவற்றினால் நேரடியாகத் தாக்குண்டவர்களாகவும், அதனால் போர்க்கால வாழ்வியலை நன்கு அறிந்து அந்த உணர்வுகளையெல்லாம் விளங்கிக் கொண்டவர்களாகவும் இச்சிறுகதையாசிரியர்கள் விளங்கியிருந்தார்கள். போர்க்காலச் சூழலிலிருந்து முகிழ்ந்தெழுந்தவர்களாக இருந்ததால் தானோ என்னவோ அவர்களது படைப்புக்கள் பலவும் வீச்சுடன், போர்க்கால இலக்கிய மணம் கமழ்வ தாயிருந்தன. தாட்சாயணி, சிவானி, ராகவன், ராஜேஸ்கண்ணன், குமுதினி, உடுவில் அரவிந்தன், அருந்தவசீலன், பிரியா குணராசா, நர்த்தனா, வசந்தகுமார், கணேஷ்ராஜா, சித்தர் அனவரதன், அபினவன், ஆகிய பல்கலைக்கழகப் படைப்பாளிகளில் சிலர் இன்றைய இலக்கிய வானில் தொடர்ந்து பிரகாசிப்பதை அவதானிக்கலாம்.

இருவேறு காலகட்டங்களில் வெளிவந்த இவ்விரு பல்கலைக்கழக மாணவர்களின் படைப்புக்களின் தொடர்ச்சியாகவே *பசியடங்கா இருளி லிருந்து ஒன்பது கதைகள்* என்ற தலைப்பில் இப்போது வெளிவந்திருக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் நூலையும் பார்க்கமுடிகின்றது. இதில் எழுதியுள்ள பல்கலைக்கழக இளம் படைப்பாளிகளில் சிலராவது எதிர்கால ஈழத்துத் தமிழிலக்கியத்தில் நின்று நிலைப்பார்கள் என்று நம்பலாம். இவர்களில் ஜெ.கவிதா தற்போது தினக்குரல் வாரமலரின் ஆசிரியர் குழுவில் பணியாற்றுவதும் சுட்டிக்காட்டப்படலாம்.

பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள் என்ற இந்த நூலினை வாசிக்கும்போது தொகுப்பாசிரியரான மாணவன் ந.வினோதரன் கதையோடு கதையாய் முன்னுரையில் எதேச்சையாகச் சொல்லிவிட்டுப் போகும் வாசகங் கள் எனது மனதை நெருடுகின்றன. நூறு கதைகளைத் தமது மாணவர் களிடமிருந்து தொகுக்க வேண்டும் என்றும், அதற்கு அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின்மூலம் நிதி சேகரிக்கவேண்டும் என்றும் இவர்கள் புறப்பட்டி

ருக்கிறார்கள். ஆனால் இறுதியில் அது ஐம்பது கதைகளாகி, இருபது கதை களாகி இப்பொழுது ஒன்பது கதைகளாய் சிறு நூலாக வந்து முடிந்திருக்கிறது என்று பெருமூச்சு விடுகின்றார் இந்த மாணவர். போதிய நிதிஇன்மை, கதைகளின் தரம் என்பனவே இப்படி கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதை என்கிறார்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்று சமூகத்தில் உயர்தகுதி பெற்று புலம்பெயர்வாழ்வில் காணாமல்போய்விட்ட யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் பழைய மாணவர்களை இந்த இளம் படைப்பாளிகள் அணுகமுயற்சித்திருந்தால் நிதிப்பிரச்சினை வந்திருக்காது என்பதே எனது அபிப்பிராயம். இங்குள்ள பல்வேறு பாடசாலைகளின் பழையமாணவர் சங்கங்கள் போல- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புலம்பெயர் பட்டதாரிகள் சங்கம் எதாவது பிரித்தானியாவில் அல்லது ஐரோப்பாவில் வெளிப்படையாக இயங்குவதாக எந்தவிதமான செய்திகளும் என்னிடம் இல்லை. அவுஸ்திரேலியாவில் *அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்* என்றொன்று இயங்கி கலப்பை என்றொரு இலக்கியச் சஞ்சிகையையும் வெளியிட்டுவருவதை நாம் அறிவோம். kalappai@yahoo.com என்ற இணைய முகவரியில் அவர்களை இவ்விளைஞர்கள் அணுகியிருக்கலாம். வெளியுலகத் தொடர்பின்றி இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் திறந்த வெளிச்சிறைகளுக்குள் அகப்பட்டிருக்கும் உணர்வு அவர்களிடம் மேலோங்கி இருப்பதாலோ என்னவோ வெளிநாட்டு நிதி உதவிகளை அவர்களால் பெற முடியாது போய்விட்டது என்று கருதுகின்றேன். புத்தகம் போடுவதற்கு அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பணம் தேட முனைந்திருக்கிறார்கள். இவர் களுக்கு - இடைக்கிடை ஐரோப்பாவுக்கு வந்துபோகும் பல்கலைக்கழக புத்திஜீவிகளாவது காத்திரமானதொரு தொடர்பினை ஏற்படுத்தித் தந் திருக்கலாம்.

ந. வினோதரன் இன்னுமொரு சோகத்தையும் அங்கு பதிவுசெய்திருக்கிறார். தனியார் அச்சகமொன்றில் நூலை அச்சிடக்கொடுத்து அவர்களின் பின்னால் அவர் அலைந்துதிரிந்த அந்தக் கசப்பான அனுபவங்களை வாசிக்கும்போது- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கென தனியானதொரு பதிப்பகம் ஒன்றின் தேவை முனைப்புப்பெறுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974இல் திருநெல்வேலியில் உருவாகிய காலத்திலிருந்தே அவ்வப்போது பல்கலைக்கழகத்துக்கான தனியான பதிப்பகமொன்றின் தேவை வலியுறுத்தப்பட்டே வந்துள்ளது. ஆயினும் இன்றுவரை அது உருப்பெறவில்லை. இன்றும்கூட பல்கலைக்கழக

விரிவுரையாளர்களின் ஆய்வுகள் அனைத்தும் தனியார் பதிப்பகங்களின் தயவிலும், ஆய்வாளரின் தனிப்பட்ட பிரயத்தனத்திலுமே நூலுருவில் வெளிவந்துள்ளன. இந்திய இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில் எத்தனை நூறு ஆய்வுஏடுகளை எரித்துக் குளிர்காய்ந்தார்கள் என்பதையும் - நல்ல பல ஆய்வுகளின் மூலப்பிரதிகள் இந்திய இராணுவம் சுத்திகரிப்பு என்ற போர்வையில் பல்கலைக்கழகத் திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு குப்பைமேட்டில் அனாதரவாக வீசி எறியப்பட்டன என்பதும் மறந்துபோன கண்ணீர்க்கதைகள்.

பல்கலைக்கழகம் தனியானதொரு நிதி ஒதுக்கீட்டில்- உலகத் தமிழர்களின் ஆதரவுடன் ஒரு பதிப்பகத்தைக் கட்டி எழுப்பியிருந்தால் இன்றளவில் பல ஆய்வுகள் எமது கைகளில் தவழ்ந்திருக்கும். இன்றைய நிலை என்னவென்றால் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளியீடுகள் என்றோ, அந்த அறிவாலயத்தில் உருவாகிய ஆய்வாளர்கள் தமது சமூகத்துக்கு வழங்கிய அறிவு நூல்கள் என்றோ ஒரு பட்டியல்கூட எம்மிடம் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இந்நிலையில் ஈழத்தமிழர் - தம்மை அறிவுஜீவிகள் என்று கூறிக்கொள்ளும் நிலைமை எமக்குப் பொருத்தமானது தானா என்று நாம் சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும்.

இந்த நிலை தற்போதைய துணைவேந்தரின் காலத்திலாவது மாறும் வாய்ப்புள்ளதா என்று தெரியவில்லை. துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் அவர்கள் தான் விரிவுரையாளராக இருந்த காலத்திலிருந்து *நாகலிங்கம் நூலாலயம்* என்ற பெயரில் தனது தந்தையாரின் நினைவாக ஒரு பதிப்பகத்தை உருவாக்கி நடத்திவருகிறார். அதன்மூலம் போதிய அனுபவத்தையும் அவர் கொண்டிருப்பார். இவர் பல்கலைக்கழகத்தக்கான தனியானதொரு பதிப்பகம் ஒன்றின் உருவாக்கத்திற்கு புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பழைய மாணவர்களின் நிதி ஆதரவுடன் முயற்சிசெய்வார் என்று நம்புகின்றோம். இதை கூட்டுறவுப் பதிப்பகமாகக்கூட உருவாக்கும் சாத்தியப்பாடுகள் உள்ளன. இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வியல் வெளிப்பாடுகள் அனைத்தும் குடத்துள் விளக்காகவே உள்ளன. இதனை வெளி உலகிற்குக் கொண்டுவந்து ஈழத்தமிழரின் உயர்கல்வி மேம்பாட்டை- அறிவியல் தாகத்தை தீர்க்க ஏன் அனைவரும் முனையக்கூடாது என்ற கேள்வியை வாசகரின் சிந்தனைக்கு விட்டு விடைபெறுகின்றேன்.

(ஞாயிறு தினக்கரல் 25.7.210)

10

ஈழத்தின் பிரதேச வரலாறு

ஓர் அறிமுகம்

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே'' என்பது பாரதியார் வாக்கு. மானிடவாழ்வில் தாய்க்கே முதலிடம் வழங்கப் படுகின்றது. முற்றும் துறந்த முனிவர்களும் தாயைப் போற்றியுள்ளனர். அத்தகைய தாய்க்கு அடுத்தபடியாகப் போற்றப்படவேண்டியது ஒருவர் பிறந்த நாடாகும். தேசப்பற்று, ஊர்ப்பற்று, நாட்டுப்பற்று எல்லோருக்கும் இருக்கவேண்டிய ஒன்றாகும். ஆனால் அப்பற்று மற்றைய இனத்தவரையோ மற்றைய ஊரவர்களையோ துன்புறுத்துவதாகவும் தாழ்த்துவதாகவும் அமைந்து விடக் கூடாது என்பது ஆன்றோர் வாக்கு.

ஒரு நாட்டின் பண்டைய வரலாற்றை நாம் அறிந்துகொள்ள உதவும் வழிகளுள் பிரதேச வரலாற்றாய்வுகள், இடப்பெயர் ஆய்வுகள் என்பன முக்கியமானவை. இவ்வாய்வுகள் மொழியியல், வரலாறு, தொல்பொருளியல், நிலநூல், சமூகவியல் போன்ற பல்வேறு துறைகளின் ஆய்வுகளுக்கும் வழிகாட்டுகின்றன. மக்களின் நாகரீகம், பண்பாடு ஆகியவற்றை அறியவும் இவ்வாய்வு துணைசெய்கின்றது.

பல்லாண்டு காலமாக ஊரின் சிறப்புப் பற்றிக் கூறும் வழக்கம் தமிழ் மொழியில் இருந்து வந்துள்ளதை நாம் காண்கிறோம். பட்டினப் பாலை, மதுரைக் காஞ்சி முதலிய சங்ககால நூல்கள் நகர்கள் பற்றிக் கூறுவனவாகும். ஊரின் அமைப்பு, மக்களின் தொழில்வளம், பழக்க வழக்கங்கள், பண் பாட்டுச் சிறப்பு ஆகியவை பற்றிய பல செய்திகளை இந்நூல்கள் வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. சிற்றிலக்கிய வகைகளான ஊர் விருத்தம், ஊர்வெண்பா என்பனவும் ஊரின் வரலாறு பற்றிக் கூறுவனவாகும். பாட்டுடைத் தலைவன் வாழ்ந்த ஊரின் சிறப்பினை பத்து ஆசிரிய விருத்தங்களால் சிறப்பித்துப் பாடப்பெறுவது ஊர்விருத்தம் என்பார்கள். ஒரு ஊரினைப் பத்து வெண்பாக்களால் சிறப்பித்துக் கூறுவது ஊர் வெண்பா எனவும் அறியப்படுகின்றது.

ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வால் விளைந்த அலைந்துழல்வு (Nostalgia) வாழ்க்கை தருகின்ற துயரத்திலிருந்தும், ஏக்கத்திலிருந்தும் எம்மைத் தற்காலிகமாகவேனும் ஆறுதல்படுத்துவது நாம் சார்ந்த ஊர் பற்றி அவ்வப் போது எமக்குக் கிடைக்கும் செய்திகளாகும். எமது இனத்துவ அடையாளங் களை நமது அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச்செல்ல உதவுவதும் இத்தகைய பிரதேச வரலாற்று நூல்களே.

தாம் வாழ்ந்த மண்ணின் பிரதேச, சமூக வரலாறுகளைத் தம் சந்ததியினர் அறிந்துகொள்ளவென வழங்கிவிட்டுச் சென்ற நம் முன்னோர்களின் மண் மணம் மறவாத படைப்புக்கள் பல இன்றும் எம்மை நாம் இழந்துவிட்ட அந்தக் காலத்துக்கு அழைத்துச்சென்று புளங்காகிதமடையச் செய்கின்றன. தாம் பிரிந்துவந்த மண்ணின் நினைவுகளை பிரதேச வரலாறுகளாகப் பதிவுசெய்யும் நடைமுறை புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. அதே வேளை உள்ளக இடப்பெயர்வுகளால் தாம் இழந்த மண் பற்றிய துயரப் பதிவுகளை மேற்கொண்டு வரலாறாக்கும் பணிகளும் அண்மைக்காலத்தில் தாயகத்தில் முனைப்புப்பெற்று வந்திருக் கின்றன. ஆகமொத்தம் பிரதேச வரலாறென்பது வளர்ந்துவரும் ஒரு ஆய்வுப்பரப்பாக மாறிவிட்டதெனலாம்.

இன்று நமது புகலிடங்களில் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் கோவில்கள் கூட, தாயகத்துக் கோயில்களின் நினைவுகளைத் தாங்கியே இயங்குவதை ஆழ்ந்து அவதானிக்கமுடிகின்றது. ஆங்காங்கே உருவாக்கப்பட்டு, ஆண்டு தோறும் சந்திப்பு நிகழ்வுகளை மேற்கொண்டு கூடிப் பேசிப் பிரியும் ஊர்ச் சங்கங்கள் கூட, பிரதேச வரலாற்றின் கூறுகளாகவே அமைகின்றன. அவை அவ்வப்போது வெளியிடும் மலர்களும் அவ்வப் பிரதேசத்தின் வரலாற்றுப் படிமங்களாகவே காணப்படுகின்றன. பாடசாலை பழைய மாணவர் சங்கங் களும் இந்த வகைக்குள் அடங்குகின்றன.

இன்று ஈழத்தமிழர்களால் ஆங்காங்கே பதிவுசெய்யப்பட்டுவரும் பிரதேச வரலாற்றுக் கூறுகளைத் தொகுத்துப் பகுத்துப் பார்ப்பதே ஒரு வரலாற்று ஆவணமாகி விடும். அத்தகையதொரு விரிந்த தேடலுக்குத் தேவையான ஆய்வுப்பரப்பினை அடையாளம் காண்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

பிரதேச வரலாறுகள் ஒரு குறித்த புவியியல் எல்லைக்குட்பட்டதொரு பிரதேசத்தின் வரலாற்றை, அந்த மண்ணின் வளத்தை, மக்களின் பண்பாட்டை, குடித்தொகையை, அப்பிரதேசத்தில் எழுந்த கோவில்களை, அந்த மண்ணில் பிறந்து புகழ்பெற்ற மைந்தரைப் பற்றிய தகவல்களைப் பதிவுசெய்த தனி

நூல்களாகவும் அமைகின்றன. *அலைகடல் ஓரத்தில் தமிழ்மணம்* என்ற பெயரில் உடப்பூர் வீரசொக்கன் எழுதி, உடப்பு இளம் தாரகை வட்டம் 1997 இல் வெளியிட்டிருந்த ஒரு நூல் இதற்கு நல்லதொரு உதாரணமாகும். இலங்கையில் புத்தளம் மாவட்டத்தின் வடமேல் கரையில் உள்ளது உடப்பூர். புத்தளம் மாவட்டத்தில் தமிழரின் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்துவரும் கிராமங்களில் உடப்பு கிராமமும் முன்னிலையில் திகழ் கின்றது. இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து மன்னார்க் கரையினை அடைந்து கிட்டத்தட்ட 5 நூற்றாண்டுகளாக இவ்வூரிலேயே நிலைகொண்டு வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்களின் பிரதேச வரலாறு இதுவாகும். இம்மக்களிடையே வழங்கும் கர்ணபரம்பரைக் கதைகளையும் அம்மக்களின் வாழ்க்கை முறை களையும் கலை பண்பாட்டு அம்சங்களையும் உற்றுநோக்கி இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது. உடப்பூர் விஷேட குறிப்புகள், குடியேறிய வரலாறு, தொழில், கிழக்குக் கடலோர மீன்பிடித் தொழில், உடப்பில் வழக்கிலுள்ள பழமொழிகள், வில்லிசை, திரௌபதையம்மன் வழிபாடு, சித்திரைச் செவ்வாய், உடப்பின் நாட்டுப்பாடல், மரபுவிளையாட்டுகள், அம்பா பாடல், இந்து ஆலயங்கள் என்று பல அம்சங்கள் பற்றி இந்நூல் விரிவான தகவல் களைக் கொண்டுள்ளது.

ஒரு பிரதேச வரலாறு அப்பிரதேச மக்களின் இனவரலாறாகவும் எழுதப் படுவதுண்டு என்பதற்கு உதாரணமாக, *அக்கரைப்பற்று வரலாறு* என்ற நூலைக் குறிப்பிடலாம். A.R.M. சலீம் அவர்களால் அக்கரைப்பற்று பள்ளிவாசல் களின் சம்மேளன வெளியீடாக, 1990 இல் இந்நூல் வெளிவந்தது. அக்கரைப் பற்றுப் பிரதேசத்தின் இயற்கைவளமும் கலாச்சாரமும் ஆக்கங்களும் சாதனை களும் பெரியார்கள் உத்தமர்கள் போன்றோரின் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்களும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அக்கரைப்பற்றுப் பிரதேசத் தின் பெயர்விளக்கம், புவியியல் அமைவு, மழைவீழ்ச்சி, குடியேற்ற வரலாறு, கிராமங்களின் தோற்றம், சமூக வாழ்வியல் அமைப்பு, குடும்ப அமைப்பு, பொருளாதாரமும் போக்குவரவும், கல்வி, இலக்கியச் செழுமை, வணக்கஸ் தலங்களும் ஸியாறங்களும், அரசியல் மேடை, ஆயுதப் போராட்டத்தில் அக்கரைப்பற்றின் பங்களிப்பு ஆகிய தகவல்கள் விபரமாகத் தரப்பட்டிருந்தன. அப்பிரதேசத்தின் முஸ்லிம் மக்களின் பூர்வீக வரலாற்றுக் குறிப்புகளை இப்பிரதேச வரலாறு இரண்டறக் கலந்து உள்ளடக்குகின்றது.

ஒரு பிரதேசத்தில் எழுந்தருளியிருக்கும் கோவில்களின் கும்பாபிஷேக மலர்கள், கிறிஸ்தவ, இஸ்லாமிய வணக்கத்தலங்களின் வரலாறுகளைப் பதிவுசெய்யும் நோக்கில் எழுதப்பட்ட தனி நூல்கள் போன்றவற்றிலும்

அப்பிரதேசத்தின் வரலாற்றுக் கூறுகளைக் காணமுடிகின்றது. *ஆழ்கடலான்* என்ற நூல் முருக.வே.பரமநாதன்அவர்களால் சிங்கை ஆழியான் என்ற புனைபெயரில் எழுதப்பெற்று கனடாவிலிருந்து நெய்தலங்கானல் வெளியீடாக 2000 ஆம் ஆண்டு வெளிவந்தது. இதன் மூலப்பதிப்பு யாழ்ப்பாணம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று ஏற்கெனவே 1983இல் வெளியாகியிருந்தது. வெளிப்படையான ஆவணங்களோ, போதிய தொல்லியல் சான்றுகளோ இல்லாத நிலையில், ஈராயிரம் ஆண்டு வழிபாட்டு மரபொன்றைக் கொண்ட யாழ்ப்பாணம் வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவிலின் வரலாற்றை மக்கள் பேணிவந்த மரபுகள், வாய்மொழி இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து பெற்று இக்கோவில் வரலாற்று நூலை முருக.வே.பரமநாதன்ஆக்கியுள்ளார். இவ்விரண்டாம் பதிப்பில், யாழ்ப்பாண மாவட்டத்துச் சாசனங்களில் இடப் பெயர்கள் (கலாநிதி இ.பாலசுந்தரம்), The Vallipura Alvar Temple Dedicated to the Worship of God Vishnu (Puloly V.Arumugam) ஆகிய கட்டுரைகளும் வல்லிபுரக் கோயில் மீது பாடப்பெற்ற பாடல்களும் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் நூலகர் திருமதி வி. பாலசுந்தரம் இம்மூலநூலுடன் பின்னிணைப்புகளையும் சேர்த்து கனடாவில் இரண்டாம் பதிப்பினை பதிப்பித்துள்ளார்.

இது போலவே *ஈழத்துக் காரைநகர் திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை* என்ற நூலையும் குறிப்பிடலாம். பொன்.பாலசுந்தரம் அவர்கள் இதனைத் தொகுத்து, காரைநகர் திக்கரை முருகன் தேவஸ்தான வெளியீடாக, 2006 இல் வெளியிட்டிருந்தார். ஈழத்துக் காரைநகர், களபூமியில் கோயில் கொண்டருளியிருக்கும் முருகன்மீது இயலிசைவாருதி, யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் 1953ம் ஆண்டில் பாடிக்கொடுத்த நூறு அந்தாதிக் கீர்த்தனைகளே இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இக் கீர்த்தனைகளில் முருகனது தலப்பெருமைகளும் இணைந்துள்ளன. இசையோடு பாடுவதற்கேற்ப ராகம் தாளம் ஆகியவற்றுடன் இயற்றப்பட்ட இந்நூல் பக்தர்களுக்குச் சிறந்த தோத்திரத் தொகுதியாகவும், இசைத்துறையில் வல்லவர் களுக்கு ஏற்றதொரு கீர்த்தனைத் தொகுதியாகவும் வெளிப்படையாக அமைகின்றது. மேற்படி கோவில்சார்ந்த அரிய பல பிரதேச வரலாற்றுக் குறிப்புகளும் இக்கீர்த்தனைகளில் பொதிந்துள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது. இந்நூல் - பிரதேச வரலாறுகள் உரைநடையில்தான் இருக்க வேண்டுமென்பதில்லை என்பதற்கு நல்லதொரு உதாரணமாகும்.

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டுச் சிறப்பு மலர் 1895-1995 என்ற நூல் எஸ்.எம்.யோசெவ் அவர்களால் தொகுக்கப்பெற்று

1995 இல் வெளியிடப்பட்டது. காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டை முன்னிட்டு வெளியான இந்நூல், காவலூரின் இன்றைய நிகழ்வுகளையும், நிலைவரங்களையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுத் தொகுப்பாய் மலர்ந்துள்ளது. ஊர்காவற்றுறை பற்றிய வரலாற்றைக் கத்தோலிக்க மறை வளர்ச்சியின் பின்னணியில் நான்கு ஆலயங்களின் வரலாற்று விபரங்களுடன், அங்கு பணியாற்றிய குரவர்கள், துறவிகள், முதலியோரின் சேவைகள் உட்பட பல தகவல்களையும் திரட்டி இயன்றளவு கோவைப்படுத்தி இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. ஊர்காவற்றுறையின் பிரதேச வரலாற்றைக் கூறும் முக்கிய ஆவணமாக இந்நூல் கருதப்படுகின்றது.

ஈழத்துப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் உலகெங்கும் பரந்து வாழும் அதன் பழைய மாணவர்களால், உருவாக்கப்பட்டு ஆண்டு தோறும் சந்திப்புகளை மேற்கொண்டு அச்சந்திப்புகளின் வழியாகப் பெறும் நிதியுதவிகளை தமது பாடசாலைக்கு வழங்கும் நற்பணியினையும் ஆற்றி வருவதை புகலிடத்தில் ஆங்காங்கே காணலாம். இவ்வமைப்புகள் சில சமயங்களில் தரமான சிறப்பு மலர்களையும் வெளிக்கொணர்வதுண்டு. *அருணோதயம்* என்ற பெயரில் நான் கண்ட ஒரு மலரை இதற்கு உதாரண மாகக் கூறலாம். 1995 இல் கனடாவிலுள் அளவெட்டி அருணோதயக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், இத்தகைய சிறப்பு மலர் ஒன்றை வெளி யிட்டிருந்தது. அளவெட்டி அருணோதயக் கல்லூரி 1994ம் ஆண்டு நூற்றாண்டு விழாவை தாயகத்தில் கொண்டாடியது. அதனையொட்டி கனடா அருணோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வெளியிட்ட நூற்றாண்டுவிழா மலர், கல்லூரியின் வரலாறு, வளர்ச்சி தொடர்பான கட்டுரைகளை மட்டுமின்றி அக்கல்லூரியின் அமைவிடமான அளவெட்டி ஊரைப்பற்றிய சிறப்புக்களையும் பேசுகின்றது. 2000ஆம் ஆண்டிலும் இதே அமைப்பு மற்றுமொரு பிரதேச வரலாற்றுப்பதிவை *பூச்சொரியும் பொன்னொச்சி மரம்: அருணோதயம் 2000.* என்ற பெயரில் வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. சொந்த ஊர் வரலாற்றைப் பதிவு செய்யும் வகையில், மண்ணின் மைந்தர்களான தட்சிணாமூர்த்தி (தவில்), பத்மநாதன் (நாதஸ்வரம்), வி.பொன்னம்பலம் (அரசியல்), மஹாகவி (இலக்கியம்), செ. சிவப்பிரகாசம் (சிற்பம்), அருட்கவி விநாசித்தம்பி (சமயம்), ஆகியோர் உள்ளிட்ட ஏராளமான மண்ணின் மக்களது செய்திகள் கலை நயத்துடனும் புகைப்பட ஆவணங்களுடனும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஊர் உரைத்தமை, ஊர் இழந்தமை, ஊர் நினைந்தமை, ஊர் மீண்டமை, ஊர் விளைந்தமை, ஊர் விரிந்தமை, என்று ஐந்து பிரிவுகளில் ஆக்கங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலை, கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்கள் போலவே புகலிடத்தில் தாம் வாழும்வேளையில், தமது பிரதேசத்தின் பெயரால் அமைப்புகளை உருவாக்கி அதன் வழியாக புலம்பெயர்ந்து வாழும் அப் பிரதேச மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்தவும், தாயகத்தில் தம் பிரதேச மக்களுக்குப் புலம் பெயர்ந்த பின்பும் உதவிகளை வழங்கவும் என பல்வேறு நோக்கங்களை முன்வைத்து அமைப்புகள் பல உருவாகியுள்ளதை அவ தானிக்கலாம். அவற்றின் ஆண்டுவிழாக்களிலும், சிறப்பான நிகழ்வுகளிலும் வெளியிடப்படும் மலர்கள் பிரதேச வரலாற்றை பிரதிபலிக்கும் ஆக்கங் களையும் அவ்வப்போது உள்ளடக்குவதையும் காணலாம். இதற்கு உதாரண மாக கொம்பறை: வன்னிவிழா: ஆண்டுமலர்களைக் குறிப்பிடலாம். கனடா, வன்னி நலன்புரிச்சங்கம், ஆண்டுதோறும் வெளியிடும் இம்மலரின் சில பிரதிகளே என் கைக்கெட்டியுள்ளன. அதில் ஒன்றாக 1997ம் ஆண்டில் கே.பி. சிவானந்தராஜ் அவர்களைச் செயலாளராகக் கொண்டு வெளிவந்த *கொம்பறை: வன்னிவிழா 97* என்ற சிறப்பு மலரை இங்கு உதாரணத்துக்கு எடுத்துக் கொள்கின்றேன். (வன்னிப் பிரதேசத்தில் நெல்மணிகள் சேமித்து வைக்க உபயோகிக்கும் நெற்களஞ்சியம் ''கொம்பறை'' எனப்படும்). பண்டாரவன்னியன் நினைவையொட்டி கனடாவில் வன்னி நலன்புரிச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட வன்னி 97 சிறப்பு நிகழ்வில் வெளியிடப்பட்ட இம்மலர், ஆசிச்செய்திகளுடன் வன்னியும் வீர வரலாறும் (இரா.சரோஜினி), வன்னிநாட்டின் பாரம்பரியங்கள் (சிவா சேனாதிராஜா), வன்னிச் சிற்றரசுகளின் சமூகப் பொருளாதார அமைப்புமுறைகள் (பாலா கணபதிப்பிள்ளை), வன்னியியல் சில வரலாற்றுக் குறிப்புகள் (சிலையூரான்), வன்னிநாட்டின் கறைபடிந்த வரலாற்று நாயகர்கள் (முல்லைமணி), காணிநிலம் (அ. பால மனோகரன்), வளம்கொழிக்கும் வன்னிநாடும் பண்டாரவன்னியனும் (அருணா செல்லத்துரை), வன்னிப்பிரதேச நாட்டார் இலக்கியச் சான்றுகளும் ஈழத்தில் கண்ணகி வழிபாட்டுப் பரவலும் (இ.பாலசுந்தரம்) ஆகிய வன்னி யியல் சார்ந்த பல படைப்புக்களை உள்ளடக்கியிருந்தது.

புகலிடத்திலிருந்து வெளிவரும் இன்றைய பிரதேச வரலாற்று நூல்களின் தவிர்க்கமுடியாத ஒரு அம்சமாகக் குறித்ததொரு பிரதேசம் சார்ந்த சமூக வரலாற்றுக்கூறுகள் -மலரும் நினைவுகளாக அமைந்துவிடுவதைக் காணலாம். *யாழ்ப்பாணத்து மண்வாசனை* என்ற நூல் வண்ணைதெய்வம் அவர்களால் பிரான்சிலிருந்து தொகுத்து வெளியிடப்பட்டது. சென்னை, மணிமேகலைப் பிரசுரமாக 2003 இல் வெளிவந்தது. இந்நூல் ஈழத்து மண்வாசனையை- மண்ணின் மைந்தர்களின் வழியாகவே வெளிக்கொண்டுவரும் வித்தியாசமான

யுக்தி. சுமார் 46 படைப்புக்களின் வாயிலாக, இன்று புலம்பெயர்ந்து உல கெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர் தமது தாயகமண் பற்றிய சிறப்பை எண்ணவரிகளாகப் பதிவு செய்திருக்கிறார்கள். அறிமுக எழுத்தாளர்களையும், அனுபவ இலக்கியவாதிகளையும் ஒரே தளத்தில் நிறுத்தி வண்ணைதெய்வம் இத்தொகுதியை வெற்றிகரமாக வெளிக்கொண்டுவந்துள்ளார். கவிதைகள், கட்டுரைகள், குறிப்புக்கள் என பலவடிவங்களின் வாயிலாகவும் யாழ்ப் பாணத்துப் பிரதேச வரலாற்றுத் தகவல்கள் பதிவாக்கப்பட்டுள்ளன.

பிரதேச வரலாறு பற்றிப் பேசும் நூல்களின் வரிசையில் ஒரு பிரதேசத் தின் வரலாற்று முக்கியத்துவமான அமைவிடம் பற்றிய தனி நூல்களையும் நாம் உள்ளடக்கவேண்டியுள்ளது. ஒரு பிரதேசத்தை முக்கியத்துவமுடைய தாக்கும் அப்பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவமானதொரு இடத்தைப் பற்றி எழுதப்படும் இத்தகைய நூல்களும் பிரதேச வரலாற்று நூல்களே. *களம்பல கண்ட யாழ். கோட்டை: யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு* என்ற நூல், நீலவண்ணன் என்ற புனைபெயரில் செங்கை ஆழியான் க. குணராசா அவர்களால் எழுதப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து அவரது வெளியீட்டக மான கமலம் பதிப்பகத்தின் வாயிலாக 1995 இல் வெளியிடப்பட்டது. இவ்வாய்வின் முதற்பகுதி 8.7.1990 முதல் யாழ்ப்பாணத்தில் முரசொலியில் தொடராக வெளிவந்திருந்தது. மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இத்தொடர் மேலும் விரிவாக்கப்பட்டு முழுநூலாக வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கோட்டையின் உருவாக்கம் முதல் தமிழீழ விடுதலைப் புலிகளால் அது விடுவிக்கப்பட்ட செப்டெம்பர் 26, 1990 வரையிலுமான காலத்திற்குட்பட்ட வரலாற்றை, போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், ஈழயுத்தம்1, ஈழயுத்தம்2 என்ற ஐந்து பகுதிகளில் இந்நூல் பதிவுசெய்கின்றது. (நூலின் அட்டையில் *யாழ்ப்பாணக்கோட்டை வரலாறு* என்று குறிப்பிடப் பட்டுள்ளது).

ஈழத்தில் எழுந்த சில ஆக்க இலக்கியங்களும் பிரதேச வரலாற்றுக் கூறுகளை முதன்மைப்படுத்தி வெளிவந்துள்ளன. கற்பனைகலந்த நாவல்களான போதிலும் அவற்றில் கதை நிகழும் மண் பற்றிய பல வரலாற்றுத் தகவல்கள் உண்மையானவையாக இருக்கின்றன. இதற்குப் பொருத்தமான உதாரணமாக *அந்த நதியும் அதன் மக்களும்...* என்ற நாவலைக் குறிப்பிடலாம். நீர்கொழும்பூர் முத்துலிங்கம் எழுதிய இந்நாவல் அவரது குடும்பத்தினரால் நீர்கொழும்பில் 2005இல் வெளியிடப்பட்டது. நீர்கொழும்பூர் முத்துலிங்கம் 09 ஜனவரி 2000 அன்று சுகவீனம் காரணமாக மறைந்தவர். அவர் மறையும் முன்னர் இறுதியாக எழுதிய இந்நாவல் தினக்குரலில் வாராந்தம் பிரசுரமாகி

வந்த வேளையிலேயே அவரது மரணமும் நிகழ்ந்தது. கதை நிகழும் களம் சிலாபம், சித்தாமடம், மாயவன் ஆற்று மையம் என்பவையாகும். சிலாபத் திலிருந்து புத்தளம் செல்லும் பாதையில் தெதுரு ஓயா என்ற மாயவன் ஆற்றின் ஒரு கரையை எல்லையாகக் கொண்டிருக்கும் சித்தாமடம் என்னும் கிராமமும் அக்கிராமத்து பால்பண்ணையும், அப்பண்ணையோடிணைந்த மக்களும் அப்பிரதேசத்தை ஆட்டிப்படைத்த 1957 பெருவெள்ளமும் நாவலை விறுவிறுப்பாக்கக் காரணமாகின்றன. இதன்வழியாக பின்னாளில் சிங்களமயப்படுத்தப்பட்ட அப்பிரதேசத்தின் தமிழ்ப்பாரம்பரிய வரலாற்றுச் செய்திகளை இந்நாவலும் பொதிந்து வைத்திருப்பதை நாம் அவதானிக்கலாம்.

சில இலக்கியவாதிகள் தான் பிறந்து வளர்ந்த கிராமத்தின் சமூக வர லாற்றையும் தான் வாழ்ந்த காலத்தின் மலரும் நினைவுகளையும் நூல்களாகப் பதிவுசெய்துவைத்திருக்கிறார்கள். நடைச்சித்திரங்களாகவும், கட்டுரைகளாகவும் இவை பதிவிலுள்ளன. பின்னாளில் தமது சந்ததியினர் நூல்வழியாகவேனும் கடந்த காலத்தைக் கற்பனையில் கண்டு ரசிக்கட்டும் என்ற போக்கில் இத்தகைய படைப்புக்கள் எழுதப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. *அந்தக் காலக் கதைகள்* என்ற *நடைச்சித்திரம்* தில்லைச்சிவன் (இயற்பெயர்: தி.சிவசாமி) அவர்களால் எழுதப்பட்டு யாழ்ப்பாணம் மல்லிகைப் பந்தல் வெளியீடாக 1997இல் வெளிவந்தது. சரவணைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தில்லைச் சிவன். மல்லிகை இதழ்களில் 1993களில் அவ்வப்போது பிரசுரமான அவரது விவரணக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்தது. இத்தொகுப்பில் வேலணைத்தீவுச் சைவ இளைஞர் சபை, ஊரிமண்காடு, அன்பு வியாபாரி, தூக்கணாங்குருவி, புளிச்சாதம், எனது பாட்டனார் ஒரு துப்பாக்கி வைத் திருந்தார், பாட்டனார் சொன்ன தோம்புக்கதை, பண்டமாற்று, மாற்றம் வரும்போது, வண்டியின் பின்னால் வந்த பேய், திருமணங்கள் இரண்டு, ஐயனார் கோவில் திருவிழா, உமிரிக்கீரை, மீசை முளைத்தது, அராலிச்சந்தித் தண்ணீர்ப் பந்தல், வலம்புரிச் சங்கு, சித்திரை வெள்ளம், தேர்தல் வந்தது, கவிதை பிறந்த கதை, விசாலாட்சி விசுவநாதர் திருமணம், பாஞ்சாலி, பாட் டனாரின் கதை ஆகிய 22 தலைப்புக்களில் தில்லைச்சிவனின் பார்வையில் தான் வாழ்ந்த மண்ணின் விவரணங்கள் விரிகின்றன.

தாயக மண்ணைப் பிரிந்துவந்த வேதனையில் அதன் நினைவுகளை அழியாது காக்கும் பணியில் புகலிடத்தில் வாழும் எம்மவரும் மேற்குறிப்பிட்ட வகையிலான நடைச்சித்திரங்களை எழுதிவந்துள்ளார்கள். *அந்தக் காலத்து யாழ்ப்பாணம்* என்ற தலைப்பில் இன்று அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் சி.சு. நாகேந்திரன் அவர்கள் அவுஸ்திரேலியாவில் சிட்னி மாநிலத்

தில் இயங்கும் அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் காலாண்டு வெளியீடான கலப்பை காலாண்டிதழில் முதியோன் என்ற புனைபெயரில் தொடராக இதனை எழுதிவந்தார். இக் கட்டுரைத்தொடரின் நூல்வடிவமே தனிநூலாக 2004 இல் வெளிவந்தது. 1920களிலிருந்து படிப்படியாக மாறி வந்த யாழ்ப்பாணத்துச் சமூகவாழ்க்கை முறையை, உள்ளது உள்ளபடி காய்தல் உவத்தலின்றி சி.சு.நாகேந்திரனின் கட்டுரைகள் வழங்குகின்றன.

ஒரு பிரதேச வரலாற்றை நாம் அறிந்துகொள்ள உதவும் வழிகளுள் இடப்பெயர் ஆய்வுகளும் முக்கியமானவை என ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந் தோம். ஈழத்தின் இடப்பெயர் ஆய்வு தொடர்பாகத் தீவிர ஈடுபாட்டுடன் இயங்கியவர் தற்போது கனடாவில் வாழும் கலாநிதி இ.பாலசுந்தரம். அவரது *இடப்பெயர் ஆய்வு: காங்கேசன் கல்வி வட்டாரம்* என்ற நூல் இளவாலை: பண்டிதர் அப்புத்துரை மணிவிழாக்குழுவினால் 1988 இல் வெளிவந்திருந்தது. நீர்நிலைப்பெயர், நிலவியல்பு, நிலப்பயன்பாட்டு நிலை, குடியிருப்பு நிலை, ஊராட்சி நிலை, தாவரப்பெயர், சிறப்பு நிலைப்பெயர் ஆகிய தலைப்புக்களின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட, காங்கேசன் கல்விவட்டார எல்லைக்குள் அமைந்துள்ள இடங்களின் பெயர்கள் இந்நூலில்ஆய்வு செய்யப்பட்டிருந்தன. *இலங்கை இடப்பெயர் ஆய்வு 2: வடமராட்சி, தென்மராட்சி* என்ற மற்றொரு நூல் புலோலி, வல்லிபுரம் இந்து கல்வி கலாச்சார மன்ற வெளியீடாக, 1989 இல் வெளிவந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வடகரையிலே தொண்டைமானாறு பிரிக்கும் வடபகுதியும், அதனோடு இணைந்த வடகிழக்குப்பகுதியும், தென்பகுதியும் வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களாகும். இப்பிரதேசத்து இடப்பெயர்களின் ஆய்வு ஒன்பது இயல்களில் விரிவாக இந்நூலில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கண்ட இரு நூல்கள் தந்த விடயங்களையும் பிற ஆய்வுகளையும் உள்ளடக்கியதாக, பின்னாளில், *ஈழத்து இடப்பெயர் ஆய்வு: யாழ்ப்பாண மாவட்டம்*. என்றவொரு நூல் கனடா, தமிழர் செந்தாமரை வெளியீட்டக வெளியீடாக 2002 இல் வெளிவந்திருந்தது.

பிரதேச வரலாற்றுக் கூறுகள் பயண இலக்கியங்களுக்குள்ளும் பொதிந்து கிடக்கின்றனவாயினும், அவை ஒரு பிரதேசத்தின் வரலாற்றை, வாழ்க்கை முறைகளை அந்நியப்பார்வை கொண்டு பார்த்து வியக்கும் அல்லது பெரு மிதம் கொள்ளும் பாங்குடையவையாகும். இலங்கையில் தமிழர்களின் வரலாறுகளை நாம் ஆதாரபூர்வமாக நிரூபிக்க இன்றும் சீன யாத்திரீகர்களினதும், ஐரோப்பியரினதும் கீழைத்தேய மேலைத்தேய பயணிகளின் நாட்குறிப்பு களிலும் இருந்தும் ஆதாரங்களைத் தேடி வந்திருக்கிறோம் என்ற வகையில்

எமது மண்ணின் பிரதேச வரலாற்றை ஆராய்வதற்கு இத்தகைய வரலாற்றா தாரங்களும் முக்கியமாகும். இதற்குச் சுவையான ஆதாரமொன்றைக் குறிப்பிடலாம்.

நியூசிலந்தில் தமிழன் பதித்த சுவடுகள் என்ற நூல் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் பிறந்தஆ.தா.ஆறுமுகம் அவர்களால் எழுதப்பட்டு நியுசிலாந்து வெலிங்ரன் தமிழ்ச் சங்க வெளியீடாக 2007இல் வெளிவந்தது. தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் 1985இல் மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் அதிபராகவிருந்து ஓய்வுபெற்றவர். தற்போது நியுசிலாந்தில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். நியூசிலாந்தின் வெலிங்டன் தொல்பொருளகத் தில் (Museum) காட்சிப்படுத்தப்பட்டுள்ள தமிழ் எழுத்துக்கள் பொறித்த மணியைப் பற்றிய விரிவான ஆய்வு இதுவாகும். Tamil Bell என்ற பெயரில் இவ்வரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த மணி ''முகையயதினவககுசுஉடையகபலஉடையமணி'' என்று புடைப்பு (Emboss) எழுத்துடன் வார்க்கப்பட்டுள்ளது. இது தமிழரின் கடற்பிரயாணம் 15ம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதையும், இம்மணிக்கும், இங்கு புதையுண்டுள்ள ஒரு மரக்கலத்திற்கும், Christchurch என்ற பகுதியிலுள்ள குகை ஓவியங்களுக்கும் தொடர்புள்ளதாகவும் இவர் தன் ஆய்வின்மூலம் வெளிப்படுத்த முனைகின்றார்.

மேற்கண்ட நூலுடன் *வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்* என்ற தலைப்பில் ஈ.கே. ராஜகோபால் (இயற்பெயர்: இளையதம்பி குமாரசாமி ராஜகோபால்) எழுதி யாழ்ப்பாணம், கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் அமைப்பினால் 1984 இல் வெளியிடப்பட்ட மற்றுமொரு நூலையும் குறிப்பிடவேண்டும். 1930ம் ஆண்டளவில் இலங்கை வடபுலத்தின் கரையோரப்பகுதியான வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வின் குளொசெஸ்டர் துறைமுகத்துக்குச் சென்றடைந்த அன்னபூரணி கப்பலின் பிரயாண வரலாறு இந்நூலாகும். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று நேரடித் தொடர்பற்ற நூல்கள். ஆனாலும், மேற்சொன்ன இவ்விரு நூல்களும் வல் வெட்டித்துறை மண்ணின் கப்பல் கட்டும் தொழிலின் வரலாற்றுப் பெருமையை தொடர்புபடுத்துவதால், பிரதேச வரலாற்றாய்வாளர்களுக்கு முக்கியமான நூல்களாகக் கருதப்படலாம்.

ஒரு பிரதேச வரலாற்றை எழுதப்புகும் ஒருவர் நிச்சயமாக அந்த மண்ணின் மைந்தனாக இருக்கவேண்டியது கட்டாயமல்ல. ஆயினும் அத்தகையதொரு மண்ணின் மைந்தனால் எழுதப்படும் பிரதேச வரலாறுகள் அதிக உள்வீட்டுத் தகவல்களைத் தரும் என்ற வகையில் ஆழமானதாக

அமைய வாய்ப்புள்ளது. அதே வேளையில், தாய்மண் பற்றிய அவரது பார்வை உணர்வுபுர்வமாக அமைந்து சமநிலை தவறிவிடும் ஆபத்தும் உள்ளது என்பதையும் மனதில் கொள்ள வேண்டியுள்ளது.

இன்று எமது பாரம்பரிய பிரதேசங்கள் சிங்களக் குடியேற்றங்களாலும், இராணுவக் குடியிருப்புகளாலும் கையகப்படுத்தப்பட்டு பாரம்பரியமாக வழங்கிவந்த ஊர்ப்பெயர்களே மாற்றம் கண்டுவருகின்றன. புவியியல்ரீதியான குடித்தொகைப் பரம்பல்கள் திட்டமிட்டவகையில் படிப்படியாக மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. எம் கண்முன்னேயே கையறு நிலையில் இவை அரங்கேறுகின்றன. இந்நிலையில் எமது பாரம்பரியப் பிரதேசங்களின் வரலாறுகள் எதிர்காலச் சந்ததியினருக்காக பதிவுசெய்யப்படவேண்டிய தேவை அழுத்தமாக உணரப்பட்டு வருகின்றது. அதன் ஒரு புலப்பாடே அதிக அளவில் பிரதேச வரலாற்று நூல்களின் அண்மைக்கால வருகையாகும். ஈழத்தில் எழுந்த பிரதேச வரலாற்று நூல்கள் பற்றிய விரிவான தேடலொன்றை மேற்கொண்டு வரும் நிலையில் அவை பற்றிய ஆய்வை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் பரந்த அடிப்படையில் தமது தேடலை விரிவாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்புடையவர்களாக உள்ளனர். அவர்களுக்கு உதவும் தேடற் புலங்களை அடையாளம் காட்டுவதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

(தமிழர் தகவல் (கனடா), பெப்ரவரி 2014: பக்கம் 56-60)

11

அண்மைக் காலத்தில் வெளிவந்த ஈழத்தவரின் சில மொழிபெயர்ப்பு நாடக நூல்கள்

அண்மைக்காலத்தில் இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த நான்கு நாடக இலக்கியநூல்கள் பற்றிய தகவலைப் பகிர்வது இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையின் அரங்கியல்துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அறியப்பட்டவர் ஏனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர் (26.9.1934-). இவர் 1961-1967 காலகட்டத்தில் இலங்கை விமானப்படையில் பணியாற்றிய காலங்களிலிருந்து ஆங்கில நாடகங்களை எழுதி மேடையேற்றுவதில் ஆர்வம் கொண்டிருந்தவர். He still comes from Jaffna, Rasanayagam's last Riot போன்ற நாடகங்களை நாடகப் பிரியர்கள் மறந்திருக்கமாட்டார்கள். 1968-69 கால கட்டத்தில் கொழும்பு அக்வைனாஸ் பல்கலைக்கழகக் கல்லூரியின் நாடகத் துறையின் இயக்குநராகப் பணியாற்றிய குறுகியகாலத்திலும் அங்கு அவர் ஆற்றிய நாடகத்துறைக்கான பணி விதந்து போற்றப்பட்டது. பின்னர் 1969-1973 வரையிலான காலத்தில் யுனெஸ்கோவின் வேலைத்திட்ட அதிகாரியாக இவர் பணியாற்றியபோது Stage and Set என்ற பெயரிலான நாடகக் குழுவொன்றை அமைத்து சர்வதேச ரீதியில் நாடகங்களை எழுதி மேடையேற்றத் தலைப்பட்டார். இவரது நாடகப்பணி 1973இல் இவர் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்குச் சென்றதன் பின்னரும் தொடர்ந்தது.

ஏனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர் எழுதிய ஐராங்கனி நாடகம் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு *ஐராங்கனி என்ற சிறிலங்காவின் அன்ரிகனி: நமது காலத்தின் ஒரு துன்பியல் நாடகம்* என்ற தலைப்பில் சென்னை மித்ர பிரசுராலயத்தினால் (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஜக்கரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு) நவம்பர் 2012இல் புகைப்படங்கள் சகிதம் வெளிவந்திருக்கிறது. (ISBN: 978-93-81322-08-6).

சோஃபகிள்ஸ் எழுதிய அன்ரிகனி என்ற கிரேக்க நாடகத்தின் பாதிப்பில் சமகால இலங்கையை வைத்து எழுதப்பட்ட நாடகம் இதுவாகும். ஐராங்கனி ஜெயவீரவும், அவளது சகோதரன் ரொபர்ட்டும் மோட்டார் சைக்கிள் விபத் தொன்றில் தமது பெற்றோரை இழந்து பௌதிகவியல் விரிவுரையாளரும் தாய்மாமனுமான சிதார்த் ராஜகருணவினால் வளர்க்கப்படுகிறார்கள். ராஜ கருண பின்னாளில் சிறீலங்காவின் ஜனாதிபதியாகிறார். இவ்விருவரும் ஜே.வி.பி. கிளர்ச்சியாளருடன் தொடர்புபடுகின்றனர். கிளர்ச்சியின் உச்ச கட்டத்தில் ரொபர்ட் பொலிசாரினால் கொல்லப்படுகிறான். அவனது பிணமும் அக்காலத்தில் வழக்கிலிருந்த அதாவது, 1983 ஜுன் 4ம் திகதி அமுலுக்கு வந்த சட்டத்தின் பிரகாரம் உரிய கௌரவமின்றி துரோகிகளாக்கப்பட்டு குவியல்களாக எரிக்கப்படத் தயாராகின்றது. இந்நிலையில் சகோதரனின் உடலை உரிய மரியாதையுடன் அடக்கம்செய்யவேண்டுமென ஐராங்கனி வளர்ப்புத் தந்தையான ஜனாதிபதியுடன் வாதிடுகின்றாள். ஜனாதிபதி மந்திரி சபைக் கூட்டத்திற்கு சென்றுவருவதாகக் கூறிச் சென்றவர் இடைநடுவில் தற்கொலை குண்டுதாரியினால் நடுத்தெருவில் கொல்லப்படுகிறார். ஜே.வீ.பீ. மற்றும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் ஆகிய இரண்டு வரலாற்றுச் சம்பவங்களுக்கிடையே நாடகம் உரையாடல்களினூடாக நடத்திச் செல்லப் படுகின்றது. ஏனெஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர் தமது தமிழுணர்வினைச் சமரசஞ் செய்யாத கலைஞர். மனிதநேயம் போற்றும் ஈழத் தமிழர். கிரேக்க நாடக மரபையும், நாட்டிய சாத்திரத்தையும் உள்வாங்கி, உலகின் தலை சிறந்த நாடக மேதைகளான இங்கிலாந்தின் ஷேக்ஸ்பியர், அமெரிக்காவின் ஹென்றி மில்லர், ஐரோப்பாவின் பிரெக்ட் போன்றோருடைய பாணிகள் அனைத்தையும் ஒருசேர இலங்கையர் சுவைப்புக்கு முன்வைத்த நாடகமேதை. இதனை இந்நாடகத்தில் தெளிவாக மீள்பதிவுசெய்திருக்கிறார்.

Akinwande Oluwole Soyinka (13.7.1934-) நைஜீரியாவின் ஓகுன் மாநிலத் தில் பிறந்தவர். வோலோ ஸொயின்கா Wole Soyinka என்று பரவலாக இலக்கிய உலகில் அறியப்பெற்ற இவர் சிறந்த கவிஞரும் நாவலாசிரியரும் நாடகாசிரியருமாவார். 1986 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்றவர். முதன்முதலாக இலக்கியத்துக்கான நோபல் பரிசினை வென்ற ஆபிரிக்கர் என்ற பெருமையை இதன்மூலம் நைஜீரியரான Wole Soyinka பெற்றுக்கொண்டார். இவரது ஆபிரிக்க நாடகநூலே *மரணமும் மன்னனின் குதிரை வீரனும்* என்பதாகும். இந்நூலை தமிழகத்தில் வாழும் ஈழத்துப் படைப்பாளி எஸ்பொ அவர்கள் அண்மையில் தமிழாக்கம் செய்து தனது

பதிப்பகத்தின் வாயிலாக, மித்ர வெளியீடாக செப்டெம்பர் 2012 இல் வெளியிட்டிருக்கிறார். (ISBN: 978-93-81322-07-9).

மித்ர வெளியீட்டு வரிசையில், ''*தடம் பதித்த ஆபிரிக்க இலக்கியங்கள்*'' என்ற தொடரில் வெளிவந்துள்ள நைஜீரிய மொழிபெயர்ப்பு நாடகமான இந்நூல், வோலோ ஸொயின்கா எழுதிய Death and the King's Horseman என்ற நாடக எழுத்துருவின் தமிழாக்கமாகும். 1945ல் நைஜீரியாவில் நடந்த உண்மை நிகழ்வின் பாதிப்பில் உருவாகிய நாடகம் இது. நைஜீரியாவின் பழைய யொருபா நகரமான ஓயொவின் அலாஃபின் மன்னன் ஒபாசியன் போலா 33 ஆண்டுகள் ஆட்சிசெய்தபின் இறக்கிறான். அவனுடைய குதிரைவீரன் ஓலொரி எலெசின் விசேஷ வசதிகளுடன் வாழ்ந்தவன். ஓயோவின் மக்கள் அவன் தற்கொலைச் சடங்கைச் செய்து முடித்து, தன் எஜமானின் வழியில் பின்தொடர்வான் என்று எதிர்பார்க்கின்றனர். சுமார் மூன்றுவார காலம் கழித்து, அவன் ஓயோவுக்குத் திரும்பிவந்து, பாரம்பரியத் தற்கொலைச் செயலுக்கு முன்பாக வெள்ளை ஆடை புனையும் சடங்கிலே நடனமாடிக்கொண்டே போகிறான். ஓயோவின் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த பிரித்தானிய மாவட்ட கொலொனியல் அதிகாரி, அந்தக் குதிரைவீரனின் தற்கொலையைத் தடுக்கவேண்டும் என்று கட்டளையிடுகிறான். தன் தந்தை கைதுசெய்யப்பட்ட செய்தியை அறிந்த குதிரைவீரனின் கடைசி மகன் துரானா, தந்தைக்குப் பதிலாகத் தன் உயிரை மாய்த்து, சடங்கின் தேவையைப் பூர்த்திசெய்கிறான். நைஜீரியக் கலாச்சாரப் பின்னணியில் இந்நாடகத்தை விளங்கிக்கொள்ள, பெரிய தலைவன் அல்லது பெரிய போர்வீரன் என்பவன் மிகவும் சக்திவாய்ந்த மூதாதையராக இருப்பார் என்பதை அறிதல் முக்கிய மானது. மதிப்பையும் மரியாதையையும் இழக்கும் ஒருவர் வெறுக்கப்பட்டு எதற்கும் தகுதியற்ற மூதாதையர் ஆகிவிடுவார் என்பதும் பெறப்படும். எகுன்குன் சடங்குகளின்போது மூதாதையரை மறுபடியும் உயிரூட்டித் திரும்பக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை யொருபாக்கள் மத்தியில் உண்டு. 1995 செப்டெம்பர் 17ம் திகதி இந்நாடகம் பீ.பீ.சீ ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டவேளை அதனை நெறியாழ்கை செய்த அல்பி ஜேம்ஸ் கண்ட வோலோ ஸொயின்காவுடனான நேர்காணலும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. இந்நாடக நூலின் வழியாக எஸ்பொ அவர்கள் நாடகத்தை மாத்திரமல்லாது, அந்நாடகத்தின் பாத்திரங்களின், கதைக்களத்தின், சமூகப் பின்னணியையும் ஆங்காங்கே வழங்கி வாசிப்பினை எளிதாக்கியிருக்கிறார். ஆபிரிக்க தேசங்களில் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம் இந்நூலில் இவருக்குக் கைகொடுத்திருக்கிறது.

அமெரிக்கரான ரெனெஸ்ஸி வில்லியம்ஸ் Thomas Lanier Williams III (26.3.1911-25.2.1983) ஐக்கிய அமெரிக்காவின் மிசிசிப்பி மாநிலத்தில் பிறந்தவர். சிறந்த நாடகாசிரியரான இவர் சந்தோஷமற்ற தன் சொந்த வாழ்க்கையின் பாதிப்பில் எழுதிய கண்ணாடி வார்ப்புக்கள் The Glass Menagerie என்ற நாடகம் 1944 இல் இவரை புகழின் உச்சத்திற்குச் சடுதியாகக் கொண்டுசென்று சேர்த்தது. A street car named Desire, Cat on a Hot Tin Roof, Orpheus Descending, Sweet Bird of Youth என்று மேலும் பல நாடகங்களை இவர் எழுதி வெற்றிகரமாக மேடையேற்றியபோதிலும் ரெனெஸ்ஸி வில்லியம்ஸ்ஸின் பெயரை உலக மொழிகளில் அறிய வைத்தது கண்ணாடி வார்ப்புகளாகும். இந்நாடகம் இலங்கையின் நாடகத்துறை முன்னோடிகளில் ஒருவரான க.பாலேந்திரா அவர்களாலும் அவரது குழுவினராலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கைக் கையாண்டு 09.06.1978 இல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் முதலில் மேடையேற்றம் கண்டது. அன்றுமுதல் இந்நாடகம் பிரசித்திபெற்று இன்றளவில் அதன் மொழிபெயர்ப்புக்காகவும், பாத்திர வார்ப்புக்காகவும் அரங்கியல் மாணவர்களால் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது. இலங்கையில் மட்டுமல்லாது, லண்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் பல தடவைகள் மேடையேற்றம் கண்ட இந்நாடகம், அண்மையில் மீண்டும் ஈழத்து நாடகப்பிரியர்களுக்காக இலங்கையில் 2013 இல் மேடையேற்றம் கண்டுள்ளது. அந்த நாடகத்தின் நூலுருவே *கண்ணாடி வார்ப்புகள்: நாடகம்* என்ற பெயரில் நிர்மலா நித்தியானந்தன், மல்லிகா ராஜரட்ணம், க.பாலேந்திரா ஆகியோரின் கூட்டுத் தமிழாக்கத்தில் கொழும்பு குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடாக 2013 இல் வெளிவந்துள்ளது. (ISBN: 978-955-659-401-0). எமக்குச் சொந்தமான பாத்திரங்கள், எமது வாழ்க்கை அனுபவங்கள் ஆகியவை நாடகத்திலும் பிரதிபலித்ததால் அமெரிக்க நாடகமானாலும் பரிச்சயமான அனுபவத்தை இந்நாடகம் தமிழ்ப் பார்வையாளருக்கு வழங்கிவந்துள்ளது.

ஹென்றிக் இப்சன் Henrik Johan Ibsen (20.3.1828-23.5.1906) ஒரு நோர்வேஜிய நாடகாசிரியர். 19ஆம் நூற்றாண்டின் பிரபல்யமான நாடகாசிரியராகவும் கவிஞராகவும் வாழ்ந்து மறைந்தவர். A Doll's House (1879), Ghosts (1881), An Enemy of the People (1882), The Wild Duck (1884), Hedda Gabler(1890) ஆகிய பிரபல்யமான நாடகங்களை எழுதி மேடையேற்றியவர். ஹென்றிக் இப்சன் அவர்கள் 1879 இல் இத்தாலியில் வாழும்போது எழுதிய பொம்மை வீடு (A Doll House) என்ற நாடகத்தின் தமிழ் வடிவம் *பெண் பாவை* என்ற தலைப்பில் அண்மையில் நூலுருவாகியுள்ளது. காசிநாதர்

சிவபாலன் அவர்களின் தமிழாக்கத்தில் உருவாக்கப்பட்ட இந்நாடகநூல், சென்னை மித்ர பதிப்பகத்தின் வாயிலாக மார்ச் 2013இல் வெளியிடப் பெற்றுள்ளது. (ISBN: 978-93-81322-15-4).

ஆணாதிக்கச் சூழலில் நோரா என்ற பெண்ணை அவரது கணவன் ஒரு பாவையாக - பண்டமாகக் காண்பது கதையின் அடிநாதம். இந்நாடகத்தில் இப்சன் அன்றாடம் தான் காணும் அசாதாரணமான மனிதர்கள் பற்றி பாரம் பரிய துன்பியல் முறையில் தலைப்புகளையும் கட்டமைப்பையும் பயன்படுத்தி இந்நாடகத்தை ஆக்கியிருக்கிறார். ஐரோப்பாவில் பெண்ணுரிமை இயக்கம் வேகம்பெறக் காரணமாக இந்நாடகம் அமைந்திருந்தது. இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 60களிலேயே வேர்ணன் அபேசேகரா என்ற அரச அதிபரின் ஆதரவுடன் எழுத்தாளர் தேவன் - யாழ்ப்பாணம், இதனை நாடகமாக்கியிருக்கிறார். அத்தகைய முக்கியத்துவம் பெற்ற ஒரு நாடகத்தின் மீள் அறிமுகம் இது. நோர்வேயில் சட்டத்தரணியாகத் தொழில்புரியும் கா. சிவபாலன் திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அனைத் துலக உறவுகள் துறையில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். இலங்கையில் சட்டவாளராகவும் (Attorney - at-Law), இங்கிலாந்தில் சொலி சிட்டராகவும், அவுஸ்திரேலியாவில் பாரிஸ்டராகவும் சட்டத்துறையில் உயர்ந்தவர்.

(வீரகேசரி வாரமலர், 24.5.2014, 31.5.2014.
ஞானம், நவம்பர் 2014: பக்கம் 37-40)

12

ஈழமண்ணில் இந்திய இராணுவம்

நூல்வழிப் பதிவுகள் பற்றியதொரு தேடல்

அறிமுகம்

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987 ஜூலை 29இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும்- இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. அதன் அடிப்படையில் இலங்கையில் சமாதானத்தை நிலைநிறுத்தவென அமைதிகாக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் ஜூலை 1987இல் எமது தாயகத்துக்குள் புகுந்து நிலை கொண்டது. முகம் மலர, மங்கள வாத்தியம் முழங்க, தளபதிகளின் நெற்றியில் திலகமிட்டு இந்திய அமைதிப்படையை எம்மவர்கள் ஈழத்தமிழ் மண்ணில் வரவேற்றார்கள். அதன்பின்னர் அமைதிப்படை - இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமாகி எமது அமைதியையே குலைத்த வரலாறு என்றுமே ஈழத்தமிழர் மனதை விட்டு அழியப்போவதில்லை. இரு நாடுகளிலும் தொடர்ந்த தேர்தல் களினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் காய் நகர்த்தல்களினால் இந்தியாவில் வி.பி.சிங்கும், இலங்கையில் ஆர். பிரேமதாசாவும் அரசியல் தலைமைத்து வத்தைப் பொறுப்பேற்றனர். அதன்பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையின் மாற்றத்தால், 1989 தொடங்கி, படிப்படியாக இந்திய இராணுவம் இலங்கையி லிருந்து வெளியேறியது. மார்ச் 1990 இல் இறுதி இராணுவ அணி இலங் கையைவிட்டு வெளியேறிச் சென்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், அதற்கான தேவையையும் இராணுவ ஆக்கிரமிப்புக் காலகட்ட நடவடிக்கைகளையும் விரிவாக ஒரு பக்கச் சார்பாகப் பதிவுசெய்யும் நடைமுறை வெற்றிகரமாக இந்திய அர சினதும், இந்திய இராணுவத்தினதும் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அக்காலகட்டத்தில் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத் தளபதிகளான லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர்சிங் Lieutenant General Depinder Singh மேஜர் ஜெனரல் ஹார்கிரத்சிங் Major General Harkirat Singh, லெப்டினன்ட் ஜெனரல் சர்தேஷ் பாண்டே Lieutenant General S.C. Sardeshpande மற்றும்

லெப்டினன்ட் ஜெனரல் ஏ.ஆர்.கல்கட் Lieutenant General A.R. Kalkat ஆகியோரின் பார்வையிலும் பிற இராணுவ ஆய்வாளர்கள், புலனாய்வு அதிகாரிகளின் பார்வையிலும் அவ்வப்போது ஆங்கில மொழியில் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்து இந்திய ஆக்கிரமிப்பாளரின் பார்வையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது போரின் நியாயத்தன்மைபற்றி விரிவாகவே பேசப்பட்டிருந்தது.

ஈழத்தமிழர்களின் சார்பில், அவர்களது இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் இடையேநின்று மாற்றுப் பார்வையை இந்திய அரசியலாளர்களுக்கு தமிழ் தவிர்ந்த பிற மொழிகளில் போதிய அளவில் வழங்கப்படவில்லை என்பது பொதுவான நிலைப்பாடாகும். இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் உயிர் இழந்து, உடைமைகள் இழந்து, கதியற்றுப்போன ஈழத்துக் குடும்பங்கள் பல. அவர்களின் பார்வையில் இந்த ஆக்கிரமிப்பு வரலாற்றைப் பதிவுசெய்ய முன்வந்தவை- ஈழத்துப் படைப்பாளிகளினதும் இளம் போராளிகளினதும் ஆக்க இலக்கியப் படைப்புகளும், துணிச்சலும் அறிவும் கொண்ட ஒரு சில புத்திஜீவிகளின் ஆய்வுக்கட்டுரைகளுமே. ஆக்க இலக்கியத்துறையில் கவிதைகளாகவும், கதைகளாகவும் பத்திரிகைகளில் அக்காலகட்டத்தில் வெளியாகிய பல படைப்புக்களில் ஒருசிறு பகுதியே பின்னாளில் நூலுருவில் நிலைகொண்டன. எஞ்சியவை கவனிப்பாரற்று சிற்றிலக்கிய ஏடுகளிலும், வாரப் பத்திரிகைகளினுள்ளும் முடங்கிவிட்டன. ஈழத்தமிழரின் அந்த அவலம் நிறைந்த வாழ்வின் கொடுமையால், தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து அயல்நாடுகளுக்கு அகதியாகச் சென்றோர் ஏராளம். இந்திய இராணுவம் ஏற்படுத்திய ஆறாத வடுக்களைச் சுமந்து கொண்டு எம்மவரில் பலர் இன்றும் அந்தக் காயங்களின் வலிகளுடனும் வடுக்களுடனும் தாயகத்திலும் புகலிடத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்திய அமைதிப்படையின் வரவை வரலாற்றுப்பதிவாக்கிய சில ஈழத்துப் பிரசுரங்கள் பற்றிய விரிவானதொரு ஆய்வே இக்கட்டுரையாகும். முடிந்தவரையில் முழுமையை நோக்கியதொரு தேடலாக இக்கட்டுரை அமைந்துள்ள போதிலும், என்னை வந்தடையாத நான் அறிந்துகொள்ளாத இன்னும் சில படைப்புக்களும் இருக்கக்கூடும்.

ஆக்கிரமிப்புக்கு முன்னைய எதிர்வுகூறல்கள்

இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் இருந்த சூழலில், பின்னைய பாதக நிலைமைகள் பற்றிய எதிர்வுகூறல்களை ஒருசிலர் முன்வைத்திருந்தனர்.

இந்துசமுத்திரப் பிராந்தியமும் இலங்கை இனப்பிரச்சினையும் என்ற நூல் உதயன் (மு. திருநாவுக்கரசு), விஜயன் (இ. ஜெயராஜா) ஆகிய இரு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளால் இணைந்து மார்ச் 1987இல் (இந்திய இராணுவம் ஜூலையில் உள்நுழைவதற்கு முன்பாக) யாழ்ப்பாணத்திலிருந்து எழுதப்பட்டிருந்தது. இந்நூல் பின்னாளில் சென்னை ரோசா லக்சம்பேர்க் படிப்பு வட்டத்தினரால் மார்ச் 1988 இல் மீள்பிரசுரமாக தமிழகத்திலும் வெளியிடப்பட்டது. சர்வதேச உறவு, இந்துசமுத்திரப் பிராந்தியமும் வல்லரசுகளும், இந்து சமுத்திரப் பிராந்தியமும் இந்தியாவும், தென்னாசியப் பிராந்தியமும் இந்தியாவும், இந்தியாவும் இலங்கைப் பிரச்சினையும், தமிழீழ விடுதலைப் போராட்டமும் வெளிநாடுகளின் நிலையும் ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பின்னணியில் இலங்கையின் இனப்பிரச்சினை ஆராயப்பட்டிருந்தது. இந்திய நிலைப்பாட்டின் நல்லதொரு எதிர்வுகூறலாக இந்நூல் இன்றளவில் கருதப்படுகின்றது.

யாருக்காக இந்த ஒப்பந்தம்? என்ற மற்றொரு நூலும் இதே கால கட்டத்தில் மு.திருநாவுக்கரசுவினால் உதயன் என்ற புனைபெயரில் எழுதப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்டது. ஆகஸ்ட், 1987 வரை 3 பதிப்புகளை குறுகியகாலத்தில் கண்ட பிரபல்யமான சிறுநூல் இது. ஜே. ஆர். ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திடும் தறுவாயில் அதன் பின்னணியில் மறைந்திருந்த தமிழர்களுக்கு எதிரானதும் தீங்கானதுமான அம்சங்களை வெளிப்படுத்துமுகமாக இந்நூல் எழுதப்பட்டிருந்தது.

விடுதலை இயக்கங்களின் நிலைப்பாடு

இந்திய அமைதிகாக்கும்படை இலங்கை மண்ணில் இயங்கும் தீர்மானம் தொடர்பாக ஒரு சில விடுதலை இயக்கங்களின் கருத்துக்கள் அக்காலகட்டத்தில் நூலுருவில் வெளிவந்திருந்தன. அவ்வகையில் ஜூலை இருபத்தொன்பது உடன்பாடும் எமது நிலையும் என்ற தலைப்பில் ஈழப்புரட்சி அமைப்பு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பிரசுரத்தினை வெளியிட்டிருந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பான ஈரோஸ் அமைப்பின் கருத்துக்களும் அது பற்றி வெளிவந்த பத்திரிகைக் குறிப்புக்களினது தொகுப்புகளுமாக இந்நூல் அமைந்திருந்தது.

இந்திய இராணுவத்தின் முக்கிய எதிரியாகக் கருதப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரின் ஒப்பந்தம் சார்ந்த கருத்துக்கள் *இந்திய - இலங்கை ஒப்பந்தம்: விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு* என்ற தலைப்பில் அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியிடப்பட்டது. வெளியிட்ட ஆண்டு குறிப்

பிடப்படாத போதிலும், இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் வெளியிடப்பட்ட முதலாவது அறிக்கை இதுவாகும். இந்திய அரசு தனது தேசிய, பூகோள நலன்களைக் கருதியே இந்த ஒப்பந்தத்தினைச் செய்திருக்கிறது என்று குறிப்பிடும் இந்நூல், தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணித்து, அவர்களது நியாயபூர்வமான அரசியல் கோரிக்கைகளை உதாசீனம் செய்து இந்திய அரசு இவ்வொப்பந்தத்தில் தனது பூகோள நலன்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அந்நூல் குற்றஞ்சாட்டியுள்ளது.

பின்னாளில் சமாதானப்படை முற்றுமுழுதான தாக்கியழிக்கும் படை என்ற நிலைக்கு வந்த வேளையில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மீண்டும் ஒரு பிரசுரத்தின்மூலம் பதிவுசெய்திருந்தார்கள். *இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சினையும்: சில உண்மை விளக்கங்கள்* என்ற தலைப்பில் அது டிசம்பர் 1987 இல் வெளிவந்திருந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படைக் குறைபாடுகளும், இந்திய அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே எழுந்த முரண்பாடுகளும் அதற்கான மூலகாரணமும், இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போராடத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமும் இந்நூலில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

இலங்கையின் இனப்போராட்டமும் இந்திய-இலங்கை ஒப்பந்தமும் என்ற தலைப்புடன் தமிழ்ஈழ மக்கள் மன்றம் யாழ்ப்பாணத்திலிருந்து 1988 இல் விரிவான நூலொன்றை வெளியிட்டிருந்தது. இந்நூலின் முதற்பகுதி இலங்கை இனப்பிரச்சினை பற்றிய வரலாற்றுக் குறிப்பினையும் இரண்டாம் பகுதி 1987 ஜூலை 29 இல் கைச்சாத்தாகிய இலங்கை-இந்திய உடன்படிக்கையையும் அது தொடர்பான விமர்சனங்களையும் உள்ளடக்கியிருந்தது.

புத்திஜீவிகளின் நிலைப்பாடு

விடுதலை இயக்கங்களின் நிலைப்பாடுகளுக்கு ஈடாக ஒரு சில புத்திஜீவிகளும் சமூக விழிப்புணர்வுநோக்குடன் தமது கருத்துக்களை நூலுருவில் பதிவுசெய்யத் தலைப்பட்டனர். துர்அதிர்ஷ்டவசமாக, ஈழத்து அறிவுஜீவிகள் இந்திய இலங்கை உடன்படிக்கை பற்றி முழு நூலாக அக்காலப்பகுதியில் எழுதும் சூழல் இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக தேசியப் பத்திரிகைகளில் கட்டுரைகளாக எழுதியிருந்தபோதிலும், நூலுருவில் அவை தொகுக்கப்படவில்லை. அவ்வகையில் இமயவரம்பனின் *இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும்* என்ற நூல் இங்கு குறிப்பிடத்தக்கது. சென்னையிலிருந்து புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், ஜூன் 1988இல் வெளியிட்ட இந்நூலில் இந்நூலில் 3 கட்டுரைகளும் இரு

பின்னிணைப்புக்களும் இடம்பெற்றுள்ளன. இவை செம்பதாகை, புதியபூமி ஆகியவற்றில் வெளிவந்தவை. அதில் சமாதானமும் ஒப்பந்தமும் என்ற கட்டுரை இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகும்.

தமிழகத்தவரான சாலய் இளந்திரயன் எழுதிய இந்தியம், ஈழம், நக்சலியம் என்ற நூலைப்பற்றியும் குறிப்பிடுவது நல்லது. சென்னையிலிருந்து மே 1989 இல் இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. தமிழகத்தில் வீரநடை அறிவியக்கம் மாத இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந் நூலாகும். இந்தியம், ஈழம், நக்சலியம் ஆகிய மூன்று பிரிவுகளில் இதிலுள்ள 18 கட்டுரைகளும் பகுக்கப்பட்டுள்ளன. ஈழம் என்ற பிரிவில் ஈழத்தமிழர் பிரச்சினையை இந்திரைமகன் தீர்ப்பாரோ? ஈழத்தமிழர் பிரச்சினை வெறும் சோற்றுப் பிரச்சினையா? தமிழனின் முதுகிலே மீண்டும் ஒரு குத்து, இது தானா ஐயா ஈழத்தமிழருக்கு ஆதரவு? பின்னணி தெரியாமல் பேரம் பேசுவதா? யார் தேசப் பக்தர்கள்-யார் தேசத் துரோகிகள்? இந்தியா நடத்தி வைத்த ஒரு ஜிகினா நாடகம் ஆகிய ஏழு கட்டுரைகள் இந்திய இராணுவத் தின் செயற்பாடுகளின் அரசியல் பின்னணியை தமிழகத்துக்கு தோலுரித்துக் காட்டுவதாக அமைந்திருந்தன.

இந்திய இராணுவத்தின் இருப்பிற்கான ஆதரவுக் குரல்கள்

விடுதலைப்புலிகளின் ஆக்கிரமிப்பு இராணுவ எதிர்ப்புணர்வும், இந்திய இராணுவத்தின் தமிழர்களுக்கு எதிரான போக்கும் இந்திய அமைதி காக்கும் படையினரின் செயற்பாடுகளுக்கு ஆதாரமான கட்டுரைகளையோ, நூல் களையோ வழங்கவில்லை. இருப்பினும், இந்திய அமைதிப்படையின் செல்லப்பிள்ளையாக அந்நாளில் இயங்கிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரப்பிரிவு வெளியிட்டிருந்த நூலொன்றினைப்பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். *சகோதரப் படுகொலைகளும் தமிழினத் துரோகிகளும்* என்ற தலைப்பில் கே.சி.என். என்ற புனைபெயரில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) யின் பிரச்சார வெளியீட்டுப் பிரிவு, கார்த்திகை 1988 இல் ஒரு நூலை வெளியிட்டிருந்தது. 1987ம் ஆண்டு புரட்டாதியில் *ஈழப்போராட்டத்தில் சகோதரப் படுகொலைகளும் சயனைட் தற்கொலைகளும்* என்னும் தலைப்பில் கே.சி.என். அவர்களால் எழுதப்பெற்று அவ்வமைப்பு வெளியிட்ட நூலின் திருத்திய வடிவமே இதுவாகும். 1974 இலிருந்து தொடங்கி 1987இல் இடம்பெற்ற இலங்கை-இந்திய ஒப்பந்தம் வரையிலான காலகட்டத்தில் இலங்கையில் நிகழ்ந்த சகோதரப் படுகொலை

நிகழ்வுகளை இந்நூல் விரிவாகப் பதிவுசெய்திருந்தது. இந்நூல் பிரதிகள் அக்காலகட்டத்தில் இந்திய இராணுவத்தின் பிடியிலிருந்த தமிழ்ப் பிரதேச மெங்கும் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

இந்திய இராணுவத்தின் ஆதரவுடன் கிழக்கின் தேர்தல்

இலங்கையின் ஈழ விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஜூலை 29, 1987 அன்று கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் இலங்கை அதன் மாகாணங்களுக்கு அதிகாரங் களைப் பகிர்ந்தளிப்பதாகும். இதனடிப்படையில் 1988 பெப்ரவரியில் ஒன்பது மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. ஒப்பந்தத்தின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு நிர்வாகத்தின்கீழ் இரண்டு மாகாணங்களையும் கொண்டுவர உடன்பாடாயிற்று. இதன் அடிப் படையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியின் போது, முதலாவது மாகாணசபைத் தேர்தல் இந்திய இராணுவத்தினரின் மேற்பார்வையில் வட-கிழக்கில் நவம்பர் 19, 1988 அன்று இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கேற்காது ஒதுங்கியிருந்த நிலையில் இந்திய ஆதரவுடன் இயங்கிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் இத் தேர்தலில் வெற்றியீட்டி முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் தலைமையில் ஆட்சி யமைத்தனர்.

மேற்கண்ட அரசியல் பின்புலத்தில் *மோசடித் தேர்தல் உண்மை விளக்கம்* என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் டிசம்பர் 1988 இல் ஒரு நூலை வெளியிட்டிருந்தனர். இந்திய அமைதி காக்கும் படை, இலங்கையின் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த வேளையில் இடம்பெற்ற அத்தேர்தல் தொடர்பான நூலில், 1988ம் ஆண்டு நவம்பர் 19 இல் கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்பெற்ற மாகாணசபைத் தேர்தலின் போது இடம்பெற்ற மோசடிகளைப் பட்டியலிட்டு அம்பலப்படுத்தியிருந்தது. 13.12.1988 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு இது குறித்து வெளியிட்ட பகிரங்கக் கடிதமும் இந்நூலின் முன்-பின் உள்ளட்டைப் பக்கங்களில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆக்கிரமிப்புக்கால இராணுவச் செயற்பாடுகள்

இந்திய இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் நிலைகொண்டிருந்த வேளையில் ஊடகங்களின்மீது தீவிரமான பார்வையைச் செலுத்திவந்தார்கள். தமது

பணிகளுக்குக் குந்தகமான நிலைமையை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்கள் செயற்பட முற்பட்ட வேளைகளில் தமது ஆதரவாளர்களின் மூலம் அதனை அச்சுறுத்தும் பணியில் ஈடுபட்டார்கள். இந்நிலையில் பக்கச் சார்பற்ற சுதந்திர மான கணிப்பீடுகளையோ, நேர்மையான கருத்துக்களையோ மக்கள் உள் வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

இந்நிலையிலும் துணிச்சலுடன் சில பிரசுரங்கள் அவ்வப்போது வெளி வந்தன. அவை பெரும்பாலும் விடுதலைப் புலிகளினால் அச்சிடப்பட்ட பிரசுரங்களாகவே இருந்தன. இந்திய இராணுவம் மார்ச் 1990 இல் இலங்கையை விட்டு நீங்கியபின்னரே அந்த இருண்ட காலம் பற்றிப் பலரும் எழுத வாய்ப்பேற்பட்டது. அவ்வகையில் *மேஜர் கிண்ணி* என அழைக்கப் பெற்ற விடுதலைப் போராளியான வி. மணிவண்ணன் பற்றிய ஒரு நூல் இங்கு பதிவுசெய்யப்படவேண்டியதாகும். பிரான்ஸில் இயங்கிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகத்தினால் 2வது பதிப்பாக, பெப்ரவரி 1997 இல் வெளியாகிய *மேஜர் கிண்ணி* என்ற தலைப்பிலான இந்நூல் 10.7.92 இல் இயக்கச்சி மோதலில் பலியான விடுதலைப்புலிகளின் போராளி மேஜர் கிண்ணியின் போராட்டகாலச் சரிதையை உள்ளடக்கியிருந்தது. நெடுங்கேணி இந்திய இராணுவ மினி முகாம் புலிகளால் தாக்கப்பட்ட வரலாறும் இந்நூலின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

இதே போன்று நினைவில் சில நிகழ்வுகள் என்ற தலைப்பிலான மற்றுமொரு நூலும் முக்கியமானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நோர்வே அமைப்பு, (Tamil Co-ordinating Committee Norway), ஓகஸ்ட் 1993 இல் இந்நூலை வெளியிட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ வெளியீடுகளில் வெளிவந்த வவுனியா சிறை உடைப்பு (01.05.1989 அன்று வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையின் சிறையை உடைத்து 42 கைதிகள் தப்பியோடிய நிகழ்வு), நினைவில் சில நிகழ்வுகள் (மேஜர் கிண்ணியின் முக்கிய பங்களிப்பில் நடந்தேறிய நெடுங்கேணிப் பாடசாலையில் அமைந்த இந்திய இராணுவத்தின் மினிமுகாம் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் பற்றிய பகிர்வு), சிலாவத்துறை - ஒரு வரலாற்றுச் சமர் (19.03.1991 முதல் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நடந்த மன்னார் மாவட்டத்தின் சிலாவத்துறை இராணுவ முகாம் அழிப்பு) ஆகிய மூன்று விவரணக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருந்தன. நோர்வேக் கிளையின் ''சுதந்திர தாகம்'' எழுச்சி நிகழ்வினையொட்டி சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவலங்களின் பதிவுகள்

ஒரு போரின் இறுதியில் அவ்வரலாறு வென்றவர்களாலேயே எழுதப்படுகின்றது. அதற்குள் தோற்றவர்களின் வீரம்செறிந்த போராட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன. தோற்றவர்களின் பார்வையில் அவர்கள் பக்க நியாயங்களை வரலாற்றில் பதிவுசெய்பவை- ஆக்க இலக்கியங்களே பின்னாளில் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பின்போது இடம்பெற்ற நிகழ்வுகள், நியோ ஜேர்னலிச முறையில் கதைசொல்லிகளால் பதிவுசெய்யப்பட்டு நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் எழுந்த முதலாவது நூலாக *வல்வைப் படுகொலைகள்* அமைகின்றன. வல்வை ந. அனந்தராஜ் எழுதிய இந்நூல் 1989 இல் முதற் பதிப்பைக் கண்டது. இந்திய இராணுவத்தினர் இலங்கையை ஆக்கிரமித்திருந்த வேளையில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பல படு கொலைகளில் உலகையே உலுக்கிய படுகொலைகளாக வல்வெட்டித்துறைப் படுகொலைகள் இடம் பெற்றிருந்தன. 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2, 3, 4 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியபின் இந்திய இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப் பட்ட படுகொலைகள் தொடர்பான விபரங்கள், கதைகளாக நெஞ்சை உருக்கும் வகையில் இந்நூலில் எழுதப்பட்டிருந்தன. மக்களின் அவலங்களைச் சித்திரிக்கும் கறுப்பு வெள்ளை, வண்ணப் புகைப்படங்களுடன் வெளியிடப் பட்டிருந்த இந்நூல் பாதிக்கப்பட்ட வல்வைமக்களின் சத்தியப் பிரமாண வாக்கு மூலங்களை உள்ளடக்கியதாக INDIA'S MYLAI என்ற பெயரில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நூலுக்கான அணிந்துரை முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸினால் மிக உணர்வுபூர்வமாக எழுதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வகையில் இரண்டாவதாகக் குறிப்பிடக்கூடிய நூல், நாவண்ணன் எழுதிய *அக்கினிக் கரங்கள்* என்ற நூலாகும். ஈழத்தமிழரின் இனப்பிரச் சினையைப் பகைப்புலமாகக் கொண்ட உண்மை நிகழ்வுகளை கலாபூர்வமாகப் பதிவுசெய்து வைக்கும் பணியிலே ஈடுபட்ட சில ஈழத்து எழுத்தாளர்களுள் திரு. நாவண்ணன் குறிப்பிடத்தகுந்தவர். இவரின் இலக்கிய வாழ்வின் பெரும் பகுதி இத்தகைய தகவல்களைத் திரட்டிப் பதிவுக்குள்ளாக்கும் பணியிலேயே கழிந்திருக்கிறது. கிழக்கின் சூறாவளி, வடக்கின் இராணுவ எரியூட்டல்கள், நவாலித் தேவாலயப் படுகொலை, பாடசாலை மாணவர்கள் குண்டுவீச்சுக் குள்ளாகிப் பலியான மறைக்கப்பட்ட வரலாறு என்று இவரது நேரடித்தகவல் திரட்டலும், அவற்றை களத்தில் நின்றே இலக்கியார்த்தமாகப் பதிவுசெய்தலும் ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் அழிக்கப்படமுடியாதவையாகும்.

அக்கினிக் கரங்கள் என்ற அவரது நூல் யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் வெளியீடாக ஐப்பசி 1995 இல் வெளியிடப்பட்டது. அக்கினிக்கரங்கள் இந்திய இராணுவ அராஜகத்தின் மற்றொரு பக்கத்தை முகத்திலறைந்தாற்போல் எமக்குச் சொல்கின்றது. முற்று முழுதான உண்மை நிகழ்வுகளையே இவர் இக்கதையில் கோர்த்திருக்கின்றார் என்பதை அக்காலகட்டத்தில் யாழ். மண்ணில் வாழ்ந்திருந்த வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்வார்கள். 1987ம் ஆண்டு ஒக்டோபர் 21ம், 22ம் திகதிகளில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குள் இந்திய அமைதிகாக்கும் படையினர் புகுந்து புரிந்த படுகொலை களை மையமாக வைத்து இவ்விலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. இரத்த வங்கிப் பிரிவில் பணியாற்றிய தாதி ஒருவரினதும், அந்தப் படுகொலை நிகழ்வில் தப்பிய வைத்தியர், தாதியர், சிற்றுழியர், நோயாளர் ஆகியோரின் நேரடி அனுபவங்களைக் கொண்டும் காங்கேசன்துறையில் வாழ்ந்து இடம் பெயர்ந்த நூலாசிரியர் பெற்ற அனுபவங்களும் அக்கினிக் கரங்களின் கதையாகின்றது. இந்நூலின் முதற் பதிப்பு ஒக்டோபர் 1995இல் வெளியிடப் பட்ட கையோடு வலிகாமத்தில் பாரிய புலப்பெயர்வு நிகழ்ந்தமையால், முதற்பதிப்பு திருப்திகரமான முறையில் விநியோகிக்கப்படவில்லை. இந்நிலையில், மேற்படி அக்கினிக் கரங்கள் கதையுடன், நினைவாலயம், அருட்திரு நேசன் அடிகளார் அவர்களின் துன்பியல் அனுபவங்கள் ஆகியன சேர்க்கப்பெற்று நூலின் 2வது பதிப்பு, 2005 இல் வெளியாகியது. நியோ ஜேர்னலிசம் என்ற வகையில் அமைந்த மேலும் பல நாவண்ணனின் நூல்கள், இலங்கை அரசின் போர்க்காலக்குற்றங்களை அழுத்தம்திருத்தமாகப் பதிந்து வைத்திருக்கின்றன. காலம் காலமாக பல மறுபதிப்புக்களை இவை காணப் போகின்றன.

முறிந்த பனை: இலங்கையில் தமிழர் பிரச்சினை: உள்ளிருந்து ஒரு ஆய்வு என்ற நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளான ராஜினி திரணகம, ராஜன் ஹூல், தயா சோமசுந்தரம், கே. ஸ்ரீதரன் ஆகியோரால் ஜூலை 1988இல் எழுதி வெளியிடப்பட்ட The Broken Palmyra என்ற நூலின் தமிழாக்கமாகும். யாழ்ப்பாணம்: மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு, 1996 இத்தமிழாக்கத்தை வெளியிட்டிருந்தது. இரு பகுதிகளாக அமைந்துள்ள இந்நூலின் முதற்பகுதி 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தமும் இந்தியப்படையின் வருகையும் நிகழ்ந்த காலகட்டத்தில் நின்று ஈழத்து இனப்பிரச்சினையின் ஒரு பரிமாணத்தை-ஈழத்தமிழர் போராட் டத்தின் வரலாற்றைப் புரியவைக்கும் நோக்கில் எழுதப்பட்ட ஆங்கில நூலின் தமிழாக்கமாகவும், இரண்டாம் பகுதி இக்காலகட்டத்தில் இந்தியப்படையினரின்

தாக்குதல் பற்றிய பல்வேறு அறிக்கைகளும் ஆய்வுகளும் கொண்டதாகவும் அமைந்துள்ளது. The Broken Palmyrah என்ற இதன் மூல நூல் ஆங்கிலத்தில் வெளியான சிறிது காலத்தில் இந்நூலின் உருவாக்கத்தின் முக்கிய பங்காளியான வைத்திய கலாநிதி ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் இனந்தெரியாத இளைஞர்களால் படுகொலை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இன்றளவில் அக்கொலையாளிகள் கண்டறியப்படவேயில்லை.

குருதிக் குளியல் என்ற பெயரில் கலையார்வன் என்றறியப்பெற்ற கு. இராயப்பு அவர்கள் யாழ்ப்பாணம், நெயோ கல்சரல் கவுன்சில் மூலம் வெளியிட்ட நூலும் இங்கு குறிப்பிடத்தக்கது. உண்மை நிகழ்வுகளின் உணர்வுப் பதிவுகள் என்ற வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்நூலில், ஈழத் தமிழர்களின் வாழ்வில் குறிப்பாக, குருநகரையும் அதைச் சார்ந்த பகுதிகளையும் சேர்ந்த மக்கள் மத்தியில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போர்க்கால இனவன்முறையின் பாரிய பாதிப்புகள் பதிவாகியுள்ளன. மூன்று பகுதிகளில் இக்குருதிக் குளியல்களைப் பதிவுசெய்திருக்கும் நூலாசிரியர், முதலாவது குளியலில் வேட்டை என்ற தலைப்பில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு முன்னதாக, 10.6.1986ம் ஆண்டு கரைவலைத் தொழிலுக்குச் சென்ற 31 மீனவர்கள் மண்டைதீவுப் பகுதியில் வேட்டையாடப்பட்ட சம்பவமும், இரண்டாவது குளியலில் அறுப்பு என்ற தலைப்பில் இந்திய இராணுவத்தின் காலகட்டத்தில் 10.10.1987 முதல் 22.10.1987 வரையிலான இருவார கால இடப்பெயர்வின்போது யாழ்ப்பாண மண்ணில் 38பேர் கொல்லப்பட்டும் 66பேர் காயமடைந்தும் நடந்த அவலங்களும், மூன்றாவது குளியலில் அழிப்பு என்ற தலைப்பில் இந்திய இராணுவம் வெளியேறிய பின்னதான காலகட்டத்தில், 13.11.1993 முதல் 5.12.1993 வரையிலான காலப்பகுதியில் 140 வருடப் பழமையான குருநகர் யாகப்பர் ஆலயம், சின்னக்கடைச் சந்தை போன்றவற்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட விமானத்தாக்குதலையும் அதில் பலியான 27 பேர் பற்றியும் பதிவுசெய்துள்ளார்.

இந்திய இராணுவ காலத்தைச்சித்திரிக்கும் படைப்பிலக்கியங்கள்

இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தின்போது இலங்கையில் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் பல ஆக்க இலக்கியப் படைப்புக்கள் கவிதைகளாகவும், கதைகளாகவும், தொடர் நவீனங்களாகவும் பத்திரிகைகளில் வெளிவந்த வண்ணமிருந்தன. இந்திய இராணுவத்தினரது பார்வைக்கும், அவர்களின் செல்லப்பிள்ளைகளின் பார்வைக்கும் தப்பவேண்டிய தேவை காரணமாக

அக்காலத்தைய பிரசுரங்களில் தீவிரமான எதிர்ப்பலைகள் இடம்பெற்றிருக்க வில்லை. இருப்பினும், கதைசொல்லியின் நளினமான எழுத்து நடைகளுக் கூடாகவும் வாசகர் தகவலை மறைமுகமாகத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. பின்னாளில் வெளிவந்த படைப்புக்கள் தீவிரமாகவும் வெளிப் படையாகவும் இந்திய இராணுவ அட்டூழியங்களைப் பேசின. இந்த ஆய்வில் நூலுருவில் வெளிவந்த ஆக்க இலக்கியங்கள் பற்றிய தகவல்களையே குறிப்பிட்டுள்ளேன். பல படைப்புக்கள் நூலுருவில் வெளிவராது, சிறு சஞ்சி கைகளுடனும், பத்திரிகைகளின் வார இதழ்களுடனும் தமது வாழ்வை சுருக்கிக்கொண்டன. அவை பற்றி விரிவாக இக்கட்டுரை ஆராயவில்லை.

சிறுகதைத் தொகுதிகளில் இந்திய அமைதிப்படை

சிறுகதைத் தொகுதிகளில் வெளிப்படையாக இந்திய அமைதிப்படை பற்றிப் பேசிய சிறுகதைகளை உள்ளடக்கிய முதலாவது நூலாக, பிரம்படி என்ற தலைப்பில் வெளியாகிய க.தணிகாசலம் அவர்களின் சிறுகதைத் தொகுதியைக் குறிப்பிடலாம். கொழும்பு தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சென்னை சவுத் ஏஷியன் புக்ஸ், ஜூலை 1988 இல் இந்நூலை வெளியிட்டி ருந்தது. ஆக்கிரமிப்பின் காரணமாக வறுமையும் பிணியும் வருத்தமும் வாய்ப் பின்மையும் பீடித்த ஒரு மக்கட்பிரிவின் மீட்சிக்காகவும் விடுதலைக்காகவும் விமோசனத்திற்காகவும் உழைக்கவேண்டும் என்னும் வேட்கையினால் உந்தப்பட்டு அந்த வேட்கையின் சுவாலையாகச் சொரூபங்கொண்டுள்ள போராளிகளின் நியாயங்களைச் சொல்கின்றன இக்கதைகள். நூலின் தலைப் பான பிரம்படி என்பது, இந்திய இராணுவ அழிப்புக்குட்பட்ட ஈழமண்ணில் யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள சிற்றுர் ஒன்றின் பெயராகும். இந்திய இராணுவம் விடுதலைப் போராளிகளுக்கு எதிராக நள்ளிரவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அருகில் அமைந்திருந்த வெளியில் வான்மார்க்கமாகத் தரையிறங்கினர். விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்த் தாக்குதலில் தப்பிப்பிழைத்த ஒருசில இந்தியப் படையினரின் பதுங்கிடமாக அமைந்துவிட்டது பிரம்படி மண். அன்று மாலை அவர்களை மீட்கவந்த இந்திய இராணுவத்தினால் கட்டவிழ்த்துவிடப் பட்ட மிலேச்சத்தனமான இராணுவ அடக்குமுறையில் படுகாயப்பட்டதே இவ்வூராகும். இந்நூலிலுள்ள கதைகளுக்குப் பொருத்தமான தலைப்பாக இந்நூலுக்கான பிரம்படி என்ற பெயர் அமைகின்றது. இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் அக்கால வரலாற்றுச் சூழலிலேயே தோய்ந்து நின்று எழுதப்பட்ட கதைகளில் பொருளுருவமும் மொழியுருவமும் இந்நூலாசிரியரை நல்லதொரு

சிறுகதை எழுத்தாளராக நமக்கு அறிமுகம் செய்து வைத்தது. உறவுகள் தெரிகின்றன, மண்ணின் மைந்தர்கள், கூலிக்குழப்பம், ஒரு பாதை திறக்கப்படுகின்றது, மழை, சிவந்த பாதையில், கல், தெற்கு நோக்கி, வேலிகள், அகதி, நாய்களோ, பிரம்படி, நல்லநாள் ஆகிய தலைப்புகளில் அமைந்த 13 சிறுகதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப் புலிகளின் சார்பான எரிமலை, வெளிச்சம் போன்ற ஊடகங்கள் அவ்வப்போது போராளிகளினால் படைக்கப்பெற்ற படைப்பிலக்கியங்களுக்குக் களமமைத்துக் கொடுத்து வந்துள்ளன. அத்தகைய ஊடகங்களினூடாக வளர்த்தெடுக்கப்பட்ட பல போராளிகள் பின்னாளில் தரமான படைப்பிலக்கிய வாதிகளாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் எழுதப்பட்ட அவர்களது படைப்புக்கள் பெரும்பாலும் சமகால வாழ்வியல் அவலங்களை உள்வீட்டுப்பிள்ளையாக நின்று எடுத்துரைப்பதாக அமைந்திருந்தன. அவ்வகையில் *அம்மாளைக் கும்பிடுறானுகள்* என்ற தலைப்பில் வெளியாகிய சிறுகதைத் தொகுதியை முக்கியமானதாகக் குறிப்பிடலாம். லண்டனிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப்பிரிவு வெளியிட்டிருந்த இந்நூலின் இரண்டாவது பதிப்பு ஓகஸ்ட் 1997இல் வெளிவந்தது. முதற்பதிப்பு ஆகஸ்ட் 1994 இல் தாயகத்தில் வெளியாகியிருந்தது. உண்மைச் சம்பவங்களைக் கருவாகக் கொண்ட 15 கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றிருந்தன. இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்புக் காலகட்ட வாழ்க்கையையும், அந்த வாழ்க்கையின் அவலங்களையும் சோகங்களையும் சித்திரிக்கும் படைப்புக்களாக 14 கதைகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடூரத்தினைச் சித்திரிப்பதாக ஒரு கதையும் அமைகின்றன.

அம்மாளைக் கும்பிடுறானுகள் என்ற நூலை அடுத்து அதன் இரண்டாம் பாகமாகக் கருதப்படக்கூடிய *வில்லுக்குளத்துப் பறவைகள்: உண்மைக்கதைகள் தொகுதி* என்ற நூல் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினால், ஆடி 1995இல் வெளிவந்தது. 17 உண்மைக்கதைகளைக் கொண்ட இத் தொகுதியில் இந்திய அமைதிப்படையின் வேட்டைக்குப் பலியான அப்பாவித் தமிழ் மக்களின் கதைகள், போராட்டத்தில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள், போராளிகளை நேசித்து அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் எனப்பலவாறான உண்மைக்கதைகள் பதிவுபெற்றிருக்கின்றன. அவ்வகையில் இந்திய இராணுவத்தை போர்க்காலத்தில் நேரில்

எதிர்கொண்டவர்களின் உண்மைக் கதைகள் பக்கங்கள் தோறும் தமது உணர்வை பதியவைத்திருக்கின்றன.

கவிதைத் தொகுதிகளில் இந்திய அமைதிப்படை

சிறுகதைகளைவிட கவிதைகளிலேயே இந்திய அமைதிப்படை தொடர்பான செய்திகள் அதிகம் இடம்பெற்றிருந்தன. இருப்பினும் அவை தனித்தொகுதி களாக எங்கும் வெளியிடப்படவில்லை. ஆயினும் அக்காலகட்டத்துக் கவிதை கள் பெரும்பாலும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கால அவலங்களையே பதிவுசெய்திருந்தன. *சோகங்களிலும் துயரமனது* என்ற கவிதைத் தொகுதியை உதாரணமாகக் கொள்ளலாம். கௌரியின் கவிதைகளை உள்ளடக்கிய இத் தொகுதி சென்னையிலிருந்து சமூக ஆய்வு வட்டத்தினால், சித்திரை 1988 இல் வெளியிடப்பட்டது.

ஈழப் போராட்டக் களத்திலிருந்து கனல் மணம் பரப்பிய இளங் கவிஞர் களுள் கௌரியும் ஒருவர். விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்காளியாக இருந்த வேளையில் ஈழத்தின் போர்க்குரலாக இவரது கவிதைகள் வெடித்தன. தமிழ் மண்ணை ஆக்கிரமித்த சிங்கள இராணுவத்துக்கும், இந்திய இராணுவத்துக் கும் அதன் அரசுகளுக்கும் எதிரான மக்களின் உள்ளக் குமுறல்கள் இவரது கவிதைகளில் வெளிப்படுத்தப்பட்டன. இத்தொகுப்பிற்கான நீண்ட முன்னுரை யினை சென்னை மாநிலப் புதுக் கல்லூரிப் பேராசிரியர் கவிஞர் இன்குலாப் அவர்களும், பின்னுரையினை தமிழ்நாடு, குடியாத்தம் அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் அ. மார்க்ஸ் அவர்களும் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

பெயரறியாப் பெரியோன்: காலமும் கவிதையும் என்ற கவிதைத் தொகுதி, தி. உதயசூரியனால் எழுதப்பட்டு யாழ்ப்பாணம் பட்டப் படிப்புகள் கல்லூரி வெளியீடாக ஆடி 2002இல் வெளிவந்தது. கவிதைத்துறையிலே தீவிர ஈடுபாடு கொண்டு நவீன கவிதைகளை எழுதிவரும் இளங்கவிஞர் தி. உதயகுமார் போர் உலாவரும் மண்ணில் இருந்து தன்னைச் சூழ்ந்து நடக் கும் நிகழ்வுகளை கவிதைகளாகப் பதிவுசெய்திருக்கிறார். முதல் இருபாடல் களையும் செம்மணி புதைகுழிகளுடன் தொடங்கும் இவர், ஜெயசிக்குறு போர் நடவடிக்கை, கிபீர் விமானத்தாக்குதல், எரிபொருள் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு என்று எதையுமே விட்டுவைக்கவில்லை. இந்திய இராணுவம் தமிழர் மண்ணை ஆக்கிரமித்திருந்த வேளையிலும், இரண்டாம் கட்ட ஈழப்போரின்போதும், இடப்பெயர்வின் பின்னர் வன்னியில் வாழ்ந்த போதும், யாழ்ப்பாணத்துக்கான பாதை திறக்கப்பட்ட பின்னருமாக அவ்வப்

போது தான் எழுதியவற்றுள் தேர்ந்த 25 கவிதைகளை இத்தொகுப்பில் சேர்த்துள்ளார்.

நாவல்களில் இந்திய அமைதிப்படை

இந்திய இராணுவம் ஈழமண்ணில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு சில நாவல்கள் இதுவரை வந்துள்ளன.

மீண்டும் புதிதாய்ப் பிறப்போம் என்ற பெயரில் இணுவையுர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய நாவலொன்றை முதன்மையாகக் குறிப்பிட வேண்டும். துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து வந்த போதும், தளராத மன உறுதியுடன் இந்த மண்ணை நேசித்து மானமுடன் தலைநிமிர்ந்து வாழமுனையும் ஒரு குடும்பத்தின் கதை இது. இது 12.7.1987 முதல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழமுரசு தினசரியின் வார வெளியீட்டில் தொடராக வெளிவந்தது. 10.10.1987 அன்று இந்திய அமைதிகாக்கும் படை பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைக்கும் நடவடிக்கையின் வெளிப்பாடாக, ஈழமுரசு அலுவலகத்தைக் குண்டுவைத்துத் தகர்க்கும்வரை இந்நாவல் தொடர்ந்தது. பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து டேவிட் லிகோரியின் மீரா வெளியீடாக, ஆனி 1992 இல் நூலுருவில் இந்நாவல் முழுமையாக வெளி வந்தது.

ஓ கனடா என்ற நாவல் பாரதிநேசன் என்ற புனைபெயரில் வட்டுக் கோட்டை மேற்கைச் சேர்ந்த வீ. சின்னத்தம்பி அவர்களால் எழுதப்பட்டு மார்ச் 1994 இல் வெளியானது. மார்க்சிய கோட்பாட்டில் பற்றுறுதி கொண்ட நூலாசிரியர், மக்கள் சீனக் குடியரசில் 15க்கும் மேலான ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். சமூக பொருளாதாரம் தொடர்பான வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாடு செல்வதே ஏற்புடையது என்ற கருத்தைக்கொண்ட ஈழத்தமிழர்களிடையே நாட்டின் பொருளாதார விடிவும் இப்பிரச்சினையைத் தீர்க்க முக்கியம் என்ற கருத்தை இந்நாவலில் வலியுறுத்துகின்றார். சாதாரண வாழ்க்கையில் தமிழ் எழுதுவினைஞர் ஒருவர் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளையும், அவரது வாழ்க்கையில் சமுதாய ரீதியில் ஏற்படும் நிகழ்வுகளையும், அந்த நிகழ்வுகள் அவரில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் இந்நாவல் விபரிக்கின்றது. இந்திய இராணுவத் தின் ஈழமண் ஆக்கிரமிப்பும் கதையின் பின்னணியில் சொல்லப்படுகின்றது.

ஈழத்து எழுத்தாளர் தேவகாந்தனின் *கனவுச்சிறை* என்ற நூல் ஐந்து பாகங்களில் வெளிவந்த பெருநாவலாகும். சென்னை இலக்கு நூல்கள்

வெளியீடாக 1வது பதிப்பினை ஜுன் 1998 இல் கண்டிருந்த இந்நாவல் தமிழ் இலக்கிய உலகில் நீண்டகாலத்தின் பின் வெளிவந்த பல பாகங்களைக் கொண்ட நாவல் என்ற வகையில் ஈழத்துப் படைப்பிலக்கியத்துறையில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த நாவல் யுத்தத்திற்கானதாகவோ அன்றி சமாதானத்துக்கானதாகவோ எழுதப்படாது சமகால அரசியல் நியாயமொன்றை விசுவாசமாகச் சொல்லியிருக்கின்றது. இது நகரும் காலத்தை பிரதானப்படுத்தி 5 பாகங்களில் எழுதி முடிக்கப்பட்டதாகும். 1981 தொடக்கம் 2001 வரை யிலான காலப்பகுதிக்குரிய 21 ஆண்டுக்கால இலங்கையின் வாழ்நிலைக்களத் தில் நின்று 5 பாகங்களிலும் கதை அழகாக நகர்த்தப்படுகின்றது.

1981 முதல் 2001வரையான 21 ஆண்டுகளில் 21 நூற்றாண்டுகளின் இலங்கைச் சரித்திரத்தை புல்லின் தலைப் பனித்துளியின் பிரபஞ்சப் பிரதிபலிப்பாக இந்தநாவல் மீளுருவாக்கம் செய்கின்றது. சமகாலத்து எரியும் அரசியல் பிரச்சினையொன்று, உலகமளாவிய கதை நகர்ச்சியின் மூலம் பேசுகின்ற தமிழ் நாவல் இது. 1981 இல் அக்கினிப் பொறி போன்ற மையச் சம்பவமொன்றின் உந்திப்புடன் ஆரம்பிக்கும் நாவலில் 1983 கறுப்பு ஜுலை, தேசம் தாண்டுதல், அகதிமுகாம் அவலங்கள், மேற்குலகின் அடையாளச் சிக்கல்கள், சமூக நிலை மாற்றங்களும் தேசமளாவிய கருத்துருவின் புத் தாக்கமும் என்று வியாபிக்கும் சரித்திர வெளியில் இன்னொரு சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது. ஈழத்துடன் இணைந்த சிறுதீவான நயினாதீவின் வடகரையிலிருந்து தொடங்கும் கதை. கட்சிப் புசல்கள், கூட்டணி அமைப்பு, தமிழீழத்தின் தத்துவார்த்த உதயம், போராட்ட இயக்கங்களின் வளர்ச்சி என்பவற்றின் இலக்கியச் சாட்சியமாகின்றது கனவுச்சிறை.

நோயில் இருத்தல் என்ற பிரபல்யமான நூல் ஈழத்துப் படைப்பாளி மு. பொன்னம்பலம் அவர்களால் 1999 இல் வெளியிடப்பட்டநாவலாகும். 1984 ஒக்டோபரில்தான் மயிலிட்டி TB சனடோரியத்தில் நோயாளியாக இருந்த வேளையும் (இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி சுடப்பட்டதும், போராளிக் குழுக்கள் அதன் சோகத்தை வெளிப்படுத்தியதுமான காலகட்டம்) 1987 இல் யாழ்.பெரியாஸ்பத்திரியில் பொலிநியூரைரிஸ் நோயாளியாகக் கிடந்தபோதும் (தமிழ் ஈழப் போராளிகளையும் பொதுமக்களையும் இந்திய இராணுவம் வேட்டையாடிக்கொண்டிருந்த காலம்) இந்த இரு காலகட்டங்களில் தனக்கு நேர்ந்த அனுபவங்களின் வெளிப்பாடு இந்நாவலின் பேசுபொருளாக அமைந்திருந்தது. நாவலினூடாக இந்திய அரசியலில் ஈழப்பிரச்சினை பெற்ற மாற்றங்களை கூர்ந்து அவதானிக்க முடிகின்றது.

போர்க்காலப் படைப்பிலக்கியங்கள் பற்றி ஆராயப்புகும் எந்தவொரு இலக்கிய ஆய்வாளராலும் தவிர்க்கப்பட முடியாதவர் தாமரைச்செல்வி. விண்ணில் அல்ல விடிவெள்ளி (1992), தாகம் (1993), வேள்வித் தீ (1994), ஒரு மழைக்கால இரவு (1998), அழுவதற்கு நேரமில்லை (2002), பச்சை வயல் கனவு (2004), வன்னியாச்சி (2005) ஆகிய தொகுதிகளின் வழியாகச் சிறுகதைகளாகவும் குறுநாவல்களாகவும், நாவல்களாகவும் ஈழத்தின் போர்க்கால அவலங்களைப் பதிவாக்கியவர். இவரது *வீதியெல்லாம் தோரணங்கள்* என்ற நாவல் நவம்பர் 2003 இல் வெளிவந்தது. 1989இல் யாழ் இலக்கிய வட்டம் - வீரகேசரியுடன் இணைந்து நடத்திய போட்டியில் 2ம் பரிசினைப் பெற்ற இந்த நாவல் பின்னர் 1.3.1992 முதல் 3.5.1992 வரை வீரகேசரி வார வெளியீட்டில் தொடராகவும் வெளிவந்திருந்தது. இந்திய இராணுவம் இந்த மண்ணில் நிலைகொண்டிருந்த காலத்தைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் இது. ஏற்கெனவே நொந்து போய்க்கிடந்த மக்கள் மீது IPKF என்ற பெயரில் இந்திய அமைதிகாக்கும் படை வந்து வேல் பாய்ச்சிய காலம் அது. ஈழமண்ணில் ஓரிடத்தில் ஏற்படும் போரின் அனர்த்தங்களின் விளைவுகளை அதன் வலிகளைச் சுமந்தவாறு இன்னோரிடத்தில் வாழ்கின்ற மனிதர்களை இந்நாவலில் சந்திக்க முடிகின்றது.

ஈழத்தின் முதுபெரும் ஜனரஞ்சக படைப்பிலக்கியவாதியாகக் கருதப்படும் செங்கை ஆழியானும் (இயற்பெயர்: கந்தையா குணராசா) *யுத்தபூமி* என்ற பெயரில் ஒரு நாவலை எழுதியிருக்கிறார். ஏப்ரல் 2006 இல் வெளிவந்த இந்நாவல் இலங்கையில் இனமோதல்கள் வெடித்த நிலைமையில் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்கவும், அங்கு அமைதியை நிலை நாட்டவும் சென்ற இந்திய அமைதிகாக்கும் படை, அங்கே தமிழர்களுக்கு எதிராகச் இழைத்த வரலாற்றுத் தவறுகளைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது. கிட்டத்தட்ட மரணத்தின் விளிம்பில் வாழும் ஈழத்தமிழர்கள் எப்படி எல்லாம் மண்மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நாவல் விரிவாகவும் அழுத்தமாகவும் சித்திரிக்கின்றது.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கால மரணங்களின் பதிவுகள்

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கால ஆவணங்களைப் பற்றிய தேடலில் ஈடுபடுவோரின் கவனத்தை *தமிழினப் படுகொலைகள் 1956-2008* என்ற நூல் ஈர்க்கலாம். வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR என்ற பெயரில் தமிழகத்தில் இயங்கும் ஒரு அமைப்பு, மனிதம் வெளியீடாக (சென்னை 600 014: மனிதம் வெளியீடு, Manitham-Human Rights Organisation,

274-GC அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை) 2009 இல் இந்நூலை 360 பக்கங்களில், புகைப்படங்கள், அட்டவணைகள் சகிதம் வெளியிட்டிருந்தது.

1956 முதல் 2008 வரையிலான அரைநூற்றாண்டுக் காலகட்டத்தில் ஈழத்தமிழர்களின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படுகொலைகள் இப் பாரிய ஆவணத்தில் விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. 160க்கும் மேற்பட்ட படுகொலைகளின் சம்பவ விபரிப்பு, பாதிக்கப்பட்டோரின் புகைப்படங்கள், படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற பிரதேசங்களின் வரைபடங்கள், வீடுவீடாய் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள், படுகொலைக்கு உட்பட்டோரின் பெயர், வயது, தொழில் போன்றவை மிக விரிவாக அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளது. 2009 இல் அயர்லாந்து- டப்ளின் நகரில் நடைபெற்ற படு கொலைகள் குறித்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தின் தமிழ் நூல்வடிவம் இதுவெனக் கருதப்படுகின்றது. இந்த நூலின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் இதன் தொகுப்பாளர்கள் இயங்கியுள்ளனர். இலங்கையில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலப்பகுதியாகிய ஜூலை 1987- மார்ச் 1990 காலப்பகுதியில் நடந்த மனிதப்படுகொலைகள் பற்றிய எவ்வித தகவல்களும் இவ்வாவணத்தில் சேர்க்கப்படவில்லை என்பது அதிர்ச்சியளிப்பதாயுள்ளது. 116ம் பக்கத்தில் காணப்படும் 54வது பதிவு 29.5.1987 இல் அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயத்தில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட செல்வீச்சு பற்றியதாக உள்ளது. 120ஆவது பக்கத்தில் தொடரும் 55 ஆவது பதிவு, 23.5.1990 இல் சத்துருக்கொண்டான் ஸ்ரீலங்கா ராணுவத் தாக்குதலுக்குள்ளாகிய கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலைகளை பற்றி விபரிக்கின்றது. ஆக, இந்திய இராணுவகாலத்தில் பொதுமக்கள் மீதான தாக்கதல்களோ, அவர்களால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு படுகொலையோ பதிவுக்குள்ளாக்கப்பட வில்லை. தமிழினப்படுகொலைகளை சிங்கள இராணுவம்தான் மேற்கொண்டது என்ற மாயையை இவ்வாவணம் தோற்றுவித்துள்ளது. இவ்வாவணத்தின் உள்ளடக்கத்தை, ஸ்ரீலங்கா இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொது மக்கள் படுகொலைகளாக மாத்திரமே காணமுடிகின்றது. இத்தகைய திட்ட மிட்ட தவிர்ப்புகளால் இந்நூலின் உள்ளடக்கம் பற்றிய நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கால மரணமொன்றைப் பதிவாக்கிய மற்றொரு நூல் *தம்பி ஜெயத்திற்கு* என்றபெயரில் ஈழத்துக் கவிஞர் காசி. ஆனந்தன் அவர்களால் எழுதப்பெற்று சென்னையிலிருந்து சுமார் இருபத்தி யொரு ஆண்டுகள் கழிந்த நிலையிலும் டிசம்பர் 2009 இல் மனதில் பொதிந்

திருந்த உணர்வுகள் மழுங்கா நிலையில் வெளிவந்திருந்தது. இந்திய அமைதி காக்கும் படையின் சுற்றிவளைப்பின்போது அதில் அகப்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்பின் இயக்க விதிகளுக்கமைய சயனைற் நஞ்சருந்தி 10.9.1988 இல் மடிந்தவர் சிவஜெயம் என்ற இயற்பெயர் கொண்ட மேஜர் சந்திரன். இந்நூல் வீரமரணமடைந்த போராளியான மேஜர் சந்திரனுக்கு அவரது தமையனார் காசி அனந்தன் எழுதிய கண்ணீர்க் கடிதமாக அமைகின்றது. இது வெறும் கடிதமாக அல்லாமல் ஒரு ஈழ விடுதலைப் போராளியின் குடும்ப வரலாறு, அவன் சார்ந்த ஒரு விடுதலைப் போராட்டத்தின் வரலாறு, என விரிகின்றது. ஈழத்தின் அறவழிப் போராட்டத்தின் முடிவில் வெடித்த புலிகளின் மறவழிப் போராட்டத்தின் தொடக்க வரலாற்றின் பதிவு இது வென்றால் மிகையாகாது.

இந்திய அமைதிகாக்கும் படையினர் ஈழமண்ணில் ஊடுருவியதால் ஏற்பட்ட விளைவுகளின் வடுக்கள் பல அழியாது பல இதயங்களில் இன்றும் நிலைகொண்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் புகலிட மண்ணிலும் இந்த வடுவை ஆண்டுதோறும் தடவிப்பார்த்து அந்த வடு உருவாகக் காரணமாயிருந்த காயத்தை மறவாது நினைவில் வைத்திருக்கும் பத்திரிகையாளர், திரு எஸ். திருச்செல்வம் அவர்களாவார். இன்று கனடாவில் ஒன்ராரியோ மாநிலத்தில் இருந்துகொண்டு பல புகலிட எழுத்தாளர்களுக்குத் தளம் அமைத்துக்கொடுத்த வண்ணம் இவர் பிரசுர இலக்கிய யாகம் நடத்திக் கொண்டிருக்கின்றார்.

1999இல் அவரது பதிப்பகத்தால் கனடாவிலிருந்து வெளியிடப்பட்ட தமிழன் கனவு என்ற வீணைமைந்தனின் நூலுக்கு அவர் வழங்கிய அகவுரையிலிருந்து அவரது வரிகளிலேயே இவ்வுணர்வினைச் சித்திரிக்க முனைகின்றேன்.

''இலங்கையில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவென அமைதிப்படை என்று தனக்குத் தானே நாமம் சூட்டிக்கொண்டு வந்தது இந்திய இராணுவம்- இது 1987ம் ஆண்டு. முதலாவதாக அவர்கள் வேட்டு வைத்தது பத்திரிகைச் சுதந்திரத்துக்கே. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முரசொலி பத்திரிகை அலுவலகம் குண்டுவைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டது. அதன் பிரதம ஆசிரியராகவிருந்த நான் கைதுசெய்யப்பட்டு வாரக்கணக்காக சிறைவைக்கப் பட்டேன். இருவருடங்களின் பின்னர் தமது கைப்பொம்மைகள் மூலம் என்னைக் கொல்வதற்கு இந்திய இராணுவம் விரித்த வஞ்சக வலையில் அகிலன் - எனது வாரிசு தனது உயிரைப் பறிகொடுத்தான். இந்த வருடம் மே மாதம் 10ம்திகதி அகிலனின் 15வது ஆண்டு நினைவு அனுஷ்டிக்கப் படுகிறது.''

இவ்வரிகளினூடாக ஒரு ஈழத்தமிழனின் பாதிப்பின் வலி உணரப் படுகின்றது.

நினைவுகளில் அகிலன் என்ற மலர் எஸ்.திருச்செல்வம் அவர்களைத் தொகுப்பாளராகக் கொண்டு, கனடா, அகிலன் அசோசியேட்ஸ் வெளியீடாக மே 1999 இல் வெளிவந்திருந்தது. பத்திரிகையாளர் எஸ். திருச்செல்வத்தின் புதல்வன் அகிலன் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட துன்பியல் சம்பவம் நிகழ்ந்து பத்து ஆண்டு நினைவாக 10.5.1999 அன்று அகிலன் பற்றி அவ்வப்போது கிடைத்த விடயதானங்களைச் சேர்த்துத் தொகுத்து வெளியிடப்பட்ட நினைவுமலர் இதுவாகும். ஈழப்போரின் துர்ப்பாக்கியமான தொரு காலகட்டத்தின் வரலாற்றுப் பதிவாக இந்நூல் அமைகின்றது.

இலண்டனில் தற்போது வாழும் ஈழத்துப் பத்திரிகையாளர் திரு ஈ. கே. இராஜகோபால், திருச்செல்வம் தம்பதியினரின் நெருங்கிய குடும்ப நண்பராவார். அகிலன் நினைவாக எழுந்த மேற்படி நூலில் தனது நினைவுப் பூக்களை ராஜகோபால் அவர்கள் பதிந்திருக்கின்றார். அதிலிருந்தும் சில துளிகளை பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும்.

''அகிலன்- படிப்பு, விளையாட்டு, எழுத்து, சமூகப்பணி என்று எல்லா வற்றிலும் முதன்மையானவனாகத் துள்ளி வளர்ந்த இளசு இவன். உயர் இலட்சியங்களுடன் உருவான உன்னத மாணவன். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அப்பா இனப்பற்றுமிகுந்த நாடறிந்த மூத்த பத்திரிகையாளர். அம்மா சமூகப்பற்றுமிக்க நல்லதொரு பாடசாலை ஆசிரியை. இந்தமாதம் ஐந்தாம் திகதி அவனின் முப்பத்தி நான்காவது பிறந்தநாள். இந்தமாதம் பத்தாம் திகதி அவனின் பதினைந்தாவது நினைவுதினம். உலகப் பிரவேசமும் பிரியாவிடையும் அகிலனுக்கு ஒரேமாதம்.''

''இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயருடன் தமிழீழத்துக்குள் காலடி வைத்தவேளையில், அதன் முகமூடியைக் கிழித்து சுயரூபத்தைத் தமிழ் மக்களுக்குக் காட்டியவர் அகிலனின் அப்பா. இதனால் அவர் ஆசிரியராகவிருந்து நடத்திய முரசொலி பத்திரிகை நிறுவனத்தின் கட்டிடம் அவர்களது குண்டுத்தாக்குதலால் செயலிழந்தது. இது 1987 அக்டோபர் 10 அதிகாலையில் இடம்பெற்றது.''

''அடுத்தகட்டம், அகிலனின் அப்பாவின் சிறைவாசம். யாழ். கோட்டை மறியற்சாலையில் இந்திய இராணுவத்தின் விருந்தாளியாக 82 நாட்களைக் கழித்தார். இவை எதிலும் நிம்மதி பெறாத இந்திய இராணுவமும், அவர்களின் அடிவருடிகளாகச் செயற்பட்ட துரோகக் குழுவினரும் சேர்ந்து 1989 மே 10ம் நாள் அகிலனின் அப்பாவைக் கொலைசெய்யத் திட்டம் தீட்டினர்.

தந்திரமாக அவர் அதிலிருந்து தப்பிவிட, அந்த மனிதவிரோதக் கும்பல்காரர், தந்தைக்காக அகிலனைப் பலியெடுத்தனர். எதுவுமறியாத, அப்பாவியான இந்தக் குழந்தையை, அற்புதமான மாணவக் கொழுந்தை, அனைவராலும் பாசமுடன் நேசிக்கப்பட்ட அகிலன் என்ற குழந்தையை மிருகவெறியர்கள் ஏன் கொலை செய்தார்கள்? அவன் செய்த குற்றமென்ன? தமிழீழத்தில் ஒரு பத்திரிகையாளனின் மகனாகப் பிறந்தது தான் அவன் இழைத்திட்ட ஒரே குற்றம்.''

இது புதினம் ஆசிரியர் திரு ஈ.கே. இராஜகோபால் அவர்கள் அகிலன் நினைவாக எழுந்த மலரொன்றுக்கு இலண்டனிலிருந்து வழங்கிய நினைவுப்பூ வரிகள்.

திருச்செல்வம் தம்பதியினர், தங்கள் அன்புமகன் அகிலனுடன் வாழ்ந்த பத்தொன்பது ஆண்டு நினைவுகளையும் சுமந்தவண்ணம் பின்னாளில் புலம்பெயர்ந்து கனடாவில் தமது வாழ்வைத் தொடர்கின்றனர். கனேடியத் தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்ட ஈழத்தமிழர்களில் இவர்கள் தங்கள் தனித்துவத்தை அடையாளம்காட்டி நிற்கின்றனர். எமது மொழி, கலை கலாச்சாரம் பாரம்பரியம் இலக்கியம் பண்பாடு போன்ற செழிப்பான சொத்துக்கள் எதனையும் புகலிடவாழ்வில் தொலைக்காது பேணிப்பாதுகாத்து வரும் புலம்பெயர் தமிழர் வாழ்வியலை நன்கு பிரதிநிதித்துவப்படுத்தியும் வருகின்றனர்.

புலம்பெயர் மண்ணில், தமிழ்ப்பணிக்கென தங்கள் மைந்தன் அகிலனின் பெயரால் உருவாக்கப்பட்ட அகிலன் அசோஷியேற்ஸ் வெளியீட்டகத்தின் வாயிலாக 30க்கும் அதிகமான தரமான வெளியீடுகளை இதுவரை தமிழ் உலகத்திற்கு இவர்கள் வழங்கியுள்ளனர். வருடம் தோறும் நினைவுமலராக நல்ல கட்டுரைகளைத் தாங்கிய நூல்களை வெளியிடுதல், அகிலன் நினைவாக விருதுகளுடன் தங்கப்பதக்கங்களை வழங்குதல், பல போட்டிகளில் அகிலன் நினைவுப் பரிசுகளையும் சின்னங்களையும் வழங்குதல் என்று மகனின் நினைவாக இவர்களின் பணிகள் நீண்டுகொண்டே செல்கின்றன. இவற்றில் குறிப்பிடத்தகுந்ததாக அமையும் மற்றொரு சேவை, கனேடியத் தமிழர்களின் அன்றாட இயல்புவாழ்வுக்குத் துணைபுரியக்கூடியதான பல்வேறு அரசதுறை கள் சம்பந்தமானதும், குடிவரவு, குடியகல்வு சம்பந்தமானதுமான சிக்கலான தகவல்களை எளிய தமிழில், கனேடியத் தமிழர்களுக்கு இலகுவில் புரியக் கூடியவகையில் தமிழர் தகவல் என்ற சஞ்சிகை வழியாக மாதாந்தம் இலவச மாக வழங்கிவருவதாகும்.

இந்திய இராணுவத்தினால் பாதிப்புக்குள்ளான மற்றுமொரு பத்திரிகையாளர் கோபு என்றும் எஸ்எம்ஜி என்றும் பரவலாக பத்திரிகைத்துறையில் அறியப்பட்ட எஸ்.எம்.கோபாலரத்தினம் ஆவார். யாழ்ப்பாணத்தின் ஈழநாடு, ஈழமுரசு பத்திரிகைகளிலும், மட்டக்களப்பில் தினக்கதிர் பத்திரிகையிலும் ஆசிரியப் பொறுப்பில் இருந்தவர். *ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை* என்ற நூல் எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்களால் எழுதப்பட்டு மட்டக்களப்பு: World voice Publications நிறுவனத்தால் ஆகஸ்ட் 2000 இல் வெளிவந்தது. பின்னர் தமிழகத்தில் தோழமை வெளியீடாக ஜூலை 2007இலும் மீள்பதிப்புக் கண்டது. நவம்பர் 1989 முதல் தமிழகத்தின் ஜூனியர் விகடனில் தொடராக வெளிவந்த இக்கட்டுரைத் தொடர் பலத்த அதிர்வினை தமிழக மண்ணில் அவ்வேளையில் ஏற்படுத்தியிருந்தது. இந்திய அமைதிப்படை பற்றிய மாயையை ஓரளவு நீக்கிய வலிமை இத்தொடருக்கு இருந்தது. இந்நூலில் இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டதன் பின்னரான இரண்டு மாத சிறைஅனுபவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டதிலிருந்து விடுதலையாகும் வரை நடந்த நிகழ்வுகள், சிறையில் சந்தித்தவர்கள், அவர்களிடமிருந்து கேட்டறிந்தவை அனைத்தும் இந்நூலில் பதிவுக்குள்ளாகியுள்ளன.

அமைதிப்படையின் பிரசன்னம் பற்றிய ஆய்வுகளும் பின்னூட்டங்களும்

1987 இல் கைச்சாத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதி காக்கும் படையின் வரவு, சமாதானப்படை, ஆக்கிரமிப்புப் படையாக மாறிய தன் காரண காரியங்களை அலசி ஆராய்ந்து பின்னாளில் பல வெளியீடுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கின்றன. பல தமிழக எழுத்தாளர்களும் இது பற்றி விரிவாக எழுதியிருப்பதாக அறியமுடிகின்றது. இக்கட்டுரை பெரும்பாலும் ஈழத்துப் படைப்புகளையே முதன்மைப்படுத்தி எழுப்படுகின்ற போதிலும், இப்பிரச்சினை தொடர்பாக வெளிப்படையாகத் தமிழகத்தில் ஒலித்த பழ. நெடுமாறன் அவர்களது குரலின் வெளிப்பாடாயமைந்த நூலொன்றை முக்கியத்துவம் கருதி இங்கு குறிப்பிடுகின்றேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை: தில்லியின் துரோகக் கொள்கை என்ற தலைப்பில் எழுந்த இந்நூல் தமிழக அரசியல்வாதியான பழ. நெடுமாறன் அவர்களால் எழுதப்பட்டு சென்னை தமிழ்க்குலம் பதிப்பாலயத்தினால் செப்டெம்பர் 1987 வெளியிடப்பட்டது. இந்நூலில் இந்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட செயற்பாடுகள், மலையகத் தமிழரின் பிரஜாவுரிமை பறிப்புக்கு உடந்தையாக இருந்தது முதல் அமைதிப்படையை அனுப்பி ஈழத்தமிழர்களின் உயிரைப்பறித்தது வரையிலான நடவடிக்கைகள்

விரிவாக ஒரு தமிழகத்தைச் சேர்ந்த ஈழவிடுதலை ஆதரவாளரின் பார்வையில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகராகவும் தத்துவாசிரியராகவும் வாழ்ந்து மறைந்தவர் அன்டன் பாலசிங்கம் (04 மார்ச் 1938- 14 டிசம்பர் 2006). அவர் எழுதிய இரண்டு நூல்கள் இலங்கையில் இந்திய இராணுவப் பிரசன்னம் பற்றிய பதிவுகளைக் கொண்டுள்ளன.

விடுதலை: கட்டுரைத் தொகுப்பு என்ற நூல் அன்ரன் பாலசிங்கம் எழுதி நவம்பர் 2003 இல் வெளியிட்டிருந்த நூலாகும். பல்வேறு காலகட்டங்களிலும் அவர் எழுதிய முக்கிய அரசியல் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப் பெற்றிருந்தன. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர் களின் பங்களிப்பும், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்னணியில் 1987 ஜூலையில் புதுடில்லியில் நிகழ்ந்த சந்திப்பின்போது ராஜீவ்-பிரபாகரன் இடையே செய்து கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் உள்ளிட்ட பல விடயங்களையும் தெளிவுபடுத்தும் 11 கட்டுரைகள் இதில் உள்ளன.

போரும் சமாதானமும்: விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு என்ற தலைப்பில் செப்டெம்பர் 2005 இல் அவர் எழுதிய மற்றொரு நூல் லண்டனிலிருந்து வெளிவந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் 27 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்பு கொண்டிருந்த நூலாசிரியரின் இந்த அரசியல் வரலாற்று நூல், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை விறுவிறுப்பாக விளக்கிக் கூறமுனைந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் பிறப்பெடுத்த கொந்தளிப்பான அரசியல் பின்னணி, அதன் ஆரம்பகால ஆயுதப் போராட்டம், காலப்போக்கில் அதன் அபாரமான போரியல் வளர்ச்சி என்ற ரீதியில் புலிகள் அமைப்பின் புரட்சி கரமான போராட்ட வரலாற்றை உண்மைத் தகவல்களுடன் உள்வீட்டுப் பிள்ளையின் பதிவாக வெளிப்படுத்தியது. ஒருபுறம் நீண்ட தொடர்ச்சியான, இரத்தம் சிந்தும் ஆயுதப் போராகவும், மறுபுறம் அமைதிவழியில் தீர்வுகாணவேண்டிய சமாதான முயற்சிகளாகவும் கட்டவிழ்ந்த விடுதலைப் புலிகளினது போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளையும், திருப்பங் களையும் காலவரிசையில் மிக நேர்த்தியாக இந்நூல் எடுத்துக் கூறியது.

இலங்கையின் வடமேல் மாகாணத்தின் சிலாபத்துக்கு அருகேயுள்ள மருதங்குளம் என்ற கிராமத்தில் பிறந்தவர் ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் அவர்கள். 1960களில் இலங்கை வானொலி அறிவிப்பாளராகிய இவர்

மூன்று தசாப்தங்களாக இலங்கை வானொலியில் பணியாற்றியவர். சங்க இலக்கியப் புலமைபெற்றவர். ஜனரஞ்சகத் திரைப்படப் பாடல்களினூடாக சங்க இலக்கியத்தின் ரசனையை பாமர மக்களிடம் அக்காலத்தில் எடுத்துச் சென்றவர். *மனம் போன போக்கில்* என்ற நூல் ராஜகுரு சேனாதிபதி கனகரெட்ணம் அவர்கள் இதுவரை எழுதிய ஒரே ஒரு நூலாகும். செப்டெம்பர் 1988 இல் இவர் எழுதிய இந்நூலில் தனது மனப்பதிவை எழுத்தில் தெளிவாக வடித் திருந்தார். இலங்கையில் இந்திய இராணுவம் கால்பதித்த வேளையில் பலத்த எதிர்பார்ப்புகளுடன் இருந்த ஈழத் தமிழர்களின் நம்பிக்கைகள் படிப்படியாக IPKF இன் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளாலும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா அரசின் திட்டமிட்ட காய் நகர்த்தல்களாலும் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்டம் கண்ட வேளையில் 27.10.1987 திகதி வரை தனது உணர்வுகளையும், வேதனைகளையும் நூலாசிரியர் பதிவாக்கியிருக்கிறார். ஒலிபரப்புத்துறையில் நீண்டகாலம் பணியாற்றிய இவர், இலங்கை வானொலியில் பணியாற்றிய வேளையில் பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவங்களும் அவநம்பிக்கையூட்டும் சம்பவங்களும் இக்கட்டுரையின் பின்னணியில் இழையோடுகின்றன.

சிதைந்த சித்தாந்தங்கள் என்ற நூல் இலங்கை- சமூக விஞ்ஞான கலை இலக்கியக் கழகம், என்ற அமைப்பினால் ஏப்ரல் 1990 இல் வெளியிடப் பட்டது. ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற பல்வேறு போராளிக் குழுக்களின் நடவடிக்கைகளையும் பதியும் வகையில் உருவாக்கப்பட்ட நூல் இதுவாகும். இந்தியப்படை வெளியேற்றம், இலங்கை அரசின் நிலைப்பாடு, இலங்கை இந்திய ஒப்பந்தம், இடைக்கால நிர்வாகம், விடுதலைப்புலிகளின் இன்றைய நிலைப்பாடு, கல்வித் தரப்படுத்தலும் தமிழ் மாணவர் எதிர்ப்பும், தமிழ்ப்புதிய புலிகள் உருவாக்கம், பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை கொலை, மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல், சுந்தரம் கொலை, தமிழ் இயக்கங்களின் முக்கிய இராணுவ செயற்பாடுகள் எனப் பல்வேறு வரலாற்றுக் குறிப்புக்கள் இந்நூலில் பதியப்பட்டுள்ளன. பாதுகாப்புக் கருதி, வெளியிட்ட இடம், அச்சகம் போன்ற விபரங்கள் நூலில் காணப்படவில்லை.

ஈழத்து நவீன கவிதைத் துறையிலும், கலை-இலக்கியத்துறையிலும் ஆழக்கால் பதித்தவர் சேரன். கவிஞர் மகாகவி (உருத்திரமூர்த்தி)யின் மகனான சேரன் கவிதைத்துறை, ஓவியத்துறையுடன் பத்தி எழுத்துக்களிலும் ஈடுபாடு கொண்டவர். ஈழத்து அரசியல் நிலைமைகளை இவர் கட்டுரைகள் வாயிலாகவும், பத்தி எழுத்துக்களின் வழியாகவும் பதிவுசெய்து வருகின்றார். 1983 இல் இவரது முதலாவது நூல் *இரண்டாவது சூரிய உதயம்* வெளியாகியது.

தொடர்ந்தும் பல கவிதைத் தொகுதிகளையும், கட்டுரைத் தொகுதிகளையும் வழங்கிய இவரது *உயிர் கொல்லும் வார்த்தைகள்* என்ற நூல்பற்றி இக் கட்டுரையில் குறிப்பிடப்படுவது பொருந்தும். டிசம்பர் 2001 இல் வெளிவந்த இந்நூல் திசை, வீரகேசரி, சரிநிகர், செந்தாமரை(கனடா), ஆகிய இதழ்களில் வெளிவந்த சேரனின் பத்திகளின் தொகுப்பாகும். ஈழப்போராட்டம், ஐரோப்பிய பயண அனுபவங்கள், தமிழ் தேசியவாதம், திரைப்படம், மொழி, இதழியல், இசை, ஈழத்து முஸ்லிம்களின் நிலை எனப் பல பொருள்கள் சுதந்திர மான விவாதத்திற்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக இலங்கையில் இந்திய இராணுவத் தலையீடு பற்றிய இவரது கருத்துக்களை இந்நூல் பதிவுசெய் திருக்கிறது. புதிய தகவல்களையும் புதிய பார்வையினையும் அங்கதச் சுவை யுடன் இயல்பான கவித்துவ நடையில் சேரன் தன் பத்திகளில் வெளிப்படுத்தி யிருக்கின்றார்.

இலங்கையில் இந்திய இராணுவத்தின் பிரசன்னம் பற்றித் தமிழில் வெளிவந்த நூல்களைப் போலவே சிங்கள மொழியிலும் பல நூல்கள் அக்காலகட்டத்தில் வெளிவந்திருந்தன. குறிப்பாக சிங்கள புத்தி ஜீவிகளால் தொகுக்கப்பட்ட பல நூல்களுள்- தமிழாக்கம் செய்யப்பட்ட ஒரு தொகுப்பு நூல் பற்றி இங்கு குறிப்பிட்டுச் செல்வது பொருத்தமாக இருக்கும்.

இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள், மற்றும் பாடங்கள் என்ற தலைப்பிலான பாரிய தொகுப்பொன்று இரண்டு தொகுதி களில் வெளிவந்திருக்கிறது. முதலாவது தொகுதி 2002 இல் வெளி வந்தது. சிங்கள புத்திஜீவியான குமார் ரூபசிங்க இதனைத் தொகுத்திருந்தார். திம்புக் கோட்பாடுகளை மீட்டுப்பார்த்தல்: ஓர் ஒருங்கிணைப்புக் கண்ணோட்டம் (சுமனசிறி லியனகே, நிரூபா விக்கிரமசிங்க), LTTEயின் தோற்றமும் 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தமும் (தோமஸ் ஏப்ரஹாம்), இலங்கையில் இந்தியத் தலையீடும் 1987ம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தமும்: ஒரு பின்நோக்கிய மதிப்பீடு (J.N.டிக்ஷிட்), இலங்கை அரசாங்கமும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் வரையிலான சமாதான முயற்சிகளும்: படிப்பினைகளும் அனுபவங்களும் (பேர்னாட் திலகரட்ன), இந்திய-இலங்கை ஒப்பந்தமும் இனப்பிரச்சினையும்: படிப்பினைகளும் அனுபவங்களும் (கேதீஸ்வரன் லோகநாதன்), புலனாய்வு மற்றும் பாதுகாப்பு முகவர்களின் வகிபங்கு (எம்.கே.நாராயணன்), ஜனாதிபதி பிரேமதாசவின் இலங்கை அரசாங்கத் திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் 1989-1990 (பிரட்மன் வீரக்கோன்), ஜனாதிபதி பிரேமதாசவுக்கும் LTTEயிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை: ஒரு பின்னோக்கிய மதிப்பீடு

(A.J.I.சந்திரகாந்தன்), ஆண்டு 1989-90 பிரேமதாச-LTTE பேச்சுவார்த்தைகள் ஏன் தோல்வியடைந்தன? உண்மையில் நடந்தது என்ன? (தயான் ஜயதிலக்க), அரசாங்கம் LTTE பேச்சுவார்த்தைகள் 1994-1995 மற்றுமொரு இழந்த வாய்ப்பு (P. இராஜநாயகம்), இலங்கையின் இன முரண்பாடு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமை பற்றியதொரு பகுப்பாய்வு (ஜெஹான் பெரேரா), நோர்வே நாட்டு வசதிப்படுத்தல் மூலமான அரசாங்கம் LTTE பேச்சுவார்த்தை முயற்சி 2000 சூழமைவு, சிக்கனத் தன்மைகள் மற்றும் பாடங்கள் (ஜயதேவ உயங்கொட), இலங்கையில் தொடரும் முரண்பாடு களும், அணி திரட்டப்பட்ட புலம்பெயர் தமிழர்களின் தாக்கமும் (ரொஹான் குணரட்ன), சமாதானத்திற்கான முக்கிய தடை மனப்பாங்கு (ராஜன் ஸ்ரீஸ்கந்தராஜா) ஆகிய 14 கட்டுரைகளும், இவை தொடர்பான கடிதங்களும், மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் பின்னிணைப்பாகவும் தரப்பட்டிருந்தன.

இந்நூலின் இரண்டாவது பாகம் 2006இல் வெளிவந்தது. அதே வேளை யில் முதற்பாகத்தின் 2வது பதிப்பும் கூடவே வெளியிடப்பட்டிருந்தது. முதற் பாகம் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு உள்ளிட்டதாக 2000ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்குரிய ஆய்வாக அமைந்திருந்த நிலையில், இரண்டாவது தொகுதி அதன் பின்னைய சமாதானச் செயற்பாடுகள் பற்றிய ஆய்வாக அமைந்திருந்தது.

கண்டி மாவட்டத்தின் பேராதனையைச் சேர்ந்த சார்ள்ஸ் தயாநந்த இலங்கையின் பிரபல்யமான கருத்தோவியக் கலைஞர் (கார்ட்டூன் ஓவியர்). 1971 இல் கிளர்ந்தெழுந்த ஆயுதப் போராளிகளுள் ஒருவர். ஜூலை 1971இல் அரசினால் கைதுசெய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் தீவிர சிறைவாசத்தின் பின்னர் 1977இல் விடுதலையாகியவர். *யுத்தத்தின் வரலாறு* என்ற நூல் சார்ள்ஸ் தயானந்தவின் கார்ட்டூன் சேகரிப்புகளின் தொகுப்பாகும். பேராதனை: : National Integrated programme Unit and Media Circle அமைப்பினால் ஏப்ரல் 2000இல் வெளியிடப்பட்ட இவ்வோவியத் தொகுப்பு, 23-26 ஒக்டோபர் 1998 இல் நடைபெற்ற கண்காட்சியில் இடம்பெற்ற சமகால அரசியல் கேலிச் சித்திரங்களைக் கொண்டிருந்தது. இவை 1980-98 வரையான காலப்பகுதியின் இலங்கை அரசியல் நிலவரங்களை கருத்துப் படங்களாக்கியிருந்தன. இத் தொகுப்பினூடாக 20 வருட கால அரசியல் இன வாத குழப்ப நிலை படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளதுடன் இந்திய அமைதிப்படை பற்றிய சிங்கள மக்களின் பார்வையும் ஆங்காங்கே பதிவாகியுள்ளன.

முடிவுரை

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும்- இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட நிகழ்வு, முன்னதாக வானிலிருந்து உணவுப்பொட்டலங்களை துணிச்சலுடன் போட்டுச்சென்ற இந்திய வான்படையின் துணிச்சலை வியந்திருந்த தமிழர் மனங்களில் இந்தியா பற்றிய பாரிய நம்பிக்கையை ஊட்டியிருந்தது. அந்த நம்பிக்கை படிப்படியாகச் சிதைவடைந்த வரலாறு மேற்குறிப்பிட்ட நூல்களின் வாயிலாக ஓரளவு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றே நம்புகின்றேன். இருப்பினும், இன்னும் பதிவுசெய்யப்படாத நிகழ்வுகள் ஏராளம் உள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும், தமிழ் மண்ணின் ஒவ்வொரு நிறுவனத்துக்குள்ளும் இக்காயம் நீண்ட காலமாக நீறுபுத்த நெருப்பாகவே கடந்துசென்றுவிட்டன.

குறிப்பாக இந்திய இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் கைப்பற்றியவேளையில் அங்கு கலைத்துறைப் பணியகங்களில் சேகரிக்கப் பட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வேடுகள் உள்ளிட்ட பல நூல்கள் எரிக்கப்பட்ட நிகழ்வும் சொத்துக்கள் அழிக்கப்பட்ட சம்பவங்களும் பல்கலைக்கழக புத்திஜீவிகளால் போதிய அளவு வெளியுலகிற்கு வெளிப் படுத்தப்படவில்லை என்றே கருதுகின்றேன்.

மேலும் பெருங்கற்கால யாழ்ப்பாணம் பற்றிய அகழ்வாராய்ச்சி நிகழ்த்தப்பட்ட வேளையில் யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழியும் அதனுள்ளிருந்த 5000 ஆண்டுகள் பழைமைவாய்ந்த எலும்புக்கூடும் அந்த அகழ்வாராய்ச்சியின்போது கண் டெடுக்கப்பட்ட அணிகலன்களும், வரலாற்றுத்துறைக் கட்டிடத்தின் ஒரு பிரிவில் செ. கிருஷ்ணராஜா, பரமு புஷ்பரட்ணம் உள்ளிட்ட வரலாற்றுத் துறை ஆய்வாளர்களால் பொக்கிஷமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்திய இராணுவம் பல்கலைக்கழகக் கட்டிடத்தை ஆக்கிரமித்தன் பின்னர் அவற்றுக்கு என்ன நடந்ததென்றே அறியமுடியவில்லை. இது பற்றிய பதிவும் எவ்வித ஆவணங்களிலும் வெளிப்படுத்தப்படவில்லை என்று கருதுகின்றேன்.

எமது வரலாறு முறையாகப் பதியப்படாமல் கடந்த 150 ஆண்டுகளாக எம்முன்னோர்கள் விரயம் செய்தமையின் காரணமாக எமது வரலாற்றை மகாவம்சத்திலும், பிற இலக்கியங்களிலும், கற்பனைக் கதைகளிலுமே தேடி அலையவேண்டிய துர்அதிர்ஷ்டம் மிக்கவர்களானோம். அதன் பலனை இன்று நாம் நாடற்றவர்களாக உலகெங்கிலும் அலைந்தும் சொந்த மண்

ணிலேயே உரிமையற்றவர்களாக நின்றும் அனுபவிக்கின்றோம். இப்பொழுது இந்த 21ம் நூற்றாண்டிலும் கூட முறையாக அவற்றைப் பதிவுசெய்யவேண்டும் அல்லது அவ்வாறு பதிவுசெய்ய முனைபவருக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்ற உணர்வுகூட ஈழத்தமிழர்களுக்குப் போதியளவு ஏற்படவில்லை என்பது எனது அனுபவபூர்வமான வேதனைமிக்க கருத்தாகும். இன்றளவில் இத்தகைய வரலாற்றுப்பதிவை மேற்கொள்ளத் தனித்து முனையும் தனிநபர்களைக்கூட எமது மக்கள் இனம்கண்டுகொள்ளாதிருப்பதை நாம் கூர்ந்து கவனித்தால் இலகுவில் கண்டறிந்தும் புரிந்தும் கொள்ளலாம். பொதுநல நோக்கம்கொண்ட தனி நபர்களே பாதையையும் உருவாக்கி அதில் பயணிக்கவேண்டியதொரு துர்அதிர்ஷ்டவசமான நிலைமையை எமது ஈழத்துத் தமிழ் இனம் கண்டும் காணாதிருப்பது வருத்தத்திற்குரியதாகும். இந்நிலைமை மாறும் வகையில் முடிந்தவரை எம்மவர்கள் இத்தகைய வரலாற்றுப்பதிவுகளை முன்னெடுக்க உதவிக்கரம் நீட்டவேண்டும்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்களுக்கான நூலியல் விபரங்கள்

அக்கினிக் கரங்கள். நாவண்ணன். மன்னார்: ஸ்ரீனா வெளியீட்டகம், 89, புனித செபஸ்தியார் வீதி, 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, ஐப்பசி 1995. (மன்னார்: ஸ்கை அச்சகம்) (vi), 149 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ.

அக்னி திரவம்: கனவுச் சிறையின் 3ம் பாகம். தேவகாந்தன். சென்னை 600024: பல்கலைப் பதிப்பகம், 25, தெற்குச் சிவன்கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (சென்னை 600024: அலைகள் அச்சகம்). 312 பக்கம், விலை: இந்திய ரூபா 100. அளவு: 21x14 சமீ. (மேலும் பார்க்க: கனவுச்சிறை, உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம், வினாக்காலம்)

அம்மாளைக் கும்பிடுறானுகள்: உண்மைக்கதைகள். தொகுதி 1. லண்டன்: வெளியீட்டுப்பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள், 2வது பதிப்பு, ஆகஸ்ட் 1997. 1வது பதிப்பு, ஆகஸ்ட்1994. (லண்டன்: வாசன் லித்தோ பிரின்ட்) 132 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x13.5 சமீ.

இந்திய-இலங்கை ஒப்பந்தம்: விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. அரசியல் பிரிவு. அவுஸ்திரேலியா: அரசியல் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், அவுஸ்திரேலியக் கிளை, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை). 24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இந்தியம், ஈழம், நக்சலியம். சாலய் இளந்திரயன். சென்னை 86: சாலய் வெளியீடு, பேரவய் இல்லம், 11, திருவீதியான் தெரு, கோபாலபுரம், 2வது பதிப்பு, அக்டோபர் 1989, 1வது பதிப்பு, மே 1989. (சென்னை 86: சாலை அச்சகம், 11 திருவீதியான் தெரு, கோபாலபுரம்).192 பக்கம், விலை: இந்திய ரூபா 7.50, அளவு: 18x12.5 சமீ.

இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சினையும்:சில உண்மை விளக்கங்கள். தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, டிசம்பர் 1987. (அச்சக விபரம் குறிப்பிடப் படவில்லை).32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 17.5x12 சமீ.

இந்து சமுத்திரப்பிராந்தியமும் இலங்கை இனப் பிரச்சினையும். உதயன், விஜயன்.(புனைபெயர்) யாழ்ப்பாணம்: வெளியீட்டாளர் விபரம் குறிப்பிடப்படவில்லை, 1வது பதிப்பு, மார்ச் 1987. (யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிக்கேசுன்ஸ்). vi, 132 பக்கம். விலை: ரூபா 20. அளவு: 21x13.5 சமீ.

இந்து சமுத்திரப் பிராந்தியமும் இலங்கை இனப் பிரச்சினையும். உதயன், விஜயன். சென்னை 33: ரோசா லக்சம்பேர்க் படிப்பு வட்டம், 2வது பதிப்பு, மார்ச் 1988. (சென்னை 04: மிதிலா அச்சகம்) 175 பக்கம், விளக்கப்படங்கள். விலை: இந்திய ரூபா 15. அளவு: 21x14 சமீ.

இலங்கைத் தமிழர் பிரச்சினை: தில்லியின் துரோகக் கொள்கை. பழ.நெடுமாறன். சென்னை 600004: தமிழ்க்குலம் பதிப்பாலயம், 33, நரசிம்மபுரம், மயிலாப்புர், 2வது பதிப்பு. மே, 2001, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1987. (மதுரை 625001: விவேகாநந்தா அச்சகம், 48, மேலமாசி வீதி). 88 பக்கம், விலை: இந்திய ரூபா 10. அளவு: 18x12 சமீ.

இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள், மற்றும் பாடங்கள் தொகுதி 1. குமார் ரூபசிங்க (தொகுப்பாசிரியர்). கொழும்பு 3: ஆய்வு மற்றும் ஆவண நிலையம், சகவாழ்வுக்கான மன்றம், 105/3, ஐந்தாவது ஒழுங்கை, 2வது பதிப்பு, பெப்ரவரி 2006, 1வது பதிப்பு, 2002. (மகரகம: இம்பல்ஸ் அச்சக மற்றும் வெளியீட்டாளர்கள், இல.83, பிலியந்தலை வீதி). xxxii, 464 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-1358-04-x.

இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள், மற்றும் பாடங்கள் தொகுதி 2. குமார் ரூபசிங்க (தொகுப்பாசிரியர்). கொழும்பு - 3: ஆய்வு மற்றும் ஆவண நிலையம், சகவாழ்வுக்கான மன்றம், 105/3, ஐந்தாவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2006. (மகரகம: இம்பல்ஸ் அச்சக மற்றும் வெளியீட்டாளர்கள், இல.83, பிலியந்தலை வீதி). xcix, 556 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-1358-05-8.

இலங்கையின் இனப்போராட்டமும் இந்திய-இலங்கை ஒப்பந்தமும். தமிழ்ஈழ மக்கள் மன்றம். யாழ்ப்பாணம்: த.ஈ.ம. மன்றம், 121 பருத்தித்துறை வீதி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம்). (4),70 பக்கம். விலை: ரூபா 12. அளவு: 20x14 சமீ.

இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும். இமயவரம்பன். சென்னை 600002: புதிய புமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், 6/1 தாயார் சாஹிபு 2வது சந்து, 2வது பதிப்பு, ஆகஸ்ட் 1995, 1வது பதிப்பு, ஜுன் 1988. (சென்னை 41: சூரியா அச்சகம்). 176 பக்கம், விலை: இந்திய ரூபா 30. அளவு: 18x12.5 சமீ.

ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை. எஸ்.எம். கோபாலரத்தினம். மட்டக்களப்பு: World voice Publications 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. (மட்டக்களப்பு: ஈஸ்வரன் கிராபிக்ஸ் அச்சகம்). 170 பக்கம். விலை: ரூபா 150.00, அளவு: 21.5x15 சமீ.

உதிர்வின் ஓசை: கனவுச்சிறையின் நான்காம் பாகம். தேவகாந்தன். சென்னை 600024: பல்கலைப் பதிப்பகம், 25, தெற்குச் சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600002: அலைகள் அச்சகம்). 320 பக்கம், விலை: இந்திய ரூபா 100. அளவு: 21x14 சமீ. (மேலும் பார்க்க: அக்னி திரவம், கனவுச்சிறை, ஒரு புதிய காலம், வினாக்காலம்)

உயிர் கொல்லும் வார்த்தைகள். சேரன். நாகர்கோவில்: 629001: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி. சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600005: மணி ஆப்செட்). 224 பக்கம், விலை: இந்திய ரூபா 90. அளவு: 21x14 சமீ. (ISBN: 81 87477 17 2).

ஒரு புதிய காலம்: கனவுச் சிறையின் இறுதிப்பாகம். தேவகாந்தன். சென்னை 600024: பல்கலைப் பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 600024: அலைகள் அச்சகம்). 128 பக்கம், விலை: இந்திய ரூபா 40. அளவு: 21x14 சமீ. (மேலும் பார்க்க: அக்னி திரவம், கனவுச்சிறை, உதிர்வின் ஓசை, வினாக்காலம்)

ஓ கனடா. பாரதிநேசன் (இயற்பெயர்: வீ.சின்னத்தம்பி). வட்டுக்கோட்டை: வீ.சின்னத்தம்பி, சம்பந்தர் வீதி, வட்டு மேற்கு, 1வது பதிப்பு, மார்ச் 1994. (யாழ்ப்பாணம்: அருண் பிரிண்டர்ஸ், 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி).(4), 95 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20.5x14.5 சமீ.

கனவுச்சிறை: முதலாம்பாகம்: திருப்படையாட்சி. தேவகாந்தன். சென்னை 600 094: இலக்கு நூல்கள், 1வது பதிப்பு, ஜூன் 1998. (சென்னை 600024: MLM Printers, 36, Arcot Road). 254 பக்கம், விலை: இந்திய ரூபா 75. அளவு: 21.5x14 சமீ. (மேலும் பார்க்க: அக்னி திரவம், உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம், வினாக்காலம்)

குருதிக் குளியல். கலையார்வன். (இயற்பெயர்: கு.இராயப்பு). யாழ்ப்பாணம்: நெயோ கல்சரல் கவுன்சில், 28/1, சென்.ஜேம்ஸ் மேற்கு வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2007. (யாழ்ப்பாணம் மாணவர் மறுதோன்றி அச்சகம்). xvi, 176 பக்கம், விலை: ரூபா 250.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-50063-0-X.

சகோதரப் படுகொலைகளும் தமிழினத் துரோகிகளும். கே.சி.என். (புனைபெயர்) இலங்கை: பிரச்சார வெளியீட்டுப் பிரிவு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), 1வது பதிப்பு, கார்த்திகை 1988. (அச்சக விபரம் தரப்படவில்லை). 32 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 21x15 சமீ.

சிதைந்த சித்தாந்தங்கள். ஆசிரியர் குழு. இலங்கை: சமூக விஞ்ஞான கலை இலக்கியக் கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1990. (அச்சக விபரம் அறியமுடியவில்லை). (4), 44 பக்கம், விலை: ரூபா 7. அளவு: 18x12.5 சமீ.

சோகங்களிலும் துயரமனது. கௌரி. சென்னை 600 083: சமூக ஆய்வு வட்டம், 264, 16ஆவது அவென்யு, அஷோக் நகர், 1வது பதிப்பு, சித்திரை 1988. (சென்னை 600 086: ரோமா ஆப்செட் பிரிண்டர்ஸ்). 66 பக்கம், விலை: இந்திய ரூபா 7.00, அளவு: 16x10.5 சமீ.

தம்பி ஜெயத்திற்கு. காசி. ஆனந்தன். சென்னை 600017: காசி ஆனந்தன் குடில், யு-6-1, வெள்ளிப் புங்கா அடுக்ககம், 24 தணிகாசலம் தெரு, தியாகராய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மாசறு 28/8 முத்துக் காளத்தி தெரு, திருவல்லிக்கேணி). 187 பக்கம், விலை: இந்திய ரூபா 120.00, அளவு: 18x12 சமீ.

தமிழினப் படுகொலைகள் 1956-2008. வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR. சென்னை 600 014: மனிதம் வெளியீடு, Manitham-Human Rights Organisation, 274-GC, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, 2009. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை). xxiv, 360 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: (நூலகப் பதிப்பு) இந்திய ரூபா 399.00, (சாதாரண பதிப்பு) இந்திய ரூபா 299.00, அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-81-909737-1-7.

நினைவில் சில நிகழ்வுகள். தமிழீழ விடுதலைப் புலிகள். நோர்வே: தாய் நிலம் பதிப்பகம், Tamil Co-ordinating Committee Norway, Post Boxes 1699, Vika, 0110 Oslo, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை). (4), 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

நினைவுகளில் அகிலன். எஸ்.திருச்செல்வம் (தொகுப்பாளர்). கனடா: அகிலன் அசோஸியேட்ஸ், 1வது பதிப்பு, மே 1999.(கனடா: அகிலன் அசோசியேற்ஸ்) 44 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு 28x21 சமீ.

நோயில் இருத்தல். மு.பொன்னம்பலம். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3 மெய்கை விநாயகர் தெரு, வடபழநி, 1வது பதிப்பு, 1999. (சென்னை 600014: Monark Graphics) 290 பக்கம். விலை: இந்திய ரூபா 85.00, அளவு: 22x14 சமீ.

பிரம்படி: சிறுகதைகள். க.தணிகாசலம். கொழும்பு - 11: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சென்னை 2: சவுத் ஏஷியன் புக்ஸ், 6, தாயார் சாஹிப் 2ஆவது சந்து, 1வது பதிப்பு, ஜுலை 1988. (சென்னை: விசாலம் பிரிண்டிங் ஹவுஸ்). 195 பக்கம், விலை: இந்திய ரூபா 17.00, அளவு: 18x12.5 சமீ.

பெயரறியாப் பெரியோன்: காலமும் கவிதையும். தி. உதயசூரியன். யாழ்ப்பாணம்: பட்டப் படிப்புகள் கல்லூரி, 57/13, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, ஆடி 2002. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் ஒப்செட் பிரின்டிங், நல்லூர்). xii, 44 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 70., அளவு: 20x14 சமீ.

போரும் சமாதானமும்: விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு. அன்ரன் பாலசிங்கம். லண்டன்: பெயர்மக்ஸ் பதிப்பகம், த.பெ. 2454, மிச்செம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (லண்டன் CR4 1WB: வாசன் அச்சகம், மிச்செம்).

மனம் போன போக்கில். ராஜகுரு சனாதிபதி கனகரெட்ணம். கொழும்பு - 6: வேங்கடவன் பதிப்பகம், 13/3, அலெக்சாண்ட்ரா வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1988. (சென்னை 600008: டார்வின் பிரிண்டிங் வெர்க்ஸ், 3, வேனல்ஸ் ரோடு, எழும்புர்). (4), 24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

மீண்டும் புதிதாய்ப் பிறப்போம். இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன். யாழ்ப்பாணம்: டேவிட் லிகோரி, மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஆனி 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லட்சுமி அச்சகம், 37 கண்டி வீதி).(4), 96 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12.5 சமீ.

முறிந்த பனை: இலங்கையில் தமிழர் பிரச்சினை: உள்ளிருந்து ஒரு ஆய்வு. ராஜினி திரணகம, ராஜன் ஹூல், தயா சோமசுந்தரம், கே. ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள், 1வது பதிப்பு, 1996. (கொழும்பு - 4: பிரஸ் மேற், 90/7 லோரிஸ் வீதி) xvi, 576 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ. (ISBN: 955 944700 9)

மேஜர் கிண்ணி. கஸ்ரோ (இயற்பெயர்: வி.மணிவண்ணன்). பிரான்ஸ்: தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலகம், 2வது பதிப்பு, பெப்ரவரி 1997. 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை.) 72 பக்கம், புகைப்படம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12.5 சமீ.

மோசடித் தேர்தல் உண்மை விளக்கம். தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழம்: அரசியற் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, டிசம்பர் 1988. (அச்சக விபரம் தரப்படவில்லை). 26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

யாருக்காக இந்த ஒப்பந்தம்? உதயன். யாழ்ப்பாணம், 3வது பதிப்பு, ஆகஸ்ட், 1987. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை) 12 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.

யுத்த பூமி. செங்கை ஆழியான். (இயற்பெயர்: கந்தையா குணராசா). சென்னை 600098: New Century Book House, 41 B, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (சென்னை 14: ஸ்ரீ மகேந்திரா கிராப்பிக்ஸ்). iv, 130 பக்கம், விலை: ரூபா 162.50, இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ., ISBN: 81-234-0972-9.

யுத்தத்தின் வரலாறு. சார்ள்ஸ் தயானந்தவின் கார்ட்டூன் சேகரிப்புகள். சார்ள்ஸ். தயானந்த. பேராதனை: National Integrated programme Unit and Media Circle, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (கண்டி: லதா இம்பிரெஸ்) 76 பக்கம், கார்ட்டூன் சித்திரங்கள். விலை: குறிப்பிடப் படவில்லை. அளவு: 30x22 சமீ.

வல்வைப் படுகொலைகள். வல்வை ந.அனந்தராஜ். வல்வெட்டித்துறை: நந்தி பதிப்பகம், இணைந்து வெளியிடுவோர் சென்னை: சோழன் பதிப்பகம், 2வது பதிப்பு, 2005., 1வது பதிப்பு, 1989. (இலண்டன்: வாசன் அச்சகம், மிச்சம்). 110 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

விடுதலை: கட்டுரைத் தொகுப்பு. அன்ரன் பாலசிங்கம். England: Fairmax Publishing Ltd, P.O.Box 2454, Mitchem, Surrey, CR4 1WB, 1 வது பதிப்பு, நொவெம்பர் 2003. ((England, The Print, 45C Crusoe Road, Mitchanm, Surrey, CR4 3LJ). (8), 256 பக்கம், புகைப்படங்கள், விலை: ஸ்டேர்லிங் பவுண் 9.50, அளவு: 21x15 சமீ. ISBN 1 903679 04 4.

வில்லுக்குளத்துப் பறவைகள். உண்மைக்கதைகள் தொகுதி 1. தமிழீழம்: தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவு, 1வது பதிப்பு, ஆடி 1995. (அச்சகவிபரம் குறிப்பிடப்படவில்லை). (4), 160 பக்கம், விலை: ரூபா 60. அளவு: 17.5x13 சமீ.

வினாக்காலம்: கனவுச்சிறையின் இரண்டாம் பாகம். தேவகாந்தன். சென்னை: 600 094: இலக்கு வெளியீடு, 87, பஜனைக் கோவில் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (சென்னை: எம்.எல். எம். பிரின்டர்ஸ்). 288 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21x14 சமீ. (மேலும் பார்க்க: அக்னி திரவம், கனவுச்சிறை, உதிர்வின் ஓசை, ஒரு புதிய காலம்)

வீதியெல்லாம் தோரணங்கள். தாமரைச் செல்வி. கொழும்பு 5: மீரா பதிப்பகம், C-3/5, அன்டர்சன் தொடர்மாடி, பார்க் வீதி, நாரஹேன்பிட்டி, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு - 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி). viii, 84 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 17.5x12.5 சமீ.

ஜூலை இருபத்தொன்பது உடன்பாடும் எமது நிலையும். ஈழப்புரட்சி அமைப்பு. யாழ்ப்பாணம்: ஆவணக்காப்பக வெளியீடு, ஈழப்புரட்சி அமைப்பு, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: அச்சகம் குறிப்பிடப்படவில்லை) 24 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18x12.5 சமீ.

The broken Palmyra: The Tamil crisis in Sri Lanka- An inside account / Rajan Hoole, Daya Somasundaram, K. Sritharan, Rajani Thiranagama. Claremont, U.S.A: The Sri Lanka Studies Institute, 112, Harward Avenue, Suite 66, CA 91711, 1st edition, July 1988, (California 91711, U.S.A:Harvey Mudd College Press, Claremont). xv, (3), 464p, index, US $12.00, 21.5 x 14cm.

(ஞானம், மே 2013: ப. 14-16, ஜூன் 2013, ப. 14-19)

13

ஈழத்துத் தமிழ் நூல்களினூடாக மாற்றுக் கருத்துக்கள் பற்றிய ஒரு வரலாற்று நோக்கு

இலங்கையின் நூலியல் வரலாற்றில் ஒருவர் எழுதிய நூலை அல்லது சிறு பிரசுரத்தைக் கண்டித்தும், மறுதலித்தும், அதனை விமர்சித்தும் மற்றொரு நூலை இன்னொருவர் எழுதும் வழக்கம் ஆறுமுக நாவலர் காலம் முதற் கொண்டு இன்றுவரை வழக்கில் இருந்து வருகின்றது. இக்கட்டுரை அத்தகைய சில சுவையான தருணங்களை மீள்பதிவுசெய்கின்றது.

இலங்கையில் 1798 முதல் 1948வரை நிலவிய பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் மதச்சுதந்திரம் ஓரளவு வலியுறுத்தப்பட்டு வந்தது. இலங்கையில் பிறக்கும் ஒரு தமிழ்ப்பிள்ளை தான் விரும்பிய மதத்தில் சேர்வதற்கும் பிறப்பால் சைவனாகப் பிறந்த ஒரு தமிழன் கிறிஸ்தவனாகத் தன்னை மத மாற்றம் செய்துகொள்ளவும் பிரித்தானிய ஆளுநர்களால் ஓரளவு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. அக்காலகட்டத்தில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட வேண்டுமானால், மக்களை அறிவுபூர்வமாகச் சிந்திக்கவைத்து அவர்களைத் தம்பக்கம் இழுக்கவேண்டிய சூழல் அக்காலகட்டத்தில் நிலவியிருந்தது. இதன் வெளிப்பாடுகளே தமிழ்மொழி அகராதிகளையும், தமிழ்ப் பழமொழித் தொகுப்புகளையும் ஐரோப்பியர் தேடிச்சேர்த்துத் தொகுத்து வெளியிட்ட மைக்குக் காரணமென்பர். மேலும் தீவிரமான சைவசமயாசாரிகளால் பேணப் பட்டு வந்த சாதிய ஒடுக்குமுறைகளினால் பாதிக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட தமிழ்ச் சமூகங்களுக்கு தாமே கல்விச்சாலைகளை நிறுவி, கல்வியறிவைப் புகட்டுவதன்மூலமும் மதமாற்றத்தை படிப்படியாக மேற்கொள்ளும் நடவடிக் கைகளும் அக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அக்காலத்தில் தமது பிறப்பால் சைவர்களாக நிர்ணயிக்கப்பட்டு கந்தபுராண கலாசாரத்தின் பாரம்பரிய மரபுகளை இறுக்கமாகப் பேணிவந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் சைவசமயத்தவரை சமூகப் புரட்சிசெய்து, கிறிஸ்தவராக மதம்மாற்றுவதென்பது பிரித்தானிய, அமெரிக்க கிறிஸ்தவ மதபோதகர்களுக்கு அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

இத்தகைய பின்புலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவந்த மதமாற்றத்துக் குட்பட்ட தமிழ் கிறிஸ்தவப் போதகர்கள் சிலர் 1906இல் *மறுபிறப்பு ஆட்சேபம்* என்ற பெயரிலும், 1911இல் *மறுபிறப்பு சமாதானம்* என்ற பெயரிலும் இரு துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டிருந்தனர். சைவ சமயத்தவர்களின் மறு பிறப்பு பற்றிய நம்பிக்கையை மூடநம்பிக்கையாகச் சித்திரித்து அப்பிரசுரங்களை வெளியிட்டிருந்தனர். அதனால் வெகுண்டெழுந்த யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. சி. சுந்தரம்பிள்ளை என்பவர் *மறுபிறப்புத் தூஷண பரிகாரம்* என்ற 192 பக்கம் கொண்ட விரிவான நூலொன்றை எழுதி அதனை யாழ்ப்பாணம் கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலையில் 1926 இல் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். அந்நாளில் இந்நூல் 75 சதத்திற்கு பரபரப்பாக விற்கப்பட்டது.

இதில் மற்றொரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், சி. சுந்தரம் பிள்ளையின் நூலை வாசித்து வெகுண்ட யாக்கோபு என்பவர் (இந்நூலை ஆக்கியோன் இலங்கை வலங்கைமுக வள்ளுவகுல திலகன் சாம்புவத் திருவாளன் பீ.எம். யாக்கோபு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.) *மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலம்* என்ற தலைப்பில் 60 பக்கங்களில் ஒரு எதிர்ப்பு நூலை எழுதியிருந்தார். முன்னைய நூல் வெளிவந்த அதே 1926ம் ஆண்டு சூட்டோடு சூடாக இந்நூல் அச்சுவேலி, ஞானப்பிரகாச யந்திர சாலையில் அச்சிட்டு சுன்னாகம் பரம்பரைப் பறையர் சபை என்ற அமைப் பினால் வெளியிடப்பட்டது. முன்னைய நூல் வெறும் கிலிக்கோலமே என்று காட்டும் மறுப்புரைகள் இந்நூலில் இடம்பெறுகின்றன. இந்நூல் 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலையும் அச்சுவேலி: ஞானப்பிரகாச யந்திரசாலை அக்காலகட்டத் தில் யாழ்ப்பாணத்தைத் தளமாகக்கொண்டு இருவேறு மத ஆதரவுப் பிரசுரங் களை வெளியிடுவதில் புகழ்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகநாவலரின் வாழ்நாட் காலம் (18.12.1822- 5.12.1879) 57 ஆண்டுகளே. இவரது முதற் சைவசமயப் பிரசங்கம் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரர் கோவிலில் 31.12.1847இல் நிகழ்த்தப்பட்டது. அக்காலகட்டம் மதமாற்றத்தினை நோக்காகக்கொண்டு யாழ்ப்பாணத்தில் பல சைவ எதிர்ப்பு இயக்கங்கள் செயற்பட்டன. நவீன அச்சக வசதிகள் அவர்களிடம் சிறப்பாக இருந்தன. இந்நிலையில் சைவத்தைப் பாதுகாக்கும் தனிமனித நிறுவனமாகச் செயற்பட்ட ஆறுமுகநாவலர் 1849இல் நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் சென்னைக்குச் சென்று அச்சியந்திரம் ஒன்றை வாங்கிவந்தார். வரும்போது அச்சியந்திரத்துடன் நாவலர் என்ற பட்டத்தையும் தமிழகத்திலிருந்து பெற்றுக்கொண்டு வந்தார். தனது இல்லத்திலேயே வித்தி

யாநுபாலன யந்திரசாலை என்ற பெயரில் அச்சகத்தை நிறுவி சைவ நூல் களுடன் பல கண்டன நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டு வந்தார். அவற்றில் பிரபல்யமானது *சைவதூஷண பரிகாரம்* என்பதாகும். முதற்பதிப்பு விபரம் தெரியவில்லையாயினும் இந்நூலின் எட்டாவது பதிப்பு ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1956இல் வெளிவந்துள்ளதைக் காணமுடிகின்றது. 114 பக்கங்களைக்கொண்ட இந்நூல் பற்றி நாவலரின் குறிப்பு பின்வருமாறு அமைகின்றது:

''நமது சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும், கிறிஸ்தவ பாதிரிகளது பொய்ந்நூலாகிய விவிலிய நூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்க நூலிலே அற்பமேனும் பயிலாதவர்களுமாகிய சில சனங்கள் (பாதிரிமார்களின்) அத் தூஷணங்கள் ஒக்குமென்று மதிமயங்கி, கிறிஸ்து சமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்றார்கள். யாம் அதனைக் கண்டிரங்கி, சைவத்தின்மேல் அப்பாதகர்களால் ஏற்றப்படும் தூஷணங்களாலேயே ஒருவரும் கெடாது சைவத்தின் வழியே நின்று உய்யும்பொருட்டு, அத் தூஷணங்கள் எல்லாவற்றையும் நியாயமாகவே களைந்து மெய்யறிவுச்சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவதூஷண பரிகாரம் என்னும் பிரபந்தத்தை, பரமகாருணிகராகிய பரமசிவனது திவ்வியப் பிரசாதத்தினாலேயே செய்தோம்'' - ஆறுமுகநாவலர் (உபோற்காதம்)

கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் ஆறுமுக நாவலரின் மறைவுக்குப் பின்னரும் தொடர்ந்தது.

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் 29.4.1888 இல் தாபிக்கப்பட்டதே இலங்கைச் சைவ பரிபாலன சபையாகும். சைவம் பற்றிய எதிர்ப்பிரசாரங்களை காலனித்துவ ஆட்சியில் மதமாற்ற நோக்குடன் மேற் கொண்ட கிறிஸ்தவபீடங்களின் கருத்தியல் போரை முறியடிக்கும் பணிகளுள் ஒன்றாக இச்சபை ஒரு நூலை 1921இல் வெளியிட்டது. *கிறிஸ்துவர் ஆராய்ச்சியும் சைவநன்மக்கள் கொள்கையும்* என்ற நூல் இரு பாகங்களில் வெளிவந்தது. இந்நூலின் ஆசிரியர் த. ஆறுமுக நயினார்பிள்ளை என்பவராவார். கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் அச்சிடப் பட்ட 105 பக்கம் கொண்ட இந்நூல் கிறிஸ்தவர்களால் வெளியிடப்பட்ட *மிருகபலி ஆராய்ச்சி*, *சைவரும் மச்ச மாமிசமும்*, *புதுச் சைவம்* ஆகிய மூன்று துண்டுப் பிரசுரங்களின் பேரில் எழுந்த கண்டனக் கட்டுரையாக அமைந்துள்ளது. இம்மூன்று துண்டுப்பிரசுரங்களும் புலால் உண்ணலுக்கு எதிரான சைவசமயத்தைக் கடைப்பிடிக்கும் மக்கள் வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் மச்சம் தவிர்த்தல் எவ்விதத்தில் நியாயமானது என்ற கேள்வியை

எழுப்பியிருந்தன. இதற்கான சைவர்களின் சார்பில் வழங்கப்பட்ட அறிவு பூர்வமான பதிலாக இந்நூல் அமைந்திருந்தது.

சைவ சமயத்தில் மாத்திரம்தான் இத்தகைய எதிர்ப்புப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன என்றில்லை. இஸ்லாம் தொடர்பாகவும் அவ்வப்போது கண்டனப் பிரசுரங்கள் வெளியாகியிருக்கின்றன. 1975இல் எம்.எஸ்.எம். இக்பால், ஏ. இக்பால், எம்.எச்.எம். ஷம்ஸ் ஆகிய மூவரடங்கிய குழு *நூல் விமர்சனம்* என்ற பெயரில் 80 பக்கம் கொண்ட நூலொன்றை வெளி யிட்டிருந்தார்கள். இந்நூல் தமிழர்களின் இஸ்லாமிய எதிர்ப்புணர்வினை இஸ்லாமிய பார்வையில் விமர்சிப்பதாக அமைந்திருந்தது.

இந்த நூலில் காணப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் தமிழ்ப் படைப்பிலக்கியவாதியான எஸ்.பொவினால் (எஸ். பொன்னுத்துரை) *இஸ்லாமும் தமிழும்* என்ற மற்றொரு நூலும் எழுதப் பட்டிருந்தது. இஸ்லாமிய வாலிபர் இயக்கத்தினால் 26.7.1975 இல் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் நடைபெற்ற இஸ்லாமியர் எழுச்சி மாநாட்டில் அன்றைய இலங்கையின் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் இந்நூல் வெளியிடப்பட்டது. இதன் மீள்பதிப்பொன்று 2002 இலும் எஸ் பொன்னுத்துரை அவர்களால் சென்னையிலிருந்து தமது மித்ர வெளியீட்டகத்தின் வாயிலாக மீள்பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

01.06.1987 இல் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ.அப்துல் றஊப் என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட *ஹமவோஸ்த்* என்ற நூலும் சர்ச்சைக்குரிய பல இஸ்லாமியக் கருத்துக்களைக் கொண்டிருந்தது. இதற்குப் பதிலளிக்கும் முகமாக இரு மாதங்களில் ஓகஸ்ட் 1987 இல் ஆத்மீகஞானி, சுல்தானுல் ஆரிபீன் ஷெய்ஹுல் முப்லிஹீன் எம்.எஸ்.எம். அப்துல்லாஹ் (ரஹ்) அவர்கள், கொழும்பு, அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளையினூடாக *பித்அத்துக்கு உண்மையின் சவுக்கடி* என்ற தலைப்பில் முதலாம் பாகத்தை வெளியிட்டு வைத்தார். 112 பக்கம் கொண்ட இந்நூல் 01.06.1987இல் ஏ. அப்துல் றஊப் எழுதிய ''ஹமவோஸ்த்'' என்ற நூலின் இஸ்லாமியக் கருத்துகளுக்கு மறுப்புரையாக வெளிவந்துள்ளது. இதன் தொடர்ச்சியான இரண்டாம் பாகமாக 2006 நவம்பரில் மற்றொரு சிறு பிரசுரமும் வெளிவந்தது. விட்டகுறை தொட்டகுறையாக இந்நூல் ஏ.அப்துல் றஊப் மீண்டும் 11.9.1992 அன்று எழுதி, காத்தான்குடி ஹாஜாஜி கலை இலக்கிய வட்டத்தினால் வெளியிடப்பட்ட *நனவாகும் ஒரு கனவு* என்ற மற்றொரு நூலின் முடிவுரையில் கூறப்பட்ட கருத்துக்களை மறுத்தும் மேற்படி ஆசிரியருக்கும் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் அவர்களுக்கும் ஏற்கெனவே

முன்னைய நூல் தொடர்பாக உள்ள பிணக்கின் பின்னணி பற்றியும் இந்நூலில் எழுதப்பட்டுள்ளது.

சேர் .பொன்.இராமநாதனின் *இலங்கைச் சோனகர் வரலாறு* என்ற கட்டுரை நூல் அந்நாட்களில் பிரசித்திபெற்றது. சேர்.பொன். இராமநாதன் இலங்கைவாழ் சோனகர், இனத்தால் தமிழர் எனவும் மதத்தால் முஹம்மதியர் எனவும் 1885இல் இலங்கைச் சட்டவாக்க சபையிலும், 1888இல் அரச ஆசிய கழகத்தினரின் (இலங்கைக் கிளை) முன்னிலையிலும் கூறிய கருத்துக் களை உறுதிப்படுத்துவதாக அந்த வரலாற்று நூல் அமைந்திருந்தது. இந்நூலின் கருத்துக்களை முஸ்லிம் ஒருவர் துணிந்து மறுதலிக்க முன்வந்தார். முஸ்லிம் கார்டியன் பத்திரிகையின் பதிப்பாசிரியராகப் பணியாற்றிய ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்களே அந்த மனிதர்.

சேர் பொன் இராமநாதனின் ''இலங்கைச் சோனகர் இன வரலாறு'' என்ற அந்தக் கட்டுரையில் காணப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்துவதாக அமைந்த இவரது ஆங்கில நூல் 1907 இல் கொழும்பு சோனகர் சங்கத்தின் ஆதரவில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சேர் பொன் இராமநாதனின் கூற்றுக்களை மறுத்து, இலங்கைச் சோனகர் இனத்தால் அறபிகளின் சந்ததியினர் என வரலாற்றின் அடிப்படையில் சான்றாதாரங்களுடன் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் தனது கட்டுரையில் பதிவுசெய்திருக்கிறார். *திரு. இராமநாதனது இலங்கைச் சோனகர் இன வரலாறு எனும் ஆராய்ச்சிக் கட்டுரைக்கான ஒரு திறனாய்வு* என்ற பெயரில் அப்துல் அஸீஸ் அவர்கள் ஆங்கிலத்தில் 1907 இல் இக்கட்டுரையை எழுதிப் பிரசுரித்திருந்தார். அதனை பின்னாளில் எம்.சி.எம். ஸாஹிர் அவர்கள் தமிழாக்கம் செய்து கொழும்பு, சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் வாயிலாக 115 பக்கத்தில் நூலுருவில் வெளியிட்டார். தமிழாக்கம் வெளிவந்த ஆண்டு விபரமில்லை. தமிழாக்கம் செய்த எம்.சி.எம்.ஸாஹிர் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் அறிக்கை யாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூல் சி.க. சிற்றம்பலம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக ஒக்டோபர் 1992 இல் வெளியிடப்பட்ட 488 பக்கம்கொண்ட பாரிய வரலாற்று நூலாகும். கி.பி.16ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் (கி.பி.1505) போர்த்துக் கேயர் ஈழத்திற்கு வந்தபோது இங்கே மூன்று அரசுகள் காணப்பட்டன என்றும், அவை யாழ்ப்பாணம், கோட்டை, கண்டி அரசுகள் எனப் பெயர் பெற்றிருந்தன என்றும் கூறும் இந்நூல், கோட்டை, கண்டி அரசுகளைப் போலன்றி யாழ்ப்பாண அரசுக்கு நீண்டதொரு அரசியற் பின்னணி இருந்தது

என்று நிறுவியிருந்தது. கி.பி.13ம் நூற்றாண்டுகளின் பிற்பகுதிகளில் எழுச்சி பெற்ற இவ்வரசு கி.பி.17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் (கி.பி.1619) போர்த்துக்கேயரிடம் போர்முனையில் தன் சுதந்திரத்தை இழந்தது. இக்காலப்பகுதிக்குரிய இவ்வரசின் வரலாறு இந்நூலின் கருப்பொருளாகின்றது. சி.க. சிற்றம்பலம், வி. சிவசாமி, சி. பத்மநாதன், திருமதி சோ. கிருஷ்ணகுமார், ப.புஷ்பரட்ணம், செ.கிருஷ்ணராஜா, ஆகியோரின் 11 ஆய்வுக் கட்டுரைகளின் வாயிலாக இந்நூல் முழுமைபெற்றிருந்தது.

இந்நூல் வெளியிடப்பட்ட இரண்டாண்டுகளில் இந்நூல் தொடர்பாக மற்றொரு விமர்சன நூல் வெளியிடப்பட்டது. *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண இராச்சியம் நூலும் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளும்: ஓர் விமர்சனம்.* என்ற தலைப்பில் ஏ.எஸ். உதயகுமார் என்பவர் இந்நூலை எழுதியிருந்தார். மானிப்பாய், உடுவிலில் இயங்கிவந்த Institute of Historical Studies என்ற நிறுவனத்தின் மூலம் ஜூலை 1994 இல் இந்நூலை உதயகுமார் வெளியிட்டிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பாக 1992 இல் வெளியிடப்பட்ட முன்னைய நூல் பற்றிய கருத்தியல் தவறுகளைச் சுட்டிக்காட்டும் நூலாக இந்நூல் அமைந்திருந்தது. இரு பகுதிகளாக அமைந்த இந்நூலின் முதற் பகுதி யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூலில் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணம் தொடர்பாக விபரிக்கப்பட்டவை தரப்பட்டிருந்தன. இபன் பத்தூத்தாவின் பயணக் குறிப்புகள் பற்றியும், அவரின் இலங்கைப் பயணக் குறிப்புகள் பற்றியும் விரிவான விபரங்கள் தரப்பட்டு அவை மேற்படி பல்கலைக்கழக வெளியீட்டுடன் ஒப்பிடப் பட்டிருந்தது,

அறிவு வளர்ச்சி, ஆராயும் தன்மை வளர்ச்சி என்பவைகள் தொடர்பாக யாழ்ப்பாண இராச்சியம் நூலின் நிலைப்பாடு என்ன என்பவை பற்றிய தன் பார்வையை உதயகுமார் தனது நூலில் முதற் பகுதியில் பதிவுசெய்திருந்தார். பகுதி 2 இல் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளில் கூறப் பட்ட பல விடயங்கள் பற்றியும், அதில் குறிப்பிடப்பட்ட இடங்கள் பற்றியும் ஆராய்ந்து, பல முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும் இபன் பத்தூத்தாவின் இலங்கைப் பயணக் குறிப்புகளை யாழ்ப்பாண இராச்சிய வரலாறு பற்றியும், இலங்கையின் வரலாறு பற்றியும் ஆராய்வதற்கும், மாணவர்களது ஆராயும் தன்மையை வளர்க்கவும் எப்படிப் பயன்படுத்தலாம் எனவும் உதயகுமார் அந்நூலில் விளக்கியிருந்தார். பல்கலைக்கழக ஆய் வொன்றைக் கேள்விக்குள்ளாக்கும் வெளியாரின் முயற்சி என்றவகையில் இந்நூல் அந்நாட்களில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

ஈழத்து இலக்கிய உலகில் தன் தனித்துவமான படைப்புகளால் பல்கலை வேந்தர் என்று பிரபல்யமாகியிருந்தவர் சில்லையூர் செல்வராஜன் (25.1.1933-14.10.1995) அவர்கள். 7.9.1958ம் திகதித் தினகரனில் சில்லையூர் செல்வராசன் தான்தோன்றிக் கவிராயர் என்ற புனைபெயரில் பாரதி பற்றி ஒரு அங்கதக் கவிதையை எழுதியிருந்தார். அவர் எழுதிய அந்த அங்கதக்கவிதை சமகால ஈழத்தமிழ்க் கவிஞரிடையே பலத்த விமர் சனத்தையும், எதிர்ப்புக் குரல்களையும் எழுப்பின. அதன் விளைவாக ஒரு சுவைமிகு கவிதைச்சமரே ஆரம்பமாயிற்று. பத்திரிகைகளில் இக்கவிதைக்கு எதிர்க்கவிதைகளும், அவற்றுக்கு மறுப்பாகவும் சில்லையூரின் கருத்துகளுக்கு ஆதரவாகவும் என பல்வேறு கவிஞர்களின் பேனாக்கள் இலக்கியப்போரை தொடங்கின. முதலில் கவிஞர் முருகையனின் எதிர்க்கவிதை அடுத்த வாரமே பிரசுரமாயிற்று. அதையொட்டி மோட்டுக்கவிராயர், மஹாகவி, நீலாவணன், இராஜபாரதி, மு.பொன்னம்பலம், பாவேந்தர் பட்டிக்காடனார், பரமஹம்ச தாசன், பரணன் என்று ஒரு கவிஞர் குழாமே புனைபெயர்களிலும், சுயபெயர் களிலும் நின்று கவிதைச்சமர் நிகழ்த்தியது. இவை அனைத்தும் தேடித்தொ குக்கப்பெற்று பின்னர் சில்லையூர் செல்வராஜனின் துணைவியார் கமலினி செல்வராஜனால் பாரதி கவிதைச்சமர் என்ற தலைப்பில் நூலுருவில் வழங்கப் பட்டது. இலங்கையின் தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சென்னை, சவுத் விஷன் பதிப்பகத்தினர் இந்நூலை ஜுன் 2000 இல் வெளி யிட்டிருந்தனர். 60 பக்கம் கொண்ட சிறிய நூலான போதிலும், *பாரதி கவிதைச்சமர்* என்ற நூல் ஆரோக்கியமான எதிர்க்குரல்களை சுவையான இலக்கியமாகப் பதிவுசெய்த நூலாக ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் நிலைத்திருக்கும்.

வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் என்ற பெயரில் வல்வை ந. நகுலசிகாமணி அவர்கள் கனடாவிலிருந்து வல்வை ஆவணக்காப்பகத்தின் மூலம் 1997 இல் ஒரு பிரதேச வரலாற்று நூலை வெளியிட்டார். 85 பக்கங் கள் கொண்ட இந்நூல் புகைப்பட ஆதாரங்களையும் உள்ளடக்கியிருந்தது. வல்வை நகர மக்களின் பாரம்பரியம், அரசியல், கலாச்சாரம், பண்பாடு பற்றிய வரலாறு கூறும் இந்நூலில் 53 ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் வல்வை நகரையும் அந்த மண்ணின் மக்களையும், அங்கு இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்களையும் ஆவணப்படுத்தும் பத்திரிகைத் தகவல்கள், கட்டுரைகள் என்பனவாகும். ஒரு பிரதேசத்தின் சமூக வரலாற்றை ஆவணப்படுத்தும் பாரிய முயற்சியாக இது அமைந்துள்ளது. இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள கருத்துக்கள் சிலவற்றை மறுதலிக்கும் வகையில் அதே ஊரைச்சேர்ந்த K.T. பெரியதம்பி அவர்கள் வல்வை, *வல்வெட்டித்துறை, வல்வைநகர்* என்ற நூலை பின்னாளில் எழுதியிருந்தார். வல்வெட்டித்துறை,

சிவசக்தி வெளியீடாக பெப்ரவரி 2001 இல் 182 பக்கங்களுடன் இம்மறுப்பு நூலை அவர் கனடாவிலிருந்து எழுதியிருந்தார். வல்வை ந. நகுலசிகாமணி 1997 இல் வெளியிட்ட *வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்* என்ற வரலாற்று நூலில் தான் கண்ட தவறுகளை அடிப்படையாகக்கொண்டு இந்த விமர்சன நூல் எழுதப்பட்டிருந்தது. முன்னைய நூலின் வரலாற்றுத் தவறுகளைச் சீர்செய்யும் வகையில் இந்நூலை இவர் வெளியிட்டிருந்தார். K.T.பெரியதம்பி அவர்களும் இலங்கையிலிருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்து சென்று வாழ்பவர். இவர் ஈழத்துப் படைப்பிலக்கியவாதியான வல்வை கமலா பெரியதம்பி அவர்களின் துணைவர்.

இத்தகைய நூலியல் வரலாற்றுப் பதிவுகளின் தொடரில் இணையத் தளங்களின் பங்களிப்பும் அண்மைக்காலத்தில் பெருகிவந்துள்ளன. பிரான்சி லிருந்து 2002 இல் எஸ்.கே. காசிலிங்கம் அவர்கள் எழுதிய *என்னுள் என்னோடு* என்ற நூலில் காணப்பட்ட தவறுகள் பற்றிப் பல இணையத்தளக் கட்டுரைகள் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களால் எழுதப்பட்டன. கம்பவாரதி ஜெயராஜ் அவர்கள் ஒருதடவை லண்டன் வந்து தாயகம் திரும்பிய பின்னர் எழுதிய *வாராயோ வரவல்லாய்* என்ற கட்டுரை இணையத் தளங்களில் பிரசுரமாகிப் பல கண்டனக் கணைகளுக்கு இடமளித்தது. இத்தகைய எதிர்ப்பலைகள் பற்றிய பதிவுகள் எல்லையில்லாது தொடரும். விரிவஞ்சி அவற்றை இக்கட்டுரையில் தவிர்த்துள்ளேன். நூலுருவில் வெளி வந்த எதிர்புப் பிரசுரங்கள் பற்றியதாகவே இக்கட்டுரை மட்டுப்படுத்தப் படுகின்றது.

ஒருவர் எழுதிய நூலில் தவறுகள் இருப்பின் அதனை மற்றொரு நூலின் வாயிலாக அறிவித்து அதனையும் பதிவாக்கும் முயற்சியென்பது வரலாற்றைத் திருத்தி சீர்செய்து எழுதுவதற்கு ஒப்பாகும். தவறுகளையோ, கண்டனங் களையோ அறிந்தும் அதனைப் பகிரங்கப்படுத்தாதிருப்பது ஒரு சமூகத் தவறாகும். மூலநூலாசிரியரின் மனம்நோக வைப்பதேன் என்ற எண்ணத்தில் பலரும் அது பற்றி தமக்குள் பேசிக்கொள்வதுடன் மாத்திரம் நிறுத்திவிடு கின்றனர். இது எதிர்காலத்தில் தவறான பதிவே உண்மையென்றாகிவிடும் சூழலை உருவாக்கிவிடும். மாறாக அறிவுரீதியாக அமையும் இத்தகைய மறுப்பறிக்கைகளும் கண்டனங்களும் ஆரோக்கியமானதொரு ஆய்வினை எதிர்காலத்தில் மேற்கொள்ள வழிசமைத்துவிடும். தனிமனித வசைபாடுதலும், ஒரு கருத்தை வெளியிடுவதற்கான அவரது தகுதி பற்றி மற்றொருவர் கேள்வி எழுப்புதலும் இத்தகைய ஆரோக்கியமான மாற்றுக்கருத்துக்களுக்கான வாய்ப்புகளை இல்லாதொழித்துவிடும் என்பதும் கவனத்துக்குரியது.

(தமிழர் தகவல் (கனடா): இளந்தை மலர், பெப்ரவரி 2012: ப.73-76.)

14

புதுமை விரும்பிகளின் பரிசோதனை இலக்கியங்கள்

படைப்பிலக்கியத்தில் புதுமைசெய்யவேண்டும், வித்தியாசமாக எதையும் செய்துவைக்க வேண்டும் என்பது பெரும்பாலும் ஒவ்வொரு எழுத்தாளனினதும் கனவாக அமைந்திருக்கும். அத்தகைய புதுமை விரும்பிகள் அனைவரது முயற்சிகளும் நின்று நிலைப்பதில்லை. இருப்பினும் சில படைப்புக்கள் அவ்வாறு ஆயிரத்தில் ஒன்றாக நின்று நிலைக்கவே செய்கின்றன. ''வண்ண மலர்கள்'' என்றொரு நாவல் எட்டு கதாசிரியர்களால் எழுதப்பட்டதென்ற செய்தி எனக்குக் கிட்டியபோதும் அது பற்றிய விபரம் கிடைக்கவில்லை. விபரம் அறிந்த சில விடயங்களை இன்று உங்களுடன் பரிமாற விரும்புகின்றேன்.

தமிழகத்தின் ஒரு இலக்கிய ஆர்வலர். அவர் பெயர் உமாபதி. அவரது பதிப்பகத்தின் மூலம் அறுபதுகளில் ''உமா'' என்றொரு சஞ்சிகை வெளிவந்து கொண்டிருந்தது. அச்சிறு சஞ்சிகையில் எழுத்தாளர் பூவை எஸ்.ஆறுமுகம் அவர்கள் ஒரு புதுமையைச் செய்ய முன்வந்தார். வாசவன் என்ற படைப் பாளியைக்கொண்டு ஒரு நாவலின் முதல் அத்தியாயத்தை மாத்திரம் எழுது வித்தார். தொடர்ந்து இரண்டாவது அத்தியாயத்தை வல்லிக்கண்ணன் வளர்த்து விட்டார். இவரைத் தொடர்ந்து சரோஜா ராமமூர்த்தி, கிருஷ்ணா, சீ.ஆர். ராஜம்மா, நெடுமாறன், எல்லார்வி, ஏ.எம்.மீரான், சி.சு.செல்லப்பா, பி.வி.ஆர் என்று 60களில் பிரபல்யமாகியிருந்த கதாசிரியர்கள் கதையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் கட்டிவளர்க்க, இறுதியில் பூவை எஸ். ஆறுமுகம் இறுதி அத்தியாயத்தை எழுதி அதனை முடித்துவைத்தார். ''ஆடும் தீபம்'' என்ற பெயரில் இந்நாவல் பின்னர் பூவை.எஸ் ஆறுமுகத்தைப் பதிப்பாசிரியராகக் கொண்டு காரைக்குடி, செல்வி பதிப்பக வெளியீடாக மார்ச் 1967 இல் நூலுருவில் வெளிவந்தது. இந்நாவல் தனியொருவரால் புனைந்து எழுதப்பட்ட தொன்றல்ல. ஒருவரது கருத்தை மையமாக வைத்து பலர் எழுதியதும் அல்ல. ஒருவர் கதையைத் தொடங்கினார். மாதம் ஒருவராக அதை அவரவர் கருத் தோட்டத்தின்படி வளர்த்தார்கள். கடைசியில் ஒருவர் அதனை பொருத்தமான இடத்தில் முடித்துவைத்தார்.

இதே காலகட்டத்தில் சுதேசமித்திரன் பத்திரிகையில் வாராவாரம் ''சதுரங்கம்'' என்றொரு கதையும் வெளிவந்தது. முதல் அத்தியாயத்தை பி.எஸ்.ராமையா அவர்கள் எழுதி தொடர்ந்து அக்கதையை அவரது வழி நடத்தலில் பலர் எழுதி முடித்தார்கள்.

தமிழகத்தின் வழியொற்றி யாழ்ப்பாணத்திலும் கனக செந்திநாதன் அவர்கள் இம்முயற்சியில் இறங்கினார். ''மத்தாப்பு'' என்ற நாவல் மலர்ந்தது. அது மலர்ந்த கதையை, பின்னாளில் அந்நாவல் வீரகேசரியில் தொடராக வெளிவந்து நூலுருவான வேளையில் அதன் முன்னுரையில் அவரே இவ்வாறு சொல்கிறார்:

''ஒரு காலில் ஐந்து இலைப் பந்தலாகிய இக்குறுநாவல் (மத்தாப்பு), தோன்றிய வரலாறு சுவாரஸ்யமானது. மட்டக்களப்பிலிருந்து எஸ். பொன்னுத்துரையவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது, இ.நாகராஜனைச் சந்தித்தார். இருவருமாக குரும்பசிட்டிக்கு வந்து என்னைக் கண்டனர். மூவரும் இலக்கிய அரட்டையில் ஈடுபட்டிருக்கும்போது தமிழ்நாட்டு வானொலியொன்றில் வாசிக்கப்பட்டு சுதேசமித்திரனில் வாராவாரம் வெளிவந்த சதுரங்கம் என்ற கதையையும், அதில் பி.எஸ்.இராமையா அவர்கள் முதலாம் அத்தியாயத்தைத் தொடக்கிவைத்து, கதையை வளர்த்துப் பலகோணங்களைக் காட்டிய மாதிரியையும், மற்றைய எழுத்தாளர்கள் அதை வெற்றிகரமாக முடித்த விதத்தையும் நான் கூறி, கிழித்துப் புத்தகமாகக் கட்டி வைத்திருந்த நூலையும் கொடுத்தேன். அதே சந்தர்ப்பத்தில் ''உமா'' என்னும் பத்திரிகையில் ஆடும் தீபம் என்ற குறுநாவலும் அதே சந்தர்ப்பத்தில் வெளிவந்துகொண்டிருந்தது. இவற்றை மாதிரியாகக் கொண்டு ஈழத்துப் பின்னணியிலே ஒரு குறுநாவலை ஐந்து எழுத்தாளர்கள் எழுதினால் என்ன? என்ற பிரச்சினையை அலசி ஆராய்ந்தோம். ''யோசிக்க வேண்டியதில்லை. நாமே எழுதிவிடுவோம்'' என்று எஸ்.பொன்னுத்துரை அழுத்திப் பேசினார். புதிய புதிய உத்திகளில், முறைகளில் பரீட்சைகளைச் செய்து பார்க்கவேண்டும் என்ற அவா உள்ளவர் அவர். அவாவோடு தன்னம்பிக்கையும் கொண்டவர். எனவே என்னைப் பார்த்து ஏதாவது ஒரு தலைப்பு நல்லதாகச் சொல்லுங்கள் என்று கேட்டார். சுமைதாங்கி, மத்தாப்பு என்று தலைப்பு இரண்டையும் நான் கூறினேன். மத்தாப்பு என்ற தலைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மத்தாப்பு என்ற தலைப்பில் ஐந்துபேர் ஒரு குறுநாவலை எழுதுவது என்று தீர்மானித் தோமேயொழிய அதில்வரும் கதைபற்றி ஒருவரும் பேசவே இல்லை. உண்மையில் அது எப்படி வளருமென்று ஒருவருக்கும் யோசிக்கும்போதும்- ஏன்-எழுதும்போதும் தெரிந்திருக்க முடியாது. வீட்டிலிருந்து யாழ்ப்பாணத் திற்கு மூவரும் வரும்போது, சுன்னாகத்தில் தற்செயலாக சு.வேலுப்பிள்ளை,

குறமகள் (இ.வள்ளிநாயகி) என்போரைச் சந்தித்தோம். எங்களது இந்தக் குறுநாவல் முயற்சிக்கு அவர்களும் ஒத்துழைப்பதாக ஒப்புக்கொண்டார்கள்''

இவ்வாறு கனகசெந்திநாதன் எழுதிச் செல்கிறார். இறுதியில் இ.நாகராஜன், கனக.செந்திநாதன், சு.வேலுப்பிள்ளை, குறமகள், எஸ்.பொன்னுத்துரை ஆகிய ஐவரும் இணைந்து எழுதிய இக் குறுநாவல். வீரகேசரியில் தொடர் கதையாக வெளியிடப்பட்டு பின்னர் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் ஜனவரி 1962இல் நூலுருவாக்கப்பட்டது. பொறாமை காரணமாக, கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட மாரிமுத்துவின் துயரக்கதையாக இக்குறுநாவல் வளர்த்துச் செல்லப்பட்டது. 20ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் யாழ்ப்பாணக் கிராமப்புற, மலையக, சிங்கள கிராமப்புறச் சமூகங்கள் இதில் பாத்திரங்களாக வருகின்றன. தராதர ஈழத்துத் தமிழும் பேச்சுமொழியும் இணைந்த மொழி நடையை அனைவரும் கையாண்டிருந்த போதிலும், ஐவரின் எழுத்து நடையிலும் வேறுபாடுண்டு. இனப்பிரச்சினை பற்றிய கருத்துக்களும் இறுதி அத்தியாயத்தில் இடம்பெறுகின்றது. மொத்தத்தில் மத்தாப்பு ஒரு புதுமைப்படைப்பாக ஈழத்தில் வலம்வந்தது.

தமிழகத்தில் வெளிவந்த ''சதுரங்கம்'' பற்றி முன்னதாகக் குறிப்பிட்டிருந் தேன். அதே பெயரில் ஈழத்தில் எம்.ஏ.ரஹ்மானின் முயற்சியில் மற்றுமொரு நூலும் வெளிவந்திருந்தது. எம்.ஏ.ரஹ்மான், ஆர்.பாலகிருஷ்ணன், வ.அ. இராசரத்தினம், எஸ்.பொன்னுத்துரை, சாலை-இளந்திரையன் ஆகியோர் கூட்டு முயற்சியில் இதனை எழுதியிருந்தார்கள். ரஹ்மானின் அரசு வெளியீடு இதனை நவம்பர் 1971இல் வெளியிட்டது. தலைப்பில் ''சதுரங்கம்-நாவல்'' என்று அறிமுகப்படுத்தியிருந்த போதிலும். இதன் ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு சிறுகதையாகவே எழுதப்பட்டு அனைத்தும் ஒருசேர இணைந்து சதுரங்க மாகின்றது. ஐந்து இலக்கிய வாணர்களின் கூட்டு இலக்கிய அனுபவமாக இப்படைப்பு அமைந்துள்ளது. ''அரசு'' (ராஜ்மித்ரா), ''காலாள்'' (இ.பாலகிருஷ்ணன்), ''குதிரை (வ.அ.இராசரத்தினம்), ''தேர்'' (எஸ். பொன்னுத்துரை), ''யானை'' (எம்.ஏ.ரஹ்மான்), ''அமைச்சு'' (சாலை இளந்திரையன்) ஆகியவை சதுரங்கத்தின் காய்களைச் சுட்டும் தலைப்புகளாகக் காணப்படுகின்றன. சாலை இளந்திரையனின் அமைச்சு - இக்கதைகளுக்கான ஒரு விமர்சனமாகும்.

எஸ்.பொன்னுத்துரை சம்பந்தப்பட்ட இவ்விரு இலக்கியப் புதுமை களையும் இணைத்து மத்தாப்பு (சக) சதுரங்கம் என்ற பெயரில் சென்னை யிலிருந்து தனது மித்ர பதிப்பகத்தின் வாயிலாக ஒரு நூலை டிசம்பர் 2000இல் மீள்பதிப்பாக வெளியிட்டிருந்தார். மத்தாப்பு நாவலுடன் இந்நாவல் தொடர்பான ''மத்தாப்பு பிறந்த வரலாறு'' (கனக செந்திநாதன்), ஐவர் தீட்டிய

மத்தாப்பு வர்ணங்கள் (வீ.லோகநாதன்) ஆகிய கட்டுரைகளும் பின்னிணைப் பாகத் தரப்பட்டிருந்தன. இந் நூலின் இரண்டாம் பாகமாக முன்னர் நான் குறிப்பிட்ட சதுரங்கம் என்ற நூலை இணைத்திருந்த எஸ்.பொ., அவற்றை தனித்தனியாக சிறுகதைகளாகவே 2000ம் ஆண்டு மீள்பதிப்பில் அறிமுகம் செய்திருந்தார்.

இவை தவிர, இலங்கையின் முன்னோடி எழுத்தாளர்களான அமரர் செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன் பெனடிக்ட் பாலன் ஆகியோர் இணைந்து ''கேட்டிருப்பாய் காற்றே'' என்றொரு முக்கோண நாவல் ஒன்றினையும் முன்னர் எழுதியுள்ளனர். மலைநாட்டுப் பின்னணியில் அமைந்த இந்த தொடர் நவீனம் ஈழநாட்டில் தொடராக வெளிவந்து, அக்கால கட்ட இளந் தலைமுறையின் புதிய சிந்தனைப் போக்கினைச் சுட்டுவதாக அமைந்திருந்தது. (நன்றி: செங்கை ஆழியான். ''ஈழநாடும் அதன் இருபத்தைந்தாண்டு இலக்கியப் பாரம்பரியமும்'', பத்திரிகையாளன்: வட இலங்கை பத்திரிகையாளர் சங்க வெளியீடு, மலர் 1, இதழ் 1, பெப்ரவரி 1984).

கவிஞர் ஏ.இக்பால் ''புதுமை The New'' என்றொரு கவிதைத் தொகுப்பினை தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழி நூலாகக் கொண்டுவந்துள்ளார். தமிழில் அவர் எழுதிய கவிதைகளும் அதனை ஆங்கிலத்தில் எம்.எஸ்.ஜாபீர் அவர்கள் மொழிபெயர்க்க அந்தக் கவிதைகளையும் சேர்த்து தர்காநகரிலிருந்து ஜூன் 1999 இல் இந்நூலை வெளியிட்டிருக்கிறார்.

இலக்கியத்தில் புதுமை செய்வதில் முன்னைய தலைமுறையில் எஸ். பொன்னுத்துரை துலக்கமாகத் தெரிந்தார். நான் நூலகப் பணியாற்றிய வேளையில் அவரது நூல்களைப் பட்டியலாக்கம் செய்யும் வேளையில் தலைப்பு பெரும்பிரச்சினையாக அமைந்துவிடுவதுண்டு.

எஸ்.பொ.1972 இல் வெளியிட்ட ஒரு நூலின் தலைப்பு? என்பது தான். அது வெறும் கேள்விக்குறி. அகரவரிசை அட்டவணை தயாரிப்பதில் தலையைப் பிய்த்துக்கொண்டேன். இந்த நூலுக்கு அசோகமித்திரனின் முன்னுரை முக்கியமானது.

''பொன்னுத்துரை தன்னுடைய படைப்பாற்றலில் ஒரு பரிமாணத்தை மற்றதைக் காட்டிலும் கூடுதலாகவே சாதித்திருந்தார். அது அங்கதச்சுவை. அவருடைய ஒரு நூலின் அட்டை மீது வெறும் கேள்விக்குறி மட்டுமே இருக்கும். அட்டையைப் பிரித்தால் 80 பக்கங்களுக்கு உங்கள் சிந்தனையை ஒரு சூறாவளியில் பறக்க விட்டது போன்ற இலக்கிய அனுபவம். உண்மை யில் அந்த 80 பக்கங்களை mind boggling என்று தான் கூறமுடியும். அங்கதச் சுவை என்பதை விட அங்கதனின் மகா சூரத் தந்தையான வாலிச்சுவை என்று தான் எனக்குத் தோன்றியது''. -அசோகமித்திரன் (முன்னுரையில்)

நெடுந்தீவு முகிலனின் அண்மைக்கால (மார்ச் 2009) நூலொன்றின் தலைப்பு ''ஃ'' (அஹேனம் அல்லது ஆய்த எழுத்து). அதற்கு அருமையான தொரு காரணமும் சொல்லப்பட்டிருந்தது. தவழும் பருவம் முதல் புள்ளி. பள்ளிப்பருவம் இரண்டாவது புள்ளி. வாலிபப் பருவம் கடைசிப் புள்ளி. மூன்று புள்ளிகளின் கூட்டுத்தொகையே அகேனம் என்னும் ஆய்த எழுத்து. தவழும் பருவத்தில் பொங்கல் பானை வைத்த அடுப்பின் மூன்று முனை களிலும், பள்ளிப் பருவத்தில் பார்த்த தமிழ்ப் பாடப்புத்தகத்திலும், வாலிபப்பருவத்தில் ஒரு பெண்ணின் இருவிழிகளினதும் நெற்றிப் பொட்டினதும் கூட்டுச் சேர்க்கையிலும் தான் கண்ட ஃ ஆய்த எழுத்தின் வடிவத்தை அடிப்படையாகவைத்து இந்த ஹைக்கூ காதல் கவிதைகளைப் படைத்திருக்கிறார். தமிழுக்குத் தான் ஆய்த எழுத்து. தனக்கோ ஆனந்த எழுத்து என்கிறார் இவ்விளம் கவிஞன் முகிலன்.

தமிழ் நாவல்களை பல பாகங்களில் பல தொகுதிகளில் வெளியிடும் முயற்சி சாண்டில்யன், கல்கி முதலானோருடன் முடிந்துவிட்டதென்று நாம் நினைத்திருந்தால் அது தவறு. தமிழகத்து எழுத்தாளர்களே தற்பொழுது முடிவுக்குக் கொண்டுவந்திருக்கும் இந்நிலைப்பாட்டை மீளவும் உயிர்த்தெழ வைத்தவர் தேவகாந்தன். கனவுச்சிறை என்ற இவரது நாவல் ஐந்து பாகங்களில் வெளியாகியிருப்பது எமக்கு ஆச்சரியத்தைத் தரக்கூடும். ஈழத்து வரலாற்றின் 1981முதல் 2001வரையிலான சுமார் இருபதாண்டுகளைக் கொண்ட ஒரு காலப்பகுதியை வெட்டியெடுத்து அதன் யதார்த்தப் பாத்திரங்களைச் செழுமைப்படுத்தி இந்த மகாநாவல் உருவாக்கப்பட்டுள்ளது. 1981இன் ஆனி மாதத்து ஓர் அதிகாலையில் நயினை ஆலயத்தில் மணி ஒலிப்பதோடு இந்த நாவல் தொடங்குகின்றது. 1981இல் அக்கினிப் பொறிபோன்ற மையச் சம்பவமொன்றின் உந்திப்புடன் ஆரம்பிக்கும் இந்த நாவலில், 1983 கறுப்பு ஜூலை, தேசம் தாண்டுதல்கள், அகதி முகாம் அவலங்கள், மேற்குலகின் அடையாளச் சிக்கல்கள், சமூக நிலை மாற்றங்களும் தேசமளாவிய கருத்து ருவின் புத்தாக்கமும் என்று வியாபிக்கும் சரித்திர வெளியில் இன்னொரு சரித்திரம் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது.

கனவுச்சிறை தமிழ்ப்பெரும் வாசகர்கள் இதுவரை தரிசிக்காத களங்களைக் காட்டும் சமகால வரலாற்று நாவல் வரிசையில் காத்திரமான இடம் வகிக் கக்கூடிய வண்ணம் அமைந்திருக்கின்றது. சமூக அரசியல் இலக்கியத்துறைகள் தோறும் முனைந்த சத்தியத் தேடலாய் விரிகின்றது. இந்நாவலின் புனைவு. ஐந்து பாகங்களாக விரியும் கனவுச்சிறையின் முதலாவது பாகமான திருப் படையாட்சி 1981 முதல் 1983ம் ஆண்டு வரையான காலத்தைப் பதிவு செய்வதாக அமைகின்றது. இரண்டாம் பாகமான வினாக்காலம் 1985-1987ம்

ஆண்டுக்காலப்பகுதிகளில் விரிந்து செல்கின்றது. மூன்றாம் பாகமான அக்னி திரவம் 1989-1991-1993 ஆகிய காலங்களினூடாக இந்தக் கதாபாத்திரங்களது வாழ்க்கைப் போராட்டம் மேலும் சிக்கல்களுக்கூடாக நகர்கின்றது. கனவுச் சிறையின் நான்காம் பாகமான உதிர்வின் ஓசையில் 1995, 1997 1999 ஆகிய காலங்களினூடாக கதாபாத்திரங்களை நகர்த்திச் செல்கின்றார். ஐந்தாவது பாகம் இந்நாவலின் இறுதிப்பாகமான ஒரு புதிய காலம் என்பதாகும். இது 2001ம் ஆண்டில் கதை முடிவதாக அமைகின்றது. ஐந்து பாகங்களிலும் சுமார் 1300 பக்கங்களில் விரிந்துள்ள இந்த நாவலானது ஈழத்து இலக்கியத்து றையில் குறிப்பாக ஈழத்துத் நாவல் இலக்கியத்துறையில் ஒரு பரிசோதனை முயற்சியாகும். ஈழத்துப் புதுக்கவிதையின் துளிகள் நாவலில் ஆங்காங்கே தெளிக்கப்பட்டுள்ளமையும் சுவையாக உள்ளது. முதல் இரு பாகங்களும் சென்னை இலக்கு புத்தக வெளியீடாக வெளிவந்திருந்தது. பின்னைய மூன்று பாகங்களும் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள பல்கலைப் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சார்த்த இலக்கியப் படைப்பாளிகளில் துலக்கமாகத் தெரியும் மற்றொரு படைப்பாளி நிலாந்தன். செப்டெம்பர் 2000 இல் வெளியான அவரது மண் பட்டினங்கள், குறிப்பிடத்தக்கதொன்றாகும். அண்மைக்காலத் தில் தமிழில் வெளிவந்த படைப்புக்களில் இது மிகவும் தனித்துவமானது என்று கருதுகின்றேன். வரலாறு, நாடகம் என்னும் ஊடகங்களிடையே கவிதையை ஓடவிட்டும், கவிதை, நாடகம், வரலாறு என்னும் இலக்கிய உருவங்களின் கலப்பாகவும் அவற்றின் உடைப்பாகவும் மண்பட்டினங்கள் அமைகின்றது. தமிழ்மக்களுக்கு அவர்களின் வரலாற்றுணர்வை ஏற்படுத்தவும், அதன்வழிவரும் எழுச்சியை பிரயோகப்படுத்துவதற்குரியதாக வழிகாட்டும் அரங்க அளிக்கையாகவும் இந்நூலை நிலாந்தன் ஆக்கித்தந்துள்ளார்.

அதுபோன்றே அவரது மற்றுமொரு படைப்பு யாழ்ப்பாணமே.. ஓ.. எனது யாழ்ப்பாணமே! என்ற நூலாகும். மார்ச் 2002 இல் இது முல்லைத் தீவிலிருந்து வெளிவந்தது. யாழ்ப்பாணத்தின் பெருமைகளையும், யாழ்ப்பாண மக்கள் எதிர்கொண்ட அழிவுகளையும் இப்படைப்பின் பக்கங்கள் பேசுகின்றது. கவிதையாகவும், இடையிடையே விவரண உரைகளாகவும் விளக்கக் குறிப்புக்கள் கொண்டமைந்தனவாகவும் அமைந்திருக்கும் இந்தப் பரீட்சார்த்த இலக்கியத்தின் மூலம், இன்றைய யாழ்ப்பாணம் தொடர்பான ஒரு முழுமை யான காட்சிப்படிமம் எம்முன் விரிகின்றது. 3 பாகங்களில் அமைந்த இத் தொகுப்பில் புதிய யாழ்பாடி, யாழ்ப்பாணம்: பாலைநிலத்தின் புதிர் (பகுதி 1க்கான உரையும் அதன் தொடர்ச்சியும்), கந்தபுராண கலாச்சாரத்திலிருந்து

கரும்புலிகள் வரை ஆகிய தலைப்புக்களில் முறையே அம்மூன்று பாகங்களும் விரிகின்றன.

என் அப்பாவின் கதை என்ற தலைப்பில் என். சண்முகலிங்கன், 1988 இல் தெல்லிப்பழை, நாகலிங்கம் நூலாலய வெளியீடாக வெளிக்கொணர்ந்த நூலும் ஈழத்துக் கல்வெட்டுப் பாரம்பரியத்தின் புதியதொரு பக்கமாகும். பின்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றிய சண்முகலிங்கன், தன் அப்பாவின் (அமரர் க. நாகலிங்கம்) கதையை இலக்கியமாக்கும் முயற்சியில் அவர் தந்தையாரின் 31ம் நாள் நினைவுடன் இந்நூலை வெளியிட்டிருந்தார். ''கல்வெட்டு மரபினின்றும் விலகி ஆக்க இலக்கியங்களையும் பயனான பிரசுரங்களையும் தரத் தொடங்கியுள்ள புதிய மரபினிடை சண்முகலிங்கனின் என் அப்பாவின் கதையும் ஒரு புதிய தொடக்கம்'' என்று இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் சு.வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவரும் சமூகச் சூழலும்: மணியதாஸ் நினைவாக என்ற நூல், புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் அவர்களால் பெப்ரவரி 1998 இல் தொகுக்கப்பட்டது. அவரது மகன் மணியதாஸ் (10.5.1990-5.2.1998) அவர்களின் மரணத்தையொட்டிய அஞ்சலி உரைகள், சிறுவர்களும் சமூகச் சூழலும் பற்றிய கட்டுரைகள் என்பனவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்தது. இதுவும் முன்னைய நூல் போன்றே கல்வெட்டுப் பாரம்பரியத்தின் மற்றொரு பரிமாணமாகும். இவ்வாறு பல நூல்களை உதாரணத்திற்குக் காட்டலாம்.

கல்வெட்டுப் பாரம்பரியம் போலவே, திருமண வைபவங்களிலும் நூல்கள் வெளியிடும் முயற்சி அமரர் நந்தியின் இளமைக் காலங்களிலேயே தொடங்கிவிட்டது. நந்தியின் *ஊர் நம்புமா?* என்ற சிறுகதைத் தொகுதியின் சிறப்பம்சம் என்னவென்றால், யாழ்ப்பாணம், நண்பர்கள் வெளியீடாக, ஜூலை 1966 இல் வெளியிடப்பட்டிருந்த இந்நூல் ''டொக்டர் நந்தி'' அவர் களுக்கு அவரது நண்பர்கள் வழங்கிய திருமணப் பரிசாக அமைந்தமையாகும். இந்நூலில் நந்தி அதுவரை எழுதியிருந்த 25 சிறுகதைகளில் தேர்ந்த 12 சிறுகதைகள் அடங்கியிருந்தன. திருமணப்பரிசாக ஒரு நூலை அச்சிட்டு வழங்கும் ஒரு வழக்கின் முன்னோடியாக இந்நூல் அமைந்திருந்தது.

இத்தகைய திருமணப் பின்னணியில் வெளியிடப்பட்ட மற்றுமொரு நூல் *திருமணக்கிரியை விளக்கம்* என்ற தலைப்பிலான நூலாகும். இது தெல்லிப்பழை - கலை இலக்கியக்கள வெளியீடாக ஜுன் 2000 இல் வெளியிடப்பட்டது. அ. அன்பழகன், சு. நிலோஷணி தம்பதியரின் திருமண நாள் வெளியீடாக 12.6.2000 அன்று திருமணப்பரிசாக வெளியிடப்பட்ட

இச் சிறுநூல், மணமகனின் தந்தையாரும், தெல்லிப்பழை கலை இலக்கியக்களத்தின் இயற்றமிழ்த்துறைத் தலைவருமான சி.அப்புத்துரை அவர்களும் உபதலைவர் சு. செல்லத்துரை அவர்களும் இணைந்து வெளியிட்டுள்ளனர். சைவக்கிரியைகளின் விளக்கங்கள் எதுவுமின்றி ஏதோ நடக்கின்றது என்ற அளவில் இருக்கும் நம்மவர்களுக்கு, வாழ்வின் மிக இன்றியமையாததும் வேண்டப்படுவதுமாகிய திருமணக்கிரியைகள் பற்றிய விளக்கத்தை சாதாரண தமிழறிவு உள்ளவர்களும் விளங்கிக்கொள்ளத் தக்கதாகவும் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

புகலிட நாடுகளிலும் அவ்வப்போது பரீட்சார்த்தப் படைப்புகள் வெளிவருவதுண்டு. பிரான்ஸ், தமிழர் கலைக்கலாச்சார மாமன்றம் திவ்வியா என்றொரு நூலை ஒக்டோபர் 1999இல் வெளியிட்டிருந்தார்கள். புதுநகர் செல்லத்துரை அவர்கள் எழுதிய நூல் இது. தாயகத்தில் வன்னிப்பெரு நிலப்பகுதியில் நலிந்து வாழும் தமிழ்மக்களின் பண்பாட்டை, அன்றாட வாழ்க்கை முறைகளைப் புகைப்படமாக்கித் தான் புலம்பெயர்ந்த நாட்டுக்கு எடுத்து வந்து அப்படங்களின் விம்பங்கள் தரும் உணர்வலைகளைத் தொகுத்து புலம்பெயர் சூழலில் கவிதைகளாக்கித் தொகுத்துத் தரும் ஒரு முயற்சியாக இது அமைந்திருந்தது. தமது வேரை அறுத்துக்கொண்டு உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் நம்மவர்கள் தமது பழைய வாழ்வின் மலரும் நினைவுகளை மீட்டெடுக்க இத்தொகுப்பு உதவக்கூடும்.

இக்கட்டுரையை எழுதும் வேளையில், ஜூலை1994இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்கள் வெளியிட்ட வெளியீடொன்று கைக்கெட்டியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுக் கலைமானிப் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் மாணவர்களின் முகவரிகள் தாங்கிய பதிவுகள் இவை. முகவரிகளுடன் மாத்திரம் நின்றுவிடாது நறுக்குத்தெறித்த ஓரிரு வாசகங்கள், குறுங்கவிதை வரிகளினூடாக பல்கலைக் கழக வாழ்வு பற்றிய தத்தம் மனப்பதிவுகளையும், நினைவுகளையும் அங்கதச் சுவையுடன் இதில் பதிவுசெய்துள்ளார்கள். தமது மாணவப் பருவத்தின் நினைவுகளை காலம்காலமாக மீட்டுப்பார்க்க வழிசெய்யும் ஒரு முயற்சி இதுவாகும்.

பரிசோதனை இலக்கியங்களைப் படைக்கவேண்டுமென்ற அவாக்கொண்டு இலக்கியங்களை உருவாக்கிய ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளின் பங்களிப்பு ஈழத்து இலக்கிய உலகில் அளப்பரியது. இக்கட்டுரை வாயிலாக ஒரு சிலவற்றையே விரிவஞ்சிக் காட்சிப்படுத்த முடிந்துள்ளது.

(தமிழர் தகவல் பெப்ரவரி 2015: ப.59-62, ஞானம், மார்ச் 2015: ப.22-27)

15

ஈழத்தமிழரின் புலப்பெயர்வு இலக்கியச் செல்நெறியின் சில தடப்பதிவுகள்

அறிமுகம்

ஈழத்தமிழரின் முதலாவது புலப்பெயர்வு மலாயாவை நோக்கியதாக 1870 களில் தொடங்கிய வேளையில் அவர்களால் அங்கு படைக்கப்பெற்ற இலக்கியங்கள் எவையும், புலப்பெயர்வின் வலிகளைத் தாங்கியதாக இருக்க வில்லை. மாறாக, தாயக நினைவுகளை புதிய வாழ்க்கைச் சூழலில் பொருத்திப் பார்ப்பதாகவும், குடும்பங்களை விட்டுப் பிரிந்துவாழும் வேதனைகளையும் பதிவுசெய்வதாகவுமே அமைந்திருந்தன. பொருளாதாரப் புலப்பெயர்வாகவே எம்மவரின் முதலாம் கட்டப் புலப்பெயர்வு அமைந்திருந்தது.

1958 இல் தொடங்கி 1977, 1983 காலகட்டங்களில் தொடர்ந்த ஈழத்தமிழர் மீதான இனவெறித் தாக்குதல்கள், அவர்களை இலங்கையர்கள் என்ற பொதுக்குறியீட்டுக்கு உரியவர்கள் என்ற உணர்விலிருந்து விடுபட வைத்ததுடன், படிப்படியாக வடக்கும் கிழக்குமே தமிழரின் தாயகம் என்ற ஒரு உணர்வினைத் தோற்றுவித்தது. இதுவே ஈழத்தமிழரின் தனித் தேசிய இனச் சிந்தனையையும், உரிமைப் போராட்டத்தையும் வலுப்பெறச் செய்தது. இறுதியில் கணிசமானதொரு பகுதியினரைத் தாயகத்தைவிட்டுப் புலம்பெயரவும் வைத்தது.

எண்பதுகளின் பின்னர் இலங்கையை விட்டு வெளியேறிய, ஈழத் தமிழர் தாம் முன்னர் எப்பொழுதும் அறிந்திராத அந்நிய தேசங்களில் புதிய சூழலில் புலம்பெயர் வாழ்க்கையைத் தொடரவும் இலங்கையின் நிரந்தரமானதும், தீவிரமானதுமான இனப்பாகுபாட்டுக் கொள்கையே வழிவகுத்தது. இதுவே இரண்டாம் கட்டப் புலப்பெயர்வாகப் பதிவுபெறுகின்றது. யூதர்களின் புலப் பெயர்வு இலக்கியங்களையொத்த புலப்பெயர்வு சார்ந்த படைப்புக்களை ஈழத்தமிழர்களிடமிருந்து உருவாக இப்புலப்பெயர்வே வழிசமைத்துக் கொடுத்தது.

ஆரம்பத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரிவுத் துயரமும், தாயக வாழ்வின் எஞ்சிய நினைவுகளுமே இலக்கியங்களினூடாகத் தமது உணர்வின் வடிகாலாக வெளிப்படுத்தப்பட்டன. அங்கு இலக்கண இலக்கிய விதிமுறைகள் உடைக்கப்பட்டன. உணர்வுகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டன. விதி விலக்குகளும் இருந்தன. அவை பெரும்பாலும் இலக்கிய அனுபவம்மிக்க புலம்பெயர்ந்த படைப்பாளிகளினால் படைக்கப்பெற்றவையாகவே இருந்தன. அவர்களின் அனுபவத்தின் வெளிப்பாடு அப்படைப்புகளில் பொதிந்திருந்தன. தாயகத்திலும் தமிழகத்திலும் அப்படைப்புகள் வரவேற்கப்பட்டன. அவை பற்றி விவாதிக்கப்பட்டன.

இதே வேளை, இலக்கியப் பின்புலமற்ற சாதாரண புகலிடத் தமிழர்களின் படைப்புக்கள் ஆரம்பத்தில் நண்பர்கள் வட்டத்துக்குள்ளும், தாம் புலம் பெயர்ந்து வாழத் தலைப்பட்ட பிராந்தியத்துக்குள்ளும் தங்கிவிட்டன. அத்தகைய இலக்கியங்களுக்கு தமிழ்மொழியில் வெளிவந்த புகலிடச் சஞ்சி கைகள், மாதாந்த புதினப் பத்திரிகைகள் என்பனவும், பின்னர் வளர்ச்சி கண்ட புகலிட வானொலிகளும் தாராளமாகக் களம் அமைத்துக்கொடுத்தன. தரப்படுத்தல் என்ற செயற்பாடோ, வெளியிடத் தகுதியானவையா என்ற தேர்வோ அங்கு இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. மன உணர்வு களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் இலக்கியங்கள் படிப்படியாகத் தமிழகத்தை யும், தாயகத்தையும் பரவலாகச் சென்றடையத் தொடங்கிய பின்னர் புகலிட இலக்கியம், புலம்பெயர்ந்தோர் இலக்கியம், புலப்பெயர்வு இலக்கியம் என்ற வாறான சொற்பதங்கள் பரவலான பேசுபொருளாயிற்று. எது எவ்வாறெனினும், இப்பதங்கள் அனைத்தும் ஈழத்தமிழரின் புலம்பெயர் இலக்கியங்களையே குறிப்பாக உணர்த்தி நின்றன. அன்றும், இன்றும் பொருளாதாரக் காரணி களுக்காகப் புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழ்ந்துவரும் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ப் படைப்பாளிகளின் இலக்கியங்கள் எவையும் இந்தத் தனித்து வமான வகைக்குள் உள்வாங்கப்படவில்லை.

புகலிட இலக்கியங்களின் மேற்கூறிய சொற்பதங்கள் புலம்பெயர்ந்தோரின் படைப்புக்களை நுணுக்கமாகப் பிரித்துப் பார்ப்பதையும் தற்போது நாம் அவதானிக்கின்றோம்.

1. புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் ஆரம்ப காலங்களில் எழுதத் தொடங்கி இன்றும் எழுதிவரும் தாயகத்தின் நினைவுகளை மட்டுமே இரைமீட்கும் படைப்புகள்.

2. தாயகத்தில் இடம்பெறும் அன்றாட போராட்டங்களையும், சமூக மாற்றங்களையும் கண்டும் கேட்டும் வாசித்தும் உள்வாங்கிய விடயங்களை வைத்துக் கற்பனையில் (Armchair writers) தூரதேசத்திலிருந்து எழுதப்படும் படைப்புக்கள்.

3. புலம்பெயர்ந்த வாழ்க்கையின் தரிசனங்களோடு தாம் விட்டுச்சென்ற தாயக வாழ்க்கையையும் இணைத்து இலக்கியமாக்கும் படைப்புக்கள்.

4. முழுமையான புலம்பெயர் வாழ்வைத் தரிசித்து அதன் பாற்பட்ட உணர்வுகளை மட்டும் பதிவுசெய்யும் படைப்புக்கள். (Exodus Literature)

5. தமது பெற்றோர் அறிந்தே தேர்ந்தெடுத்த புலம்பெயர்வாழ்வில், தமது விருப்புவெறுப்புகளுக்கு இடமற்றநிலையில், விதியேயென்று வலிந்து இணைந்துகொண்ட இரண்டாம் தலைமுறையினரின் தமிழ் மற்றும் வேற்றுமொழிப் படைப்புக்கள்.

மேற்கண்ட பிரிவுகளில் படைக்கப்பட்டு வந்த அனைத்து நூல்கள் பற்றியும் இக்கட்டுரையில் பதிவுசெய்வதென்பது இயலாத காரியமாகும். இக்கட்டுரையாளரின் நூல்தேட்டம் தொகுதிகள் அதனை ஏற்கெனவே பதிவுசெய்துள்ள நிலையில் அதனை தமது தேவைக்கேற்ப ஆய்வாளர்கள் தேடுகைக்குட்படுத்திக்கொள்ளலாம். (பார்க்க: நூல்தேட்டம் டொட் கொம்).

இக்கட்டுரையின் நோக்கம் எண்பதுகளில் தொடங்கிய ஈழத்தமிழரின் புலப்பெயர்வு இலக்கியச் செல்நெறியில் அவ்வப்போது மாற்றங்களை உள்வாங்கிக் கவனத்தை ஈர்த்த சில படைப்புகளை மாதிரிப் படைப்புகளாகக் காட்டிச் செல்வதேயாகும்.

புலப்பெயர்வின் பின்புலம்

ஈழத்தமிழரின் பொதுவான புலப்பெயர்வு இலக்கியங்கள் பற்றிய அறிவைப் பரவலாகப் பெறுவதற்கு இதுவரை சில நூல்கள் எம்மவரால் வெளியிடப்பட்டுள்ளன. ஈழத்தமிழரின் புலம்பெயர்வாழ்வு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் எவரும் அத்தகைய அலைந்துழலும் வாழ்வினை வாழ்ந்து வரும் மக்களின் புகலிட வாழ்வியல் பின்னணி பற்றிய அறிவை முதலில் தேடிப்பெறவேண்டியது முக்கியமாகும். அத்தகைய பின்புலத்தை அறியாமல் ஆராயப் புகும் எவராலும் முழுமையாகப் புகலிட வாழ்வியலைப் புரிந்து கொள்ள முடியாது போகலாம்.

புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாடு சிறப்புமலர் ஒன்று தமிழகத்திலிருந்து எஸ்.வி.இராஜதுரை, ச.சீ.கண்ணன், மற்றும் பலரின் உருவாக்கத்தில் 1994இல் வெளிவந்திருந்தது. திருச்சியில் புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாடு டிசம்பர் 18, 1994 இல் இடம்பெற்ற போது வெளியிடப்பட்ட சிறப்புமலர் இதுவாகும். இன்குலாப், எஸ்.வி.இராஜதுரை, பா.கல்யாணி, மற்றும் நிறப்பிரிகை ஆசிரியர் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இம்மாநாட்டில் வெளியிடப்பட்ட இம்மலரில் தமிழ்நாடு உட்பட உலகெங்கிலுமுள்ள ஈழத்தமிழ் அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினையைத் தொகுத்தளிக்க முயன்றிருக்கிறார்கள். புகலிடத் தமிழர்களின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் இம்மலரில் இலக்கியப்பகுதியில் ஆக்க இலக்கியங் களாகவும் தொகுத்துள்ளார்கள்.

புலம்பெயர்ந்த தமிழன் என்ற தலைப்பில் சாமி அப்பாத்துரை அவர்கள் கனடாவிலிருந்து எழுதிய நூல் பற்றியும் இங்கு குறிப்பிடலாம். இரண்டு பகுதிகளாக எழுதப்பட்டுள்ள இந்நூலில் முதற் பகுதியில் அகிலமெங்கிலும் தமிழ் அகதிகள், கனடாவும் அகதிகளும், குடிவரவுச் சட்டம், 21ம் நூற்றாண்டில் கனடியக் குடிவரவு இனவெறி ஆகிய தலைப்புக்களில் அமைந்த கட்டுரை களும், இரண்டாம் பகுதியில் புகுந்தகத்தில் புதுவாழ்வு, புலத்தில் தமிழ்மொழி ஏன் கற்க வேண்டும், எவ்வாறு புகட்டலாம், தேசப்பற்று, உக்கிரேனியரின் உதாரணம், தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றத் திட்டங்கள், உலகிற்கு உணர்த்தப்படும் உண்மைகள், போராட்டங்கள் அவசியமா, கல்வித்துறையில் பாரபட்சம் ஆகிய தலைப்புகளில் அடங்கிய கட்டுரைகளும் காணப்படுகின்றன. (புகலிட நாடுகளில் தமது சொற்பிரயோகங்களில் ''புலம்'' என்ற பதத்தைப் ''புகலிடம்'' என்ற கருத்தில் பரவலாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை வாசகர் கருத்திற் கொள்ளவேண்டும்.)

புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழரின் பண்பாட்டுத் தனித்துவம்: சில அவதானிப்புகள் என்ற தலைப்பில் வி.நித்தியானந்தம் அவர்கள் ஒரு சிறு நூலை வெளியிட்டிருந்தார். புலம்பெயர்ந்து வாழ்ந்தவேளையில், நியூசிலாந்து, மஸ்ஸி பல்கலைக்கழகத்தின் அல்பனி வளாகத்தில் பணியாற்றிய வேளையில் திரு. வி. நித்தியானந்தம் அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் ஆற்றிய உரையின் நூல்வடிவம் இதுவாகும்.

அகதி வாழ்க்கை: ஓர் இலங்கைத் தமிழ் அகதியின் அனுபவக் குறிப்புகள் என்ற நூல் கலையரசன் என்பவரால் சென்னையில் 2010இல் வெளியிடப் பட்டது. இலங்கைத் தமிழரான கலையரசன், பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம்செய்து, அங்குள்ள அரசியல் சமூக நிலவரங்களை குறிப்பாக,

வெகுஜன ஊடகங்களால் மக்களுக்குச் சொல்லப்படாத, அல்லது முக்கியத் துவம் கொடுக்கப்படாத, அல்லது மறைக்கப்பட்ட செய்திகளை ஆய்வுசெய்து கட்டுரைகளாக வெளியிட்டு வருகிறார். உலகளாவிய தமிழரின் - குறிப்பாக ஈழத்தமிழரின் அகதிவாழ்க்கை பற்றிக்கூறும் இந்நூலில் 5 பிரிவுகள் உள்ளன. பயணங்கள், சர்வதேச அகதி அரசியல், திரைகடலோடியும் புகலிடம் தேடு, சத்திய சோதனை, லண்டன் உங்களை வரவேற்கிறது ஆகிய தலைப்புகளில் 45 கட்டுரைகள் இந்நூலில் ஒழுங்கமைக்கப்பெற்றுள்ளன.

இருப்பும் விருப்பும் என்ற தலைப்பில் கி.பி.அரவிந்தன் தனது கட்டுரை களைத் தொகுத்து ஒரு நூலை வெளியிட்டிருந்தார். 1990களில் புலம்பெயர்ந்த ஈழத்துக்கவிஞராக அதிகம் அறியப்பட்டவர் கி.பி.அரவிந்தன் என்னும் கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ். தோழர் சுந்தர் என்றும் ஈரோஸ் இயக்க விடுதலைப் போராளியாகவும் அறியப்பட்டவர். பின்னாளில் புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்ந்தவர். (கி.பி. அரவிந்தன் 17.09.1953-08.03.2015) தமிழகம் இந்நூலை கைகளில் ஏந்தட்டும் என்ற வைகறையின் முன்னுரையான அறிமுகக் கட்டுரை யுடன் இது அணிந்துரை அல்ல தோழர்களே என்ற தலைப்பில் பாமரன் எழுதிய உணர்வுபூர்வமான கட்டுரையும், அப்படித்தானா அரவிந்தன்? என்ற கே.எம். வேணுகோபாலின் கட்டுரையும் இத்தொகுதிக்கும் அதன் படைப்பாளி கி.பி.அரவிந்தனுக்குமான விரிவான அறிமுகத்தை வழங்குகின்றன. உள்ளே உள்ள கி.பி.அரவிந்தனின் பத்துக் கட்டுரைகளும் முறையே இருப்பும் விருப்பும், ஒற்றுமையை ஓதுவோருக்கு, காலம் அரித்திடாது எம் இணைப்பை, எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம், இலங்கையில் இன்னொரு போரை நாங்கள் விரும்பவில்லை, சாத்வீகப் பாதையில் சந்தி பிரித்தவன்: பொன்.சிவகுமாரன், யாசர் அரபாத்: ஒரு முடிவுறாத வரலாறு, ஓர் அகதியின் தாயும் தாயகமும், ஒரு பயணமும் சில நினைவுகளும், அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகி றேன் ஆகிய தலைப்புகளில் எழுதப் பட்டுள்ளன. புலம்பெயர் வாழ்வியலின் வலிகளின் ஆழத்தை இந்நூலின் கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன.

தமது பூர்வீக மண் பற்றியும், அதில் தாமும் தம் முன்னோர்களும் எப்படியெல்லாம் இனிதே வாழ்ந்தார்கள் என்றும் பதிவுசெய்துவைக்கும் இலக்கியப்பண்பாடு புகலிடத்தில் வளர்ந்து வருகின்றது. தாம் தேர்ந்த புகலிட வாழ்க்கையில் இணைந்துகொண்டு பெருகிவரும் பின்னைய சந்ததியின ருக்குக் கனவாகிப்போன அந்தத் தாயக மண்ணின் வாசனையை கற்பனை யிலாவது நுகரும் வகையில் இலக்கியப் பதிவாக்கிவிட்டுச் செல்லும் குற்ற வுணர்வு இப்படைப்புகளின் உருவாக்கத்துக்குக் காரணமாகலாம்.

டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழ்ந்து இரண்டு தலைமுறைகளைக் கண்டுவிட்ட வேலணையூர் பொன்னண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் *பனி மலை தாண்டிய பாதச் சுவடு* என்ற தலைப்பில் ஒரு புகலிடத் தமிழனின் பயண இலக்கியமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. புகலிடத்தின் ஈழத்தமிழரின் எதிர்காலச் சந்ததியினர் தமது மூதாதையர் பற்றி, அவர்கள் கைவிட்டுவந்த வாழ்க்கைமுறைபற்றி, அந்தச் சமூகத்தினரின் சமய, சமூக, கலாச்சார வாழ்வு பற்றி, பண்பாடு பற்றி நாம் கொண்டிருக்கும் எண்ணங் களையும் வடிவங்களையும் நாம் புலம்பெயர்ந்து வந்து பதியம்வைத்துள்ள மண்ணில் வாழப்போகும் எமது அடுத்த தலைமுறையினருக்கு காலம் காலமாக எடுத்துச்சொல்லவேண்டிய கடமை எமக்குள்ளது என்பதை இந்தச் சுயவரலாற்று நூல் உணர்த்துகின்றது. பிறப்பு இளமைக்காலம், ஆரம்பப் பள்ளி வாழ்க்கை, இளமைக்கால நினைவுகள், அரசியல் பொதுப்பணிப் பிரவேசம், என்று இந்நூல் தொடர்கிறது. பொது வாழ்க்கையில் இவர் வேலணையில் துணைவியாருடன் அவரது தாலிக்கொடியை விற்று பொது வீதியை செப்பனிட்ட செய்தி வருகின்றது. 1981இல் இவர் குடும்பத்துடன் புலம்பெயர்ந்த கதை தொடர்கின்றது. 1981 முதல் பிரான்ஸ் வாழ்க்கை, பின்னர் 1987முதல் டென்மார்க் வாழ்க்கை என்று இவரது சுய வாழ்க்கை அனுபவம் நிச்சயம் ஐரோப்பிய நிரந்தரப் பிரஜைகளான எதிர்காலச் சந்ததியினருக்கு நிரந்தரமாக நிலைத்திருக்கும் ஒரு சுவையான கதையாக அமையப்போகின்றது.

பிறந்த மண்ணும் புகலிடமும்: சில அவதானிப்புகள் என்ற நூல், கலைவளன் சிசு.நாகேந்திரன் அவர்களால் எழுதப்பட்டது. மலையகத்தில் பிறந்து, யாழ்ப்பாணத்தில் வளர்ந்து இன்று புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் நூலாசிரியரின் இந்த நூல் எமக்கு ஈழத்தமிழினத்தின் புலம்பெயர் வாழ்வியலை, கூட இருந்து அவதானித்து ஒரு நேர்முக வர்ணனையாகத் தருகின்றது. ஈழத்தமிழராகப் புலம்பெயர்ந்து இன்று ஐரோப்பிய, அமெரிக்க, கனேடிய, அவுஸ்திரேலியத் தமிழர்களாக மாற்றம்பெற்றுவரும் உலகத் தமிழர் பற்றிய சமூகவியல் வாழ்வை ஆராயப்போகும் எதிர்காலத்துப் புத்திஜீவிகளின் ஆய்வுத் தேவைகளுக்கு இந்த உள்வீட்டுப்பிள்ளையின் கருத்துக்கள், அவதானிப்புகள் மிக அவசியமானதாகலாம். புகலிட வாழ்வில் லண்டனில் ஒன்பது ஆண்டுகளும், அவுஸ்திரேலியாவில் 13 ஆண்டுகளுமாக மொத்தம் 22 ஆண்டுகளைக் கழித்த நிலையில் இந்நூலை திரு நாகேந்திரன் எழுதியிருக்கிறார். இவரது பரந்த அவதானிப்பினதும் அனுபவத்தினதும் வெளிப்பாடாக இதிலுள்ள சம்பவங்கள் அமைகின்றன. ஒரு கதைசொல்லியாக

மாத்திரமல்லாது ஆங்காங்கே தன் தனிப்பட்ட கருத்துக்களையும் தனது பார்வையில் பட்டவாறு வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பல மேலைத்தேய நாடுகளுக்கும் இவர் சென்று வந்திருக்கிறார். அத்துடன் லண்டனிலும் அவுஸ்திரேலியாவிலும் தன் அவதானிப்புகளையும் சேர்த்துத் தொகுத்து ஒரு பொதுமைப் பாட்டுடனேயே தன் கருத்துக்களை இந்நூலில் முன்வைத்திருக்கிறார்.

இல்லாமல் போன இன்பங்கள் என்ற தலைப்பில் லண்டனில் புலம் பெயர்ந்து வாழும் கோவிலூர் செல்வராஜன் ஒரு நூலை எழுதியிருந்தார். இணையத்தளங்களில் ஆசிரியர் எழுதிய கட்டுரைகளில் தேர்ந்த 60 கட்டுரை கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தாயகத்திலும் புகலிடத்திலும் வாழும் ஈழத்தமிழர்களின் வாழ்க்கை முறைகள், வாழ்வியல் பிரச்சினைகள், எம்மக்களின் மனங்களில் புகுந்து முகிழ்ந்து புரையோடிப்போயுள்ள வெறுக்கத் தக்க குணாம்சங்கள், புலம்பெயர்ந்த தமிழர்களால் அவர்களின் தாயக உறவுகளின் வாழ்வில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் எனப் பல்வேறு சமூகவியல் சார்ந்த கருத்துக்களை ஆசிரியர் தனது கட்டுரைகளில் முன் வைக்கின்றார். இக்கருத்துக்களில் பல வாசகரின் சிந்தனையைத் தூண்டிவிடும் சமூக வலுவைப்பெற்றுள்ளன. சில வாசகர்களின் பார்வையில் மாற்றுக் கருத்தையும் தோற்றுவிக்கின்றன. மொத்தத்தில் ஒரு புலம்பெயர் தமிழரின் தெளிவான பார்வையில் ஈழத்தமிழ்ச்சமூகம் நுணுக்கமாக அணுகப்பட்டுள்ளது.

புலம் பெயரும் மண்வாசம்: தாயக-புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு என்ற தலைப்பில் வெளியான நூல் ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழ்ந்து தற்போது தாயகம் திரும்பியுள்ள, க. அருந்தவராஜா அவர்கள் எழுதியுள்ள நூல் வரலாற்றுரீதியாக தமிழர்களுடைய இடப்பெயர்வுகள் எவ்வாறு இடம்பெற்றிருக்கின்றன, தாயகத்தில் உள்ள மக்களுடைய வாழ்க்கை முறைகள் எப்படி அமைந்திருக்கின்றன, இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக மேலைத்தேய நாடுகளுக்குப் பயணித்தபோது அவர்களால் எதிர்கொள்ளப்பட்ட இடர்கள், புலம்பெயர் நாடுகளிலுள்ள மக்களின் சமகால வாழ்க்கை நிலைமைகள், கலாசார வாழ்வியல் போன்ற விடயங்களை சாதாரண மொழிவழக்கில் விளக்குகின்றது. தமிழர் கண்ட நகர்வு, தாயக வாழ்வு, கண்ணீர்ப் பயணம், புலம்பெயர் தமிழர் வாழ்வு, வீதி, பெரியபிள்ளை, கலாசார வாழ்வு, புலம்பெயர் வாழ்வில் புதிய தேவைகள் ஆகிய எட்டு தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.

குடும்பத்துள் வாழ்தல் என்ற நூல் இவர் தமது துணைவியார் அன்பரசி அருந்தவராஜாவுடன் இணைந்து எழுதியது. தாயகத்திலும் புலம்பெயர்

வாழ்விலும் கிடைத்தவையும், கண்டுகொண்டவையுமான அனுபவங்கள், தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஊடாகக் கிடைத்த அறிதல்கள், பட்டறிவுகள் ஆகியவற்றின் துணைகொண்டு சமூகவியல் சார்ந்த இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. பெற்றோரின் உன்னதமான பாத்திரத்தை இந்நூல் எடுத்து விளக்குகின்றது. சமூகத்தின் அத்திவாரமான குடும்பத்தில் நிகழும் சந்தோஷம், துக்கம், நெருக்கடி, ஆபத்துக்காலங்களில் அதன் தலைமைப் பாத்திரம் ஏற்ப வரும் குடும்ப உறுப்பினர்களும் எவ்வாறு நடந்துகொண்டு நல்ல தீர்வினை எய்தலாம் என்பதையும் இந்நூல் கோடிட்டுக் காட்டுகின்றது. நடைமுறையில் நிலவுகின்ற குடும்ப நிர்வாக முறைகளான தந்தைமுறை, சர்வாதிகார முறை, ஜனநாயக முறை, சந்தர்ப்ப அணுகுமுறை என்பவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி விவாதிப்பது சுவையாக உள்ளது. இவை அனைத்தும் அறிமுகம், வழிகாட்டுதல்கள் ஏன், பிள்ளைகளைஅறிந்து கொள்ளல், குடும்பமும் தலைமைத்துவமும், தமிழர் இல்ஊடகம், குடும்ப முறிவுகள் ஆகிய ஆறு இயல்களில் எழுதப்பட்டுள்ளன.

தாயகத்திலிருந்தும் எழும் குரல்கள்

புலம்பெயர்வாழ்வு பற்றித் தாயகத்திலிருந்து எழுதப்பட்ட சில நூல்களையும் இங்கு விரிவான பார்வைக்காகக் குறிப்பிடலாம். தாயகத்தில் புலம்பெயர் இலக்கியம் பற்றிய கட்டுரைகளை எழுதுபவர் என்ற வகையில் தனித்துத் தெரிபவராக சு.குணேஸ்வரன் இனம்காணப்படுகின்றார். இவர் பற்றிய விரிவானதொரு கட்டுரை ஞானம் இதழில் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ளதால், இவரது இரண்டு படைப்புக்களை மட்டும் இங்கே பதிவுக்காகக் குறிப்பிடுகின் றேன். (மேலும் பார்க்க: புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் உரைகல் ஒன்று: ஈழத்துப் படைப்பாளி சு.குணேஸ்வரன் பற்றிய ஒரு பார்வை. ஞானம், கலை இலக்கியச் சஞ்சிகை, இதழ் 162, ஒளி 14, சுடர் 6, நவம்பர் 2013, ப. 28-31.)

அலைவும் உலைவும் என்ற தலைப்பில் சு.குணேஸ்வரன் எழுதிய ஒரு நூலில் இவரது 12 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை புலம்பெயர்ந்தோர் சென்ற இடங்களில் தாம்பட்ட கஷ்டங்கள், ஏற்றுக்கொண்ட வசைமொழிகள், பெண்கள் அனுபவித்த துயரங்கள் என்பன பற்றிப் பேசுகின்றன. புலம்பெயர் இலக்கியம், புகலிடச் சஞ்சிகைகள், மொழிபெயர்ப்புகள், தமிழ்மொழிப் பிரதேசச் செல்வாக்கு என்பன பற்றியும் இந்நூலில் விபரிக்கப்படுகின்றன. *புனைவும் புதிதும்* என்ற தலைப்பில் இவர் எழுதிய மற்றும் ஒரு நூலில் புகலிட இலக்கியம் சார்ந்த நான்கு ஆய்வுக் கட்டுரைகளும் ஈழத்து இலக்கியம்

சார்ந்த மூன்று கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் புகலிடச் சிற்றிதழ்களின் அரசியல், இலத்திரனியல் சூழலில் புகலிடச் சிற்றிதழ்கள், புகலிட இலக்கியமும் பண்பாடும் ஆகிய இரு கட்டுரைகளுடன், பார்த்திபன், தாட்சாயணி, ந.சத்தியபாலன், என்.எஸ்.எம்.இராமையா ஆகிய ஆளுமைகள் பற்றிய இரு கட்டுரைகளும் உள்ளன. ஆய்வாளர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயன்தரக்கூடிய கட்டுரைகள் இவை.

புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள் என்ற தலைப்பில் என்.சிறிரஞ்சன் எழுதிய நூல் புலம்பெயர்ந்தவர்களுக்கும் தாயகத்திற்கும் இடையிலான பொருளாதார உறவுகள் பற்றியது. பொருளாதாரப் பங்களிப்புகள் எதிர்காலத்தில் குறைவடைந்து செல்வதாக இருக்கும் என்பதனைச் சுட்டிக் காட்டுவதனை நோக்கமாகக் கொண்ட இந்நூலில் அவ்வாறான நிலையினை எவ்வாறு எதிர்கொள்வது, தாயகத்திற்கான புலம்பெயர்ந்தவர்களின் பல்தரப் பட்ட பொருளாதாரப் பங்களிப்புக்கள் எத்தகையவை, அவற்றின் முக்கியத் துவம் யாவை, அவை மேலும் எவ்வாறு அதிகரிக்கப்படலாம் என்பது உட்பட்ட புலம்பெயர் வாழ்வில் குடும்பம் பற்றிய பல்வேறு சமூகக் கட்டமைப்பு களின் குறுக்குமுகத் தோற்றத்தைப் பிரதிபலிக்கும் விடயங்களைக் கொண் டுள்ளது. சாதாரண வாசகர்களை இலக்காகக் கொண்ட இந்நூலில் அடங்கியுள்ள 25 கட்டுரைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்றபோதும் தனியே ஒரு கட்டுரையினை வாசிக்கும் வாசகருக்குக் கூடப் பயனுள்ள செய்தி யொன்றை வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர்வு இலக்கியம் பற்றிய ஆய்வுகள்

புலம்பெயர்ந்தோரின் இலக்கியப் படைப்புகளையும் புகலிட இலக்கியங் களையும் ஆய்வுசெய்யும் பாங்கில் எழுந்த சில நூல்களை இனிக்காண்போம். இவ்வகையில், *பனிக்குள் நெருப்பு: புலம்பெயர்ந்தோர் இலக்கியம் ஒரு வரலாற்றுப் பார்வை* என்ற தலைப்பில் எஸ்.பொன்னுத்துரை அவர்கள் எழுதிய நூல் குறிப்பிடத்தக்கது. ஈழத்தமிழர்களின் புதியதான புலப்பெயர்வு களின் விளைவாக முகிழ்த்துவரும் தமிழ் இலக்கிய வகையான புலம்பெயர்ந் தோர் இலக்கியம் தொடர்பாக எஸ்.பொ. தமிழ்நாட்டில் புதுவைப் பல்கலைக் கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற் புலத்திலே 22.3.2006 அன்று நிகழ்த்திய பேருரையே பனிக்குள் நெருப்பு என்ற இந்த நூலின் உள்ளடக்க மாகும். The Tamil Diaspora என்ற கருத்துருவம் குறித்து விளக்கமளிக்கும்

நூல் இது. இந்நூலின் கருத்துருவம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் இன்றும் தொடர்ந்தவண்ணமுள்ளமையே இந்நூலின் சிறப்பாகும்.

புகலிடத்தில் உருவான ஆக்க இலக்கியங்களில் அதிக எண்ணிக்கையில் உருவானவை கவிதைகளாகும், சிறுகதைகள், நாவல்கள் என்பன அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துக்கொள்கின்றன. அதனால் தானோ என்னவோ, புலம்பெயர் தமிழரின் இலக்கியப் படைப்புக்களை ஆய்வுசெய்யும் பலரும் கவிதைப் படைப்புக்களையே தமது ஆய்வுப்பொருளாகக் கொள்கிறார்கள்.

புலம்பெயர் கவிதை: உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை என்ற ஆய்வுநூல் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் அவர்களால் எழுதப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளரான நூலாசிரியரின் இவ்வாய்வு, புலம்பெயர்ந்தோரின் இலக்கியப் படைப்புகள் பற்றிப் பொதுவாகவும், கவிதைத்துறையின் போக்குகள் பற்றிக் குறிப்பாகவும் ஆராய்கின்றது. புலம்பெயர்ந்தோரின் இலக்கியப்படைப்புக்கள் தமிழிலக்கியப் பரப்பில் புதியதொரு போக்கை ஏற்படுத்தியுள்ளதை இவ்வாய்வு நன்கு சித்திரிக்கின்றது. இலங்கைத் தமிழர்களின் புலப்பெயர்ச்சி, அதன் பன்முகத் தன்மை, அதற்கான ஏதுநிலைகள், புலம்பெயர் கவிதைகளின் உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை ஆகியன குறித்து விரிவாக எடுத்துக்கூறப் பட்டுள்ளன.

ஈழத் தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும் என்ற நூலை தெ.வெற்றிச் செல்வன் தமிழகத்திலிருந்து எழுதியிருந்தார். புகலிடமும் தமிழ்க் கவிதையும் வளர்ச்சிப்போக்கும் பற்றிய அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூலில் வெற்றிச்செல்வன் புகலிடக் கவிதைகளின் உள்ளீட்டியல், வெளியீட்டியல், உளவியல், அழகியல், ஒப்பீட்டியல் ஆகியவற்றைப்பற்றித் தனித்தனி அத் தியாயங்களில் ஆய்வுசெய்திருக்கிறார். அத்துடன் புகலிடத் தமிழ்ப் புதினங் கள், புகலிடத் தமிழ்ச் சிறுகதைகள் பற்றியும் இவரது ஆய்வு இந்நூலில் நீண்டுள்ளது. புலம்பெயர்க்கப்பட்டு பன்னாடுகளிலும் அலைந்துலை வாழ்வு வாழும் ஈழத்தமிழர்களின் ஆக்கஇலக்கியப் படைப்புக்களை வாசித்து அவற்றின் சாரத்தை ஆழமாக, விரிவாக, அழகியலோடு இதர மொழிகளிலுள்ள போராட்ட இலக்கியங்களோடு ஒப்புநோக்கி இவ்வாய்வு ஒரு தமிழகத்தவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

பின்நவீனத்துவச் சூழலில் புலம்பெயர்ந்தோர் கவிதைகளும் பெண்ணியக் கவிதைகளும் என்ற நூலை எழுதியவரும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான திரு யாழினி முனுசாமி நவீன இலக்கியம் சார்ந்து இயங்குபவர். இவரது விமர்சனங்கள் சிறுபத்திரிகைச் சூழலில் பரவலான வரவேற்பைப் பெற்றவை.

புதிய பார்வை, புத்தகம் பேசுது, உங்கள் நூலகம், கல்வெட்டு பேசுகிறது, தாமரை முதலான பல இதழ்களில் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை நூல்கள், புலம்பெயர் படைப்புகள் குறித்த இவரது விமர்சனங்கள் என்பன வெளியாகியுள்ளன. அவ்விமர்சனங்களின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. ஆய்வரங்குகளில் சமர்ப்பித்த சில ஆய்வுகளும் இடம்பெற்றுள்ளன. புலம்பெயர்ந்தோர் கவிதைகளிலே பிரிவுத் துயரமும் மீளும் நம்பிக்கையும் இத்தொகுப்பில் காணப்படும் குறிப்பிடத்தக்கதொரு கட்டுரையாகும். ஈழத் தமிழ்ப்படைப்புகள் பற்றிய குறிப்புகள் இவரது கட்டுரைகளில் பரவலாகக் காணப்படுகின்றன.

இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம் என்ற தலைப்பில் சித்திரலேகா மௌனகுரு ஒரு சிறுநூலை எழுதியிருந்தார். வந்தாறுமூலை, செங்கல்லடியில் இயங்கும் கிழக்குப்பல்கலைக்கழக மொழியியல்துறைத் தலைவராகவுள்ள நூலாசிரியர், விபவி நிறுவனம் நடாத்திய சுதந்திர இலக்கிய விழா 92 இல் ஆற்றிய உரையின் திருத்திய பதிப்பு இதுவாகும். தமிழ்ப் புலம்பெயர் சமூகம் பற்றியும், அதன் கலாச்சாரச் செயற்பாடுகள் பற்றியும் இவர் மேற்கொள்ளும் ஆய்வின் ஆரம்பத்தின் ஒரு பகுதியாக இச்சிறு பிரசுரம் வெளிவந்திருந்தது. (இவ்வாய்வு நூலுருவில் பின்னர் வெளிவந்ததாகத் தகவல் இல்லை).

இனி, புகலிடத்தில் ஆங்காங்கே உருவான சில கவிதைத் தொகுதிகளைப் பற்றிய தகவல்களை பதிவுசெய்கின்றேன். இது எவ்வகையிலும் முழுமையான தொகுப்பாக அமைய முடியாது. புகலிடக் கவிதைகளின் விரிவான பதிவினை அறிய விரும்பும் ஆய்வாளர்கள் நூல்தேட்டம் தொகுதிகளில் தமிழ்க் கவிதைகள் என்ற பிரிவில் அவற்றைக் கண்டுகொள்ளலாம்.

புலம் பெயர்ந்தோர் கவிதைகள் என்ற தலைப்பில் தமிழகத்திலிருந்து ப.திருநாவுக்கரசு அவர்கள் தொகுத்த தேர்ந்த கவிதைத் தொகுப்பொன்றை இங்கு முதலாவது பதிவாக வழங்குவது பொருத்தமாகும். புகலிடமும் புதிய நூற்றாண்டும் (தி.உமாகாந்தன்), புகலிட இலக்கிய விமர்சனம் பற்றி (கலைச்செல்வன்), ஈழத்துத் தமிழ்க் கவிதையின் அடுத்தகட்ட வளர்ச்சி (சுரேஷ் கனகராஜா) ஆகிய அறிமுகக் கட்டுரைகளுடன் 58 புகலிடக் கவிஞர்களின் 89 கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இவை ஜேர்மன். கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, சுவிஸ், நோர்வே, டென்மார்க், அவுஸ்திரேலியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வெளியாகிய சிறு சஞ்சிகைகள், தொகுப்பாக்கங்கள் போன்றவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்

டுள்ளன. புலம்பெயர்ந்தோரின் கவி ஆளுமைபற்றிய ஒரு சோற்றுப்பதமாக இத்தொகுப்பு தமிழகத்தில் பரவலாக அறியப்பெற்றுள்ளது.

அலைந்துழல் வாழ்வு பற்றிப் பேசும் சில கவிதைகளின் மாதிரிகள் சில

டென்மார்க்கிலிருந்து வெளியிடப்படும் இணுவை இளந்தென்றல் பதிப்பகத்தின் முதலாவது வெளியீடாக இணுவை சக்திதாசனின், *ஒரு அகதியின் கைரேகை* என்ற கவிதைத் தொகுதி வெளிவந்திருந்தது. புலம்பெயர் வாழ்விலும் தமிழின் செவ்விய உயிரோட்டம் கொண்டு ஆற்றலுடன் கவிதை எழுதும் இளம் படைப்பாளிகளுள் சக்திதாசன் குறிப்பிடத்தக்கவர். இவரது கவிதைகள் புலம்பெயர்ந்த வாழ்வின் வேதனைகளை வெளிப்படுத்தும் அதே வீச்சில் அன்றாடம் இலங்கையில் நடக்கும் இன அழிப்பைக் கண்டு மனம் கொதிக்கிறார். உடல் புகலிடத்திலும், ஆன்மா புலத்திலுமாக அவலப் படும் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை அவரது கவிதைகளில் பிரதி பலிக்கின்றன. ஏற்கெனவே காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல் என்ற தலைப்பில் இவரது கவிதைநூல் வெளிவந்தது. பத்திரிகைகளிலும், புகலிட வானலையிலும் ஒலிபரப்பான கவிதைகளின் தொகுப்பாக காற்றைக் கான மாக்கும் புல்லாங்குழல் அமைந்திருந்தது. ஆச்சியின் வளவு முதற்கொண்டு, தாழ்வாரத்தில் குந்தியிருந்து இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்வு தொலைந்துபோய், தாழ்வார அளவேயான ஒரு வீட்டில் சிறைப்பட்டுப்போன இருப்புகளின் குரல்களாய் சக்திதாசனின் கவிதைகள் அமைகின்றன. இக்கவிதைச் சித்திரங்களின் மூலம் நாம் ஒரு ஸ்கன்டினேவிய நாட்டின் நிலப்பரப்பின் வரைபடங்களையும் தரிசிக்க முடிகின்றது. அவ்வரைபடங்களை அவர் உள்ளடக்க வழியாக மட்டுமன்றி, அவற்றை எடுத்துச் செல்லும் மொழி யில் அந்நிலப்பரப்பின் வாசனையும் கலந்து ஒன்றிப்போக வைக்கின்றார்.

துருவத் துளிகள் கவிதைத்தொகுதியின் ஆசிரியர் இ. தியாகலிங்கம். இவர் தற்போது புலம்பெயர்ந்து நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் வாழ்ந்து வருகிறார். 1994 இல் அழிவின் அழைப்பிதழ் என்ற நாவலினூடாக இலக்கிய உலகில் அறிமுகமான இவர், அழிவின் அழைப்பிதழ், நாளை, பரதேசி, வரம்ஆகிய வெற்றிகரமான நாவல்களை தொடர்ச்சியாக வெளியிட் டவர். புகலிட வாழ்வின் துயரங்களையும் புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழர் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளையும் பின்புலமாகக் கொண்டு இக்குறுங் கவிதைகள் இயற்றப்பட்டுள்ளன. மொத்தம் நாற்பது கவிதைகளை இச்சிறு நூல் உள்ளடக்கியுள்ளது.

நிர்மலா (தான்யா), பிரதீபா கனகா-தில்லைநாதன் ஆகிய இருவரும் *ஒலிக்காத இளவேனில்* என்ற தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ள கவிதைகளும் இங்கு குறிப்பிடப்படவேண்டியவை. ஈழத்தின் கவிதை வழியினைக் கடந்தும் தொடர்ந்தும் ஈழத்தோடு அவர்களுடைய பண்பாட்டையும் நினைவையும்- வெவ்வேறு விகிதங்களில் பகிர்கின்ற அல்லது பகிராத குறிப்பிட்ட சில பெண்களின் அனுபவங்களினூடாக, ஓர் அந்நியப்பட்ட சமகால வாழ்வினை இத்தொகுப்பு பதிய முனைகின்றது. இந்நூல் உருவாகிப் பதிப்பாக்கப்படும் 2003-2009 காலப்பகுதிகளில் இலங்கையில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வுகள், யுத்த நிலத்துக்கு வெளியில் வாழும் இப்பெண்களது எழுத்திலும் பதிவாகியுள்ளன. தமது நிலத்தினதும், அந்நிலத்திலிருந்து பெயர்ந்து திரியும் தேசங்களினதும் நிகழ்காலத்தை, தமதான எல்லைகளுடன் இந்தக் கவிதைகள் பதிவுசெய்கின்றன.

நாடற்றவனின் குறிப்புகள் என்ற கவிதை நூலின் ஆசிரியரான புகலிடத்து இளம் படைப்பாளி இளங்கோ, யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். போர் மூர்க்கமாய் எற்றித்தள்ள உள்நாட்டிலேயே அகதியாக அலைந்து தன் பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். போர்க்கால அவலங்களினதும், புலம்பெயர் வாழ்வின் அலைக்கழிதல்களினதும் மௌன சாட்சியமாக விளங்குவன இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள இவருடைய அனுபவ பூர்வமான 53 கவிதைகள். இளங்கோ டிசே தமிழன் என்ற புனைபெயருடன் பல இதழ்களிலும், இணையத் தளங்களிலும் கவிதைகள், கட்டுரைகள் மற்றும் விமர்சனங்கள் எழுதியுள்ளார்.

தலைப்பு இழந்தவை என்ற தலைப்பில் வெளிவந்த ஈழவாணியின் கவிதைத் தொகுதியும் இங்கு பதிவுக்காகக் குறிப்பிடத்தக்கது. வாணி ஜெயாதீபன் என்ற இயற்பெயர் கொண்ட ஈழவாணி இலங்கையில் வவுனியாவில் பிறந்தவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். தேடல், செந்தணல் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். தற்பொழுது புலம்பெயர்ந்து மலேசியாவிலும், இந்தியாவிலுமாக வசித்து வருபவர். ''கடந்துபோன பொழுதுகளில் லயித்தும், வெறுத்தும் எழுதிப்போட்ட மன ஓலங்கள் தொகுப்பாய் நூலாகின்றபோது பழைய நினைவுகளும் வாழ்வதாய் தோன்றுகின்றது. சில கவிதைகளோடு சில நிமிடங்களில் பேசலாம். சில கவிதைகளோடு கண்ணீர்த்துளிகள் வீழலாம். எல்லா மீட்டல்களுமே பயண இறுதியில் மிஞ்சும் பயணச் சீட்டுகள் தான். கண்களில் தடுக்கும் பொழுதுகளில் எழும் பயண நினைவுகளாய் இவையும் நீண்டு வீழ்ந்து கிடக்கும் இறந்துபோன நாட்களாயும் தொலைந்துபோன

சந்தோஷங்களாயும் மீதம் தலைப்புகள் இடும் முன்னமே எதிர்பாராமல் நிகழ்ந்து முடிந்துவிடும் திடீர் நிகழ்வுகளாயும் தங்கிவிட்டன. இவை தலைப்புகள் இல்லாமலே வாழ்வில் நிகழ்ந்து மறையும். ஒரே தலைப்பில் நிகழ்ந்து போகும். இவற்றிற்கெல்லாம் எப்படி வெவ்வேறு தலைப்புகளிடுவது? இதனாலேயே தலைப்பு இழந்தவையாகப் பிறந்து விட்டது இக்கவிதை நூல்'' எனத் தனது முகவுரையில்ஆசிரியர் குறிப்பிடும் வரிகளே இந்நூல் பற்றிய அறிமுகத்துக்குப் போதுமானவை.

குருதி வரையும் தேசம் என்ற நூலின் படைப்பாளி நோர்வேயில் புலம் பெயர்ந்து வாழும் பா.உதயகுமார். தாயகத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சரவணையில் பிறந்து வளர்ந்து வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற உதயகுமார் 1988ம் ஆண்டு முதல் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் வாழ்ந்து வருகின்றார். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் உயர்கல்வி முடித்து, நோர்வேயின் தொழில்வாய்ப்புத் திணைக்களத் தில் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். இக்கவிதைத் தொகுதியில் உள்ள உதயகுமாரின் கவிதைகள் நான்கு வகைகளுக்குள் அடங்குகின்றன. கொட்டிய குருதியால் கட்டப்படும் தேசமென ஈழத்துக் கவிஞன் பாடிய தேசத்தின் துயர் உணராத உலகமென்ன உலகம் என்று சர்வதேசத்தின் இரண்டகத்தினை விழிப்பது ஒரு வகை. விடுதலைக்காக வித்தான வீரர்கள் பற்றிய நலம் பாராட்டல் இரண்டாம் வகை. மாறும் இந்த உலகில் மாறாமல் பழமைப்பிடிப் போடு வாழும் எமது புலம்பெயர் தமிழ்ச் சமூகம் பற்றிய மடமை விளம்பல் ஒரு வகை, அலைந்துலை வாழ்வின் பிரிவுத் துயரைப் பாடும் கவிதைகள் நான்காம் வகை. இந்நால்வகைக் கவிதைகளின் சங்கமமாகவே இத்தொகுப்பு அமைந்துள்ளது.

புலம்பெயர்ந்தோரின் புலம்பெயரா நெஞ்சங்கள் என்ற கவிதைத் தொகுப்பு, அவுஸ்திரேலியாவிலிருந்து எஸ்.எம்.சேமகரன் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் சிட்னி மாநகரில் ஹோம்புஷ் ஆண்கள் உயர்தரக் கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்பட்ட இக்கவிதைத் தொகுப்பில், அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் கல்லோடை கரன் என்ற புனைபெயர்கொண்ட சேமகரனின் புகலிடக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. புலம்பெயர்வாழ்வின் அவலங்களை வேதனையுடன் எடுத்தியம்பும் இக் கவிதைகள், தாயகத்தைப் பிரிந்து வாழும் சோகத்தையும் சேர்த்தே எடுத்தியம்பு கின்றன. மெல்லத் தமிழ் இனி வாழும் என்ற இவரது முதலாவது கவிதைத் தொகுதியை அடுத்து இது இரண்டாவதாக வெளிவந்துள்ளது.

புலம்பெயர் சூழலில் நோர்வேயில் உருவாகிய ஒரு ஈழத்து இளம் கவிஞராகக் கவிதா அறிமுகமாகியுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்தின் குரும்பசிட்டியில் பிறந்து நோர்வேயில் வளர்ந்த இவ்விளம் பெண் கவிஞரின் *தொட்டிப் பூ, என் ஏதேன் தோட்டம்* ஆகிய இரு நூல்களும் இங்கு குறிப்பிடத்தக்கவை. தாய்நிலத்து சோகங்களும் அந்த சோகத்தின் ஊடாக வெளிப்படும் குமுறல்களும் ஆத்திரமும் கவிதாவின் கவிதை மொழியாக அறியலாம். நடன ஆசிரியையாகவும் ஓவியராகவும் வளர்ந்துள்ள கவிதாவின் மொழி ஆளுமை, சிந்தனைச் செழுமை, தாய்மண் பற்றின் வலி, வாழ்விட உள்வாங்கல், உலக அரசியல், அனைத்தும் கலந்த கலவையாக இக்கவிதைகள் அமைகின்றன. தன் கவிதைகளுக்கான ஓவியங்களை இவரே வரைந்து தன்னை தரமான ஓவியராகவும் நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

நாம் பேசிக்கொண்டிருந்த போது பெய்திராத மழை என்ற கவிதைத் தொகுதி, மயூ மனோவின் புகலிடக் கவிதைகளைக் கொண்டுள்ளது. காதலும் அதன் பின்னரான தனிமையும் நிலம் விட்டேகிய ஆற்றாமையின் இருள்வெளியும் விரவிக் கிடக்கும் மயூ மனோவின் சொற்கள் புலம்பெயர்ந்து வாழும் அவருடைய தலைமுறையின் சாட்சியம். வீட்டின் கதவுகளுக்கு உள்ளே பிறந்த நிலத்தின் கலாச்சாரத்தையும் கதவுகளைத் தாண்டி தாம் வாழும் நிலத்தின் கலாச்சாரத்தையும் சமன்செய்யமுடியாமல் இரண்டுக்கும் நடுவில் நசுங்கியபடி இருக்கிறது புலம்பெயர் தமிழர்களின் அடுத்த தலைமுறை. அவ்வகையான தன் நிகழ்காலத்தை சொற்கள் கொண்டு கடக்கமுனையும் அக்காலத்தின்மீது கேள்வியெழுப்பும் பெண் மனத்தின் அகப்பாடல்களே இங்கு கவிதைகளாக விரிகின்றன. இணையத் தளங்களிலும், பத்திரிகைகளிலும் வெளியாகி கவனஈர்ப்பைப் பெற்ற மயூ மனோவின் கவிதைகளின் தொகுப்பு இது.

புவியியல் ரீதியாகக் கடல்தாண்டிப் புலம்பெயராத போதிலும், உள்ளகப் புலப்பெயர்வால் பாதிக்கப்பட்ட கவிஞனின் கவிதைகளிலும் புலப்பெயர்வு பற்றிய காட்சிப்படிமங்களை ஆங்காங்கே காணமுடிகின்றது. அவ்வகைக்கொரு உதாரணமாக அமைவது *நிலம் பிரிந்தவனின் கவிதை* என்ற தலைப்பில் சுஜந்தன் எழுதிய கவிதைகளின் தேர்ந்த தொகுப்பு. பத்தினியன் சுஜந்தன் திருக்கோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சம்பூர் பிரதேசத்தில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை சம்பூர் மகாவித்தியாலயத்தில் பயின்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புத் துறையில் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர். மறுக்கப்பட்ட நியாயங்கள் (2006) இவரது முதலாவது கவிதைத் தொகுதி. பத்திரிகைகள், சஞ்சிகைகள், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றில்

தொடர்ந்து எழுதிவரும் இவர் 2006 ஏப்ரலில் ஏற்பட்ட யுத்தத்தின்போது தனது ஊரிலிருந்து இடம்பெயர்ந்து இன்றுவரை அகதிமுகாமில் தனது பெற்றோருடன் வசித்து வருகின்றார். இழப்பிலிருந்து எழும் கவிதை நமக்குள் எழுப்புகின்ற வலி நமக்குப் பழகிப்போனதாக இருந்தாலும் சுஜந்தன் கவிதைகள் ஏற்படுத்துகின்ற காயங்கள் ஆறாதவையாக இருக்கின்றன.

இரண்டாம், மூன்றாம் தலைமுறைப் படைப்புகள்

புலம்பெயர்வாழ்வின் சூழலில் படைக்கப்பெறும் படைப்பாக்கங்களில் தனித்துவமாகப் பார்க்கப்படவேண்டியதொரு நீட்சியாக புலம்பெயர்ந்த தேசங்களில் அத்தேசத்து தேசிய மொழிகளில் கல்விபயின்று தமிழை இரண்டாம், மூன்றாம் மொழியாகப் பயில நிர்ப்பந்திக்கப்பெற்ற இரண்டாம் தலைமுறையினரின் இலக்கியப்படைப்புகள் அமைந்துள்ளன.

மெல்லத் தமிழ் இனித் துளிர்க்கும் என்ற கவிதைத் தொகுப்பை இதற்கு ஒரு உதாரணமாக்கலாம். வி.ஜீவகுமாரன் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு டென்மார்க்கில் வெளியிடப்பெற்ற நூல் இது. டென்மார்க்கில் இயங்கும் vaanam.dk என்ற இணையத்தளத்தில் இலக்கியப் பக்கத்தில் வெளியான புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் முதலாம் இரண்டாம் தலைமுறையினரின் கவிதைகள் எண்ணச் சிதறல்களாக இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. கணனி வடிவமைப்பில் பக்கம்தோறும் வண்ணக் கலவை கொண்டு உருவாக்கப்பட்ட கையடக்க நூல் இது. பாசம், நட்பு, காதல் போன்ற உறவுகள் சம்பந்தப்பட்ட கவிதைகளாகவும், சமுதாயச் சிந்தனைகளைத் தத்தமது மனவளர்ச்சிக்கேற்ப வெளிப்படுத்துவதாகவும், இயற்கை, கடவுள் பற்றிய தத்தமது பார்வைக் கோணங்களைப் பிரகடனப்படுத்துவதாகவும், புலம்பெயர் வாழ்வில் ஏற்படும் மன உளைச்சல்கள், தனிமை, முதுமை போன்ற வாழ்நிலைகளைப் புலப்படுத்துவதாகவும் கவிதைகள் இடம் பெறுகின்றன.

இலட்சியப் பாதையில் என்ற கவிதைத் தொகுதி ஜேர்மனியிலிருந்து ஷறீகா சிவநாதன் அவர்களால் வெளியிடப்பட்டது. ஜேர்மனியில் பிறந்து வளர்ந்த இளம் படைப்பாளி ஷறீகா புகலிட எழுத்தாளர் திருமதி நகுலா சிவநாதனின் மகள். ஆண்டு 12 இல் பயிலும் இவர் ஜேர்மன் மொழியை பயில்மொழியாகக் கொண்டிருந்தபோதும், தமிழ்மொழியில் ஆளுமைமிக்கவர். இந்நூலில் இவர் தமிழ் மொழியில் எழுதிய பாடல்களும் டொச் மொழியில் எழுதிய கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

நாங்கள்: தமிழ் இளையோர் கவிதைகள் என்ற நூல் வ.சிவராஜா, க. அருந்தவராஜா, பொ.சிறிஜீவகன், அ.புவனேந்திரன் ஆகியோரைப் பதிப் பாசிரியர்களாகக் கொண்ட போதிலும், ஜேர்மனியில் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே உருவாகிய இரண்டாவது தலைமுறையினரின் கவிதைத் தொகுப்பாக இந்நூல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிறமொழிகளைக் கற்று அந்த மொழிகளுக்கூடாகச் சிந்தித்து எழுதிய தமிழ் இளம் சந்ததியினரில் ஒரு சிறு பிரிவினர் தாம் டொச் மொழியில் எழுதிய 25 கவிதைகளையும் அதன் தமிழாக்கங்களையும் இந்நூலில் பதிவுசெய்துள்ளனர். கவிதைகளை யாத்தவர்களின் புகைப்படங்களும் அவர்கள் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் காணப்படுகின்றன.

எம்மவர்களின் புகலிடமொழிப் படைப்புகள்

புலம்பெயர் இலக்கியத்தின் மற்றொரு தடப்பதிவாக அமைந்துள்ளது, ஈழத்தமிழர்களின் அந்நியமொழிப் படைப்புகளாகும். ஈழத்தமிழர்களின் வாழ்வியலை தமிழர் அல்லாதவர்களிடம் கொண்டுசேர்க்கும் இப்பணியின் ஒரு தடப்பதிவாக *இப்படிக்கு அன்புள்ள அம்மா* என்ற நூல் அமைந்துள்ளது. டேனிஷ் மொழியில் திருமதி கலாநிதி ஜீவகுமாரன் அவர்கள் டென்மார்க்கில் இருந்து எழுதிய கவிதை நடையில் அமைந்ததொரு காவியமாக இந்நூல் அமைகின்றது. இதனைத் தமிழாக்கம் செய்திருப்பவர் அவரது துணைவர் வி. ஜீவகுமாரன் அவர்கள். கண்களில் நீரை வரவழைக்கும் வலிமிகுந்த காவியப் கவிதைப் படைப்பு. ஈழத்திலிருந்து டென்மார்க்கிற்கு புலம்பெயர்ந்த ஒரு 90 வயது மூதாட்டி யசோ அம்மாவின் பார்வையில், நிகழ்காலத்திற்கும் இறந்தகாலத்திற்குமிடையே நடக்கும் ஒரு போராட்டமே கதை. ஈழத்தில் இன விடுதலைப்போரில் இறந்த தனது மகன் ஹரியின் மறைவை ஏற்றுக் கொள்ளாத இந்தத் தாய், தனது இறுதிக்காலத்தில் மகன் உயிருடன் இருப்பதாக நினைத்து எழுதும் பத்துக் கடிதங்களின் உணர்ச்சித் தொகுப்பே இக்காவிய மாகும். அழகு தமிழில் ஆங்காங்கே ஈழத் தமிழழகு இழையோட தாயின் வலியோடு, இலங்கையின் தமிழினம் மீதான தாக்குதலில் உண்டான வலியை யும் புலம்பெயர்ந்தபின் தாய்மண்ணின் நினைவுதரும் வலியையும் சேர்த்துக் குழைத்து நமது உயிருக்குள் வலியை ஏற்படுத்தும் உன்னத காவியம் இது. ஒரு அன்னையர் தினத்தில் தொடங்கிய இக்கதை அடுத்த ஆண்டின் அன்னையர் தினத்தில் முடிவதாய் உள்ளது. கதையா, கவிதையா, காவியமா என்று வரையறைக்குட்படுத்தமுடியாத குழப்பகரமான நிலைக்கு எம்மைத் தள்ளும் புதியதொரு இலக்கிய முயற்சி இதுவெனவும் கூறலாம்.

வட இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி கலாமோகன் இலங்கையில் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர். 1983 இன் இனப்படு கொலையிலிருந்து தப்பி பிரான்சில் அரசியல் தஞ்சம் கோரியவர். சிறந்த இலக்கிய விமர்சகரான இவர் பிரெஞ்சு மொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர். நாளையும் என்ற தலைப்பிலான இவரது கவிதைத் தொகுப்பு நூலொன்று (Et Demain) பிரெஞ்ச் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அலைந்துழல் வாழ்வு பற்றிப் பேசும் சிறுகதைகள் சில.

புலம்பெயர் படைப்பாளிகளிடையே கவிதைத்துறை வளர்ச்சிகண்டுள்ள வேகத்தில் சிறுகதைத் தொகுதிகள் வளர்ச்சிகாணவில்லை என்பது பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புகலிட ஊடகங்களில் பல கதைகள் இடம் பெற்றிருப்பினும், அவை நூலுருவில் தொகுக்கப்பெற்று வெளியிடப்படும் சூழல் மந்தகதியிலேயே நடைபெற்றுவந்துள்ளது. தமிழகம் மற்றும் தமிழ் நாடுவரை புகலிடச் சிற்றிதழ்கள் சென்றடைவதில்லை. அதனால் அவற்றில் எழுதப்படும் கதைகளும்கூட அற்ப ஆயுள்கொண்டவையாகவே மறைந்து விடுகின்றன. 1994ம் ஆண்டு, பாரிஸ் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் இணைந்து *புலம் பெயர்ந்தோர் கதைகள்* என்ற தொகுப்பை வெளியிட்டிருந்தார்கள். 1994ம் ஆண்டு தெல்லிப்பளை மஹாஜன கல்லூரியின் தாபகர் பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை நினைவாக நடத்திய சிறுகதைப்போட்டிக்கு வந்த ஆக்கங்களில் தேர்ந்த 10 சிறுகதைகள் இத் தொகுதியில் இடம்பெற்றிருந்தன. அனலையூர் அன்ரன் (பாரிஸ்), பசுபதி (ஜேர்மனி), மாவை. நித்தியானந்தன் (அவுஸ்திரேலியா), புவனன் (பாரிஸ்), தமயந்தி (நோர்வே), வி.த. மயில்மேலழகன் (பாரிஸ்), ஏ.ஜே. ஞானேந்திரன் (சுவிஸ்), சக்திப்புயல் (பாரிஸ்), ஜயசுதன் (கனடா), க. ஆதவன் (டென்மார்க்) ஆகியோரது புகலிடக் கதைகள் இதில் இடம்பெற்றன.

1996இல் *புலம் பெயர்ந்த பூக்கள்* என்ற சிறுகதைத் தொகுதி அவுஸ்திரேலி யாவிலிருந்து க.ஸ்ரீகந்தராஜா அவர்களால் தொகுக்கப்பட்டு விக்ரோரிய இலங்கைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளியிடப்பட்டிருந்தது. அளவெட்டி ஸ்ரீஸ்கந்தராசா, புவனா இராஜரட்ணம், ஸ்ரீசிவகௌரி, துரைசாமி சுப்பிரமணியம், பரமேஸ்வரி பாலசிங்கம், எஸ்.ராமேஸ்வரன், கலாவதி விக்னேஸ்வரன், கிரிஸ்டியன் கிரகரி, இளைய அப்துல்லாஹ், சீ.துரைசிங்கம், எஸ்.சக்தி, ஆர்.தியாகலிங்கம், அனுராதா பாக்கியராஜா, கே.கோபாலபிள்ளை, செ.குணரத்தினம், தமிழினி, ஆரையம்பதி யோகேந்திரன், மகாத்மசீலன்

ஆகிய எழுத்தாளர்களின் 20 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. முன்னைய நான்கு வருடங்களாக நடைபெற்ற சிறுகதைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் கதைகளாக இவை அமைந்திருந்தன.

1999இல் *நிஷ்டை* என்ற தலைப்பில் புகலிடச் சிறுகதைகளின் தொகுப்பொன்றினை க.கலாமோகன் பிரான்ஸிலிருந்து எக்சில் வெளியீடாக வெளியிட்டிருந்தார். மழை, நிழல், மூன்று நகரங்களின் கதை, உருக்கம், இரா, இழப்பு, எனது தேசம், கோடை, நிஷ்டை, ஈரம், தெரு, கனி ஆகிய தலைப்புகளிலான கலாமோகனின் 12 புகலிடச் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றன.

பாரிஸ் கதைகள் என்ற நூல் கி.பி.அரவிந்தனால் தொகுக்கப்பெற்று பாரிஸ்,அப்பால் தமிழ் இணைய வெளியீடாக 2004இல் வெளிவந்திருந்தது. பிரான்சின் புலம்பெயர் வாழ்வியலை பொதுவாக 1985இலிருந்து பிரதி பலிப்பதாக அமைந்ததாகவும், குறிப்பாக பாரிஸ் வாழ் ஈழத்தமிழர்களின் அகதி முகத்தை அறியத்தரும் ஒரு சமூக வரலாற்றுப் பதிவாக அமைந்ததாகவும் இத்தொகுப்பு பெரிதும் பேசப்பெற்றது. பதினைந்து படைப்பாளிகளின் கதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. பிரான்ஸ் மண்ணையும், அம்மண்ணில் நம்மவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு அமைந்த கதைகள் இவை.

சர்வதேச தமிழ் எழுத்தாளர்களின் புலம்பெயர் வாழ்வு பற்றி 2011 இல் உருவான சிறுகதைத் தொகுதியாக *முகங்கள்* என்ற நூல் டென்மார்க்கிலிருந்து வி. ஜீவகுமாரன் அவர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. மனித உணர்ச்சிகளின் விம்பங்களைக் காட்டும் கண்ணாடியாக இக்கதைகள் அமைகின்றன. சொந்த தேசத்தின் எல்லைகளைத் தாண்டும்போது இதே முகங்கள் தம் முகத்தை இழக்கின்றன. அல்லது முகமூடி போட்டுக் கொள்கின்றன. புலம்பெயர் வாழ்வில் சந்தித்த வேதனைகளும் சாதனை களும்தான் இந்தத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள். ஐம்பது கதாசிரியர்களின் வாழ்வியல் அனுபவங்கள் சிறுகதைகளாக இங்கே இறக்கிவைக்கப்படுகின்றன.

அலைந்துழல் வாழ்வு பற்றிப் பேசும் நாவல்கள் சில

இலங்கையில் நாடற்றவர்களாக மலையகத்தில் வாழ்ந்துவந்த 975000 இந்திய வம்சாவளித் தமிழர்களின் எதிர்காலம் தொடர்பாக இலங்கைப் பிரதமராகவிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இந்தியப் பிரதமராகவிருந்த லால்பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் 1964இல் ஒக்டோபர் மாதம் 30ம் திகதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இதனை சிறிமா-

சாஸ்திரி ஒப்பந்தம் என்பர். இவ்வொப்பந்தத்தின்படி 525000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதெனவும், 300000 பேருக்கு இலங்கையில் குடியுரிமை வழங்குவதெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வொப்பந்தத்துக்கமைய இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தோரில் சிலர் மலையகத்தில் அனுபவமுள்ள இலக்கியவாதிகளாகவும் அறியப் பெற்றிருந்தனர். இவர்களது தாயகம் நோக்கிய மீள்பெயர்வும் நல்ல சில இலக்கியங்களை தமிழ்ப்படைப்புலகிற்கு வழங்கியிருந்தது. சிக்கன்ன ராஜுவின் *வேரறுந்த மரங்கள்* என்ற நாவல் இதற்கு ஒரு உதாரணம். இலங்கையில் 1960-70களில் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டிருந்தவர் சிக்கன்ன ராஜு. முன்னர் மலையக மக்கள் மறுவாழ்வு என்ற சஞ்சிகையை சில ஆண்டுகள் நடத்தியவர். இவர் பின்னாளில் சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத் தின் காரணமாக புலம்பெயர்ந்து தமிழகத்தில் வாழ்ந்தபோது பிரசுரமான இவரது குறுநாவலே வேரறுந்த மரங்களாகும். தன் கதையில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் நெஞ்சில் கனவுகளை வளர்த்துக்கொண்டு தாயகம் திரும்பிய வர்கள், கல்வி வசதி, வீட்டுக்கடன், தொழில்வாய்ப்பு என்று நம்பிப்போனவர்கள் படுகின்ற அவதிகளை தானே அனுபவித்து இந்நாவலை எழுதியிருக்கிறார்.

சுருதி பேதமடைகிறது என்ற நாவலை எழுதியவர் லண்டனில் புலம் பெயர்ந்து வாழும் வவுனியூர் இரா.உதயணன் (உதயணன் ஸ்ரீ இராமகிருஷ்ணா). இலங்கையின் வவுனியாவில் குடியிருப்பு கிராமத்தில் 1960ம் ஆண்டு பிறந்த இவர் 20 ஆவது வயதில் படைப்பிலக்கியத் துறையில் கால்பதித்தவர். கணக்கியல், நிர்வாக முகாமைத்துவத் துறைகளில் உயர்கல்வி பெற்றவர். 25 வருடங்களாகத் தொடர்ந்து வவுனியூர் இரா உதயணன் என்ற பெயரில் எழுதிவரும் இவரது கதைகள் பல இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வெளிவந்துள்ளன. பிரித்தானியாவின் ஸ்கொட்லண்ட் பின்னணியில் சுருதி பேதமடைகின்றது என்ற நாவல் ஒரு காதல் கதையாக ஆரதி, பிரசன்னா, பைரவி, அகல்யா ஆகிய பிரதான பாத்திரங்களினூடாக நகர்த்தப்படுகின்றது. பட்டப்படிப்பு, வெளிநாடு என்று பல்வேறு சூழல்களிலும் சிரமப்படும் ஒரு சிலரின் மனோநிலையை இந்நாவல் அழகாக எடுத்துச்சொல்ல முனைகின்றது.

மக்கள்... மக்களால் மக்களுக்காக என்ற நாவல் வி. ஜீவகுமாரன் அவர்களால் டென்மார்க்கிலிருந்து எழுதப்பட்டது. ஈழத்தில் தமிழினத்தை அடிமைகளாக்க நடைபெறும் வலோற்காரம் எவ்வாறு தமிழ் மக்களுடைய வாழ்க்கைப் போக்குகளைப் பாதிக்கின்றது என்பதை நேர்மையாகவும் நேர்த்தியாகவும் இந்நாவலில் சித்திரித்துள்ளார். அத்துடன் அந்த அரசியலின் நீட்சியாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் உருவாகிக்கொண்டிருக்கும் அவலச்

சூழலையும் ஜீவகுமாரன் தமது நாவலுக்கான பேசுபொருளாக்கியுள்ளார். சகோதரச்சண்டை புலம்பெயர்ந்த நாடுகளுக்குக் கடத்தப்பட்டுள்ளது என்பது போன்ற ஒரு கோலம் காட்டினாலும் இறுதியில், அனைத்துக் குளறுபடிகளையும் உற்பவித்து, பிரசவித்து, ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளதில் கண்ணுக்குச் சடுதியாகப் புலனாகாத ஓர் அமைப்புக்குப் பங்குண்டு என்பது சுட்டிக்காட்டப் படுகின்றது. ஆழமாகச் சமுத்திரத்திலே அமிழ்ந்துள்ள பனிக்கட்டிப்பாறையின் சிறிய முகடு மேலே தெரிவதுபோல அந்த அமைப்பினைச் சார்ந்தவர்களை ஜீவகுமாரன் அடையாளம் காட்டியுள்ளார்.

விஜயநாதன் இயுஜின் மசனெட் என்ற ''மெலிஞ்சிமுத்தன்'' எழுதிய நாவலே வேருலகு. யாழ்ப்பாண மாவட்டம் மெலிஞ்சிமுனையில் 20.10.1975 இல் பிறந்தவர் மெலிஞ்சிமுத்தன். கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் அவரது நான்காவது நூலாக இக்குறுநாவல் வெளியிடப்பட்டுள்ளது. மெலிஞ்சி முத்தனின் கனவுகள் வாழ்வாதாரங்களைப் பறிகொடுத்த வலியிலிருந்து உருவான புகலிடக் கலைஞனின் குரல். அவன் அலைக்கழிந்து திரிந்த வாழ்க்கையை, அதன் ரணங்களை, தன்னிடமிருந்து பறிபோன அடையாளத்தை அவர் கனவுகளின் வழியே எதிர்கொள்கின்றார். கவிதையைப்போன்ற படிமங்களும் உருவகங்களும் நிரம்பிய அற்புதமான உரைநடை அவருடையது. கனவுகளின் வழியே அவர் சொல்லும் கதை, யுத்தம் உருவாக்கிய மனிதனைப் பற்றிய உண்மையான வெளிப்பாடாகப் பதிவுசெய்யப்படுகின்றது.

இ. தியாகலிங்கம் எழுதிய *திரிபு* என்ற நாவல் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். நூலாசிரியர் தற்போது புலம்பெயர்ந்து நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் வாழ்ந்துவருகிறார். 1994 இல் அழிவின் அழைப்பிதழ் என்ற நாவலினூடாக இலக்கிய உலகில் அறிமுகமான இவர், விறுவிறுப்பான கதைசொல்லியாக இயங்கி, புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க் குடும்பமொன்றைத் தாக்கும் புதிய நெருக்கடியை ஒரு துப்பறியும் நாவல் போன்ற உணர்வினை வாசகர்களிடம் ஏற்படுத்துவதில் தியாகலிங்கம் வெற்றிகண்டுள்ளார். தமிழர்களின் பாரம்பரியமாக வந்த மரபுசார் விழுமியங்கள் புகலிட வாழ்வின் சிக்கல்களுக்குள்ளாவது இக்கதையில் அறிவுபூர்வமாகச் சொல்லப்படுகின்றது.

இவர் எழுதிய *பரதேசி* என்ற மற்றொரு நாவலும் இங்கு குறிப்பிடப் படவேண்டும். பாரதியார் கனவுகண்ட புதுமைப்பெண் ஈழத்தமிழர்களிடையே தோன்றுதல் அவசியம் என்று இந்நாவல் வலியுறுத்துகின்றது. பெண்ணியம் ஒரு மலிவான கோஷமல்ல. அது நமது வாழ்வியலைச் செப்பமிடுவதற்கு அவசியமான தர்மம் என்பதை அழுத்தமாகப் பதியம் வைக்கும் இந்நாவல், எம்மிடையே குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பியத் தமிழரிடையே

சீதனக் கொடுமைகளும் சாதிய மேட்டிமைகளும் இல்லாதொழிக்கப்பட்டு ஆரோக்கியமானதொரு வாழ்வை இளையதலைமுறையினரின் தேர்வுக்கு விடவேண்டும் என்று உரத்துச் சொல்கின்றமையால் இக்கட்டுரைக்குப் பொருத்தமானதாகக்கருதிக் குறிப்பிடப்படுகின்றது.

வரம் என்ற நாவலும் இ.தியாகலிங்கம் எழுதியதே. இந்நூலில் வரம், விளையாட்டு, மாசு, முடங்கள் ஆகிய நான்கு குறுநாவல்கள் இடம்பெற்றுள்ளன. வரம் என்ற தலைப்புக் கதை கருணைக்கொலை பற்றிய கருத்துக்களை யதார்த்தச் சூழலில் முன்வைக்கின்றது. நோர்வே மருத்துவ விடுதியொன்றில் தாதியாகக் கடமையாற்றும் வேணியின் பணிகளினூடாகக் கதை நகர்த்தப் படுகின்றது. மற்றைய மூன்று கதைகளிலும் ஊடுபாவாக ஓடும் கருத்துக்களும் மேற்குலகின் சமூக அக்கறையாளர் சிரத்தைகொள்ளும் விடயங்களே.

புலம்பெயர் வாழ்வின் வலிகளுக்குள், தம் வாழ்வுபற்றிய அவதூறுகள் பொறுப்பற்ற முறையில் தாயகத்தில் சுவாரஸ்யமாகப் பரப்பப்படும்போது ஏற்படும் எரிச்சலும் சிலசமயங்களில் உள்ளடங்கிவிடுவதுமுண்டு. புலம் பெயர்ந்த தமிழர்களைப் பற்றிய தனது உணர்வினை *மேலைக் கடலில் ஈழக் காற்று* என்ற நூலில், தமிழகத்தின் த.கவியரசு அவர்கள் குறிப்பிடும் பதிவு இங்கு பொருத்தமானது. கவியரசு தமிழகத்தின் நாமக்கல் அருகே பாண்ட மங்கலத்தைச் சேர்ந்தவர். சென்னை திரைப்படக் கல்லூரியின் ஒளிப்பதிவுத்து றையில் கற்றவர். ஈழத்தமிழ் ஆர்வலர்களால் லண்டனில் எடுக்கப்பட்ட தூண்டில் என்ற படத்தின் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றி இரு மாதங்கள் வரையில் லண்டனில் தங்கியிருந்து ஈழத்தமிழர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய தவறான அபிப்பிராயத்தை நீக்கும் வகையில், ''உறவுகளை விட்டுச் சுயநலத்துடன் போருக்குத் தப்பியோடி சுகவாழ்க்கை வாழ்பவர்கள்'' என்ற பிழையான எண்ணத்தைப் போக்கத் தனக்கு இந்த இருமாத லண்டன் வாழ்க்கை உதவியதாகக் குறிப்பிடுகின்றார். இந்த மனநிலையை தமிழகத்தினர் மாத்திரம்தான் கொண்டிருந்தார்கள் என்பது தவறாகும். ஈழத்திலேயே ஒரு காலகட்டத்தில் வெளிவந்த பல கவிதைகள் புலம்பெயர்ந்தோரை ஏளன வார்த்தைகளால் கொட்டித்தீர்த் திருந்தன என்பதும் இங்கு வருத்தத்துடன் பதிவுசெய்யவேண்டிய ஒன்றாகும்.

என் மகளினும் மேலானவள் என்ற நாவல் மாலதி பாலேந்திரன் அவர் களால் எழுதப்பட்டது. இலங்கையிலிருந்து தத்தெடுக்கப்பட்ட ஒருகுழந்தை சுவீடனில் மேலைத்தேய கலாச்சாரத்தில் வளர்க்கப்படும் பின்னணியில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சுவீகாரம்பெற்று எடுத்துச் செல்லப்படும் குழந்தைகள் அங்கு செல்லப்

பிராணிகளாக வளர்க்கப்படுவதாக இலங்கை ஊடகங்களில் வந்த தவறான ஒரு செய்தியின் பாதிப்பு ஆசிரியரை இந்நாவலை எழுதத் தூண்டியுள்ளது. தனது மகன் அனுதரன் மற்றும் சுவீடிஷ் மருமகள் கிளேயா ஹால் ஜக்சன் ஆகியோரின் ஆதரவுடன், இயற்கையை நேசிக்கும் சுவீடன் நாட்டு கலாச்சாரம் பற்றிய ஆழமான அவதானிப்புகளை இந்நாவலில் ஆசிரியரால் பதிவுசெய்ய முடிந்துள்ளது.

நிலா என்ற புனைபெயர்கொண்ட உதயகுமாரி பரமலிங்கம், லண்டனில் வாழ்ந்து வருகின்றார். *உறைக்கும் உண்மைகள்* என்ற இவரது நாவல் லண்டன் வாழ்வைச் சித்திரிக்கின்றது. வித்தியா என்ற இளம்பெண்ணின் வாழ்வின் ஒரு சிறு அத்தியாயமாக இந்நாவல் அமைகின்றது. போர்ச்சூழலால் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து மாணவியாக லண்டன் வரும் வித்தியா வின் அந்நியதேச வாழ்வியல் சூழலில் நிகழும் பல நிகழ்வுகள் இங்கு கதையை வளர்த்துச் செல்கின்றன.

சக்கரவர்த்தி இராசலிங்கம் எழுதிய *தொலைதூரக் கனவுகள்* என்ற நாவலும் ஐரோப்பிய வாழ்வின் புலம்பெயர் இலக்கியப் பதிவுகளாக சித்திரிக்கப்படுகின்றது. லண்டனிலும் பின்னாளில் பாரிசிலும் வெளியாகிய தமிழன் பத்திரிகையில் பல்வேறு துறைகளிலும் எழுதிவருபவர் இந் நாவலாசிரியர். தற்போது புலம்பெயர்ந்து சுவிட்சர்லாந்தில் வாழ்பவர். காதலைச் சமுதாயக் கண்ணோட்டத்தில் விபரிப்பதுடன், தாம் வாழ்ந்த தாயக வாழ்வை மறந்து தாமும் ஐரோப்பியர் என்றும் தமது பிள்ளைகளுக்குத் தமிழே வராது என்றும் பெருமைபேசும் ஒருபிரிவினரை இந்நாவல் எள்ளலுடன் நகைக்கின்றது. ஈழத்தமிழரின் அவலங்களை மட்டுமல்ல அவர் கள் வாழுகின்ற புலம்பெயர்ந்த நாடுகளில் சந்தித்துவரும் வாழ்வியல் முறைமைகளையும் மிக யதார்த்தமாக இந்நாவல் எடுத்தியம்புகின்றது.

பத்தி இலக்கியங்களில் புகலிட வாழ்வு

புலம்பெயர் வாழ்வியலை எடுத்துரைக்கும் இலக்கிய வகைகளுள் பத்தி இலக்கியத்தையும் உள்ளடக்கலாம் என்று கருதுகின்றேன். இளைய அப்துல்லாஹ் என்ற புனைபெயரில் இலக்கியவாதியாக வலம்வரும் M.N.M. அனஸ் 2000ம் ஆண்டு முதல் லண்டனில் ஒரு ஊடகவியலாளராகத் தீபம் தொலைக்காட்சியின் நீண்டகாலப் பணியாற்றியவர். *அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன்*, *கடவுளின் நிலம்*, *லண்டன் உங்களை வரவேற்பதில்லை* ஆகியவை இவரது பத்தி எழுத்துக்களின் தொகுதிகளாக வெளிவந்த சில நூல்களாகும்.

ஐரோப்பிய நாடுகளில் தமிழர்களின் வாழ்வு, அகதிகள் பிரச்சினை, சாதி, சமயம், பணக்காரர், ஏழைகள், பெண்கள் என்று பல்வேறு ஏற்றத்தாழ்வு களை எம்மிடையே நடைமுறையில் கண்டு விமர்சிக்கும் இவர் ஐரோப்பிய நாடுகளில் விபச்சாரம், போதைவஸ்து பாவனை, தமிழரின் திருமணச் சம்பிரதாயங்கள், இளையதலைமுறையினரின் வேகம் என்று எதையுமே விட்டுவைக்கவில்லை. *லண்டன் உங்களை வரவேற்பதில்லை.* என்ற இவரது நூலில், ஓர் அகதியாக லண்டனில் குடியேறி இன்று பிரபல்யமான தமிழ் ஊடகப் பணியாளராகப் பணியாற்றுகின்ற தன் அனுபவத்தின் வழியாக, லண்டன் என்ற கனவு தேசத்தின் இருவேறு இயல்புகளையும் முன்வைக்கிறார். மேற்குலகைச் சேர்ந்தவர்களின் லண்டன் காட்சிகள் ஒளிநிரம்பியவை, உற்சாகமளிப்பவை. ஆயினும் அங்குவாழும் பெரும்பான்மையான ஈழத்தவர் உள்ளிட்ட கீழைத்தேசத்தவரின் லண்டன் காட்சிகள் துயர இருள்படிந்தவை. இவ்விரு வெவ்வேறுபட்ட மனநிலைகளையும் பிரித்தறிந்து தனது பத்தி எழுத்துகளில் லாவகமாகத் தீட்டுபவர் அனஸ்.

பாலகிருஷ்ணா ஸ்ரீதரன் The London School of Economics and Political Science இன் கலாநிதிப் பட்டம் பெற்றவர். 20 வருடங்களாக லண்டனில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். டாக்டர் ஸ்ரீதரன் என்ற பெயரில் புதினம் பத்திரிகையில் எழுதிவருகின்றார். *சிதம்பர சக்கரம்* என்ற இவரது நூல் லண்டனின் புகலிட வாழ்வியலை வித்தியாசமாக அணுகுகின்றது. நாம் வாழும் இந்த உலகம் நமக்குப் புறம்பான ஒரு தனிமையா? அல்லது நாம் தான் இந்த உலகமா? மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே ஆரம்பித்த இக் கேள்விக்கு நமது அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களையே உதாரணம் காட்டி, நாம் பார்க்கும் இந்த உலகம் நம்மாலேயே உருவாக்கப்பட்டது. நாம் தான் இந்த உலகம் என்று கூறுவது தான் இந்த நூலின் சாராம்சம். சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் குறுங்கதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. இவரது மற்றொரு நூல் *நிர்வாணம்* என்பதாகும். இலண்டனிலிருந்து வெளி வரும் புதினம் மாதப்பத்திரிகையில் தொடராக வெளிவந்த இந்த சமூகவியல் சார்ந்த பத்தி இலக்கியத்தில் புகலிடத்துத் தமிழர்கள் காணமறுக்கும் கோணங் களை மிகத்தெளிவாகத் தோலுரித்துக் காட்டியிருக்கின்றார். புலத்தில் வாழும் தமிழர்களின் போலி வேடங்களைத் தொட்டுக்காட்டிப் பொய்யான போர்வை கள் களையப்பட்டு நிர்வாணமாக்கப்படுவதுடன், சமூகத்தின் பரம்பரை நோய்களின் வேர்களுக்கு மருந்திடுவதாகவும் இந்நூலிலுள்ள 32 சொற் சித்திரங்களும் அமைகின்றன.

புலம்பெயர்ந்தோர் வாழ்வை பதிவாக்கும் புகலிடச் சினிமா

புகலிட வாழ்வியலை, புலம்பெயர்ந்தோர் வாழ்வை ஆக்க இலக்கியங்கள் எவ்வளவுதூரம் பதிவுசெய்திருக்கின்றதோ அதே வேகத்தில் கட்புல செவிப்பல ஊடகத்துறையும் பதிவுசெய்திருக்கின்றது. இன்று புகலிடத்தில் வெளிவரும் பல குறும்படங்கள் இதற்குச் சாட்சியங்களாக அமைந்துள்ளன. எழுத்தில் வடிக்கவியலாத உணர்வுக்கூறுகளை சில நிமிடநேரமே காட்சிப்படுத்தப்படும் குறுந்திரைப்படங்கள் ஆழமாகவும் அழுத்தமாகவும் எமது மனதில் பதிவு செய்கின்றன. புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள் போன்றே புகலிடச் சினிமாவும் விரிவான ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டிய கூறாகும்.

புகலிடத் தமிழ் சினிமா என்ற நூல் குறும் திரைப்படத்துறையில் ஈடுபாடு கொண்ட அருந்ததி, யமுனா ராஜேந்திரன் ஆகிய இருவரின் முயற்சியின் பெறுபேறாக 2000ம் ஆண்டு பிரான்சில் வெளிவந்திருந்தது. புகலிடத் தமிழ்த் திரைப்பட உலகம் சார்ந்த 21 விமர்சனக் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூலான இதிலுள்ள கட்டுரைகளை மு.புஷ்பராஜன், அருந்ததி, ஜீவன், அபிநயன், சுவிஸ் றஞ்சி, கதிர்காமநாதன், அழகு குணசீலன், புவனன், எஸ்.பி.ஜெகாதரன், யமுனா ராஜேந்திரன் ஆகியோர் புகலிட தமிழ் சினிமா எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி இங்கு எழுதியுள்ளனர். புலம்பெயர் சினிமாவுக்கான கருப்பொருள் பற்றியதாகவும், வாழ்வுக்கும் கலைக் கருத்தேர்வுக்கும் இருக்கவேண்டிய தர்க்கபூர்வமான உறவு பற்றியதாகவும் கட்டுரைகள் அமைகின்றன. மேலும் சினிமா வரலாற்றை அரசியல் ரீதியாகவும், புகலிட வாழ்க்கையை அதனது தொடர் அரசியலாகவும் பார்க்கும் கட்டுரை களாகவும் இவை அமைந்துள்ளன.

இவ்வாய்வில் புகலிட இலக்கியப் பெரும் பரப்பில் புலம்பெயர்ந்தோர் பற்றிய இலக்கியக் கூறுகளைக் கொண்ட ஈழத்தவரின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றேன். இத்துறையில் ஆய்வுகளை எதிர்காலத் தில் மேற்கொள்ளவிரும்புவோருக்கு இக்கட்டுரை ஒரு பயனுள்ள ஆவணமாக அமையலாம் என்பதால், இவ்வாய்வில் எடுத்தாளப்பட்ட நூல்களின் விபரங்களை கட்டுரையின் பின்னிணைப்பில் வழங்கியுள்ளேன்.

பின்னிணைப்பு

இவ்வாய்வில் குறிப்பிடப்பட்ட நூல்களின் விபரம்

1. *அகதி வாழ்க்கை: ஓர் இலங்கைத் தமிழ் அகதியின் அனுபவக் குறிப்புகள்.* கலையரசன். சென்னை 600018: கிழக்கு பதிப்பகம், இல.33/15, எல்டாம்ஸ் சாலை, ஆள்வார்ப்பேட்டை, 1வது பதிப்பு, ஜூலை 2010. (சென்னை 600018: கிழக்கு பதிப்பகம், New Horizon Media Pvt Ltd, இல.33/15, எல்டாம்ஸ் சாலை, ஆள்வார்ப்பேட்டை). 190 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 978-81-8493-477-9.

2. *அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன்.* சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்ரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (சென்னை: மணி ஆஃப்செட்). 192 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80072-97-5.

3. *அலைவும் உலைவும்.* சு.குணேஸ்வரன். இலங்கை: தினைப்புனம் வெளியீடு, 1வது பதிப்பு, புரட்டாதி 2009. (யாழ்ப்பாணம்: மதுரன் கிராப்பிக்ஸ், அல்வாய்). vii, 116 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-51949-0-7.

4. *இப்படிக்கு அன்புள்ள அம்மா: கவிதை நடையில் ஒரு காவியம்.* கலாநிதி ஜீவகுமாரன் (டெனிஷ் மூலம்), வி.ஜீவகுமாரன் (தமிழாக்கம்). டென்மார்க்: விஷ்வசேது இலக்கியப் பாலம், 1வது தொகுப்பு, டிசம்பர் 2010. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை). 163 பக்கம், கணனிச் சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

5. *இருப்பும் விருப்பும்.* கி.பி.அரவிந்தன். சென்னை 600 091: சாளரம், 2/1758, சாரதி நகர், என்பீல்ட் அவென்யூ, மடிப்பாக்கம், 1வது பதிப்பு, ஜூன் 2009. (சென்னை: பொன்னி அச்சகம்). 143 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21x14 சமீ.

6. *இல்லாமல் போன இன்பங்கள்.* கோவிலூர் செல்வராஜன். சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, மார்ச் 2013. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு). 272 பக்கம், விலை: இந்திய ரூபா 150.,அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-93-81322-15-4.

7. *இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம்.* சித்திரலேகா மௌனகுரு. நுகேகொடை: சுதந்திர இலக்கியவிழா அமைப்புக்குழு, 61, பழைய கொட்டாவ வீதி, மிரிஹான, 1வது பதிப்பு, மே 1995. (தெகிவளை: டெக்னோ பிரின்ட், 6, ஜெயவர்த்தன அவென்யு). 24 பக்கம், விலை: ரூபா 30. அளவு: 20.5x14 சமீ.

8. *இலட்சியப் பாதையில்.* ஷறீகா சிவநாதன். சென்னை 600004: ஔ பதிப்பகம், இல. 25, ஸ்ரீநிவாசா ரோடு, மயிலாப்புர், 1வது பதிப்பு, ஜனவரி 2011. (சென்னை: ஸ்பீட் பிரின்ட்). 72 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

9. *ஈழத் தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும்.* தெ.வெற்றிச்செல்வன். சென்னை 600078: சோழன் படைப்பகம், 5D, பொன்னம்பலம் சாலை, கே.கே.நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: அம்மன் பிரிண்டிங் வேர்க்ஸ்). 312 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

10. *உறைக்கும் உண்மைகள்.* நிலா (இயற்பெயர்: உதயகுமாரி பரமலிங்கம்). London HAO 2HW: உதயகுமாரி பரமலிங்கம், சிவம் தரம் பதிப்பகம், Flat 1, Ithell Court, 18, Crawford

Avenue, Wembley, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (திருச்சி 620 001: தி பிரிண்டர்ஸ் இந்தியா). 94 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 5., இந்திய ரூபா 60., அளவு: 21x14 சமீ.

11. *என் ஏதேன் தோட்டம்.* கவிதா. சென்னை 600 024: நேர்நிரை வெளியீடு, D1/15 TNHB, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை). 104 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 70., நோர்வே 70 குரோணர், அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-903664-9-6.

12. *என் மகளினும் மேலானவள்.* மாலதி பாலேந்திரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600094: B.V.R. ஆப்செட்). vi, 158 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12 சமீ.

13. *ஒரு அகதியின் கைரேகை.* இணுவை சக்திதாசன். டென்மார்க்: இணுவை இளந்தென்றல் வெளியீடு, Kiledvangsparken 36, 4390 vipperod 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (டென்மார்க்: சத்யன் லே அவுட்). 128 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5x14 சமீ.

14. *ஒலிக்காத இளவேனில்.* நிர்மலா (தான்யா), பிரதீபா கனகா-தில்லைநாதன் (தொகுப் பாசிரியர்கள்). சென்னை 600024: வடலி வெளியீடு, 13/54, 10ஆவது குறுக்குத் தெரு, ட்ரஸ்ட் புரம், கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை). 172 பக்கம், விலை: இந்திய ரூபா 135., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 819084056-8.

15. *கடவுளின் நிலம்.* இளைய அப்துல்லாஹ் (இயற்பெயர்: M.N.M.அனஸ்). டென்மார்க்: வி.ஜீவகுமாரன், விஸ்வசேது இலக்கியப் பாலம், Hojvangsparken 7, 4300 Holbaek, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை). 174 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

16. *காற்றைக் கானமாக்கும் புல்லாங்குழல்.* இணுவை க.சக்திதாசன். கொழும்பு -13: மல்லிகைப் பந்தல், 201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2008. (கொழும்பு 12: Happy Digital Centre (Pvt) Ltd, 75, 1/1 Sri Sumanatissa Mawathe). xxii, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-8250-41-9.

17. *குடும்பத்துள் வாழ்தல்: தாயக புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு.* க.அருந்தவராஜா, அன்பரசி அருந்தவராஜா. சுவிட்சர்லாந்து: கலை இலக்கியப் பேரவை, ஜெனீவா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு - 6: றண்யாஸ் கிறப்பிக்ஸ்). xii, 101 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

18. *குருதி வரையும் தேசம்.* பா.உதயகுமார். நோர்வே: பா.உதயகுமார், நோர்வே தமிழர் கலை பண்பாட்டுக் கழகம், Dr. Dedichens V 84, 0675 Oslo, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை). (7), 66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

19. *சிதம்பர சக்கரம்.* பாலகிருஷ்ணா ஸ்ரீதரன். லண்டன்: கிருஷ்ணா பப்ளிகேஷன்ஸ், த.பெ.இலக்கம் 35326, 1வது பதிப்பு, ஜனவரி 2001. (அச்சக விபரம் அறியமுடியவில்லை) (10),198 பக்கம். விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21.5x14 சமீ.

20. *சுருதி பேதமடைகிறது.* வவுனியூர் இரா.உதயணன். கொழும்பு - 8: அருணா வெளியீட்டகம், A 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் தொகுதி, மங்கள வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2008. (கொழும்பு - 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி). viii, 156 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17x12 சமீ., ISBN: 978-955-1347-03-1.

21. *தலைப்பு இழந்தவை: ஈழவாணி கவிதைகள்.* ஈழவாணி (இயற்பெயர்: வாணி ஜெயா தீபன்). கோயம்புத்தூர் 641017: தகிதா பதிப்பகம், 4/833 தீபம் பூங்கா, கே.வடமதுரை, 1வது பதிப்பு, ஆவணி 2010. (கோயம்புத்தூர்: ஐடியாஸ் பிரின்டர்ஸ்). xiv, 60 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18.5x12.5 சமீ.

22. *திரிபு: நாவல்.* இ.தியாகலிங்கம். சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு). 176 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89748-92-0.

23. *துருவத் துளிகள்.* இ.தியாகலிங்கம். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆர்க்காடு சாலை). 64 பக்கம், விலை: இந்திய ரூபா 95., அளவு: 11.5x17.5 சமீ., ISBN: 978-81-89748-79-1.

24. *தொட்டிப் பூ.* கவிதா. சென்னை 600 024: நேர்நிரை வெளியீடு, D1/15 TNHB, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: யுகமாயினி, சித்தன் கலைக்கூடம்). 128 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 70., நோர்வே 70 குரோணர், அளவு: 21x14 சமீ.

25. *தொலைதூரக் கனவுகள்.* சக்கரவர்த்தி இராசலிங்கம். சென்னை 600083: சந்தியா பதிப்பகம், நியூ டெக் வைபவ், 57A, 53ஆவது தெரு, அசோக் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (சென்னை: மைக்ரோ பிரின்ட் லிமிட்டெட்). 420 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

26. *நாங்கள்: தமிழ் இளையோர் கவிதைகள்.* வ.சிவராஜா, க.அருந்தவராஜா, பொ. சிறிஜீவகன், அ.புவனேந்திரன் (பதிப்பாசிரியர்கள்). ஜேர்மன்: தமிழ் எழுத்தாளர் சங்கம், V.Sivarajah, Am Windhoevel – 18a, 47249, Duisburg, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு - 13: கீதா பப்ளிக்கேஷன்). 96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

27. *நாடற்றவனின் குறிப்புகள்.* இளங்கோ. கனடா: அம்பனா வெளியீடு, 330, McCowan Road, #1306, Toronto, Ontario, M1J 3N3, 1வது பதிப்பு, 2007. (சென்னை 600005: மணி ஓப்செட்). 102 பக்கம், விலை: ரூபா 100., இந்திய ரூபா 60., அளவு: 22x14 சமீ.

28. *நாம் பேசிக்கொண்டிருந்த போது பெய்திராத மழை.* மயூ மனோ. சென்னை 600 024: வடலி வெளியீடு, B2/5, அரசு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, மே 2011. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்). 95 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

29. *நிர்வாணம்.* டாக்டர் ஸ்ரீதரன் (இயற்பெயர்: பாலகிருஷ்ணா ஸ்ரீதரன்). London SW 17 7EZ: புதினம் வெளியீடு, 38, Moffat Road, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (Chennai 600 014: The Parkar, 293 Ahamed Complex, 2nd Floor, Royapettah High Road). 192 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 5., அளவு: 21x14 சமீ.

30. *நிலம் பிரிந்தவனின் கவிதை.* சுஜந்தன். நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2011. (சென்னை 600005: மணி ஓப்செட்). 78 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-67-1.

31. *நிஷ்டை: புகலிடச் சிறுகதைகள்.* க.கலாமோகன். பிரான்ஸ்: எக்சில் வெளியீடு, 94 Rue de La Chapelle, 75018, Paris, 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (தமிழ்நாடு: செய்யது ஸ்கிரீன்ஸ் அன் கிராஃபிக்ஸ் A.M.S.P. காம்பிளெக்ஸ், திருநெல்வேலி). 108 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 22x14 சமீ.

32. *பரதேசி.* இ.தியாகலிங்கம். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32ஃ9 ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜுன் 2008. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆர்க்காடு சாலை). 256 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-81-89748-57-2.

33. *பனி மலை தாண்டிய பாதச் சுவடு.* வேலணையூர் பொன்னண்ணா. டென்மார்க்: அறிவகம், Fyrreaenget-311, 7190 Billund, Denmark, 1வது பதிப்பு, 2012. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு). 304 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவிலலை, அளவு: 22x15 சமீ.

34. *பனிக்குள் நெருப்பு: புலம்பெயர்ந்தோர் இலக்கியம் ஒரு வரலாற்றுப் பார்வை.* எஸ். பொன்னுத்துரை. சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜுன் 2006. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை). 112 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18.5x13.5 சமீ., ISBN: 81-89748-17-3.

35. *பாரிஸ் கதைகள்.* கி.பி.அரவிந்தன் (தொகுப்பாசிரியர்). பாரிஸ்: அப்பால் தமிழ், 1வது பதிப்பு, ஜுலை, 2004. (கொழும்பு - 13: ஈகுவாலிட்டி கிரப்பிக்ஸ், 315 ஜெம்பட்டா வீதி). xiv, 128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

36. *பிறந்த மண்ணும் புகலிடமும்: சில அவதானிப்புகள்.* கலைவளன் சிசு.நாகேந்திரன். அவுஸ்திரேலியா: அவுஸ்திரேலிய தமிழ்-இலக்கிய கலைச் சங்கம், ATLAS, P.O.Box 620, Preston, Victoria 3072, 1வது பதிப்பு, பங்குனி 2008. (கொழும்பு - 6: கிரிப்ஸ்). 213 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

37. *பின்நவீனத்துவச் சூழலில் புலம்பெயர்ந்தோர் கவிதைகளும் பெண்ணியக் கவிதைகளும்.* யாழினி முனுசாமி. சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்). 112 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 81-89748-44-0.

38. *புகலிடத் தமிழ் சினிமா.* அருந்ததி, யமுனா ராஜேந்திரன் (தொகுப்பாசிரியர்கள்). பிரான்ஸ்: முகம் பதிப்பகம், இல. 2, Rue Charles Fourrier, 93700 France, இணை வெளியீட்டாளர்கள், லண்டன் E12 6BT: தமிழர் தகவல் நடுவம், 720, Romford Road, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (சென்னை 5: மணி ஓப்செட்). 176 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

39. *புலம்பெயர் கவிதை: உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை.* கிருஷ்ணபிள்ளை விசாகரூபன். யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, பங்குனி 2004. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரின்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி). xi, 115 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955 98618 0 8.

40. *புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழரின் பண்பாட்டுத் தனித்துவம்: சில அவதானிப்புகள்.* வி.நித்தியானந்தம். கொழும்பு - 6: தமிழ்ச்சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு,

தை 2002. (அச்சக விபரம் அறியமுடியவில்லை). 16 பக்கம், விலை: ரூபா 30. அளவு: 20x14.5 சமீ.

41. *புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாடு சிறப்புமலர்.* எஸ்.வி. இராஜதுரை, ச.சீ. கண்ணன், மற்றும் பலர். பாண்டிச்சேரி, 605001: நிறப்பிரிகை, அஞ்சல்பெட்டி எண். 192, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (சென்னை 600024: அலைகள் அச்சகம், 36, தெற்குச்சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம்). 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 24.5x18.5 சமீ.

42. *புலம்பெயர்ந்த தமிழன்.* சாமி அப்பாத்துரை. கனடா: ஈழநாடு பதிப்பகம், த.பெ. 873, ஸ்டேஷன் கியு, ரொரன்ரோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, ஆனி 1995. (கனடா: குவாலிட்டி பிரின்டர்ஸ், ஒன்ராரியோ).(10), 133 பக்கம், விலை: கனேடிய டாலர் 7., அளவு: 21x14 சமீ.

43. *புலம் பெயர்ந்த பூக்கள்: சிறுகதைத் தொகுதி.* க.ஸ்ரீகந்தராஜா (தொகுப்பாசிரியர்). அவுஸ்திரேலியா: விக்ரோரிய இலங்கைத் தமிழ்ச் சங்கம், த.பெ.எண். 103, Glenhuntley, Victoria, 3163, 1வது பதிப்பு, மே 1996. (வெளியிட்ட இடம் தரப்படவில்லை:Limat Publishing). (10), 162 பக்கம், விலை: அவுஸ்திரேலிய டொலர் 5., அளவு: 20.5x15 சமீ.

44. *புலம் பெயர்ந்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்.* என்.சிறிரஞ்சன். கொழும்பு - 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 361, 1/2, டாம் வீதி). xii, 124 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 955-9429-74-4.

45. *புலம் பெயர்ந்தோர் கதைகள்.* புவனன் (தொகுப்பாசிரியர்). பாரிஸ்: மஹாஜன வெளியீடு, மஹாஜன பழைய மாணவர்கள் சங்கம், 1வது பதிப்பு, புரட்டாதி 1994. (அச்சகவிபரம் அறியமுடியவில்லை). 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 20x13 சமீ.

46. *புலம் பெயர்ந்தோர் கவிதைகள்.* ப.திருநாவுக்கரசு (தொகுப்பாசிரியர்). சென்னை 600 078: நிழல், 31/48 இராணி அண்ணா நகர், கலைஞர் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 5: மணி ஆப்செட்). 192 பக்கம், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21x13.5 சமீ.

47. *புலம் பெயர்ந்தோரின் புலம்பெயரா நெஞ்சங்கள்.* எஸ்.எம்.சேமகரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல. 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்). 88 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 18x12.5 சமீ.

48. *புலம் பெயரும் மண்வாசம்: தாயக-புலம்பெயர் மக்களிடையே ஒரு நோக்கு.* க. அருந்தவராஜா. சுவிட்சர்லாந்து: கலை இலக்கியப் பேரவை, ஜெனீவா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு - 6: றண்யாஸ் கிறப்பிக்ஸ்). xiv, 109 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

49. *புனைவும் புதிதும்: ஆய்வுக்கட்டுரைகளும் பிறவும்.* சு.குணேஸ்வரன். யாழ்ப்பாணம்: மீளுகை 2, தினைப்புனம், அல்வாய், 1வது பதிப்பு, சித்திரை 2012. (யாழ்ப்பாணம்: மதுரன் கிராப்பிக்ஸ், அல்வாய்). 111 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-951949-1-4.

50. *மக்கள்... மக்களால் மக்களுக்காக.* வி.ஜீவகுமாரன். சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, மார்ச் 2009. (சென்னை 600024:

மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்). 352 பக்கம், விலை: இந்திய ரூபா 190., அளவு: 18x12 சமீ., ISBN: 978-81-89748-73-9.

51. *முகங்கள்.* வி.ஜீவகுமாரன் (தொகுப்பாசிரியர்). டென்மார்க்: வி.ஜீவகுமாரன், விஸ்வசேது இலக்கியப் பாலம், Hojvangsparken 7, 4300 Holbaek, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை). 551 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

52. *மெல்லத் தமிழ் இனித் துளிர்க்கும்: டென்மார்க் இளைய தலைமுறையின் கவிதைத் தொகுப்பு.* வி. ஜீவகுமாரன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600024: மித்ர வெளியீடு, 32/9, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜூன் 2008. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 32/9, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம்). 272 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 11.5x18 சமீ., ISBN: 81-89748-56-4.

53. *மேலைக் கடலில் ஈழக் காற்று: இது ஓர் ஒளிக்கலைஞனின் படப்பதிவும் மனப்பதிவும்.* த.கவியரசு. சென்னை 600078: சோழன் படைப்பகம், 5D, பொன்னம்பலம் சாலை, கே.கே.நகர், 1வது பதிப்பு, மார்ச் 2009. (சென்னை: அம்மன் பிரிண்டிங் வேர்க்ஸ்). 232 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21.5x14 சமீ.

54. *லண்டன் உங்களை வரவேற்பதில்லை.* இளைய அப்துல்லாஹ் (இயற்பெயர்: எம்.என். எம்.அனஸ்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, அக்டோபர் 2011. (சென்னை 600005: மணி ஓப்செட்). 174 பக்கம், விலை: இந்திய ரூபா 125.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80240-56-5.

55. *வரம்.* இ.தியாகலிங்கம். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், 1/9 ஆர்க்காடு சாலை). 232 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-81-89748-75-3.

56. *வேரறுந்த மரங்கள்.* சிக்கன்ன ராஜு. கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 7 பல்கூட்டுச் சந்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொட்டகலை: Global Com System-IT, 135 Main Street). 85 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 17.5x13.5 சமீ., ISBN: 955-8589-05-5.

57. *வேருலகு: கனவுகளின் தொகுப்பு.* மெலிஞ்சி முத்தன். (இயற்பெயர்: விஜயநாதன் இயூஜின் மசனெட்). சென்னை 600018: உயிர்மை பதிப்பகம், 11/29, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600005: மணி ஆப்செட்). 64 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80072-73-9.

(ஞானம் 175 ஆவது சிறப்பிதழ், 2014: ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ்: ப. 909-928)

16

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின் எழுந்த ஈழத்தவர்களினதும் அவர்கள் சார்ந்ததுமான குரல்கள்

ஒரு நூலியல் தேடல்

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் அஹிம்சைப்போராட்ட வடிவத்திலிருந்து ஆயுதப்போராட்ட வடிவம் பெற்ற எண்பதுகளின் பின்னரைப் பகுதிகளிலிருந்து வெளிவந்த ஈழத்துத் தமிழ் நூல்களில் பெரும்பாலான ஆக்க இலக்கிய வடிவங்கள் விடுதலைப் போராட்டத்தின் பாதிப்பைப் படிப்படியாக உள்வாங்கியவண்ணம் வளர்ந்தது. ஒரு கட்டத்தில் ஈழ இலக்கியங்கள் ஈழத்தின் தமிழ்மக்கள் தம் மரணத்துள் வாழ்ந்த வாழ்வையும், போர் தின்ற அந்தச் சனங்களின் கதைகளையும் வீரம்செறிந்த விடுதலைப் போர்ப்பரணிகளையும் பாசாங்கு ஏதுமற்ற தூய இலக்கிய வடிவங்களாக்கின. இந்தச் சூழ்நிலையே ஏராளமான இலக்கியவாதிகளை கிராமங்களிலும், நகரங்களிலும், புகலிடங்களிலும், போராளிகளிடையேயும் உருவாக்கியது. இந்நிலைமையே ஈழத்தமிழரின் படைப்புகளை போராட்ட இலக்கியங்களாக உலகளாவிய ரீதியில் தமிழியல் ஆய்வாளர்கள் மத்தியில் கொண்டுசென்றன. இதன் ஒரு பரிமாணமாகப் புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களும் முகிழ்ந்து மணம்பரப்பத் தொடங்கின.

இந்நிலையில் உலகத்தமிழர்களால் ஜீரணித்துக்கொள்ளமுடியாத வகையில் மே 2009 இன் முள்ளிவாய்க்கால் அவலம் நேர்ந்துமுடிந்தது. இது ஈழத்தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை சடுதியான முடிவுக்குக் கொண்டுவந்தது. தமிழீழக் கனவுகளுடன் நீண்டகாலம் உயிரைக் கொடுத்து, வாழ்ந்த ஒரு இனம் ஒன்றுமே இல்லாத ஒரு வெற்றுணர்வுக்குத் தள்ளப்பட்டது. எளிதில் இயல்புவாழ்வுக்குத் திரும்பமுடியாதவாறு அன்றாட வாழ்வாதாரங்கள் செயற்கையாகக் கடினமாக்கப்பட்டன. சுதந்திரமான சிந்தனை என்பது இயல்புவாழ்வுக்குத் திரும்பாத வரையில் சாத்தியமாகப் போவதில்லை என்ற நிலையில் தமது உணர்வுகளையும் தாயகத்தில் வாழும் ஈழத்தமிழர்கள் மௌனித்துக்கொள்ளவேண்டியதாயிற்று.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் அவலத்தில் முடிவுக்கு வந்த எமது ஆயுதப் போராட்டத்தின் ஆவணப்பதிவுகளும், இலக்கியப்பதிவுகளும், பின்னடைவின் பின்பான வாழ்வு பற்றிய இலக்கியப் பார்வைகளும் எமது மக்களின் வாழ்வில் மூன்றாண்டுகள் கடந்த நிலையில் எவ்வகையில் வெளிவந்திருக்கின்றன என்பதை பதிவுசெய்யும் முதலாவது கட்டுரையாக எனது கட்டுரை அமைகின்றது. தொடர்ந்து வெளிவரவுள்ளதும், வெளிவந்தும் என் கரங்களை எட்டாததுமான படைப்புகள் பற்றி எதிர்காலத்தில் பதிவு செய்யப்படலாம் என்ற நம்பிக்கையுடன் இக்கட்டுரை விரிகின்றது. முக்கிய பதிவுகள் எவையாவது இக்கட்டுரையில் தவறவிடப்பட்டு இருப்பின் அது பற்றி அறியவும் விரும்புகின்றேன்.

முதலில் முள்ளிவாய்க்கால் அவலங்களின் அதிர்ச்சியில் நாடிஒதுங்கி யிருந்த எமது ஈழத்துக் கவிஞர்களின் உணர்வின் வெளிப்பாடுகள் முதலில் ஒளிக்கீறாக வெளிவந்த காலகட்டம் டிசம்பர் 2009 என்று கொள்ளலாம்.

வ.ஐ.ச. ஜெயபாலனும், தமிழ்நதியும் இவ்வகையில் முதன்மையானவர் களாக அடையாளம் காணப்படுகிறார்கள். வ.ஐ.ச. ஜெயபாலனின் *தோற்றுப் போனவர்களின் பாடல்* என்ற கவிதைத் தொகுதி சென்னை, ஆழி பதிப்பக வெளியீடாக வெளிவந்தது. உலக இன மரபில் தமிழின அழித்தொழிப்பின் உச்சபட்ச நாட்களில் ஜனனித்த இக்கவிதைகள் அதே இரத்தவாடையோடும், நிணவீச்சத்தோடும் நிழலாடுகின்றன. இக்கவிதைத்தொகுப்பு மூன்று உட்பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. 2002-2009 காலகட்டத்தில் எழுதப்பட்ட தோற்றுப்போனவர்களின் இன்றைய பாடல்கள் பகுதி ஒன்றிலும், ஈழத் தமிழ் மக்களின் முன்னைய பெரும் தோல்விகளின்போது தான் எழுதிய கவிதைகளில் சில இரண்டாவது பகுதியிலும், ஜெயபாலனின் இசைப்பாடல்கள் மூன்றாவது பகுதியிலும் காணப்படுகின்றன. ஒவ்வொரு யுத்தத்தின் தோல்வி யின்போதும் இனி முடிந்ததென்று சொல்லப்பட்ட மக்களின் போராட்டம் புதிய தளத்தில் புதிய பின்னணியில் மீண்டும் உக்கிரம் கொண்டதையே இத் தொகுப்பினை வாசிப்போரின் மனம்கொள்ளும். மொழியில் திளைத்து, மண்ணில் வேரோடி, ஜரிகைக் கனவுகளில் சஞ்சரித்த கவிஞனை போர்க்கழுகு கொத்தித் துரத்துகின்றது. நாடோடியாய் திரிந்து யுத்தகாலத்திற்குள் வாழ்ந்த தமிழ்ப்புலவன் அரற்றும் கண்ணீர் இக்கவிதைகளில் அறத் தீயாய் எரிகின்றது.

அடுத்ததாக தமிழ்நதியின் *இரவுகளில் பொழியும் துயரப்பனி* என்ற கவிதைத் தொகுதி, சென்னை ஆழி பதிப்பகத்துடன் இணைந்து பனிக்குடம் வெளியீட்டாளர்களின் கூட்டுப் பதிப்பாக டிசம்பர் 2009இல் வெளிவந்தது. ஈழத்துப் பின்புல வாழ்வியல் அழுத்தங்களைக் கவியாக்குவதில் தனக்கான

தனித்தன்மைகளைப் பேணிவருபவர் தமிழ்நதி. தன்னைத்தானே தேடிக் கண்டுபிடித்து வாழ்வுக்கான அர்த்தம் கற்பித்து வாழத் துடிக்கும் ஜீவனின் சொல்லோவியங்களாகவே இவரது கவிதைகள் அமைகின்றன. பெண்சார் அனுபவங்களின் திமிறலும் நிமிறலும் காலத்தின் முன்னோக்கிய நகர்வுக்கான சமிக்ஞைகளாகவும் இவரது படைப்பனுபவம் விரிகின்றது. விடுதலைக்கான போரில் உயிர்நீத்த அனைத்துப் போராளிகளுக்கும் மக்களுக்கும் இத் தொகுதியை சமர்ப்பணம் செய்துள்ளார். இதன்மூலம் இவரது நோக்கும் போக்கும் கவியுணர்த்தும் தாக்கமும் எவ்வாறு மையங்கொள்ளும் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். நூலின் முன்னட்டையில்- இலங்கை இராணுவத் தின் போர்க்குற்றம் தொடர்பான முக்கிய ஒளிப்பட ஆவணமொன்றின் காட்சி இடம்பெற்றுள்ளது.

கவிதை வரிசையில் ஈழத்தமிழரின் போராட்டத் தோல்வியின் வடுக் களைச் சுமந்ததாக நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பக வெளியீடாக ஜூலை 2010இல் வெளிவந்த தீபச்செல்வனின் *பாழ் நகரத்தின் பொழுது* என்ற கவிதைத் தொகுதி அமைந்துள்ளது.

பாலேந்திரன் பிரதீபன் என்ற தீபச்செல்வன், இன்றைய ஈழத்துக் கவிதைகளில் வலுவான குரல்களில் ஒன்றாக உணரப்படுபவர். பல பத்தாண்டு களாக விடுதலைக் கனவைப் பேணிய ஓர் இனம் யுத்தத்தால் அழித்தொழிக்கப் பட்டபின்னர் எஞ்சியிருக்கும் மானுடர்களின் துயரையும் இன்னும் பற்றிக்கொண்டிருக்கும் நம்பிக்கையையும் இந்தக்கவிதைகள் பேசுகின்றன. ஒரு நாள்வழிக் குறிப்பின் சாயலில் எழுதப்பட்டிருக்கும் இந்தக் கவிதைகள் நிகழ்கால அவலம் பற்றிய மனச் சான்றின் வடுக்களாகின்றன. தீபச்செல்வன் கிளிநொச்சி-இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் ஊடகப் பிரிவில் வருகைதரு விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

இதே காலப்பகுதியில் *ஈதேனின் பாம்புகள்* என்ற தலைப்புடன் றஷ்மி எழுதிய கவிதைகளின் தொகுப்பும் காலச்சுவடு வெளியீடாக வெளிவந் துள்ளது. சமகால ஈழக் கவிதைகளின் பொது இயல்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கவிதைக்குரல் றஷ்மியினுடையது. காவுகொள்ளப்பட்ட வாழ்வைச் சொல்லும் இந்தக் கவிதைகளில் இழப்பின் ஓலத்தையும் கையறுநிலையின் புலம்பலையும் மீறி மனித இருப்புக்கான சினமும் இருப்பின்மையின் சீற்றமும் வெளிப்படுகின்றன. ஆக்கிரமிப்பால் சிதறடிக்கப்பட்ட ஓர் இனத் தின் பழிவாங்கல் றஷ்மியின் கவிதைகளில் கொடூரக் காட்சிகளாகவும் வன் முறைச் சொற்களாகவும் பதிவாகின்றன. பனி வாளால் கீறப்பட்ட மென்மை யான இதயத்தின் வடுக்கள் இந்தக் கவிதைகள்.

காலச்சுவடு பதிப்பகத்தின் மற்றொரு வெளியீடு சபாபதி உதயணன், சித்தாந்தன் என்ற புனைபெயரில் எழுதிய *துரத்தும் நிழல்களின் யுகம்* என்ற கவிதைத் தொகுப்பாகும். முன்னைய இரு நூல்களையும் தொடர்ந்து ஜூலை 2010 லேயே இதுவும் வெளியாகியது. போருக்கும் தோல்விக்கும் முன்னும் பின்னுமான ஈழப் பின்புலத்திலிருந்து வெளிப்படும் இந்தக் குரல் துயர் நிரம்பியது. தனிமை நிரம்பியது. தனிமையில் துயரப்படும் எல்லாரையும் அல்லது துயரங்களால் தனிமைப்படும் எல்லாரையும் பிரதிநிதித்துவப்படுத்து வது. காற்றுவெளியில் அர்த்தமற்று நிராதரவாய் அலையும் மனிதர்களின் குரலை இந்தக் கவிதைகள் நிரந்தரப்படுத்துகின்றன. இவை நிகழ்காலத்தின் காயங்கள்- நாளையின் எச்சரிக்கை வடுக்கள். யாழ்ப்பாணம்-கோண்டாவிலில் 1977இல் பிறந்த சபாபதி உதயணன் 90களின் பிற்பகுதிகளில் எழுத்துத்து றையில் ஈடுபட்டவர். ஆசிரியராகப் பணியாற்றும் இவரின் முதலாவது கவிதைத் தொகுதி 2000ஆம் ஆண்டில் காலத்தின் புன்னகை என்ற பெயரில் வெளிவந்தது.

பெயரிடாத நட்சத்திரங்கள் என்ற தலைப்பில், ஈழப் பெண் போராளிகளின் கவிதைகளின் தொகுப்பொன்றும் அண்மையில் ஜூலை 2011இல் சுவிஸ்ஸிலிருந்து இயங்கும் ஊடறு பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் விடியல் பதிப்பகம் இணைந்து வெளியிட்டுள்ள இந்நூல், ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் போராளிகளால் அவ்வப் போது எழுதப்பட்டு கவிதைத் தொகுப்புகளில் இடம்பெற்ற கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாகும். வானதியின் கவிதைகள் (1991), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), நிமிர்வு (1993), வானம் எம் வசம் (1995), வெளிச்சம் கவிதைகள் (1996), செம்மணி (1998), ஆனையிரவு (2000), என் கவிதை (2000), எழுதாத உன் கவிதை (2001), மீண்டும் துளிர்க்கும் வசந்தம் (2004), பெயல் மணக்கும் பொழுது (2007) ஆகிய தொகுப்புகளில் இடம்பெற்றவற்றில் தேர்ந்த 70 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவற்றை அம்புலி, அ.காந்தா, அலையிசை, ஜெயா, கலைமகள், ஆதிலட்சுமி, கனிமொழி, ஞானமதி, வானதி, புரட்சிகரா, கஸ்தூரி, கிருபா, மலைமகள், நகுலா, நாமகள், நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபி மார்கரட், பாரதி, சிரஞ்சீவி, சூரியநிலா, சுதாமதி, தமிழவள், தயாமதி, தூயவள் ஆகிய 26 போராளிக் கவிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். ஈழத்தமிழ்ப் போராளிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு, விடுதலைப் போராட்டம் புதியதொரு அத்தியாயத்தை எட்டியிருக்கும் இவ்வேளையில், போராட்டத்தை நடத்திச் சென்ற பெண்போராளி களின் உணர்வுகளை மீள்தரிசனம் செய்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஈழத்தமிழரின் உணர்வுகளையும் வரலாற்றையும் பதிவாக்கும் மற்றொரு ஆக்க இலக்கிய வடிவமாக நாவல்கள் அமைந்திருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக *சாம்பல் பறவைகள்* என்ற தலைப்பிலான குறுநாவல் எஸ்.அரசரெத்தினம் அவர்களால் எழுதப்பட்டு கல்முனை: சத்தியா பப்ளிக்கேஷன்ஸ் வெளியீடாக ஓகஸ்ட் 2010இல் வெளிவந்துள்ளது. இக்குறுநாவல் வன்னிச் சமரின்போது சாதாரண மக்கள் அனுபவித்த அவலங்களை வெளிக் கொண்டுவரும் நோக்கில் எழுதப்பெற்றுள்ளது. ஆனந்தன்-பவானி காதல் பற்றிய கதையாகத் தொடங்கி னாலும், கதை முழுவதும் யுத்தத்தின் கொடுமை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மணியத்தாரின் கண்டிப்பான வளர்ப்பில் வளர்ந்த ஆனந்தன் மாஸ்டர் உருத்திரபுரம் முருகேசுவின் மகளான பவானி ஆசிரியையிடம் காதல் கொள்கிறார். ஆனந்தனின் தந்தை எதிர்த்துக் கிளம்ப ஆனந்தன் பொறுமையைக் கையாள்கிறான். விரக்தியுற்ற பவானி கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறாள். போரின் கெடுபிடி சூடுபிடிக்கிறது. பெட்டி படுக்கையுடன் மக்கள் இடம்பெயர, பவானி, தந்தை முருகேசு, அண்ணன் குமாரின் குடும்பம் என்போர் புளியம்பொக்கணைக்கு இடம்பெயர்கிறார்கள். வழியில் முருகேசர் நெஞ்சுவலியால் இறக்கிறார். இருட்டுமரு கிராமம், சுதந்திரபுரம், இரணைப்பாலை, புதுமாத்தளன் என்று எஞ்சியோரின் இடப்பெயர்வு தொடர்கிறது. குமாரின் மனைவி சாரதா பங்கருக்குள்ளேயே ஆண்குழந்தையைப் பெற்றுவிட்டு உயிர்துறக்கிறாள். பால் வாங்கவும் வழியின்றி குமார், பவானி, உமா ஆகியோர் இராணுவத்திடம் சரணடைகின்றனர். இடையில் குழந்தையும் இறக்கின்றது. இராணுவத்தின் உதவியுடன் வவுனியா முகாமுக்கு வந்துசேர்கின்றனர். முகாமில் ஆனந்தன் பவானியை சந்திக்க முயல்கிறான் என்றவாறாகக் கதை தொடர்கின்றது. இலங்கையில் கருக்கொண்டு ஈழத்துப் பதிப்பகத்திலேயே வெளியிடப்பட்ட நாவல் என்பதால் இந்நாவலில் சில சுயதணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது தவிர்க்கமுடியாததாயுள்ளது. இந்நிலையும் ஒரு சொல்லப்படாத கதையின் பதிவுதானே.

இந்நிலையில் தமிழகத்தின் மலையாள எழுத்தாளர் எஸ்.மகாதேவன் எழுதிய *மேலும் சில இரத்தக் குறிப்புகள்* என்ற நாவல் பற்றி ஈழத்துப் படைப்பாளிகளுக்குச் சொல்லவேண்டியுள்ளது. மலையாள மூலத்திலிருந்து குளச்சல் மு. யூசுஃப் அவர்களால் தமிழுக்கு மொழிமாற்றம் செய்து தமிழகத்தில் பொள்ளாச்சியிலிருந்து எதிர் வெளியீடு ஜூலை 2009 இல் அவசர அவசரமாக இந்நூலை வெளியிட்டிருந்தது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த காலப்

பகுதியில் இந்நூல் வெளியிடப்பட்டதென்பதை முதலில் மனங்கொள்வது அவசியம். இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வன்னியிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகக் கடல்மார்க்கமாக வந்தவண்ணமுள்ளனர். அப்படி வருபவர்களில் கணிசமானோர் இந்தியக் கரையை அடைவதில்லை என்ற அனுமானத்தில், அவர்களுக்கு என்ன நடந் திருக்கும் என்ற தேடலாக உருவகித்த கற்பனையில் உதித்த கதை இது. ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய ஆழமான பார்வையற்ற, ஈழத்தவர்களுக்கு எரிச்சலூட்டும் கற்பனாவாதக் கதையாக இது அமைகின்றது. எமது வரலாற்றை நாம் எழுதத் தயங்கும்போது, மற்றவர்கள் சுதந்திரமாக அதைத் தமது கை களில் எடுத்துக்கொண்டு எமது வரலாற்றை கற்பனாவாதக் கதைகளாக மாற்றி எமது உணர்வுகளையும், சிந்தனைகளையும் கொச்சைப்படுத்த வாய்ப்பளிக் கக்கூடாது என்ற உணர்வே இக்கதையை வாசித்துமுடித்ததும் எனக்கு முதலில் ஏற்பட்டது.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னணியில் சில கட்டுரை நூல்களும் புகலிடத்திலிருந்து வெளிவந்துள்ளன. *புதுமாத்தளன் சோகங்களுக்கு புதுமருந்து* என்ற நூல் டென்மார்க்கில் வாழும் படைப்பாளியான கி.செ. துரை (இயற்பெயர்: கிருஷ்ணன் செல்லத்துரை) அவர்களால் எழுதப்பட்டு, டென்மார்க், அலைகள் மூவீஸ் இன்டர்நெஷனல் வெளியீடாக ஜூன் 2010இல் வெளியிடப்பட்டிருந்தது. எஸ் பொவின் சென்னை, மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ் நிறுவனம் இந்நூலை தமிழகத்தில் அச்சிட்டு விநியோகித் திருந்தது. அலைகள் இணையப் பத்திரிகையில் 18 நாட்கள் தொடர்ச்சியாக எழுதப்பட்ட கட்டுரைத் தொடரின் நூல் வடிவம் இது. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் ஏழு ஆதரவு நாடுகளின் கூட்டு இராணுவ உதவியுடன் இலங்கை இராணுவத்தால் முறியடிக்கப்பட்ட வன்னிப்பிரதேசமான புது மாத்தளனை ஈழத்துத் தமிழ் மக்களின் முப்பது ஆண்டு ஆயுதப் போராட்டத் தின் தோல்வியின் குறியீடாகக் காண்கின்றார் கி.செ. துரை. அந்த இழப்பின் உணர்வு பூர்வமான சோகங்களிலிருந்தும், விரக்தியிலிருந்தும் விடுபட்டு, மீண்டும் விழித்தெழுந்து விடுதலைக்காக புதிய வழிகளில் உழைப்போம் என்று நம்பிக்கையூட்டி உற்சாகப்படுத்தும் வகையில் இதிலுள்ள மனித மேம் பாட்டுக் கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். போராட்டத்தின் தோல்வியை ஜீரணிக்கமுடியாது, வன்னியில் உறவுகளின் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாது, தமது துயரச்சுமையை எங்கே இறக்கிவைப்பதென்றறியாது புகலிட தேசங்களில் உறவுகளின் மடிதேடிக் கலங்கித் திரிந்த பலநூறு மக்களுக்கு ஆறுதல் சொல்வதாக இக்கட்டுரைகள் இலக்கிய நயத்துடன் அமைந்திருந்தன.

இருப்பும் விருப்பும் என்ற கட்டுரைத் தொகுதி கி.பி.அரவிந்தன் எழுதியது. சென்னை, மடிப்பாக்கம், சாளரம் வெளியீடாக ஜூன் 2009 இல் வெளிவந்தது. 1990 களில் புலம்பெயர்ந்த ஈழத்துக்கவிஞராக அதிகம் அறியப்பட்டவர் கி.பி.அரவிந்தன் என்னும் கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ். தோழர் சுந்தர் என்றும் ஈரோஸ் இயக்க விடுதலைப் போராளியாக அறியப்பட்டவர். தற்போது புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்பவர். இவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். தமிழகம் இந்நூலை கைகளில் ஏந்தட்டும் என்ற வைகறையின் முன்னுரையான அறிமுகக் கட்டுரையுடன் இது அணிந்துரை அல்ல தோழர்களே என்ற தலைப்பில் பாமரன் எழுதிய உணர்வுபூர்வமான கட்டுரையும், அப்படித்தானா அரவிந்தன்? என்ற கே.எம். வேணுகோபாலின் கட்டுரையும் இத்தொகுதிக்கும் அதன் படைப்பாளி கி.பி.அரவிந்தனுக்குமான விரிவான அறிமுகத்தை வழங்குகின்றன. உள்ளே உள்ள கி.பி.அரவிந்தனின் பத்துக் கட்டுரைகளும் முறையே இருப்பும் விருப்பும், ஒற்றுமையை ஓதுவோருக்கு, காலம் அரித்திடாது எம் இணைப்பை, எங்கள் நினைவுகளை உங்களிடம் கையளித்துள்ளோம், இலங்கையில் இன்னொரு போரை நாங்கள் விரும்பவில்லை, சாத்வீகப் பாதையில் சந்தி பிரித்தவன்: பொன்.சிவகுமாரன், யாசர் அரபாத்: ஒரு முடிவுறாத வரலாறு, ஓர் அகதியின் தாயும் தாயகமும், ஒரு பயணமும் சில நினைவுகளும், அகதியாகவே வாழ்ந்துவிட்டுப் போகிறேன் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

ஆயதப் போராட்டத்தின் முடிவில் எழுந்த அரசியல் அலைகள் பல நூல்களை தமிழில் கொண்டுவந்து சேர்த்துள்ளன. வழமைபோல இதுவும் இலங்கைத் தீவுக்கு வெளியே தமிழகம், மலேசியா, லண்டன் ஆகிய நாடுகளிலிருந்தே உருவாகியுள்ளன.

முள்ளிவாய்க்கால் வரை ஈழத்தமிழர் கண்ட அவலங்களை புகைப்பட ஆவணமாக்கும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாக *என்ன செய்யலாம் இதற்காக?* என்ற நூல் அமைகின்றது. தமிழகத்தைச் சேர்ந்த ஜெ. பிரபாகரன் என்பவர் தொகுத்து, மதுரை பென்னிகுயிக் பதிப்பகத்தினரால் அக்டோபர் 2010 இல் 216 பக்கங்களுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் அரை நூற்றாண்டிற்கும் மேலாக சிங்கள இனவெறிக்கு ஆளாகிவரும் ஈழத்தமிழின மக்களின் துயரக்காட்சிகள் என்ற தலைப்புடன் புகைப்பட ஆவணமாக இந்நூல் தமிழ் ஆங்கில பிரெஞ்சு விளக்கக்குறிப்புகளுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 57 தலைப்புகளில் 371 புகைப்படங்கள், 4 அட்டவணைகள் மற்றும் 80 மனிதநேயக் கூற்றுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. புகைப்படங்களை வகைப்படுத்தும் தலைப்புக்கள் தமிழ்,

ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளிலும் தலைப்பின் தொடர்ச்சி அடுத்தடுத்த பக்கங்களில் தமிழில் மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. பிற அனைத்தும் தமிழ், ஆங்கில மொழிகளில் முழுமையாக இடம்பெற்றுள்ளன. இந்நூல் முதற்பதிப்பில் 2000 பிரதிகள் தமிழகத்தில் அச்சிடப்பட்டு சர்வதேச விநியோகத்தின் ஓரங்கமாக கப்பல்வழியாக கனடாவுக்கு அனுப்பிவைக்கப் பட்ட போது, இலங்கைத் துறைமுகத்தில் தடுக்கப்பட்டு இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேமாதிரியான ஆவணமாக மற்றொரு நூலும் குறிப்பிடப்படலாம். *தமிழினப் படுகொலைகள் 1956-2008* என்ற இந்நூல் வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் என்ற அமைப்பினால் NESOHR சென்னையிலிருந்து மனிதம் வெளியீடாக 2009 இன் இறுதிப்பகுதிகளில் வெளியிடப்பட்டது. 360 பக்கங்களில் புகைப்படங்கள், அட்டவணைகள் சகிதம் இந்நூல் வெளிவந்துள்ளது. 1956 முதல் 2008 வரையிலான அரைநூற்றாண்டுக் காலகட்டத்தில் ஈழத்தமிழர்களின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப்படு கொலைகள் இப்பாரிய ஆவணத்தில் விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. 160க்கும் மேற்பட்ட படுகொலைகளின் சம்பவ விபரிப்பு, பாதிக்கப்பட்டோரின் புகைப்படங்கள், படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற பிரதேசங்களின் வரைபடங்கள், வீடுவீடாய் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்கள், படுகொலைக்கு உட்பட்டோரின் பெயர், வயது, தொழில் போன்றவை மிக விரிவாக அட்ட வணைப்படுத்தப்பட்டுள்ளது. 2009 இல் அயர்லாந்து- டப்ளின் நகரில் நடைபெற்ற படுகொலைகள் குறித்த மகாநாட்டில் நீதிபதிகளால்-நம்பிக்கைக் குரிய ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில நூலின் தமிழ்வடிவம் இதுவாகும். 1987-1989 காலகட்டத்தில் நிகழ்ந்த இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்காலப் படுகொலைகள் இந்தத் தமிழ்ப் பதிப்பில் தவிர்க்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் முடிவில் கடந்துவந்த பாதையில் நாம் மேற்கொண்ட தவறுகள் எதிர்காலத்தில் எவ்வாறு விடுதலைப்போராட்டம் முன்னெடுக்கப்படலாம் என்பன போன்ற கருத்துகள் பரவலாக ஊடகங்களில் ஆங்காங்கே வெளிவந்திருந்த போதிலும் அதனை ஒரு நூருலுருவில் முதலில் வெளியிட்ட வகையில் *வடிவங்கள் மாறலாம் போராட்டம் தொடரும்: ஒரு சமூகவியல் ஆய்வு* என்ற நூல் குறிப்பிடத்தக்கது. தமிழகத்திலிருந்து கைமண் என்ற புனைபெயரில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. லண்டனிலிருந்து மறுநிர்மாணம் என்ற சமூகவியல் ஆய்வு மையம் இந்நூலை 347 பக்கங்களில் ஜூலை 2011 இல் வெளியிட்டுள்ளது. ‘‘இயக்கம் என்பது

வெறுமனே ஒரு அல்லது சில தனிநபர்களோ நிறுவனங்களோ அல்ல. இயக்கத்தினதும், இயக்கத்தின் தலைமையில் அணிதிரண்டு போராடிய மக்களினதும் தியாகங்கள் என்றுமே வீண்போகாது, ஒடுக்கப்பட்ட மக்கள் அதை வீண்போக விடமாட்டார்கள். ஆழ்மனப்படிமங்கள் பௌதிக வடிவம் பெறும். புதிய தலைமை உருவாகும். போராட்டம் தொடரும்''- என்ற கருத்தை மையப்படுத்தி இந்நூல் ஈழவிடுதலைப் போராட்டத்தின் முள்ளி வாய்க்கால் வரையிலான ஆயுதப் போராட்டத்தின் முடிவின் பின்னையதான புதிய சிந்தனைக் கருத்துக்களை தர்க்கரீதியில் பதிவுசெய்கின்றது. அரசியல் காரணங்களுக்காக நூலாசிரியரின் இயற்பெயரும் வெளியீட்டு நிறுவனத்தின் முகவரியும் நூலில் பதிவுசெய்யப்படவில்லை. இந்நூல் யுத்தத்தின் உடனடிக் குறிக்கோள்கள், யுத்தகாலப் பேரழிவுகள், மகிந்த சிந்தனையும் பொருளாதாரக் கட்டுமானமும், இராணுவக் கட்டுமானமும் மகிந்த சிந்தனையும், மகிந்த சிந்தனையும் இராஜதந்திரமும் ஆகிய பிரிவுகளின்கீழ் ஆய்வுசெய்யப் பட்டுள்ளது.

Sri Lanka Killing Fields என்ற தலைப்பில் பிரித்தானிய தொலைக்காட்சி சேவைகளில் ஒன்றான Channel 4, 14.6.2011இல் 49 நிமிட ஆவணப்பட மொன்றை ஒளிபரப்பியிருந்தது. இலங்கையில் 2009 மே 17இல் முள்ளி வாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட ஈழவிடுதலைப் போராட்டத் தின் ஆயுதப் போரின் போது நிகழ்ந்த பொதுமக்களின் கொடுமையான அழிவு பற்றிய செய்தியை உலக அரங்கில் எடுத்துச்செல்ல இவ்வாவணப்படம் உதவியது. அவ்வாவணப்படத்தைத் தழுவி *சிறீலங்காவின் கொலைக்களம்: பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலையும் இன அழிப்பும்* என்ற தலைப்பில் மலேசியத் தமிழரான கா.ஆறுமுகம் என்பவரால் ஒரு நூல் வெளியிடப்பட்டது. முகிலன், புங்குழலி வீரன், சாமி. மூர்த்தி, வெ. முத்து, சி.ம. இளந்தமிழ், தி.பிரசன்னா ஆகியோர் தொகுப்பாளர்களாக இயங்கி இந்நூலை வெளிக்கொண்டுவந்தனர். கோலாலம்பூரில் இயங்கும் செம்பருத்தி அமைப்பினர் கடந்த பெப்ரவரி 2012 இல் இந்நூலை வெளியிட்டிருந்தனர். சிறிலங்காவுக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறீலங்கா அரசுக்கு ஆதரவாகக் குரல்கொடுக்கும் நாடுகளின் பட்டியலில் மலேசியாவும் இடம் பெற்றிருந்த நிலையில், மலேசிய அரசைத் தனது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யும்படி வலியுறுத்தும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கொலைகாரனுக்கு உடந்தையாக, ஏன் இந்தக் கொலைவெறி?, இனவாத

சிங்கள அரசும், தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையும், சிறீலங்காவின் கொலைக்களம், போர்க்குற்ற அறிக்கை: சுருக்கக் குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் ஏராளமான கறுப்பு-வெள்ளை புகைப்படங்களுடனான தரவுகளைக் கொண்டிருந்தது. 18 சதவீதம் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்த மலேசியா வாக்கெடுப்பில் சிறீலங்கா அரசுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துவந்த நிலையில், ஐ.நா. வாக்கெடுப்பின்போது, மனம் மாறி நடுநிலைமை வகிக்கத் தீர்மானித்தமைக்கு செம்பருத்தி அமைப்பினரின் இந்நூல் வெளியீடுசார்ந்த பாரிய முன்னெடுப்பும் ஒரு காரணமாகியது.

மலேசிய மண்ணில் இக்காலகட்டத்தில் வெளிவந்த மற்றொரு நூலும் ஈழத்தமிழர்கள் தொடர்பானது. *விடிந்தது ஈழம்: வரலாற்றுப் பதிவு* என்ற நூல் கொலாலங்கட் அ.ரெங்கசாமி அவர்களால் எழுதப்பட்டது. மலேசிய மண்ணின் பிரபல வரலாற்று நாவலாசிரியராகக் கருதப்படுபவர் ரெங்கசாமி. சிலாங்கூர் மாநிலத்தில் கோலலங்காட் என்ற இடத்தில் பிறந்தவர். ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரான இவர் 1950 முதல் ஓயாமல் எழுதி வரும் மலேசியப் படைப்பாளி. இவரது புதியதோர் உலகம், நினைவுச்சின்னம், லங்காட் நதிக்கரை, இமயத் தியாகம், ஆகிய நாவல்கள் மலேசிய வரலாற்றின் பல் வேறு கூறுகளை இலக்கியமாக்கியவை. மலேசியா, செம்பருத்தி பதிப்பகத் தின் மற்றுமொரு ஈழம்சார்ந்த வெளியீடாக விடிந்தது ஈழம் வெளிவந்துள்ளது. இந்நூல் மலேசியத் தமிழருக்கு ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு குறித்து மிக எளிய அறிமுகத்தைக் கொடுக்கின்றது. வரலாற்றுடன் மலேசியப் படைப்பிலக்கியவாதி அ.ரெங்கசாமி அவர்கள் விடுதலைப் புலிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் கைக்கொண்ட நிலைப்பாடுகள்மீது தனது கருத்தினையும் பதிவுசெய்கிறார். தனது கருத்துக்களைக் கட்டமைப்பதற்கு (அன்டன் பால சிங்கத்தின்) போரும் சமாதானமும், உண்மையின் தரிசனம் இணையத்தளம், (ஐ.தி.சம்பந்தனின்) கறுப்பு ஜூலை 1983 குற்றச்சாட்டு ஆகிய நூல்களையும் பல்வேறு பத்திரிகைச் செய்திகளையும் ஆதாரமாகப் பயன்படுத்தியுள்ளார். இந்நூல் ஈழத்தமிழர்பால் மலேசியத்தமிழரின் அண்மைக்கால அனுதாப அலைக்கு பின்னணித் தகவல்களை வழங்கக்கூடும்.

இலங்கையில் நடந்தேறிய நாலாம்கட்டப் போரின் சோக முடிவுக்குக் காரணமானவர்களை போர்க்குற்றவாளிகளாகப் பிரகடனம்செய்யும் அரசியல் முன்னெடுப்புகள் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில் 2009இலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. *இந்தியா-இலங்கை போரும் குற்றமும்: ஒரு பன்னாட்டுப் பார்வை* என்ற நூல் இத்தகைய முன்னெடுப்புகளின் நன்மை-தீமைகளை அலசுவதாக அமைந்துள்ளது.

தமிழகத்தவரான பவா சமத்துவன் என்பவரால் எழுதப்பட்டு, அவர் சார்ந் துள்ள சென்னை இந்திய சமூக நீதி ஊடக மையத்தின் வெளியீடாக நவம்பர் 2010இல் வெளியிடப்பட்டது.

இந்திய சமூக நீதி ஊடகமைய வெளியீட்டுத்தொடரில் இரண்டாவது வெளியீடாக வெளிவந்த நூல் இதுவாகும். இலங்கையில் நடந்த விடுதலைப் போரினை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இந்திய அரசுடன் இணைந்து இலங்கை அரசு எடுத்த இறுதிக்கட்ட நடவடிக்கை வடபுலத்தை கொலைக் களமாக்கியது. இந்நிலைமையை சர்வதேச ஊடகங்கள் எவ்வாறு காட்சிப்படுத் தின என்பதை இந்நூல் புகைப்பட ஆதாரங்களுடன் பதிவுசெய்கின்றது. பல்வேறு நேர்காணல்களிலும் செய்திகளிலும் இருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் புகைப்படங்கள் என்பவற்றினூடாக ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலையின் கொடூரத்தை நூலாசிரியர் இந்நூலின் வாயிலாகப் பதிவுசெய்யமுனைந் துள்ளார். சென்னை, இந்திய சமூக நீதி ஊடக மையத்தின் நிறுவனரான பவா சமத்துவன் அவ்வமைப்பின் தலைவருமாவார்.

மார்சுக்கி தாருஸ்மான் (இந்தோனேசியா) அவர்களைக் குழுவின் தலைவராகவும், ஸ்டீவன் ரத்னர் (ஐக்கிய அமெரிக்கக் குடியரசு), யஸ்மின் சூக்கா (தென் ஆபிரிக்கா) ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்டு 22.6.2010 அன்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கிமூன் அவர்களால் நியமிக்கப்பட்ட ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை 31.3.2011இல் நியூயோர்க்கில் வெளியிடப்பட்டது. பின்னர் தமிழக வாச கர்களுக்காக, தமிழகத்தின் அக்னி சுப்பிரமணியம் அவர்களால் இவ்வறிக்கை தமிழாக்கம் செய்யப்பட்டது. *போர்க் குற்றவாளி: இலங்கையில் போர்க் குற்றங்கள் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை* என்ற பெயரில் அது நூலுருவில் சென்னை மனிதம் வெளியீடாக, 2011இல் புகைப்படங்கள், அட்டவணைகள் சகிதம் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையின் தமிழாக்கம் இந்நூலின் பிரதான பகுதியாக பக்கம் 88-328 இல் இடம்பெற்றுள்ளது. இவ்வறிக்கை ஆணை,தொகுப்பு மற்றும் வேலைத்திட்டம்/ மோதலுக்கான வரலாற்று ரீதியிலான அரசியல் பின்னணி/ குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களின் சுபாவம் மற்றும் நோக்கு எல்லை/ குற்றச்சாட்டுக்களை சட்டரீதியாகச் சீர்தூக்கிப் பார்த்தல்/ பொறுப்புக்கூறல் பற்றிய இலங்கையின் அணுகுமுறை/ பொறுப்புக்கூறலுக்கான மேலும் தடைகள்/ முடிவுரைகள்/ பரிந்துரைகள் ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதல் 87 பக்கங்களும் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் ருத்ரகுமாரன், லண்டன் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இறைபணியாளர் எஸ்.ஜே.

இம்மானுவேல், லண்டன் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் ரெஜி, நிமல்கா பெர்னாண்டோ (கொழும்பு), பீட்டர் ஷால்க் (உப்சலா, சுவீடன்), இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் இரா.துரைரத்தினம், பிரைன் சௌவிரத்தின (அவுஸ் திரேலியா) ஆகியோரின் அணிந்துரைகளையும், தமிழீழம் மலருவதற்கான வாய்ப்பும் இராசபக்சே குழு, பன்னாட்டுகுற்றவியல் நீதிமன்றத்தால் தண்டிக் கப்படும் நேரமும் (அக்னி சுப்பிரமணியம்), ஐ.நா.இலங்கை இடை யிலானஅறிக்கை குறித்த மோதல் (டி.பி.எஸ்.ஜெயராஜ்), இலங்கையின் கொலைக்களம் சாட்சிகளற்ற யுத்தம் குறித்த மூன்று ஆவணப்பட சாட்சியங்கள் (யமுனா இராஜேந்திரன்), எமது மக்களது விடுதலையை வென்றெடுக்க ஐ.நா. வல்லுநர்குழு அறிக்கையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் (தங்கவேலு வேலுப்பிள்ளை) ஆகிய விரிவான கட்டுரைகளையும் கொண்டுள்ளன.

ஈழத்தமிழர்களின் நாலாம்கட்ட ஈழப்போர் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த கதையை சொல்வதற்கு வாழும் சாட்சியங்கள் எதுவும் இது வரை முன்வரவில்லை. சாட்சியங்களே இல்லாது அழிக்கப்பட்ட துயரம் அது. சக்திமிக்க வல்லரசுகளின் சற்றிலைட் கமராக்களைத் தவிர வேறு சாட்சியங்கள் எதுவுமே இராதோ என்ற ஏக்க நிலையில், அந்த வரலாற்றைப் பதிவுசெய்யும் வகையிலான இலக்கியங்கள் இன்றளவில் திருப்திகரமாக ஈழத்தில் உருவாகவில்லை. சுயதணிக்கைக்குட்பட்ட இனமாக நாங்கள் நீண்டகாலம் வாழப்பழகிவிட்டோம். அத்தகைய அபாயகரமான தணிக்கை எமது தியாக வரலாற்றின் சாட்சியங்கள் முற்று முழுதாக இல்லாதொழிக்கப் படும்வரை தொடர அனுமதிக்கக்கூடாது. முடிந்தவரை அவை அனைத்தும் ஆக்க இலக்கியங்களுக் கூடாகவோ, கட்டுரைகளின் வழியாகவோ ஆவணப் படுத்தப்படவேண்டும். ஏற்கெனவே எமது சமகால வரலாற்றின் பல்வேறு காலகட்டங்கள் இவ்வாறு இலக்கியங்களினூடாகப் பதிவுசெய்யப்பட்டு விட்டன. இந்திய அமைதிப்படையின் காலகட்டம், விடுதலைப் போராட்டக் காலகட்டம், பாரிய வலிகாமம் இடப்பெயர்வு, வடபகுதியில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடை என்பன இவ்வாறு இலக்கியங்களுள் பொதிக்கப் பெற்றுவிட்டன. அவ்வகையில் எதிர்காலத்தில் பல படைப்புகள் ஈழத்திலிருந்து உருவாக்கப்பட்டு உலகளாவிய தமிழர்களால் பதிக்கப்பெற்று ஆவணப் படுத்தப்படும் என்று நம்பி விடைபெறுகின்றேன்.

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்களுக்கான நூலியல் விபரங்கள்

இந்தியா-இலங்கை போரும் குற்றமும்: ஒரு பன்னாட்டுப் பார்வை. பவா சமத்துவன். சென்னை 600005: இந்திய சமூக நீதி ஊடக மையம், புது யுகம், 72/40 ஓ.வீ.எம்.தெரு, சேப்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2010. (சென்னை 14: சக்சஸ் எண்டர்பிரைசஸ்). 141 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

இரவுகளில் பொழியும் துயரப்பனி. தமிழ்நதி. சென்னை 600 024: ஆழி-பனிக்குடம் கூட்டுப் பதிப்பு, ஆழி பப்ளிஷர்ஸ், 12 முதல் பிரதான சாலை, யுனைட்டட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை: மணி ஆப்செட்). 104 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80244-15-0.

இருப்பும் விருப்பும். கி.பி.அரவிந்தன். சென்னை 600 091: சாளரம், 2/1758, சாரதி நகர், என்பீல்ட் அவென்யூ, மடிப்பாக்கம், 1வது பதிப்பு, ஜுன் 2009. (சென்னை: பொன்னி அச்சகம்). 143 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21x14 சமீ.

ஈதேனின் பாம்புகள். றஷ்மி. நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்). 88 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-74-4.

என்ன செய்யலாம் இதற்காக? ஜெ.பிரபாகரன். மதுரை 625020: பென்னிகுயிக் பதிப்பகம், 4/1411, செந்தில்நாதன் தெரு, தாசில்தார் நகர், 1வது பதிப்பு, அக்டோபர் 2010. (சிவகாசி 626 189: சபையர் ஆப்செட் பிரிண்டர்ஸ்). 216 பக்கம், வண்ணப்படங்கள், அட்டவணைகள், விலை: இந்திய ரூபா 500., அளவு: 30.5x22 சமீ.

சாம்பல் பறவைகள்: குறுநாவல். எஸ்.அரசரெத்தினம். கல்முனை: சத்தியா பப்ளிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு - 13: கௌரி அச்சகம்). xiv, 82 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

சிறீலங்காவின் கொலைக்களம்: பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலையும் இன அழிப்பும். கா.ஆறுமுகம் (ஆசிரியர்), மு.முகிலன், புங்குழலி வீரன், சாமி.மூர்த்தி, வெ.முத்து, சி.ம.இளந்தமிழ், தி.பிரசன்னா (தொகுப்பாளர்கள்). கோலாலம்பூர்: செம்பருத்தி பதிப்பகம், No.3, Jalan Yap Ah Shak, 50300 Kuala Lumpur, 1வது பதிப்பு, பெப்ரவரி 2012. (கோலாலம்பூர்: Visal Print Service, No.32-A, Jalan Padang Belia, Brickfields, 50470 Kuala Lumpur). viii, (4), 76 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: மலேசிய ரிங்கிட் 10.00, அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-983-43118-3-4.

தமிழினப் படுகொலைகள் 1956-2008. வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR. சென்னை 600 014: மனிதம் வெளியீடு, Manitham-Human Rights Organisation, 274-GC, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, 2009. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை). xxiv, 360 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: (நூலகப் பதிப்பு) இந்திய ரூபா 399., (சாதாரண பதிப்பு) இந்திய ரூபா 299., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-81-909737-1-7.

துரத்தும் நிழல்களின் யுகம். சித்தாந்தன் (இயற்பெயர்: சபாபதி உதயணன்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்). 62 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-95-9.

தோற்றுப் போனவர்களின் பாடல். வ.ஐ.ச. ஜெயபாலன். சென்னை 600 024: ஆழி பதிப்பகம், 12, முதல் பிரதான சாலை, யுனைட்டட் இந்தியா காலனி, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 600 005: மணி ஆப்செட்). (20), 21-104 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 22x14 சமீ., ISBN: 978-93-80244-17-4.

பாழ் நகரத்தின் பொழுது. தீபச்செல்வன் (இயற்பெயர்: பாலேந்திரன் பிரதீபன்). நாகர்கோயில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜூலை 2010. (சென்னை 60005: மணி ஓப்செட்). 96 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-89359-79-9.

புதுமாத்தளன் சோகங்களுக்கு புதுமருந்து. கி.செ.துரை (இயற்பெயர்: கிருஷ்ணன் செல்லத்துரை). டென்மார்க்: அலைகள் மூவீஸ் இன்டர்நெஷனல், Ny Mollevej 30, 7400 Herning, 1வது பதிப்பு, ஜூன் 2010. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்). 103 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

பெயரிடாத நட்சத்திரங்கள்: ஈழப் பெண் போராளிகளின் கவிதைகள். தொகுப்பாளர் விபரமில்லை. கோயம்புத்தூர் 6410015: விடியல் பதிப்பகம், 88 இந்திரா கார்டன், 4வது தெரு, உப்பிலிபாளையம், இணைந்து வெளியிடுவோர், சுவிட்சர்லாந்து: ஊடறு வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 2011. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்). 166 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ., ISBN: 978-81-89867-37-9.

போர்க் குற்றவாளி: இலங்கையில் போர்க் குற்றங்கள் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை. அக்னி சுப்பிரமணியம் (தமிழாக்கம்). சென்னை 600 006: மனிதம் வெளியீடு, Manitham-Human Rights Organisation, B 4-2/599 அண்ணா சாலை, 1வது பதிப்பு, 2011. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை). xxiv, 328 பக்கம், புகைப்படங்கள், அட்டவணைகள், விலை: இந்திய ரூபா 300., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-81-909737-2-4.

மேலும் சில இரத்தக்குறிப்புகள். எஸ்.மகாதேவன் (மலையாள மூலம்), குளச்சல் மு. யூசுஃப் (மொழிபெயர்ப்பு). தமிழ்நாடு: எதிர் வெளியீடு, 305 காவல் நிலையம் சாலை, பொள்ளாச்சி 642001, 1வது பதிப்பு, ஜூலை 2009. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை). 79 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5x14 சமீ., ISBN: 9789380211084.

வடிவங்கள் மாறலாம் போராட்டம் தொடரும்: ஒரு சமூகவியல் ஆய்வு. கைமண். லண்டன்: மறுநிர்மாணம், சமூகவியல் ஆய்வு மையம், 1வது பதிப்பு, ஜூலை 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை). (14), 333 பக்கம், வரைபடம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

விடிந்தது ஈழம்: வரலாற்றுப் பதிவு. அ.ரெங்கசாமி. மலேசியா: செம்பருத்தி பதிப்பகம், கோலாலம்பூர், 1வது பதிப்பு, ஜூன் 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை). 64 பக்கம், விலை: இலவசம், அளவு: 21x15 சமீ., ISBN 978-983-44618-2-9.

(மீள்பிரசுரம்: புவல்: உலகத் தமிழ் இலக்கிய மாநாடு 2012 சிறப்பு மலர். (க. இரகுபரன் (மலராசிரியர்). ஜின்னாஹ் ஷரிபுத்தீன், தி. ஞானசேகரன், தம்பு சிவசுப்பிரமணியம், வசந்தி தயாபரன், ப.க. மகாதேவா (மலர்க்குழு). கொழும்பு - 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், 1வது பதிப்பு, 2012. 354 பக்கம்.) ப.252-262.)

17

யாழ்ப்பாணம் சிவயோகர் சுவாமிகளைப் பற்றி ஈழத்தில் எழுந்த சில நூல்கள்

ஒரு நூலியல் பதிவு

29.05.1872 இல் இலங்கையின் வடபகுதியில், மாவிட்டபுரத்தில் பிறந்த யோகர் சுவாமிகளின் இயற்பெயர் சதாசிவம். யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்றவர். இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியக் காப்பாளராக கிளிநொச்சி இரணைமடுக் குளப்பகுதியில் பணியாற்றியவர். பின்னாளில் துறவறம் பூண்டு சிவயோக சுவாமிகளாகிப் பின்னர் மார்ச் 1964 இல் தனது 91 ஆவது வயதில் கொழும்புத்துறையிலுள்ள தனது ஆசிரமத்தில் அமரத்துவமடைந்தார்.

சிவயோக சுவாமிகள் பற்றியதான முதல் வெளியீடாகக் கொள்ளத்தக்கது நற்சிந்தனை என்ற தலைப்பிலான திருப்பாடல்களின் தொகுப்பாகும். கொழும்புத்துறைக் குருபரன் யோகசுவாமிகள் பாடியருளிய இச்செய்யுள்கள் முதன்முதலில் *நற்சிந்தனை* என்ற அதே தலைப்பில் சிவதொண்டன் சஞ்சிகையில் திங்கள் தோறும் வெளிவந்தன. நற்சிந்தனைச் செய்யுட்கள் ஞானப் பொக்கிஷங்களாகவும், வேதோபநிடத ஆகமசாரமாகவும் விளங்குவன என்று அந்நாளில் மாத்திரமல்ல இன்றும் மதிக்கப்பெற்று வருகின்றன. நற்சிந்தனை என்னும் பெயரோடு முதன்முதலாக வெளியான செய்யுள்கள் இவை எனலாம். இதற்கு முன்னர் இச்சொற்பிரயோகத்தை எவரும் இந்தக் கருத்துடன் கையாண்டதாகத் தகவல் இல்லை. பின்னர் இச்செய்யுள்கள் தொகுக்கப்பெற்று, நூலுருவில் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தாரால் ஸ்ரீலங்கா அச்சகத்தில் அச்சிடப்பெற்று 1959இல் முதலாவது பதிப்பாக வெளியிடப்பட்டது. பின்னர் இரண்டாம் பதிப்பு, முதற்பதிப்பில் சேர்க்கத் தவறிய செய்யுள்களை இணைத்து புதுக்கிய பதிப்பாக 1962இல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து 1974 இல் இதன் மூன்றாம் பதிப்பு, முன்னர் தவறவிடப்பட்ட யோகர் சுவாமிகளின் செய்யுள்களைச் சேர்த்து வெளியிடப்பட்டது. தொடர்ந்தும் நற்சிந்தனை நூல் இன்றளவில் பல பதிப்புகளைக் கண்டு வந்துள்ளன.

சிவயோக சுவாமிகளின் சித்தாந்தச் செழுமைபற்றி விளக்கும் மற்றுமொரு நூல் *சித்தாந்த சைவ நெறித் திறவுகோல்* என்பதாகும். யாழ்ப்பாணம் சர சாலையைச் சேர்ந்த ச. தியாகராசா அவர்கள் 1971 இல் எழுதியுள்ள இந்நூல் கொழும்பு, டோசன் வீதியிலிருந்து அருளொளி அச்சகத்தினால் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்திய தத்துவங்களின் சிறப்பினை ஒருங்கே கொண்டது தென்னாட்டில் எழுந்த சைவசித்தாந்த தத்துவம் என்பர். 12ம் நூற்றாண்டில் எழுந்த மெய்கண்டதேவரின் சிவஞானபோதம் என்ற நூலே சைவசித்தாந்த முதனூலாகும். யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை என்ற ஞானநூற் களஞ்சியமும் சைவசித்தாந்தத்தின் விளக்கமாகக் கருதப்படுகின்றது. யோகசுவாமிகளின் மெய்யன்பருள் ஒருவரான இந்நூலாசிரியர் சிவஞான சித்தியார், தேவாரத் திருமுறைகள் காட்டி நற்சிந்தனையின் போதனை சைவ சித்தாந்தமே என்பதை அழுத்தமாக எடுத்துரைக்கிறார். பொது அதிகாரம், உண்மையதிகாரம் ஆகிய இரு பிரிவுகளாக உருவாக்கப்பட்டுள்ள இந்நூலின் பொது அதிகாரத்தின்கீழ் பிராமண இயல், இலக்கண இயல் ஆகிய இரு பகுதிகளும், உண்மையதிகாரத்தின்கீழ் சாதனை இயல், பயனியல் ஆகிய பகுதிகளும் அடங்கியுள்ளன.

சிவயோகசுவாமிகள் யாழ்ப்பாணத்து மண்ணில் வழங்கிய நற்சிந்தனைகள், அலைகடல் தாண்டித் தமிழகத்திலும் பேசப்படுவதை *நற்சிந்தனைக் கீர்த்தனைகள்* என்ற நூல் புலப்படுத்துகின்றது. யாழ்ப்பாணம், சிவதொண்டன் நிலையம் 1982 இல் வெளியிட்டிருந்த இந்நூலில் சிவயோக சுவாமிகளின் 35 கீர்த்தனைகள் சென்னை, மாம்பலம் ஸ்ரீ ஓம்ஆனந்தாச்சிரமம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த தீர்த்த சுவாமிகள் அவர்கள் இயற்றியுதவிய சுர தாளக் குறிப்புகளுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யோகர் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை வழங்கும் நூல்களில் முக்கியமானதாகக் கருதப்படும் சில நூல்களை இனிக்காண்போம். *சிவயோக சுவாமியார் வரலாறு* என்ற நூலை மு.அருணாசலம் அவர்கள், கொழும்புத் துறை திருவடி நிலையத்தின் வாயிலாக 371 பக்கங்களில் எழுதியிருந்தார். பதிப்பித்த ஆண்டு விபரம் நூலில் குறிப்பிடப்படாதபோதும், இந்நூல் யாழ்ப் பாணம் ஸ்ரீலங்கா புத்தகசாலையினரால் பதிப்பிக்கப்பட்டிருந்தது என்ற தகவல் தரப்பட்டுள்ளது. சிவயோக சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற நற்சிந்தனையெனும் நல்லமுதத்தை மேற்கோள் காட்டி சைவ சித்தாந்தக் கருத்தினைத் தழுவி யோகசுவாமிகளின் சரிதத்தை ஆசிரியர் தெய்வீக மணம்கமழ இந்நூலில் வழங்கியுள்ளார். அருட்சக்தியின்பெருமை, திருவைந்தெழுத்தின் சிறப்பு, சித்தாந்த நன்நெறித் தத்துவங்கள், புராணங்களில் காணப்படும் வாழ்க்கை நெறிகள், சிவத்தொண்டின் மாட்சிமை, திருமுறைகள்

காட்டும் வாழ்வியல் கொள்கைகள் முதலாய பல விடயங்களை இந்நூல் தெளிவுபடுத்துகின்றது. இந்நூல் ஏழு இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவை கணேசர் தோத்திரம் (அப்பர் தாண்டகம் பாடினார், தூண்டுகோள் உரையும் வரலாறும்), பிறந்த திகதி (ஐந்தாண்டு விழா, அற்புதங்கள்), நற் சிந்தனை உருவாகிறது (ஆறு முகங்கள், தேவார திருவாசகமுதாயம், சோதியில் ஆழ்ந்த பின்னரே பதிகங்கள் பாடியுள்ளார், நற்சிந்தனை உருவாகிறது), வரலாறு (குருதீட்சை), சுழுமுனா நாடி திறத்தல், ஐந்தாண்டு விழா (இரண்டாவதாக அம்மை அப்பர் தரிசனம், நிர்விகல்ப சமாதி), ஓங்கார மேடையில் பயிற்சி (கதிர்காம யாத்திரை), யாழ்ப்பாணக் கோயில் கொண் டெழுதல் (கொட்டிலும் செல்லப்பாச் சாமியாரும், மகாசமாதி கொண்ட சேவை) ஆகிய இயல்களில் இந்நூல் விரிகின்றது.

சுவாமி சரிதம் என்னும் சிவயோக சுவாமிகள் திருச்சரிதம் என்ற நூல் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, பொன்னப்பா வீதியைச் சேர்ந்த க.கி. நடராஜன் அவர்களால் எழுதப்பட்டு, 1974ம் ஆண்டு மே மாதம், யாழ்ப் பாணம், ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் அச்சிடப்பெற்று வெளியாகியிருந்தது. பிரம்மஸ்ரீ சி.கணேசையரின் மாணவராகவிருந்து தமிழ்கற்றவர் செந்தமிழ்ச் சிரோமணி, பண்டித வித்துவான் க.கிநடராஜன் அவர்கள். இவர் யாழ்ப்பாணம், யோகர்சுவாமிகளின் பக்தனாக விளங்கியவர். சுவாமிகளின் பணிகளைப் போற்றும் சிவதொண்டன் நிலையம், சிவதொண்டன் பத்திரிகை, மற்றும் சிவதொண்டன் நிலையத்தில் இடம்பெறும் புராண படனங்கள் முதலானவற்றில் தீவிர பங்காற்றியவர். சிவதொண்டன் என்ற மாத இதழை மார்கழி 1934 இல் தொடங்கி நீண்டகாலம் வெளியிட்டு வந்தவர் என்ற பெருமையும் க.கி. நடராஜன் அவர்களுக்குண்டு. யோகர் சுவாமிகள் வரலாற்றை அவர் வாழ்ந்த 92 ஆண்டுகளிலும் நடந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த தாகச் செய்யுள்வடிவில் இந்நூலில் க.கி.நடராஜன் வழங்கியிருக்கிறார். இச் செந்தமிழ்ப் பாக்களில் பொருள்நயம், ஓசைநயம், சொல்நயம், சந்தச் சிறப்பு கள் என்பன சிறப்பாக அமையப்பெற்றுள்ளன.

க.கி. நடராஜன் அவர்கள் இயற்றிய மற்றுமொரு நூலான *சுவாமி பிள்ளைத் தமிழ்* என்ற நூல்பற்றியும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது. இந்நூலை யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம் ஜுன் 1969 இல் தனது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டுள்ளது. யோகர் சுவாமிகள் மீது தான் கொண்ட அதீத பக்தியால், அவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 1963இல் பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தச் செய்யுட்கள் இவை. இவை அவ்வப்போது சிவதொண்டன் இதழ்களிலும்

முன்னர் வெளியாகின. முழுமையான தொகுப்பாக பின்னர் சுவாமி பிள்ளைத் தமிழ் என்ற பெயரில் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது.

ஈழத்துச் சித்தர்கள் என்ற நூல் ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களால் சாவகச்சேரியிலிருந்து ஆத்மஜோதி நிலையப் பிரசுரமாக டிசம்பர் 1980இல் வெளியிடப்பட்டது. பின்னர் 1988 இலும் 1994 இலும் இந்நூல் மீள்பதிப்புச் செய்யப்பட்டது. (1994 இல் சென்னை குமரன் பதிப்பகம் வெளியிட்ட மீள்பதிப்பில் முதற் பதிப்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது). கடந்த காலங்களில் ஈழத்தில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் உள்ளிட்ட பதினாறு ஈழத்துச் சித்தர்களை இந்நூல் அறிமுகப்படுத்துகின்றது. யோகர் சுவாமிகள், கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், நவநாத சித்தர், பெரியானைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள், சடைவரத சுவாமிகள், ஆனந்த சடாட்சர குரு, செல்லாச்சி அம்மையார், தாளையான் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், சடையம்மா, நாகநாத சித்தர், நயினாதீவுச் சுவாமிகள் ஆகிய 16 சித்தர்கள் பற்றிய விரிவான வாழ்க்கை வரலாறு கட்டுரைவடிவில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1980ம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது.

சித்தயோக சுவாமிகள் என்ற நூல் திரு. தி. விசுவலிங்கம் அவர்களால் தொகுக்கப்பெற்று கனடா, சைவசித்தாந்த மன்றத்தினால் ஏப்ரல் 2003 இல் வெளியிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகள் பற்றி அன்புநெறி இதழ்களில் காலத்துக்குக்காலம் சமய அறிஞர்களால் எழுதப்பட்டு வெளிவந்த கட்டுரைகளையும், அன்புநெறி இதழின் ஆசிரியர் தலையங்கங்கள் சிலவற்றையும் வேறுசில கட்டுரைகளையும் தொகுத்துச் சிறுநூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. மொத்தம் 15 கட்டுரைகள் இதில் இடம்பெறுகின்றன. சிவயோகசுவாமிகளின் வாழ்வும் பணியும் அவர் காட்டிய வழிகளும் பல்வேறு பார்வைகளினூடாக இங்கு பதிவுபெறுகின்றன.

யோகர் சுவாமிகளின் பாற்கொண்ட பற்றுதல் காரணமாக, அக்காலகட்டத்தில் அவருடன் வாழ்ந்து பழகி அனுபவம்பெற்ற பல தமிழ்ப்பெரியார்கள் பின்னாளில் தமது மலரும் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டு அவற்றை நூல்களின் வாயிலாகப் பதிவுசெய்தும் வந்துள்ளார்கள். அவ்வகையில் *என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியார்* என்ற நூல் குறிப்பிடத்தக்கது. மானிப்பாய் லோட்டன் வீதியைச் சேர்ந்த மு.வைரமுத்து என்பவர் இதனை ஜுன் 1980இல் எழுதியிருந்தார். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம் இதன் அச்சுப்பொறுப்பை ஏற்றிருந்தது. பின்னர் இந்நூல் 1989இல் யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையினராலும் இரண்டாவது பதிப்பாக இதே நூல் வெளியிடப்பட்டிருந்தது.

காவி உடுத்திடாமல் கமண்டலம் எடுத்திடாமல் துறவுபூண்ட முனிபுங்கவர் யோக சுவாமிகள் வாழ்வையும் வாக்கையும் பற்றிய ஒரு சில குறிப்புகளே இந்நூல் எனலாம். 1974 இல் எழுதப்பெற்ற இக்கட்டுரைகள் 1980ஆம் ஆண்டிலேயே நூலுருவாகும் வாய்ப்புப் பெற்றிருந்தது. வைத்தீஸ்வரன் கோவிற் சந்தி, வெள்ளவத்தைக் கடற்கரை, அற்புதமான முதற் தரிசனம், சோதனையுஞ் சாதனையும், இல்லத்தில் அமைந்த வழிபாட்டறை, பிரபஞ்சம் இறைவன் மார்பில் ஒரு தங்கப் பதக்கம், சீர்திருத்தவாதியும் சவர்க்காரக் கட்டியும், எட்டிலும் எண்பதிலும், விடுவானேன் பிடிப்பானேன், மதியால் முடியாது, வேண்டுதல் வேண்டாமை இலாதார்க்குத் தட்டுப்பாடேது? துறவிக்கு உயர்வேது தாழ்வேது, கருணைக் களஞ்சியம், துறவிக்கு வேந்தனும் துரும்பு, தாயினும் நல்ல தலைவன், நூதனம் ஒன்றுமில்லை, குருபக்தி, யாத்திரை முடிந்த இடம், தவமும் தவமுடையார்க்கு, என் பிரார்த்தனை ஆகிய தலைப்புகளில் அமைந்த இருபது கட்டுரைகள் இந்நூலில் யோக சுவாமிகளின் வாழ்க்கையையும் பணிகளையும் பதிவுசெய்கின்றன.

எமது குருநாதர் சிவயோக சுவாமிகள் என்ற நூல், சரவணமுத்து கந்தையா என்பவரால் தொகுக்கப்பட்டு, கொழும்பு, மெய்கண்டான் நிறுவன வெளியீடாக 1965 இல் வெளியிடப்பட்டிருந்தது. இந்நூலில் எமது குருநாதர் என்ற தலைப்பில் சரவணமுத்து கந்தையா, ஸ்ரீ யோகர் சுவாமிகள் என்ற தலைப்பில் க.இராமச்சந்திரன், தோன்றாத் துணையாய் இருந்தனன் என்ற தலைப்பில், ஆத்மஜோதி நா.முத்தையா, யோக சுவாமிகள் என்ற தலைப்பில் எஸ்.இராமநாதன், யோகநாத வருக வருகவே என்ற தலைப்பில் இலந்தைக் குளத்தான், சிந்தனைத் துணுக்கு என்ற தலைப்பில் ஸ்ரீரங்கானந்த சுவாமிகள், குருநாதர் நினைப்பு என்ற தலைப்பில் கவியோகி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் எழுதிய ஏழு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. யோகர் சுவாமிகளின் மறைவின் ஓராண்டு பூர்த்தியைக் குறிக்குமுகமாக மெய்கண்டான் நிறுவனத் தின் இலவச வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டது.

சிவன் அடியான் என்ற பெயரில் ஒரு அடியார் எழுதி 1987இல் வெளி யிட்ட ஒரு நூல் *உயிர்க்குயிர்க் கடவுளாகிய சிவயோக சுவாமிகள்* என்ற நூலாகும். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த இந்நூல் செட்டியார் அச் சகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. தனக்கிருந்த சிவயோக சுவாமிகளுடனான தொடர்பு பற்றிப் பெருமிதம் கொள்ளும் சிவன் அடியான், அவரது பல்வேறு திருவிளையாடல்களைப்பற்றி அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகளும் சுவாமிகளின் சீடர்களும் கூறிய கருத்துக்களைத் தேடித் தொகுத்து, இந்நூலில் அவற்றைப் பதிவுசெய்திருக்கிறார்.

பண்டிதர் கே.என்.நவரத்தினம் என்பவர் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்துசென்று அவுஸ்திரேலியாவில் வாழும் ஒரு யோகர் சுவாமி பக்தர். *யூனியர் சீனியர்* என்ற பெயரில் அவர் விக்ரோரியா மாநிலத்திலிருந்து டிசம்பர் 1999 இல் ஒரு நூலை எழுதி, சென்னையிலுள்ள காந்தளகம் வெளியீட்டகத்தின் ஊடாக வெளியிட்டிருந்தார். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த அரும்பெரும் ரிஷியாக-மகானாகக் கண்டறியப்பட்ட கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளின் சிந்தனைகள் பற்றிய நூல் அது. தன் இளமைப் பருவத்தில் 1949ம் ஆண்டில் நூலாசிரியர் ஒருதடவை யோகசுவாமிகளைக் காணச் ''சும்மா'' செல்கிறார். அவரை உபசரித்த யோகர் சுவாமிகள், தன் கையிலிருந்த ஆங்கில மூலமான பகவத் கீதை நூலைச் சிறிது நேரம் உரத்து வாசிக்கப் பணிக்கிறார். பின்னர் சிறிது நேரத்தில் நூலை மீளப்பெற்றுக் கொள்கிறார் யோகர் சுவாமிகள். பின்னர் ஆசிரியரின் கல்வித் தகைமை பற்றிக் கேட்க- இவர் சீனியர் என்கிறார். உடனே சுவாமிகள், ''அப்போ நீ, யூனியர்-சீனியர் என்று அவரது காதில் உரக்க ஒலிக்க இரண்டு மூன்று முறை ஓதுகிறார். இந்த யூனியர்-சீனியர் (Junior-Senior = you near - see near சாமிப சாரூபம்- நீ அண்மித்து விட்டாய் - தரிசனம் காண்பாய்) என்ற மந்திரம் பின்னாளில் தன் வாழ்க்கையில் செய்துவிட்ட திருவருட்செயல்களை இந் நூலில் பண்டிதர் கே.என்.நவரத்தினம் விரிவாகக் கூறுகிறார்.

என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன் என்ற நூல் நாவலப்பிட்டி ஆத்மஜோதி சஞ்சிகையின் ஆசிரியரான நா.முத்தையா அவர்கள் கனடாவில் வாழ்ந்த வேளையில் கனடா, இந்து சமயப் பேரவையின் வாயிலாக ஒன்றாரியோ மாநிலத்தில், மே, 1999 இல் யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் 125வது ஜெயந்தி விழாவின் போது வெளியிடப் பட்டது. நூலாசிரியர் அமரர் நா. முத்தையா அவர்கள், யோகர் சுவாமிகளிடம் தான் பெற்ற ஞானஅனுபவங்களை இந்நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

தான் வாழும்போது, சிவயோக சுவாமிகளின் ஆன்மீக சிந்தனைகளில் திளைத்தவரான ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் சிவபதப்பேற்றின் (8.9.1995) நினைவாக கனடாவில் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் யோக சுவாமி களின் குருபூசை தின நிகழ்ச்சியின் போது 23.03.1997 இல் வெளியிடப்பெற்ற நூல், *சிவயோக சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளுக்கு அருளிய மணிமொழிகள்* என்பதாகும். கனடா, இந்துசமயப்பேரவை, மார்ச் 1997 இல் இந்நூலை வெளியிட்டிருந்தது.

யாழ்ப்பாணத்துச் சிவயோக சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளுக்கு அருளிய மணிமொழிகளின் தொகுப்பாக இது அமைகின்றது.

சிவயோக சுவாமிகள்: அன்பர்களின் அனுபவம். என்ற தலைப்பிலான நூல் விமலா கிருஷ்ணபிள்ளை அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, கொழும்பு, சிவயோக சுவாமிகளின் திருவடி நம்பிக்கைப் பொறுப்பு அமைப்பினால் ஆவணி 1998 இல் வெளியிடப்பட்டிருந்தது. சிவயோக சுவாமிகளின் அன்பர்களின் உள்ளங்களில் சுவாமியின் நினைவுகள் இன்றும் பசுமையாக உள்ளன என்பதை இந்நூல் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. அவர்கள் பெற்ற அரிய அனுபவங்கள் பற்றிய மனப்பதிவுகள் இந்நூலில் விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை சமாதான நீதவானாகவும், சத்திய மொழிபெயர்ப்பாளராக வும் பணியாற்றிய க. இராசரத்தினம் கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்தவர். *யோக சுவாமிகளும் கிளிநொச்சியும்: ஒரு ஆன்மீக யாத்திரை* என்ற நூலை இவர் நொவெம்பர் 2004 இல் எழுதியிருந்தார். கிளிநொச்சி, ஜெயந்தி நகரிலுள்ள மகாதேவா ஆச்சிரமமும், கிளிநொச்சி, வன்னேரிக்குளத்திலுள்ள யோகர் சுவாமிகள் முதியோர் இல்லமும் இணைந்து இந்நூலை வெளியிட்டிருந்தன. இந்நூலில் இடம் பெற்றுள்ள பல்வேறு வகைக் கட்டுரைகளுள் ஒன்றான யோக சுவாமிகளும் கிளிநொச்சியும் என்ற கட்டுரையின் தலைப்பையே இந்நூலுக்கும் ஆசிரியர் வழங்கியிருக்கிறார். முதல் 32 பக்கங்களில் பல்வேறு ஆன்மீக, கல்வியியல், நிர்வாகத்துறைப் பிரமுகர்களின் ஆசியுரைகள் வாழ்த்துரைகள் அணிந்துரைகளுடன் தொடங்கும் இந்நூலில், எஞ்சிய 140 பக்கங்களிலும் யோக சுவாமிகளும் கிளிநொச்சியும், யோகசுவாமிகள் பாடியருளிய நற்சிந்தனைப் பாடல்களும் திருமுகங்களும், காயத்திரி மந்திர மும் பதவிளக்கமும், சிவத்தொண்டரும் திருத்தொண்டரும் நாடும் ஈழத்து நற்றமிழ் நாட்டு ஞானப் பொக்கிஷங்களில் சிலர் (இது சிவத்தொண்டன் மலர் 22(01) இன் மீள்பதிப்பு), கனடா ஆர்.கிருஷ்ணபிள்ளையின் கட்டுரை யான மௌனம், கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகள் (கனடா ஆர்.கிருஷ்ண பிள்ளையின் ஆங்கிலக் கட்டுரை), இந்திய ஜனாதிபதி மாண்புமிகு ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, ஆழ்மனத் தியானத்திலிருந்த வேளை கண்டுபிடிப்பினைச் செய்தேன்-பாங்கொக் சத்தியசாயி பல்கலைக் கழகத்தின் தலைவரும் நாஸா விஞ்ஞானியுமான கலாநிதி ஆர்ற் ஓங் ஜூம் சாய், ஆத்ம விசாரத் துணுக்கு ஆகிய ஆக்கங்கள் இந்நூலில் மேலதிகமாக இடம்பெற்றுள்ளன.

எங்கள் ஆசான் அருள்மொழிகள்: யோக சுவாமிகள் தம் அன்பர் களுக்குக் கூறியவை என்ற நூல் மார்ச் 1976இல் வெளிவந்தது. யாழ்ப்பாணத்துச் சிவயோக சுவாமிகள் தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு உபதேசித்தருளிய அருள்மொழிகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. சுவாமியுடன் கூடி

வாழ்ந்த காலங்களில் தொகுப்பாசிரியரும் வேறு சில அணுக்கத் தொண்டர் களும் நேரில் கேட்டனவும், பல பழைய அன்பர்களால் தெரிவிக்கப்பட்ட வையுமாகிய சுவாமிகளின் அருள்மொழிகளே இவை. கிழக்கு மாகாணம், செங்கலடியில் உள்ள சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த அ.செல்லத்துரை என்பார் தொகுத்தளித்த இந்நூல் சுவாமிகளின் 22ஆவது குருபூசை நினைவு வெளியீடாக 22.3.1986 அன்று இரண்டாவது பதிப்பாகவும் வெளியிடப்பட்டது.

மட்டக்களப்பு சிவதொண்டர், அ. செல்லத்துரை அவர்கள் 1991 இல் வெளியிட்டமற்றுமொரு நூல் யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும் என்பதாகும். ஆசான் அருளால் ஆசானாயினார், அப்பனும் அடியார்களும், ஞானத்தின் திருவுருவும் நமையாண்ட அருள் உருவும், சிவதொண்டு ஆகிய நான்கு பிரிவுகளின்கீழ் இந்நூல் யோக சுவாமிகளின் ஆன்மீக வாழ்வைப் பதிவுசெய்கின்றது.

இவற்றைவிட பல கல்வெட்டுகளிலும், சைவ சமயப்பாடல்திரட்டுகளிலும் யோகர் சுவாமிகள் பற்றிய விடயங்களும், அவரது நற்சிந்தனைகளும், அடியார்களின் அனுபவங்களும் காணப்படுகின்றன. அமரத்துவமடைந்த யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த திருமதி கமலேஸ்வரி கணேசலிங்கம் (19.02.1951- 13.03.2005) அவர்களின் நினைவாக அவரது சிவபதப்பேற்றின்போது வெளிவந்த *பரிமளத் திரட்டு* என்ற 258 பக்க நூல் பற்றி இங்கே குறிப்பிடப்படலாம். அவரது கணவர், சு.கணேசலிங்கம், மகள் க. தாக்ஷாயினி இருவரும் தொகுத்து சென்னை, திருவான்மியுரிலிருந்து ஏப்ரல் 2005 இல் இந்நூல் வெளியிடப்பட்டது.

விநாயகர் கவசம் முதல் யோகர் சுவாமிகள் பாடல்கள் வரை 29 தலைப்புக்களில் திருமுறைகளையும், தோத்திரப்பாடல்களையும் கொண்ட பாரிய தொகுப்பு இதுவாகும். இத்தகைய கல்வெட்டுகளில் யோகர் சுவாமி களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு, அடியார் அனுபவம், நற்சிந்தனைப் பாடல்கள் எனப் பல்வேறு அம்சங்களின் வாயிலாகவும் சிவயோகர் சுவாமி களின் நினைவுகள் சாதாரண மக்கள் மத்தியிலும் இன்றும் பேணப்பட்டு வருவது அவர் இன்னும் எம் நெஞ்சங்களில் குடியமர்ந்துள்ளார் என்பதையே காட்டுகின்றது.

சுவாமிகள் பற்றி ஆங்கிலத்திலும் சில நூல்கள் வெளிவந்துள்ளன. Songs and Sayings of Yoga Swami என்ற நூல் சிவதொண்டன் நிலைய வெளியீடாக வந்த ஆங்கில நூல்களுள் முக்கியமான ஒன்றாகும். இது 1974 இல் வெளிவந்தது. Tamil Sages and Seers of Ceylon என்ற நூல் அமரர் வி.முத்துக் குமாரசுவாமி அவர்களால் 1971 இல் எழுதப்பட்டது. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தம்பிரான், 1865-1949 காலப்பகுதியில்

வாழ்ந்த உலகணம் சுவாமி (Ulahanam Swamy) என்ற முத்துக்குமார தம்பிரான், ஆகியோருடன் 1871-1964 காலப்பகுதியில் வாழ்ந்து மறைந்த நமது சிவ யோகர் சுவாமிகள் பற்றியும் அவர்களது வாழ்வும் பணிகளும் பற்றி இந்நூல் விரிவாக விளக்கியுள்ளது.

அண்மைக்காலங்களில் தகவல் தொழில்நுட்ப நவீன வளர்ச்சியினால் இணையத்தளங்கள் பல உருவாகியுள்ளன. யோகர் சுவாமிகளின் பெயரிலும் அவரது அடியார்களால் பல தளங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப் பாணம் சிவதொண்டன் நிலையத்தின் இணையத்தலும் அவர்களது அண்மைக் கால வெளியீடுகளைக் காண முடிகின்றது.

(இக்கட்டுரை தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்க: nool-thettam.ns@gmail.com)

(இந்து ஒளி: சிவயோக சுவாமிகள் 50 ஆவது குருபூசை சிறப்பிதழ்.
கொழும்பு: அகில இலங்கை இந்து காங்கிரஸ்,
ஏப்ரல், 2014 தீபம் 18 (சுடர் 4), 10.4.2014: ப.39-42.)

நூல் மதிப்பீடுகள்

18

மேழிக் குமரனின்
‘காலடிச் சுவடுகள் இளவாலைக் குறிப்பேடு’

Nostalgia- a wistful desire to return in thought or in fact to a former time in one's life, to one's home or homeland, or to one's family and friends; a sentimental yearning for the happiness of a former place or time: a nostalgia for his college days.

தமிழ் இலக்கியத்தில் பல்லாண்டு காலமாக ஊரின் சிறப்புப் பற்றிக் கூறும் வழக்கம் இருந்து வருகின்றது. பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி முதலிய சங்ககால நூல்கள் நகர்கள் பற்றிக்கூறுவனவாகும். ஊரின் அமைப்பு, மக்களின் தொழில்வளம், பழக்க வழக்கங்கள், பண்பாட்டுச் சிறப்பு ஆகியவை பற்றிய பல செய்திகளை இந்நூல்கள் வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. சிற்றிலக்கிய வகைகளான ஊர் விருத்தம், ஊர்வெண்பா என்பனவும் ஊரின் வரலாறு கூறுவனவே. பாட்டுடைத்தலைவன் வாழ்ந்த ஊரின் சிறப்பினை பத்து ஆசிரிய விருத்தங்களால் சிறப்பித்துப் பாடப்பெறுவது ஊர்விருத்தம் என்பர். ஊரினைப் பத்து வெண்பாக்களால் சிறப்பித்துக் கூறுவது ஊர் வெண்பா எனப்படுகின்றது. இத்தகையதொரு தமிழர் இலக்கியப் பாரம்பரியத் தின் வழியாக மற்றுமொரு புதிய பரிமாணத்தை புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் தொடர்ந்துவருகிறார்கள்.

தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து முன்னர் அறிந்திராத வேற்று நாடொன்றில் வாழ முற்படும் எவருக்கும் Nostalgia என்னும் அலைந்துழல்வு என்ற உளவியல் தாக்கம் ஏற்படவே செய்யும். இத்தாக்கம் தரும் துயரத் திலிருந்து தற்காலிகமாகவேனும் விடுபட உதவும்வகையில், எமது உறவு

களையும் தொடர்புகளையும், பேணிக்கொள்வதற்கும், எமது இனத்துவ அடையாளங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், தாம் புகுந்த நாடுகளில் எமது கலை கலாச்சாரங்களை ஓரளவுக்காவது உயிர்ப்புடன் வைத்துக் கொள்வதற்கும் பல்வேறு பிரயத்தனங்களை நாம் மேற்கொண்டு வருகின் றோம். அவற்றின் ஒரு அங்கமாகவே புலம்பெயர்ந்த நாடுகளில் ஊர்ச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், என்பன உருவாக்கப்படுகின்றன.

அதன்வழியில் நாம் கண்ட மற்றொரு பரிமாணம் தான் எமது தாயக மண்ணில் நாம் வாழ்ந்து அனுபவித்த உணர்வுகளை எழுத்தில் வடிப்ப தென்பதாகும். ஈழத்தின் வடபுலத்தின் அழகிய சிறிய ஊரான இளவாலைக் கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்து ஜேர்மனியில் சோஸ்ற் நகரில் இருபதாண்டுகளுக்கும் மேலாக வாழும் மேழிக்குமரன் க. அருந்தவராஜாவின் *காலடிச் சுவடுகள்: இளவாலைக் குறிப்பேடு* என்ற நூலும் அவ்வகைப் பட்டதே. ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக தாய்நிலம், ஆன்மாவின் வாசனை ஆகிய கவிதைத் தொகுதிகள் இரண்டும், தாலி என்ற சிறுகதைத் தொகுப்பும், நலமாய் வாழ என்ற உணவியல்சார் சுகாதார நூலும், ஜேர்மன் தமிழர் வரலாறு என்ற புலம்பெயர் வரலாற்று நூலும் உள்ளடங்கியதாக இவரது ஆறு நூல்கள் 2012 டிசம்பரில் வெளியிடப்பட்டுள்ளன. ஜேர்மன் தமிழர் வரலாறு என்ற நூல்பற்றித் தனியானதொரு பதிவினை பின்னர் மேற்கொள்ளவிருக்கிறேன். மேற்குறிப்பிட்ட ஆறு நூல்களிலும் எனது சிந்தனையைத் தூண்டிவிட்ட நூல் என்ற வகையில் இளவாலைக் குறிப்பேடு பற்றிய எனது பதிவுகளே இக்கட்டுரையாகும்.

ஜேர்மனியில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஜேர்மன் தமிழ் கல்விச் சேவையில் இணைந்து நாவலர் தமிழ் பாடசாலைமூலம் புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறார்களின் தமிழ்வளர்ச்சிக்கு உதவிவருபவர் க.அருந்தவராஜா. சுவிஸ் நாட்டிலுள்ள முருகானந்தா தமிழ்ப் பாடசாலை, ஹரே கிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை ஆகியவற்றின் ஆலோசகராகவும் பணியாற்றுபவர்.

தன் நினைவுகள் மங்கி மறையும் முன்னதாகத் தன் மனத்துள் பொதிந் திருக்கும் தனது தாயக நினைவுகளைப் பதிவுசெய்துவிடவேண்டும் என்ற உணர்வில் இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். இளவாலையின் சமூக வரலாற்றின் ஒரு பகுதி ஆசிரியரின் காலடிச்சுவடுகளின்வழியாக இங்கு பதிவாகின்றது. தன்னையும், தான் வளர்ந்த சமூகப் பின்புலங்களையும், தன்னோடு சமகாலத்தில் வாழ்ந்தவர்களையும் மனக்கண்முன் கொண்டுவரும் ஆசிரியர், ஒல்லுடை ஞானவைரவர் கோயில், காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையம், மெய்கண்டான் மகா வித்தியாலயம் என்பவற்றைச்

சுற்றியுள்ள தனது நினைவுகளையும் மீட்டெடுக்கிறார். நானும் எனது ஊரும், நானும் எனது கோயிலும், நானும் எனது பாடசாலையும், நானும் எனது வாசிகசாலையும், நானும் எனது நினைவில் நிற்பவர்களும், ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.

இளவாலையில் ஒரு சிற்றூர் இவர் தவழ்ந்து வளர்ந்த காடிவளை. காடிவளை என்ற ஊர்ப்பெயர் பற்றிய ஆய்வுடன் தனது காலடியை கிராமத்து நினைவுகளில் முதல் பதியம் வைக்கும் ஆசிரியர், பின்னர் அவ்வூர் வரலாற்றை, அந்த விவசாய மண்ணின் விளைச்சல்களை நம்முன் காட்சிப் படுத்துகின்றார். தம்மூரின் இரவுப்பாடகராகப் பவனிவந்த பெரியண்ணையையும் அவரது அகால மரணத்தையும் நினைவுகூர்கிறார். கவுணாவத்தை வேள்வியின் விபரிப்பு மனதை நெருடுகின்றது. நாதோலை அம்மன் ஆலயம், கீரிமலை, சேந்தான்குளம் என்று அண்டைப் பிரதேசங்களும் இவரது நினைவுத் தடங்களில் ஊடாடும் சம்பவங்களுடன் தொடர்பு பட்டுப் பதிவுக்குள்ளாகின்றன.

நானும் எனது கோயிலும் என்ற இரண்டாவது இயலில் இவர் தனது இஷ்டதெய்வக் கோவிலான ஒல்லுடை ஞானவயிரவர் கோவில் பற்றிய விபரங்களைச் சுவையாகத்தருகிறார். கோவில் தொடர்பான சில சம்பவங்களும் இவரது பதிவில் இடம்பெறுகின்றன. இவ்வாறே ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயம் பற்றியும் இவரது பதிவு இப்பிரிவில் இடம்பெற்றுள்ளது.

நானும் எனது பாடசாலையும் என்ற பிரிவில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர்மடப் பாடசாலை என்பன பற்றியும் அவற்றில் கற்பித்த ஆசிரியர்கள், சக மாணவர்கள் பற்றியும் சுவையான அனுபவங்களுடன் இரைமீட்டுள்ளார்.

நானும் எனது வாசிகசாலையும் என்ற பிரிவில் காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையம் பற்றிய குறிப்புக்களை இவர் வழங்கியுள்ளார். ஈழத்தில் சனசமூகநிலையக் கலாச்சாரம் என்பது தனித்துவமானது. ஈழத் தமிழர்களின் வாசிப்பு அபிவிருத்திக்கும் அறிவியல் தகவல் தேடலுக்கும், தாங்கொணாத அறிவுப்பசிக்கும் இந்தக் கட்டமைப்பு ஒரு கால கட்டத்தில் பாரிய பங்கினை வழங்கியிருந்தது. பின்னாளில் பெயர்பெற்ற ஈழ விடுதலைப்போராளிகளின் ஆரம்பகால வளர்ச்சியில் இச்சனசமூகநிலையங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. 80களின் ஆரம்பத்தில் புங்குடுதீவு, சர்வோதய நிலையத்தின் அனுசரணையுடன் நான் மேற்கொண்ட வடபுல சனசமூக நிலையங்களின் கணக்கெடுப்பின்போது யாழ்ப்பாணக் குடா

நாட்டில் மாத்திரம் 385 சனசமூக நிலையங்கள் தீவிரமாக இயங்கி வந்திருந்ததைப் பதிவாக்க முடிந்தது. பின்னாளில் பாதுகாப்பு, போர்ச் சூழல்களால் சனசமூகங்களின் இருப்பு, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது.

காலடிச் சுவடுகள்: இளவாலைக் குறிப்பேடு என்ற நூலில் நானும் எனது நினைவில் நிற்பவர்களும் என்ற இறுதிப் பிரிவில் தான் நினைவில் வைத் திருக்கும் சிலரின் பெயர்களையும் அவர்களுடனான சுவையான அனுபவங் களையும் மேழிக்குமரன் பதிவுசெய்கின்றார். முதலில் தன் தந்தையையும், அவரது ஆழ்ந்த நட்புக்குரிய ராமனையும் தாயையும் நினைவுகூர்ந்தபின்னர், செல்லத்துரை அண்ணை, தம்பு அண்ணை, லங்கா அண்ணை, சி. வாமதேவன், க. இராசேந்திரம், சி. நாகேஸ்வரன், ஆ. நடராஜா, சி. மகேந்திரராசா, நா. வரதராஜா, வே. தருமராஜசிங்கம், நா. அருந்தவராசா, பொ. துரைராஜா, செ. நாவரசன், சாந்தி நாவுக்கரசன், தையமுத்து தம்பு, சி. கார்த்திகேசு ஆகியோர் பற்றிய குறிப்புகளை இவர் வழங்கியுள்ளார். இவர்களிடையே நாமறிந்த இளவாலைப் பிரமுகர்கள் இலக்கியவாதிகள் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. மேழிக்குமரனின் தேர்வு எல்லைக்குள் இவர்கள் அடங் காதவர்களாக இருந்திருக்கலாம். அல்லது அவருடன் தொடர்புபட்டிராதவர்களாக இருந்திருக்கலாம். இளவாலை என்றதும் எமது மனக்கண்ணில் நிழலாடுபவர்கள் அமரர் இளவாலை அமுதுப்புலவர் (அடைக்கலமுத்து அமுதசாகரன்), இளவாலை விஜயேந்திரன், வானொலிக்கலைஞர் சந்தியாப்பிள்ளை யேசு ரத்தினம் (முகத்தார் ஜேசுரத்தினம்) ஆகியோர். ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்'' என்ற திருக்குறள்மொழிக்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள். இளவாலைக் குறிப்பேட்டில் இவர்கள் பதிவுறாதது துர்அதிர்ஷ்டமே.

நூலின் இறுதியில் இளவாலையில் உள்ள சைவ ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பாடசாலைகள், சிற்றூர்கள் ஆகியவற்றின் பட்டியலொன்றும் இணைக்கப்பட்டுள்ளது. மேழிக்குமரன் தனது நூலை எழுதுவதற்குச் சில நூல்களைத் துணையாகக் கொண்டுள்ளார். மட்டுவில் ஆ.நடராசாவின் ஒல்லுடை ஞானவயிரவர் ஆலய வரலாறு, ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு ஆகிய நூல்களும், நித்திய கல்யாணி- இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலையப் பொன்விழா மலர், இளவாலை மெய்கண்டான் வித்தியாலய பவளவிழா மலர், நடுவூர்ப் பழுத்த மரம்: இளவாலை மெய் கண்டான் வித்தியாலயம் ஆகிய நூல்களையும் சில இணையத்தளங்களையும்

இவர் குறிப்பிட்டுள்ளார். இவைதவிர மேலும் சில நூல்களும் இளவாலை தொடர்பாக வெளிவந்துள்ளன.

இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை. சிவயோகமதி கந்தவனம். நியூசிலாந்து: இளங்கோ ஆறுமுகம், 101, Epuni Street, Lower Hutt, Wellington, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48 B, புளுமெண்டால் வீதி). xxx, 142 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 22x14.5 சமீ.

இளவாலை புனித அன்னம்மாள் ஆலய வரலாறு: 1846-2001. அடைக்கலமுத்து அமுதசாகரன் (புனைபெயர்: இளவாலை அமுது). இளவாலை: புனித அன்னம்மாள் ஆலயம், 1வது பதிப்பு, நவம்பர் 2001. (இலண்டன்: செல்வம் அச்சகம்). xii, 46 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 27.5x20.5 சமீ.

மேற்குறிப்பிட்ட இரு நூல்களும் பின்னாளில் மேழிக்குமரனின் தேடல்களுக்குப் பயனுள்ளவகையில் உதவலாம்.

புலம்பெயர்ந்த தமிழர்களினால் மண்வாசனை கமழும் நினைவுச்சரங்கள் பல நூலுருவில் புகலிட நாடுகளில் பரவலாக வெளிவந்தவண்ணம் உள்ளன. டென்மார்க்கிலிருந்து வேலணையூர் பொன்னண்ணாவின் பனிமலை தாண்டிய பாதச் சுவடுகள், கனடாவிலிருந்து ஆழ்கடலான் முருக. வே. பரமநாதனின் எங்களூர் வல்லிபுரம்: ஒரு தேடல், இரு பாகங்களில் வெளிவந்த செல்லையா செந்திலாதனின் பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம், லண்டனிலிருந்து நாக. சிறிகெங்காதரனின் வயற்காற்று (தெல்லிப்பழைக் கிராமம் பற்றிய நூல்), பாரிசிலிருந்து வண்ணை தெய்வம் எழுதிய யாழ்ப்பாணத்து மண்வாசனை, அவுஸ்திரேலியாவிலிருந்து சிசு நாகேந்திரனின் அந்தக் காலத்து யாழ்ப்பாணம், பிறந்த மண்ணும் புகலிடமும் ஆகிய நூல்களின் வரிசையில் மேழிக்குமரன் க.அருந்தவராஜாவின் காலடிச் சுவடுகள்: இளவாலைக் குறிப்பேடு என்ற நூலும் ஈழத்தவரின் தாயக மண்வாசனையின் பிரதிபலிப்பாக வெளிவந்த மற்றுமொரு நல்ல நூலாக வரலாற்றுப்பதிவில் இடம்பெறும்.

(ஞாயிறு தினக்குரல், 12.8.2012:ப.31.)

19

சிவ. தியாகராஜாவின் 'புராதனகால இலங்கையும் பூர்வீக மக்களின் பண்பாடும்'

இலங்கையின் புராதன வரலாற்றைப் புரட்டிப்போடும் புதியதொரு ஆய்வு நூல்

தற்போது நடைமுறையிலிருக்கும் இலங்கையின் அதிகாரபூர்வமான வரலாறு தீபவம்சம், மகாவம்சம் ஆகிய பாளி நூல்களை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டது. வட இந்தியாவிலிருந்து பெருந்தொகையாக இடம்பெயர்ந்த ஆரியமக்களின் வம்சாவளியினரே இந்நாட்டின் சிங்கள-பௌத்த சமூகத்திற்கு வழியமைத்தவர்கள் என்று அது கூறுகின்றது. இலங்கையில் வாழும் தமிழர்கள் பின்னாட்களில் தென்னிந்தியாவிலிருந்து வந்த குடியேற்றங்களின் சந்ததி யினரே என்றும் அது கூறி வருகின்றது.

இந்த மகாவம்ச சிந்தனையைத் தலைகீழாகப் புரட்டிப்போடும்வகையில் லண்டனிலிருந்து ஆங்கில மொழியில் ஒரு நூலை கலாநிதி சிவ. தியாகராஜா எழுதியுள்ளார்.

கலாநிதி சிவ.தியாகராஜா உயிரியல், மருத்துவம், மனோவியல், தொல்லியல் ஆகிய வேறுபட்ட பல துறைகளில் பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்றவர். பின்னர் பிரித்தானியாவில் மனநோய் மருத்துவ ஆலோசகராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார். இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இன்று அழிந்துபோய்விட்ட கட்டுவன் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் சென்ற் ஜோன்ஸ் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் 1963இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் (Biology) B.Sc பட்டத்தையும், 1969இல் கொழும்பு மருத்துவக் கல்லூரியின் MBBS வைத்திய கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

1971இல் டாக்டர் தியாகராஜா எழுதிய "A Hundred years of Darwinism" (டார்வினின் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தின் நூறு ஆண்டுகள்) என்ற

கட்டுரை புகழ்பெற்ற Science Today (April 1971) விஞ்ஞான சஞ்சிகையில் வெளியானது.

வைத்திய பட்டதாரிப் படிப்பை முடித்தபின் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு வைத்தியசாலைகளில் பணியாற்றினார். 1975-1979 ஆம் ஆண்டுக் காலங்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ''யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கண்ட சினைப்பைக்கு வெளியிலேற்பட்ட கர்ப்பத்தரிப்பு - ஒரு நான்கு ஆண்டுகால மேலாய்வு'' என்ற வைத்திய ஆய்வை மேற் கொண்டார். (Ectopic Pregnancy at the Jaffna General Hospital- a four year study) இலங்கையில் முதல்தடவையாக மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மருத்துவ ஆய்வுக்காக பிரசித்திபெற்ற டாக்டர் கிரீன் நினைவுப்பரிசை (Dr.Green Memorial Prize) கலாநிதி சிவ.தியாகராஜா பெற்றுக்கொண்டார். மருத்துவத்துறையின் மேம்பாட்டிற்கான தரவுக்காக வழங்கப்படும் இப்பரிசு பல ஆண்டுகளுக்கொரு தடவையே வழங்கப்படு கின்றது. இந்த ஆய்வு ஜனவரி 1980 இல் வெளியான யாழ்ப்பாண மருத்துவ சஞ்சிகையில் (Jaffna Medical Journal Vol xv,1980, No.1) பிரசுரமாகியுள்ளது.

1983ஆம் ஆண்டில் இலங்கையில் பூதாகாரமாக வெடித்த இனக் கலவரங்களைத் தொடர்ந்து பிரித்தானியாவுக்குத் தனது குடும்பத்துடன் இடம்பெயர்ந்த டாக்டர் தியாகராஜாவுக்கு 1992 இல் இலண்டன் பல்கலைக் கழகத்தின் மனநோய் மருத்துவப் பட்டதாரிப் பட்டம் கிடைத்தது. தொல்லியல், வரலாறு, மரபணுவியல்ஆகிய துறைகளில் கொண்ட ஆர்வத்தினால் 1999 முதல் சஸ்ஸெக்ஸ் பல்கலைக்கழகத்திலும் இலண்டன் கிங்ஸ் கல்லூரியிலும் பயின்று வந்த இவர் 2003 இல் சமர்ப்பித்த ''தமிழ்மக்களின் தோற்றமும் பாரம்பரிய வேறுபாடுகளும்'' (The Origins of Tamil People and some inherited Disorders) என்ற ஆய்வுக்கு தத்துவக் கலாநிதிப் பட்டம் (Ph.D) பெற்றுள்ளார்.

கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக இலக்கியம், மருத்துவம், தொல்லியல், மனோவியல், சினிமா, சிறுகதை, ஆகிய பலதரப்பட்ட துறைகளில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் எழுதிய கதை, கட்டுரைகள் இலங்கை, இந்திய, பிரித்தானியப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இவர் எழுதிய சிறுகதைத் தொகுப்பு (நீ சாகமாட்டாய் ராதா), இரு நாவல்கள் (லைலா மஜ்னு, தேன் சிந்தும் மலர்), தொல்லியல்-இலக்கிய ஆய்வுநூல் (கில்கமேஷ் காவியம்), இரு சினிமா நூல்கள் (The King of Hearts, எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெமினி- சில இனிய நினைவுகள்), தமிழ் மக்களும் தழுவிய மதங்களும், மருத்துவக் களஞ்சியம்ஆகியன நூலுருவில் வெளிவந்துள்ளன.

இந்த வரிசையில் கலாநிதி சிவ.தியாகராஜாவின் அண்மைக்கால வெளியீடாக Peoples and Cultures of Early Sri Lanka என்ற நூல் லண்டனில் வெளியீடு கண்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மார்ச் 31ம் திகதி பிற்பகல் இலண்டன் பல்கலைக்கழகத்தின் ஓரியண்டல்-ஆபிரிக்க கலைக் கல்லூரியில் (SOAS) வெளியிடப்பட்ட கலாநிதி சிவ.தியாகராஜாவின் *புராதனகால இலங்கையும் பூர்வீக மக்களின் பண்பாடும்* என்ற ஆங்கில நூல் (Peoples and Cultures of early Sri Lanka) இலங்கையில் அதிகாரபூர்வமாக வழக்கிலுள்ள மகாவம்ச, தீபவம்ச இலக்கியங்களை அடியொற்றிய அந்த வரலாற்றுத் திரையைக் கிழித்து- மரபணுவியல், தொல்லியல், மானிடவியல், மொழியியல், கல்வெட்டியல், நாணயவியல், சமூகவியல் ஆகிய விஞ்ஞானபூர்வமான ஆதாரங்களுடன் அவர்களது வரலாற்றை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. இலங்கை மண்ணில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் புராதன திராவிட சமூகங்களின் வம்சாவளியினரே என்பதை அறுதியிட்டு உறுதியாக இந்த நூல் அறியத்தருகின்றது.

பிரித்தானிய, தமிழர் தகவல் நடுவத்தினரால் (Tamil Information Centre) பிரசுரிக்கப்பட்டு அவர்களின் ஆதரவில் ஒழுங்குசெய்யப்பட்ட இந்நூல் வெளியீட்டு விழாவை அறந்நிறுவனத்தின் இயக்குநரான இராம குருநாதன் அவர்கள் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கிவைத்தார். அவர் தனதுரையில் ஆய்வாளர்களையும், சபையோரையும் வரவேற்று நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிய இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியைச் (UCL) சேர்ந்த தொல்லியல்துறை விரிவுரையாளர் கலாநிதி டொறியன் புல்லர் (Dr. Dorian Fuller) Peoples and Cultures of Early Sri Lanka என்ற இந்நூலை அறிமுகம்செய்து வைத்தார். அவ்வேளையில் தென்னிந்தியாவில் கர்நாடகம், ஆந்திர மாநிலம், தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் தான் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளைப் பற்றிக் கூறிய கலாநிதி புல்லர், தான் நெல் விவசாயத்தைப்பற்றி மேற்கொண்ட ஆய்வுகளைப்பற்றியும் விபரித்துக் கூறினார். அதனடிப்படையில், இலங்கையில் மாந்தையில் கி.மு.1000 ஆண்டளவிலேயே நெல் விவசாயம் ஆரம்பமாகிவிட்டதை அவர் தனதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

அடுத்ததாகப் பேசவிருந்த தொல்லியல் பேராசிரியர் ஜோன் காஸ்வெல் சுகவீனம் காரணமாக சமுகமளிக்க முடியாதிருந்தபோதிலும், அவர் எழுதியனுப்பியிருந்த உரை சபையில் வாசிக்கப்பட்டது. ஏகப்பட்ட ஆதாரங்களை முன்வைத்து எழுதப்பட்டிருக்கும் சிவ. தியாகராஜாவின் நூல் வரலாற்றுத் துறையில் ஒரு முக்கிய இடத்தைப் பெறும் என அவரது உரையில்

குறிப்பிட்டிருந்தார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாந்தைத் துறை பல்வேறு சமூகங்கள் கூடி ஆயிரம் ஆண்டுக்காலமாக வளர்த்தெடுத்த ஒரு துறைமுக நகரம் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியர் ஜோன் காஸ்வெல் அவர்களின் உரையைத் தொடர்ந்து, சிங்கள மொழிப் பேராசிரியர் கலாநிதி சுசரித்த கம்லத் அவர்களது உரை இடம்பெற்றது. இலங்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பின்னர் உறுகுணைப் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றியவர் பேராசிரியர் கலாநிதி சுசரித்த கம்லத். அவரது உரை டீவீடி (DVD) வழியாகத் திரையில் ஒளிபரப்பப் பட்டது. அவர் தனது உரையில், கலாநிதி சிவ தியாகராஜா விரிவான ஆதாரங்களுடன் எழுதியிருக்கும் இந்நூலை எவராலும் மறுத்துரைக்க இயலாது எனக் கூறினார். வரலாற்று ரீதியாகவோ, கலாச்சார ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ அன்றைய இலங்கை கண்டிருந்த பாரம்பரிய வளர்ச்சி அந்நாட்டின் சிங்களவர்-தமிழர் என்ற இருசாராரும் இணைந்து செயற்பட்டுக் கண்டடைந்த வளர்ச்சியேயன்றி தனியொரு இனம் கண்டடைந்த வளர்ச்சி அல்ல என்றார்.

அடுத்து உரையாற்றிய டாக்டர் ரவீந்திரன் இலண்டனில் மருத்துவ நிபுணராக (Consultant) பணிபுரிபவர். மரபணுவியலில் சிறப்புப் பட்டம் பெற்றவர். மரபணுவியலில் மருத்துவப் பட்டம் பெற்ற வைத்தியர்களே புரிந்துகொள்ளச் சிரமப்படும் ஒரு துறையில் ஆராய்ந்து, அதை இலகுவாக-சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் சுவாரஸ்யமாக எழுதியிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு என்று குறிப்பிட்டார். இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட மரபணுவியல் ஆய்வுகள் அனைத்தும் இலங்கையின் தமிழரும் சிங்களவரும் ஒரே வகையான மரபுக்கூறுகளையே கொண்டிருப்பதையும், இவை தென்னிந்தியாவின் தமிழக, கேரள மக்களின் மரபுக் கூறுகளை பெருமளவில் ஒத்திருப்பதையும், இவை மகாவம்ச சிந்தனையோட்டத்தின் வழிவந்த சிங்கள இனத்தின் ஆரிய வம்ச சித்தாந்தத்தின் மூலமான வட இந்திய ஆரியர்களின் மரபுக்கூறுகளைவிட வேறானவை என்பதையும் இந்நூல் தெளிவாக எடுத்துரைப்பதாகவும் டாக்டர் இரவீந்திரன் தனதுரையில் குறிப்பிட்டார்.

அடுத்து, இலங்கையின் பிராமி எழுத்துக்களில் நிபுணத்துவம் பெற்ற ஏ.தேவராஜன் அவர்கள் நியூசிலாந்திலிருந்து DVD மூலம் ஒளித்திரையில் உரையாற்றினார். டாக்டர் சிவ.தியாகராஜாவின் இந்த நூல், இலங்கைத் தமிழரின் வரலாற்று ஆய்வுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு பிரம்மாண்டமான திரட்டு என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் அசோகனின் பிராமி எழுத்துமுறை பௌத்தத்தின் வருகையூடாகப் புகுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையிலும் தமிழகத்திலும் ஒரே வகையான பிராமி எழுத்து வடிவங்களே உபயோகிக்கப்பட்டதை பேராசிரியர் பீ.ஈ.ஈ. பர்னாந்து நிறுவியுள்ளார். அந்த எழுத்து முறையை கலாநிதி சத்தாமங்கள கருணாரத்ன் திராவிடி என்று அழைத்தார். இதனைக் கலாநிதி இரா.நாகசுவாமி, பேராசிரியர் கே.ராஜன் போன்றோர் லலிதவிஸ்தரம் என்ற பழைய நூலில் உள்ள குறிப்புகளின் அடிப்படையில் தமிழி என்று அழைத்தனர். அசோகனின் பிராமி வரிவடிவம் தமிழியில் இருந்து உருவாக்கப்பட்டதாகும். கி.மு.500 ஆண்டுக்குரிய அனுராதபுரத்தில் கண்டெடுத்த கலவோட்டில் உள்ள வாசகம் ''*தயா(வின்) குட(ம்)*'' என்று இந்திய மத்திய தொல்லியல் துறையின் கல்வெட்டுத்துறைத் தலைவர் கலாநிதி கே.வி. ரமேஷ் உறுதி செய்ததாகவும் தேவராஜன் குறிப்பிட்டார். இலங்கைக்கு விஜயன் வந்ததாகக் கூறப்படும் காலத்தில் இங்கே தமிழ்மொழி வழக்கிலிருந்தது என்பதற்கு இது ஒரு வலுவான ஆதாரம் என்றும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

அடுத்து இந்நூலைப் பாராட்டிப் பிரபலப்படுத்தும் நோக்கில் சிங்கள ஊடகவியலாளரான உஷிந்து குருகுலசூரிய அவர்களின் உரை அமைந் திருந்தது. அவர் தனது உரையில் இந்நூல் இலங்கையின் சாதாரணச் சிங்கள - தமிழ் மக்களைச் சென்றடையவேண்டும் எனக் கூறினார். இதற்கு மேலிடத் திலிருந்து எதிர்ப்புக்களை எதிர்பார்க்கவேண்டி நேரிடும் என்றும் அவர் கூறிவைத்தார்.

ஏற்புரை நிகழ்த்திய டாக்டர் சிவ. தியாகராஜா, தனது நூலுக்கு விமர்சன உரைகளை வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். இலங்கையின் ஆதி வரலாறானது கட்டுக்கதைகளையும், புனை கதைகளையும் (myths and legends) கொண்டு ஆக்கப்பட்டிருப்பதாகவும், முறையான விஞ்ஞான ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு இவை எழுதப்பட வேண்டும் என்பதற்கான முதல் முயற்சியே இந்த நூல் என்றும் குறிப்பிட்டார்.

இறுதியாக சபையோர்களின் கேள்விகளுக்கு நூலாசிரியர் பதில் அளித்தார். பிற்பகல் 5.30 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

(ஞானம் இதழ் 144, ஒளி 12, சுடர் 12, மே 2012: 45-46)

20

பேராசிரியர் கோபன் மகாதேவாவின் பதிப்பும், படைப்பும்

'பூந்துணர் 2010', 'கோபன் மகாதேவா: சிறுகதைகளும் நாடகங்களும்' ஆகிய இரு நூல்கள் பற்றிய பார்வை

எம்மிடையே வலம் வரும் தனித்துவம்மிக்க இலக்கியவாதிகளில் பேராசிரியர் கோபன் மகாதேவாவும் ஒருவர். தமிழ்மீது கொண்ட பெரும்காதலால் அவர் ஒரு இலக்கியவாதியாகியவர். நாம் கண்ட பல இலக்கிய அறிஞர்கள் தமிழ் மொழியைத் தம் கற்கைநெறியாகவும், பயில்துறையாகவும் கொண்டவர் கள். தமிழ் மொழி- இலக்கியப் பின்புலம் கொண்டவர்கள். அதில் சிறு வயதி லிருந்தே பரிச்சயம் மிக்கவர்கள். கடந்த 2009இல் தனது பவளவிழாவைக் கண்ட பேராசிரியர் கோபன் மகாதேவா அவர்களோ ஒரு பொறியியல்துறைக் கல்விமான். தமிழ் மொழியை தனது நான்காம் ஆண்டுவரையே கற்றவர். இருப்பினும் அவர் தமிழ்மீது கொண்ட காதலே அவரை இன்று எம்மிடையே நல்லதொரு தமிழறிஞராக உலாவர வழிசெய்துள்ளது என்று கருதுகின்றேன்.

கோபன் மகாதேவா 05.01.1934 அன்று யாழ்ப்பாணம் சாவகச்சேரி, மட்டுவிலில் பிறந்தவர். தனது 14ஆவது வயதில் பாடசாலை நாட்களிலேயே 1948 ஜனவரியில் *மகாத்மா காந்தி* பற்றி ஆங்கிலக் கவிதையொன்றையும் *விண்வெளி ஆராய்ச்சி* என்று தமிழ்க் கட்டுரையொன்றை வீரகேசரியிலும் எழுதி இலக்கிய உலகில் கால் பதித்தவர். தொடர்ந்து Perennialis Schoolis (1949), A childhood visitor (1950) போன்ற கவிதைகளை ஆங்கிலத்தில் எழுதித் தன் திறமையை வளர்த்து இன்றளவிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் படைப் பிலக்கியங்களை எழுதிவருபவர். ஆரம்பக் கல்விக்காலத்தில் நான்காண்டு கள் வரை அடிப்படைக் கல்வியை தமிழில் மேற்கொண்டிருந்தாலும், பின் னாளில் பல்கலைக்கழகம் புகும்வரை ஆங்கிலமொழி மூலமாகவே தனது இடைநிலை, உயர் கல்வியை மேற்கொண்டதால் இவரது ஆங்கில இலக்கியப் பரப்பு விரிவுகண்டது என்று கருதலாம்.

1955ம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை இலங்கையிலும் பிரித்தானியாவிலும் மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான Trinidad இலும் வாழ்ந்து அவ்வந்நாடுகளில் பணியாற்றியவர். இவர்களது படைப்புக்களில் காணப்படும் தேசம்கடந்த தேடல்களுக்கு இந்தப் பயணங்களே காரணமாகின்றன. 1961இல் தன் கலாநிதிப் பட்டப்படிப்பிற்காக இங்கிலாந்துக்கு வந்த கோபன் மகாதேவா, பேர்மிங்ஹாம் நகரில் வாழத்தலைப்பட்டார். அக்காலம் முதலாக அப்பிரதேசத்தின் கவிஞர்களுடனும், சுதேசிய இலக்கிய அமைப்புகளுடனும் தொடர்புகளைப் பேணி வந்தார். Midland Arts Centre என்ற பிரித்தானிய இலக்கிய அமைப்பு 1962இல் பேர்மிங்ஹாம் நகரசபையால் தோற்றுவிக்கப்பட்டது. (Cannon Hill Park, Birmingham B12 9QH) இவ்வமைப்பின் கவிஞர் அவையான Cannon Poets என்ற இலக்கிய சங்கத்தின் தலைவராக 1990 முதல் 1995 வரை ஐந்தாண்டுகள் பணியாற்றிய இவர், பின்னர் தானே உருவாக்கிய Century Poets என்ற அமைப்பின் இயக்குநராகவும் செயற்பட்டிருந்தார்.

பேர்மிங்ஹாமிலிருந்த காலத்தில் இவரது வீட்டின் பெயரைத் தாங்கிய Century House Publications என்ற பெயரில் பல நூல்களை வெளியிட்டுவைத்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னாளில் பணியிலிருந்து ஓய்வு பெற்று லண்டனில் வாழத்தலைப்பட்ட காலத்திலும், அங்கு பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் (Eelavar Literature Academy of Britain) என்ற அமைப்பை உருவாக்கி இலக்கியப் பணியாற்றி வருகின்றார். ஈழத்தமிழ் இலக்கியத்தை புகலிடத்திலும் நுகரத்தக்க வகையில் தம்மாலானவகையில் தீவிரமாக ஈடுபட்டு உழைக்கும் அமைப்பொன்றாக *பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம்* லண்டன் கொலிண்டேல் பகுதியில் 2006 முதல் இயங்கி வருகின்றது. நல்ல கலை இலக்கியங்களை வளம்படுத்தும் நோக்குடன், கலையார்வம் கொண்டவர்களை இணைத்து உருவாக்கப்பட்ட பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம், எழுத்தாளர்களின் ஒருங்கிணைப்பினால் மாதாமாதம் இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி அதன்மூலம் ஒரு இலக்கிய அறிகையையும் ஆர்வத்தையும் தமது அங்கத்தவர்களிடையே ஏற்படுத்தி வருகின்றது. ஒரு கட்டத்தில் அவர்களையும் தமிழ் இலக்கியப் படைப்புகளைச் சுயமாக உருவாக்கிப் பயிற்சிபெறவும் பகிர்ந்துகொள்ளவும் *பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம்* துணிவையும், தன்னம்பிக்கையையும் வாய்ப்பையும் அளிக்கின்றது.

இவ்விலக்கியச்சங்கம் அண்மையில் பரீட்சார்த்த முயற்சியொன்றிலும் துணிவுடன் இயங்கியுள்ளது. *பூந்துணர்* என்ற தலைப்பில் 210 பக்கம் கொண்ட *தொகுப்பு மலர்* ஒன்றினை 2007 இல் இவர்கள் லண்டனில்

வெளியிட்டிருந்தார்கள். அதன் தொடராக 2010இல் மற்றுமொரு *பூந்துணர்* வெளிவந்துள்ளது. அந்த நூல் பற்றியும், அதன் பின்னர் 2011 இல் வெளிவந்த கோபன் மகாதேவா: சிறுகதைகளும் நாடகங்களும் என்ற நூல் பற்றிய பின்புலத்திலுமே எனது பார்வை விரிகின்றது. இது எவ்வகையிலும் ஒரு நூல் அறிமுகமோ, விமர்சனமோ அல்ல என்பதை முதலிலேயே குறிப் பிட்டாகவேண்டும்.

2010இல் பிரசுரமாகியுள்ள *பூந்துணர்* என்ற இரண்டாவது தொகுப்பு நூல், பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தின் எழுத்தாளர்களின் ஒருங் கிணைப்பினால் நடைபெற்ற மாதாந்த இலக்கிய நிகழ்வுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள், கவிதைகள், சிற்றாய்வுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. அங்கத்தவர்களின் அகன்ற தேடலினதும் விரிந்த வாசிப்பினதும் பெறு பேறாகவே பூந்துணரைத் தரிசிக்க முடிகின்றது. இத்தொகுப்பில் கோபன் மகாதேவாவுடன் சேர்ந்து அவரது துணைவியார் சீதாதேவி மகாதேவா, எஸ். கருணானந்தராஜா, அவரது துணைவியார் தயாகருணானந்தராஜா மற்றும் மீரா ராஜகோபாலன், சிவ.தியாகராஜா, தமிழரசி சிவபாதசுந்தரம், மு.து. செல்வராஜா, கா.விசயரத்தினம், முத்துக்குமாரசாமி மகேந்திரன் ஆகியோரின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 19 பிரிவுகளில் இப்படைப்புக்கள் பதிவாகியுள்ளன. இவை அனைத்தும் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் அவ்வப்போது ஒழுங்குசெய்த சந்திப்புகளில் படிக்கப்பெற்றவை என்பதை அறியும்போது, இச்சங்கத்தின் பணிகள் பற்றிய உயர்வான மதிப்பே மேலோங்குகின்றது. இங்கு வாசிக்கப்படும் படைப்புக்கள் அனைத்தும் அறிமுக எழுத்தாளர்களின் படைப்புகளல்ல. இலக்கியத்தை ஆழமாகக் கற்றுத்தேர்ந்த இலக்கியவாதிகளுள் சிலர் இந்த அமைப்பின் சந்திப்புகளின் மூலம் அதனை வெளிப்படுத்த வடிகால் தேடிக்கொண்ட நிகழ்வாகவே இந்த நூலைப் பார்க்க முடிகின்றது.

நூலிலுள்ள ஆக்கங்களின் பகுப்பு மகாத்மா காந்தி, கவியரசு கண்ணதாசன், வேறுசில நாயக சாதனையாளர்கள், உலக மனித உற்பத்தியும்(தோற்றமும்) போக்கும், இயற்கையும் மனிதனும், அன்றும் இன்றும், லண்டன் வாழ்க்கை, இன்றைய தமிழ்க் கலாச்சாரம், மேல்நாடுகளும் சைவமும், தனி அனுபவங் களும் கனவுகளும், சுதந்திர தாகம், தியாகம், வெற்றித் திருமணங்கள், செய்ந்நன்றி, வாழ்க்கையும் விளையாட்டுப் போட்டிகளும், நூல் வெளி யீடு-அணிந்துரை-விமர்சனம், இலக்கியமும் அதன் வருங்காலமும், பல் கருப்பொருட் பெட்டகம், பூந்துணர் 2007 விமர்சனங்கள் ஆகிய தலைப்புகளில் அமைந்துள்ளன.

ஒவ்வொரு தலைப்பின் கீழும் பல்வேறு படைப்பாக்கங்கள் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் மொத்தம் 114 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அதிகமான ஆக்கங்களை கோபன் மகாதேவாவும் (40), அவரது துணைவியாரும் (19) பதிவுசெய்துள்ளனர். கா.விசயரத்தினம் அவர்கள் மூன்றாவதாக 18 ஆக்கங்களை வழங்கியுள்ளார். தமிழரசி சிவபாதசுந்தரம் 9 ஆக்கங்களையும், கருணானந்தராஜா, மு.து. செல்வராஜா ஆகியோர் தலா 5 ஆக்கங்களையும் மகேந்திரன், மீரா ராஜகோபாலன், தயா கருணானந்தராஜா ஆகியோர் தலா 3 ஆக்கங்களையும் வழங்கியுள்ளனர்.

மகாத்மா காந்தி, கவிஞர் கண்ணதாசன், அறிஞர் அண்ணா, மகாகவி பாரதியார், மேரி கியூரி அம்மையார், சாமுவேல் கிரீன், அலெக்சாண்டர் பிளெமிங், லுயிஸ் பாஸ்டர், ரொபேட் லிஸ்ரன், இராவணன், தொல்காப்பியனார், திருவள்ளவர், செக்கிழார், இளங்கோவடிகள், ஈழத்துப் படைப்பாளி அகஸ்தியர், தமிழகப் படைப்பாளி ஜெயகாந்தன், நெல்சன் மண்டெலா, ஜோர்ஜ் புஷ் ஆகியோர் பற்றிய பன்முகப் பார்வைகொண்ட கட்டுரைகள் கருத்தைக் கவர்வதாயுள்ளன. குறிப்பாக, சாதனையாளர் சவரிமுத்து எஸ்.அகஸ்தியர் பற்றி கோபன் மகாதேவாவின் கட்டுரை- வித்தியாசமான முறையில்- ஈழத்துக் கிராமியப் பேச்சுத் தமிழில் எழுதப்பட்டுள்ளது. ஈழத்துப் படைப்பிலக்கியவாதியான அமரர் அகஸ்தியர் பற்றிய சுவையான குறிப்புகளுடன் அந்தத் தமிழ்நடையையும் சுவைக்கமுடிகின்றது. தமிழ் இலக்கியத்தின் யதார்த்தகாலம்: ஜெயகாந்தனின் சகாப்தம், கரைபுரளும் காவிரியாய் கவிபொழிந்த கண்ணதாசன் ஆகிய தலைப்புகளில் மருத்துவர் சிவ தியாகராசா எழுதிய இரு கட்டுரைகளும் ஆய்வுரீதியானவை. சுவையான பல அரிய புதிய தகவல்களை ஆசிரியர் கடுகைத்துழைத்து ஏழ்கடலை அதனுள் புகுத்தியது போல அந்தச் சிறிய ஆய்வுக்கட்டுரைகளுக்குள் கட்டுரையின் சுவை கெடாது பரவவிட்டுள்ளார்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் பிரித்தானிய வாழ்க்கை, தமிழர் கலாச்சாரமும் இற்றைய நடப்பும், மேல்நாட்டுக்கேற்ற சைவ முறைகள் (கா.விசயரத்தினம்), நவயுகத் தமிழரின் நடைமுறைக் கலாசாரம் (கோபன் மகாதேவாவின் கவிதை), இன்றைய உலகுக்கேற்ற தமிழர் கலாச்சாரம், சைவமுறைகளும் மேல்நாட்டு வாழ்வும் (சீதாதேவி மகாதேவா), சைவப் பெண்களின் இன்றைய நிலை (தமிழரசி சிவபாதசுந்தரம்) ஆகிய படைப்புக்கள்- இன்றைய மேலைத்தேய புலம்பெயர்வாழ்விலும் தமது தாயகக் கலாச்சாரப் பேணலை விடாப்பிடியாக நிலைநிறுத்த முற்பட்டுத் தோற்றுப்போகும் எம்மவரையும், அதனை

இடத்துக்கேற்றவாறு மாற்றிச் சமரசம் செய்துகொள்ளத்துணிந்த அவர்களது காலத்துக்கேற்ற மனமாற்றத்தையும் படம்பிடித்துக்காட்டுகின்றன.

இத்தொகுப்பிலுள்ள ஒவ்வொரு படைப்பும் சுவாரஸ்யமானவையே. இருப்பினும் 114 படைப்புகளையும் அவற்றின் குணாம்சங்களையும் சுவையையும் பகிர்ந்துகொள்வது இக்கட்டுரையை மிக மிக நீண்டதாக்கும். மொத்தத்தில்- பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தின் சாதனையை இப்படைப்புகள் கோடிட்டுக்காட்டுகின்றன. எழுத்தார்வம் மிக்கவர்கள் ஒருங்கிணைந்தால் எண்ணிலாத அதிசயங்களைப் புரிவர் என்பதை புந்துணர் எமக்குச் சொல்லாமல் சொல்கின்றது. எதிர்காலத்தில் இளந்தலைமுறை யினரையும், புதிய எழுத்தாளர்களையும் பூந்துணர் உள்வாங்கவேண்டும். அதேவேளையில் *பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம்* லண்டனில் தமது அங்கத்தவர்களின் விரிவான வாசிப்புக்கென புதிய நூல்களையும், அறிவுச் சாதனங்களையும் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். அதன்மூலம் புதிய தொரு திறந்த இலக்கியவெளிக்கு அங்கத்தவர்களை அழைத்துச் செல்லமுடியும்.

இக்கட்டுரையின் இரண்டாம் பகுதியாக 2011இல் வெளிவந்த *கோபன் மகாதேவா: சிறுகதைகளும் நாடகங்களும்* என்ற நூல் பற்றிய எனது மனப்பதிவு இடம்பெறுகின்றது. இது ஆசிரியரினால் எழுதப்பட்டு அச்சில் வெளிவந்த இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும். முதல் சிறுகதைத் தொகுதி, 1991இல் New Stories from Sri Lanka என்ற பெயரில் வெளிவந்திருந்தது. இருபது ஆண்டுகளின் பின்னர் தனது 77ஆவது அகவையில் வெளிவரும் இந்த இரண்டாவது சிறுகதைத் தொகுதி 1980களிலிருந்து 2010வரை இவர் எழுதிய இருபத்தியொரு இலக்கியப் படைப்புகளை உள்ளடக்குகின்றது.

இளையோரின் குறும்புக் கதையாக முதலாவது கதை முதலடி முதுகடி என்ற தலைப்பில் நகைச்சுவை ததும்ப எழுதப்பட்டுள்ளது. இந்நூல் முழுவதும் அவ்வப்போது அங்கதச்சுவை துலக்கமாகப் பேணப்பட்டுவந்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆயுள் தண்டனை என்ற இரண்டாவது கதை இளவயதில் தந்தையின் கண்டிப்பான வளர்ப்பை எண்ணிப் பின்னாளில் உருகும் ஒரு மகன் பற்றியது. கார் ஓட்டம் என்ற மூன்றாவது கதை, தனது பெரியதகப்பனின் முதுமைக்கால ஆசையான யாழ்ப்பாணத்தை சுற்றிக்காட்டும் ஒரு பெறாமகனின் பார்வையில் விரிகின்றது. பிள்ளை மாஸ்டர் என்ற கதை ஆங்கில மொழியில் எழுதப் பட்டது. சிறுவயதில் கிறிஸ்தவராக மதம்மாறிய ஒரு ஆசிரியரைப் பற்றியது இக்கதை. அவரது குடும்ப வாழ்வில் நடக்கும் நிகழ்வுகள் ஒரு திரைப்படக்

காட்சி போன்று விரிந்து ஒரு காலகட்ட ஈழத்துத் தமிழ்மண்ணின் குடும்ப வாழ்வியலை சிறைப்பிடித்து வைத்திருக்கும் கதை இது.

பீரங்கிப் பூலோகம் என்ற கதை தனது ஊரவரும், பீரங்கி என்ற பட்டப்பெயர் தாங்கியவருமான பூலோகராசாவுடன் ஆசிரியர் கழித்த பல் கலைக்கழக வாழ்வு தொடர்பானது. குறும்புகளுக்குப் பெயர்போன பூலோகுவின் மரணமும் முதலில் குறும்பாகப் பார்க்கப்பட்ட யதார்த்தம் கதையை அழுத்தமாக்குகின்றது. அவரது தங்கை சீதாவின் மேல் ஆசிரியரின் ஈர்ப்பும் கதையை சுவாரஸ்யப்படுத்துகின்றது. (ஆசிரியரின் துணைவியாரும் சீதாதேவி என்ற பெயர் கொண்டவர் என்பதை அறியும்போது இக்கதை உண்மைக்கதையோ என்ற சந்தேகத்தை ஒருகணம் ஏற்படுத்தியது.) படிமை இழந்த பட்ட மாணவன் (The Displaced Undergraduate) என்ற கதையும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இதுவும் பல்கலைக்கழக வாழ்வு பற்றியது. முயற்சியால் உயர்ந்த மாமனிதர் என்ற கதை, தனது தமையனாரான வீ.கே. தில்லைநாயகம் பற்றிய மனப்பதிவாக விரிகின்றது. உள்ளூர் படிகைக்கல்லின் துணையுடன் நுணாவிலில் ரேடியோ தயாரித்து, திருச்சி வானொலியின் தமிழ் ஒலிபரப்பை செவிமடுத்த தமது அனுபவங்களை விளக்குவதினூடாக ஒரு திறமையாளனின் செழிப்பான வாழ்க்கை குடும்பத்தின் மட்டுப்படுத்தப் பட்ட பொருளாதார வளத்தால் எவ்வாறு தடங்கலுக்குள்ளானது என்றும் சிரமத்தின் மத்தியில் அவரால் எவ்வாறு முன்னேறி உயரமுடிந்தது என்பதையும் இக்கதையில் விபரிக்கிறார்.

மாப்பிள்ளையும் மரக்குற்றியும் என்ற கதையில் புது மாப்பிள்ளை, மாமனார் வீட்டுத் தென்னை மரத்தின் அடிக்குற்றியை அகழ்ந்தெடுக்கும் திறமை விமர்சிக்கப்படுகின்றது. ஒரு இனக்கலவரத்துள் என் பதற்றத் தொடருந்துப் பிரயாணம் (Nightmare Trip in a Race-Riot Train) என்ற ஆங்கிலச் சிறுகதைக்கு, 1977இல் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் நிகழ்ந்த இனக்கலவரமொன்றில் தான் பயணித்த இரவுப் புகைவண்டியில் சிங்களக் காடையரிடம் தனது பெறுமதிமிக்க மோதிரத்தையும் மணிக்கூட்டையும் பறிகொடுத்த துர்ப்பாக்கிய நிலை கருவாக அமைந் துள்ளது. ஈழத்தில் ஒரு தாய் என்ற கதை திருமதி தங்கரத்தினம் முத்துக் குமாரசாமி என்ற தனது மாமியாரைப் பற்றி உருகி எழுதும் உணர்வுப்படையல். அங்கு கற்பனைக்கு இடமில்லாமல் ஆற்றாமை உணர்வு இடைக்கிடையே கவிதைகளாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன.

திருமதி கொஞ்சம் என்ற கதை ஆசிரியரின் தர்மபத்தினியின் குணாதிசயங் கள் பற்றியது. மிகுந்த அங்கதச்சுவையுடன் தனது அனுபவங்களை இக்

கதையில் திறந்த மனதுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். என் சுண்டெலி செத்தே விட்டதோ? என்ற கதையும் தனது கணினியின் மௌஸ் (பேராசிரியர் இதைத் தான் சுண்டெலி என்கிறார்) பழுதடைந்ததை பின்புலமாகவைத்து சுவாரஸ்ய மாக இந்த நகைச்சுவைச் சித்திரத்தை எழுதியிருக்கிறார்.

பேராசிரியர் கோபன் மகாதேவாவின் கதைகளில் பெரும்பான்மையானவை அவருடன் நேரடியாகத் தொடர்புபட்டவையாகவே காணப்படுகின்றன. இவை கதைகள் என்பதைவிட உரைச்சித்திரங்களாகவோ, உணர்வூற்றுருக் களாகவோ எனக்குத் தோன்றுகின்றன. மேலும் இந்தச் சிறுகதைகள் அனைத்தை யும் வாசித்து முடித்ததும், கதைசொல்லியைப் பாதித்த அவரது நெருக்கமான உறவுகளோடும் சம்பவங்களோடும் மானசீகமாகத் தொடர்புபட்டு நாமும் நெருங்கி அவர்களது சுகதுக்கங்களிலும் பங்கெடுத்து மீண்டது போன்றதொரு உணர்வு ஏற்படுகின்றது.

இந்நூலின் முன்னுரையில் ஆசிரியர் ''இந்நூல் இலக்கிய, பொது வெளி யீட்டுக் கோட்பாடுகளுக்கு முழுமையாக உட்பட்டு எனது சுயசரிதையாகவும் சிறிதளவு அமைகின்றது'' என்கிறார். ''சிறிதளவு'' அல்ல ''பெரும்பாலும்'' என்பதே பொருந்தும். பேராசிரியர் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருந்தால்- இவ்வளவுதூரம் வாசகரின் மனதில் அது உணர்வுபூர்வமாகப் பதிந்திருக்குமா என்பது சந்தேகமே. நூலுருவில் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்கும்போது வாசகன் அந்நியனாக நின்றே அதை உள்வாங்குகின்றான். ஆனால் பேராசிரியர் தன்னை ஒரு கதைசொல்லியாக வைத்து சம்பவங்களை நகர்த்தும் அணுகுமுறையானது வாசகனை உணர்வுபூர்வமாக அவரது பாத்திரங்களுடன் நெருக்கமடையவைக்கின்றது. இது அவரது எழுத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

மனிதனும் அவன் தாய்மொழியும் (A matter of Language) என்ற கதை கோபன் மகாதேவாவின் இக்கதைத் தொகுதியில் வித்தியாசமானதொரு தளத்தில் விரியும் கதையாகும். ஈழத்தின் தமிழ் அரசியல் கைதிகளின் சிறைக்கூடத்தில் இடம்பெறும் சோகக்கதை இது. கந்தசாமி என்னும் தமிழ் இளைஞனான ஒரு சிறைக்கைதிக்கும், அனுரா என்ற சிங்கள சிறை அதிகாரிக் கும் இடையில் ஏற்படும் உணர்வுபூர்வமான பந்தம் இக்கதையை கண்ணீருடன் நகர்த்திச் செல்கின்றது. பரிதாபத்துக்குரிய ஈழ விடுதலைப் போராளிகளுக்கும், இனவாத சிங்கள இராணுவ, சிறை அதிகாரிகளுக்குமிடையே ஏற்படும் முரண்பாடுகள் கதையில் ஆங்காங்கே பதிவாகின்றன. இக்கதை சிறுகதை யாகவல்லாமல், ஒரு நாவலாக விரியும் சக்திவாய்ந்ததென்பது எனது கருத்தாகும்.

இத்தொகுப்பில் சிறுகதைகளுடன் மூன்று தமிழ் நாடகங்களும் ஒரு ஆங்கில நாடகமும் சேர்க்கப்பட்டுள்ளன. செல்லாச்சிப்பாட்டி, திருக்குறள் தாத்தா, பிறப்பும் பொறுப்பும், இடியப்பவலைச்சந்தி (Spaghetti Junction) என்ற ஆங்கில மொழிமூல நாடகம் ஆகியன அவை. லண்டன் புதினம் பத்திரிகையில் 2004-2005 காலத்தில் கற்பனை உரைச்சித்திரப் பாத்திரமாக உருவானவர்களே செல்லாச்சிப் பாட்டியும் லண்டன் தமிழறிஞரான திருக்குறள் தாத்தாவும். திருக்குறள் தாத்தாவின் விதவை மனைவியான செல்லாச்சிப் பாட்டி, லண்டனின் அடுக்குமாடித் தொடரொன்றில் தனிமையில் வாழும் ஒரு சராசரி ஈழத்துத் தமிழ் மூதாட்டி. தனது வாழ்வனுபவங்களையும், புலம்பெயர் வாழ்வின் சிக்கல்களையும், சமூக மாற்றங்களையும் தனிமையில் பேசி அலசுபவர். அவரது உரைச்சித்திரமே செல்லாச்சிப்பாட்டி என்ற நாடகம். திருக்குறள் தாத்தா தமிழறிஞராக குறள்வழிவாழ்ந்து மறைந்த ஒரு பெரியார். அவரது இறுதிக் காலமும், பின்னர் அவரின் மறைவின் பின்னரும் நிகழும் உரையாடல்களே திருக்குறள் தாத்தா என்ற நாடகமாக விரிகின்றது.

மொத்தத்தில் இத்தொகுப்பிலுள்ள கதைகளும், உணர்வுச் சித்திரங்களும், பின்னால் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள நாடகங்களும் கோபன் மகா தேவாவின் பார்வையில் தான் வாழும் சமூகத்தின் பல்வேறு பக்கங்களை இலக்கியம் என்ற ஊடகத்தின் வாயிலாகப் பதிவுசெய்வதாக அமைந்திருக் கின்றன. எழுபத்தேழு வயது இளைஞரொருவரின் கடந்துபோன வாழ்வின் இனிய நினைவுகளின் இரைமீட்டலே இவையெனில் அது மிகையாகாது. பேராசிரியர் கோபன் மகாதேவா அவர்களின் மலரும் நினைவுகள் பல்வேறு எழுத்துருக்களாகத் தொடர வாழ்த்தி இக்கட்டுரையை நிறைவுசெய்கின்றேன்.

(பூந்துணர் 2012 தொகுப்பு நூல், லண்டன்: பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம், 2012: ப. 235-240.)

21

‘பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும்’

ஒரு நூலியல் பார்வை

நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்கள் இலங்கையின் வடமாகாணத்திலுள்ள சாவகச்சேரி என்னும் ஊரின் நுணாவில் என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் மேலான பாண்டித்தியமும் மொழிப்பற்றும் கொண்டதொரு சைவப் பாரம்பரியத்தைப் பின்புலமாகக் கொண்டவர். இலங்கையில் அரச கணக்காய்வுத் திணைக்களத்தில் கணக்காய்வு அத்தியட்சகராகக் கடமையாற்றி இளைப்பாறியவர். தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றார். முன்னதாக இவர் கணினியை விஞ்சும் மனித மூளை, தொல்காப்பியத் தேன்துளிகள் ஆகிய நூல்களையும், Essentials of English Grammer என்ற ஆங்கில இலக்கண நூலையும் வெளியிட்டுள்ளார். தாயகத்திலும், பிரித்தானியாவிலும் வெளிவரும் ஊடகங்களில் மாத்திரமன்றி, பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தின் (ELAB) செயற்பாட்டாளர்களுள் ஒருவராக இருந்தும், அவ்வமைப்பின் தொகுப்பு நூலான பூந்துணர் (2007, 2010) இதழ்களிலும் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

இவரது முதலாவது நூலாகக் கருதப்படும் *கணினியை விஞ்சும் மனித மூளை* என்ற நூல் மணிமேகலைப் பிரசுர வெளியீடாக 2005 இல் 260 பக்கங்களில் வெளிவந்தது. இவர் வீரகேசரி (கொழும்பு), வடலி (லண்டன்) ஆகிய பத்திரிகைகளுக்கு எழுதிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இது வாகும். இலக்கியத்தில், மருத்துவத்தில், சித்த வைத்தியத்தில், சமூகவியலில், பழந்தமிழர் கணக்கியலில், அவர்தம் பண்பாட்டியலில், விண்வெளியியலில், உயிரியலில் என்று பல திக்குகளிலும் தன் ஆய்வுப்பரப்பை விரித்து இந் நூலிலுள்ள 30 கட்டுரைகளையும் சுவைபட உருவாக்கியுள்ளார்.

இவரது இரண்டாவது நூல் Essentials of English Grammar என்பதாகும். இதுவும் மணிமேகலைப் பிரசுரமாக 2007 இல் 104 பக்கங்களில் வெளிவந்தது. அடிப்படை ஆங்கில இலக்கண அறிவை 21ம் நூற்றாண்டுக்கு எடுத்துச் செல்லும் இந்நூல் தற்கால புலம்பெயர்ந்த இளையோரை அதிகம் கவரத்தக் கதாக உருவாக்கப்பட்டிருந்தது.

நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்களது மூன்றாவது நூல் *தொல் காப்பியத் தேன்துளிகள்* என்பதாகும். மணிமேகலைப் பிரசுரத்தினரால் 2008 இல் அச்சிடப்பட்டு, மற்றுமொரு லண்டன்வாழ் தமிழறிஞர் கோபன் மகா தேவா அவர்களால் தனது Century House என்ற வெளியீட்டு நிறுவனத்தினால் 224 பக்கங்களில் வெளியிடப்பட்டது இந்நூல்.

தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பை வழங்கிய முதல் நூலாக தொல்காப்பியம் கருதப்படுகின்றது. அகத்திய மாமுனிவரால் ஆக்கப்பட்ட அகத்தியம் என்ற தமிழ் இலக்கண நூலை அடியொற்றியே அவரது தலைமைச் சீடரான தொல்காப்பியரால் தொல்காப்பியம் எழுதப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் இருந்த பிரதேசம் கடல்கோளினால் அழிக்கப்பட்டபோது அகத்தியமும், அக்காலத்தைய தமிழ் நூல்களும் இல்லாது போயின. இந்நிலையில் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் எழுந்த தொல்காப்பியமே இன்று கைக்கெட்டிய முதலாவது தமிழ் இலக்கண நூலாக எம்மிடையே வாழ்கின்றது. தொல்காப்பியம் இலக்கண நூலாக வகைப்படுத்தப்பட்டபோதிலும், அதிலும் இலக்கியச் சுவை பெரிதும் காணப்படுகின்றது. இந்நூலாசிரியர் நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்கள், தொல்காப்பியத்தில் காணப்படும் இலக்கியச் சுவை பற்றி இந்நூலில் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் நிலவியிருந்த சமூக அமைப்புகள், ஒழுக்க விழுமியங்கள், தனிமனிதப் பண்புகள், ஆடை அணிகலன்கள், மக்களிடையே வழக்கிலிருந்த கற்பொழுக்கம், களவொழுக்கம், கைக்கிளை, பெருந்திணை மற்றும் அக்காலத்தில் காணப்பட்ட சாதிய வழமை கள், திருமணங்களும் சீதனப் பரிமாற்றங்களும் என்று ஏராளமான விடயங்கள் இந்நூலில் எளிமையான நடையில் வாசித்து வியக்கமுடிகின்றது.

கா.விசயரத்தினம் அவர்களது அண்மைக்காலப் படைப்பாக வெளிவந் துள்ள நூல் பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும் என்பதாகும். இதுவும் மணிமேகலைப் பிரசுரத்தினரால் 2010 இல் அச்சிடப்பட்டு, Century House வெளியீட்டு நிறுவனத்தினால் லண்டனில் 220 பக்கங்களில் வெளியிடப் பட்டுள்ளது.

ஆசிரியரின் இருபது கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். பிராமணன் புகழ்பாடும் மனுநீதி நூலார் சூத்திரனுக்குக் கொடுத்த கொடுந்தண்டனைகள், மங்கையர் மாண்பினை மங்கவைக்கும் உடன்கட்டையேறல், மதங்களும் புராணங்களும் எழுப்பிய உயிர்ப்பலிகள், தொல்காப்பியர் காட்டும் பண்டைத் தமிழர் வாழ்க்கைநெறி, முச்சங்கங்களை அடுத்த நாலாம் சங்கம் எழுந்த வரலாறு, பரிணாம வளர்ச்சியும் மனித வரலாறும், திருமணமும் அதன் முன் பின் விளைவுகளும், பார்போற்றும் உலகச் சாதனையாளர் மகாத்மா காந்தி, பூவுலகின் நிலப்பரப்பில் தோன்றும் உயிரினப் பிறப்பும் இறப்பும், சங்கத்

தமிழ் இலக்கியமும் அதன் வளர்ச்சியும், செய்ந்நன்றி மறப்பது அறம் அன்று, நான் விரும்பும் இலக்கிய நாயகன் சிலம்பில் இளங்கோ, மண்ணின் மகிமையும் அதன் வாசனையும், செந்நாப்போதார் திருவள்ளுவரும் தெய்வீக நூல் திருக்குறளும், மக்கள் கவிஞன் கவியரசு கண்ணதாசன், இன்றைய உலகும் தமிழர் கலாச்சாரமும், தொல்காப்பியப் பெருநூல் யாத்த தொல் காப்பியனார், உயரத்திலும் பல்லடுக்கு மாடிகளிலும் உலக சாதனை பெற்று நிற்கும் கட்டிடம் (துபாய்- The Burj Khalifa), மேல்நாட்டுக்கேற்ற சைவமுறைகள், பன்னிரு திருமுறைகளும் அதிலடங்கிய பெரியபுராணமும் ஆகிய தலைப்பு களில் எழுதப்பட்ட பலவினக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுள் சில கட்டுரைகளின் கருப்பொருளையே நூலின் தலைப்பு பிரதி பலிக்கின்றது.

தமிழ் இலக்கணத்தில் கிறிஸ்துவுக்கு முன் 3ம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியமும், கி.பி.13ம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலும் இன்றளவும் போற்றுதற்குரியனவாகப் பயன்பெறுகின்றன. தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பை வழங்கிய முதல் நூலாக தொல்காப்பியம் கருதப்படுகின்றது. அகத்திய மாமுனிவரால் ஆக்கப்பட்ட அகத்தியம் என்ற தமிழ் இலக்கண நூலை அடியொற்றியே அவரது தலைமைச் சீடரான தொல்காப்பியரால் தொல்காப்பியம் எழுதப்பட்டது என்பது வரலாறு. முதலாம் தமிழ்ச்சங்கம் இருந்த பிரதேசம் கடல்கோளினால் முன்னர் அழிக்கப்பட்டபோது அகத்திய மும், அக்காலத்தைய தமிழ் நூல்களும் இல்லாது போயின என்பதும் வரலாறு. அகத்தியம் எம்வசம் இல்லாத இந்நிலையில் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத் தில் எழுந்த நூலான தொல்காப்பியமே இன்று கைக்கெட்டிய முதலாவது தமிழ் இலக்கண நூலாக எம்மிடையே வாழ்கின்றது. நுணாவிலூர் கா.விசயரத் தினம் அவர்கள் தனது கட்டுரைகளிற்கான ஆதாரங்களையும், கருவையும் தொல்காப்பியம் முதலான சங்க நூல்களிலிருந்தே எடுத்தாள்கின்றார்.

முச்சங்கங்களை அடுத்த நாலாம் சங்கம் எழுந்த வரலாறு என்ற முதலாவது கட்டுரை தமிழ்ச்சங்கங்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் குறிப்பிடுவதுடன் அதன் வழிவந்து அண்மையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தாபிக்க முனைந்த வள்ளல் பாண்டித் துரைத்தேவர் பற்றியும் தகவல் தருகின்றது.

இந்நூலில் இடம்பெற்றிருக்கும் ஒரு கட்டுரை உயரத்திலும் பல்லடுக்கு மாடிகளிலும் உலகச் சாதனை பெற்று நிற்கும் கட்டிடமான துபாய் நாட்டிலுள்ள 160 மாடிகள் கொண்ட The Burj Khalifa என்ற கட்டிடம் பற்றியது. (இது 4.1.2010இல் திறந்துவைக்கப்பட்டது). இக்கட்டுரைக்கும், நூலின் தலைப்புக் கும் என்ன தொடர்பு என்பது கேள்விக்குரியதாகும்.

இவ்விடத்தில் இரண்டு குறிப்புகளை, சமகால நூலாசிரியர்களின் சிந்தனைக்கு விட்டுவைக்க விரும்புகின்றேன். ஒரு சிறுகதைத் தொகுப்பை வெளியிடும் படைப்பாளி நூலின் தலைப்பாக அத்தொகுதியில் உள்ள ஒரு சிறுகதையின் தலைப்பினை வைப்பதுண்டு. இது கற்பனைசார்ந்த ஆக்க இலக்கியங்களுக்கு எவ்வித கெடுதல்களையும் மயக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

கற்பனைசாராத அறிவியல் Non fiction நூல்களுக்குத் தலைப்பிடுபவர்கள் அந்நூலில் சொல்லப்படும் விடயங்கள் அனைத்துக்கும் பொருத்தமானதாகவே தலைப்பிடுவது தார்மீகக் கடமையாகின்றது. ஏனெனில் ஒரு நூலை வாங்கிப் பயன்படுத்தமுனைபவர் அதன் தலைப்பு என்ன சொல்கிறதோ அதுவே அந்நூலின் உள்ளடக்கமாகவும் இருக்கும் என்றே எதிர்பார்ப்பார். அந்த வகையில் இந்நூல் பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும் என்ற தனது தலைப்புக்கு ஓரளவு பொருத்தமானதாக பிராமணன் புகழ்பாடும் மனுநீதி நூலார் சூத்திரனுக்குக் கொடுத்த கொடுந்தண்டனைகள், மங்கையர் மாண்பினை மங்கவைக்கும் உடன்கட்டையேறல், மதங்களும் புராணங்களும் எழுப்பிய உயிர்ப்பலிகள், தொல்காப்பியர் காட்டும் பண்டைத்தமிழர் வாழ்க்கைநெறி, திருமணமும் அதன் முன்-பின் விளைவுகளும் ஆகிய ஐந்து கட்டுரைகளையே என்னால் இனம்காண முடிகின்றது. மகாத்மா காந்தி, மனித உயிரினப்பிறப்பு, சிலம்பில் இளங்கோ, திருவள்ளுவர், தொல்காப்பியர், துபாய் கட்டிடம், பன்னிரு திருமுறைகள், கவிஞர் கண்ணதாசன் உள்ளிட்ட எஞ்சிய 15 கட்டுரை களும் நூலின் தலைப்பிற்கு அப்பாற்பட்டவை.

திரு. கா. விசயரத்தினம் ஈடுபாடுகொண்ட பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தின் (ELAB) தொகுப்பு நூலான பூந்துணருக்கு அதன் பெயர் கச்சி தமாகப் பொருந்துவதை இங்கு கவனத்திற்கொள்ளவேண்டும். பூந்துணர் என்றால் infloresence என்று குறிப்பிடப்படுகின்றது. சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில-தமிழ் அகராதி அதற்கு பூங்கொத்து, மலர்ச்சி, பூங்கொத்தொழுங்கு, இணர் என்றவாறாகப் பொருள் தருகின்றது. பூந்துணர் என்ற வெளியீடு, பல்வேறு துறைகளிலும் அவ்வமைப்பின் பல்வேறு அங்கத்தவர்கள் எழுதி வாசித்த ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பாகும். நூலின் தலைப்பு இங்கு கச்சிதமாகப் பொருந்துவதை அவதானிக்கலாம். எனவே எதிர்காலத்தில் எம்மவர்கள் நூலின் தலைப்பினை ஆழச்சிந்தித்து வழங்குவதே விரும்பத்தக்கதாகும்.

இங்கு நான் குறிப்பிட விரும்பும் இரண்டாவது விடயம் Copy Editing பற்றியதாகும். நாம் எழுதும் ஒரு விடயம் அது நூல் உருவில் ஆக்கம் பெறும் முன்னதாக இரண்டாம் பேர்வழி ஒருவரால் வாசிக்கப்பட வேண்டும்

என்ற கருத்தை நாம் மதிக்க வேண்டும்'. இந்த இரண்டாம் பேர்வழி பெரிய அறிவாளியாக இருக்க வேண்டிய தேவை இல்லை. உங்கள் நண்பராகக் கூட இருக்கலாம். அவர் ஒரு நல்ல வாசகராக இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும்.

இந்த இடத்தில் தான் கொப்பி எடிட்டர் என்ற நபர் நம் பார்வைக்கு வருகின்றார். ஒரு பதிப்பகத்தில் கொப்பி எடிட்டர் என்ற பதவியில் இருப்பவர் பதிப்புலகில் மிகவும் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். தமிழ் எழுத் துலகில் இவர் என்றோ காணாமல் போய்விட்டார் என்பது எனது கணிப்பாகும். ஒரு எழுத்தாளர் தான் எழுதிய எழுத்தில் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் வந்திருப்பதையோ, ஆண்டுகளை தவறாகக் குறிப்பிடுவதையோ, இவ்வகையில் தவிர்க்கலாம்.

நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்களின் கட்டுரைகளில் திருவள்ளுவர் ஆண்டும், கிறிஸ்து வருடமும் சேர்ந்திருந்து வாசகரைக் குழப்புவதை அவதானிக்கமுடிகின்றது. இது மெற்றிக் அலகு முறையைப் பயன்படுத்துவதா அல்லது இம்பீரியல் அளவு முறையைப் பயன்படுத்தவதா என்றவாறாக நாடுகளுக்கிடையே எடுக்கப்படும் தீர்மானம் போன்றதாகும். ஒரு கட்டுரையில் திருவள்ளவர் ஆண்டு வரிசையில் சொல்லத்தொடங்கி இடைநடுவில் கிறிஸ்துவுக்குப் பின்-முன் என்று தொடர்வது ஆய்வை வாசிப்பவர்களைக் குழப்பவே செய்யும். பரிணாம வளர்ச்சியும் மனித வரலாறும் என்ற கட்டுரை இத்தவறுகளை கொண்டுள்ளதை உதாரணமாகக் காட்டலாம். ஒரு கொப்பி எடிட்டர் இறுதிக் கையெழுத்துப்பிரதியை வாசித்திருந்தால் எளிதில் இத் தவறுகளை இனம்கண்டிருப்பார்.

மேலும் ''இந்து சமயம்'' என்ற பதப்பிரயோகமும் ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது கேள்வியாகும். பிரித்தானிய ஆட்சிக் காலத்திலேயே இந்து மதம் என்ற பதப்பிரயோகம் வழங்கப்பட்டதென்பார் கலாநிதி சிவ தியாகராஜா.

இவ்விரு கருத்துகளையும் இங்கு நான் குறிப்பிடுவதன் நோக்கம் சந்தர்ப்பவசமானதாகும். எம்மிடையே இன்று வாழும் ஆய்வுப் புலமைமிக்க நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்களையோ அவரது படைப்புக்களையோ குறைகூறுவதாகாது. அவரது ஆழமான தேடலின் வியர்வை இந்நூலின் பக்கங்கள் தோறும் வியாபித்திருப்பதை எவரும் அறிந்துகொள்ளலாம்.

ஈழத்துத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு மேலும்பல அறிவுசார் கட்டுரை களையும், ஆய்வுகளையும் அவர் வழங்கவேண்டும் என்பதே தமிழ் வாசகர் களின் சார்பில் நான் விடுக்கும் வேண்டுகோளாகும்.

(ஐ.பீ.சீ. வானொலியின் காலைக்கலசம் உரையிலிருந்து... 2011)

22

சங்க இலக்கிய நுகர்வாளர்
நுணாவிலூர் கா. விசயரத்தினம்

அவரது இரு நூல்கள் பற்றியதோர் அறிமுகம்

தமிழ் இலக்கணத்தில் கிறிஸ்துவுக்கு முன் 3ம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியமும், கி.பி.13ம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலும் இன்றளவும் போற்றுதற்குரியனவாகப் பயன்பெறுகின்றன. தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பை வழங்கிய முதல் நூலாக தொல்காப்பியம் கருதப்படுகின்றது. அகத்திய மாமுனிவரால் ஆக்கப்பட்ட அகத்தியம் என்ற தமிழ் இலக்கண நூலை அடியொற்றியே அவரது தலைமைச் சீடரான தொல்காப்பியரால் தொல்காப்பியம் என்ற நூல் எழுதப்பட்டது என்பது வரலாறு.

முதலாம் தமிழ்ச்சங்கம் இருந்த பிரதேசம் கடல்கோளினால் முன்னர் அழிக்கப்பட்டபோது அகத்தியமும், அக்காலத்தைய தமிழ் நூல்களும் இல்லாது போயின என்பதும் வரலாறு. அகத்தியம் என்ற பண்டைய நூல் எம்மிடையே இல்லாத இன்றைய நிலையில் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் எழுந்த நூலான தொல்காப்பியமே இன்று கைக்கெட்டிய முதலாவது தமிழ் இலக்கண நூலாக எம்மிடையே வாழ்கின்றது.

எனது இன்றைய உரையில் *தொல்காப்பியத் தேன்துளிகள்* என்ற தலைப்பில் தமிழறிஞர் கா. விசயரத்தினம் அவர்கள் எழுதி, லண்டனிலிருந்து Century House என்ற வெளியீட்டு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலக்கியச் சுவை மிகுந்த நூல் ஒன்றினை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 224 பக்கங்களில் சென்னையிலிருந்து மணிமேகலைப் பிரசுரத்தினர் அச்சிட்டு வழங்கியுள்ள இந்நூல் 2008ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கு பேராசிரியர் கோபன் மகாதேவா ஆசியுரையையும், மீனாட்சிசுந்தரம் ராஜகோபாலன் அணிந்துரையையும், சைவப்புலவர் கதிரித்தம்பி சிவானந்தன் ஆய்வுரையையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

தொல்காப்பியம் இலக்கண நூலாக வகைப்படுத்தப்பட்டபோதிலும், அதிலும் இலக்கியச் சுவையே பெரிதும் காணப்படுகின்றது. நூலாசிரியர் நுணாவிலூர் கா.விசயரத்தினம் அவர்கள், தொல்காப்பியத்தில் காணப்படும்

இலக்கியச் சுவை பற்றியே இந்நூலில் உள்ள கட்டுரைகளில் விரிவாகக் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியத்துடன் திருமந்திரம், திருக்குறள், திருமுறைகள், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, பரிபாடல், நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, நாலடியார், மனுஸ்மிருத்தி ஆகிய நூல்களிலிருந்தும் மேற் கோள்களை தாராளமாக எடுத்துக்காட்டி சுவைமிகுந்த ஒப்பீடும் செய் திருக்கிறார். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் நிலவியிருந்த சமூக அமைப்புகள், ஒழுக்க விழுமியங்கள், தனிமனிதப் பண்புகள், ஆடை அணிகலன்கள், மக்களிடையே வழக்கிலிருந்த கற்பொழுக்கம், களவொழுக்கம், கைக்கிளை, பெருந்திணை மற்றும் அக்காலத்தில் காணப்பட்ட சாதிய வழமைகள், திருமணங்களும் சீதனப் பரிமாற்றங்களும் என்று ஏராளமான சுவையானதும் சிந்தனையைத் தூண்டுபவையுமான விடயங்களை இந்நூலில் எளிமையான நடையில் வாசித்து வியக்கமுடிகின்றது.

புராதன தமிழ் இலக்கியங்களில் ஆர்வமுள்ளவர்களுக்கு இந்த நூல் ஒரு பெருவிருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

தொல்காப்பியத்துக்கு இளம்பூரணனார் தொடக்கம் ஆறுமுக நாவலர் ஈறாகப் பல அறிஞர்கள் உரை எழுதியிருக்கிறார்கள். அவ்வுரைகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வுகளும் விமர்சனங்களும்கூட காலப்போக்கில் வெளிவந்துள்ளன. தொல்காப்பியத் தேன்துளிகள் என்ற இந்நூலின் ஆசிரியர் இவற்றையும் கவனத்துக்கெடுத்தே தன் ஆய்வினை மேற்கொண்டுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

அக்காலத்தில் தமிழர்களிடையே வழக்கிலிருந்த இறந்தோருக்கான நடுகல் வழிபாட்டு நடைமுறைகள் பற்றியும் இந்நூலில் ஆராய்ந்து விளக்கியுள்ளார். ஆரம்பத்தில் நினைவுத் தூபிகளாக அமைந்து பின்னாளில் பரிணாம வளர்ச்சிபெற்று எமது மூதாதையர் இறைவனின் நிலைக்கு உயர்த்தப்பட்ட நிலைமையினையும் சுவையாக ஓரிடத்தில் எழுதியிருக்கிறார்.

இவை அனைத்தும் தொல்காப்பியச் சூத்திரங்களிலிருந்து எடுக்கப்பட்டு எளிய தமிழில் எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆசிரியர் தன் ஆய்வின் ஓரிடத்தில் பறை வாத்தியம் பற்றியும் கி.மு.3ம் நூற்றாண்டளவில் அதன் பயன்பாடுகள் பற்றியும், இன்று அதன் முரண்பட்டதும் திரிபடைந்தது மான சாதியம்சார்ந்த பயன்பாடு பற்றியும் சுவையாக ஒப்பிட்டுள்ளார். மேலும் தொல்காப்பியம் பிறந்த காலத்தைக் கணிப்பதிலும் தனது ஆய்வின் ஒரு பகுதியை இவர் செலவிட்டுள்ளார். இந்தத் தகவல்கள் அனைத்தும் 16 கட்டுரைகளாக இந்நூலில் விரிகின்றன.

தொல்காப்பியம் கூறுகின்ற முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் போன்ற விடயங்களையிட்டு ஆசிரியரின் பார்வைக் கோணம் மற்ற ஆசிரியர்களைவிட சற்றே வித்தியாசமாயுள்ளதை இந்நூலை வாசித்து முடித்ததும் வாசகர் எளிதில் புரிந்துகொள்வார்.

இலங்கையின் வடமாகாணத்திலுள்ள சாவகச்சேரி என்னும் ஊரின் நுணாவில் என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேயன் விசயரத்தினம் அவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் மேலான பாண்டித்தியமும் மொழிப்பற்றும் கொண்டதொரு சைவப் பாரம்பரியத்தைப் பின்புலமாகக் கொண்டவர். இலங்கையில் அரச கணக்காய்வுத் திணைக்களத் தில் கணக்காய்வு அத்தியட்சகராகக் கடமையாற்றி இளைப்பாறியவர். தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றார். முன்னதாக இவர் *கணினியை விஞ்சும் மனித மூளை* என்ற நூலையும், *பண்டைத் தமிழரும் சமுதாயச் சீர்கேடும்* என்ற நூலையும், Essentials of English Grammer என்ற ஆங்கில இலக்கண நூலையும் வெளியிட்டுள்ளார் என்பதை அறியமுடிகின்றது. இலக்கிய ஆய்வு நூலுக்கான தமிழியல் விருதினை இவர் 2011இல் பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திரு கா.விசயரத்தினம் அவர்களின் *தொல்காப்பியத் தேன்துளிகள்* என்ற நூலின் அறிமுகத்தை மேற்கொள்ளும் அதே வேளையில், இவரது அண்மைக்கால வெளியீடான மற்றுமொரு நூலையும் அறிமுகப்படுத்த விரும்புகின்றேன்.

இலக்கிய அறிவியல் நுகர்வுகள் என்ற தலைப்பில் அண்மையில் 2012 இல் திரு கா.விசயரத்தினம் அவர்கள் 250 பக்கம் கொண்ட இந்த நூலை எழுதியிருக்கிறார். லண்டனிலிருந்து செஞ்சுரி ஹவுஸ் பதிப்பு நிறுவனம் இந்நூலை வெளியிட்டிருக்கிறது.

நூலாசிரியர் பழந்தமிழ் இலக்கியத்தில் தீவிர ஆர்வம் கொண்டவர். அதனால் அவர் எழுதும் நூல்களிலும் கட்டுரைகளிலும் அவை விஞ்ஞானக் கட்டுரைகளாக இருந்தாலென்ன, ஆன்மீகக் கட்டுரைகளாக இருந்தாலென்ன இடையிடையே சங்க இலக்கிய மணம் கமழ்வதை அவதானிக்க முடிகின்றது. இது இவரது தனித்துவமான எழுத்துநடை என்றே கருதவேண்டியுள்ளது.

இலக்கிய அறிவியல் நுகர்வுகள் என்ற நூல் இவரது நீண்டகால நண்பரும் இவர் சார்ந்துள்ள இலக்கிய அமைப்பான பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தின் தாபகருமான பேராசிரியர் கோபன் மகாதேவாவின் முன்னுரை யையும், லண்டனில் இயங்கும் சகோதர இலக்கிய அமைப்பான வேலன் இலக்கிய வட்டத்தின் தாபகர் வித்துவான் ந.வேலன் அவர்களின் மருமகனு

மாகிய சட்டத்தரணி செல்லத்தம்பி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது அணிந்துரையையும் கொண்டுள்ளது. இந்நூலில் பண்டைத்தமிழரின் பழம் இலக்கியங்கள் என்ற கட்டுரை முதலாவதாக இடம்பெறுகின்றது. இரண்டாவதாக தொல்காப்பியர் காலம் கி.மு. 711 என்ற கட்டுரை காணப்படுகின்றது. தொடர்ந்து வரும் கட்டுரைகள் வாழ்வியலில் இலக்கியமும் விஞ்ஞானமும், தொல்காப்பியர் காட்டும் ஆறறிவு உயிர்கள், பண்டைத்தமிழரின் திருமணங்கள், குறுந்தொகையில் இரு இலக்கியக் காட்சிகள், சங்ககால இலக்கியக் காதலும் பின்னெழுந்த பக்திக் காதலும் என்றவாறாகத் தொடர்ந்து 34ஆவது கட்டுரையாக சைவநெறியும் உலக அமைதியும்- திருமந்திரம் காட்டும் வழிபாடு என்ற கட்டுரையுடன் இத்தொகுப்பு நிறைவுபெறுகின்றது. தான் எழுதிய கட்டுரைகளுடன் தொடர்புபட்ட உசாத்துணை நூல்களின் விபரங்களையும் திரு கா. விசயரத்தினம் அவர்கள் 35 ஆவது பதிவாகப் பட்டியலிட்டுள்ளார்.

இந்நூலின் கட்டுரைகள் பெரும்பாலும் பழந்தமிழ் இலக்கியத்தைப் பற்றிப் பேசுவதன் மூலம், பழந்தமிழ் மக்களின் பழக்கவழக்கங்கள் பற்றியும், அவர்கள் தமது அகவாழ்விலும் புறவாழ்விலும் கடைப்பிடித்து வாழ்ந்து வந்த ஒழுக்கலாறுகளைப்பற்றியும் பேசுகின்றன.

பண்டைத்தமிழரின் இலக்கியப் படைப்புகள் பற்றியும் தொல்காப்பியர் காலம் பற்றியும் சங்க நூல்களின் படைப்பாண்டுகள் பற்றியும் ஆராய்ந்து கூறும் ஆசிரியர் குறுந்தொகைக் காட்சிகளில் அப்படியே மனம் லயித்துப் போய்விடுகின்றார்.

உள்ளத்தின் உயர்வுதான் உண்மையான நாகரீகத்தின் உயிர்நாடி என்றும் புறத்தின் வளர்ச்சி வெறும் போலித்தனமே என்றும் கூறும் ஆசிரியர் அக வளர்ச்சியும் புற வளர்ச்சியும் ஒத்த அளவில் வளர்வதே மனித நாகரீகம் மேன்மையுற ஏற்ற வளர்ச்சிப்போக்கு என்ற கருத்தினை முன்வைக்கிறார். இதுவே இவரது *இலக்கிய அறிவியல் நுகர்வுகள்* என்ற நூலின் அடிநாதமாகக் காணமுடிகின்றது.

திரு.கா.விசயரத்தினம் அவர்கள் எழுதிய நூல்களை லண்டனில் தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஆசிரியருடன் நேரில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும். பிரதியொன்றின் விலை 5 பவுண்களாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. லண்டன் புறநகர்ப்பகுதியாகிய கென்ட் பிரதேசத்தில் புரொம்லியில் வாழும் திரு.கா.விசயரத்தினம் அவர்களது தொலைபேசி இலக்கம் 0044 203489 6569 என்பதாகும். (K.Wijeyaratnam 35 Southborough Road, Bickley, Bromley, Kent BR1 2EA)

(ஞாயிறு தினக்குரல் (பனுவல் பகுதி), 04.08.2013: ப. 35.)

23

புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் உரைகல் ஒன்று

ஈழத்துப் படைப்பாளி சு. குணேஸ்வரன் பற்றிய ஒரு பார்வை

ஈழத்தின் முதலாவது கடல்தாண்டிய புலப்பெயர்வு நிகழ்ந்த 1870களில், மலாயாவுக்குச் சென்ற யாழ்ப்பாணத்துத் தமிழர் பலர் அங்கு இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வரலாறு படைத்தனர். இன்று மலேசிய-சிங்கை இலக்கிய வரலாற்றின் ஆரம்பப் பக்கங்களில் அவர்களின் பணிகள் விதந்து கூறப்படுகின்றன. அந்நாளில் இடைநிலை அதிகாரிகளாக ஆங்கிலேயர்களால் அழைத்துச் செல்லப்பட்ட எம்மவர்கள் வண்ணார்பண்ணை, சுழிபுரம், வயாவிளான், புலோலி, வட்டுக்கோட்டை போன்ற ஊர்களைத் தம் பிறந்தக மாகக் கொண்டு மலேசிய மண்ணில் வாழ்ந்தனர். இவர்களில் பலர் முதலாம், இரண்டாம் உலகப்போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஊர் திரும்பினர். சிலர் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி ''சிலோன் டமில்''களாக இன்றும் தனித்துவத்துடன் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள்.

மலாயாவுக்குப் புலம்பெயர்ந்த எம்மவர்களில் ஒருவராக இருந்தவர் 1887களில் வண்ணை அந்தாதி, வண்ணைநகர் ஊஞ்சல், சிங்கைநகர் அந்தாதி ஆகியவற்றைத் தந்த வண்ணார்பண்ணை சி.ந. சதாசிவ பண்டிதர் அவர்கள். இவரே மலாயா மண்ணில் முதல் தமிழ் நூலைத் தந்தவராவார். தங்கைநேசன் என்ற முதல் தமிழ்ச் சஞ்சிகை 1876 இல் பினாங்கிலிருந்து வெளிவந்துள்ளது. புலம்பெயர்ந்த ஈழத்துத் தமிழ் படைப்பாளிகளின் கூட்டுமுயற்சியில் வெளி வந்த இவ்விதழே அந்தமண்ணின் முதலாவது தமிழ்ச்சஞ்சிகையாகக் கருதப் படுகின்றது.

சிங்கப்பூரில் 1893 இல் வெளியான வயாவிளான் க.வேலுப்பிள்ளையின் சிங்கை முருகேசர் பதிகம், 1933 இல் க.வே. கந்தையா எழுதிய கும்பழாவளை விநாயகர் தோத்திரப் பிரபந்தத் திரட்டு, 1941 இல் கிள்ளானிலிருந்து சாஸ்திரி ஏ. ஆறுமுகனார் எழுதிய ஆன்மநாயகன் அருள்வேட்டல், 1951 இல் ம.க.வே.பிள்ளைப் புலவர் எழுதிய சந்திரமௌலீசர் சதகம் போன்றவை தாயக நினைவுகளைத் தாங்கி அந்நிய மண்ணில் வாழத்தலைப்பட்ட ஈழத்

தமிழர் மலேசிய மண்ணில் எழுதிய ஆரம்பகால நூல்கள். இப்பட்டியல் நீண்டது. விரிவஞ்சி இங்கு குறிப்பிடப்படவில்லை. மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டத்தில் இத்தகவல்கள் விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

மலாயாவின் வரலாற்றை முதன்முதலில் தமிழில் எழுதியவரும் நம்மவரே. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சரவணமுத்துப் பிள்ளை முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் மலாயா மான்மியத்தை இரு பாகங்களில் எழுதி முறையே 1937, 1939 ஆகிய இரு ஆண்டுகளிலும் சிங்கப்பூரில் வெளியிட்டிருந்தார்.

மலாயாவின் தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் முன்னோடிகளாகக் கருதப் படுபவர்களில் பலர் ஈழத்தமிழர்களே. புலோலியூர் க.சுப்பிரமணியம் (பால சுந்தரம் அல்லது சன்மார்க்க ஜெயம், 1917-1918), அ.நாகலிங்கம் (சாம்ப சிவம்-ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம், 1927), மு.சீ. செல்லத் துரை (கோரநாதன் அல்லது தென்மலாயகிரியில் வட இலங்கைத் துப்பாளி, 1934), செ.சிவஞானம் (நேசமலர் அல்லது கற்றோரின் கனா, 1936), க. டொமினிக் (அழகானந்த பஷ்பம், 1936), கதிரேசம்பிள்ளை (சயம்புநாதனும் சன்னாசியாரும் அல்லது அறிவாளி, 1935) போன்றோர் பற்றி இன்றும் மலேசிய இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் மறக்காமல் குறிப்பிட்டு வருகிறார்கள்.

யாழ்ப்பாணம் கந்தரோடையில் 1893இல் நன்னித்தம்பி சின்னத்தம்பியின் மகனாகப் பிறந்து சென்று மலாயாவில் இரெங்கான் என்ற ஊரில் புகையிரத நிலைய உதவித் தலைவராய் (Assistant Station Master) பணியாற்றியவர் ந.சி. கந்தையாபிள்ளை. நவாலியூர் மருதப்பு என்பவரின் மகளைத் திருமணஞ் செய்தவர். 1960 இல் ஓய்வுபெற்றபின் இலங்கை திரும்பி ஏழாண்டுகளின்பின், 1967 இல் இலங்கை மண்ணில் மறைந்தார். 60க்கும் மேலான அரிய நூல் களை எழுதியவர். 74 ஆண்டுகள் வாழ்ந்து தமிழர் வரலாற்றையும், கலாச் சாரத்தையும் உலகளாவியரீதியில் தனது நூல்களின் வழியாகப் பரப்பியவர். அக்கால ஆங்கில அறிவியல் நூல்களைத் தழுவி, உலக அறிவியலை தமிழ் வாசகர்களுக்கு இனிய தமிழில் வழங்கியவர். இவர்பற்றிய வரலாற்றுச் செய்திகளை இலங்கையில் பேணிக்காக்கத் தவறிவிட்டோம்.

ந.சி.கந்தையாபிள்ளையின் 65 நூல்களை சென்னை அமிழ்தம் பதிப்பகத் தின் வாயிலாக கோ.இளவழகனார் அவர்கள் 2003இல் 24 தொகுதிகளில் வெளியிட்டிருந்தார். அதற்கான நூலறிமுகவுரை வழங்கிய பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

''திரு. ந.சி. கந்தையாபிள்ளையின் பெயர் தமிழகத்திலேயே தொடர்ந்து போற்றப்படுமளவுக்கு ஈழத்தில் நினைக்கப்படுவதில்லை என்ற உண்மையை மிகுந்த மனவருத்தத்துடன் பதிவுசெய்யவேண்டியுள்ளது. அங்கு அவர் அத்துணைப் போற்றப்படாதிருப்பதற்குக் காரணம் ஏறத்தாழ அவர்களது எல்லா நூல்களுமே தமிழகத்திலேயே வெளியிடப்பெற்றன. இந்நூல்களின் பிரசுரப் பின்புலம் பற்றி எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. அவற்றின் பொருளியல் அம்சங்கள் பற்றிய தரவுகளும் இப்பொழுது தெரியாதுள்ளது. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில்கூட இவரது பெயர் முக்கியப்படுத்தப்பெறாது போயுள்ளது.''

இன்று ஈழத்தமிழர்களின் உலகளாவிய நூற்பட்டியலாகத் தனது ஒன்பதாவது தொகுதியில் நின்று 9000 ஈழத்துத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தியிருக்கும் நூல்தேட்டம் பெருந்தொகுப்பிற்கு முன்னர் இலக்கிய வரலாற்றாய்வாளர்களால் ஈழத்தமிழரின் இலக்கியங்களுக்கான அநாதரட்சக நூற்பட்டியல்களாகக் கருதப்பெற்ற எப்.எக்ஸ்.சி. நடராஜா, கனக. செந்திநாதன், சில்லையூர் செல்வராசன் போன்றோரின் பட்டியல்கள் எதுவும் இவர்கள் எவரையும் ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளாக இனம்காணவில்லை என்பதும் இங்கே குறிப்பிடப்படவேண்டியதாகும்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை பல்வேறு காலகட்டத்திலும் எழுதிய எம்மவர்கள் அன்றைய புலம்பெயர் இலக்கியகர்த்தாக்களை ஈழத்துத் தமிழ் இலக்கிய வாதிகளாகக் கருத மறுத்துவிட்டமையை இதுவரை வெளிவந்த பழைய வரலாற்று நூல்களை ஆழ்ந்து கற்கும்போது உணரமுடிகின்றது.

1977, 1983 இனக்கலவரங்களும், பின்னர் எழுந்த ஆயுதப்போராட்டச் சூழலும் ஈழத்தமிழர்களை மீண்டும் கடல்கடந்து புலம்பெயர வழியமைத்தன. அப்படிச்சென்று வாழத் தலைப்பட்ட பிரபல ஈழத்து எழுத்தாளர்களைப் பின்னைய ஈழத்து இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் ஈழத்துப் படைப்பாளிகளாகவே இனம்காணும் சூழ்நிலை உருவாகியது. இதற்கு இணையத்தளங்களின் அறிமுகம் மற்றும் மின் ஊடகங்கள் பெருமளவில் உதவின. அவ்வகையில் இன்று கனடாவில் வாழும் அ.முத்துலிங்கம், உ.சேரன், டென்மார்க்கில் வாழும் அ.பாலமனோகரன், ஜேர்மனியில் வாழும் இந்து மகேஷ், லண்டனில் வாழும் முல்லை அமுதன், பிரான்சில் வாழும் கி.பி. அரவிந்தன், எனப் பெரும்பட்டியலே ஈழத்துப் படைப்பாளர்களாக இனம்காட்டுகின்றது.

வரலாற்றாய்வாளர்களின் இந்த மனமாற்றத்தின் அடுத்ததொரு பரிமாணமாக புலம்பெயர்ந்தோர் இலக்கியம் (புலம்பெயர்ந்த ஈழத்தவர் படைக்கும் இலக்கியங்கள்), புகலிட இலக்கியம் அல்லது புலம்பெயர்

இலக்கியம் (புலம்பெயர் வாழ்வு பற்றிய யூத இலக்கியங்களையொத்த பன்னாட்டு இலக்கியங்கள்) என்று புதிய தளங்களை ஆய்வுலகிற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன் இவற்றை ஈழத்துப் படைப்பிலக்கிய உலகத்தின் நீட்சியாகவும் கருதுகின்றார்கள்.

இத்தகைய பின்னணியில் நின்று நாம் இன்றைய புலம்பெயர்ந்த ஈழத்து இலக்கியகர்த்தாக்களின், படைப்பாளிகளின் படைப்புலகத்தை தாயகத்தில் அறிமுகப்படுத்தும் ஆய்வாளர்கள் பற்றியதொரு தேடலை மேற்கொண்டால் முதலில் எமது கண்களுக்குள் சிக்கும் பெயர் ''சு. குணேஸ்வரன்'' என்பதாகவே அமைகின்றது. சு. குணேஸ்வரனின் படைப்புலகமும் ஆய்வுலகமும் புலம் பெயர்ந்த தமிழரையே சுற்றிவருவதை அவரது படைப்புகள் பற்றியதும், அவர் இதுவரை மேற்கொண்ட ஆய்வுகள் பற்றியதுமான தகவல்களைக் காணும்போது எம்மால் உணரமுடிகின்றது.

1971இல் பிறந்த சு.குணேஸ்வரன் ''துவாரகன்'' என்ற புனைபெயரிலும் இலக்கிய உலகில் அடையாளம் காணப்படுபவர். யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றும் இவர் அல்வாய், தினைப்புனத்தில் வசிப்பவர்.

தனது ஆரம்பக் கல்வியை கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியைத் தான் தற்போது கற்பிக்கும் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யாழ்/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1999இல் தமிழ் சிறப்புப் பட்டதாரியாகத் தேறியவர். தனது (எம்.பில்) முது தத்துவமாணிப் பட்டத்தை 2006 இல் யாழ்.பல்கலைக்கழகத்திலேயே பெற்றுக்கொண்டவர். கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை இங்கே மேற்கொண்டு வருகின்றார்.

1999 இல் பல்கலைக்கழகத்தின் தமிழ் சிறப்புப்பட்டத்திற்கான ஆய்வாக ''புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் கவிதைகள்-ஓர் ஆய்வு'' என்ற தலைப்பைத் தேர்ந்து கலாநிதி நா.சுப்பிரமணியனின் நெறிப்படுத்தலில் ஆய்வை மேற்கொண்டவர். அதுவே பின்னாளில் சு.குணேஸ்வரனின் புலம்பெயர் தமிழ் இலக்கியங்களின் பாற்பட்ட ஈர்ப்பினை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்று கருதுகின்றேன். பின்னாளில் தனது முது தத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வினை 2006இல் மேற்கொண்டபோது ''இருபதாம் நூற்றாண்டில் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் கவிதை, புனைகதைகள்-ஓர் ஆய்வு'' என்ற தலைப்பைத் தன் ஆய்வுக்காகத் தேர்ந்தார். இவரது ஆய்வுநெறியாளராக பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழிநடத்தியிருந்தார்.

தற்போது தனது கலாநிதிப் பட்டத்திற்காக ''ஈழத்தமிழரின் புலம்பெயர் தமிழ் நாவல்கள்- ஒரு நுண்ணாய்வு'' என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத் திருக்கிறார்.

இவரது பல்கலைக்கழக வாழ்வின் ஆய்வுகள் அனைத்துமே புலம்பெயர் தமிழரின் இலக்கியத்தை நோக்கிய குவிமையத்தைக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்கமுடிகின்றது. இதுவே இன்று புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துத் தமிழ்ப்படைப்பாளிகளுக்கு, தமது படைப்பிலக்கியத்தரத்தை உரசிப் பார்க்கக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகக் கருதலாம்.

சு.குணேஸ்வரன், தனது பல்கலைக்கழக மட்டத்தின் ஆய்வுகளுக்கு மாத்திரம் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தைத் தேர்ந்துகொண்டவர் அல்லர். அதற்கப்பால் அவர் மாநாடுகளில் சமர்ப்பித்துள்ள பல ஆய்வுநிலைப்பட்ட கட்டுரைகளை அவதானிக்கும்போதும் இத்துறையில் அவரது தேடலின் ஆழ அகலங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன.

2010 இல் கோவையில் நடந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கலந்துகொண்டு வாசித்த ஆய்வுக்கட்டுரையின் தலைப்பு ''புலம்பெயர் சிற்றிதழ்களின் அரசியல்'' என்பதாகும். ஜனவரி 2011 இல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்டு வாசிக்கப்பட்ட இவரது ஆய்வுக்கட்டுரை ''இலத்திரனியற் சூழலில் புகலிடச் சிற்றிதழ்கள்'' என்பதாகும்.

கொழும்புத் தமிழ்ச்சங்க விழாவில் 2012 இல் வாசிக்கப்பட்ட ஒரு ஆய்வுக்கட்டுரை ''புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க் கல்வி'' என்பதாகும். இவ்வாறாக 2013 இல் மட்டும் எஸ்.ஏ.உதயனின் நாவல்கள் (சென்னை தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தேசிய கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டது), ஷோபாசக்தியின் நாவல்கள் (அம்பாறை ஒலுவில் பல்கலைக்கழகம் நடாத்திய மூன்றாவது சர்வதேச ஆய்வு மாநாட்டில் வாசிக்கப்பட்டது), அ.முத்துலிங்கத்தின் உண்மை கலந்த நாட்குறிப்புகள்- ஓர் ஆய்வு (யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம் நடத்திய தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டுப் பெருவிழாவில் வாசிக்கப்பட்டது), புகலிடப் புனைகதைகளின் வடிவம் (லண்டனில் உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் நடத்திய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது) ஆகிய நான்கு ஆய்வுக் கட்டுரைகளை தாயகத்திலும் புகலிடத்திலும் சமர்ப்பித்திருக்கிறார்.

புலம்பெயர் வாழ்வில் பல்வேறு வாழ்வியல் அழுத்தங்களுக்குள்ளும் இலக்கிய தாகத்தைத் தணியவிடாது மெருகேற்றித் தமது படைப்புகளின் வழியாகத் தந்துவரும் புலம்பெயர் படைப்பாளிகளின் படைப்புக்களை

ஆய்வுக்குட்படுத்தி அவர்களது படைப்புகளை மீள்வாசிப்புக்குட்படுத்தி ஆரோக்கியமானதொரு உயர்தர இலக்கியத் தொடர்பாடலை- கருத்துப் பரிவர்த்தனையை சு. குணேஸ்வரன் தனித்துநின்று ஒரு இயக்கமாக மேற் கொண்டு வருவதை என்னால் அவதானிக்க முடிகின்றது. அவ்வகையில் பார்த்திபனின் எழுத்துக்கள், ஷோபாசக்தியின் நாவல்கள், கி.பி. அரவிந்தனின் பாரிஸ் கதைகள், அ. இரவியின் காலம் ஆகிவந்த கதைகள், அ. முத்து லிங்கத்தின் உண்மை கலந்த நாட்குறிப்புகள், கருணாகரமூர்த்தியின் படைப்பு கள், ஆ.சி. கந்தராஜாவின் படைப்புகள், கி.செ. துரையின் நாவல்கள், கலா மோகனின் கதைகள், சுமதி ரூபனின் சிறுகதைத் தொகுதி, ஆழியாளின் துவிதம், சுவிஸ் ஊடறு வெளியீடான பெயரிடாத நட்சத்திரங்கள்: பெண் போராளிகளின் கவிதைகள் என்று பல்வேறு புலம்பெயர்ந்த ஈழத்துப் படைப்பாளர்களின் பிரசுர முயற்சிகளையும் சு.குணேஸ்வரனின் விரிவான தேடலுக்கு உதாரணமாக இங்கே குறிப்பிடலாம்.

சு. குணேஸ்வரன் இன்று வடமராட்சியில் இயங்கும் உயில் கலை இலக்கியச் சங்கத்தின் செயற்பாட்டாளர்களுள் ஒருவராக உள்ளார். தொண்டைமானாறு கெருடாவில் கலை இலக்கியச் சாகரம் என்ற அமைப்பினால் கொண்டுவரப்பட்ட சக்தி என்ற இதழின் ஆசிரியர்களுள் ஒருவராகவும் இருக்கிறார். இவரது இணைய வலைப்பதிவு www.vallaivelie.blogspot.com இவரது சகல ஆக்கங்களையும் தாங்கிச் சிறப்புற்று இயங்கி வருகின்றது.

மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள் என்ற கவிதைத் தொகுப்பு (2008), அலைவும் உலைவும் என்ற பெயரில் புலம்பெயர் படைப்பிலக்கியம் குறித்த கட்டுரைத் தொகுப்பு (2009), புனைவும் புதிதும் என்ற தலைப்பில் வெளியான ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு (2012) என்பன இவரது ஆக்கங்களைத் தாங்கிய நூல்களாகும்.

அம்மா-தேர்ந்த கவிதைகள் (2007), வெளிநாட்டுக் கதைகள் (2007), கிராமத்து வாசம் (2008), பாட்டிமார் கதைகள் (2010), கதை கதையாம் (2012) ஆகிய தொகுப்புக்களை இவர் பல்வேறு நினைவு மலர்களாகத் தொகுத்து யாழ்ப்பாணத்தின் கல்வெட்டுப் பாரம்பரியத்தை அடுத்ததொரு பரிணாம வளர்ச்சியைக்காண வைத்துள்ளார்.

இன்று உலகின் பல நாடுகளிலும் வாழும் ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புகளின் உரைகற்களாக விளங்கும் சு. குணேஸ்வரனின் ஆய்வுத் தேடலுக்குப் புகலிட வாழ்வில் எம்மைத் தொலைத்துக்கொண்டு இலக்கியத் தினூடாக வாழும் நமது படைப்பாளிகளின் பங்களிப்பும் முக்கியமானதாகும்.

அவரது தேடலை இலகுவாக்கத் தத்தம் படைப்புகளை சு. குணேஸ்வரனின் பார்வைக்கும் அனுப்பிவைத்து புலம்பெயர் வாழ்வியலை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலிருந்து பிரித்தொதுக்கமுடியாதவொரு தளமாக எதிர்கால தமிழியல் ஆய்வாளர்கள் கொள்ள வழிவகை செய்தல் வேண்டும். அத்துடன் மேலும் பல புதிய புகலிட இலக்கியத் திறனாய்வாளர்களை ஈழ மண்ணிலிருந்து தம் பக்கம் நோக்கி வரித்தெடுக்க வேண்டிய கடமையும் எம்மவர்களுக்கு உண்டு. இதற்காக புலம்பெயர் நாடுகளிலிருந்து நாம் எமது இரு கைகளையும் தாயகத்தைநோக்கி நீட்டவேண்டியது அவசியமாகும். புகலிடத்துத் தரமான வெளியீடுகள் பல தாயகத்தைச் சென்றடையாமல் தமிழகத்துடனேயே நின்றுவிடுகின்றன. இந்நிலை முன்னர் ந.சி.கந்தையாவுக்கு ஏற்பட்டது. 21ம் நூற்றாண்டிலும் இந்நிலை தொடர்வது இனிமேலாவது தவிர்க்கப்படவேண்டும்.

திறனாய்வுகளின் மூலம் எமது புகலிடப் படைப்பிலக்கியத்தை செழுமையுறச் செய்ய வேண்டும். தரமற்ற நாவல்கள், அர்த்தமற்ற சிறுகதைகள் போன்று, இன்று கட்டுரையா கவிதையா என்று குழப்பங்களைத் தரும் கவிதைத் தொகுதிகளின் வருகையும், புகலிடத்தில் பெருகியுள்ளன. தரமான நூல்களை விதந்து போற்றுவதுடன் மட்டும் நின்றுவிடாது, தரமற்ற வளர்முகப் படைப்பாளிகளின் நூல்களையும் பெற்று, சு.குணேஸ்வரனையொத்த தீவிரமான, நேரிய திறனாய்வாளர்கள் விமர்சித்து, அவர்கள் திருந்த வழி காட்டி, எதிர்காலத்தில் தரமான கவிதைகளைத்தரும் நோக்கில் ஆழமான தேடலையும் வாசிப்பையும் பெற்றுக்கொள்ள வழிசமைக்கவேண்டும்.

(மீள்பிரசுரம்: ஞானம் இதழ் 162, நவம்பர் 2013: ப.28-31. வீரகேசரி வாரமலர், 24.11.2003. ஞாயிறு தினக்குரல் 24.11.2013, 1.12.2013, 8.12.2013.)

24

தமிழரின் உணர்வுகளை உரத்துச் சொல்லும் இரு சிங்களப் படைப்பாளிகளும் அவர்களது நூல்களும்

இலங்கையில் 2009ம் ஆண்டு தமிழ் இனவிடுதலைப் போராட்டத்தின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இன ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் இலக்கியப்பாலத்தைச் செப்பமிட்டுக் கட்டியெழுப்பும் பணி பல்வேறு முனைகளிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழர்கள் புகலிடத்து மொழிகளை சரளமாகக் கற்றுத் தேர்ந்து அம்மொழிகளிலேயே ஆளுமையுடன் இலக்கியம் படைக்கும் காலம் இது.

இலங்கையில் மட்டும் நிலைமை மாறுபாடானது. சிங்களத்தை அரசியல் காரணங்களால் திணிக்க முற்பட்டதன் விளைவாக அம்மொழியையே வெறுப்புடன் பார்த்து அம்மொழியின் இலக்கியங்களையே தவிர்க்கும் நிலை காலம்காலமாக ஈழத்தமிழர்களிடையே உருவாக்கப்பட்டுவிட்டது. சாதாரணச் சிங்கள மக்களுக்கும் அவர்களுடன் இலங்கைத்தீவில் வாழும் மற்றொரு இனமான தமிழர்களின் உள்ளத்தையும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், நியாயமான உரிமை மறுப்புகளையும் இலக்கியங்களின் வாயிலாகவேனும் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் இனவாதம் என்ற நோயின் காரணமாக இருசாராலும் காலம்காலமாக மறுக்கப்பட்டு வந்துள்ளது.

காலத்துக்குக் காலம் சில சிங்கள எழுத்தாளர்கள் தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு படைத்திருந்த படைப்பாக்கங்கள்கூட முறையாகத் தமிழர்களிடையேயும், சிங்களவர்களிடையேயும் பரந்த அளவில் எடுத்துச் செல்லப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

சிங்களப் படைப்பாளிகளிடையே எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, சிட்னி மார்க்கஸ் டயஸ், ஹேமசிறி குறுப்பு, மடுளுகிரியே விஜேரத்தின, தம்மிக்க ஜெயசிங்க போன்றோர் தமிழ் சிங்கள மக்களிடையே இலக்கியத்தின் மூலம் இனங்களுக்கிடையேயான உறவுப் பாலத்தைக் கட்டியமைக்கவேண்டும் என்ற உணர்வுடன்

செயற்படுபவர்கள். அசாதாரண தமிழ் அறிவுமிக்க இவர்களின் உரைகளைத் தமிழில் கேட்கும் வாய்ப்பு எனக்கு 2013 இல் இலங்கையில் கிடைத்திருந்தது. அவுஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளர் முருகபூபதி, தான் சார்ந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் அவுஸ்திரேலிய அமைப்பினால் ஒரு நூல்வெளியீட்டு விழாவை இலங்கையில் ஒழுங்குசெய்திருந்தார். மூன்று மொழிபெயர்ப்பு நூல்களின் வெளியீட்டு விழா 2013ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடந்தது. அவ்வேளையில் எனது நூல்தேட்டப் பணிகளுக்காக இலங்கையில் தங்கியிருந்தமையால் அந்நிகழ்வில் கலந்துகொள்ளும் அரிய வாய்ப்பும் எனக்குக் கிட்டியிருந்தது.

இங்கு உரையாற்றிய அனைத்துச் சிங்கள எழுத்தாளர்களும் தமிழ்ப் படைப்பாளிகளுக்கு நிகராக, சரளமான தமிழில் உரையாற்றியதைக் காண முடிந்தது. அவர்களது உரைகளின்போது, தமிழர்களின் இனப்பிரச்சினையையும், விடுதலைப் போராட்டத்தையும் அதன் நியாயத்தன்மையையும் நன்கு விளங்கியிருந்தமையை எவ்வித ஒளிவு மறைவுமின்றி, பகிரங்கமாக அந்த மேடையில் அவர்கள் உரையாடியதை நேரில் கேட்டுணரக்கூடியதாக இருந்தது. துர்அதிர்ஷ்டவசமாக சிங்கள அரசியல்வாதிகளாலும், மேலாதிக்க தீவிரப் போக்காளர்களாலும் மழுங்கடிக்கப்பட்டு வந்ததால் இவர்களின் குரல்கள் இவ்வளவுகாலமும் தமிழர்களை எட்டியிருக்கவில்லை- இவர்களது படைப்புகளும்கூடத்தான்.

இத்தகைய படைப்புலகப் பின்னணியிலேயே இலங்கையில் வெளிவந்த இரு நூல்கள் பற்றிய எனது பார்வையைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இங்கு அறிமுகப்படுத்தவுள்ள முதலாவது நூல் *மொழியும் மனிதநேயமும்* என்ற தலைப்பில் எஸ்.ஜீ. புஞ்சிஹேவா எழுதிய ஆய்வு நூலாகும். இதன் மூலநூல் கொழும்பு- மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டிருந்தது. இந்நூல் எஸ். சிவகுருநாதன் அவர்களால் எளியநடையில் தமிழாக்கம் செய்யப்பட்டு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

பக்கச்சார்பின்றி மொழியின் பயன்பாட்டில் சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் அரசியல்வாதிகளும் அதிகாரபீடங்களும் செய்த தவறுகளை இந்நூல் சுட்டிக்காட்டுகின்றது. மொழி தொடர்பான விடயத்தை உணர்ச்சிகரமாகவல்லாது அறிவுபூர்வமாக இந்நூல் அணுகியிருப்பது சிறப்பம்சமாகும்.

யுத்தம் முடிவடைந்துவிட்டபோதிலும், யுத்தத்திற்கான அடிப்படைக் காரணங்கள் இன்னமும் கண்டறிந்து தீர்வுகாணப்படவில்லை என்ற எம்மவரின் கருத்தையே சிங்களப் புத்திஜீவியான எஸ்.ஜீ.புஞ்சிஹேவா தனது நூலில் வலியுறுத்தியுள்ளார். ''எமது சிங்கள மொழி தாயைப்போன்றது. நாம் பெற்ற அனைத்தும் மொழியை முதன்மைப்படுத்தியவையே. நாம் மொழியுடனேயே பிறந்து வளர்ந்தோம். எமது மனிதத்துவத்தை நாம் மொழியின் மூலமே வெளிப்படுத்துகின்றோம். எம்மைப் போன்றே தமிழர்களுக்கும் தமிழ் மொழி தாயைப்போன்றதே. தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்தையும் கௌரவத்தையும் வழங்காத எமது பழக்கதோஷத்தின் காரணமாகவே 30 ஆண்டுகளாக ஒரு துன்பியல் வரலாற்றை எழுதிவைத்திருக்கிறோம்'' என்று தமது சக இனத்த வருக்கு இடித்துரைத்துள்ளார் எஸ்.ஜீ.புஞ்சிஹேவா.

''எமது மனிதத்துவத்தின் பொதுத்தன்மை மொழிமூலம் வேறுபடுவதாகப் பட்டால் மற்றையவர்களின் மொழியையும் நாம் கௌரவிக்கவேண்டும். அத்தகைய கௌரவிக்கப்படும் உரிமையை ஒரு இனம் இழக்கும்போது, அவ்வினம் எவ்வாறு மனஉறுத்தலுக்கு உள்ளாகும் என்பதை நாம் புரிந்துகொள்ளவில்லை. அவ்வாறான சந்தர்ப்பத்தில் தமது தாயை, தமது ஆத்மாவை, தாம் மனிதர் என்ற உணர்வைப் புறக்கணிப்பதாகவே தமிழர்கள் உணர்வார்கள்'' என்று மேலும் அவர் அழுத்தமாகக் குறிப்பிடுகின்றார்.

மொழி, அதன் பண்பு, மனிதத்தன்மை, அதற்கான உரிமைகள், என நூலின் ஆரம்பமே மனதுடன் உறவாடத் தொடங்குகின்றது. மொழி தொடர் பான சட்டங்கள், சுற்றறிக்கைகள் பற்றி விரிவாக இந்நூல் பதிவுசெய்கின்றது.

ஒவ்வொரு மனிதனும் தனது பணிகளைச் சிறப்பாகவும் சிரமமின்றியும் ஆற்றுவதற்கு அவனது தாய்மொழியே வசதியானது. ஆனால் எம்மொழியின் மூலம் ஆட்சி நடத்தப்படவேண்டும் என்ற விடயத்தை 1815 இல் எழுதப்பட்ட கண்டி ஒப்பந்தத்தில் குறிப்பிடவில்லை. ஆயினும் ஆங்கிலமே அக்காலத்தில் நடைமுறையில் ஆட்சி மொழியாக இருந்துவந்தது. நிர்வாகத்தில் சுய மொழியின் பாவனை பற்றி 1939 இல் பிலிப் குணவர்த்தனா என்ற டொன் பிலிப் ரூபசிங்க குணவர்த்தனாவே முதலில் குரல் எழுப்பியிருந்தார். இவர் காலனித்துவத்துக்கு எதிரான அமைப்பில் 1927 முதல் இயங்கியவர். தமிழும் சிங்களமும் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் என்ற நியாயமான பிரேரணை 1945 இல் கொண்டுவரப்பட்டது. ஆனால் 1956 இல் சிங்களம் மட்டும் அரசகரும மொழியானது. அன்றே எமது நாட்டின் இன ஒற்றுமைக்கு எதிரான வித்து ஊன்றப்பட்டது. 1958 இல் தமிழ் மொழியின் உபயோகச் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் பின்னர் 1972 இல் பௌத்தம் அரச

மதமாகவும், சிங்களம் அரசகரும மொழியாகவும் ஆக்கப்பட்டது. தமிழும் நிர்வாக மொழியாக பெயரளவில் ஏற்கப்பட்டது. சட்டங்கள் எவ்வாறு இருந்தபோதிலும் அவை இலங்கையின் வரலாற்றில் என்றுமே சரியான முறையில் நேர்மையாக அமுல்படுத்தப்படவில்லை. இவ்விபரங்களையெல்லாம் தனது மொழியும் மனிதநேயமும் என்ற நூலில் விரிவாக எஸ்.ஜீ. புஞ்சிஹேவா அவர்கள் எழுதியிருக்கிறார்.

இந்நூலின் இறுதி அத்தியாயம் மனித உரிமைப் பிரகடனமும் மொழியுமாகும். இனம், மதம், மொழி சார்ந்த சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய ஐ.நா.சாசனம் பற்றியும், அதில் இலங்கை கையெழுத்திட்டது பற்றியும் இவ்வத்தியாயம் நினைவுறுத்துகின்றது. இன்று ஆயுத யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது உண்மை. ஆனால் அந்த யுத்தத்தில் எவரும் வெற்றியடையவில்லை. மொழியை அடிப்படையாகக் கொண்டே நாம் வெற்றியை எதிர்காலத்தில் அடையமுடியும். தொடர்ந்தும் அரசியல், நிர்வாக நடவடிக்கைகளால் தமிழ் அல்லது சிங்கள மொழிக்கு பாகுபாடு காட்டப்பட்டால் அது மேலும் வெடிமருந்து சேகரிப்பதற்கு வலிகோலும் என்று தனது அரசை எஸ்.ஜீ.புஞ்சிஹேவா இந்நூல்வழியாக எச்சரிக்கின்றார்.

அடுத்து அறிமுகப்படுத்த விரும்பும் நூல் ஒரு சிறுவர் நாவலாகும். முல்லைத்திவ் சீயா என்ற பெயரில் சிட்னி மார்க்கஸ் டயஸ் எழுதிய சிங்களச் சிறுவர் நாவல் தமிழில் *முல்லைத்தீவு தாத்தா* என்ற பெயரில் திக்குவல்லை கமால் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டு 119 பக்கம் கொண்ட நூலாக தோதன்ன பப்ளிஷிங் ஹவுஸ் என்ற வெளியீட்டகம் ஆனமடுவவிலிருந்து வெளியிட்டுள்ளது.

மூல நூலாசிரியர் சிட்னி மார்க்கஸ் டயஸ் ஆனமடுவ தோதன்ன அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர். பிரபல சிங்கள எழுத்தாளரான இவர் தோதன்ன பதிப்பகம் என்ற பெயரில் ஒரு நூல்வெளியீட்டகத்தையும் இயக்கிவருகின்றார். இலக்கியத்தினூடாக இனஒற்றுமைக்கான புரிந்துணர்வுப் பாலமொன்றைக் கட்டியெழுப்பும் முயற்சியில் இவரது அமைப்பு தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. 2009 இல் 16 தமிழ் நூல்களை மொழிபெயர்ப்புச்செய்து ஒரே அரங்கில் அறிமுகம்செய்து தனது பணியை இவ்வமைப்பு ஆரம்பித்திருந்தது. பின்னர் 2010 இலும் 15 மொழிபெயர்ப்பு நூல்களை அறிமுகப்படுத்தியிருந்தது. அதன் ஒரு கட்டமாகவே கடந்த 2013இல் அவுஸ்திரேலியப் படைப்பாளிகள் இருவரான முருகபூபதி, நெயல் நடேசன் ஆகியோரின் நூல்களை கொழும்பில் தோதென்ன பதிப்பகம் வெளியீடு செய்திருந்தது.

மட்டக்களப்பில் ஓ.கே. குணநாதனின் மேலாண்மையில் இயங்கும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இவரது இலக்கியத்தினூடாக இனங்களுக்கிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்தும் முயற்சிகளை கௌரவித்து சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழியல் விருதினை வழங்கிக் கௌரவித்திருந்தது.

இவரது முல்லைத்தீவு தாத்தாவின் கதைக்கருவும் இன ஒருமைப்பாடு சார்ந்த ஒரு கருவில் உதித்த நூலாகவே உள்ளது. இலங்கையின் இனப் பூசலுக்கான நதிமூலத்தை இளந்தலைமுறையினருக்கு விளக்கும் முயற்சியில் முல்லைத்தீவு தாத்தா என்ற கதாபாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தில் தமிழர்கள் உயர்பதவிகளில் நிறைந்திருந்த காலமொன்றிருந்தது. அக்காலத்தில் புகையிரத நிலையமொன்றில் பணியாற்றி இளைப்பாறியவர்தான் பரராசசிங்கம் என்ற முல்லைத்தீவு தாத்தா. இலங்கையின் இனவாத யுத்தத்தினால் அலைக்கழிக்கப்பட்டு அதில் தப்பிப்பிழைத்து முதுமை வயதில் வாழுகின்றார்.

பாதைப் போக்குவரத்து சீரடைந்து பொதுப்போக்குவரத்து வசதிகள் உள்ள நிலையில் அவருக்கு ஒரு ஆசை வருகிறது. அவர் முல்லைத்தீவிலிருந்து புறப்பட்டு, தனது பழைய தொழில் சிநேகிதன் சுமனசேகராவைச் சந்தித்து மலரும் நினைவுகளை பரிமாறிக்கொள்ள விரும்புகின்றார். யாழ்ப்பாணத்தின் பிரசித்தமான பனம்பாணிப் போத்தலுடன் திணைக்கள நண்பன் வாழும் சிங்களப் பிரதேசத்துக்குப் போகிறார். அங்கு அவரது நண்பன் முன்னரே இறந்துவிட்ட செய்தி கிட்டுகிறது. மனமுடைந்து போகிறார். பழைய சிநேகிதன் சுமனசேகராவின் மனைவி முல்லைத்தீவிலிருந்து வந்த கணவனின் நண்பரை வரவேற்று உபசரிக்கிறார். தங்களுக்குப் பின்னரான இரு தலைமுறையினரை பரராசசிங்கம் அங்கு சந்திக்கிறார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பனம்பொருள்கள் ஆரம்பத்தில் பேசுபொருளாகின்றன. தொடர்ந்து இனவாதத்தின் ஆரம்பம், சிங்கள -தமிழர்களிடையே பிரிவினை, தமிழர்களின் மீதான அடக்குமுறை அதன் ஒரு பரிமாணமாக விடுதலை இயக்கங்களின் தோற்றமும் செயற்பாடுகளும் அங்கு தொடர்ந்து உரையாடலாகப் பதிவாகின்றன. இறுதியில் முகாம் வாழ்க்கை வரையில் நேர்முக வர்ணனைகளாக நகர்த்திச்சென்று முல்லைத்தீவு தாத்தா கதையை முடிக்கிறார். தொடரப்போகும் சந்ததியினரிடையே தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான தெளிவை ஏற்படுத்தி தமிழர்கள் சிங்களவர்களின் எதிரிகளல்லர் - அவர்களும் சம உரிமையுடன் வாழ்ப்பிறந்த ஒரு சகோதர இனமே என்ற உண்மையை இளம் சிங்களச் சந்ததிக்குப் புரியவைத்த

மன நிறைவோடு மீண்டும் முல்லைத்தீவுக்குச் செல்வதுடன் கதையும் முடிவு பெறுகின்றது.

நான் மேற்குறிப்பிட்ட இரண்டு நூல்களும் இருவேறு பரிமாணங்களில் தமிழர்-சிங்களவரின் ஒற்றுமையை வலியுறுத்துவனவாக சிங்களவர்களால் எழுதப்பட்ட நூல்களாகவே அமைந்துள்ளன. தமிழர்களின் அபிலாஷை களையும், அவர்கள் ஆயுதமேந்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட காரணத்தை யும் அழுத்தமாகப் பதிவுசெய்யும் வகையில் தமிழ் எழுத்தாளர்களினாலும் நூல்கள் எழுதப்பட்டு சிங்களப் பொதுமக்களைச் சென்றடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தேவையை இவ்விரு நூல்களும் வலி யுறுத்துகின்றன. இத்தகைய முயற்சிகளுக்கு தோதன்ன பதிப்பகம் ஆதர வளிக்கக் காத்திருப்பதாக அதன் உரிமையாளர் சிட்னி மார்க்கஸ் டயஸ் 2013 ஜனவரியில் என்னைச் சந்தித்தவேளையில் குறிப்பிட்ட செய்தியையும் இவ்விடத்தில் பதிவுசெய்வது பொருத்தமாகும் என்று கருதுகின்றேன்.

(ஞானம், இதழ் 169: ஒளி 15, சுடர் 1, ஜூன் 2014: ப.32-35.)

25

ஒரு முன்னாள் போராளியின் முள்ளிவாய்க்கால் நினைவுகள்

'முயற்சித் திருமகள்' வெற்றிச்செல்வியின் படைப்பாளுமை

ஈழப் போரின் இறுதி நாட்கள் என்ற தலைப்பில் கடந்த 2012 இல் வெளிவந்த ஒரு நூல் அண்மையில் என் கைக்கெட்டியது. இந்நூலின் ஆசிரியர் வெற்றிச்செல்வி என்ற இயக்கப் பெயரைத் தாங்கியவரான வேலு சந்திரகலா. மன்னார் மாவட்டத்தில் அடம்பன் தாமரைக்குளம் கிராமத்தில் 1974 இல் பிறந்த சந்திரகலா, 1991 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து வெற்றிச்செல்வியானவர்.

இவர் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த இறுதியுத்தம் வரை போராளியாகச் செயற்பட்டவர். முன்னர் 1993 இல் வெடிவிபத்தொன்றில் தனது ஒற்றைக் கண்ணையும், ஒற்றைக் கையையும் இழந்த மாற்றுத்திறனாளி இவர். 1997 முதல் எழுத்துத் துறையில் பிரவேசித்த இவர் தனது கவிதைகள், சிறுகதைகள் வழியாகப் பெயர்பெற்றவர். குறுகிய காலத்தில் ஈழத்துத் தமிழ்மக்களின் சமகால இருத்தலைப் பதிவுசெய்யும்இவரது ஐந்து நூல்கள் பின்னாளில் அச்சுவாகனமேறியுள்ளமை பிரமிப்பூட்டுகின்றது.

1999 முதல் 2004 வரையிலான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஊடகச்சேவையில் இணைந்து, புலிகளின்குரல் வானொலியில் அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் வெற்றி கரமாகச் செயற்பட்டவர் வெற்றிச்செல்வி. அத்துடன், பெண் புலிப் போராளி களின் உத்தியோகபூர்வ வெளியீடான சுதந்திரப் பறவைகள் பத்திரிகையிலும் ஊடகவியலாளராகக் களப் பணியாற்றியவர்.

இவரது ''இப்படிக்கு அக்கா'' என்ற கவிதைத் தொகுதி கிளிநொச்சியில் 2004 இல் வெளியிடப்பட்டது. இதுவே இவரது முதலாவது நூல். பின்னைய நூல்கள் அனைத்தும் விளம்பரமின்றி மௌனமாகப் பெய்யும் மழையாகின. அதுவே எனது இவ்வறிமுக உரைக்கான தேவையையும் வலியுறுத்துகின்றது.

2009 இல் துப்பாக்கிகள் மௌனிக்கப்பட்டு முள்ளிவாய்க்காலில் ஈழ யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் காரணமாக, இராணுவத்திடம்

சரணடைந்த விடுதலைப் போராளிகளுடன் வெற்றிச்செல்வியும் இணைந்து கொண்டார். அதன் பின்னர் தடுப்புமுகாம் வாழ்க்கை, புனர்வாழ்வுமுகாம் வாழ்க்கை எனக் கழிந்து, புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் பீனிக்ஸ் பறவையாக மீண்டெழுந்த இவர் தீவிரமாகத் தன் உள்ளக் குமுறல்களை அமைதியாக எழுத்தில் வடிக்கத் தலைப்பட்டார்.

அதன்பின்னர் 2012 இல் வெளியான நான்கு நூல்களும் இவரது போர்க்கால அனுபவங்களையும் அதன் பின்னரான வாழ்க்கையையும் பிரதிபலித்திருந்தன. இத்தகைய நேரடிப்பங்காளர்களின் முள்ளிவாய்க்கால் அனுபவங்கள் வேறெங்கும் முன்னதாகப் பதிவானதாக என்னால் குறிப்பிட முடியவில்லை. இவர் எழுதிய முடியாத ஏக்கங்கள், காணாமல் போனவனின் மனைவி ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகளும், போராளியின் காதலி என்ற நாவலும், ஈழப்போரின் இறுதி நாட்கள் என்ற தலைப்பில் முள்ளிவாய்க் கால் இறுதிக்கட்ட நினைவுகளை ஆவணமாக வெளிப்படுத்திய கட்டுரை நூலும் 2012 இலேயே அசுரவேகத்தில் வெளியாகி வெற்றிச் செல்வியின்பால் கவன ஈர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னர் வெற்றிச்செல்வி, மன்னார் மாவட்டத்தில் தேனி என்ற பெயரில் மாற்றுத் திறனாளிகளுக்கென மாந்தை மேற்குப் பகுதியில் ஒரு அமைப்பினை நிறுவி அதன் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவ்வமைப்பினூடாக தன்னையொத்த மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த சமூகத்தையும் முன்னேற்றும் நோக்கில் சிறுவர்களுக்கான கல்வி வளர்ச்சியிலும் ஈடுபட்டுவருகிறார்.

வெற்றிச்செல்வியின் பணியினை கௌரவித்து மன்னார் தமிழ்ச்சங்கம் தான் அண்மையில் நடாத்திய தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாவின் போது, முயற்சித் திருமகள் என்னும் விருதினையும் வழங்கிச் சிறப்பித் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காணாமல் போனவனின் மனைவி என்ற நூல் வெற்றிச்செல்வியின் சிறுகதைத் தொகுப்பாகும். சென்னை சோழன் படைப்பகம் டிசம்பர் 2012 இல் இந்நூலை 80 பக்கங்களில் வெளியிட்டிருந்தது. இந்நூலில் காணாமல் போனவனின் மனைவி, குங்கும கேள்வி, எதிர்பார்ப்பு, முடியாத ஏக்கங்கள், சணல் 4, சிங்கிடி 1, சலோனி, நல்ல கதை, அம்மாவின் பிரச்சினை, சித்திரவதை, அவளின் பிரச்சினை, மைனாவே மைனாவே மழைவருமா, ஆகிய 12 கதைகள் இடம்பெற்றுள்ளன.

இறுதி நாட்களும் எனது பயணமும் என்ற பெயரில் இவர் எழுதிய யுத்தகாலப் பயணக்கட்டுரை இணையங்களில் முன்னர் வெளியாகியிருந்தது.

இதுவே பின்னர் *ஈழப் போரின் இறுதி நாட்கள்* என்ற தலைப்பில் கடந்த 2012 இல் நூலுருவிலும் வெளிவந்திருந்தது. இவர் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளையும், தொடர்ந்து தடுப்பு முகாம் காலகட்டத்து வாழ்க்கையையும் இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார். முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் இறுதி நாட்கள் பற்றி யுத்தத்தின் இறுதித் தருணம் வரை களத்தில் போராளியாக நின்று வந்த ஒருவராகவிருந்து எழுதிய இந்த நூல், ஈழ இறுதிப்போரின் சாட்சியமாக முக்கியம் பெறுகின்றது. எந்தப் புனைவுகளுமின்றி இறுதிப் போரையும் அந்தப் போரின் துயரத்தையும் அங்கு நடந்தவைகளையும் தெளிவாக எழுதியிருக்கிறார் வெற்றிச்செல்வி. இவரால் வெளிப்படையாகச் சொல்லப்பட்ட விடயங்களைவிடவும், வரிகளுக் கிடையில் சொல்லாமல்விட்டுச்சென்ற செய்திகளே அதிகமாக வாசகரைக் கவர்ந்திழுக்கிறது.

ஈழப் போரின் இறுதி நாட்கள் என்ற இந்நூல் சென்னையிலிருந்து தோழமை வெளியீடாக, டிசம்பர் 2012 இல் 120 பக்கங்களில் வெளி வந்திருக்கிறது.

வெற்றிச்செல்வி, இராணுவத்தின் தடுப்புமுகாம் வாழ்வின்போது எழுதிய உயிரே உயிரே என்ற நாவல் தமிழகத்தின் தினமணி பத்திரிகையில் தொடராக அக்காலகட்டத்தில் வெளிவந்தது. ஈழப்போர் பற்றிய தமிழகத்தின் தேடல் மிகுந்த அவ்வேளையில் பரபரப்பாக உணர்வுடன் வாசிக்கப்பட்டது இக்கதை. வெற்றிச்செல்வியின் படைப்பாற்றலின் மற்றுமொரு பரிமாணமாக உயிரே உயிரே என்ற இந்த நாவல் அமைந்தது. இதுவே பின்னர் *போராளியின் காதலி* என்ற பெயரில் நூலுருவாகியிருக்கிறது. சென்னை சோழன் படைப்பகம் இந்நாவலை டிசம்பர் 2012இல் 152 பக்கங்களில் வெளியிட்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் சோகத்தை இலக்கியமாக ஆவணப்படுத்தி வரலாற்றில் முக்கிய இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ள வெற்றிச்செல்வியின் வார்த்தைகளிலேயே அவரது எழுத்து முயற்சி எத்துணை வலிகள் மிக்கது என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

கீழ்க்கண்ட வரிகள் போராளியின் காதலி என்ற அவரது நாவலின் முன்னுரையின் ஒரு சிறு பகுதியாகும்.

‘‘சிறிலங்காப் படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் இதை எழுதினேன். அடிப் பெட்டிக்குள் ஒளித்து வைத்திருந்த இந்நாவலை அவனிக்குத்தர இப்போதும் எனக்குத் தயக்கம் தான். காரணம் நான் எழுத வேண்டிய கதைகள் இன்னும் இருக்கின்றன. அதற்குள் என் முன்னால் நீண்டிருக்கும் துப்பாக்கி ஒருவேளை என்னைத் தீர்த்துக்கட்டிவிட்டால்

இனிமேல் என்னால் எழுதமுடியாமலே போய்விடும். அந்தக் கவலை தவிர வாழும் ஆசை அதிகம் இல்லை எனக்கு. ஏனெனில் மரணம் வராதவரைக்கும் வாழவேண்டி இருக்கிறதே என்ற கட்டாய வாழ்க்கை வாழும் என்னையொத்த தமிழர்களில் ஒருத்திதான் நானும்.

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் பகுதியில் வாழ்ந்தவர்கள் எவரும் இப்பாத்திரப் படைப்புகளை உண்மையெனவே ஏற்றுக்கொள்வார்கள். அந்த வாழ்க்கையை நான் மீள எழுதும்போது மீண்டும் வன்னி மண்ணில் குருதி நெடியோடும் பிணவாடையோடும் எறிகணை வீச்சுக்குள்ளும் வாழ்ந்த உணர்வையே பெற்றேன். வலியோடும் வேதனையோடும் இதனை எழுதிக்கொண்டிருந்த நாட்களில் வீதியில் பயணித்த ICRC வாகனத்தின் கொடியினால் ஏற்பட்ட சத்தம் கூட எறிகணை பராஜ்பண்ணப்படுவதாய் நினைத்து என்னை நிலத்தில் விழவைத்திருக்கிறது. காற்றால் அசைக்கப் பட்ட தகரத்தின் சத்தம்கூட எறிகணை கூவிக்கொண்டு வருவதாய் நெஞ்சை படபடக்கச் செய்திருக்கிறது. அந்த உயிராபத்தான சூழலுக்குள் மீண்டும் வாழ்ந்த உணர்வு எழுதி முடித்தபோது இருந்தது. இதை பதிப்பாக்கத்துக்காக கணினியில் பொறித்தபோதும் அதை மீள்வாசிப்புச் செய்தபோதும் மீண்டும் மீண்டும் குருதி பாய்ந்த வன்னிக்குள் கிடந்து எப்படித் துடித்திருப்பேன் என்பதை இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்வீர்கள்.''

வெற்றிச்செல்வியின் மேற்கண்ட முன்னுரை இப்படியாக முடிகின்றது.

''மேலும் எழுதக்கூடியவர்களெல்லாம் உங்கள் வாழ்க்கையை வரலாற் றோடு எழுதிவிடுங்கள். முள்ளிவாய்க்கால் மணற்காட்டில் புதைந்துபோன தமிழிடங்களைப் போல தமிழர் வாழ்க்கையும் கணத்தில் மறைந்துவிடக்கூடாது என்பது எழுதுகோல்களிடம் நான் கோரும் விண்ணப்பம். எங்கள் எலும்புக் கூடுகளுக்கு மேலாக உயிர்த்தெழப் போகும் புத்தர் சிலைகள் எப்போதும் போல இடங்களை மட்டுமல்ல வரலாற்றையும் விழுங்கிவிடும்''

எவ்வளவு சத்தியமான உண்மை. ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றை இலக்கியங்களுக்குள் தான் தேடவேண்டுமென்று முன்னொருபோது எங்கோ நான் கேட்ட வாசகங்கள் வெற்றிச்செல்வியின் மொழியில் மீண்டும் என் செவிப்பறையில் அதிர்கின்றது.

(ஞானம், இதழ் 165: ஒளி 14, சுடர் 9, பெப்ரவரி 2014: ப.33-35)

26

‘வெற்றிமணி’யின் வெளியீட்டுப் பாரம்பரியம்

மு.க. சுப்பிரமணியம் முதல் மு.க.சு. சிவகுமாரன் வரை

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக்கொண்டவர் அமரர் மு.க.சுப்பிரமணியம். இவர் நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணியாற்றியவேளையில் 1950 இல் கருக்கொண்டதே வெற்றிமணி என்ற சிறுவர் சஞ்சிகை. பின்தங்கிய ஒரு பிரதேசத்தின் பாடசாலை மாணவர்களின் வாசிப்புத் தேடலுக்கு ஆர்வத்தை யூட்டும் நோக்கில் சிறுவர் சஞ்சிகையாக உருவாகியபோதும், வளர்ந்தோரையும் ஈர்க்கும் சக்தியுடன் பின்னாளில் வெற்றிமணி வளர்ச்சிகண்டது. அந்நாட்களில் வெளிவந்த வெற்றிமணியின் குறுக்கெழுத்துப் போட்டிகள் சிறார்களை மாத்திரமன்றி வளர்ந்தோரையும் வெற்றிமணியின்பால் ஈர்த்தெடுத்ததென்பது வரலாறு.

தொடர்ச்சியாக வெளிவந்தாலும், வெற்றிமணி நிலையாக ஓரிடத்தில் நீண்டகாலம் தங்கவில்லை. அதன் தாபகரின் நகர்விற்கேற்ப தனது இருப்பிடங் களையும் அது மாற்றிக்கொண்டே வளர்ந்துள்ளது. நாவலப்பிட்டியி லிருந்து நகர்ந்து 1958இல் க.வே.மகேந்திரனைப் பதிப்பாசிரியராகக்கொண்டு பூண்டுலோயாவில் தொடர்ந்தது அதன் பயணம். பின்னர் 1964 இல் பொ. இராசரத்தினம் அவர்களைப் பதிப்பாசிரியராகக்கொண்டு முல்லைத்தீவு-தண்ணீரூற்றுக்கு இடம்பெயர்ந்தது. 1968இல் மு.க.சுப்பிரமணியம், குரும்ப சிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராகப் பணி யாற்றச் சென்றபோது, வெற்றிமணியும் கூடவே சென்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் சக்தி அச்சகத்திலும், பின்னர் சுன்னாகத்திற்கு சக்தி அச்சகம் 1972 இல் இடம்மாற வெற்றிமணியும் சுன்னாகத்தில் சக்கி அச்சகத்திலிருந்து 1979 வரை தனது வெளியீட்டைத் தொடர்ந்தது. இப்படியாகத் தன் முப்பதாண்டுப் பயணத்தின் பின்னர் ஓய்வுகண்டது வெற்றிமணி.

1980 இல் இறைவனடிசேர்ந்த மு.க.சுப்பிரமணியம் ஆசிரியரின் பணியைத் தான் ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்தபின்னர் 1994 இலிருந்து தொடர்ந்தவர் அவரது மைந்தன் மு.க.சு. சிவகுமாரன் அவர்களாவார். தனது தந்தையின் வழியில் வெற்றிமணி சஞ்சிகையை நவீன கணினித் தொழில்நுட்ப

உத்திகளுடன், தனது ஓவியக்கலையின் ஆழுமையை முதலீடாகக் கொண்டு வெற்றிமணியை சிறுவர் சஞ்சிகை என்ற நிலையிலிருந்து இலவச பல்துறைச் சஞ்சிகையாக வடிவமைத்து, புலம்பெயர் வர்த்தக சமூகத்தின் விளம்பர நிதி ஆதரவுடன் இன்றுவரை தொடர்ந்து வெளிக்கொண்டுவருகிறார். சஞ்சிகை வெளியீட்டுடன் நில்லாது தந்தையின் வழியொட்டி ஈழத்தவரின் தமிழ்நூல் பதிப்புத்துறையிலும் புகலிடத்தில் தன் பாதம் பதித்து இதுவரை பல நல்ல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் வெற்றிமணி வெளிவந்த வேளையில் அதில் வெளிவந்த பல படைப்புகள் தனி வெளியீடுகளாகவும் சமகாலத்தில் வெளிவந்திருந்தன. *கடுக்கனும் மோதிரமும்* என்ற நூல், கனக.செந்திநாதன் அவர்களால் எழுதப் பட்டது. தெல்லிப்பழை, குரும்பசிட்டி சன்மார்க்க சபை, 1972 இல் வெளியிட்ட இந்நூல் கவிதை இரசனையை வளர்க்கும் கட்டுரைகளைக்கொண்டது. முன்னதாக, பல்வேறு மலர்களிலும் கனக.செந்திநாதன் எழுதிய 14 கட்டுரை கள் வெற்றிமணி சிறுவர் சஞ்சிகையில் சுருக்கி வெளியிடப்பட்டுவந்தன. அவற்றின் தொகுப்பாகவே இந்நூல் பின்னாளில் உருவாகியுள்ளது. திருக்குறள், இராமாயணம், குசேலோபாக்கியானம், நரி விருத்தம், பாரதி பாடல், தேசிக விநாயகம்பிள்ளை கவிதை, பிள்ளைத் தமிழ், வேதநாயகம் பிள்ளை பாடல், தனிப்பாடல்கள் எனப் பலவகைப்பட்ட கவிதைகளை இக் கட்டுரைகளின் வாயிலாக ஆசிரியர் அறிமுகம் செய்திருக்கிறார். கனக. செந்திநாதன் தனது 55 ஆவது வயதில் ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெறும்வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

வாழும் வழி என்ற தலைப்பில் திருக்குறள் கருத்துக்களை விதைக்கும் நாடகத் தொகுப்பு ஒன்றை வேல்அமுதன், தெல்லிப்பழையிலிருந்து வேல் வெளியீட்டகத்தினூடாக மார்ச் 1980 இல் வெளியிட்டிருந்தார். வாழும் வழி, அறுவடை, கைக்கூலி ஆகிய மூன்று நாடகங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் இடம்பெறும் கைக்கூலி என்ற தலைப்பிலான மூன்றாவது நாடகம் சிறுவர்களுக்கானது. இது வெற்றிமணி இதழில் அந்நாளில் வெளிவந்த ஒரு சிறுகதையின் நாடக வடிவம் என்று ஆசிரியரே நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

வேல் அமுதலிங்கத்தின் (வேல் அமுதன்) *வைகறை* என்ற நூலும் வேல் வெளியீட்டகத்தின் பிரசுரமாக, ஜனவரி 1977 இல் வெளிவந்திருந்தது. 20 ஆண்டுகளாக அவரால் எழுதப்பட்ட கதைகளைத் தாங்கிய அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு இது. வைகறை, உட்புண், அளவுகோல், கண்ணீருக்குப் பின்னால், ஈனப் பிறப்பு ஆகிய ஐந்து கதைகள் இதில்

இடம்பெற்றுள்ளன. வெற்றிமணி இதழ்களிலும், ஈழகேசரி, பூமாலை ஆகிய பிற சிற்றிதழ்களிலும் இவை முன்னர் பிரசுரமாகியிருந்தன.

பதுளையிலிருந்து சாரணா கையூம் என்ற பிரபல கவிஞரது நூலாக 1983 இல் வெளிவந்தது *புதுமலர்*. பதுளை, ஸாபியா பதிப்பகத்தின் ஏழாவது வெளியீடாக மலர்ந்த இக்கவிதைத் தொகுதியில் சமகாலத்துப் பிற பிரசுரங்களில் தான் எழுதியவற்றுடன் வெற்றிமணியில் எழுதிய கவிதைகளையும் சேர்த்துத் தனிநூலாக்கியுள்ளார்.

உங்களைப்பற்றி என்ற தலைப்பில் சிறுவருக்கான அறிவுரை நூல் ஒன்றை டாக்டர் நந்தி (அமரர் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்) 1973இல் வெளியிட்டிருந்தார். இது பின்னர் 1995 இல் கொழும்பு, பூபாலசிங்கம் புத்தகசாலை வழியாக மீள்பிரசுரமும் கண்டிருந்தது. சமய வாழ்வு, கால வர்த்தமானத்துக்கு ஏற்ப நற்பண்புகளைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சிறுவர்களுக்கு அறிவு பூர்வமாக சிந்தனைகளை ஊட்டும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இக் கட்டுரைத் தொடர், வெற்றிமணி இதழில் ஏற்கெனவே பிரசுரம் பெற்று பின்னர் தனிநூலாகத் தொகுக்கப்பெற்று வெற்றிமணி வெளியீடாகப் பிரசுரமாயிற்று.

தந்தையின் வழியிலேயே பயணிக்கும் மு.க.சு. சிவகுமாரனும் இலங்கையின் நாவலப்பிட்டியில் கருக்கொண்டு, ஜேர்மனியில் தொடரும் வெற்றிமணி இதழ்களில் வெளிவந்த படைப்புகள் பல தனிநூல்களாவதைக் காண்கிறார்.

கனடாவில் புலம்பெயர்ந்துவாழும் இலக்கியவாதியான குரு அரவிந்தன், *என் காதலி ஒரு கண்ணகி* (2001), *இது தான் பாசம் என்பதா?* (2002) ஆகிய பெயர்களில் சென்னை, மணிமேகலைப் பிரசுரங்களாக வெளிவந்த இரண்டு சிறுகதைத் தொகுப்புகளிலும், தான் வெற்றிமணியில் எழுதிய சில சிறுகதைகளையும் சேர்த்திருக்கிறார்.

மாறன் மணிக்கதைகள் என்ற சிறுவர் கதைநூல், தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் ஸ்கார்பரோ மாநிலப் பகுதியில் வாழ்ந்து வரும் தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி ஜேர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணியில் எழுதிப்பிரசுரமாகிய ஆறு நீதி போதனைக் கதைகளைக் கொண்டது. இந்நூலில் இடம்பெற்றுள்ள கதைகளுக்கேற்ப மு.க.சு.சிவகுமாரனின் பொருத்தமான ஓவியங்களுடனும் புகைப்படங்களுடனும் வெற்றிமணி வெளியீடாக 2000ம் ஆண்டில் இந்நூல் வெளிவந்தது.

இந்து மகேஷ் என்று ஈழத்து இலக்கிய உலகில் அறியப்பெற்றவர் சின்னையா மகேஸ்வரன். தற்போது புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் அவர் வெற்றிமணியில் இருவருடங்கள் தொடர்ச்சியாக ஒரு கட்டுரைத்

தொடரை வழங்கினார். ஒரு ஆத்மாவின் தேடலாக அமைந்த ''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி'' என்ற அக்கட்டுரைத் தொடரின் நூலுரு அதே தலைப்புடன் *காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி* என்ற தனி நூலாக 2004இல் வெற்றிமணி வெளியீடாக வெளிவந்தது. இது வெற்றிமணி வெளியீட்டுத் தொடரின் 11ஆவது பிரசுரமாகிப் பெருமிதம் கொண்டது.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் கதிர் துரைசிங்கத்தின் நகைச்சுவைத் துணுக்குகள் கொண்ட நூலாக *காதோடு காதாக* என்ற நூல் அமைகின்றது. வெற்றிமணி சஞ்சிகையில் 2002ம் ஆண்டு முதல் நகைச்சுவைத் துணுக்கு களுக்கு ஏற்ப மு.க.சு. சிவகுமாரன் பொருத்தமான புகைப்படங்களையும், சித்திரங்களையும் சேர்த்து நூலுக்கு மெருகேற்றியுள்ளார். வெற்றிமணி வெளியீடாக இது 2005 இல் வெளிவந்தது.

திறவுகோல்: இது ஒரு விண்ணாணம். என்ற நூல் அதிபர் பொ. கனகசபாபதியினால் எழுதப்பெற்று வெற்றிமணி வெளியீடாக 104 பக்கங் களுடன் 2007 இல் வெளிவந்ததொரு நூல். வெற்றிமணி இதழ்களுக்காக அவ்வப்போது எழுதிய விஞ்ஞானக் கட்டுரைகளைத் தொகுத்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேச வழக்கில் புரியாத, தெரியாத விடயங்களைப் பேசும் பேர்வழிகளை ''விண்ணாணம் பேசுவோர்'' என்று அழைப்பர். அந்த விண்ணாணத்தை (விஞ்ஞானத்தை) இலகுவாகப் புரியும்வண்ணம் இங்கு அறிவியல் சார்ந்த விஞ்ஞானக் கட்டுரைகளாக அதிபர் பொ.கனகசபாபதி அலசியுள்ளார். வாசிப்பவருக்கு சோர்வூட்டாத வகையில் நகைச்சுவை உணர்வுடன், புராண இதிகாச வாழ்வியல் நடைமுறை உதாரணங்களையும் இணைத்து சிக்கலான விடயங்களையும் சுவையான விடயத் தலைப்புடன் இலகுநடையில் எழுதியிருக்கிறார்.

அறிவியல் என்பது இன்று நாம் விரும்பியோ விரும்பாமலோ நமது வாழ்வுடன் இரண்டறக் கலந்துவிட்டது. அன்றாடம் தூக்கம் கலைந்து எழுந்தது முதல் இரவு மீண்டும் படுக்கைக்குப் போகும் வரை எத்தனையோ அறிவியல் விடயங்களை நாம் எதிர்கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றோம். சிலவற்றைப் பற்றி நாம் சிந்திப்பதே இல்லை. அது ஏன் நடக்கிறது அல்லது எப்படி நடத்தமுடிகின்றது என்பன போன்ற கேள்விகளை நாம் எந்தநேரமும் எம்மைக் கேட்டுக் கொண்டிருப்பதில்லை. ஆற அமர இருந்து அதற்கான விடைதேடுவதில் காலத்தை செலவிடவும் இந்த இயந்திர உலகில் எம்மால் முடியாதுள்ளது. ஆயினும் சில விடயங்களை நம்மைச் சுற்றி நடக்கும் விஞ்ஞான விடயங்களை நாம் தெரிந்தகொண்டே ஆகவேண்டி உள்ளது. கைத்தொலைபேசி நுழையாத கரங்களே இன்று இல்லாது போய்விட்டது.

ஒரு கைத்தொலைபேசியை செயற்பட வைப்பதும், உறங்கு நிலைக்கு அனுப்புவதும் சிக்கலற்ற விடயமாக இன்று எமக்கு மாறிவிட்டது. சிலகாலங் களுக்கு முன்னர் கைத்தொலைபேசியே ஒரு ஆடம்பரப் பொருளாக அல்லவா இருந்துள்ளது?

இப்படியாக அன்றாட வாழ்வின் பல விஞ்ஞான விடயங்களுக்கு விளக்கம் பெறவேண்டிய எமக்கு அவற்றை தாய்மொழியில் எளிய நடையில் எம்முடன் சமதளத்தில் நின்று இன்றைய நூல்கள் சொல்லித்தருகின்றனவா? தொழில்நுட்பக் கலைச்சொற்களை நிரப்பி அதனை பயங்காட்டிகளாக்கி விஞ்ஞான அறிவு விளக்கம் என்பது ஏதோ எமக்கும் பல படி மேலே உள்ள தீண்டத்தகாத விடயம் என்றல்லவா எமது பாரம்பரியக் கல்விமுறை ஆக்கி வைத்திருக்கிறது. கெட்டிக்காரப் பையன் தான் விஞ்ஞான பாடம் படிப்பான், படிப்பில் விளக்கம் குறைந்தவன் கலைத்துறைப் பாடங்களையே படிப்பான் என்ற போலித்தனமான கல்வித் திட்டங்களால் காயப்படுத்தப்பட்ட எங்களது பல தலைமுறையினருக்கு விஞ்ஞான விளக்கம் என்பது அமாவாசை இருட்டில் புளியமரத் தோப்பில் நிற்கும் மோகினிப் பேய் போன்ற மாயையையே வெற்றிகரமாக காட்டிவந்திருக்கிறது.

விஞ்ஞான விளக்கங்களை அறிந்துகொள்வது ஒன்றும் மந்திர தந்திர மாயாஜாலம் இல்லை. அது மிகவும் சுவாரஸ்யமான விடயம்- மனிதனாகப் பிறந்த அனைவரும் தெரிந்திருக்க வேண்டிய விடயம் என்ற வலியுறுத்தலை திறவுகோல் நமக்கு நம்பிக்கையுடன் தந்திருக்கின்றது. சிக்கலான விஞ்ஞானக் கோட்பாடுகளை விளக்க அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள் தனது கல்வித்து றை வாழ்வில் கடைப்பிடித்த எளிய தொழில்நுட்பத்தையே நூல் முழுதும் பயன்படுத்தியிருக்கின்றார். எளிமையான அன்றாட வாழ்வில் அடிக்கடி காணும் உதாரணங்களுக்கூடாக தமது விஞ்ஞானக் கருத்தை நகைச்சுவை உணர்வுடன் இந்நூலில் பதிவுசெய்துவைத்திருக்கிறார். வாசிப்பதற்கு அலுப்புத் தட்டாத வகையில் புராண இதிகாச வாழ்வியல் நடைமுறை உதாரணங்களை இணைத்துத் தந்திருக்கிறார். மு.க.சு..சிவகுமாரனும், தான் கொண்ட பணியில் சற்றும் சளைக்காமல், தனது ஆசானின் விஞ்ஞானபூர்வக் கருத்துக்கு ஆதார மான புகைப்படக்காட்சிகளையும் தேவைப்படுமிடங்களில் சாட்சியங்களாகத் தெரிவுசெய்திருக்கிறார். மானுடம் சார்ந்த வாழ்க்கை மயக்கங்களை பிரயோக விஞ்ஞான வழிகாட்டுதல்களில் எவ்வாறு அகற்றுகின்றன? அறிவியல் உண்மைகள் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதில் என்ன பங்களிப்புச் செய்கின்றன என்றவாறாக எழும் கேள்விகளுக்கு அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள் இலகு தமிழில் சுவையாக விளக்கம் தந்துள்ளார். இந்நூல் வெற்றிமணியின் 15ஆவது வெளியீடு.

தாயகத்திலுள்ள மாணவர்களை மனதில் இருத்தி இந்நூலை புகலிடத்தின் அதிநவீன அச்சுத் தொழில்நுட்பத்தின் ஆதரவுடன் செய்து முடித்திருக்கிறார். தாயகச்சிறார்களின் பரவலான பாவனைக்காக இதே நூல் பின்னர் 2008இல் கொழும்பிலிருந்து சேமமடு பதிப்பக வெளியீடாக 136 பக்கங்களுடன் *திறவுகோல்: விஞ்ஞானக் கட்டுரைகள்* என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. இதன் மூலப் பதிப்பு ஜேர்மனி நாட்டில் வெற்றிமணி வெளியீடாக பல்வர்ணப் பதிப்பாக வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கறுப்பு வெள்ளைப் படங்களுடன் வெளிவந்துள்ள சேமமடு பதிப்பு இந்நூலின் திருத்திய பதிப்பாக மேலும் பல புதிய தகவல்களுடன் காணப்படுகின்றது.

மு.க.சு. சிவகுமாரனின் கைவண்ணத்தில் உருவாகிய முக்கியமானதொரு வெளியீடாக *அதிசய உலா* என்ற நூல் அமைகின்றது. இது 2007 இல் 14 ஆவது வெற்றிமணி வெளியீடாக வெளிவந்தது. ஜேர்மனியிலிருந்து மாதஇதழாக வெளிவரத் தொடங்கியது முதல், வெற்றிமணியில் வெளிவந்த சுவையான செய்திகளை வண்ணப் படங்களின் உதவியுடன் இந்நூலில் தொகுத்துத் தந்துள்ளார். விஞ்ஞான உலா, விநோத உலா, அதிசய உலா, சரித்திர உலா, காதல் உலா, சமய உலா, கலை உலா, சாதனை உலா என இச்செய்திக் கட்டுரைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இளம்சமுதாயத்தை நோக்கிய படைப்பாகக் கருதப்படக்கூடிய இத்தொகுப்பு உலகளாவிய அறிவியல் தகவல்களையும், பல்வகை அறிவையும் வாசகர்களிடம் கொண்டு சேர்க்கின்றது. தகவல் என்பதற்கு பழையது புதியது என்ற அளவுகோல்கள் இல்லை என்பதற்கு பிரித்தானியக் கலைக்களஞ்சியம் ஒரு வாழும் உதாரணம். பதினாறாம் நூற்றாண்டிலிருந்து சேகரித்து வந்த தகவல்களை இன்றும் புதிதாக வாசித்தறிய மக்கள் இக்கலைக்களஞ்சியத்தினையே நாடிவருகின்றார்கள். ஒரு தகவலை-செய்தியை வாசகன் அறிந்துகொள்ளும் வரை அது அவனுக்குப் புதியது தான்.

நீண்டகாலமாக ஜேர்மனியிலிருந்து வெற்றிமணி வெளிவந்த நிலையில், அதன் பரிணாம வளர்ச்சியின் ஒருகட்டமாக அது தன் சிறகினை விரித்து சர்வதேச தமிழ் வாசகர்களையும் உள்வாங்கிட நாற்றிசையும் பறக்கத் தொடங்கியது. தாயகத்தை நோக்கியும், கனடாவை நோக்கியும், அண்டை ஐரோப்பிய நாடுகளை நோக்கியும் அதன் வண்ணச்சிறகுகள் விரிந்துள்ளன. இந்நிலையில் வெற்றிமணி தன் முன்னைய இதழ்களில் உள்ளகப்படுத்தி வைத்திருந்த பல சுவைமிகு தகவல்களை தமிழ்கூறும் நல்லுலகிற்கு தனித்தொகுதியாக்கி வழங்கமுற்படுவது தவிர்க்கவியலாததாகும். அவ் வகையில் அதிசய உலா மிகக் கனதியானதொரு ஆவணமாகும். உலகச்

செய்திகளைச் சுவையாகவும் வண்ணக்கலவை கொண்டும், தேர்ந்த புகைப்பட ஆவண உதவியுடன் புகலிட மண்ணின் உயர்தர அச்சக வசதிகளைப் பயன்படுத்தி இங்கு சிவகுமாரன் பதிவுசெய்துள்ளார். எட்டுப் பிரிவுகளுக்குள் தான் தேடிப்பதிவுசெய்த தகவல்களை வகைப்படுத்தியுமுள்ளார்.

இத்தகவல்களில் நான் காணும் பொதுப்பண்பு என்னவெனில் ஏதோ ஒரு வகையில் இவை எமக்குப் பரிச்சயமான விடயங்களாக இருப்பதேயாகும். எம்முடன் சம்பந்தமேயில்லாத, நாம் அறிந்துகொள்ளவதில் பயனேயில்லாத வரண்ட விடயங்களை திரு.சிவகுமாரன் அவர்கள் இத்தொகுப்பில் திணிக்க முயலவில்லை. அவர் தனது வாசகர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று தேர்வுசெய்யும் தகவலை அப்படியே உள்ளது உள்ளபடியே கக்கிவைக்க வுமில்லை. முதலில் அத்தகவலின் நம்பகத்தன்மையினைத் தானே பரிசோதிக்கிறார். அதற்கான தேடலில் உடனடியாக இறங்குகின்றார். அதற்காக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்கின்றார். போதிய புகைப்பட ஆதாரங்களைப் பெற்றுக்கொள்கின்றார். பின்னர் அதை சுவையான, நறுக்குத் தெறிக்கும் வசனங்களால், நகைச்சுவை உணர்வையும் கூட்டுச்சேர்த்துச் சுருக்கமாகப் பதிவுசெய்கின்றார். இந்நூலில் வாசகர் காணும் இவரது தகவல் பதிவுகளின் தெளிவிற்கு இதுவே மூலகாரணமாக அமைகின்றது.

ஒரு நல்ல நூலின் பக்கங்களில் எழுத்துருக்களால் சொல்லப்படும் செய்தியைவிட அதிலுள்ள புகைப்படங்களால் சொல்லப்படும் செய்திக்கு அதிக வலு இருக்கும். அதிசய உலாவிலும் பல புகைப்படங்கள் ஆசிரியர் சொல்லவரும் செய்தியுடன் சொல்லாத பல செய்திகளையும் எமக்குப் புரிய வைக்கின்றன. கூர்ந்து பார்த்துக் கண்டு இரசிப்பது அவரவர் வாசிப்புத் திறனையும், கற்பனைவளத்தையும் பொறுத்தது.

அதிசய உலா வெற்றிமணி சிவகுமாரனின் முதல் நூல் அல்ல. முன்னும் பின்னும் இவர் பல நூல்களை வெற்றிமணி வெளியீடுகளாகத் தந்திருக்கிறார். இவ்விடயத்தில் இவர் தந்தையை மிஞ்சிய தனயனாக எமக்குக் காட்சி யளிக்கிறார். அமரர் மு.க.சுப்பிரமணியம் மகனளவில் பன்னூலாசிரியராக இல்லாது போனாலும், சில நூல்களின் உருவாக்கத்தில் தனது காத்திரமான பங்களிப்பை அக்காலத்தில் வழங்கியிருக்கிறார்.

காங்கேசன்துறைக் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பொன். பரமானந்தர் வித்தியாலயத்தின் 75 ஆண்டுக்கால வியத்தகு வளர்ச்சியை, அதன் சேவைகளை, குரும்பசிட்டியின் சிறப்புக்களை, அக்கிராமத்தின் நலம் காத்த பெரியோரை, *பரமானந்தம்: 75 ஆண்டு நிறைவுவிழா மலர்* என்ற நூல் பதிவுசெய்கிறது. இவ்வித்தியாலயத்தின் தாபகர் அமரர் பொன் பரமானந்தர்

அவர்களின் பெயரே இம்மலர்த் தலைப்பாகவும் வெளியிடப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. இம்மலர் வெளியீட்டுக் குழுத் தலைவராக ஆசிரியர் மு.க. சுப்பிரமணியம் இயங்கியுள்ளார். அவருடன் கைகோர்த்து, கனக. செந்திநாதன், வ. நடராசா, த. கதிரவேலு, ஏ.ரி. பொன்னுத்துரை ஆகியோரின் ஒருங்கிணைந்த பங்களிப்புடன் குரும்பசிட்டி, பொன் பரமானந்தர் வித்தியாலத்தின் வெளியீடாக நவம்பர் 1975 இல் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலையும் யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதியில் அவ்வேளையில் இயங்கி வெற்றிமணி இதழ்களை அச்சிட்டுவந்த சக்தி அச்சகமே அச்சிட்டுள்ளது.

1900 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவைக் (1900-2000) குறிக்கும் முகமாக 01.07.2001 அன்று மற்றொரு மலர் வெளியிடப்பட்டது. மு.க. சுப்பிரமணியம் அவர்களின் பெரும் பங்களிப்புடன் வெளியிடப்பட்ட *75 ஆண்டு நிறைவுவிழா மலர்* உள்ளடக்கியிருந்த ஆக்கங்களுடன், மேலதிகமான சில பதிவுகளுடனும் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளன. *பரமானந்தம்: குரும்பசிட்டி பொன் பரமானந்தம் மகா வித்தியாலயம் நூற்றாண்டு நிறைவு மலர்* என்ற தலைப்புடனான இவ்விரண்டாவது மலரின் மலர்க்குழுவில் ஆ.சி. நடராஜா, ஏ.ரி. பொன்னுத்துரை, ஆ. மகாதேவன் ஆகியோர் அங்கம் வகித்துள்ளனர்.

பரத நாட்டிய அரங்கேற்றம் என்ற சிறப்பு மலர் மு.க. சுப்பிரமணியம் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இது தெல்லிப்பழையிலிருந்து டிசம்பர் 1978 இல் வெளிவந்ததொரு அரங்கேற்ற மலராகும். இது யாழ்ப்பாணத்திலிருந்து பின்னாளில் நகர்ந்து, சுன்னாகத்தில் நிலைகொண்ட சக்தி அச்சகத்திலேயே அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளமையும் அவதானிக்கத்தக்கது. பண்ணும் பரதமும் (V.T.V. சுப்பிரமணியம் ஓதுவார் மூர்த்தி), தெய்வீக ஆடற்கலை (வழுவூர் பீ. இராமையாபிள்ளை), ஆடற்கலை (கலாநிதி அ. சண்முகதாஸ்), பரதத்தில் கரணங்கள் (க.கா. சோமசுந்தரன்), ஆகிய கட்டுரைகளைக் கொண்ட இந்தச் சிறப்பிதழ், 09.12.1978 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேறிய தையிட்டி சிலம்பொலி ஷேத்திரம் வழங்கிய பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சியின்போது வெளியிடப்பட்டது. செல்வி ஜெயபத்மினி சின்னத்துரையின் மாணவியும், வெற்றிமணி ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் மகளுமான தயாநிதி சுப்பிரமணியம் அவர்களின் அரங்கேற்ற நிகழ்வே இதுவாகும்.

அமரர் மு.க. சுப்பிரமணியத்தின் வழியில் தடம்பதிக்கவெனத் தன் ஓவியக் கலைத்துறை ஆளுமையுடன் இயங்கும் மு.க.சு. விவகுமாரனின்

அதிசய உலா என்ற நூல் 2007 இல் வெளிவருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே வேறு சில நூல்களை இவர் எழுதியும் தொகுத்துமுள்ளார். 1971 இல் தனது 19வது வயதில் முதலாவது குறுநாவலை நூலாக்கியவர் என்ற பெருமையும் இவருக்குண்டு. *ஒரே ஒரு தெய்வம்* என்ற தலைப்பில் மு.க.சு. சிவகுமாரன் எழுதி, குரும்பசிட்டி, சன்மார்க்க இளைஞர் சங்கத்தின் வாயிலாக 1971 இல் வெளியிடப்பட்ட இந்நூலில் ஒரே ஒரு தெய்வம் என்ற குறுநாவலும், பொன்மலர் (தன் 17வது வயதில் 1969 இல் தினகரனில் எழுதியது), காலம் கடந்த கண்ணீர் ஆகிய சிறுகதைகளும் இணைந்த தொகுப்பு இது.

இவர் புலம்பெயர்ந்து மேற்கு ஜேர்மனியில் குடியேறி வாழத்தொடங்கிய நிலையில் புலம்பெயர்ந்த நாட்டில் கரித்தாஸ் நிறுவனத்தின் ஆதரவில் (Caritas verbandes e.V., Propsteihof 10, 4600 Dortmund) 1990 சித்திரை 20-27ம் திகதிகளில் இவர் ஓவிய சிற்பக் கண்காட்சியொன்றினை நடத்தினார். புதிய வடிவங்கள் என்ற இந்த நவீன ஓவிய சிற்பக் கண்காட்சியின்போது வெளியிடப் பட்ட சிறப்புமலர் *புதிய வடிவங்கள்: சித்திர சிற்பக் கண்காட்சி சிறப்புமலர்* என்ற தலைப்புடன் இவரால் வடிவமைக்கப்பட்டு 1990 இல் வெளியிடப் பட்டது. இவரது நவீன ஓவிய, சிற்பப் புகைப்படங்களுடன், வாழ்த்துச் செய்திகளும், ''எனது கண்ணோட்டத்தில் புதிய வடிவங்கள்'' என்ற தலைப்பில் சிவகுமாரனின் கட்டுரையொன்றும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

1994 இல் ஜேர்மனியில் புதிய கோணத்தில் தந்தையாரின் வெற்றிமணி என்ற சிற்றேட்டினைத் தொடரத் தலைப்பட்டார் மு.க.சு. சிவகுமாரன். தனது அயராத உழைப்பினாலும், படைப்பாளிகள், கலைஞர்களுடன் அரசியல் சமூக சமய வேறுபாடின்றிப் பேணிய காத்திரமான தொடர்பினாலும், 2000ம் ஆம் ஆண்டில் தன் தந்தையின் வழிதொடரும் பதிப்புப் பாரம்பரியத்தினை புகலிடத்தில் நினைவுகூரும் வகையில் *வெற்றிமணியின் பொன்விழா மலர்: 1950-2000* என்ற தலைப்பில் வெற்றிமணி சிறப்பிதழை வைகாசி 2000 இல் வெளியிட்டார். 1950ம் ஆண்டில் நாவலப்பிட்டியில் சிறுவர்களுக்கென தனியானதொரு பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்ட வெற்றிமணி, 25 ஆண்டு களாக மாத இதழாகத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களுக்கும் உள்ளகப் புலப்பெயர்வில் நகர்ந்து பின்னாளில் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டதையும், சிறிய இடைவேளைக்குப் பின்னர் அங்கிருந்தும் புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வேரூன்றியதையும் வெற்றிமணியின் பரிமாண வளர்ச்சியின் நீட்சியாகக் கருதலாம். அவ்வகையில் வெற்றிமணி தொடங்கப்பெற்ற 50 ஆண்டுகாலப் பணியைப் பதிவுசெய்யும் வகையிலேயே இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கருதவேண்டும்.

வெற்றிமணி பொன்விழா மலர் வெளியாகிய அதே இரண்டாயிரமாம் ஆண்டு சிவகுமாரனின் அடுத்த நூலும் *இடைவெளி* என்ற சிறுகதைத் தொகுதியாக சுகப்பிரசவமாகின்றது. 1971 இல் தனது 19வது வயதில் முதலாவது குறுநாவலை நூலாக்கிய இவர் 29 வருடங்களின் பின்னர் தற்போது மற்றுமொரு சிறுகதைத் தொகுப்பை வெளியிடுகின்றார். இரண்டு காலகட்டங்களுக்கும் இடைப்பட்ட மூன்று தசாப்த இடைவெளியைக் குறிக்கும் முகமாக இந்நூலுக்கு இடைவெளி என்று தலைப்பிட்டுள்ளார். முன்னைய நூலுக்கும், இந்த நூலுக்கும் கவிஞர் வி.கந்தவனம் அவர்களே முன்னுரை வழங்கியிருப்பது சிறப்பம்சமாகும். மாதவி என்ற புனைபெயரில் இவர் எழுதியிருக்கும் 32 குறுங்கதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இதுவும் ஒரு வெற்றிமணி வெளியீடாகும்.

எடுத்துக்கொண்ட கதைக்கருவை விபரிப்பதற்குத் தேவையான அளவு பாத்திரப் படைப்புக்களையும், பின்புலங்களையும் தேர்ந்தெடுத்து சொல்லவந்த செய்தியை கச்சிதமாகத் தன் கதைகளில் சொல்லும் திறனை மு.க.சு. சிவகுமாரனின் ஒவ்வொரு கதையிலும் அவதானிக்கமுடிகின்றது. வர்ணனை களாலும், போதனைகளாலும் வாசகரைத் தீண்டாமல், கச்சிதமாக இறுக்கமாகத் தன் கதையாடலைக் கொண்டுசெல்கின்றார். காதல், பிரிவு, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாடு, குழந்தை உளநலம், மற்றும் பெற்றோரியம், தலைமுறை இடைவெளிதரும் பிரச்சினைகள் என்று புகலிடத்து வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் இதிலுள்ள 32 கதைகளும் தொட்டுச் செல்கின்றன. புகலிடத்தில் தான் அவதானித்த சம்பவங்களினூடாகத் தான் சார்ந்த சமூகத் துக்கு ஒரு செய்தியை, ஒரு படிப்பினையைச் சொல்வதாக இவரது கதைகள் அமைந்திருக்கின்றன. இன்று தாயகத்திலும் புகலிடத்திலும் தமிழரிடையே வாசிப்புப் பழக்கம் குறைவடைந்துள்ள ஆரோக்கியமற்ற சூழலில் தன் படைப்புக்களை மணிக்கதைகளாக உருவாக்கி, வாசகரின் சொற்ப நேரத்தை யாவது தன் கதைகளுக்காகச் செலவிடவைப்பதன் மூலம், அதிக வாசகர் களைத் தன் கதைகளின்பால் ஈர்ப்பதில் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் வெற்றி கண்டுள்ளார்.

சிவகுமாரனின் இடைவெளி: சிறுகதைத்தொகுதிக்குச் சிறப்பானதொரு முன்னுரையை வழங்கிய கவிநாயகர் கவிஞர் கந்தவனம் தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார். அவருக்கும் வெற்றிமணிக்கும் இடையேயுள்ள தொடர்பு சிவகுமாரனின் தந்தையின் காலத்திலிருந்து தொடர்ந்திருக்கின்றது. 2002 இல் மு.க.சு.சிவகுமாரன் தனது தந்தையினதும் தனதும் நண்பராகவிருந்து இருதலைமுறைகளாகத் தொடரும் கவிஞர் கந்தவனத்தின் நட்புக்கு நல்லதொரு பரிசை வழங்குகின்றார்.

அரிசோனா பல்கலைக்கழகத்தின் வாயிலாகக் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட கவிஞர் வி.கந்தவனம் அவர்களுக்கு யேர்மனியில் பாராட்டு விழாவொன்றை ஒழுங்குசெய்து அவரை ஜேர்மனிக்கு அழைத்து கௌரவிக்கிறார். அத்தருணம் வெளியிடப்பட்ட சிறப்பிதழ் *ஜேர்மனியில் கலாநிதி கந்தவனம்* என்ற நூலாகும். கவிஞர் கந்தவனம் ஜேர்மனியில் கலந்துகொண்ட தமிழ் நிகழ்ச்சிகளையும், ஜேர்மனியில் ஊடகங்களில் வெளிவந்த அவரது எழுத்தாக்கங்களையும், புகைப்படங்களையும் தாங்கி வெளிவந்த இந்நூலை மார்ச் 2002 இல் மு.க.சு. சிவகுமாரனே தந்தை வழியில் நின்று தொகுத்து அதனை வெற்றிமணி வெளியீடாக வெளியிட்டு அழகுபார்க்கிறார்.

கவிஞர் கந்தவனமும் தன் பங்கிற்கு ஓவியக் கலைவேள் என்ற தலைப்பில் மே 2003இல் கனடாவிலிருந்து பாபா வெளியீடாக 66 பக்கத்தில் ஒரு நூலை எழுதி வெளியிடுகின்றார். மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஓவியக் கலைவேள் என்ற தலைப்பில் கனடாவில் பதிவுசெய்யப்பட் டமை மு.க.சு.சிவகுமாரனின் தொடர்ச்சியான நூலியல் பங்களிப்பிற்கும் வெளியீட்டு முயற்சிக்கும் கிடைத்த கௌரவமாகும்.

கவிஞர் கந்தவனத்தின் *எழுத்தாளன்* என்ற நூல் ஜூலை 1995 இல் ஜேர்மனியிலிருந்து வெற்றிமணி வெளியீடாக வெளிவந்தமையும் குறிப்பிடத் தக்கது. இலண்டனில் சிலகாலம் வெளிவந்த ஈழகேசரி பத்திரிகையில் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு ஏற்ற வகையில் 30 தலைப்புகளில் கவிஞர் எழுதிய தொடர்கட்டுரைகளின் தொகுப்பே இதுவாகும். இந்நூல் பத்தாண்டுகளின் பின்னர் டிசம்பர் 2005 இல் *எழுத்தாளர்* என்ற பெயரில் சென்னை காந்தளகம் வெளியீடாக, மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர் களால் இரண்டாவது பதிப்பாகவும் வெளியிடப்பட்டது. வெற்றிமணி வெளியீடுகள் மற்றைய பதிப்பகங்களால் விரும்பி மீள்பிரசுரம் செய்யப்படும் நிகழ்வுகள் அவ்வப்போது பரவலாக இடம்பெற்றுள்ளன.

இவ்வேளையில் வெற்றிமணி (ஜேர்மனி) ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரன் அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிப் பல்வேறு பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகள், புகைப்படங்கள் என்பவற்றைக் கொண்டு இதே காலப்பகுதியில் வெளிவந்துள்ள சிறப்புமலர் பற்றியும் குறிப்பிடவேண்டும். *பல்கலைச் செல்வர்: கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் பாராட்டுவிழா மலர்* என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த மலரின் தொகுப்பாசிரியர்களாக கனடாவிலிருந்து கவிஞர் வி.கந்தவனமும், ஜேர்மனியிலிருந்து இந்து மகேஷ், த. புவனேந்திரன் ஆகியோரும் இணைந்து பணியாற்றியுள்ளனர். களனிப் பல்கலைக்கழகத்தில்

மார்ச் 1989 இல் Degree of Bachelor of Fine Arts (BFA) பட்டத்தினைப் பெற்றவர் மு.க.சு. சிவகுமாரன். கடந்த 2002 இல் அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் இயங்கும் உலகப் பல்கலைக்கழக அமைப்பு வழங்கிவரும் கௌரவ கலாநிதி விருதினையும் பெற்றுக்கொண்டவர் இவர். இதனைப் பதிவுசெய்யும் வகையிலேயே இம்மலர் உருவாக்கப்பட்டு வெற்றிமணி வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் சிவகுமாரனின் தந்தையார் பற்றி வெளிவந்த நூலொன்றையும் இங்கு பதிவுசெய்யவேண்டும். குரும்பசிட்டி, பொன் பரமானந்தர் வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கம், வெளியிட்டிருந்த *முயற்சியாளர் மு.க.சு.* என்ற நூல், த. அரியரத்தினம், கு. குணநாயகம் ஆகிய இரு இணைச்செயலாளர்களால் தொகுக்கப்பெற்று ஜுன் 1977 இல் யாழ்ப்பாணத்திலிருந்து சக்தி அச்சகத்தின் வழியாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஓய்வுபெற்ற குரும்பசிட்டி, பொன் பரமானந்தர் வித்தியாலய அதிபர் மு.க. சுப்பிரமணியம் அவர்களின் சேவைநலம் பாராட்டும் வகையில் 4.6.1977 அன்று வெளியிடப்பட்ட மலர் இது. வடமாநில கல்வித்துறை அதிகாரிகள், சக பாடசாலை அதிபர்கள் போன்றோரின் வாழ்த்துச் செய்திகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மு.க.சு அவர்கள் கல்வியியல்துறையில் ஒரு பாடசாலை அதிபராகச் செயற்பட்டுவந்தபோதும், கல்வித்துறையுடன் கலை இலக்கியத்துறையிலும் இணையாக ஈடுபாடு கொண்டிருந்தார். வெற்றிமணி என்ற சிறுவர் சஞ்சிகையைத் தொடர்ந்தும் நீண்ட காலப்பரப்பில் வெளியிட்டுவந்தவர் இவர் என்ற பின்புலத்தில் இம்மலர் அமரர் மு.க.சுப்பிரமணியத்தின் சமூகப் பணிகளை விரிவாகப் பதிவுசெய்திருந்தது.

எனது அவதானிப்பின்படி 2003ம் ஆண்டு மு.க.சு.சிவகுமாரனது நூல் வெளியீட்டு முயற்சியின் உச்சகட்டமாகும். அவ்வாண்டில் தனது மூன்று நூல்களை இவர் எழுதி, வடிவமைத்து, வண்ணக்கலவைகொண்டு நூலுருவில் வெற்றிமணி வெளியீடுகளாகப் படைக்கின்றார். *அது என்பது இதுவா* என்ற நூல் மாதவி என்ற புனைபெயரில் குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்காக, ஜேர்மனியிலிருந்து, வெற்றிமணி வெளியீடாக வெளிவந்துள்ளது. கண்ணா என்ற புனைபெயரில் அவர் படைக்கும் நவீன ஓவியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவான இச் சிறு நூலில் கலை, காதல், புகழ், திருமணம், என்பன பற்றிய குறுங்கவி வரிகளுடன் ஓவியப்படங்கள், கணினி வடிவமைத்த Graphic படங்கள் என்பவை மெருகூட்டுகின்றன.

என் காதல் கிராமத்தின் சாளரம் என்ற கவிதைநூல் மு.க.சு. சிவகுமாரனின் மற்றுமொரு கையடக்கப் பதிப்பு. இன்று போரினால் உருக்குலைந்து போயுள்ள

தன் தாய்நிலமான குரும்பசிட்டியின் ஏக்கங்களை வண்ணப் புகைப்படங் களாக்கி, பழைய நினைவுகளை இரைமீட்கும் புகைப்படங்களையும் தன் கணனி வடிவமைப்பில் இணைத்து சிவகுமாரன் அவர்கள் தன் கவிதைகளுக்கு உருவமும் உணர்வும் ஊட்டியுள்ளார்.

தமிழே காதல் என்ற மூன்றாவது நூல் நிலாமகள் என்ற மற்றுமொரு புனைப்பெயரில் சிவகுமாரன் எழுதி வண்ண ஓவியங்கள் சகிதம் குறும் பாவகையில் வழங்கும் கவிதைத் தொகுப்பாகும். காதலர்க்கு ஓர் பூச்செண்டு என்ற உபதலைப்புடன் வெளியாகியுள்ளது தமிழே காதல். இதிலுள்ள ஒவ்வொரு கவிதையுடனும் இணைந்திருந்து தாமும் பேசாமொழி பேசுவன வாக சிவகுமாரனின் கணினிவடிவமைப்புடன் கலந்த கண்ணைக்கவரும் Graphics ஓவியங்களும் கவிதை பாடுகின்றன. கண்ணா என்ற புனை பெயரில் இவர் ஓவியங்களை வடிவமைத்திருக்கின்றார். நறுக்குத்தெறித்து வரும் கவிதை வரிகளுக்கு அவை உயிர்கொடுக்கின்றன. நூலின் ஓவ்வொரு பக்கமும் சிரத்தையுடன், மிக அவதானமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பரிசுப் பொருட்களாக அறிவியல் நூல்களை வழங்கும் திட்டத்தை இந்நூல் மனதில் பதியம் வைத்துவிடுகின்றது.

ஜனவரி 2004 இல் மு.க.சு.சிவகுமாரனின் வடிவமைப்பில் 36 வண்ண இதழ்களில் வெற்றிமணி தனது நூறாவது இதழைக் கண்டு வரலாறு பதிப் பித்தது. அதன் வெற்றிக்குக் காரணம் சிவகுமாரன் தன்னுடன் தொடர்புள்ள வர்களுடன் பேணி ஒழுகும் நேர்மைமிகு இலக்கிய நட்பாகும். வெற்றிமணியின் கலை இலக்கியப் பயணத்தில் தன்னுடன் கைகோர்த்துச் செயற்பட்டவர்களை அடிக்கடி நினைவுகூரும் பண்பு இவருக்குண்டு. *வெற்றிமணிகள்* என்ற தலைப்பில் பங்குனி 2003 இல் வெளிவந்த நூலொன்றை இதற்கு உதாரண மாகக் காட்டலாம். சுகந்தினி சுதர்சன் என்பவரால் எழுதப்பட்டு வெற்றிமணி வெளியீடாக ஜேர்மனியில் பதிப்பிக்கப்பெற்ற 32 பக்கங்கள் கொண்ட இந்நூல் வெற்றிமணி சஞ்சிகை ஜேர்மனியில் தொடங்கப்பெற்ற 1994ம் ஆண்டு முதல் அச்சஞ்சிகையின் வளர்ச்சிக்குப் பங்களித்த 34 பேரினது சித்திரங்களையும் அவர்கள் பற்றிக் கவிதை வரிகளில் எழுதப்பட்ட அறிமுகங் களையும் கொண்டமைந்தது.

மு.க.சு. சிவகமாரனின் வெளியீட்டுத்துறைப் பயணத்தில் சிலாகித்துச் சொல்லப்படும் மற்றுமொரு நூல் ஆவணி 2008 இல் வெளியிடப்பட்ட *யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள்* என்பதாகும். வலன்ரீனா இளங்கோவன் அவர்களால் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு கடல்கடந்துவந்து,

ஜேர்மனியில் வெற்றிமணி வெளியீடாக பிரசுரமாவதற்கு வலியதொரு காரணம் உண்டு.

திருமதி வலன்ரீனா இளங்கோவன் கலைமாணி சிறப்புப்பட்டம் பெற்றவர். தனது பட்டத் தேர்வின் ஒரு பகுதியான ஆய்வுக்காக 1994ம் ஆண்டில் எழுதிய ஆய்வுவடிவமே யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள். ஆடவல்லான் என அனைவரும் போற்றிவணங்கும் சிவனுக்கு ஆடல்மடை செய்த பெண்களின் பண்பாட்டு நிலையை உலகறிய வைக்கும் உயர்ந்த நோக்கை இந்நூல் தன்னகத்தே கொண்டது. சின்னமேளம் என்று பெயர்பெற்ற இந்நாட்டிய மரபின் வரலாறு பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், தகவல்கள் எழுத்தில் போதியளவு இல்லாத நிலையில் இந்நூல், பல கலைஞர்களின் நேரடி வாக்கு மூலங்களையும், இன்று அழிந்துசெல்லும் பாரம்பரியக் கலை வடிவமொன்றின் எச்சமாக இருக்கும் சின்னமேளக் கலைலஞர்களின் நினைவினை மீட்டெடுக்கும் நேர்காணல்களையும் அடிப்படையாகக்கொண்டு சிரத்தையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

கோயில்சார் கலையாக வளர்ந்து வந்த தேவதாசிகளின் நாட்டியம், நாவலர் போன்ற சமயப் பெரியார்களால் கண்டனத்துக்குள்ளானபோதிலும், அதையும் மீறி, அது பொதுமக்களிடையே கிராமிய மட்டத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற்று ஜனரஞ்சகம் மிக்கதொரு ஆடற்கலையாகப் பரிணமித் திருந்ததை வரலாறு எமக்குத் தெளிவாகக் கூறுகின்றது. கூத்து என்னும் பெயருடன் விளங்கிய தமிழர் தம் நாட்டியக்கலையானது 20ம் நூற்றாண்டு வரை சதிர் ஆட்டம், தாசி ஆட்டம், தேவரடியார் ஆட்டம் எனப் பெயர்பெற்று விளங்கியதாகத் தெரிகின்றது. ஆனால் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் இது சின்னமேளம் என்று வழங்கப்படுவது பெருவழக்காயிற்று. சின்னமேள நாட்டிய மரபு பற்றி வலன்ரீனா எழுதியது ஒரு முதல் முயற்சி யாகும். இதுபற்றி இன்று எழுதிவைக்காவிடில் ஒருகாலத்தில் ஜனரஞ்சகமாக வழக்கிலிருந்த எமது பிரதேசத்தின் ஒரு முக்கியமான நாட்டியக்கலையின் உண்மை வரலாறு பற்றிய செய்திகள் காலத்தால் அழிவுற்று முற்றாகவே மறக்கப்பட்டுவிடும் வாய்ப்பே அதிகமாகும்.

அந்நாட்களில் சின்னமேளக் குழுக்களை வைத்திருந்த தவில் வித்துவான் சின்னப்பழனி, செ. வைத்திலிங்கம், பொ. இராமசாமி, சின்னமேளத்திற்குப் பாடிவந்த திருமதி இராசலட்சுமி கஜேந்திரன், சின்னமேளத்திற்காக ஆடியவர் களான திருமதி இ.நாகேஸ்வரி, இ.நாகபூசணி, திருமதி ராணி, மற்றும் சின்னமேளத்திற்கு ஆர்மோனியம் வாசித்த திரு. திருமதி சரவணமுத்து ஆகியோரின் இருப்பிடங்களைத் தேடிப்பிடித்து அங்குசென்று அவர்களுடன்

உரையாடித் தகவல்களை எடுத்துத் தன் ஆய்வுக்குப் பயன்படுத்தியிருக்கிறார் இவ்வாய்வாளர் வலன்ரீனா. இக்கலைத்துறையில் ஈடுபட்டிருந்த பலர் இன்று இல்லாதொழிந்து போய்விட்ட இன்றைய சூழலில், இவ்வாய்வு மேற்கொள்வது மேலும் தாமதிக்கப்பட்டிருந்தால், யாழ்ப்பாணத்தில் நிலவிய ஒரு முக்கிய கலைவடிவம் பற்றி நாம் என்றுமே உண்மைச் செய்திகளை அறிந்துகொள்ள முடியாது போய்விட்டிருக்கலாம் என்பதை உணரும்போது இந்நூலின் முக்கியத்துவம் மேலும் எம்முள் உறைக்கச் செய்கின்றது. இவ்வாய்வை நூல் வடிவாக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்கெனவே நூலாசிரியருக்கு 1996 இலும், 1999 இலும் ஏற்பட்டிருந்த போதிலும் போர்க்காலச் சூழலினால் அது தாயகத்தில் கைகூடாது போயிற்று. நூலுருவில் வெளிவரத் தயாரான நிலையில் அச்சகத்தில் காத்திருந்த வேளையில் அச்சகம் குண்டுவீச்சுத் தாக்குதலுக் குள்ளாகியதால் மூலப்பிரதியில் இரத்தக்கறை படிந்ததுடன், அரிதில் பெற்ற பல புகைப்படங்களும் மிலேச்சத்தனமான அத்தாக் குதலின்போது அழிந்துபோய்விட்டன. இந்நிலையில் ஜேர்மனியில் வெற்றிமணி சஞ்சிகையின் ஆசிரியர் திரு. மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் அழியும் தறுவாயிலிருந்த அந்தப் பிரதியை, நூலாசிரியரிடமிருந்து பொறுப்பேற்று ஜேர்மனியில் அதை குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தனது வெற்றிமணி வெளியீட்டு நிறுவனத்துக் கூடாக வெளியிட்டுத் தன் பணியை சிறப்புற ஆற்றியிருக்கிறார். 12 ஆண்டுகளின் பின்னர் நூலாசிரியையின் கனவு, வண்ணத்தில் நனவாகியிருக்கின்றது என்பதை நினைக்கும்போது ஆறுதலாக இருக்கின்றது.

மு.க.சு. சிவகுமாரன் ஆன்மீகத்திலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். வித்தியாசமான கண்ணோட்டத்துடன் ஆன்மீகத்தைக் கண்டு, அதனை எச்சரிக்கையுடன் ஜனரஞ்சகப்படுத்தி புலம்பெயர்ந்த இரண்டாம் தலை முறையினர் புரிந்துகொள்ளும் வகையில் வெளிப்படுத்துபவர். அவரது ஆன்மீகத் தொடர்பிற்கு வழிகோலிட்டவராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாகுட்டியை இவர் காண்கிறார். அவரது உள்ளார்ந்த பக்தியின் வெளிப் பாடாக 2004இல் *சிவத்தமிழ்* என்ற தலைப்பில் ஆன்மீகச் சஞ்சிகை யொன்றையும் வெற்றிமணி இதழ்களுக்குச் சமாந்தரமாகக் காலாண்டிதழாக வெளியிடத் தொடங்குகின்றார். இன்று சிவத்தமிழ், வெற்றிமணி இதழ்களை உலகளாவிய ரீதியில் இணையத்தளத்திலும் வாசிக்கக்கூடிய வாய்ப்பினை மு.க.சு.சிவகுமாரன் ஏற்படுத்தித் தந்துள்ளார்.

2005இல் *சிவத்தமிழ்: சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாச் சிறப்பிதழ்* சிவகுமாரனின்

கைவண்ணத்தில் உருவாகியது. சிவத்தமிழ் ஆன்மீகக் காலாண்டுச் சஞ்சிகையின் 3வது இதழ் (தை-மாசி-பங்குனி, 2005) கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் எண்பதாவது அகவை நிறைவைக் குறிக்கும் முத்துவிழாச் சிறப்பிதழாக வெளிவந்தது. வழமையான ஆன்மீகச் செய்திகள், கட்டுரைகளுடன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பற்றிய சிறப்புக் கட்டுரைகளும் தகவல் துணுக்குகளும் கொண்டதாக வண்ணக்கலவையில் வடித்தெடுக்கப்பட்ட மலர் அது.

புகலிடத்தில் பல்லினப் பண்பாட்டுச் சூழலுக்குள் வளர்ந்துவரும் இளம் தலைமுறையினரிடம் சைவப் பாரம்பரியங்களை அழுத்திச் சொல்வதில் தாயகப்பின்னணியில் கல்விச்செயற்பாடுகளை மாத்திரம் கருத்திற்கொண்டு உருவான பாரம்பரிய சைவசமய நூல்கள் வெற்றிபெறத் தவறிவிட்டன என்பது பொதுவானதொரு கருத்தாகவுள்ளது. கிரேக்க அறிஞர் சோக்கிரட்டீஸின் பார்வையில் எதனையும் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளின் மூலமே புகலிடத்தில் வாழ்வோரின் மேலைத்தேயப் பாணியிலான அறிவியலை உள்வாங்கிப் பழக்கப்பட்ட எமது இரண்டாம் தலைமுறையினர் எழுந்தமானமாக கர்ணபரம்பரைக் கதைகளின் ஊடாக சைவசமயத்தைப் புரிந்துகொள்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குகின்றார்கள். தமது பெற்றோரின் வற்புறுத்தல்களினூடாக தெளிவற்றநிலையில் உள்வாங்கிக் கொண்ட, அல்லது திணித்துக்கொண்ட சைவக் கருத்துக்களை, தம்மோடொத்த மேற்கத்தைய நவீன கல்விப் பாரம்பரியத்தில் வளர்ந்த பல்லினச் சிறுவர்களுடன் பள்ளியில் பரிமாறிக்கொள்வதில் சங்கடத்தையே அவர்கள் பெரிதும் எதிர்நோக்கிவருகின்றார்கள். இது பலத்த எதிர்விளைவுகளை சைவசமயத்தின்பாலும் தாம் சார்ந்த சமூகத்தின்பாலும் அவர்களது உள்ளங்களில் பதிய வைத்துவிடும் வாய்ப்பு மிகவும் அதிகமாகவே உள்ளது.

தன்னால் தர்க்கரீதியில் சரியென்று ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு சைவ தத்துவக் கருத்தினை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறமுடியாத நிலையே இன்று காணப்படுகின்றது. இலகுவான மதமாற்றத்திற்கு எம்மவர்கள் உள்வாங்கப் படுவதற்கும் இதுவே காரணமாகவும் அமைந்துவிடுகின்றது. மிகவும் ஆழமான தத்துவக் கருத்துக்கள் பொதிந்ததும், உலகின் மிகவும் செழுமை மிக்கதும், பழைமையானதுமான சைவசமயம் இன்றுவரை எவ்வித நிறுவனத்துணையுமின்றி நின்று நிலைப்பதற்கு அதன் ஆழ்ந்த உண்மைத்துவம் தான் காரணம் என்று எமக்குப் புரிந்தாலும், அதன் அன்றாடப் பாவனையில் அவற்றை ஏற்றுக்கொள்ளமுடியாதவாறு பல பின்னைய சேர்க்கைகளும் ஆரியவாதங்களும் சைவத்தை நலிவடையச்செய்துவிட்டனவென்பதே

வரலாற்று உண்மையாகும். இந்நிலையில் சைவத்தின் ஆழ்ந்தகன்ற தத்து வத்தை சிறு கேள்விகளாக்கி, அதை தர்க்கரீதியில் எளிதில் உணர்ந்துகொள்ளக் கூடியவகையில் பதில்களாக வண்ணப்பட உதவியுடன் தருவதில் சிவத்தமிழ் வெற்றிபெற்றுள்ளதென்றே கருதுகின்றேன்.

''விஞ்ஞானத்தில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விளக்கம் இருக்கின்றது. அதுபோல் மெஞ்ஞானத்திலும் ஒவ்வொன்றிற்கும் மெய்ப்பொருள் உண்டு. அந்த மெய்ப்பொருளை அறிவதே அறிவு. எமது பண்பாடு, பாரம்பரியங்கள், யாவும் இந்துசமயத்தோடு பெரும்பாலும் ஒட்டியே வளர்ந்திருக்கின்றன. அவை வெறும் மூடக்கொள்கை உடையனவாக இருப்பதில்லை. அவற்றுள் பொருள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை எளிமையான முறையில் சிவத்தமிழாக உயிர்த்தமிழாக எடுத்துவருவதே சிவத்தமிழின் நோக்கமாகும்.''

என்று 2004இன் ஆடி ஆவணி புரட்டாதி மாதங்களுக்குரியதாக வெளியிட்ட தன் முதலாவது இதழில் இனிய சங்கமம் என்ற தலையங்கப் பகுதியில் குறிப்பிட்டுள்ள சிவத்தமிழ் ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர் களின் நோக்கம் இன்றுவரை ஆங்காங்கே சிவத்தமிழ் இதழ்களில் நிரூபிக்கப் பட்டே வந்துள்ளது எனலாம்.

சைவம் சார்ந்த செய்திகள் ஆங்காங்கே உலகளாவிய இணைய ஊட கங்களில் வெளிவந்துகொண்டுள்ளன. தன் தீராத தேடல் வேட்கையின் பயனாக ஆழ்கடலில், கிளிஞ்சல்களுக்கிடையே மறைந்துகிடக்கும் முத்துக் களாக இருக்கும் சைவசமயம் தொடர்பான கருத்தையும் கண்ணையும் கவரும் புகைப்படச் செய்திகளைத் தேடி எடுத்து சுத்தம்பண்ணி சிவத்தமிழ் என்னும் பீடத்தில் வைத்து அழகுபார்ப்பதுடன் எமது கண்ணுக்கும் கருத்துக் கும் விருந்தாக்கி மகிழ்கிறார் சிவத்தமிழ் ஆசிரியர்.

இன்று அறுபது வயதை எய்தும் மு.க.சு. சிவகுமாரன் அவர்களின் பணிகளை நயந்துபோற்றும் வகையில் மலர் ஒன்று 2012 இல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. அந்த மலர்க்கொத்தில் ஒரு சிறுமலராக இணைந்திருந்து நண்பர் சிவகுமாரனின் தந்தை வழிவந்த கலை, இலக்கிய, பதிப்பு முயற்சி கள் பற்றிய ஒரு விரிவான செய்தியைப் பதிவாக்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றேன். திரு. மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் மேலும்நீண்ட காலம் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் சிறந்த சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

(கலைமகன்: வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் மணிவிழா மலர், யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்: வெற்றிமணி வெளியீடு, 2012: ப.62-79.)

27

இலக்கியப் பதிவுகளினூடாக நீர்கொழும்பூர் நினைவுகள்

லெ. முருகபூபதியின் படைப்பிலக்கியத்தின் வழியான ஒரு பார்வை

நீர்கொழும்பு, தென்னிலங்கையின் ஒரு கடலோரத் தமிழ்க்கிராமமாக, தனித்துவமான மொழி வழக்குடன் திகழும் ஒரு வாழிடம். அதுவே என் இளமைக்காலத்தின் வசிப்பிடம். தந்தையார் அமரர் வ.நடராஜா- அந்நாட்களில் இந்து வாலிபர் சங்கத்துடன் தன்னை இணைத்துத் தமிழ்ப்பணியாற்றிய ஒரு பொது வேலைப்பகுதி ஓவசியர் (PWD Overseer). கடற்கரைத் தெருவில், தமிழகம் என்ற பெயர்கொண்ட எமதில்லத்திலேயே எனது இளமைக்காலம் கழிந்தது. அன்றைய விவேகானந்த மகா வித்தியாலயத்தில் எனது பள்ளிக் காலம் கழிந்து, 1970 இல் எமது தந்தையாரின் மறைவின் பின்னர் அந்த மண்ணைவிட்டு, பதினாறு வயதில் யாழ்ப்பாணத்திற்குப் புலம் பெயர்ந்து செல்ல நேர்ந்தது. அன்னையாரின் ஊரான ஆனைக்கோட்டையில் எனது எஞ்சிய பாடசாலை வாழ்வு தொடர்ந்ததும் கடந்த போன வரலாறு. அங்கிருந்து திருநெல்வேலி, கொழும்பு என்றாகி இன்று லண்டன் வரையில் தொடர்கின்றது எனது புலப்பெயர்வு.

இந்நிலையில், பிறந்து வளர்ந்த இளமைக்கால நீர்கொழும்பு பற்றிய எனது மனப்பதிவு ஆழ்மனதில் நீங்கா நினைவாகி ஒரு படிமமாகப் பதிந்து கிடக்கின்றது. அந்த நினைவுகளை மீள அசைபோடவைத்த ஒரு இலக்கிய வாதியின் எழுத்துலகம் பற்றியதான ஒரு கருத்துப்பதிவே இக்கட்டுரையாகும்.

நீர்கொழும்பு தந்துள்ள படைப்பாளிகள் பற்றிய பட்டியலொன்றை பதிய முனைந்தால், அதில் அக்காலத்தில் நீர்கொழும்பு இலக்கிய வட்டம் நடத்தியவர்கள் முதலில் நினைவுக்கு வருகிறார்கள். மறைந்தும் மனதில் மறையாத நீர்கொழும்பூர் முத்துலிங்கம், சந்திரமோகன், தற்போது அவுஸ்திரேலியாவில் வாழும் லெட்சுமணன் முருகபூபதி, பிரான்சில் வாழும் செல்வரத்தினம், ஜேர்மனியில் வாழும் தேவா, நீர்கொழும்பு தர்மலிங்கம், பத்திரிகையாளர் நிலாம், பவானிராஜா, த.மணி, கொரஸ கிராமத்தில்

அமைந்துள்ள ஸ்ரீ சுதர்மானந்த விஹாரையில் பிரதம குருவாகவிருந்த வண.எம்.ரத்னவன்ச தேரோ ஆகியோரை நிச்சயம் குறிப்பிட்டாகவேண்டும்.

நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தினரின் அனுசரணையுடன் 1972இல் மல்லிகைச் சஞ்சிகை நீர்கொழும்பு பிரதேச மலர் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதன் வருகைக்குப் பணியாற்றியதில் முக்கியமானவராக முருகபூபதி இனம்காணப்படுகிறார். நீர்கொழும்பின் மொழி வழமையை, இலக்கிய ஆளுமையை அன்றாடம் தன் படைப்புகளினூடாக வெளிக்கொணர் வதுடன், இன்றளவில் உலகளாவியரீதியில் தமிழ் எழுத்தாளர்களுக்கிடையிலான ஓர் உறவுப்பாலமாகவும் செயற்படுகின்றார்.

1972 இல் ஈழத்து ஆக்க இலக்கியத் துறையில் புதியவராக -அறிமுக எழுத்தாளராக நுழைந்த முருகபூபதியின் முதலாவது சிறுகதைத்தொகுதியாக சுமையின் பங்காளிகள் என்ற நூல், நவம்பர் 1975 இல் நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தினரால் வெளியிடப்பட்டிருந்தது. அந்த நூலின் இரண்டாவது பதிப்பு 2007 இன் இறுதிக்கூற்றில் வெளியிடப்பட்டது.

இலங்கையின் கடல்தொழிலாளர்களான மீனவர்கள் பற்றிப் பல சிறு கதைகளை ஈழத்து எழுத்தாளர்கள் ஏற்கெனவே படைத்திருக்கிறார்கள். மீனவ மக்களை நன்கு அறிந்து அவர்களிடையே வாழ்ந்து வளர்ந்தவர்களாலேயே இலக்கிய நயத்துடன் இதுபற்றிக் கூறமுடிகின்றது. நெய்தல் நிலத்துக் கடல் வாழ்வு பற்றிய வெற்றிகரமான கதைகளின் வாயிலாக, மீனவ மக்களின் நுட்பமான வாழ்வினையும் பிரச்சினைகளையும் இலக்கியமாக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்தின் நவாலிப்பகுதி மீனவர்களைப்பற்றி அப்பச்சி மகா லிங்கமும், நாவாந்துறைப்பகுதி மீனவர்கள் பற்றி டானியல் அன்ரனியும், வல்வெட்டிக் கடலோரக் கிராமங்களைப் பற்றி தெணியானும், ஆனைக் கோட்டை மீனவர் சமூகம் பற்றி அகஸ்தியரும், கொழும்புத்துறைப்பகுதி மீனவர் சமூகம் பற்றி செ.யோகநாதனும் பல கதைகளை எமக்கு இதுவரை வழங்கியிருக்கிறார்கள். நவாலி, நாவாந்துறை, வல்வெட்டி, ஆனைக்கோட்டை, கொழும்புத்துறை என்று இவையெல்லாம் வடபிரதேசத்துக் கிராமங்கள். இவை அனைத்தும் வடக்கின் யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சூழவுள்ள மீனவக் கிராமங்கள். சற்று வித்தியாசமாக, தூரத்தே தென்னிலங்கையில் நீர்கொழும்பைப் பற்றி - நீர்கொழும்புப் பிரதேச தமிழ் பேசும் மீனவர்கள் பற்றி அவர்களின் மண்ணுக்கேயுரிய வித்தியாசமான பேச்சுத்தமிழ்பற்றி எழுதியவர்களில் முருகபூபதியை முக்கியமானவராக நினைவில் கொள்ள முடிகின்றது.

முருகபூபதியின் இளமைக்கால நீர்கொழும்பு வாழ்வின் மலரும் நினைவுகளின் சுவையான சொற்கோலங்களாகவோ நினைவுப் பதிகை

களாகவோதான் சுமையின் பங்காளிகள் என்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ளடங்கிய கதைகள் எனக்குப் படுகின்றன. நீர்கொழும்புவாழ் தமிழ் மீனவர் சமூகத்தினர் தமக்கேயுரிய தனித்துவமான கலாச்சாரம், பேச்சுவழக்கு களைக் கொண்டவர்கள். கத்தோலிக்க மதத்தை பெரும்பாலானவர்கள் பேணுகிறார்கள். இங்கு வாழ்ந்த, வாழுகின்ற மக்கள் பலர் முருகபூபதியின் இக்கதைகளின் கதாபாத்திரங்களாவர். அம்மக்களின் கனவுகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், நிராசைகள், இழப்புகள், வெற்றி தோல்விகள், சாதனைகள், கடல் மீதான அவர்களின் காதல், கோபம், ஊடல், என்பன இவரது கதைகளுக்குக் கருவாகவும் பின்புலமாகவும் அமைந்துள்ளன.

லெ. முருகபூபதி *நினைவுக் கோலங்கள்* என்ற சிறுகதைத் தொகுதியை 2006இல் வெளியிட்டிருந்தார். நீர்கொழும்பு - முருகபூபதி பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊர். முழுமையான கிராமமுமல்லாத, தன்னிறைவடைந்த நகர முமல்லாத ஒரு வகையான நகரம். முன்பொரு காலத்தில் போர்த்துக்கேயரின் படையெடுப்புக்குட்பட்ட கடலோரத்துக் கிராமம். இன்றும் அதன் நினைவுச் சின்னமாக ஒல்லாந்தரின் கோட்டை ஒன்றும் நீர்கொழும்புக் கடலோரத்தில் இருக்கின்றது. சிறைச் சாலையாக இது தற்போது மாற்றப்பட்டுள்ளது. இன்று தென்னிலங்கை செங்கம்பளம் விரித்து வரவேற்கும் உல்லாசப்பயணிகளின் கடலோரத்தை நாடிய படையெடுப்பால் சமூகச் சீரழிவின் தாக்கத்துக் குள்ளாகியுள்ள நகரமே நீர்கொழும்பு.

இச்சிறுகதைத் தொகுதியில் பதினான்கு நினைவுக்கோலங்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொன்றும் நான் இளமைத் துடிப்புடன் ஓடியாடித் திரிந்த அந்தக் கடலோரக் கிராமத்தின் வனப்பினூடு மீளவும் மானசீகமாக ஒன்றிப்போக வைத்துவிட்டன. அத்துடன், இவ்வளவு நுணுக்கமாகவும் நேர்த்தியாகவும், அதன் இயற்கை வனப்பினையும் அங்கு வாழ்ந்த மக்களை யும் இவரால் எப்படி தத்ரூபமான மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்த முடிகின்றது என்றும் அதிசயிக்க வைக்கின்றது.

இவரது கதைகளையும் அதன் வழியாக அவரது கதாபாத்திரங்களையும் இந்த நூலில் தரிசித்த எனக்கு, நீண்டகாலத்திற்குப் பின்னர் ஒரு காலக் கப்பலில் (Time Machine) நீர்கொழும்புக்குப் போய்வந்த அனுபவம் கிட்டியது. அதுவும் ஒரு பதினாறு வயது இளைஞனாகப் போய் வந்த உணர்வையே என்னுள் இச்சொல்லோவியங்கள் ஏற்படுத்தின. உள்ளதை உள்ளபடி- பூசி மெழுகாமல் நேர்மையாகச் சொல்லும் ஒரு படைப்பாளியின் சத்திய வசனங் களை, கனடாவின் அ. முத்துலிங்கம், ஜேர்மனியின் பொ. கருணாகரமூர்த்தி லண்டனில் அனஸ் என்றும் அறியப்பெற்ற இளைய அப்துல்லாஹ் போன்

றோரின் என்ற வரிசையில் அவுஸ்திரேலியாவின் லெ. முருகபூபதியிடமும் காணமுடிந்தது.

நீர்கொழும்பில் வாழ்ந்த காலத்தில், நான் அன்றாடம் எனது அம்மாவின் ஆணைப்படி காலையில் முகம் கை கால் கழுவியதும், வீட்டுப் பூந்தோட்டத் தில் பறித்த அன்றலர்ந்த மலர்களைக் கொய்து பொலித்தீன் பைகளில் பவ்விய மாக இட்டு வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் வழியில் கடற்கரைத் தெருவில் உள்ள காளிகோயிலில் ஒப்படைத்துச் செல்வது வழக்கம். காளிகோவில் பூசகர் பொன்னம்பலத்திடம் நாளாந்தம் நான் வழங்கும் பூக்களுக்குப் பதிலுபகாரமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலைப் பூசையின் பின்னர் அவர் எனக்குப் பிரத்தியேகமாகத் தந்தனுப்பும் சுவையான கடலை, வடை பிரசாதங்களுக்காக பூசை முடியும்வரையில் பொறுமைகாக்கும் என் அனுபவங்கள் சித்தன் என்ற கதையை வாசித்ததும் நினைவில் வந்து போனது. இப்படியாக ஒவ்வொரு கதையையும் அதன் கதாபாத்திரங்களின் வாயிலாக எனது மலரும் நினைவுகளைக் கிளறிக்கொண்டு செல்வதை சொல்லிக்கொண்டே போகலாம்.

வடக்கிலும் கிழக்கிலுமிருந்து தொழில்வாய்ப்புக்களுக்காக தமிழர்கள் காலம் காலமாக நீர்கொழும்புக்குச் சென்று வாழ்ந்திருந்தனர். அவர்களுடன் இணங்கி வாழ்ந்த பூர்வீகக் கரையோரத் தமிழர்கள் போர்த்துக்கேயராலும், பின்னாளில் வந்த சிங்களமயமாக்கல் கொள்கை வகுப்பாளர்களினாலும் மதமாற்றத்திற்கும் மொழிமாற்றத்திற்கும் உட்படுத்தப்பட்டு சிங்களமயமாக்கப் பட்ட காலகட்டத்திலும்கூட அவர்களது தமிழ் சிறப்பான நீர்கொழும்புத் தமிழாக நிலைத்து இருந்தது. அந்த நீர்கொழும்புத் தமிழ் போர்த்துக்கேய, சிங்கள மொழிச்சொற்களை அவ்வப்போது உள்வாங்கிக்கொண்ட போதிலும் கூட அடிப்படையில் அவர்களது மொழி தமிழாகவே இருந்தது. அந்தத் தமிழை - நீர்கொழும்புத் தமிழை மீண்டும் இந்த நூலின் வாயிலாக அறிந்து கொள்ளமுடிந்தது.

சுமையின் பங்காளிகள் நூலின் மேலட்டைப்படத்தில் நீர்கொழும்பின் பிரசித்திபெற்ற கடற்கரையில் சுறுசுறுப்பாக வலைகளுடன் இயங்கும் மீனவர் களையும், அவர்களது வள்ளங்களையும் அவர்கள் பிடித்துவந்த மீன்களைக் கூடைகளுக்குள் நிரப்பிக்கொண்டு அருகிலுள்ள மீன்சந்தைக்கு விரையக்காத் திருக்கும் அந்த மீனவப்பெண்களின் அவசரத்தையும் உயிரோட்டமாகச் சித்திரிக்கின்றன.

முருகபூபதியின் மற்றுமொரு நல்ல படைப்பு, 2001 இல் வெளிவந்த *பறவைகள்* என்ற நாவலாகும். 50க்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்

துள்ள முருகபூபதியின் முதலாவது நாவல் இது. 2003ம் ஆண்டில் சிறந்த நாவலுக்கான இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசுபெற்றது. இந்நாவல், இலங்கை மக்களின் இடப்பெயர்வை புலப்பெயர்வைச் சித்திரிக்கிறது. தேவகி யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து நீர்கொழும்பு நகரில் வந்து குடியேறுகிறாள். நோய்வாய்ப்பட்ட மாமன் சிற்றம்பலத்தைக் கவனிக்கும் பொறுப்பும் அவளுடையதாகின்றது. ஓய்வுபெற்ற ஆசிரியரான சிற்றம்பலத் தின் பிள்ளைகள் புலம்பெயர்ந்து ஐரோப்பாவிலும், அவுஸ்திரேலியாவிலும் குடியேறியிருக்கின்றனர். இதே சிற்றம்பலம் தான் முன்னர் தேவகிக்கும் அவரது மகன் குமாருக்கும் இடையில் முகிழ்ந்த காதலுக்குத் தடையாகி யிருந்தவர். அவுஸ்திரேலியாவிலிருந்து குமார் குடும்பத்துடன் விடுமுறைக்காக ஊர்திரும்புகிறான். அங்கு தேவகியைக் காண நேர்வதால் ஏற்படும் உணர்வுச் சிக்கல்களும், புலம்பெயர் வாழ்வியல் மற்றும் தாயக தரிசனம் என்பனவும் இந்நாவலில் சுவைபடக் கூறப்படுகின்றது.

முருகபூபதியின் படைப்புகளில் நீர்கொழும்பு கதைக்களங்களாக அமைவது போன்றே வேறுசில படைப்பாளிகளின் படைப்பாக்கங்களிலும் நீர்கொழும்பும், அது சார்ந்த பிரதேசங்களும் அமைந்திருப்பதைக் காண முடிகின்றது. என் கைக்கெட்டிய அத்தகைய படைப்புகளில் ஒன்று எஸ்.ஏ. உதயன் எழுதி மன்னார் கலையருவி வெளியீடாக 2011 இல் மலர்ந்த சொடுதா என்ற நாவலாகும். மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.ஏ. உதயன் ஏற்கெனவே லோமியா, தெம்மாடுகள், வாசாப்பு ஆகிய நாவல்களையும் குண்டுசேர் என்ற சிறுகதைத் தொகுதியையும் எழுதியவர். இது இவரது நான்காவது நாவலாகும்.

இளம் சம்மாட்டி மரியாசு இந்நாவலின் நாயகன். அவனுக்குத் துணை சீமாம்புள்ளை. கடற்தொழில்சார்ந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தொழிலாளர்களின் சுமையைக் குறைக்க முனையும் மரியாசு - அவர்களுக்கு லாபத்தில் பங்கும் வழங்குகின்றான். சீமாம்புள்ளையின் மூன்று புதல்விகளில் கடைக்குட்டி ரெத்தினமாலையுடன் மரியாசு காதல் கொள்கிறான். சந்தர்ப்ப வசத்தால் அவளது தமக்கை சுகந்தமாலையுடன் பாலியல்தொடர்பு கொண்டதால் அவள் கருவுறுகிறாள். அதனால் மரியாசு ரெத்தினமாலையின் காதலை இழக்கிறான். இடையில் சுகந்தமாலை சமூகத்தின் பழிச்சொல்லுக்கு இலக்காகித் தற்கொலை செய்துகொள்கிறாள். இந்நாவல் 60 வருடங்களுக்கு முன்னிருந்த மன்னார் மீனவ மக்களது வாழ்க்கை நிலையை எடுத்துக்காட்டு கின்றது. மன்னார் கடற்கரைப் பிரதேசக் கிராமங்கள், அக்கிராமங்களின் சூழல், பருவ மாறுதல்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை இந்நாவலில்

உயிர்த்துடிப்புடன் தரிசிக்கமுடிகின்றது. இறால் பிடிப்பதற்காக நீர்கொழும்பி லிருந்து வரும் சிங்கள மீனவர்களுக்கும் மன்னார் மீனவர்களுக்கும் இடையில் ஏற்படும் பிணக்குகள், முரண்பாடுகள் என்பனவும், அப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க முனையும் காவல்துறையின் பக்கச் சார்பான போக்கும், இவற்றுக்கும் அப்பால் கடற்தொழிலாளர்களின் மனிதநேய உறவுகள் என்பன இந்நாவலில் அழுத்தமாகப் பதிவுசெய்யப்படுகின்றன. மன்னார் மண்ணின் மணம்கமழ நாவலை நகர்த்திச்செல்லும் ஆசிரியர் தேவைக்கேற்ப பிரதேச வழக்கில் பயன்படுத்தப்படும் பழமொழிகள், உவமைத்தொடர்கள் என்ப வற்றையும் ஆங்காங்கே பொருத்தமாகப் பயன்படுத்தியிருக்கின்றார்.

நீர்கொழும்பூர் முத்துலிங்கம் 09 ஜனவரி 2000 அன்று சுகவீனம் காரணமாக மறைந்துவிட்டார். அவர் மறையும் முன்னர் இறுதியாக எழுதிய நாவல் அந்த நதியும் அதன் மக்களும்... தினக்குரலில் வாராந்தம் பிரசுரமாகி வந்த வேளையிலேயே அவரது மரணமும் நிகழ்ந்தது. கதை நிகழும் களம் சிலாபம், சித்தாமடம், மாயவன் ஆற்று மையம். சிலாபத்திலிருந்து புத்தளம் செல்லும் பாதையில் தெதுரு ஓயா என்ற மாயவன் ஆற்றின் ஒரு கரையை எல்லையாகக் கொண்டிருக்கும் சித்தாமடம் என்னும் கிராமமும் அக்கிராமத்து பால்பண்ணையும், அப்பண்ணையோடிணைந்த மக்களும் அப்பிரதேசத்தை ஆட்டிப்படைத்த 1957 பெருவெள்ளமும் நாவலை விறுவிறுப்பாக்கக் காரண மாகின்றன. அமரர் முத்துலிங்கத்தின் மகனின் மறைவுக்குப் பின்னர் அவரது மகன் ஜெயகாந்தனால் 2005 இல் இந்நாவல் நூலுருவில் வெளியிடப்பட்டது.

ஒரு ஜனனத்தின் அஸ்தமனம் என்ற தலைப்பில் நீர்கொழும்பூர் முத்து லிங்கம் 1994 இல் எழுதிய சிறுகதைத் தொகுப்பு பற்றியும் இங்கு குறிப் பிடலாம். இலங்கையின் மேல்மாகாணத்துக் கடற்கரைப் பிரதேசத்தில், குறிப்பாக நீர்கொழும்பின் குடாப்பாட்டிலும் பிரசித்திபெற்ற முன்னேஸ்வரம் (சிலாபம்) கோயில் கிராமத்திலும் வாழும் மாந்தரையும் வாழ்க்கையையும் சித்திரமாக்கியுள்ள ஒரு ஜனனத்தின் அஸ்தமனம் என்ற குறுநாவலுடன் ஐந்து சிறுகதைகளையும் உள்ளடக்கிய தொகுதி இதுவாகும்.

தூர விலகும் சொந்தங்கள் என்ற சிறுகதைத் தொகுதியை நீர்கொழும்பு ந.தர்மலிங்கம் எழுதி 2004 இல் மணிமேகலைப் பிரசுரமாக வெளியிட்டிருந்தார். தூர விலகும் சொந்தங்கள், சத்திய தரிசனம், ஆணின் தேடல், நோயாளிகள், புரியாத புதிர், தாய், நிறைவு, பாவத்தின் தீர்ப்புகள், தாம்பத்யம் ஒரு தவம், வாழ்த்துக்கள், வாலிபத் தீயிலே, இப்படி எத்தனை சுமைகள் ஆகிய 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவரது கதைகளும் மண்ணின் வாசனை தூக்கலாக அமைந்து நீர்கொழும்பூர் நினைவுகளுக்கு என்னை இட்டுச்சென்றன.

கனடாவில் தற்போது புலம்பெயர்ந்து வாழும் கவிஞர் வி. கந்தவனம் நாடறிந்த ஈழத்துக் கவிஞர். 1967இல் *ஏனிந்தப் பெருமூச்சு* என்ற தலைப்பில் யாழ் இலக்கிய வட்டத்தின் வாயிலாக ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார். அரங்கக் கவிதைகளின் தொகுப்பாய் அமைந்த இந்நூலில் 5 மேடைகளில் அரங்கேற்றப்பட்ட 5 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மலையகத் தமிழரின் பெருமூச்சை முதலாவதாக ஏனிந்தப் பெருமூச்சு என்ற கவிதையில் புலமைத்திறத்துடன் வெளிவிடுகின்றார். இது அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரித் தமிழ் விழாவில் 16.3.1963 அன்று மேடையேறியது. இரண்டாவதாக வீர சுதந்திரம் வேண்டிநின்ற பாரதியாரின் கனவை *பாரதி* என்ற கவிதையில் பாடி நெகிழ்கிறார். இது மாத்தளை இலக்கிய வட்டம் பாரதி விழாவில் புனித தோமையர் கல்லூரியில் 6.10.1963 இல் அரங்கேறியது. கனவுலகம் என்ற மூன்றாவது கவிதை வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வள்ளுவன் திருக்குறள் பற்றியது. இது யாழ்ப்பாணம், திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரித் தமிழ்விழாவில் 12.9.1964 இல் அரங்கேறியது. வள்ளல் நல்லதம்பி என்ற நான்காவது கவிதை நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத் தமிழ் விழாவில் 30.1.1965 இல் அரங்கேறியது. அமரர் மு.நல்லதம்பி- நீர்கொழும்பின் பிர பல வர்த்தகர், இந்துவாலிபர் சங்கத்தின் தலைவர்களுள் ஒருவர் என்பதற் கப்பால், எனது பெற்றோரினது குடும்ப நண்பர். சிறுவயதில் அடிக்கடி எனது அன்னையாருடன் அவர்களது இல்லத்திற்குச் சென்றுவந்ததும், எனது மூத்த சகோதரிஅங்கு ரோகினி ஆசிரியை நடத்திவந்த கர்நாடக சங்கீத பிரத்தியேக வகுப்புக்குச் செல்லும் வார இறுதிகளில் அவருடன் துணைக்குச் சென்று அவர்களுடன் அமர்ந்து சங்கீதம் கற்றதும் மலரும் நினைவுகள்.

ஆக்க இலக்கியங்களுக்கு அப்பால் என்னை நீர்கொழும்பு பற்றி இரை மீட்கவைத்த மற்றொரு நூலாக அமைந்ததும், 2004இல் மலர்ந்ததுமான *நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி: பொன்விழா மலர்* என்ற சிறப்பு மலரைக் குறிப்பிடுவதைத் தவிர்க்கமுடியாது. 1932இல் நீர் கொழும்பில் இந்து வாலிபர் சங்கம் உருவாகியது. இச்சங்கத்தினால் 7.10.1954 இல் 32 மாணவர்களுடனும், 2 ஆசிரியர்களுடனும் விவேகானந்த வித்தி யாலயம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டதே இன்று கம்பஹா மாவட்டத் திலுள்ள ஒரேயொரு இந்துப் பாடசாலையான விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி. இப்பாடசாலையை 196 3இல் அரசாங்கம் பொறுப்பேற்றது. தனது பொன்விழாவை 2004 இல் கொண்டாடும்வகையில் அக்கல்லூரி வெளியிட்ட மலர் இதுவாகும். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், பாடசாலையின் விரிவான வரலாறு உட்பட பல்வேறு முக்கிய தகவல்களைத் தாங்கிய கட் டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் உள்ளிட்ட படைப்பிலக்கியங்கள், என

இம்மலரில் பல்வேறு அம்சங்கள் உள்ளடங்குகின்றன. நீர்கொழும்பு பற்றிய சமூகவியல் ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இம்மலர் நிச்சயம் பயனுள்ளது.

முருகபூபதியைப் போலவே நீர்கொழும்பைப் பின்னணியாகக் கொண்ட பலர் ஆக்க இலக்கியங்களையும் அறிவியல் நூல்களையும் படைத்துவந்திருக் கிறார்கள். நீர்கொழும்பு இலக்கிய வட்டம் நடத்தியவர்கள் என இக்கட்டுரை யின் தொடக்கத்தில் குறிப்பிட்டவர்களின் தொடர்ச்சியாக வாழும் இவர்களில் சிலரது படைப்புகளில் நீர்கொழும்பின் தனித்துவம் பேணப்படுவதில்லை என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்ட போதிலும், இவர்களும் நீர்கொழும்பு மண்ணின் இலக்கியவாதிகளாக, எழுத்தாளர்களாக அடையாளப்படுத்தப் படவேண்டும் என்று கருதுகின்றேன்.

காவலூர் இ. விஜேந்திரன் (இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டதாரி. நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். உலகின் மூன்றாவது கண், ஜனநாயகத்தின் நான்காவது தூண் ஆகிய நூல்களை எழுதியவர்), எஸ். உதயசெல்வன் (யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், நீர்கொழும்பின் குடாப்பாடு பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறார். இவரது முதலாவது நாவல் *நினைவெல்லாம் நீயே* 2004 இல் மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்தது. தொடர்ந்து *அப்பாவைத்தேடி* என்ற சிறுகதைத் தொகுதியும், *மொட்டுக் களை மலரவிடுங்கள், காதல் பூட்டு* ஆகிய நாவல்களும் வெளிவந்தன. வாய்ப்பூட்டு நாவல் திருப்பூர் தமிழ்ச்சங்கம் நடத்திய 2005ம் ஆண்டுக்கான இலக்கிய விருது பரிசுப்போட்டியில் பரிசுபெற்றது. உள்ளத்திலே குடி யிருக்கலாமா- இவரது ஐந்தாவது நூல்), எம்.எம்.ஜி. பிரிட்டோ (சுற்றாடல், கணிதம் போன்ற பாடநூல்களை எழுதி நீர்கொழும்பு கிளிண்டன் சுரேஷ் குமாரின் மூலம் வெளியிடுபவர்), கலாநெஞ்சன் ஷாஜஹான் (தளுப்பொத்த, பள்ளன்சேனை வீதியில் வசிக்கும் இவரின் ஏன் இந்த மௌனம் கவிதைத் தொகுதி 1999இல் வெளிவந்தது), கிச்சிலான் அமதுர் ரஹீம் (நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் கவிஞர் கிச்சிலான் அமதுர் ரஹீம், ஆசிரியப் பணியில் நீண்டகாலம் ஈடுபட்டவர். தமிழ் மொழி ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிய வேளையில் வானொலி, தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றியவர். பின்னாளில் பாரிசவாதத்தால் பாதிப்புற்றவர். இவரது படைப்பாக்கங்களின் முதலாவது தொகுப்பாக கவிக்குழந்தை என்ற கவிதைத் தொகுதி 2007இல் வெளிவந்துள்ளது), க. சிவாதரன் (டாக்டர் கந்தசாமி சிவாதரன் யாழ்ப்பாணம், மாதகலைச் சேர்ந்தவர். 1992 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1997ம் ஆண்டு B.S.M.S. பட்டம் பெற்றவர். உளவளத்துணை, மருந்தியல் தொடர்பான துறைகளில் தேர்ச்சிபெற்ற இவர்

நீர்கொழும்பில் தனியார் மருத்துவ மனையொன்றை நடத்திவருகிறார். பல் வேறு நோய்களுக்கு மருத்துவரின் பயனுள்ள ஆலோசனைகள் என்ற இவரது நூல் 2005இல் மணிமேகலை பிரசுரமாக வெளிவந்தது), சு.சிவராஜலிங்கம் (நீர்கொழும்பு, ஆவே மரியா வீதியில் 7/2, நினியோன் மாவத்தையில் வசிக்கும் இவர் அந்திப் பொழுதின் சிந்தனை மலர்கள் என்ற வரலாற்று நாவலின் ஆசிரியர்), எம்.ஜே.எம்.றியாள் (நீர்கொழும்பு கம்மல்துறையைச் சேர்ந்த இவரது மதீனாவை நோக்கி என்ற நூல் 1980இல் வெளிவந்தது), பண்டிதர் க. மயில்வாகனனார் (நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித் தியாலய ஆசிரியராகப் பணியாற்றிய புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். இவர் விசுவேசர் புராணம் உள்ளிட்ட பன்னூலாசிரியர்), மு. பஷீர் (நீர்கொழும்பு உருவாக்கிய தமிழ் எழுத்தாளர் களுள் ஒருவர் மு.பஷீர். நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தின் முதலாவது தலைவராகவும் இருந்தவர். இவரது தலைமுறை இடைவெளி சிறுகதைத் தொகுதி அவுஸ்திரேலியாவில் வெளியிடப்பட்டது), கவி முத்துதாசன் (தென்றல் விடு தூது என்ற கவிக்கதம்பம் நூலின் ஆசிரியர் கவி முத்துதாசன், ப. விக்கினேஸ்வரன் என்ற இயற்பெயர் கொண்டவர். கடற்கரைத்தெரு, லக்ஷ்மன் மாவத்தை, 208/1ஆம் இலக்க ''தமிழகம்'' இல்லத்திலிருந்து 1983 இல் தென்றல் விடு தூது வெளிவந்தது. ஆரம்பகால நீர்கொழும்பு வாழ்வை நான் வாழ்ந்த இல்லமும் இதுவே), சுபைர் இளங்கீரன் (யாழ்ப்பாணத் தில் பிறந்த இவர் சுமார் அரை நூற்றாண்டு காலமாக தீவிர அரசியல், பத்திரிகையியல் மற்றும் இலக்கியப்பணிகளில் ஈடுபட்டு 1996 செப்டெம்பர் 12ம் திகதி நீர்கொழும்பில் காலமானவர்), நீர்கொழும்புர் ந. தருமலிங்கன் (195 கடற்கரை வீதியில் வசித்த இவரது வடிவங்கள் என்ற கவிதைத் தொகுதி 1998 இல் வெளியாகியது) ஆகியோர் பற்றியும் இக்கட்டுரையின் நிறைவாகப் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

இன்று நீர்கொழும்பில் பிறந்து வளர்ந்து இலக்கியம் படைத்துவரும் வேறும் பல இளம் படைப்பாளிகள் பலரின் பெயர்கள் இங்கு குறிப்பிடப் படவில்லை என்பதை நானறிவேன். இக்கட்டுரை நீர்கொழும்பின் இலக்கிய வளம் பற்றிய முழுமையான ஆய்வல்ல என்ற வகையில், எதிர்காலத்தில் பிரதேச இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்ள முன்வரும் ஆய்வாளர்களுக்கு இக்கட்டுரை சிறிதளவாவது உதவியாகவிருக்கும் என்று நம்புகின்றேன்.

(நெய்தல்: நீர்கொழும்பு வாழ்வும் வளமும். நீர்கொழும்பு: நீர்கொழும்பு இலக்கிய வட்டம், பெப்ரவரி 2015: ப.108-118.)

28

குரு-அரவிந்தனின் படைப்பிலக்கியப் பணிகள்

திரு.குரு அரவிந்தன் அவர்கள் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் இலக்கியவாதிகளில் குறிப்பிடத்தகுந்தவர். குறிப்பாக புகலிடத்திலிருந்து தமிழகம் வரை விரிந்த தன் பாதங்களை ஆழப்பதித்து பரந்தளவில் இலக்கிய ரசிகர்களை உள்வாங்கிக்கொண்டவர். தமிழக ஜனரஞ்சக வார இதழ்களில் இவரது பெயர் பரிச்சயமானது.

இலங்கையின் வடபுலத்தில் காங்கேசன்துறையின் வரலாற்று மண்ணான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த குருநாதபிள்ளை அரவிந்தன் நடேஸ்வரா கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். பட்டயக் கணக்காளராகப் பயின்று, மகாராஜா நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றிப் பின்னர் புலம்பெயர்ந்து கனடாவுக்குச் சென்றவர். குடும்பத் தினருடன் அங்கு வாழ்ந்து வருகின்றார்.

பல்வேறு சமூக, இலக்கியப் பணிகளுடன், சிறுகதைத் தொகுப்புக்கள், நாவல்கள், ஒலிப் புத்தகங்கள் என்று விரியும் இவரது படைப்புலகத்துக்கும் அப்பால், நாடக எழுத்துருவாக்கங்கள், திரைப்பட வசனங்கள், பயணக் கட்டுரைகள் என மேலும் பல திறமைகள் இவருக்கு அணிசேர்க்கின்றன.

கனடாவிலிருந்து வெளிவரும் ஈழநாடு, வாசகன், உதயன், கீதவாணி, நம்நாடு, ரோஜா ஆகியவற்றிலும், சென்னை ஆனந்தவிகடன், ஜேர்மனி வெற்றி மணி, லண்டன் புதினம், கோலாலம்பூர் மலேசிய நண்பன் ஆகிய ஊடகங் களிலும் பிரசுரமான இவரது பதினைந்து சிறுகதைகளைக்கொண்ட தொகுப் பொன்று *என் காதலி ஒரு கண்ணகி* என்ற தலைப்பில் 2001 இல் வெளிவந்தது. இதுவே அச்சில் வெளிவந்த இவரது முதலாவது நூல் என்று கருதுகின்றேன்.

2002 இல் முதற்பதிப்பைக்கண்டு மீண்டும் 2005 இல் மீள்பதிப்புக் கண்ட இவரது *இது தான் பாசம் என்பதா?* என்ற நூல் தமிழகத்தின் கல்கி, ஆனந்தவிகடன், ஜேர்மன் வெற்றிமணி, கனடா உதயன், நம்நாடு, மற்றும் லண்டன் புதினம் ஆகியவற்றில் எழுதிப் பிரசுரமான 15 சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்திருந்தது. தமிழக எழுத்தாளர் அனுராதா ரமணன் அவர்களின் மதிப்புரையுடன் கூடியதாக இது வெளிவந்தது.

உதயன் (கனடா) பத்திரிகையில் 1999இல் தொடராக 25 வாரங்கள் வெளிவந்த நாவலான *உறங்குமோ காதல் நெஞ்சம்*, 2002 இல் நூலுருவாகி,

மீண்டும் 2004 இல் மீள்பதிப்புக் கண்டது. நூலுருவில் வெளிவந்த குரு அரவிந்தனின் முதல் நாவல் இதுவாகும். ஈழப்போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தி மாவீரனாகி விட்ட சிவா, அவனது எண்ணங்களை மனதிலிருந்து அகற்றமுடியாது தவிக்கும் அவனது காதலி சாந்தி, சாந்தியுடன் இணையத் துடிக்கும் சூரியா என்று மும்முனைக்காதலை ஊடுபாவாகக் கொண்டு ஈழத்தமிழரின் போராட்டம், இராணுவ அச்சுறுத்தல், அரசியல் சித்து விளையாட்டுக்கள் போன்ற சம்பவங்களைத் தாராளமாக உள்வாங்கி நகரும் கதையம்சம் கொண்டதாக இந்நாவல் அமைந்தது.

உதயன் (கனடா) பத்திரிகையில் 40 வாரங்கள் தொடராக வெளிவந்த மற்றொரு நாவலான *உன்னருகே நான் இருந்தால்*, அதே (2004ம்) ஆண்டில் வெளிவந்தது. ஒரு குடும்பத்தின் நான்காவது தலைமுறையில் உள்ள இருவருக்குள் ஏற்படும் காதல் பற்றி இந்நாவல் பேசுகின்றது. தலைமுறை வழிவந்த உறவுமுறையில் சகோதரர்களாக அமைவதால் ஏற்படும் சிக்கல் இந்நாவலை விறுவிறுப்பாகக் கொண்டுசெல்கின்றது.

கனடாவிலிருந்து வெளிவரும் இருசு பத்திரிகையில் 25 வாரங்கள் தொடராக வெளிவந்த நாவலான *எங்கே அந்த வெண்ணிலா?* 2006 இல் வெளிவந்தது. விக்ரம் மதுமிதா இருவருக்குமிடையில் ஏற்படும் காதலின் பின்னணியில் கனேடிய அமெரிக்க பல்லினப் பண்பாட்டுச் சூழலில் கதை சுவாரஸ்யமாக நகர்கின்றது.

அதே ஆண்டு (2006) நின்னையே நிழல் என்று, மறந்தாலும் நெஞ்சம் மறக்காதம்மா, போதிமரம், ஒருபிடி மண், விடியலை நோக்கி, தொலைந்து போனவன், பாட்டியம்மா, தாய் மண்ணே வணக்கம், காந்தள் மலர், அழியாத காவியம் ஆகிய பத்துச் சிறுகதைகளைக் கொண்ட தொகுதியாக *நின்னையே நிழல்* என்று என்ற சிறுகதைத்தொகுதியும் வெளியாகியிருந்தது.

நீர்மூழ்கி நீரில் மூழ்கி என்ற இவரது இலக்கியப் படைப்பு சிறந்த குறுநாவலுக்கான ஆனந்தவிகடன் பரிசினை 2001இல் பெற்றதுடன் ஆனந்த விகடன் பவளவிழா மலரில் 25 பக்கங்களில் தொடராகவும் பிரசுரிக்கப் பட்டிருந்தது. விகடன் வாசகர்களுக்காக இக்கதையினை எழுதியவர் யார் என்று ஒரு போட்டியையும் வைத்திருந்தார்கள் விகடன் குழுவினர். அக் கேள்விக்கு 45261பேர் குரு அரவிந்தனின் பெயரை சரியாகப் பிரஸ்தாபித் திருந்தார்கள். அதில் ஏழுபேர் தங்கப்பதக்கங்களையும் தட்டிச் சென்றார்கள். அக்குறுநாவலையும், மற்றொரு படைப்பான உறைபனியில் உயிர் துடித்த போது என்ற குறுநாவலையும் இணைத்து *நீர்மூழ்கி நீரில் மூழ்கி* என்ற பொதுத் தலைப்புடன் பின்னர் 2008இல் நூலுருவிலும் வெளிவந்தது.

இவரது மேற்குறிப்பிட்ட நூல்கள் அனைத்தையும் சென்னை மணிமேகலைப் பிரசுராலயத்தினர் ஆர்வத்துடன் நூலாக்கித்தந்திருந்தனர். தமிழ் இலக்கிய அரங்கில் குரு அரவிந்தனின் பெயரை தமிழகம், இலங்கை, மலேசியா மற்றும் புகலிடநாடுகளெங்கும் காவிச்செல்ல இந்நூல்களும், அதன் வெளியீட்டாளர்களான மணிமேகலைப் பிரசுரகளமும் பெருமளவில் துணைசெய்தன.

கனேடிய தமிழ்க் கல்விச் சேவையிலும் ஈடுபாடுகொண்ட இவர், புகலிடத்துத் தமிழ்ச்சிறார்களின் நலன்கருதிப் பல தமிழ்மொழிப்பாட நூல்களையும் பயிற்சி நூல்களையும் *தமிழ் ஆரம்* என்ற பெயரில் தொடராக வெளியிட்டிருந்தார். ஆரம்பத் தமிழ் மொழிக் கல்வியைப் புலம்பெயர் தேசத்தில் மேற்கொள்ளத் தயாராகும் இளஞ் சிறார்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட இத் தமிழ் மொழிப் பயிற்சி நூல்கள் இவரால் இரண்டாயிரமாம் ஆண்டு மார்கழி முதல் வெளியிடப்பட்டவண்ணமிருந்தன. ஒன்ராரியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்த இவர் பின்னாளில் அதன் காப்பாள ராகவும் பணியாற்றினார்.

குரு அரவிந்தனின் கதை,வசனம், நெறியாழ்கையுடன் மேடையேறிய நாடகங்கள் பல. அன்னைக்கொரு வடிவம், மனசுக்குள் மனசு ஆகிய நாடகங் களுடன், பொங்கலோ பொங்கல், தமிழா தமிழா, பேராசை ஆகிய சிறுவர் நாடகங்களையும் இதில் பட்டியலிடலாம்.

சுகம் சுகமே, சிவரஞ்சனி, வேலி ஆகிய குறும்படங்களின் திரைக்கதை வசனகர்த்தாவாகவும் குரு அரவிந்தன் இயங்கியுள்ளார்.

குரு அரவிந்தனின் நாடக நூல்கள் எவையும் இதுவரை நூலுருவில் வெளிவரவில்லையாயினும் விரைவில் அவை நூலுருவாகி அரங்கியல் துறையில் ஈடுபாடு கொண்ட ஈழத்தமிழ் இலக்கிய ஆர்வலர்களுடன், தமிழக இலக்கிய ஆர்வலர்களையும் சென்றடையும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தாயகத்திலிருந்து பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து புகலிடத்தில் வேரோடி விழுதெறிந்துவாழும் எம்மிடையே குரு அரவிந்தன் ஈழத்தமிழர் களின் இலக்கியத் திறமைகளை தமிழகத்திலும் வியந்து போற்றும் வகையில் தன் ஜனரஞ்சகம் மிக்க படைப்பிலக்கியங்களால், முக்கியமானதொரு படைப்பாளியாகத் தக்கவைத்து வருகின்றார். அவரது 25 வருடகால கனடிய இலக்கிய சேவையைப் பாராட்டி வாழும்போதே கௌரவிக்கும் பணியில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஈடுபட்டுள்ள செய்தி உவப்பானதாகும்.

அவரை வாழ்த்தத் திரண்டிருக்கும் கலை இலக்கியப் பேரணியில் நானும் ஒருவனாக இணைந்துகொள்வதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்

29

‘முகடு’

பாரிசிலிருந்து ஒரு இளையோர் சஞ்சிகை

ஈழத்துத் தமிழ் ஆக்கஇலக்கிய வளர்ச்சியிலும், இளையோரிடையே வாசிப்புக் கலாச்சாரத்தின் விரிவாக்கலிலும் சிறுசஞ்சிகைகளின் பணி முக்கியமானது. *மறுமலர்ச்சி* என்ற ஈழத்துச் சிறுசஞ்சிகை 1946ம் ஆண்டு பங்குனி மாதம் வெளிவரத் தொடங்கியது. 1948 வரை 24 இதழ்கள் வெளியாகின. குறுகிய கால இதழானபோதிலும், ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் என்றொரு காலக் கணிப்பிற்கு இவ்விதழ் வித்தூன்றியது. மறு மலர்ச்சியின் ஆசிரியர் குழுவில் தி.ச.வரதராசன் (வரதர்), கா.மதியாபரணம், நாவற்குழியுர் நடராசன், ச.பஞ்சாட்சர சர்மா, க.இ.சரவணமுத்து ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஈழத்து இலக்கியப் புனைகதைத் துறையின் மறு மலர்ச்சிக் காலகட்டத்துச் சிறுகதைகள் இன்றும் பல்வேறு ஆய்வாளர்களினால் விதந்து போற்றப்படுகின்றன.

மறுமலர்ச்சி இதழ் போன்றே இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவையின் வெளியீடாக 1970 நடுப்பகுதிகளிலிருந்து ஈழத்தின் சிறுசஞ்சி கையாக வெளிவந்திருந்தது *கற்பகம்* என்ற இலக்கிய இதழ். இவ்விதழின் சிறப்பாசிரியராகப் பணியாற்றியவர் யாழ்ப்பாணம் இணுவிலை பிறப்பிட மாகவும், திருக்கோணமலையை வதிவிடமாகவும் கொண்ட தம்பு-சிவா எனப்படும் மூத்த படைப்பாளி த.சிவசுப்பிரமணியம். மூன்றே மூன்று இதழ்களே வெளிவந்திருந்த இச்சிற்றிலக்கிய ஏட்டில் வெளிவந்திருந்த மொத்தம் 12 கதைகளும் அண்மைக்காலத்தில் (2005இல்) ஒரு தனிநூலாக வெளிவந்திருந்தது. செ.கணேசலிங்கன், நெல்லை க.பேரன், நீர்வை பொன்னையன், குப்பிளான் ஐ.சண்முகன், கே.டானியல், போர்வையூர் ஜிப்ரி, செ.கதிர்காமநாதன், எஸ்.இராஜம் புஷ்பவனம், செ.கந்தசாமி, செ.யோகநாதன், த.சிவசுப்பிரமணியம், தமிழக எழுத்தாளர் பிரகாஷ், ஆகியோரின் படைப்புக்கள் இதில் உள்ளடங்கியிருந்தன. அனைவரும் பின்னாளில் இலக்கிய உலகில் பிரபல்யமானவர்கள்.

உதாரணத்திற்காக நான் மேலே குறிப்பிட்ட, ஈழத்துப் படைப்பிலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்த, இவ்விரு இதழ்களும் குறுகிய ஆயுள் கொண்டவை என்பதை அவதானித்திருப்பீர்கள். சிற்றிலக்கிய இதழ்களின் ஆயுளைக்கொண்டு அதன் மகிமை வரலாற்றில் பதியப்படுவதில்லை. அதன் கனதியைக் கருத்திற்கொண்டே அவை வரலாற்றில் பதிவுபெறுகின்றன. மீண்டும் மீண்டும் நினைவுட்டப்பெறுகின்றன.

இலக்கிய நண்பர் வழியாக அண்மையில் எனது பார்வைக்குக் கிட்டிய *முகடு* என்ற இன்றைய புதிய இதழின் மூதாதையராக பாரிஸ் மண்ணிலிருந்து வெளிவந்த பல சிற்றிதழ்களை நாம் இக்கட்டுரையில் முதலில் நினைவுகூர்வது பொருத்தமானதெனக் கருதுகின்றேன்.

அம்மா என்ற தலைப்பில் ஷோபாசக்தி, சேனன், எஸ்.மனோகரன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு சராசரி 60 பக்கங்களில் (S. Manoharan, (Esc -13), 210 Ave.du 8Mai 1945, 93150 Le Blanc Mesnil, France என்ற முகவரியிலிருந்து) காலாண்டிதழாக 2000 ஆம் ஆண்டுகளில் ஒரு சஞ்சிகை வெளிவந்தது. இவ்விதழின் பத்தாவது இதழ் ஆஸ்திரேலியச் சிறப்பிதழாக ஆனி 1999 எழுத்தாளர் நட்சத்திரன் செவ்விந்தியனின் தொகுப்பில் வெளிவந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அலை ஓசை என்ற இதழ் எமிலியானுஸ் ஜோய் அவர்களை ஆசிரியராகவும், அலோசியஸ் ஹமில்டன், மனுவல் அன்ரன், குருசுமுத்து பீலிக்ஸ், மைக்கல் அஞ்சலோ ஆகியோரை ஆசிரியர் குழுவாகவும் கொண்டு குருநகர் சென்.ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க வெளியீடாக (E.Judes, 7, Square des Anglaises, 93800 Epinay Sur Seine, France என்ற முகவரியிலிருந்து) ஒரு கலை இலக்கியச் சஞ்சிகை வெளிவந்தது. சராசரி 20 பக்கங்களில் 2004ம் ஆண்டுகளில் இது வெளிவந்திருந்தது. குருநகர் சென்.ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட சஞ்சிகை என்பதால், கவிதை, கதைகளுடன் மாணவர் சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட கலைவிழாக்கள், நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்களும் இவ்விதழில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

உயிர்நிழல் என்ற சிற்றிதழ், லக்ஷ்மி, கிருஷ்ணராஜா, கலைச்செல்வன் ஆகிய மூவரின் பெருமுயற்சியால் தொகுக்கப்பெற்று (EXIL, 27, Rue Jean Moulin, 92400 Courbevoie, France என்ற முகவரியிலிருந்து) அரசியல் கலை இலக்கிய சமூகவியல் படைப்புகளுடன் இருமாத இதழாக, சராசரி 66 பக்கங்களுடன் ஜனவரி-பெப்ரவரி 1998 முதல் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்திருக்கின்றது. லண்டனிலுள்ள ஓவியர் கிருஷ்ணராஜாவின் கலைத்துவம் மிக்க வடிவமைப்புடன் வெளிவந்த உயிர்நிழல், ஜனரஞ்சக

வெளியீடாகவன்றி தீவிர வாசகர்களை நோக்கிய சஞ்சிகையாகவே வளர்ந்து வந்தது. இன்றளவில் தீவிர வாசகர்களால் பேசப்படும் ஒரு சஞ்சிகையாகவும் கணிப்பினைப் பெற்றுள்ளது.

உயிர்நிழல் வெளியீட்டாளர்களான *எக்ஸில்* (Exil, B.P.204, 92604 Asnieres Cedex, France) அமைப்பினரால் ஆர்.இன்பவல்லி என்பவரைப் பதிப்பாசிரிய ராகக் கொண்டு, எக்ஸில் என்ற அமைப்பின் தலைப்பிலேயே மற்றுமொரு காலாண்டுச் சஞ்சிகையும் சமகாலத்தில் வெளியானது. மே-ஜுன் 1998 இல் இதன் முதலாவது இதழ் வெளியானது. பின்னாளில் 2003இலும் அச் சஞ்சிகை வெளிவந்திருந்ததைக் காணமுடிந்தது. புகலிடத்தில் மாற்றுக் கருத்துக்கள், நீதிக்கான குரல்கள் மங்கி வந்ததொரு அவலமிகு சூழலில் நியாயத்தின் குரலாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் மனச்சாட்சியாகவும் எக்சில் வெளிவந்துள்ளது. மாற்றுக் கருத்துகளுக்கும் களம் அமைத்து ஒரு ஆரோக்கியமான விவாதமேடையை ஒவ்வொரு இதழும் உருவாக்கிவந்தது.

ஓசை என்ற சஞ்சிகை எஸ்.திருச்செல்வம் அவர்களால் பாரிஸ் கலை இலக்கிய வாசகர் வட்ட வெளியீடாக 1989 இல் தொடங்கப்பட்டது. (Osai, C/o S.Thiruchelvam, 20, Rue de la Folie Mericourt, 75011 Paris, France). இதுவும் ஒரு காலாண்டிதழே. சராசரி 50 பக்கங்களில் வெளிவந்த இவ்விதழ் 1991 இலும் தொடர்ந்தது. பின்னர் தனது வருகையை சடுதியாக நிறுத்திக்கொண்டது.

சமர் என்ற சஞ்சிகை ரயாகரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு (Samar, 87, Rue de Colombes, 92600 – Asnieres sur seine, France) அரசியல், இலக்கிய சிறுசஞ்சிகையாக 1991 இலிருந்து ஆவணி 2002வரை 31 இதழ்களை சராசரி 60 பக்கங்களில் வெளியிட்டுவைத்தபின் நின்றுபோனது. இறுதி இதழின் வெளியீட்டாளர்களாக தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் (32, Rue Trouillet Derel, 92600 Asnieres, France) என்ற அமைப்பின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

முற்றம் என்ற இருமாத இதழ், சந்திரமோகன், பெஞ்சமின் இமானுவல், ம.அன்ரன் ஆகியோரை ஆசிரியர்குழுவாகக் கொண்டு, A.V.Damian அவர்களால், (திருமலைக் கலாமன்றம், (Esc 6), 8, Bld Raymond Poincare, 94170 LePerreux, France என்ற முகவரியிலிருந்து) திருமறைக் கலாமன்றத்தின் கலை, பண்பாட்டுச் செய்தி இதழாக 2000ம் ஆண்டுக்காலப்பகுதியில் 16 பக்கங் களில் வெளிவந்திருந்தது. தாயகத்தில் வேர்கொண்டு புகலிடத்தில் விழுது களைப் பரப்பி விருட்சமாக நின்று தனது கலைப் படைப்பகளை நாடகங்களாக மேடையேற்றிவரும் திருமறைக் கலாமன்றத்தின் செய்தி இதழாக வெளிவந்த முற்றம் என்ற இச்சஞ்சிகை, கலைத்துறை சார்ந்தோர் பற்றியும், கலைப்

படைப்புகள் பற்றியும் தகவல்களை புகலிடத்தில் பரிமாறிக்கொள்ளும் ஊடகமாகவும் இயங்கிவந்தமையால் அரங்கியல் வட்டத்தில் அதிகம் பேசப் பட்டது.

கி.பி.அரவிந்தன், க.முகுந்தன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்ட *மௌனம்* என்ற கலை இலக்கிய திறனாய்வுச் சஞ்சிகை, பி. விக்னேஸ்வரன் அவர்களால் (6 Square du Roule, 92200 Neuilly S/Seine, France என்ற முகவரி யிலிருந்து) மே-ஜுன்-ஜுலை 1993 இல் முத்திங்கள் இதழாகத் தொடங்கப் பெற்று சிறிதுகாலம் வெளியிடப்பட்டது. மௌனம் சஞ்சிகையில் ஈழத்து இலக்கியம் மாத்திரமல்லாது ஐரோப்பிய, உலக இலக்கியங்கள் பற்றிய தேடலும் நிறைந்து காணப்பட்டுள்ளது.

வண்ணைதெய்வம் அவர்களால் *வண்ணை* என்ற தலைப்பில் 2002 காலப்பகுதியில் இலவச வெளியீடாக (1, Allee Raoyl Duffy, Bat, Bretagne, 93420 Villepinte, France என்ற முகவரியிலிருந்து) ஒழுங்கற்ற கால இடை வெளியில் வெளியிடப்பட்ட ஒரு சிறுசஞ்சிகையும் இங்கு பதிவுசெய்யப்பட வேண்டியதே. வண்ணை தெய்வம் என்ற புனைபெயருக்குள் மறைந்திருந்து புலம்பெயர்ந்தோரின் இலக்கியத்துக்கு குறிப்பிடத்தக்க பங்காற்றிவரும் தெய்வேந்திரம் அவர்கள் பிரான்ஸில் இயங்கும் ஏபீசீ வானொலியின் அறிவிப்பாளரும் கவிஞரும் கலைஞரும் சிறந்த எழுத்தாளருமாவார். இவர் எழுதி வெளிவந்த முதலாவது நூல் விடிவை நோக்கி என்ற கவிதைத் தொகுதியாகும். இது 1992 இல் வெளிவந்தது. இவர் பன்னூலாசிரியராகப் பின்னாளில் விளங்கியவர்.

அச்சுருவில் 2000மாம் ஆண்டுகளில் வெளிவந்த இத்தகைய சிறு சஞ்சிகைகளின் வரவு, பின்னாளில் அறிமுகமான இணையத்தளங்களின் பயன்பாட்டினால் பின்னர் இணையச் சஞ்சிகைகளாக பரிணாம வளர்ச்சி கண்டன. இடைப்பட்ட காலத்தில் பிரான்சிலிருந்து வெளிவந்த சஞ்சிகைகள் பற்றிய தகவல்கள் என்னிடம் இல்லை.

இந்நிலையில் மீளவும் 2014ம் ஆண்டு அச்சுருவில் *முகடு* என்ற சிற்றிதழின் வருகையானது, கரிசனையுடன் அவதானிக்கத்தக்கதாகவுள்ளது. ஒரு இணையச்சஞ்சிகையாக, பெரும் பொருட்செலவின்றி ஒரு படைப் பாக்கத்தை வெளியிடும் இன்றைய சூழலில், கடினமானதும், பணச் செலவுமிக்கதும், பிரயத்தனமான விநியோகக் கஷ்டங்களை எதிர்கொள்ளக் கூடியதுமான நூலுருவில் அமைந்த முகடு சஞ்சிகையின் வருகையின் பின்னால் துணிச்சல்மிக்க ஒரு இளைஞர் குழாமை இனம்காணமுடிகின்றது. இது நீண்டகாலம் தொடருமா அல்லது மழைகாலக் காளான்களாக சடுதியில்

மறைந்துவிடுமா, அல்லது அச்சு ஊடகநிலையிலிருந்து மின்னூடக நிலைக்குத் தன்னை மாற்றிக்கொண்டு முற்றிலும் புதிய வாசகர்வட்டத்தின் கைகளில் தங்கிவிடுமா என்ற ஆரோக்கியமற்றதும் அவநம்பிக்கை மிக்கதுமான கேள்விகளால் இந்த இளம் தளிர்களின் உணர்வினை மழுங்கடிக்கத் தயாராக நான் இல்லை. இருப்பினும், முகடு சஞ்சிகையைப் புரட்டிப் பார்த்தபின்னர், அதை எனக்கு அறிமுகப்படுத்திய நண்பர்களுடனான ஆரோக்கியமான கருத்தாடல்களின் வெளிப்பாடாக எனது அவதானிப்பினை இவ்வுரைவழியாகப் பதிவு செய்வதானது, முகடு இலக்கிய வட்டத்தின் இளம் படைப்பாளிகளின் ஆரோக்கியமான சிந்தனைக்கும், நம்பிக்கையுடனான விரிந்த தேடலுக்கும் உதவும் என்று நம்புகின்றேன்.

தாயகத்திலாயினும்சரி, புகலிடத்திலாயினும் சரி, ஒரு சிறு சஞ்சிகையின் வாயிலாக அறிமுகமாகத்துடிக்கும் இளம் படைப்பாளிகளையிட்டு நான் எப்போதும் பெருமிதம் கொள்வதுண்டு. அவர்கள் அனைவரும் வாசிப்பை நேசிப்பவர்கள். தேடலை மதிப்பவர்கள். தேடலின்மூலம் தம் படைப்பாற்றலை சிறுசஞ்சிகைகளின் வழியாகப் பரிசோதித்துப் பார்க்க நினைப்பவர்கள். இலக்கியக் கூச்ச சுபாவத்தால் புனைபெயர்களுள் மறைந்துநின்று எழுதிவிட்டுத் தம் இலக்கியப் படைப்பை வாசகர் எவ்வாறு பார்க்கிறார் என்று தங்கள் அநாமதேய முகத்தில் தேங்கிய ஏக்கத்துடனும் அவாவுடனும் நின்று எட்டிப்பார்த்து ரசிப்பவர்கள்.

இன்று வாசிப்புக் கலாச்சாரம் மங்கிவருகின்றது என்று புகலிட மேடைகளில் குத்திக்குதறிக் கதறும் அனுபவம்மிக்க பெருந்தலைகளில் பெரும்பாலானவர்கள், ஆளுக்கு ஒரு இளம் படைப்பாளியையாவது உருவாக்கும் திராணியற்றவர்களாகவே காணப்படுவது எமது ஈழத்தமிழினத்தின் சாபக்கேடு. அவர்களால் பெரும்பாலும் பேச மட்டுமே முடிகின்றது. தமது கருத்துக்குச் செயல்வடிவம் கொடுப்பது பற்றி அவர்கள் சிந்திப்பது அரிது. இளையோரின் வாசிப்புக்கான வழிகளைத் தேடித்தரும் முயற்சியில் நாட்டமற்றவர்கள். அனைத்தையும் மற்றவர்களின் பக்கம் தள்ளிவைத்துவிட்டு, அடுத்தவரின் செயலுக்காகக் காத்திருப்பவர்கள். வாசிப்புப்பழக்கம் அருகி வருகின்றது என்று அங்கலாய்க்கும் இப்பெருமக்கள் முகடு போன்ற சிறுசஞ்சிகைகளின் படைப்பாளிகளை ஊக்கப்படுத்தத் தயாராக இருக்கவேண்டும். அவர்களினூடாக மேலும் பல தேடல் உணர்வு மிக்க இளம் படைப்பாளிகளை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டியவர்கள். பேசிப்பேசியே பொழுதைக் கழிக்காமல் செயலூக்கம் தர வேண்டியவர்கள். முகடு போன்ற சிறுசஞ்சிகைகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டவேண்டியவர்கள்.

இச்சந்தர்ப்பத்தில் முகடு சஞ்சிகையில் எழுதியுள்ள ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பாராட்டுகின்றேன். இவ்விளம் படைப்பாளிகள் தமது விருப்பத்துக்குரிய தெரிவாக இராமாயணம் முதல் நவீன இலக்கியம் வரை மேய்ந்திருக்கிறார்கள். தாம் உள்வாங்கிய சுதந்திரமான கருத்துக்களை மற்றவர்களுக்காகப் பதிவுசெய்ய முனைந்திருக்கிறார்கள். இவர்களிடமும், இவர்களுக்கு பாதுகாப்பாக ஒதுங்கவொரு முகடு தந்து ஒருங்கிணைத்த முகடு ஆசிரியர் குழாமுக்கும் எனது தோழமையுடனான வேண்டுகோள் ஒன்றுமுள்ளது.

கலையும் பண்பும் என்ற தலைப்பில் பிறையன்பன் என்ற நபர் மார்கழி 1961 இல் ஒரு நூலை எழுதி யாழ்ப்பாணம் கலைஞானி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். அது சரியாக ஒரு வருடத்திலேயே விற்றுத் தீர்ந்துவிட்டது. பேராதனைப் பல்கலைக்கழக வட்டத்தில் அதிகம் விமர்சிக்கப்பட்டது. இந்நூல் பின்னர் மார்கழி 1962இல் மீள்பதிப்பையும் கண்டது. அவ்வளவு பிரசித்தமாக அந்நூல் இருந்தது. தமிழ் இலக்கியம் மாத்திரமின்றி இஸ்லாமியருடைய கலை, பண்பாடு பற்றிய ஆய்வுகளையும் உள்ளடக்கியதாக எழுதப்பட்ட அந்நூல், இலங்கை அரசின் சாஹித்திய மண்டலப் பரிசைப்பெற்றது. தமிழில் ஏற்கெனவே தோன்றிய காப்பியம், கலம்பகம், அம்மானை, அந்தாதி, ஆற்றுப்படை, திருப்புகழ், கும்மி, தாலாட்டு, மாலை போன்ற இலக்கிய வடிவங்களை இஸ்லாமியப் புலவர்கள் கையாண்டமை பற்றியும் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்த அவர்கள் முனாஜாத், படைப்போர், கிஸ்ஸா, மசலா, நாமா முதலிய இலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்தியமை பற்றியும் ஆசிரியர் விரிவாக இந்நூலில் ஆராய்ந்திருந்தார். பிறையன்பன் என்ற புனைபெயர்கொண்ட இவர் ஒரு முஸ்லீமாக இருக்கலாம் என்று நீண்டகாலம் அனைவரும் நம்பிவந்தனர். உண்மையில் இந்தப் பிறையன்பன் வேறுயாருமல்ல- பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளராக இருந்து, பின்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர் சு.வித்தியானந்தன் தான் என்று பின்னாளில் அறிந்துகொண்டனர். இரகசியக்காப்புப் போல, புனைபெயரைப் பேணுவதும், புனைபெயரில் எழுதிவிட்டு யார் இவர் என்று அடுத்தவரை தேடவைப்பதும் 1960களில் ஒரு சுவாரஸ்யமான விடயமாக அமைந்திருந்தது. அக்காலத்தில் அது ஒரு Fashion ஆக, நாகரீகமாகக் கொள்ளப்பட்டது. செங்கை ஆழியான் (கலாநிதி குணராசா), காசி ஆனந்தன் (காத்தமுத்து சிவானந்தன்), உடுவை பரந்தாமன் (எஸ்.எல்.எம்.மஹ்ரூப்)

எனப் பெயர்கள் நீளும். தெணியான், அகஸ்தியர் போன்றோரின் இயற்பெயரே மறைந்து-மறந்து விட்ட நிலை இன்று காணப்படுகின்றது.

காலம் கடந்ததும், பின்னாளில் வாசகர்கள் ஒரு படைப்பை வாசிக்கும் முன்னர் அதை எழுதியவரின் பின்புலம், துறைசார்ந்த அறிவு என்பவற்றை முன்னரே தெரிந்துகொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பு உருவாயிற்று. தமிழ் வாசகர்கள் தாம் வாசிக்கத் தேர்வுசெய்யும் படைப்பாளி பற்றியும் அறியத்தலைப்பட்டனர். வைத்தியத்துறையில் அனுபவமே இல்லாமல் கேள்விஞானத்தில் நான்கு புத்தகங்களை வாசித்துவிட்டுச் சுகாதார நூல்களை எழுதியவர்கள் காணாமல் போனார்கள். அனுபவம் மிக்க வைத்தியர்கள் தமது துறைசார்ந்த நூல்களை எழுதத் தொடங்கினார்கள். தன் தலையில் முடியே இல்லாதவர்கள் தலைமுடி வளர்ப்பது எப்படி என்று எழுதிய நூல் களை மக்கள் தமிழகத்திலிருந்து இறக்குமதிசெய்து வாசிப்பதைத் தவிர்த்துக் கொண்டார்கள்.

இதனால் நாளடைவில் புனைபெயர்க் கலாச்சாரம் பாதிப்புக்குள்ளாகியது. ஐரோப்பிய- ஆங்கில நூல்களில் நூலின் பின்புறத்தில் ஆசிரியர் பற்றிய குறிப்பு இல்லாவிட்டால் அந்தநூல் விற்பனை பாரிய பின்னடைவைக் கண்டு விடுகின்றது. அதனால் பின்னாளில் வெளியீட்டு நிறுவனங்கள் ஆசிரியர் பற்றிய விவரணத்தை வாசகருக்கு வழங்கித் தமது நூலின் விற்பனையைப் பெருக்க வழிகண்டார்கள். ஒரு வாசகர் தான் வாசிக்கமுற்படும் நூலை எழுதியவர் யார் என்பது பற்றிய பின்புலத்தை அறிந்துகொள்வது அவர்களது சிறப்பு உரிமை என்று பதிப்பாளர்கள் உணர்ந்தார்கள். அதனைத் தார்மீகக் கடமையாகக் கண்டார்கள். ஐரோப்பிய பதிப்புலகில் இந்நிலை இன்று சாதாரண நடைமுறையாகி எம்மிடமும் பழக்கத்தில் வந்து விட்டது.

நான் கண்ட '*முகடு*' இதழில் எழுதிய 90 வீதமான இளம் படைப்பாளிகள் புனைபெயரைப் பயன்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிந்தது. வளரும் படைப்பாளிக்கு இது ஆரோக்கியமானதாகப்படவில்லை. தயவுசெய்து படைப்பை வழங்குபவர் துணிந்து தமது பெயரையும் பதிவுசெய்யுங்கள். புனைபெயர்களுக்குள் பதுங்கியிருந்து தமது படைப்புக்களை ''மொட்டைக் கடிதங்களாக்கி'' தாமும் அநாமதேய எழுத்தாளராக வளர்வது எவ்வகையிலும் ஆரோக்கியமானதன்று.

தங்கள் கருத்துக்களைத் துணிந்து தனது சொந்தப்பெயரில் கட்டுரையாகப் பதிவுசெய்பவர்கள் பின்னாளில் பொறுப்புடன் எழுதத் தலைப்படுவர். அவர்கள் எதற்காகத் தம்மை உருமறைப்புச் செய்துகொள்ளவேண்டும். அரசியல் காரணங்களுக்காக வேண்டுமானால் பிற பெயர்களில் எழுதலாம்.

இராமாயணம் பற்றியும் சங்க இலக்கியம் பற்றியும், லெமூரியாக் கண்டம் பற்றியும் ஈழத்துக் கவிதைகள் பற்றியும் கதைக்க விரும்புபவர்கள் தாங்கள் ஏன் புனைபெயர்களுக்குள் மறையவேண்டும்.

முகடு தன் படைப்பாளிகளை சொந்தப்பெயரில் அறிமுகப்படுத்தத் துணியாது போனால் முகட்டின் நிலையும் சுயம் இழந்துபோகும் ஆபத்துண்டு.

இவ்விதழில் என்னைக் கவர்ந்த மற்றொரு அம்சம். லெமூரியாக் கண்டம் பற்றி பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட கட்டுரையாகும். பிரான்சின் இளைய தலைமுறைத் தமிழ்ப்படைப்பாளிகள் எமது ஈழத்தமிழர் வாழ்வியலை பிரெஞ்சு மொழியில் அறிமுகம் செய்வதன்மூலம், தமிழர்களின் தனித்து வத்தை தமிழரல்லாதவர்களுக்கும் அறியத்தரும் சமூகப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத் தூண்டவேண்டும். உலகத்தமிழர் பற்றியும் தமிழர் நாகரீகம் பற்றியும் மட்டும் நின்றுவிடாது சொல்லப்படாத ஈழத்தமிழர் வரலாற்றையும், போராட்டத்தையும், பிரெஞ்சு மொழிவழியாக அறியத்தரவேண்டும். எதிர்காலத்தில் புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி மொழி கடந்த நிலைக்குச் செல்ல இவ்விளைஞர்களால் மட்டுமே முடியும். தமிழகத்திலும், தாயகத்திலும் உள்ள தமிழ் இலக்கிய ஜாம்பவான்களாலும் அது முடியப் போகின்ற காரியமல்ல. முகடு இதழ்வழியாக இத்தகைய இருமொழிப் பரி வர்த்தனையை ஊக்குவிக்க முயலவேண்டும் என்பதே எனது வேண்டு கோளாகும்.

(லண்டன் ஐ.பீ.சீ. தமிழ் வானொலியில் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களின் வாராந்த உரையிலிருந்து...)

30

‘நஞ்சுண்டகாடு’

ஒரு போரிலக்கிய நாவலின் மீள் உயிர்ப்பு

ஏணைப்பிறை என்ற பெயரில் வன்னியில் 2004-2006 காலப்பகுதியில் கையெழுத்துப் பிரதியாக உலவிய ஒரு நாவல், விரிந்த வாசகர் பரப்பினை நோக்கி பத்தாண்டுகளின் பின் நஞ்சுண்டகாடு என்ற பெயரில் மீளவும் உயிர்பெற்றுள்ளது.

2009க்கு முன்னர் வன்னிமண்ணில் பிரசவித்த பல இலக்கியங்கள் வெளியுலகம் காணாமலேயே மறைந்துவிட்ட அவலம் வரலாற்றில் என்றென்றும் ஒரு வடுவாகவே இருக்கப்போகும் ஒரு சோக நிகழ்வாகும். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தணிக்கைக்குள்ளானவை உள்ளிட்ட ஈழத்தமிழரின் பல இலக்கியப் படைப்புக்கள் வன்னிமண்ணில் தோன்றி அங்கேயே மௌனிக்கப்பட்டு புதைக்கப்பட்டு விட்டன. இதற்கு இன வாதத்தையோ, சிங்கள அரசையோ குறைசொல்லிக்கொண்டிருக்க முடியாது. படைப்பாளிகளும், பதிப்பாளர்களும் தான் இவ்விழப்பிற்கு முக்கிய காரணிகளாகின்றனர்.

தங்கள் படைப்பை வெளியுலகம் அறியவிடாது தமக்குள்ளேயே பதுக்கிவைத்துக்கொண்டிருக்கும் படைப்பாளிகளை நாம் அன்றாடம் காண் கின்றோம். சொந்தப் படைப்பிலேயே தன்னிடம் ஒரு பிரதியைத் தன்னும் பார்வைக்கு வைத்திருக்காத பொறுப்பற்ற எழுத்தாளர்களையும் இன்று நாம் சந்தித்து வருகின்றோம். எமது படைப்பை நாம் பரந்த வாசகர் உலகிற்கு எடுத்துச்செல்ல கடுகளவும் முனையாது, யாரோ ஒரு ‘‘தேவன்’’ வந்து அதனைத் தனது முயற்சியில் செய்துமுடிக்கட்டும் என்ற அக்கறையின்மையே இதற்கெல்லாம் காரணம். தென்னிலங்கையை விட்டுவிடுங்கள். வன்னிப் படைப்புக்களை தமிழர் தாயகமெனக் கருதும் வடபுலத்திலோ, கிழக் கிலங்கையிலோ, எங்காவது ஒரு நூலகம் இன்றளவில் முழுமையாகப் பேணிப் பாதுகாத்திருக்கின்றதா? இல்லை என்பது வெள்ளிடைமலை!

பாரிசில் வாழும் கவிஞர் கி.பி. அரவிந்தன் அவர்களின் முயற்சியில் மறக்கப்பட்டதொரு வன்னி நாவல் இன்று விரிவான வாசகர் பரப்பிற்குக் கிட்டியுள்ளது. அதிர்ஷ்டவசமாக அந்நூலின் ஆசிரியர் இன்று புகலிடத்தில் வாழ்வதால் இந்நாவல் மீள் உயிர்ப்பிற்கு வழிகண்டிருக்கிறது. எதிர்காலத்தில் துரிதமாக மறக்கப்பட்டுவரும் வன்னியின் போர்க்கால இலக்கியங்கள் சில ஒருவேளை மீளுயிர்ப்பினைக் காணலாம் என்ற நம்பிக்கையின் ஒளிக்கீற்றை கி.பி.அரவிந்தனின் அப்பால் தமிழ் பதிப்பகம் காட்டியுள்ளது. இதற்காக தமிழ்கூறும் நல்லுலகம் முதலில் அவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

நஞ்சுண்ட காடு நாவலுக்கும் ஒரு வரலாறு உண்டு. அதுபற்றி இந்நூலுக்கான முன்னுரை எழுதியுள்ள வே.பாலகுமாரன் அவர்கள் விரிவாக எடுத்துரைக்கின்றார்.

1950களில் மார்க்சியச் சித்தாந்த அடிப்படையில் அமைந்த புதிய சமூக முறைமையினை இலங்கை முழுவதும் உருவாக்கலாம் என்ற புதிய பாய்ச்சலை நிகழ்த்த முற்பட்ட முற்போக்கு இலக்கிய இயக்கம் பெரும் பின்னடைவைக் கண்டது. இலங்கைத் தேசியத்தின் வீழ்ச்சியாகவும், தமிழ்த் தேசியத்தின் எழுச்சியாகவும் இது பார்க்கப்படுகின்றது என்கிறார் பாலகுமாரன். 1960களில் இந்நிலைமைகளைத் தம் பட்டறிவால் உணர்ந்துகொண்ட சில முன்னோடிப் படைப்பாளிகள், இன்றைய போரிலக்கியத்திற்கான முன்னோடிகளாகத் தம் பெயரை வரலாற்றில் பதிவுசெய்திருக்கிறார்கள்.

50களின் பிற்பகுதிகளிலே புதிய நிலைப்பாடொன்றை முன்வைத்த மு.தளையசிங்கம் ஒரு தனிவீடு என்ற நாவலை உருவாக்கினார். எல்லாம் அரசியல், எதிலும் அரசியல் என்றுவிட்டு இக்காலத்தில் மனிதன் ஒதுங்கி யிருக்க முடியாது என்ற கட்டாயத்தில் அரசியலும் இக்கதையில் நிறையவே இடம்பெற்றுள்ளது. ஒரு தனிவீடு, என்ற அபிலாஷை நிறைவேறியவுடன் அதனை சாசுவதம் ஆக்கிக்கொள்ள ஒரு தனிநாடு என்ற இலட்சியமும் கதாநாயகனுக்கு ஏற்படுகிறது. தனித் தமிழ்ஈழ இயக்கங்களின் தொடக்கக் காலத்தில் அதற்கான அவசியம் ஏற்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை மிகத் தெளிவாகச் சொல்கிறது ஒரு தனிவீடு என்ற கதை.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ஆரம்பகாலக் கவிதைகளின் தொகுப்பாக தமிழன் கனவு 1968 இல் வெளிவந்தது. தமிழரின் உரிமைப் போராட்டமும் அவர்தம் அங்கலாய்ப்புகளும் தமிழன் கனவுக்குப் பொருளாய் அமைந்தன. படை நடத்தியாவது தனக்கென ஒரு தனிநாடு காணும் உரிமை வேட்கை கொழுந்துவிட்டெரியும் வண்ணம் மிகப் பக்குவமாக அறுபது

களிலேயே மூட்டப்பட்ட கனற்பிழம்பாகக் காட்சி தருகின்றன காசி ஆனந்தனின் கவிதைகள்.

வெளியார் வருகை என்ற நெடுங்கவிதையை சண்முகம் சிவலிங்கம் அக்காலகட்டத்தில் எழுதியிருந்தார். சண்முகம் சிவலிங்கத்தின் நெடுங் கவிதையும் அக்கால தனிநாட்டு அரசியல் வேட்கைக்கான ஆரம்பப் புள்ளிகளாக அமைந்தவையே.

இவர்களைத் தொடர்ந்து, பிரான்சிஸ் சேவியர், தி.ச. வரதராஜன் என்ற வரதர், அ.செ. முருகானந்தன், வ.அ. இராசரத்தினம் கவிஞர் முருகையன், சு. வில்வரத்தினம், உ. சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், கே.ஆர். டேவிட், சாந்தன், சோ. பத்மநாதன், புதுவை இரத்தினதுரை, அ. யேசுராசா, எம்.ஏ. நுஃமான் எனத் தொடரும் நீண்டதொரு வரிசையில் ஆரோக்கியமான தடத்தில் கவிதை, புனைகதைத் துறையில் படைப்புக்களை வழங்கிய ஈழத்துப் படைப்பிலக்கியவாதிகளின் போரிலக்கியப் படைப்பாக்கம் பின்னாளில் தொடர்ந்தது.

இவ்வாறாக 70களின் பின்னான புதிய எழுச்சிகண்ட போரிலக்கியம் 1983 ஜூலை இனவழிப்பின் பின்னர் மிகத்தெளிவான தீவிரமான பாதையில் பயணிக்கத் தொடங்கியது. இக்கட்டத்தில் போராளிகளும் படைப்பிலக்கித்து றையில் தமது பாதங்களைப் பதிக்கத் தொடங்கினர். தமது அனுபவங்களைக் கதைகளாக, கவிதைகளாகத் தாமே எழுதினார்கள். பாரம்பரிய இலக்கிய வரம்புகள் மீறப்பட்டன. இருப்பினும் பயிற்சிப் பாசறைகள், போர்க்களங்கள் என்பன படைப்பிலக்கியத்தின் புதிய இலக்கியத்தளங்களாகியமையால், மரபுமீறல்கள் பற்றி படைப்பாளிகளோ, வாசகர்களோ அலட்டிக்கொள்ள வில்லை. புத்துணர்வுடன் கள நிலைமைகள் கதைகளாகின. ஈழத்தவரின் போரிலக்கியம் புதுவடிவம் பெற்றது.

அக்காலகட்டத்தில் பெரிதும் போற்றப்பட்ட ஒரு கதை ரஞ்சகுமாரின் கோசலை என்ற சிறுகதையாகும். இன்று ரஞ்சகுமார் ஈழத்து இலக்கியத்தளத் தில் அமைதியாகிவிட்டாலும், உலக இலக்கியங்களுள் வைத்துப் பார்க்கப்பட வேண்டிய தரத்தைக்கொண்டதென பலராலும் பாராட்டப்பெற்ற வண்ணம் இன்றும் கோசலை - என்ற அவரது சிறுகதை வாழ்கின்றது.

வே. பாலகுமார் தனது முன்னுரையில் ஓரிடத்தில் கூறுகிறார் ''வழிகாட்ட, துணைநிற்க, எவருமற்றும் எதுவித ஆயத்தமுமற்றும் கையில் எதுவுமற்ற நிலையிலும் தமிழீழத்தாயின் புதல்வர்கள் போருக்குக் கிளம்பினர். எவருமற்ற வெளிகளிலே அலைந்தனர். அருகில் அணைந்து படுத்துக்கிடந்த பிள்ளை களைக் காணாமல் தாய்மார்கள் நடுநிசியில் ஓவென அலறினர். வயிற்றிலே

நெருப்பைக் கட்டியதுபோல் பதறினர். இவ்வாறாகத்தான் ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பித்தது''.

நான் இங்கு வே.பாலகுமாரனின் கூற்றாகக் குறிப்பிட்ட இந்த வரலாற்றுப்பதிவை ரஞ்சகுமார் என்ற அப்படைப்பாளி கோசலையில் அழகாகப் பதிவுசெய்கின்றார். மோக வாசல் என்ற அவரது சிறுகதைத் தொகுப்புநூலில் கோசலை கதையும் இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தாயினதும் அவளது புதல்வர்களினதும் விசும்பல், அலைதல், படுகாயமுற்று அவயவம் இழந்து குற்றுயிராதல், மண்டையோடுகள் சிதறிக் கிடத்தல், பயிற்சிக்காகக் கண்காணாத தேசம் போதல், பிரிவுத்துயர், அலைந்துழலல், அவர்களிடையே வளர்ந்து வந்த போராட்ட ஓர்மம் என்பன கோசலையின் வரிகளில் தெளிவாகக் காணமுடிந்தது.

இவ்வாறு அன்னையின் மடியில் இதமான சூட்டில் இருந்து விலகியவர்கள் என்னவானார்கள்? எங்கே போனார்கள்? என்ன செய்தார்கள்? என்ன எண்ணினார்கள்? எவ்வாறு கொடிய தனிமை நிரம்பிய கானக வாழ்வுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டார்கள்? எவ்வாறு முன் கண்டறியாத சக போராளிகளை, சமூகத்தின் வெவ்வெறு தளங்களிலும் இருந்து விடுபட்டு வந்து சேர்ந்துகொண்ட முன்பின் அறியாத இளைஞர்களைத் தம் உயிர்த் தோழர்களாக்கிக் கொண்டார்கள்? அவர்களது பயிற்சிமுகாம் வாழ்வில் பட்ட கஷ்டங்களை எவ்வாறு தாங்கி ஏற்றுக்கொண்டார்கள்? தீவிர பயிற்சி களுக்கும் தண்டனைகளுக்கும் எவ்வாறு முகம்கொடுத்தார்கள் என்பன போன்ற கேள்விகளுக்கு ஏணைப்பிறை என்ற நஞ்சுண்டகாடு மிக விரிவாகப் பதில் சொல்கின்றது. வெறும் பயிற்சிமுகாம் வாழ்க்கை மாத்திரமல்ல, அதற்காகத் தாம் கைவிட்டுவந்த கிராமத்து வாழ்க்கையும் உடன்பிறந்தாரும் அவர்கள் பற்றிய நினைவுகளும் இந்நாவலில் முக்கிய இடம்பெறுகின்றன.

பயிற்சி முகாம் இருந்த ஏகாந்தமான நஞ்சுண்டான் காட்டின் நடுவே ஒரு பக்கமாக இருந்து மரத்தடிகளால் செய்யப்பட்ட இருக்கையான வரிச்சுத் தடியில் அமர்ந்திருந்து சுகுமாரும் கதைசொல்லியும் கதைப்பவை மிக ஆழமான மனவிசாரங்களைக் கொண்டவை. கதையில் ஓரிடத்தில் ஒரு உரையாடல் வருகின்றது. அது சுகுமாரின் வாய்வழிவரும் வார்த்தைகள் ''இங்கிருந்து பார்க்கும்போது வானத்தில் நிலா குழந்தையின் ஏணையைப் போலத் தெரிகின்றது. எல்லோரையும் தாலாட்ட வானம் ஏணைகட்டி வைத் திருக்கின்றது. வானத்தில் நிலவு ஏணைபோலத் தெரியுது, இதில் ஏறிப் படுத்துத் தூங்க எத்தனை பேருக்குத் தெரியும்?'' என்று வினா எழுப்புகின்றான்.

இதுவே கதையின் மூலத் தலைப்பான ஏணைப்பிறை என்ற பதத்தைத் தெரிவுசெய்யக் காரணமாகியுள்ளது.

கதாசிரியர் குணா கவியழகன் இந்நாவலை எழுதிய மிக இளைய வயதிலேயே முதிர்ச்சியான அறிவையும், மனதையும் பெற்றிருக்கிறார் என்பதை கதையில் இழையோடும் சம்பாஷணைகளிலிருந்து அனுமானிக்க முடிகின்றது. பிறரது அனுபவங்களை, அவர்களது குணவியல்புகளை, நடையுடை பாவனைகளை நன்கு பகுத்தாய்வு செய்யும் ஒரு விவேகியாக பயிற்சிமுகாமில் இருந்த போராளிகளை, பயிற்சிமுகாமை வழிநடத்திய பொறுப்பாளர்களை, பயிற்சியாளர்களை வருணிக்கும் ஒவ்வொரு தருணத்திலும் மெல்லிய நகைப்புடன் அவர் விபரிக்கும் பாங்கு மிகநேர்த்தி யாக இருக்கின்றது. அதேவேளை எத்தகைய பல்வேறுபட்ட பின்புலங்களி லிருந்து போராளிகள் வரகின்றனர் என்கின்ற உப கதையையும் உரையாடல் களினிடையே வெளிவரச் செய்து விடுகின்றார்.

நஞ்சுண்டகாடு நாவல் முழுவதும் ஒருவகையான நெருஞ்சி முள்வலி பரவிக்கிடக்கக் காணப்படுகின்றது. போராளிகளின் வாழ்வின் இருண்ட பக்கங்கள், வறுமை, இல்லாமை என்கின்ற பெரும் துயர், இதற்குள் எப்படியாவது வாழ்ந்துவிடத் துடிக்கும் ஆசை என்பன மனதை நெருடுகின்றன. தமக்கையின் சின்னச்சின்ன ஆசைகளைக் கூட நிறைவேற்றுவதற்காக- கதாநாயகனான சுகுமார் எவ்வளவு கடினமாக உழைக்கவேண்டி ஏற்படுகின்றது என்பதை வாசிக்கும் போது அங்கே சத்தியவார்த்தைகளே வாசகருக்குத் தெரிகின்றன. போலித்தனமும், பாசாங்கும், கற்பனையும் நாவலில் எவ்விடத்திலும் துருத்திக்கொண்டிருக்கவில்லை. அனைத்தும் வெகு யதார்த்தமாக பதிவுகளின் தொகுப்பாகின்றன. மானிடத்தின் தேடலின் ஒரு பகுதிதான் நஞ்சுண்டகாடு என்றால் மிகையாகாது.

144 பக்கம் கொண்ட நஞ்சுண்டகாடு நாவலின் முதல் 116 பக்கங்களும் இரண்டு அத்தியாயங்களில், இளைஞர்கள் பயிற்சி முகாமுக்குள் நுழைவது முதல், போராளிகளாகச் செதுக்கப்பட்டு வெளியேறுவது வரையில் விரிந்து செல்கின்றது. கதாசிரியர் அங்கு சக போராளியாகத் தன்னை இனம்காட்டி க்கொண்டு கதைசொல்லியாகவும் இருக்கிறார்.

நாவலின் 3ம் அத்தியாயம், 117ஆம் பக்கத்தில் தொடங்குகின்றது. இது ஒன்றரை ஆண்டு இடைவெளிகளின் பின்னர் தொடரும் சம்பவங்களின் சமகாலக் கோவைகளாகின்றன. குணா கவியழகன் குறிப்பிடாவிட்டாலும்கூட நாவலில் இரண்டாம் பாகமாக இதனைக் கொள்ளலாம்.

இப்போது கதைசொல்லி நஞ்சுண்டகாட்டுப் பகுதியின் பயிற்சி முகாமில் இல்லை. அவர்கள் அங்கிருந்து வெளியேறி ஒன்றரையாண்டுப் பணியின் இடைவெளியில் தனது கதையைத் தொடரமுனைகிறார். பயிற்சி முகாம் தோழன் சுகுமாரின் தொடர்பு மீண்டும் சடுதியாகக் கிட்டுகின்றது. அவன் இப்போது கரும்புலியாகி தன் பணியைமுடிக்கப் புறப்படத்தயாராகின்றான். தான் இயக்கத்துக்காக விட்டுவந்த சகோதரியையும் குடும்பத்தையும் நேரில் பார்த்து அவர்களது நலனைக் கண்டறிந்து உதவும் பெரும்பொறுப்பை இப்போது கதைசொல்லி மானசீகமாக ஏற்கின்றார். தேடிப்பிடித்து சுகுமாரின் வீட்டை அடையாளம்காண்கிறார். அங்கு சுகுமாரின் அன்புச் சகோதரி, உறவகளை இழந்து வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு, நாதியற்றுக் கிடப்பதையும், சுகுமாரின் பெற்றோர் சகோதரர் அனைவரும் காலத்தின் கோரத்தால் படிப்படியாக உயிரிழந்து போனதையும், சுகுமாரின் அன்புக்குரிய சகோதரி மாத்திரம் கதியற்று நிற்பதனையும் கண்டு நெஞ்சம் குமுறுகிறார்.

அதுவரை இறந்த காலத்தில் பேசப்பட்டுவந்த சுகுமாரின் அக்கா நிகழ்காலத்தில் இவ்வத்தியாயத்திலிருந்து காட்சிப்படுத்தப்படுகிறார். அவர் தன் குடும்பக்கதையை, முன்னர் சுகுமார் விட்ட இடத்திலிருந்து கதைசொல்லி யிடம் முறையிடத் தொடங்குகின்றார்.

இறுதியில் தலைவருக்கு நிலைமையை இரண்டு பக்கத்தில் விளக்கிக் கடிதமொன்றை எழுதிச் சேர்ப்பிப்பதுடன் கதை நிறைவடைகின்றது. இக்கதை எழுதப்பட்டது 2004 இல் நோர்வே அரசினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான காலத்திலாகும். பல்வேறு தடைகளையும், சிக்கல்களையும் தாண்டி 2014 இல் தான் நூலுருவில் வெளிவந்துள்ளது. 2004 இல் எழுதப்பட்ட இக்கதையின் இறுதிப்பகுதி, பத்தாண்டுகளின் பின்பான இன்றைய முன்னாள் போராளிகளின் குடும்பத்தினரின் முகாம் வாழ்க்கையையும், பின்னதான வன்னியின் அவலம் மிகுந்த கூடார வாழ்க்கையையும் எதிர்வுகூர்வதாக அமைந்திருப்பது நாவலாசிரியரின் தீர்க்கதரிசனமாக இருந்திருக்க வாய்ப்பில்லாதபோதிலும் வாசகன் என்ற பார்வையில் இப்படைப்பிலக்கியம் உயிர்ப்புள்ளதொரு நாவலாகவே எம் கண்களை பனிக்கச் செய்கின்றது.

இன்று 2014இல் இக்கதை காலம் தாழ்த்தி வெளிவந்திருந்தாலும், அதில் சொல்லப்பட்ட செய்தி காலத்தால் அழியாத வரலாறு என்பதை எவரும் மறுக்கமுடியாது. போர்க்கால இலக்கியவகையறாக்களுக்குள் முக்கியமான தொரு படைப்பாக நஞ்சுண்டகாடு நிச்சயம் நின்று நிலவும். ரஞ்சகுமாரின் கோசலை போன்று இந்நாவலும் போரிலக்கியம், போர்க்கால இலக்கியம்

பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வோர், தேடித்திரிந்து பெற்று வாசிக்க முனையும் ஒரு நாவலாக அமையும் என்பது எனது கருத்தாகும்.

ஈழ விடுதலைப் போராளிகளால் எழுதப்பட்ட போர் இலக்கியம் என்று பார்த்தோமானால், லங்காராணி என்ற பெயரில் அருளர் என்ற போராளி (பின்னாளில் ஈரோஸ் அமைப்பில் இணைந்து இயங்கிய அருட்பிரகாசம் அவர்கள், சென்னையிலிருந்து கனல் வெளியீடாக டிசம்பர் 1978இல் 256 பக்கங்களில் எழுதி வெளியிட்ட ஒரு நாவலை முதன்மையானதாகக் குறிப் பிடலாம். இந்நாவலில் 1977 இனக்கலவரத்தின் பின்னர் தென்னிலங்கையிலிருந்து வடபுலத் தாயகம் நோக்கி தமிழரை ஏற்றிவந்த லங்காராணி என்ற கப்பலை மையமாகவைத்து, இனவழிப்பின் சாட்சியங்களைத் திரட்டி ஒரு நாவலாகத் திறம்படக் கையாண்டிருந்தார். லங்காராணியின் கடற்பிரயாணத்தின் பின்னணியில் அதன் பிரயாணிகளின் உணர்வலைகளின் ஊடாக ஈழத்து இனப்பிரச்சினையின் பூதாகாரத்தன்மையையும் விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் அருளர் நியாயபூர்வமாகச் சித்திரித்திருந்தார். பல தமிழ் இளைஞர்களை ஆரம்பத்தில் விடுதலைப் போராட்டத்தின்பால் இழுக்கக் காரணியாக இருந்த லங்காராணி பின்னர் யாழ்ப்பாணம்: ஈழப்புரட்சி அமைப்பினால் யாழ்ப்பாணத்தில் 2வது பதிப்பாக 1988இல் வெளியிடப் பட்டது.

சுபாஷ் என்ற பெயரில் விடுதலைப் போராட்ட அமைப்பின் போராளியாக வாழ்ந்த காலத்தில், தா.பாலகணேசன் எழுதியதும், 92 பக்கங்களில் விடுதலைப் புலிகள் வெளியீடாக வெளியிடப்பட்டதுமான விடிவுக்கு முந்திய மரணங்கள் என்ற நாவல் 1986இல் வெளிவந்தது. 13.2.1985இல் நிகழ்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கொக்கிளாய் இராணுவமுகாம் தாக்குதலை விளக்கும் போராட்ட வரலாற்று நூல் இதுவாகும். பின்னர் இந்நாவல் விடியலுக்கு முந்திய மரணங்கள் என்ற தலைப்பில், 1988இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 112 பக்கங்களில் தமிழகத்திலும் வெளியிடப்பட்டது. (நெய்வேலி 12: ஈகம் பதிப்பகம், சரோசினி நாயுடு சாலை. அச்சகம்- குறிஞ்சிபதி: அழகிரி அச்சகம்).

கப்டன் மலரவன் என்ற போராளியால் (இயற்பெயர் காசிலிங்கம் விஜித்தன்) போர் உலா: பயணக்குறிப்பு என்ற நாவல் 1993இல் எழுதப்பட் டது. மணலாற்றிலிருந்து மாங்குளம் முகாம் வரை லியோ என்ற புலி வீரனின் பயணக் குறிப்பாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மணலாற்றிலிருந்து மாங்குளம் முகாம் தகர்ப்புக்கெனச் சென்ற புலிவீரர் அணியில் இடம் பெற்றிருந்த கப்டன் மலரவன் தனது பயணத்தின் போதும், முகாம் தகர்ப்பிற்கான

சண்டைகளின் போதும் தான் தரிசித்த நிகழ்வுகளையும், பெற்ற அனுபவங்களையும் நூலுருவில் தந்திருந்தார். இந்நூலும் பின்னாளில் ஏப்ரல் 1994இல் ஐக்கிய இராச்சியத்திலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் 132 பக்கங்களில் வெளியிடப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக புதியதோர் உலகம் என்ற நாவல், கோவிந்தன் என்ற முன்னாள் போராளியால் எழுதப்பட்டு மே 1985இல் தமிழகத்தில் 365 பக்கங்களில் வெளியிடப்பட்டது. பெப்ரவரி 15, 1985 இல் தான் அங்கம் வகித்த தமிழீழ விடுதலை அமைப்பில் (PLOTE) இருந்து வெளியேறிய தோழர்களுடன் தானும் சேர்ந்து கொண்டு வெளியேறிய பின்பு தம்மை அழிப்பதற்காகத் தேடிய அவ்வியக்கத்தவரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டு இரு மாதங்கள் தலைமறைவாக இருந்தவேளையில் இந்நாவல் படைக்கப்பட்டது. தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் ஒரு வருடகாலமாக நடைபெற்ற உண்மைச் சம்பவங்களிலிருந்தே இந்நாவல் உருப்பெற்றுள்ளது. இந்நாவலும் பின்னர் தனது 2வது பதிப்பினை கோவை, விடியல் பதிப்பகத்தின் ஊடாக 1997இல் 244 பக்கங்களில் மீள்பதிப்பினைக் கண்டது.

இதன் பின்னர், மருத்துவப் போராளியான தூயவன், பெண் போராளிகளான மலைமகள், தமிழ்க்கவி எனப் பல போராளிப் படைப்பாளிகள் ஈழத்தின் போர்க்காலப் படைப்புலகத்தில் தமது போர்க்கள அனுபவங்களை இலக்கியமாக்குவதில் வெற்றிகண்டார்கள். இப்பட்டியல் மிக நீண்டதும் தனியானதொரு ஆய்வுக்குமுரியது. இவ்வழியில் தொடரும் நஞ்சுண்டகாடு நாவலின் வருகை ஈழத்துப் போரிலக்கியப் படைப்புகளில் கணிசமான பார்வையைப் பெறும் என்று நம்புகின்றேன்.

(ஞாயிறு தினக்குரல், 15.3.2015: ப.33.)

ஆளுமைகள்

31

தனிநாயகம் அடிகளார்

தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவதில்லை என்பது ஒரு முதுமொழி. தமிழின் சர்வதேச நல்லெண்ணத் தூதுவராக உலகெல்லாம் வலம்வந்து தன் முதுமைக்காலத்தில் நோயுற்று ஓய்ந்து மறைந்த தவத்திரு. தனிநாயகம் அடிகளாரை இன்று - நூற்றாண்டுகளின் பின்பும் ஆங்காங்கே நினைவுகூரு கின்றோம் என்றால், அவரது தன்னலம் கருதாத தமிழ்த்தொண்டு அவருக்குச் சாகாவரத்தை அளித்துள்ளதென்றே கொள்ளவேண்டும்.

தமிழ்மொழி உலகெங்கும் ஒருகாலத்தில் பரவியிருந்ததென்பதைத் தான் சென்றுவந்த நாடுகளின் ஆய்வகங்கள், தொல்பொருட்காட்சியகங்கள், அரும்பெரும் நூலகங்களிலெல்லாம் இடையறாத தேடுதல்களை மேற்கொண்டு துருவித்துருவிக் கண்டறிந்து உண்மைகளை ஆதாரபூர்வமாக வெளிக்கொண்டு வந்ததோடல்லாமல், தனது தமிழ்ப் பணியைத் தனக்குப் பின்னரும் ஆய்வாளர்கள் தொடரவேண்டும் என்ற வேணவாவுடன் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை உருவாக்கி வளர்த்துச் சென்றவர். பின்னாளில் அவரது நம்பிக்கை குலைக்கப்பட்டு, 1974இன் பின்னர் தொடர்ந்த தமிழாராய்ச்சி மாநாடுகளில் படிப்படியாக அரசியல் நுழைந்து இன்று அந்த மாநாட்டு அமைப்பே கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிட்டமை தமிழர் வரலாற்றின் சோகக்கதைகளில் ஒன்று.

தனிநாயகம் அடிகளாரின் கண்டுபிடிப்புகளாக விதந்து குறிப்பிடத்தக்க சிலவற்றை மாத்திரம் இக்கட்டுரையில் குறிப்பிடலாம். 1554ம் ஆண்டில் லிஸ்பன் நகரில் அச்சிடப்பட்ட லூசோ-தமிழ் மறைக்கல்வி நூல், 1950களில் தனிநாயகம் அடிகளாரால் போர்த்துக்கல்லின் தலைநகரான லிஸ்பன் சுவடிக் கூட இருட்டறைகளில் எவரும் அறியாதிருந்த நிலையில் இருந்து வெளிச்சத்

திற்குக் கொண்டுவரப்பட்டது. ஜப்பான், சிலி, பெரு, மெக்சிக்கோ, நியூசிலாந்து, எக்வடோர், ஐக்கிய அமெரிக்கா என்று பல நாடுகளுக்கும் சென்று தமிழின் பெருமைதனை வேற்று மொழியினரிடையே பதியம் வைத்து அவர்களின் விழிப்புணர்வின் பெறுபேறாக, அவர்களது நாட்டு நூலகங்களில் தேடுவாரற் றிருந்த தமிழ் மொழியில் எழுதப்பெற்ற பல ஏடுகளையும், ஐரோப்பியரால் பதிப்பிக்கப்பெற்ற ஆரம்பகால அச்சு நூல்களையும் அவரால் தமிழ் உலகிற்கு மீண்டும் எடுத்துவர முடிந்தது. அவ்வகையில் 1556ம் ஆண்டில் உருவான கார்த்தீயா, 1578 இல் எழுதப்பெற்ற தம்பிரான் வணக்கம், 1579 இல் எழுதப் பட்ட கிறித்தியானி வணக்கம், ஒண்டம் டி புரொசென்கா என்ற போர்த் துக்கேயன் எமது மண்ணில் ஆதிக்கம் செய்தவேளையில் தனது தேவை களுக்காக தொகுத்து வைத்திருந்த போர்த்துக்கீச -தமிழ் மொழி அகராதி என்பவை குறிப்பிடத்தக்கது.

தனிநாயகம் அடிகள் நியூசிலாந்தில் பயணித்த வேளையில் தான் அரும் பொருள் காட்சியகத்தில் கண்ட தமிழ் எழுத்துப் பொறித்த மணியொன்றினைப் பற்றி தனது தமிழ் கல்ச்சர் (Tamil Culture) என்ற ஆய்வுரைத் தொகுதியொன்றில் ஒரு கட்டுரையில் எழுதிச்சென்றிருந்தார். (அடிகளார் Tamil Culture ஆய் வேட்டின் ஆசிரியர் பொறுப்பில் 1951 முதல் 1959 வரை பணியாற்றியுள்ளார்). பின்னாளில் அங்கு புலம்பெயர்ந்து சென்ற ஆ.தா.ஆறுமுகம் என்பார் அதை ஒரு ஆய்வுப்பொருளாக ஏற்று நமக்கு நல்லதொரு நூலை வழங்கியிருக்கிறார். (**பார்க்க: நியூசிலந்தில் தமிழன் பதித்த சுவடுகள்.** ஆ.தா.ஆறுமுகம். நியூசிலாந்து: வெலிங்ரன் தமிழ்ச் சங்கம், த.பெ.471, வெலிங்டன், 1வது பதிப்பு, ஜனவரி 2007. (6), 52 பக்கம், வண்ணப்படங்கள்)

ஆ.தா. ஆறுமுகம் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் பிறந்தவர். தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் 1985இல் மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் அதிபராகவிருந்து ஓய்வுபெற்றவர். தற்போது நியூசிலாந்தில் புலம்பெயர்ந்து வாழ்கிறார். நியூசிலாந்தின் வெலிங்டன் தொல்பொருளகத்தில் (Museum) காட்சிப்படுத்தப்பட்டுள்ளதும் தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டி ருந்ததுமான தமிழ் எழுத்துக்கள் பொறித்த மணியைப் பற்றியதே விரிவான இவ்வாய்வு. Tamil Bell என்ற பெயரில் இவ்வரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த மணி ''முகையயதினவககுசுஉடையகபல உடையமணி'' என்று புடைப்பு (Emboss) எழுத்துடன் வார்க்கப்பட்டுள்ளது. இது தமிழரின் கடற்பிரயாணம் 15ம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதையும், இம்மணிக்கும், இங்கு புதையுண்டுள்ள ஒரு மரக் கலத் திற்கும், Christchurch என்ற பகுதியிலுள்ள குகை ஓவியங்களுக்கும் தொடர் புள்ளதாகவும் இவர் தன் ஆய்வின்மூலம் வெளிப்படுத்த முனைந்துள்ளார்.

தனிநாயகம் அடிகளாரின் ஒவ்வொரு தேடலும் பின்னாளில் ஆழமான விரிவான ஆய்வுகளுக்கு வழிகோலியிருக்கின்றது என்பதற்கு ஒரு உதாரணமே இக்குறிப்பாகும்.

தனிநாயகம் அடிகளாரின் சீரிய தமிழ்ப்பணிக்கு அவர் சார்ந்த கத்தோலிக்க அமைப்பின் பின்புலமும் காரணமாக இருந்துள்ளது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆரம்பத்தில் தமிழ் எழுத்து அச்சு வாகனமேறியதற்கு ஐரோப்பியரும் அவர்களின் கிறிஸ்தவ மதப்பரப்பலும் உந்துசக்தியை வழங்கின என்பது வரலாறு.

யாழ்ப்பாணத்தின் கரம்பொன் என்ற ஊரில் பிறந்த தனிநாயகம் அடிகள், ஊர்காவற்றுறை செயின்ட் அன்டனிஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்ப இடைநிலைக் கல்வியைப்பெற்றவர். கத்தோலிக்க மறைக்கல்வியை கொழும்பு புனித பேர்னார்ட் மறைப்பள்ளியில் பெற்றக்கொண்டார். பின்னர் தனது 21 ஆவது வயதில் ரோமுக்குச் சென்று வத்திக்கான் மறைக் கல்விச்சாலையில் கற்று 1934 இல் மெய்யியலில் பட்டத்தை பெற்றார். பின்னர் தமிழகம் வந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தில் முதுகலைமாணிப் பட்டத்தையும், பின்னாளில் லண்டனில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

தமிழில் ஒப்பியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் திறனை இவருக்கு வழங்கியது இவர் பெற்ற பன்மொழிக் கல்வியாகும். ஆங்கிலம், லத்தீன், டொச், இத்தாலிய, பிரெஞ்சு, மற்றும் போர்த்துக்கீச மொழிகளில் இவர் பாண்டித்தியம் பெற்றிருக்கிறார். பாரதியின்- யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்ற முடிவுக்கு வர இவருக்கு நீண்டகாலம் சென்றிருக்கவில்லை.

கத்தோலிக்க மதகுருவாக மாத்திரம் இராமல், கல்வியைப் போதிக்கும் ஆசிரியராகவே இவரது பணி அதிகளவில் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத் தில் தமிழகத்தின் நெல்லை மாவட்டத்தில் புனித தெரெசா உயர்நிலைப் பள்ளியில் துணைத்தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய இவர், பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றி யுள்ளார். பின்னர் 1961 இல் மலாயாவுக்குச் சென்று அங்கு மலாயாப் பல்கலைக்கழகத்தில் 1969 வரை இந்திய ஆய்வியல்துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். நான் கடந்த 2006இல் மலேசிய - சிங்கப்பூர் நூல்தேட்டம் தொகுப்புப் பணிக்காகவும், எனது நூல்தேட்டம் தொகுப்புப் பணிக்காகவும் கோலாலம்பூரில் உள்ள மலாயாப் பல்கலைக்கழகத் தின் இந்திய ஆய்வியல்துறை நூலகத்தில் தேடலில் ஈடுபட்டிருந்த வேளையில் அங்கு பணிபுரிந்த பேராசிரியர்கள்-விரிவுரையாளர்கள் ஆகியோர்,

தனிநாயகம் அடிகளாரின் மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை வாழ்வு பற்றிப் பெரிதும் அறியப்பட்டிராத பல தகவல்களை எனக்கு வழங்கினார்கள்.

அடிகளார் அங்கு பணியாற்றிய வேளையில் மலாயாப் பல்கலைக்கழகத்தின் பயில் மொழியாக தமிழை வைத்திருக்காமல், சமஸ்கிருதத்தை அறிமுகப்படுத்தவேண்டும் என்ற தீவிர முன்மொழிவை நீலகண்ட சாஸ்திரி அவர்கள் மலேசிய அரசின் உயர்கல்வித்துறையினருக்கு வழங்கியிருந்தார். அதற்கெதிராகத் திரண்டெழுந்த தனிநாயகம் அடிகள்- தமிழே அங்கு பயில்மொழியாக இருக்கவேண்டும் என்று போராடி வெற்றிகண்டிருக்கிறார். அவர் அன்று மலாயாப் பல்கலைக்கழகத்தில் இல்லாதிருந்தால், அங்கே இன்று இந்திய ஆய்வியல்துறையில் பயில்மொழியாக தமிழ்மொழி இல்லாது போயிருக்கும்.

அவர் மலேசியாவில் பணியாற்றிய காலத்தில்தான் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய சிந்தனை அவரிடம் ஊற்றெடுத்தது எனலாம். அதன் வெளிப்பாடாகவே முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு மலேசிய மண்ணில் 1966ம் ஆண்டு ஏப்ரல் 16 முதல் 23 வரை சிறப்பாக நடந்தேறியது. 1968 இல் இரண்டாவது மாநாடு சென்னையில் நடந்தபோது தனிநாயகம் அடிகள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். மூன்றாவது மாநாடு 1970 இல் பாரிசிலும், 1974 இல் யாழ்ப்பாணத்திலும் அடிகளாரின் ஆளுமை மிக்க பங்களிப்புடன் நடைபெற்றன. 5ஆவது மாநாடு மதுரையில் 1981 இல் இடம்பெற்றவேளையில் அதில் கலந்துகொள்ள தனிநாயகம் அடிகளார் உயிருடன் இருக்கவில்லை.

அடிகளாரின் மறைவுக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுத் தொடரில் 1980ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட நினைவுதின உரையே அவரது இறுதிப் பேருரையாகும். *தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்* என்ற பெயரில் இது ஆங்கில மொழிபெயர்ப்புடன், தந்தை செல்வா அறங்காவற் குழுவினரால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் பின்னர் அடிகளார் நீரிழிவு நோயால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டு தனிமையில் வாழத்தலைப்பட்டார். பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களின் தமிழ் மறை விருந்து என்ற நூல் வெளியீடு வேலணையில் 1980 மே மாதத்தில் நிகழ்ந்த வேளையில் அந்நிகழ்வில் அடிகளாரும் கலந்துகொண்டிருந்தார். அதுவே அவர் கலந்து கொண்ட இறுதிப் பொது நிகழ்வாயிற்று. அதன்பின்னர் அவரது மறைவுவரை சிறிதுகாலம் அவரை தமிழ்ச் சமூகம் ஏறத்தாழ மறந்துவிட்டதென்றே

சொல்லலாம். இறுதிக்காலத்தில் மரணம்வரை தனிமையில் அவர் வாடிய தாகவும் செவிவழிக் கதையொன்றுண்டு.

தனிநாயகம் அடிகளார் மறைந்துவிட்டபோதும் அவ்வப்போது அவர் பற்றிய நினைவுகள் எம்மிடையே நிழலாடிய வண்ணமே இருந்துவருகின்றன. அதன் வெளிப்பாடாகவே (2012) பாரிசில் ஒழுங்குசெய்யப் பட்டுள்ள ''உலகத் தமிழ்த்தந்தை சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளாரின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா''வும் அமைகின்றது எனலாம்.

தனிநாயகம் அடிகளார் மறைந்தவுடன் தினகரன் நாளிதழில் அவரது வாழ்ககை வரலாற்றை விளக்கும் கட்டுரைத் தொடர் ஒன்று முதன்முதலாக ஆ. தேவராசனால் எழுதப்பெற்று வெளியாகியிருந்தது. அதன் முழுமையான நூல் வடிவம் *தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார்* என்ற தலைப்பில் பின்னர் ஆ.தேவராசனால் திருத்தப் பெற்று, கொழும்பு - 5: கிறிஸ்தவ தமிழ்ப் பண் பாட்டுப் பேரவை வெளியீடாக, ஒக்டோபர் 1980இல் வெளியிடப்பட்டது.

தனிநாயகம் அடிகளார் மறைந்ததன் பின்னர் முதலாவதாக வெளிவந்த சிறப்பு மலர், *அருட்திரு தனிநாயகம் அடிகளார் நினைவுமலர்* என்றதாகும். மு.கனகராசன், எஸ். புனிதலிங்கம் ஆகியோரை தொகுப்பாசிரியர்களாகக் கொண்டு மக்கள் குரல் வெளியீடாக யாழ்ப்பாணத்திலிருந்து ஜனவரி 1981 இல் இம்மலர் வெளியிடப்பட்டது. 126 பக்கங்களுடன் புகைப்படங்கள் சகிதம் வெளிவந்த இது வண.பிதா தனிநாயகம் அடிகளின் பணிகள் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளின் தொகுப்பாகும். க.அன்பழகன், அ. அமிர்தலிங்கம், கரந்தை கணேஷன், எச்.டபிள்யூ. தம்பையா, சு.வித் தியானந்தன், அ.சண்முகதாஸ், அந்தனி ஜான், அருட்திரு பி.சின்னராசா, ஆகியோரின் குறிப்புரைகளும் பிதா தனிநாயகம் அவர்களின் வாழ்வின் முக்கிய கட்டங்களைக் காட்டும் புகைப்படத் தொகுதியும், எம்.ஏ. நுஃமான், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, நா.சுப்பிரமணியன் ஆகியோரின் தமிழியல் கட்டுரைகளும் இந்த ஞாபகார்த்த சிறப்பு மலரில் தொகுக்கப்பெற்றுள்ளன (நூல்தேட்டம் பதிவு 884).

இதனைத் தொடர்ந்து ஜூலை 1981இல் *தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு மலர்*, சாமுவேல் பெனடிக்ற் அவர்களை மலராசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணம் மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் இம்மலரை வெளியிட்டது. தவத்திரு தனிநாயக அடிகளார் அமரத்துவம் அடைந்ததின் நினைவாக வெளியிடப்பட்ட இம்மலர் - மலர் வெளியீட்டு முயற்சிக்கான பெரியோரின் வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள், தமிழியல் தொடர்பான கட்டுரைகள் ஆகியனவற்றைக் கொண்டிருந்தது. தமிழ் இலக்கியத்தில்

மதங்களின் பங்கு (கா. சிவத்தம்பி), தனிநாயக அடிகளாரும் தமிழாய்வும் (பொன். கோதண்டராமன்), அடிகளாரும் குருத்துவமும் (நிர்மலா இராச ரத்தினம்), ஆகியவை குறிப்பிடத்தக்க சில கட்டுரைகளாகும். (நூல்தேட்டம் பதிவு 1882).

வே. அந்தனி ஜான் அழகரசன் தத்துவத்துறை, இந்தியவியல்துறைப் பேராசிரியராக யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் பணியாற்றியவர். ஜனவரி 1984 இல் *தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும்* என்ற 244 பக்கம் கொண்ட நூலை அவர் தமிழகத்தில் அச்சிட்டு, மட்டக்களப்பு - தங்கம் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார். இந்த நூலின் முதற்பாகத்தில் தவத்திரு தனிநாயக அடிகளின் தமிழ்ப் பணிகளையும் வாழ்வாங்கு வாழ்ந்த வகையினையும் தொகுத்துத் தந்துள்ளார். 26 இயல்களில் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் அவரது பணிகளும் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் தனிநாயகம் அடிகளாரின் உரைச் சுருக்கங்களும், அவர் எழுதிய 9 கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. (நூல்தேட்டம் பதிவு 3903).

கத்தோலிக்க சமயகுருவான அமுதன் அடிகளார் தமிழகத்தின் புன்னைக் காயல் பிரதேசத்தில் 1943இல் பிறந்தவர். வேளாங்கண்ணிக் குரலொலி என்ற பெயரில் சஞ்சிகையொன்றின் ஆசிரியராக 1977-1987 காலகட்டத்தில் பணியாற்றியவர். உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தியும், Tamil Culture என்ற ஆங்கில இதழை வெளியிட்டும், பாரெங்கும் சுற்றித் தமிழ் பரப்பியும் தமிழ்த் தொண்டாற்றிய தகைசால் பெருந்தலைவர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரது வாழ்க்கையையும், அவர் ஆற்றிய தொண்டினையும் தமிழகம் நன்கறியும் பொருட்டு *தனிநாயகம் அடிகளார்* என்ற தலைப்பிலான நூலொன்றினை அமுதன் அடிகள், சென்னை - தரமணியிலிருந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக 258 பக்கங்களில் வெளியிட்டிருந்தார். தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணியினை முழுமையாகத் தொகுத்து, நேர்நின்று, ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகி மிகத் தெளிவாகத் தேவை யான விளக்கங்களுடன் நூலை அமுதன் அடிகளார் படைத்திருந்தார். அடிகளாரின் தமிழ்ப்பணி வரலாற்றோடு உலகத் தமிழ் மாநாடுகளின் வர லாறும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரலாறும் பின்னிப் பிணைந்திருப் பதையும் சிறப்பாக இந்நூல் எடுத்துக் காட்டியது. (நூல்தேட்டம் பதிவு 3998).

தனிநாயக அடிகளின் தமிழ்ப்பணி என்ற தலைப்பில் சிறிய கட்டுரைத் தொகுப்பு நூலொன்று லண்டனிலிருந்து, சூ.யோ.பற்றிமாகரன் அவர்களினால் தொகுக்கப்பெற்று, பிரித்தானிய தமிழ்க் கலாமன்ற வெளியீடாக மார்ச் 1994இல் வெளியிடப்பட்டது. ‘‘உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் தனிநாயக

அடிகளும்'' என்னும் தலைப்பில் லண்டனில் 19.3.1994 இல் நடைபெற்ற ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளான தனிநாயக அடிகளாரும் தமிழாய்வும் (பொற்கோ), அடிகளாரும் நானும் (மறவன்புலவு சச்சிதானந்தன்), தனிநாயக அடிகள் தமிழ்த்துறையை நவீனப்படுத்திய பாங்கு (ம.மதியழகன்), இறைவனைத் தமிழ் செய்த தனிநாயக அடிகள் (சூ.யோ. பற்றிமாகரன்) ஆகியவை இத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன. (நூல்தேட்டம் பதிவு 889).

தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள் என்ற தலைப்பில் மற்றொரு நூல் ம.செ.இரபிசிங் அவர்களால் எழுதப்பெற்று சென்னை - உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக 100 பக்கங்களில் 1999 இல் வெளியிடப்பட்டிருந்தது. தவத்திரு தனிநாயகம் அடிகளின் ஆய்வுப் பணிகள் பற்றி முனைவர் ம.செ. இரபிசிங் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவே இவ்வாறு நூலுருவில் வெளியிடப்பட்டிருந்தது. (நூல்தேட்டம் பதிவு 3999).

லண்டனிலிருந்து சிலகாலம் ஐ.தி.சம்பந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடர்ந்து வெளிவந்த சுடரொளி சஞ்சிகை, அதே 1999ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் *தனிநாயகம் அடிகளார் சிறப்பு மலர்* ஒன்றினை சுடரொளி வெளியீட்டுக்கழக வெளியீடாக வெளியிட்டிருந்தது. தவத்திரு சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளார் நினைவாக அவரது தமிழ்ப்பணிகளையும் தமிழ்த் தேசியப் பணிகளையும் நினைவுகூரும் வகையிலும், ஆறுமுகநாவலர், தந்தை செல்வா, மறைமலை அடிகள் போன்றோரை நினைவுகூரும் வகையிலும் தொகுக்கப்பெற்ற சுடரொளி சஞ்சிகையின் சிறப்பு மலர் இதுவாகும். (நூல்தேட்டம் பதிவு 885).

தனிநாயகம் அடிகளார் என்ற தலைப்பில் கொழும்பு, குமரன் புத்தக இல்லம் 2008 இல் ஒரு நூலைத் தொகுத்திருந்தது. அது இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் தொடரில் 09ஆவது நூலாக வெளிவந்திருந்தது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய இலங்கைப் பேராசிரியர்களின் தமிழியற் பணிகள், முனைவர் அமுதன் அடிகளார் எழுதிய தனிநாயகம் அடிகளார், திரு ஆ. தேவராசன் எழுதிய தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார் ஆகிய நூல்களிலிருந்து தேர்ந்த பகுதிகளை உள்ளடக்கி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. வாழ்வும் வளமும், தமிழ்மொழிப் போராட்டம், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், அடிகளாரின் தமிழியலாய்வு, அடிகளாரின் படைப்புக்கள், அடிகளாரின் தமிழியல் ஆய்விதழியல் முயற்சிகள், தமிழியல் ஆய்வுகளில் ஒரு தனி சகாப்தம், ஆகிய பிரதான இயல்களாக இத்தரவுகள் வகைபிரித்துத் தரப்பட்டுள்ளதுடன், தனிநாயகம் அடிகளாரின் வாழ்வின் முக்கிய திகதிகள்,

அடிகளாரின் நூல்கள் ஆகிய இரு பின்னிணைப்புத் தகவல்களும் இடம் பெற்றுள்ளன. (நூல்தேட்டம் பதிவு 5864).

தனிநாயகம் அடிகளார் பற்றிய விரிவான ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் மனங்கொள்ளத்தக்கது. அவரது ஆய்வுப் பணிகள் பின்னர் ஈழத்தவரால் முன்னெடுத்துச் செல்லும் அளவுக்கு 1980களிலும் அதன்பின்னர் இன்றுவரையிலும் ஈழத்து அரசியல் மற்றும் போராட்டச் சூழல் தாயக மண்ணில் காணப்படாமையும் இதற்குக் காரண மாகலாம். அவர் மறைவின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கித் தனது கடமையை நிறைவுசெய்து கொண்டது. அதற்கப்பால் சென்று அந்த மண்ணின் மைந்தனான அடிகளாரின் ஆய்வுகளைத் தொடரும் வகையில் தனிநாயகவியல் என்றதொரு ஆய்வுப் புலத்தை உருவாக்கி அவரது வேலைத்திட்டங்களைத் தொடரும் முயற்சி களை மேற்கொள்ளவோ, குறைந்த பட்சம் அவர் எழுதிக்குவித்து பல்வேறு ஆய்விதழ்களுக்குள்ளும் முடங்கிக்கிடக்கும் அனைத்துக் கட்டுரைகளையும் தொகுத்து ஒரு பெருந்தொகுப்பினை உருவாக்கி நிரந்தரப் பதிவாக்கும் முயற்சியினை முன்னெடுக்கவோ தமிழியல் ஆய்வு நிறுவனங்கள் ஈழத்தில் முனையவில்லை. அண்மையில் தமிழகத்தில்தான் அப்பணியும் ஓரளவு நடைபெற்றுள்ளது. அவ்வப்போது மாநாடுகளில் மண்டபங்களையும், அரங்குகளையும் தனிநாயகம் அடிகளார் பெயரில் அமைத்துத் தம் நன்றியைச் செலுத்திக்கொள்வதுடன் நின்றுவிடுகின்றன. இது எவ்வகையிலும் ஆழமான ஆய்வுக்கு வழிகோலப்போவதில்லை. இன்றைய பாரிஸ்- நூற்றாண்டு நினைவு மாநாடு அத்தகையதொரு நிலைமையை மாற்றியமைக்கும் என்று நம்புவோமாக.

(02.09.2012) உலகத் தமிழ்த்தந்தை சேவியர் எஸ்.தனிநாயகம் அடிகளாரின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாமலருக்கெனத் தயாரிக்கப்பட்டது.

பிற்சேர்க்கை

தவத்திரு தனிநாயக அடிகளாரின் படைப்புகள். தவத்திரு தனிநாயக அடிகளார் நூற்றாண்டு விழாக் குழு. சென்னை 600094: தவத்திரு தனிநாயக அடிகளார் நூற்றாண்டு விழாக் குழு, 4, சௌராஷ்டிரா நகர், 7ஆவது தெரு, சூளைமேடு, இணை வெளியீடு, சென்னை 600108: பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, 2வது பதிப்பு, ஜூன் 1993, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2013. (சென்னை: ஈகிள் பிரஸ்).

viii, 397 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

இத்தொகுப்பில் தனிநாயகம் அடிகளார் எழுதிய ஒன்றே உலகம், திருவள்ளுவர், சங்க காலத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு, தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், தமிழ்த்தூது ஆகிய ஐந்து ஆக்கங்கள் முழுமையாக இடம்பெற்றுள்ளன. ஒன்றே உலகம் என்ற நூல், தனிநாயகம் அடிகளார் பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்தவேளை அவ்வந்நாடுகளில் கிடைக்கப்பெற்ற சுவையான பல தகவல்களைக் கண்டறிந்து அடிகளார் எழுதிய நூலாகும். ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, தென் அமெரிக்கா, சோவியத் ஒன்றகம், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, வத்திக்கான் நகர், கிரேக்க நாடு, போர்த்துக்கல், ஐரோப்பாவின் சிறு நாடுகள், ஆப்பிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா, நடுகிழக்கு நாடுகள், தாய்லாந்து, கம்போதியா, வியட்நாம், பர்மா, இந்தோனேசியா ஆகிய 21 நாடுகளின் தலைப்புகளில் தனித்தனி இயல்களில் சுவையான பிரயாண இலக்கியமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திருவள்ளுவர் என்ற இரண்டாவது நூல், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளையின் அன்னையார் பெயரில் அமைந்த சொர்ணம்மாள் அறக்கட்டளையில் அடிகளார் நிகழ்த்திய சொற்பொழிவு ஆகும். இந்நூல் வள்ளுவரும் கிரேக்க ஒழுக்க இயலும், வள்ளுவரும் உரோமிய ஒழுக்க இயலும், வள்ளுவரும் புத்தரின் ஒழுக்க இயலும் ஆகிய மூன்று பிரிவுகளில் எழுதப்பட்டுள்ளது. மூன்றாவது ஆக்கம், சங்ககாலத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு என்ற கட்டுரையாகும். நான்காவதாக அமைந்த கட்டுரை தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் என்ற பெயரில் அமைந்த தந்தை செல்வா நினைவுப்பேருரையாகும். இது தந்தை செல்வா அறங்காவல் குழுவினால் 1980இல் வெளியிடப்பட்ட சிறு நூலாகும். இறுதியாக அமைந்தது தமிழ்த்தூது என்ற அடிகளாரின் கட்டுரைக் கொத்து. இதில் தமிழ்த்தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள், மலரும் மாலையும், காப்பியக் கவிஞர் வீரமாமுனிவர், தமிழ்நாட்டின் ஆசிரியர் வேதநாயகம்பிள்ளை, செந்தமிழ் வளர்ச்சி, தமிழரும் அவர்தம் கவின் கலைகளும், தமிழ்கூறும் நல்லுலகம் ஆகிய எட்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

மாற்றுவெளி ஆய்விதழ்: பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அடிகள் நூற்றாண்டுச் சிறப்பிதழ். வீ.அரசு (சிறப்பாசிரியர்). சென்னை 600106: பரிசல் புத்தக நிலையம், எண் 101, எச். பிளாக், முத்துமாரியம்மன் கோவில் தெரு, எம்.எம்.டி.ஏ.காலனி, அரும்பாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2013. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).

152 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 24x17 சமீ., ISSN: 0976-1667.

பேராசிரியர் சேவியர் தனிநாயகம் (1913-1980) அவர்களின் நூற்றாண்டு நினைவாக வெளிவரும் சிறப்பிதழ். ஆசிரியர் தலையங்கம், ''கழுதை தேய்ந்து கட்டெறும்பானது: தமிழியல் ஆய்வின் கதை'' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. மேலும், பேராசிரியர் சேவியர் தனிநாயகம் (வ.அய். சுப்பிரமணியம்), கீழைத்தேயவியல் - தமிழியல் பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அவர்களின் வகிபாகம் (வீ.அரசு), பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அடிகள் எனும் அரசியல் நுண்ணறிவாளர் (தெ. மதுசூதனன்), தமிழர் பண்பாடு: பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அவர்களின் இறுதிச் சொற்பொழிவு (சேவியர் தனிநாயகம்), நிலக்கிடக்கையும் கவிதையியலும்: இயற்கைப் பாடல்களின் ஒப்பீடு (சேவியர் தனிநாயகம்) ஆகிய கட்டுரைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. மேலும், ஆவணம் என்ற பகுதியில் தமிழ்பேசும் இனத்தார்க்கு வேண்டுகோள் என்ற தலைப்பில் பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அவர்களின் கட்டுரையும், பேராசிரியர் சேவியர் தனிநாயகம் அவர்களின் ஆக்கங்கள் என்ற தலைப்பில் வி.தேவேந்திரன் அவர்களின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

உலகத் தமிழ்த் தந்தை தனிநாயகம் அடிகளார். எம்.இலியாஸ் (தொகுப்பாசிரியர்). சிங்கப்பூர்: தமிழவேள் நற்பணி மன்றம், செம்மொழி பப்ளிக்கேஷன்ஸ், 140, டன்லொப் வீதி, சிங்கப்புர் 209458, 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).
48 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

தமிழவேள் கோ.சாரங்கபாணி (20.4.1903-16.3.1974) அவர்களின் 110ஆவது பிறந்தநாள நினைவாக சிங்கப்புரில் இயங்கும் தமிழவேள் நற்பணிமன்றத்தால் 20.4.2013அன்று சிங்கப்பூர் அங் மோ கியோ பொது நூலகத்தில் இடம்பெற்ற விழாவில் தமிழவேளின் 110ஆவது நூற்றாண்டுவிழாவும், ப.தியாகராஜனின் ''தமிழவேளும் நானும்'' என்ற நூல்வெளியீட்டு விழாவும், தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கும் ஒருங்கே இடம்பெற்றன. அன்றையதினம் கருத்தரங்கின் போது வழங்கப்பட்ட உரைகளின் தொகுப்பு இந்நூலாகும். வாழ்த்துரை, தனிநாயகம் ஒரு தனி நாயகம் (பேராசிரியர் டாக்டர் சுப.திண்ணப்பன்), நூற்றாண்டு விழா நாயகர்

தனிநாயக அடிகளார் (எம்.இலியாஸ்), செம்மொழிச் சிற்பி ஆகிய தலைப்புகளில் முதலாவது பிரிவும், தொடர்ந்து மூன்று ஆய்வரங்கக் கட்டுரைகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ்த்தூதர் பேராசிரியர் தனிநாயக அடிகளார் (பேராசிரியர் அ.வீரமணி), தரணி யெங்கும் தமிழ் பரப்பிய தனிநாயகம் அடிகளார் (செ.ப.பன்னீர்செல்வம்), தமிழுக்குக் கிடைத்த தவப் புதல்வர்கள் (எம்.துரைராஜ்) ஆகிய கட் டுரைகள் இப்பிரிவில் இடம்பெறுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233175).

தனிநாயகம் என்னும் தமிழ் நாயகம். அமுதன் அடிகள் (மூலம்), இரா.மதிவாணன் (பதிப்பாசிரியர்). சென்னை 600094: உலகத் தமிழர் பதிப்பகம், , 4, சௌராஷ்டிரா நகர், 7ஆவது தெரு, சூளைமேடு, 2வது பதிப்பு, ஆகஸ்ட் 2013, 1வது பதிப்பு, ஜுலை 1993. (நாகபட்டினம்: இரா.செல்வராஜ், இனோ மீடியா சென்டர்).
272 பக்கம், வண்ணத்தகடுகள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22.5x15 சமீ.

உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தியும், Tamil Culture என்ற ஆங்கில இதழை வெளியிட்டும், பாரெங்கும் சுற்றித் தமிழ் பரப்பியும் தமிழ்த் தொண்டாற்றிய தகைசால் பெருந்தலைவர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரது வாழ்க்கையையும், அவர் ஆற்றிய தொண்டினையும் தமிழுலகம் நன்கறியும் பொருட்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணியினை முழுமையாகத் தொகுத்து, நேர்நின்று, ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகி மிகத் தெளிவாகத் தேவையான விளக்கங்களுடன் நூலை ஆசிரியர் படைத் திருக்கின்றார். அடிகளாரின் தமிழ்ப்பணி வரலாற்றோடு உலகத் தமிழ் மாநாடுகளின் வரலாறும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதையும் சிறப்பாக இந்நூல் எடுத்துக் காட் டுகின்றது. தனிநாயகம் அடிகளார் என்ற தலைப்பில் 1993 இல் வெளியான நூலின் மீள்பதிப்பு இதுவாகும். மூலநூலைவிட மேலதிகமாக வண்ணப் புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கத்தோலிக்க சமய குருவான இந்நூலாசிரியர் அமுதன் அடிகளார் தமிழகத்தின் புன்னைக் காயல் பிரதேசத்தில் 1943 இல் பிறந்தவர். வேளாங்கண்ணிக் குரலொலி என்ற பெயரில் சஞ்சிகையொன்றின் ஆசிரியராக 1977-1987 காலகட் டத்தில் பணியாற்றியவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3998).

32

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

வாழ்வும் பணிகளும்

கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாகத் தனது தமிழ்ப்பணி மூலம் எமக்குப் பெருமைசேர்த்துவந்தவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள். 06.07.2011 புதன்கிழமை, அன்னார் கொழும்பில் அமரத்துவமடைந்த செய்தி தமிழ்கூறும் நல்லுலகத்தினை அதிர்ச்சியில் உறையவைத்துள்ளது.

சைவப்புலவர், பண்டிதர் பொ.கார்த்திகேசு ஆசிரியருக்கும் வள்ளியம்மைக்கும் மகனாக 10.05.1932 இல் 79 ஆண்டுகளுக்கு முன்னர் கரவெட்டியில் இவர் பிறந்தார். இவரது இளமைக்கால வாழ்க்கை கரவெட்டிப் பிரதேசத்தையே களமாகக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்த அருளாளரான யோகர் சுவாமிகளின்பாற் பற்றுக்கொண்ட குடும்பம் அவருடைய தந்தையாருடையது. சிவத்தம்பி என்ற பெயரை யோகர் சுவாமிகளே வழங்கினார் என்ற தகவலை அவரது குடும்ப நண்பரான எழுத்தாளர் தெணியான் அவர்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். தனது ஆரம்பக் கல்வியை 1948 வரை கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியில் பெற்ற கா. சிவத்தம்பி, தனது இடைநிலைக் கல்வியை (1949-53) கொழும்பு ஸாஹிரா கல்லூரியிலும் உயர் கல்வியைப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் (BA 1956, MA 1963) பெற்றுக்கொண்டார். பட்டப்படிப்பை முடித்த பின்னர், 1961 முதல் 1965 வரை கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியிருந்தார். அக்காலகட்டத்தில் 1961-65 இலங்கைப் பாராளுமன்றத்தின் சமகால மொழிபெயர்ப்பாளராகப் (Simultaneous Interpreter) பதவியேற்றார். அதே காலகட்டத்தில் வித்தியோதய பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளரானார்.

பேராசிரியரின் துணைவியார் திருமதி ரூபவதி. இவர்களுக்கு கிருத்திகா (கிருத்திகா பாலசேகர்), தாரணி (தாரணி புவன்), வர்த்தனி (வர்த்தனி கார்த்திகேயன்) ஆகிய மூன்று பெண்குழந்தைகள் உள்ளனர். இவரது பேரப்பிள்ளைகள் ஐவர்.

பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், க.கணபதிப்பிள்ளை ஆகியோரின் மாணவரான அமரர் சிவத்தம்பி அவர்களிடமிருந்த ஈழத்து நாடகத்துறைசார்ந்த

அறிவைத் தானும் உள்வாங்கிக்கொண்டவர். 50களின் பிற்பகுதிகளில் அங்கு பயின்றுகொண்டிருந்த காலங்களில் பேராசிரியர் வித்தியானந்தன் தயாரித்த பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் யதார்த்த மேடை நாடகங்களில் முக்கிய பாத்திரங்களையேற்று இயற்பண்புவாத நடிகராக இவர் இருந்திருக்கிறார். ஸாஹிறாக் கல்லூரியில் பணியாற்றும்போது இலங்கைவானொலி நாட கங்களிலும் நடித்துத் தன்னுள் ஊறிக்கிடந்த அரங்கியல் கலையின்பாற்பட்ட தாகத்துக்கும் வடிகால் தேடிக்கொண்டார். பின்னாளில் வானொலி நாடக நடிகராக மட்டுமின்றி கதாசிரியராக, கவிஞராக, வானொலி உரைச்சித்திர எழுத்தாளராக, சிறந்த மேடைப் பேச்சாளராக எனப் பல் பரிமாணங்களிலும் மிளிர்ந்தவர் இவர்.

1970ம் ஆண்டு பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் உலகப் புகழ்பெற்ற மார்க்சிய ஆய்வாளர் பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சனின் வழிகாட்டலில் பண்டைய தமிழ் சமூகத்தில்அரங்கியல் (Drama in Ancient Tamil Society) என்ற தலைப்பில் தன் பட்டப் பின் கல்விக்கான ஆய்வினை மேற்கொண்ட பின்னர் நாடு திரும்பி, 1978 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், பின்னர் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணி யாற்றினார். இவரது இவ்வாய்வு 1981இல் நூலுருவிலும் வெளிவந்தது. தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் நாடகமும் அரங்கியலும் என்றதொரு கல்வித்துறை வளர்ச்சி காண பேராசிரியர் சிவத்தம்பியின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருந்தது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மாத்திரமன்றி, பேராசிரியர் கா. சிவத்தம்பி தஞ்சாவூர், ஸ்கன்டினேவியா, உப்சலா, பேர்க்லி, விஸ்கான்சியன், ஹார்வார்ட், கலிபோர்ணியா ஆகிய பல்கலைக்கழகங்களிலும் அவ்வப்போது வருகைதரு பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

தமிழ் இலக்கியம், சமூகம், பண்பாடு, தமிழ் இலக்கிய விமர்சனம் ஆகிய பல துறைகளிலும் பணியாற்றியுள்ள இவரது ஆளுமைகளை நான்கு விரிவான தளங்களாக வகுக்கலாம். தமிழரின் சமூக இலக்கிய வரலாறு, தமிழரிடையே பண்பாடும் தொடர்பாடலும், தமிழ் நாடகம், இலக்கிய விமர்சனம் என்பனவே அவை.

இலக்கியத்துறையில் அறுபதுகளிலேயே ஈடுபட்டிருந்த அமரர் சிவத்தம்பி, முற்போக்கு எழுத்தாளர் சங்கம், மரபுப் போராட்டம் ஆகியவற்றில் அப்போது மார்க்சியக் கண்ணோட்டத்துடன் தீவிரமாக ஈடுபட்டிருந்த பேராசிரியர் கைலாசபதியுடன் இணைந்திருந்து பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை சுமார் 57 நூல்கள், ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் என்பவற்றை இவர் எழுதியுள்ளார். உலகெங்கிலும் நடந்தேறிய உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், செம்மொழி மாநாடு என்பவற்றிலும் இவர் ஈழத்தமிழரின் பிரதிநிதியாகப் பங்கேற்றுத் தன் கருத்துக்களை வெளிப் படுத்தியுள்ளார். கல்வித்துறையில் மாத்திரமன்றி சமகாலத்தில் சமூகசேவைகளிலும் இவர் தன்னை ஈடுபடுத்திக்கொண்டதாலேயே பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடமிருந்து இவர் வித்தியாசமாகப் பரிணமித்து மிளிரமுடிந் துள்ளது. தமிழர் வாழ்வில் பிரச்சினை மிகுந்த காலகட்டங்களில் அவர் துணிந்து ஆற்றிய பணிகள் தனியானதொரு ஆய்வுக்குரியவை.

1984-86 காலகட்டத்தில் வடக்கு-கிழக்கு பிரதேசத்தின் பிரஜைகள் கண்காணிப்புக் குழு ஒன்றியத்தின் தலைவராகப் பணியாற்றி பல்கலைக்கழகத் துக்கும் அப்பால் சமூக சேவையில் ஈடுபட்டவர் இவர். போர் உக்கிரமடைந் திருந்த காலகட்டத்திலும், வட-கிழக்குப் பிரதேசம் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த காலகட்டத்திலும் நிர்க்கதியாகியிருந்த மக்களின் குறைகளை துணிச்சலுடன் இராணுவ தளபதிகளிடம் எடுத்துச் சொல்லி மக்களது குறைகளை அரச நிர்வாகத்தின் செவிப்பறைகளில் ஓங்கி ஒலிக்கச் செய்தவர். 1986-1998 காலப்பகுதியில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராகவிருந்தும் பணியாற்றியவர்.

பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வாழ்நாட் பணிக்காக பல விருதுகள் வழங்கப்பட்டன. தமிழக அரசின் அதியுயர் விருதுகளில் ஒன்றான திரு. வி.கலியாண சுந்தர முதலியார் (திரு. வி.க.) விருது இவருக்கு 2000ம் ஆண்டில் வழங்கப்பட்டமை- ஈழத்தமிழர் பெருமைகொள்ளத்தக்க விடய மாகும். இதுவரைகாலத்தில் இவ்விருதினைப்பெற்ற முதலாவது இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் இவ்விருதினை இலங்கையர் எவரும் இன்றுவரை பெறவில்லை என்று கருதுகின்றேன்.

1998இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை (Doctorate in literature- Honoris Causa) வழங்கிக் கௌரவித்திருந்தது. அதே ஆண்டு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனர் விருதான Man of the year விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. இதைவிட, கேம்பிரிஜ் பல்கலைக்கழகத் தின் International Biographical Centre இவருக்கு 20ம் நூற்றாண்டின் சிறந்த புலமையாளர் விருதினையும் வழங்கியிருந்தது.

(கரைகள் கடந்து. மட்டக்களப்பு அனாமிக்கா பதிப்பகம், ஏப்ரல் 2013: ப.16-19.)

33

அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி

ஈழத்தமிழ்ச் சமூகத்தின் அணையா விளக்கு

கடந்து சென்ற சிலநூற்றாண்டுகளில் ஈழத்தமிழர்களின் ஆன்மீக, சமூக வரலாற்றை உற்று நோக்கினால் அங்கே அவ்வப்போது வாழ்ந்து ஒளிர்ந்து மறைந்த பல சமயப்பற்றாளர்களையும், சமூகவியலாளர்களையும், ஆன்மீக அருளாளர்களையும் நாம் இனம்காணமுடியும். அவர்களில் பெரும்பான்மை யினர் தாம் வாழும் காலத்தில் சிறு வட்டத்திற்குள் மாத்திரம் போற்றப்பட்டு வந்தார்கள். அவர்கள் மறைந்தபின்னர் அடியார்களால் அவர்தம் பெருமைகள் வெளியுலகிற்குச் சொல்லப்பட்டு பலராலும் பின்னர் போற்றப்பட்டார்கள்.

ஆறுமுகநாவலர் பற்றி இன்று அதிகமாக வாசிக்கின்றோம், எழுதுகின் றோம், பேசுகின்றோம். அவரை இனம்காட்ட ஒரு புகைப்படம் கூட எம்மிடம் இல்லை. அவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு எதிராக பல மாற்றுக்கருத்தாளர்கள் அணிதிரண்டிருக்கிறார்கள். சைவ அருளாளர்களான வைரவியார் சுவாமிகள், மாம்பழம் சுவாமிகள், ஊதுவர்த்திச் சுவாமிகள், மூச்சம்புலவுச் சுவாமிகள், சார்ஜன் சுவாமிகள், நமசிவாயம் சுவாமிகள், கனகரத்தினம் சுவாமிகள், இடைக்காட்டுச் சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள், பெரிய சந்நியாசியார், மகாதேவ சுவாமிகள், திருவாசகச் சுவாமிகள், வடிவேற் சுவாமிகள், சோமாஸ்கந்தவேள் சுவாமிகள், தாளையான் சுவாமிகள், பஞ்சாட்சர அம்மா, சரவணமுத்துச் சுவாமிகள், நவநாத சித்தர், தேரடிச் சித்தர் செல்லப்பா, கோண்டாவில் கந்தையாச் சுவாமிகள் (குடைச்சுவாமி) உள்ளிட்ட பலரைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகள் திருப்திகரமாக அவர்கள் வாழ்ந்த காலங்களில் பேணப்படவில்லை. முழுமையாக ஆவணப்படுத்தப்படவுமில்லை.

இவர்களின் வழியில் ஒரு ஆன்மீகவாதியாகவும், சமூகசேவையாளராகவும், கல்வியியலாளராகவும், தலைசிறந்ததொரு நிர்வாகியாகவும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வாழ்ந்து மறைந்திருக்கிறார். விதி விலக்காக, அவரது வாழ்வும் பணிகளும் அவரின் வாழ்நாட்காலத்திலேயே மிகக் கச்சிதமாக ஆவணப்படுத்தப்பட்டுமுள்ளன என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இன்று தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் ஆலயங்கள் முழுமையாக வர்த்தகமயப்படுத்தப்பட்டு வரும் ஒரு காலகட்டத்தில் வாழ்ந்திருந்த தங்கம்மா அப்பாக்குட்டி தான் நிர்வகித்த தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தை ஒரு பூரணத்துவமான சமூக சேவைகளின் மையமாக மாற்றி சமூக விழிப்புணர்வினை ஏற்படுத்திவைத்திருந்தார். சைவக் கிரியை களை பேணுவது மட்டுமே கோயில்களின் பணியாகக்கருதப்படும் இன்றைய பொதுவான நிலையை இரண்டாம் தரமாக்கி, ஆன்மீக, லௌகீக வாழ் வினூடாகவும் இறைவன் பணிசெய்யலாம், சைவத்தையும் தமிழையும் சைவ சித்தாந்தத்தையும் வாழ்வியல்நெறிகளாக வளர்க்கலாம், பின்பற்றலாம் என்று செய்து காட்டியவர் இவர். ஆலயத்தின் பின்புலத்தில் தான் நடத்திய மகளிர் இல்லத்தில் வளர்ந்த சிறுமியர்களை, அவர்கள் சமூக வாழ்வில் சுய மாகவும் சுதந்திரமாகவும், நம்பிக்கையுடனும் இணையும்வரை ஆலமரமாக விருந்து நிழல் தந்து ஒரு தாயாகி மகிழ்ந்தவர் அவர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தங்கம்மா. இவர் அப்பாக்குட்டி-தையற்பிள்ளை தம்பதிகளின் மகளாக 7.1.1925இல் பிறந்தவர். 1929ஆம் ஆண்டு மல்லாகம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் தன் ஆரம்பக்கல்வியைப் பெற்றவர். இடைநிலைக் கல்வியை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் பெற்றார். 1940 ஆம் ஆண்டு க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்து, சுன்னாகம் (மருதனார்மடம்) இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சிக்குச் சேர்ந்தார். 1945 இல் சிறிதுகாலம் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் அங்கிருந்து 1946 இல் மட்டக்களப்பு புனித சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியராகப் பணியில் இணைந்தார். பின்னர், 1949இல் கொழும்பு, மருதானை பாத்திமா பெண்கள் பாடசாலையில் ஆசிரியராகப் பதவியேற்றார்.

தமிழையும் சைவ சித்தாந்தத்தையும் முறையாகக் கற்று 1941 இல் பிரவேச பண்டிதத் தேர்வில் சித்திபெற்றார். 1952 ஆம் ஆண்டு பாலபண்டி தராக தேர்வுபெற்று, 1953 இல் பண்டிதையாகச் சித்தியெய்தினார். சென்னை சைவ சித்தாந்தச் சங்கம் நடத்திய சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்து 1958இல் சைவப் புலவர் பட்டத்தையும் பெற்றார். இதன்மூலம் இவரே இலங்கையின் முதலாவது பெண் சைவப் புலவராகும் பெருமையையும் பெற்றார். 1958 இன் இலங்கை இனக்கலவரம் இவரது கொழும்பு வாழ்க்கையைப் பாதித்தது. 1958 இல் யாழ்ப்பாணம் திரும்பிய அம்மையார், அளவெட்டி சதானந்த வித்தியாலயத்தில் ஆசிரியப்பணியைத் தொடர்ந்தார்.

பின்னர் 1964 முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் தன் வாழ்வின் 31 ஆண்டுகளை ஆசிரியர் பணியில் கழித்திருந்தார். அதில் இறுதி 12 ஆண்டுகளை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கழித்தபின்னர் 1976இல் ஓய்வுபெற்றார். இவரை ஆசிரியராக உலகம் அறிந்திருந்ததைவிட- ஆன்மீகவாதியாகவும், சமூக சேவகியாகவுமே உலகம் அதிகம் அறிந்திருக்கிறது. இதற்குக் காரணம் இவர் ஆசிரியர் பணிக்கும் அப்பால் மேற்கொண்ட பிற உன்னத மனிதநேய முயற்சிகளே.

''பண்டிதை'' என்று அழைக்கப்பட்டு வந்த தங்கம்மா, தான் கொழும்பில் பணியாற்றிய காலத்தில் 1950-60களில் இலங்கை வானொலியில் மாதர் பகுதி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆன்மீகச் சொற்பொழிவுகளை மேற்கொண்டுவந்தார். கொழும்பில் பல இடங்களிலும் இவரது சமயச் சொற் பொழிவுகள் தனித்துவம்வாய்ந்ததாக அமைந்திருந்தன. கடல்கடந்து சென்றும் மலேசியா, சிங்கப்பூர், பிரித்தானியா, தமிழ்நாடு என்று இவரது சொற்பொழிவு கள் பெரும் அறிஞர்களின் மேடைகளை அலங்கரித்திருந்தன. தமிழ்நாட்டில் சிதம்பரத்திலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் 1965களில் இவர் உரையாற்றியிருக்கிறார். 1973ம் ஆண்டு தமிழகத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் நடைபெற்ற மங்கையர் மாநாட்டினை தலைமைதாங்கியதின்மூலம் ஈழத்துப் பெண்களின் சிறந்த தலைமைத்துவத்தையும் தமிழகம் அறிய வைத்தவர்.

இவர் எழுத்துத்துறையிலும் சைவசித்தாந்த ஆய்வுகளிலும் ஈடுபட்டவர். இவர் எழுதிய *ஈழத்துப் பிரபந்தங்கள்* என்ற ஆராய்ச்சிக் கட்டுரை 1954 இல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சமயச்சொற்பொழிவுகளை மேற்கொள்ளும் பொருட்டு 1987 மே மாதப் பகுதியில் அம்மையார் மேற்கொண்ட ஏழு வார லண்டன் பயணத்தின் போது பெற்ற அனுபவங்களை விபரித்து *இலண்டனில் ஏழுவாரம்* என்ற நூலை நாடுதிரும்பியதும் அவர் பதிவாக்கியிருந்தார். 1988 இல் இது நூலுருவாகியிருந்தது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் என்ற தலைப்பில் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தெல்லிப்பழை, துர்க்காதேவி ஆலயத் தின் பூர்வீகச்சிறப்பும் இன்றைய எழுச்சிப் பெருநிலையும் பற்றிச் சுருங்க விளக்கி ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அது யாழ்ப்பாணம், முரசொலி வெளியீடாக ஆவணி 1988 இல் சிறுநூலாக வெளிவந்திருந்தது.

தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் மணிவிழா 1985 இல் கொண்டாட முடிவெடுக்கப்பட்டது. அதன்போது திரு. த.சண்முகசுந்தரத்தின்

தலைமையில் மணிவிழா மலரொன்றும் வெளியிடத்திட்டமிடப்பட்டது. வழமையான சிறப்பு மலர்ப் பாரம்பரியத்துக்கு மாற்றாக மணிவிழா மலரில் அம்மையார் விரும்பி நேசித்த துறைகளில் ஒன்றான சைவசித்தாந்தம் பற்றிப் பலரையும் எழுதத்தூண்டி அவர்கள் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்* என்ற தலைப்பில் அந்த மலர் மலர்ந் திருந்தது. பல்கலைக்கழக மாணவரும், சைவசமய ஆய்வாளரும், திருக் கோயில்களை நெறிப்படுத்துபவர்களும் படித்துப் பயின்று பயனடையக் கூடியதாக சைவ சித்தாந்தம் பற்றியும், சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றியுமான 27 அறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாவையொட்டி வெளிவந்த அச்சிறப்பு மலர் இன்றளவில் பல்கலைக்கழக மட்டத்தில் ஒரு பாடநூல் போன்று போற்றப்பட்டு வருகின்றது.

அதே வேளையில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 60ம் ஆண்டு நிறைவு மணிவிழா மலராக மலர் வெளியீட்டுக் குழுவினால் மற்றொரு மலரும் *சிவத்தமிழ் இன்பம்* என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பாரம்பரியத்துக்கமைய மணிவிழாச் சபையால் ஜனவரி 1985இல் வெளியிடப் பட்டது. மூன்று பகுதிகளில் அமைந்திருந்த இம்மலரின் முதற் பகுதியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய ஆன்மீகச் சொற்பொழிவு களும் கட்டுரைகளும், இரண்டாம் பகுதியில் சிவத்தமிழ்ச் செல்விக்கு பல்வேறு பிரமுகர்கள் வழங்கிய வாழ்த்து மடல்கள், வாழ்த்துரைகள் என்பனவும், மூன்றாம் பகுதியில் மணிவிழாவுக்கென பிரத்தியேகமாக வழங்கப்பட்ட மணிமலர் மாலையும் இடம்பெற்றிருந்தன. 07.01.1985இல் நடைபெற்ற 60ம் ஆண்டு நிறைவு மணிவிழாவில் இம்மலர் வெளியிடப் பட்டது.

சட்டத்தரணி மு. சபாநாதன் அவர்களைத் தலைவராகக்கொண்டமைந்த பவளவிழாச்சபை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 75வது அகவையைப் பூர்த்தி செய்யும் நிகழ்வினை 7.1.2000 அன்று கொண்டாடியது. அப்போது *சிவத்தமிழ்ச் செல்வி: பவளவிழா மலர்* வெளியிடப்பட்டது. இந்நூல் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பாக்களுடன், 22 ஆய்வுக் கட்டுரைகளையும் உள்ளடக்கியிருந்தது. சைவசித்தாந்தம், இந்து நாகரிகம், திருக்குறள், மராத்திய நாடகம், யாழ்ப்பாணக் கோட்டை எனப் பல்வேறு விடயங்களிலும் இவ்வாய்வுகள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தான் அவ்வப் போது எழுதி ஊடகங்களிலும், மலர்களிலும் வெளிவந்த கட்டுரைகளைத் தனி நூலாகவும் தொகுத்து வெளியிடத் தவறவில்லை. 1989ம் ஆண்டு

முரசொலி வாரஇதழில் தொடர் கட்டுரைகளாக அவர் எழுதிய 12 ஆன்மீகம் சார்ந்த ஒழுக்கவியல் உரைகள் நூலுருவாக்கப்பட்டு *வாழும் வழி* என்ற தலைப்பில் சென்னை மணிமேகலைப்பிரசுரமாக 2002இல் வெளியிடப் பட்டது.

பெண்மைக்கு இணையுண்டோ என்ற தலைப்பில் மற்றுமொரு நூலையும் மணிமேகலைப் பிரசுரம் 2003இல் வெளியிட்டது. சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் 77ஆவது அகவைப் பூர்த்தியின்போது வெளியான இத் தொகுப்பில், சங்க இலக்கியங்கள் தொடக்கம் பாரதி பாடல்கள், பிற்காலப் பெண்கள் பற்றிய வரலாறுகள் வரையுள்ள காலப்பகுதியிலே தமிழ் இலக் கியங்கள் சித்திரித்துக்காட்டும் மாட்சிமை மிக்க பெண்களை சிவத்தமிழ்ச் செல்வி கூர்ந்து நோக்கியிருந்தார். இந்நூலின் ஒன்பது இயல்களிலும் சங்ககாலப் பெண்மை, வள்ளுவர் காட்டிய பெண்மை, இளங்கோ காட்டிய பெண்மை, சேக்கிழார் காட்டிய பெண்மை, கச்சியப்பர் காட்டிய பெண்மை, கம்பர் காட்டிய பெண்மை, பரஞ்சோதி முனிவர் காட்டிய பெண்மை, பாரதி காட்டிய பெண்மை, பிற்காலப் பெண்மை, என்ற ஒழுங்கில் இலக்கிய நயம் மிக்கதும் அறவியல் சார்ந்ததுமான பார்வையில் பெண்மையின் பெருமை பற்றிப் பேசியிருந்தார்.

தாயகத்தில் மட்டுமல்லாது அவர்தம் பெருமை தமிழர் புலம்பெயர்ந்த தேசமெங்கும் காவிச்செல்லப்பட்டது. அவை அவ்வப்போது நூலுருவிலும் ஆவணங்களாக வெளிப்பட்டன.

சிவத் தமிழ்ச் செல்வியின் தீந்தமிழ் இன்பம் என்ற தலைப்பில் ஒரு நூல் கனடாவில் மே 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அகிலன் அசோஷியேற்ஸ் வெளியீடாக புகலிடத்தில் மலர்ந்திருந்த இந்நூலில் இலக்கிய கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் தேர்ந்தெடுத்த இருபது உரைகள் இடம்பெற்றிருந்தன. இவை இந்துசமய தத்துவங்கள், சைவசித்தாந்தம் மற்றும் சமயம் சார்ந்த அறநெறிகளைப் புகட்டும் உரைகளாகும்.

அன்பு நெறி என்ற தலைப்பில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழா மலர் ஒன்று தி.விசுவலிங்கம் அவர்களை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு, கனடா: சைவசித்தாந்த மன்றத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. 2000ம் ஆண்டு தை மாதத்தில் துர்க்கா துரந்தரியின் 75வது பிறந்ததினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட கனடா சைவசித்தாந்த மன்றத்தினரின் மாத இதழான அன்புநெறியின் சிறப்பிதழாக இது அமைந்தது.

தங்கம்மா அம்மையாரை கௌரவிக்கும் புலம்பெயர் முயற்சிகளின் மற்றொரு உதாரணமாக தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முத்துவிழாச்

சிறப்பிதழ் ஒன்றையும் இங்கு குறிப்பிடலாம். மு.க.சு. சிவகுமாரன் அவர்கள் ஜேர்மனியில் இதனை வெளியிட்டிருந்தார். ஜேர்மனியிலிருந்து வெளிவரும் சிவத்தமிழ் ஆன்மீகக் காலாண்டுச் சஞ்சிகையின் 3வது இதழ் (தை-மாசி-பங்குனி, 2005) கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் எண்பதாவது அகவை நிறைவைக் குறிக்கும் முத்துவிழாச் சிறப்பிதழாக வெளிவந்திருந்தது.

1970 களில் சிறிய கோவிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆரம்பத்தில் அதன் நிர்வாக சபையில் பொருளாளராகவும், பின்னர் 1977 முதல் தலைவராகவும் இருந்து நிர்வகித்த வர். அதனைத் தனது ஆன்மீகப்பணிகளின் ஊற்றுவாயிலாகவும், மத்திய பணியகமாகவும் படிப்படியாக மாற்றிக்கொண்டார். ஆலய வளாகத்தில் அனாதைச் சிறுமிகளுக்கென்று துர்க்கா மகளிர் இல்லம் என்ற பெயரில் ஆதரவு நிலையம் ஒன்றை நிறுவிச் சமூகசேவையை யாழ்ப்பாணத்து ஆலயச் சூழலில் அறிமுகப்படுத்தினார். ஈழப்போரினால் அகதிகளாக்கப்பட்டு கோவிலில் அடைக்கலம் தேடிவந்த சில வயோதிபர்களுக்கும் அங்கு வாழ வசதிகள் செய்துகொடுத்தார். சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம், நல்லூரில் துர்க்காதேவி மணிமண்டபம் என்பனவற்றை உருவாக்கினார். ஆலயங்களின் வருவாய் சமூகத்துக்கே முழுமையாகத் திருப்பி வழங்கப்பட வேண்டும் என்ற இவரது கருத்தியல் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான கோவில்களாக விளங்கி அதிகூடிய பணவருவாயைப் பெற்றுச் செழித்திருந்த பல கோவில் முகாமைகளை கவலைகொள்ளச் செய்ததில் வியப்பில்லை.

தான் நிர்வகிக்கும் நிறுவனத்தின் சமூகப் பணிகளைப் பகிரங்கப்படுத்தி ஆவணப்படுத்துவதில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்றும் அக்கறை கொண்டுவந்துள்ளார். *துர்க்காபுரம்-தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ் தான நிர்வாகசபையின் 25 ஆண்டு நிறைவு வெள்ளிவிழா மலர்* ஒன்று மேற்படி தேவஸ்தானத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. 30.08.1991 அன்று வெளியிடப்பெற்ற இம்மலரின் வெளியீட்டுக்குழுவில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நம.சிவப்பிரகாசம், சு.சிவவாகீசர், நா.தவநாதன், அ. சண்முகநாதன், சு. ஏழூர்நாயகம், ந. சிவபாலகணேசன், திருமதி ந. ஞானலிங்கம், புலவர் ம.பார்வதிநாதசிவம், கா.சிவபாலன் ஆகியோர் இடம்பெற்றிருக் கின்றனர். நிர்வாக சபை அறிக்கைகளுடன், துர்க்கை வழிபாட்டின் தொன்மை யும் பெருமையும் (துர்க்காதாசன்), தத்துவம் நிறைந்த முக்கிய திருப்பணிகள் மூன்று (ந.சிவபாலகணேசன்), கோவிற் கலைகளின் நிலைக்களம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் (ஏ.ரி.பொன்னுத்துரை), துர்க்கா தேவஸ்தான வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்களிப்பு (கோகிலா மகேந்திரன்), சைவப் பெரியார் இ.நம.சிவப்பிரகாசம் அவர்கள் (ம.சி.சிதம்பரப்பிள்ளை) ஆகிய

கட்டுரைகளும் இன்னும் பல சமயக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

துர்க்காபுரம்-தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் இயங்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் 03.02.1982இல் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்த 15 ஆண்டுகளில் 500க்கும் மேற்பட்ட ஆதரவற்ற சிறுமியர் இணைந்து வளர்ந்து வேலைவாய்ப்பு, திருமணம் போன்ற காரணங்களால் வெளியேறியிருக்கிறார்கள். ஆதரவற்ற சிறுமியரைப் பராமரித்து சமூகத்திற்கு மீளவழங்கும் இவ்வரிய பணியை கோவில் நிதியில் மேற்கொண்டு முழுச் சைவ உலகிற்குமே முன்மாதிரியாக அமைந்திருக்கும் இச்சமூக நல அமைப் பின் பின்னணியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இருந்துள்ளார். *துர்க்காபுரம் மகளிர் இல்லம்: பதினைந்து ஆண்டுகள் நிறைவு விழா சிறப்பு மலர்* தெல்லிப்பழை, துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினால் பெப்ரவரி 1997 இல் வெளியிடப்பட்டது. மகளிர் இல்லத்தின் பல்வேறு பணிகளையும் அறிக்கைகளாகவும், வாழ்த்துரைகளாகவும் பதிவாக்கும் முயற்சியாக இம்மலர் அமைந்திருந்தது.

பின்னர் இவ்வில்லம் 2007இல் தனது 25ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்தவேளையிலும், துர்க்காபுரம் மகளிர் இல்லம்: சிறப்பு மலர் 2007 என்ற தலைப்பில் அதனை அறிக்கையிட்டது. 9 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வில்லம் பின்னாளில் பெரு விருட்சமாகி பலருக்கும் நிழல்பரப்பி நிற்கின்றது. பல்வேறு வாழ்த்துரைகளுடன் இவ்வில்லத்தின் வளர்ச்சி, மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் புகைப்படங்களுடன் இம்மலரில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் விருது களையும் புகழையும்நாடி அவரது பணிகளை முன்னெடுத்தவரல்ல. என் கடன் பணி செய்துகிடப்பதே என்பதே அவரின் போக்காக இருந்தது. இருப்பினும் பட்டங்களும் விருதுகளும் அவரைநாடி வந்தன.

இவருக்குக் கிடைத்த முதலாவது பட்டம் 1966இல் மதுரை ஆதீனத்தால் வழங்கப்பட்ட **செஞ்சொற்செம்மணி** என்பதாகும். இரண்டாவது பட்டம் 1970இல் காரைநகர் மணிவாசகர் சபை (ஈழத்துச் சிதம்பரம்) வழங்கிய **சிவத்தமிழ்ச்செல்வி** என்ற பட்டமாகும். இதுவே பின்னாளில் இவரது பெயருடன் பொருந்தி ஐக்கியமாகிவிட்டது. 1971இல் காஞ்சி மெய்கண்டான் ஆதீனத்தினர் **சித்தாந்த ஞானகரம்** என்ற பட்டத்தையும், 1972 இல் தமிழ்நாடு இராஜேஸ்வரி பீடாதிபதி **சைவதரிசினி** என்ற பட்டத்தையும் வழங்கினர். அதே ஆண்டில் (1972) மலேசியாவில், சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கம் **திருவாசகக் கொண்டல்** என்ற பட்டத்தை வழங்கினர். 1973இல் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரர் தேவஸ்தானம் **திருமுறைச் செல்வி** என்ற பட்டத்தை

யும் வழங்கியிருந்தனர். 1974இல் மட்டும் இவரைத்தேடி மூன்று பட்டங்கள் வந்தன. திருக்கேதீச்சர ஆலயத்தின் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் **சிவமயச் செல்வி** என்றும், அகில இலங்கை இந்து மாமன்றம் **சிவஞான வித்தகர்** என்றும், துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் **துர்க்கா துரந்தரி** என்றும் பட்டங்களை அவ்வாண்டில் அம்மையாருக்குச் சூட்டி மகிழ்ந்தனர். 1978 இல் மாதகல் நுணசை முருகமூர்த்தி தேவஸ்தானத்தினர் **செஞ்சொற்கொண்டல்** என்ற பட்டத்தையும், 1983 இல் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானத்தினர் **திருமொழி அரசி** என்ற பட்டத்தையும் வழங்கினர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1998 இல் **கௌரவ கலாநிதி**ப் பட்டத்தினை இவருக்கு வழங்கி கௌரவித்திருந்தது. 2003 இல் வவுனியாவில் இடம்பெற்ற தமிழிலக்கியப் பெருவிழாவில் வட-கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்பட்டதுடன் இலங்கை அரசினால் **கலாசூரி** என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2005இல் அகில இலங்கை இந்து மாமன்றம் மீண்டும் **தெய்வத்திருமகள்** என்ற பட்டத்தையும் இவருக்கு வழங்கியிருந்தனர். 2005 இல் அமெரிக்கா ஹவாய் சிவாய சுப்ரமணியசுவாமி ஆச்சிரமத்தினர் 2005ம் ஆண்டுக்கான சிறந்த இந்துப்பணிக்காக விருதை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு வழங்கிக் கௌரவித்தனர்.

1982 ஆம் ஆண்டில் காசிக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. காசிக்குச் செல்பவர்கள் தாம் பெறும் பற்றுக்களில் ஒன்றைத் துறக்கவேண்டும் என்ற சைவ சமயக் கோட்பாட்டின்படி அதன்பின்னர் தான் பொன்னாடை போர்த்தப்படுவதை துறந்துவிடுவதாக அறிவித்திருந்தார். தனக்குக் கிடைக்கும் சன்மானங்களாலும், நன்கொடைகளாலும் தான் உருவாக்கிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அறநிதியத்தின் மூலம் தனது ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் ஜனவரி 7இல் கல்விக்கூடங்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் பிற சமூகப் பணிகளுக்கும் நிதிக்கொடைகளை மேற்கொண்டு வந்தவர் இவர்.

அம்மையாரின் தமிழ்ப்பணியின் உச்சமாக அமைந்தது யாழ்ப்பாணத் தில் அவர் அமைத்திருக்கும் ஆய்வு நூலகமாகும். துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழாவன்று (07.01.2000) எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக 2002 இல் உருவாக்கப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி **சைவத்தமிழ் ஆய்வு நூலகம்** என்ற இந்த ஆய்வு நூலகத்தின் திறப்புவிழாவின் நினைவாக ஒரு சிறப்பு மலரும் தெல்லிப்பழை, சிவத்தமிழ்ச் செல்வி பிறந்த நாள் அறநிதியச் சபையின் வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. நூலகவியல் தொடர்பான பல ஆய்வுக்கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

ஆய்வுத்துறையில் அம்மையாரின் ஈடுபாடு பிற ஆய்வாளர்களாலும் அவ்வப்போது நினைவுகூரப்பெற்று வந்துள்ளது. *சைவ சித்தாந்தம்: ஓர்*

அறிமுகம் என்ற தலைப்பில் ஏ.என். கிருஷ்ணவேணி அவர்களின் ஆய்வு கொழும்பு, சேமமடு புத்தகசாலையினரால் சித்திரை 2008 இல் வெளியிடப் பட்டது. தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் விருப்பத்துக்குரிய ஆய்வுப் பரப்பாகிய சைவசித்தாந்தமே இங்கும் ஆராயப்பட்டுள்ளது. சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் 83ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டுப் பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்ட நூல் இதுவாகும். சிவத்தமிழ்ச் செல்வியின் அபிமானத்துக்குரிய நூலாசிரியர் கலாநிதி திருமதி ஏ.என். கிருஷ்ணவேணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவராகப் பணியாற்றுபவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

காலம் தந்த கைவிளக்கு: திருமுறைகளைக் கற்க ஒரு திறவுகோல் என்ற நூல் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களால் எழுதப்பெற்று சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 80 ஆவது பிறந்த நாள் சிறப்பு வெளியீடாக தை 2005 இல் வெளியிடப்பட்டது. திருமுறைகளில் காணப்படும் சொற்சுவையை, பொருட்சுவையை, பாடப்பெற்ற சந்தர்ப்பச் சுவையை, பாடலினால் கிடைத்த பயனை எட்டுத் தலைப்புகளில் ஆழமாகச் சிந்தித்து அருமருந்தாகச் செய்திகளை இந்நூல் தருகின்றது.

இதே காலப்பகுதியில் *சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்* என்ற நூலும் 2005 ஜனவரி 7ம்நாள் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்ட முத்துவிழாவையொட்டி, சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் அறநிதியச் சபையினரால் வெளியிடப்பட்டது.

அடுத்ததாக, புகழேந்திப் புலவர் எழுதிய நளவெண்பா என்ற நூல் மேற்படி பிறந்தநாள் அறநிதியத்தினரால் ஜனவரி 2006 வெளியிடப்பட்டது. தமிழிலக்கியத்தில் பாரம்பரியமாக முக்கிய இடம்பெற்று வந்துள்ள புகழேந்திப் புலவரின் நளவெண்பா, விளக்க உரையுடன் மீள்பிரசுரமாக வெளியிடப்பட் டுள்ளது. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 81ஆவது பிறந்ததின விழாவையொட்டியே இந்நூலும் வெளியிடப்பட்டது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பற்றிப் பலரும் பல நூல் களையும் கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளார்கள். *தங்கத் தலைவி* என்ற தலைப்பில் திருமதி கோகிலா மகேந்திரன் எழுதிய நூல் குறிப்பிடத்தக்கது. தெல்லிப்பழை கலை இலக்கியக்களம் ஜனவரி 2000 இல் வெளியிட்ட இந்நூல் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது ஆளுமைபற்றிக் கூறுகின்றது. இலக்கைத் தீர்மானித்தல், சேவை செய்தல், தலைவராய் இருக்கும் தன்மை, தொடர்பாடல் திறன், பொதுமக்களுக்கு உரையாற்றல், அன்பு செய்தல், நேரமுகாமைத்துவம் ஆகிய ஏழு தலைப்புக்

களில் சிவத்தமிழ்ச் செல்வியின் தலைமைத்துவ இயல்புகளை கோகிலா மகேந்திரன் இந்நூலில்ஆராய்ந்துள்ளார்.

வாழ்க அன்னை என்ற தலைப்பில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறநிதியச் சபை மேலும் ஒரு நூலை வெளியிட்டிருந்தது. 2005 ஜனவரி 7ம்நாள் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்ட தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் முத்துவிழாவை யொட்டி அன்னையை வாழ்த்தி உலகெங்கிலுமிருந்து அனுப்பப்பெற்ற வாழ்த்துச்செய்திகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்திருந்தது.

துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பேரில் இயற்றப்பெற்ற நான்மணிமாலை ஒன்றினை *தங்கம்மா நான்மணிமாலை* என்ற பெயரில் கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் இயற்றி கனடா, ஒன்ராரியோ இந்து சமயப் பேரவை வெளியீடாக ூலை 1997இல் வெளியிட்டார்.

மல்லாகம் செய்த தவம், நாநில மகள், சரித்திரப் புரட்சி, திட்டமிட்ட திருப்பணிகள், உலக வலம், எழுத்துத் தொண்டு, பற்பல பட்டங்கள், சமூகப் பணிகள், ஆதிசக்தி அற்புத சக்தி, வாழ்த்து ஆகிய பத்து தலைப்புகளில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்பான புகைப்படங்களுடன் கூடிய நூலாக இது அமைந்துள்ளது.

சந்திப்பும் சிந்திப்பும் என்ற தலைப்பில் சிரேஷ்ட பத்திரிகையாளரும் கவிஞருமான கே.பி. நடனசிகாமணி அவர்கள், தெகிவளை, இலங்கை மக்கள் பொதுப்பணி மன்றத்தின் மூலம் நவம்பர் 1999 இல் ஒரு நூலை வெளியிட்டார். அதில் தான் சந்தித்த பிரமுகர்களின் வரிசையில், தங்கம்மா அப்பாக்குட்டி பற்றியும் ஒரு நேர்காணலை இணைத்திருக்கிறார்.

நாடறிந்த பெரியோர்கள் என்ற தலைப்பில் மரகதா சிவலிங்கம், கொழும்பு பூபாலசிங்கம் பதிப்பகத்தினால் ஜனவரி 2002 இல் ஒரு நூலை வெளியிட்டார். தமிழ் வளர்த்த சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள், சிறுவர்களுக்கு உகந்த வகையில் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. தங்கம்மா அப்பாக்குட்டி பற்றியும் இந்நூல் பதிவுசெய்கின்றது.

பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள் என்ற தலைப்பில் கம்பவாருதி இ.ஜெயராஜ் அவர்கள் சென்னை நர்மதா பதிப்பகத்தின் வாயிலாக மே 2002 இல் ஒரு நூலை வெளியிட்டிருந்தார். 1997-98 களில் தினக்குரல் பத்திரிகையில் கடிதங்களின் வடிவில் பழம்பண்டிதர் என்ற புனைபெயரில் எழுதப்பட்ட கட்டுரைத்தொகுப்பு இதுவாகும். சமூகசேவகி தங்கம்மா அப்பாக்குட்டியைப்பற்றி சிலாகித்துச் சொல்வதான கடிதமொன்றும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது.

ஞானதீபம் என்ற தலைப்பில் குப்பிழான் சிவ.மகாலிங்கம் அவர்கள் சைவம், தமிழ், கல்வி, கலாச்சாரம் தொடர்பான தனது சொற்பொழிவுகளை 11 கட்டுரைகளின் உருவில் தொகுத்திருக்கிறார். இதில் ஒரு கட்டுரையாக அறப்பணிகள் புரியும் ஞானத்தாய்-சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

சமயப்பணியில் மனிதநேயத்தைக்கண்ட சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திடீரென நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு 15.6.2008 நண்பகல் 12.15 மணியளவில் இறைபதம் எய்தினார். மறுநாள் 16.6.2008 அன்று மாலை 4.00 மணிக்கு தெல்லிப்பழை இந்து மயானத்தில் அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இடம் பெற்றன. தமிழக முதல்வர் மு. கருணாநிதி உள்ளிட்ட பல பிரமுகர்களும் அம்மையாருக்கு இரங்கல் செய்திகளை அனுப்பிவைத்திருந்தார்கள்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிவபதப்பேற்றின் ஓராண்டு நினைவாக அவரது வாழ்க்கை வரலாறு கூறும் சிவத்தமிழ்ச்செல்வம் என்ற நூல் 2009 இல் மீள்பதிப்பாக வெளியிடப்பட்டிருந்தது. 23 ஆண்டு களுக்கு முன்னர் அவரது மணிவிழா வெளியீடாக மாவிட்டபுரத்தைச் சேர்ந்த தமிழறிஞர் த.சண்முகசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் முதற் பதிப்பினைக் கண்டிருந்தது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெற்றோர், ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, ஆசிரிய கலாசாலையும் ஆசிரியப்பணியும், ஆற்றிய பேருரைகள், பெற்ற பட்டங்கள், விருதுகள், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் உருவாக்கம் என்று பல விடயங்கள் இந் நூலில் வரலாற்றுப்பதிவாகியுள்ளன.

ஈழத்தமிழரின் வரலாற்றில் எம்மிடையே ஒரு ஆன்மீகவாதியாகவும், நல்லதொரு நிர்வாகியாகவும், சமூகசேவையாளராகவும் வாழ்ந்து மறைந்த ஒருவரை நாம் இழந்துவிட்டாலும், அவரது வாழ்வும் பணிகளும் அவரது நினைவுகளை என்றென்றும் தமிழ் உலகம் அறியும் வகையில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளமை திருப்தியளிப்பதாக இருப்பினும், அணையா விளக்காகத் தமிழர்களின் மனதில் நிலைத்திருக்கும் அவரைப்பற்றிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிப் பதிவாக்கி தமிழர் அல்லாதவர்களும் அவர் தம் பெருமையை அறிந்துகொள்ள வழியமைப்பதையிட்டு எதிர்காலத்தில் நாம் சிந்திக்கவேண்டும்.

(சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்வியல் பணிகள். லண்டன்: சைவ முன்னேற்றச் சங்கம், மார்ச் 2011: ப.79-91.)

34

எஸ்பொ

வரலாற்றில் வாழ்பவர்

இலங்கையின் மூத்த படைப்பாளிகளுள் ஒருவராக, எஸ்பொ என்று தமிழ் இலக்கிய உலகில் அழைக்கப்பட்டுவந்த எஸ் பொன்னுத்துரை அவர்கள் அவுஸ்திரேலியாவில் சிட்னியில் 26.11.2014இல் காலமான துயரச்செய்தி எம்மை அண்மையில் வந்தடைந்துள்ளது. மித்ரா என்ற பெயரில் இவரது புதல்வரொருவர் விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டு மாவீரரானவர். அவரது நினைவை மற்றைய மாவீரர்களுடன் நினைவுகூரும் வேளையில் எஸ்போவின் மறைவும் நிகழ்ந்திருக்கின்றது.

அமரர் எஸ்பொ பற்றிய மனப்பதிவுகளை இன்றைய உரையில் அவரது ஆத்மசாந்திக்கான பிரார்த்தனைகளுடன் எனது சிறு அஞ்சலியாக ஐ.பீசி. தமிழ் வானலை நேயர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

எஸ்பொ- யாழ்ப்பாணத்தில் சண்முகம் தம்பதியினரின் மகனாக 1932ம் ஆண்டின் ஜுன் மாதத்தின் 4ஆம் திகதியில் பிறந்தவர். இவ்வுலகவாழ்விலிருந்து மறையும் வேளை அவர் 82 வயதைக் கண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் தன் ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியையும் பெற்றபின்னர் எஸ்பொ அவர்கள் தமிழ்நாட்டின் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டார். பின்னர் சிலகாலம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றிருந்தார். இளம்பராயத்தில் இருந்தே தீவிர இலக்கிய வாசகராயிருந்த இவர் ஆங்கில இலக்கியங்களின் பாலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தனது 13ஆவது வயதில் எழுத ஆரம்பித்த இவர், தனது மூத்த சகோதரரும் தமிழ்ப்புலமைமிக்கவருமான தம்பையா அவர்கள், அந்நாட்களில் மாணவர் தேர்ச்சிக் கழகத்தின் சார்பில் வெளியிட்டு வந்த *ஞானோதயம்* என்ற கையெழுத்துச் சஞ்சிகையில் நிறையவே எழுதிவந்திருந்தார்.

எஸ்பொ அவர்கள் ஆரம்பகாலத்தில் மகாகவி பாரதியார் மற்றும் பாரதிதாசன் ஆகியோரின் எழுத்தின்பால் தீவிர ஈடுபாடு கொண்டவர் என்பது

இலக்கிய உலகில் அவரை நன்கறிந்த அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். இவர்களின் பாதிப்பில் எஸ்பொ எழுதிய முதலாவது கவிதை வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்தது. இதுவே அச்சில் வெளிவந்த இவரது முதலாவது படைப்பாகும். கவிதையில் தொடங்கியவர் அதில் மாத்திரம் ஈடுபாடு கொள்ளாமல் பின்னாளில் சிறுகதை, நாவல், இலக்கியக் கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள் என்று தன் எழுத்துலகப் பரப்பினை விரிவுசெய்து கொண்டார்.

1947இன் பின்னர் இந்தியப் படைப்பாளிகளின் நூல்களில் எஸ்பொ ஈடுபாடு கொள்கிறார். இதற்கு த.ராஜகோபால் என்ற ஒரு பெரியார் துணை யிருந்ததாக இவர் குறிப்பிட்டிருக்கிறார். தனது சர்ச்சைக்குரிய நூலான ''தீ'' என்ற நாவலை த.ராஜகோபாலுக்கே சமர்ப்பித்துமுள்ளார். ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் திருப்புமுனையாகிவிட்ட இந்நாவல் தமிழகத்தில் சரஸ்வதி இதழை நடத்திய விஜயபாஸ்கரன் என்பவரின் முயற்சியால் அச்சுருக்கண்டது.

எஸ்பொவின் முதலாவது சிறுகதை 1948இல் கொழும்பிலிருந்து வெளிவந்த சுதந்திரன் பத்திரிகையில் இடம்பெற்றது. 17 வயது இளைஞ னாயிருந்த போதே இவரது படைப்புக்கள் பல இலங்கைப் பத்திரிகைகளில் மாத்திரமல்லாது, தமிழக இதழ்களான காதல், பிரசண்ட விகடன், ஆனந்த போதினி போன்றவற்றிலும் வெளிவந்துள்ளன. தமிழ்நாட்டு வாசகர்களுக் கேற்றவாறு, தமிழகப் பின்னணியில் எம்மவர்கள் எழுதிவந்த வேளையில், ஈழத்து மண்மணம் கமழும் இலக்கியங்களை அந்நாளிலேயே துணிந்து தமிழகப் பத்திரிகைகளில் எழுதி உலாவவிட்ட பெருமை இவருக்குரியது.

தனது ஈழத்துப் படைப்புகளில் எஸ்பொ முழுமையான கற்பனாவாதத்தைப் புகுத்தாமல், யதார்த்த இலக்கிய மரபொன்றினைத் தோற்றுவித்தவர். ஏழு தசாப்த காலமாகத் தன் இலக்கியப் போக்கிலிருந்து வழுவாது பயணித்தவர். தீ என்ற தனது முதலாவது நாவலே சர்ச்சைக்குரியதாகிய பின்னர் தொடர்ந்து அவர் எழுதிய பல நாவல்களும் சிறுகதைகளும் சமூக, இலக்கியச் சர்ச்சை களுக்குரியனவாகவே அமைந்துவிட்டன. இதனால் எஸ்பொவை ஈழத்து எழுத்துலகின் ஒரு பகுதியினர் இன்றும் சர்ச்சைக்குரிய படைப்பாளியாக, இலக்கியக் கலகக்காரனாக இனம்காண்கின்றனர். அவரது பரீட்சார்த்த முயற்சி கள் பலவும் அவர் விரும்பியோ விரும்பாமலோ அவரை ஒரு சர்ச்சைக் குரியவராகவே நிலைக்கவைத்தன. ஈழத்து இலக்கியச் சூழலில் அவரது கருத்துக்களுக்கு கிட்டிய எதிர்வினைகளினால், அவரும் தன்னை பலநிலை களிலும் இத்தகைய எதிர்ப்பலைகளை எதிர்கொள்ளும் ஒரு படைப்பாளியாகவே இனங்காட்டிவரலானார்.

1956இல் ஆசிரியத் தொழிலைத் தன் வாழ்வாதாரத்திற்காகத் தேர்ந்து கொண்ட எஸ்பொ. கிழக்கிலங்கையில் சிலகாலம் பணியாற்றினார். மட்டக் களப்பில் பணியாற்றியவேளையில் தன்னுடன் படிப்பித்துவந்த சக ஆசிரியை ஒருவரையே காதலித்துத் திருமணம் செய்துகொண்டார்.

1960 களில் கொழும்பு சாஹிராக் கல்லூரியில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டில் கலந்துகொண்டு, முற்போக்கு எழுத்தாளர்களுடன் கருத்தியல் முரண்பாடு கொண்டு மகாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்து பத்திரிகைச் செய்திகளில் இடம்பிடித்துக்கொண்டார். அன்று அவருடன் இணைந்து வெளி நடப்புச் செய்தவர்களுள் முன்னணிப் படைப்பாளி வ.அ. இராசரத்தினம், அரசு வெளியீடு என்ற வெளியீட்டகத்தையும், இளம்பிறை அச்சகத்தினையும் இளம்பிறை என்ற பெயரில் ஒரு மாத இதழையும் நடத்திவந்த எம்.ஏ.ரஹ்மான் ஆகியோர் முக்கியமானவர்கள்.

இளம்பிறை ரஹ்மான் பின்னாளில் எஸ்பொவின் நெருங்கிய சகாவாக அறியப்பட்டவர். சென்னை கோடம்பாக்கத்தில் பின்னாளில் வசித்துவந்த ரஹ்மானின் ஆதரவுடன் சென்னையில் மித்ர பதிப்பகத்தை உருவாக்கினார். இவரது பதிப்பகத்துறை ஈடுபாட்டுக்கு அவரது மகன் வைத்திய கலாநிதி அனுரா முக்கிய பங்காளியாவார்.

முற்போக்கு இலக்கியப் படைப்பாளிகளின் முகாமிலிருந்து வெளியேறி, நற்போக்கு இலக்கிய முகாமைத் தோற்றுவித்த எஸ்பொ. அண்மையில் கூட, 2013இல் ஒரு நூலை தனது நற்போக்கணியின் வரலாற்றின் ஐந்தொகையாக எழுதியிருக்கிறார். ''நற்போக்கு இலக்கியம் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும்'' என்ற தலைப்பில் சென்னை மித்ர வெளியீட்டகத்தின் வாயிலாக ஒரு நூலினை இவர் வெளியிட்டிருந்தார். 1960களில் முற்போக்கு அணி யினரின் மார்க்சிசப் போக்கு, இனவாத அரசோடு அவர்கள் கைகோர்த்துச் செயற்பட்டமை காரணமாக அவர்களை தீவிரமாக விமர்சனம் செய்துவந்தவர் எஸ்.பொ. இதன் எதிர்ப்பலையாக ignore ESPO என்ற கொள்கையை முற்போக்கு அணியினர் முன்வைத்து எஸ்பொவை முடிந்தவரை ஓரம் கட்டியும் இருட்டடிப்புச் செய்தும் பிற்காலத்தில் பழிவாங்கினர். அதன் விளைவாக எதிர்ப்புகளையும் நிராகரிப்புகளையும் அங்கீகாரமாக ஏற்றல் தனது வழி என்ற விசையுடன் அவர் ஏற்படுத்திய சித்தாந்தமே நற்போக்கு இலக்கியம். இதனை ஒரு அறிக்கையாகவும் 1963 இல் பகிரங்கப்படுத் தியிருந்தார். அக்காலகட்டத்தில் வீரகேசரி வார இதழிலும் இது தொடராக பிரசுரமாகியிருந்தது. ஐம்பதாண்டுகள் கழிந்த நிலையில் அவ்வறிக்கையை மீள்பார்வையிட்டு தனது நற்போக்கு இலக்கியக் கொள்கை இன்னமும்

வாழ்கின்றது- அது மலினமாக்கப்படவில்லை என்பதை மீளவும் இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார்.

இவரது முற்போக்கு-நற்போக்கு அணிப் பிரச்சினைகள் பற்றிய விரிவான உள்வீட்டுத் தகவல்கள், ''தேடல்: சில உண்மைகள்'' என்ற தலைப்பில் 2001ம் ஆண்டு வெளியான டென்மார்க் த.தர்மகுலசிங்கம் அவர்களின் நூலில் விரிவானமுறையில் அடங்கியுள்ளன.

2001ம் ஆண்டளவில், ஈழத்தமிழ் இலக்கிய உலகில் அரைநூற்றாண்டு களுக்கும் மேலாகப் பணியாற்றிய எஸ்.பொன்னுத்துரை பற்றிய ஒரு தேடலையும் அதன் மூலம் அரைநூற்றாண்டு காலமாக திரைமறைவில் இயங்கி வந்த ஒரு பனிப்போரையும் வெளிக்கொண்டு வரும்பொருட்டு, டென்மார்க் தர்மகுலசிங்கம் அவர்கள் பாரிய முயற்சியொன்றினை இந்நூல் வழியாக, எஸ்பொவின் ஆசியுடன் மேற்கொண்டிருந்தார்.

திரு தர்மகுலசிங்கம், எஸ்பொவுடன் நேரடியாகக் கொண்ட தொடர்பாடல் வழியிலும், வி.கே.டி. பாலன், எம். ஏ. ரகுமான் ஆகியோரின் நேரடி தக வல்களின் உதவியுடனும் பல்வேறு வெளியீடுகளின் ஆதாரங்களுடனும் இத்தேடல் முயற்சிகளைப் பதிவு செய்திருக்கின்றார். சென்னையில் வாழும் எழுத்தாளர் திரு வெங்கட் சாமிநாதன் அவர்கள் இந்நூலுக்கு காலத்தின் காளான்களையும் மீறி என்ற தலைப்பில் ஆழமான நீண்ட முன்னுரையும் வழங்கியிருக்கின்றார். எஸ்பொ பற்றிய வாழ்க்கை வரலாற்றை அறிய விரும்புவோர் நிச்சயம் இந்நூலை வாசிக்கவேண்டும்.

எஸ்பொ அவர்கள் உள்வாங்கியிருந்த ஆழமான இலக்கிய அறிவும், ஆங்கிலப்புலமையும், பின்னாளில் ஆபிரிக்க நாடுகளில் அவர் ஆசிரியத் தொழில் செய்யச் சென்றிருந்தவேளைகளில் ஆபிரிக்க இலக்கியங்களின்பால் தீவிர ஈடுபாட்டைத் தோற்றுவித்தது. அதுவே ஈழத்தமிழர்களுக்கு ஆபிரிக்க இலக்கியங்கள் பற்றிய ஆழ்ந்த புலமையுடன் எழுதப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்கள் பலவற்றை எஸ்போவின் வழியாகக் கொண்டுவந்து சேர்த்தது.

எஸ்பொ தமிழகக் கல்வியை நிறைவுசெய்து தாயகம் திரும்பிய பின்னர் வடமாகாண தமிழ் சமூக அமைப்புப் பற்றிய விரிவான பார்வை கிட்டியிருந்தது. அவ்வேளையில் அவரது தோழர்களாக இருந்த முற்போக்குச் சிந்தனைமிக்க படைப்பாளிகள், மார்க்சிய சிந்தனையாளர்கள், சமூகப் போராளிகள் ஆகியோரின் ஆதரவும் அவரது இலக்கிய முயற்சிகளுக்குத் தூண்டுதலாக இருந்தன. எஸ்பொவின் மூத்த ககோதரியின் கணவராக அமைந்தவர் எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள். வடமாகாண சிறுபான்மை வெகுஜன அமைப்பின் தாபகரான எம்.சி. சுப்பிரமணியம், மாஸ்கொ பிரிவு- இலங்கை கம்யூனிஸ்ட்

கட்சியின் உறுப்பினராகவும் இருந்தவர். பின்னாளில் இவர் இலங்கை பாராளுமன்றத்தின் நியமன எம் பி ஆகவும் இருந்தவர். எனவே எஸ்பொவின் குடும்பச் சூழலிலும் சாதியொழிப்புப் போராட்டம் பற்றிய எண்ணக்கருக்களே வேரூன்றியிருந்தன. இதனால் உள்வாற்கப்பட்ட எஸ்பொ தனது படைப் பிலக்கியங்களிலும் சாதியம் குறித்த வன்மையான கருத்துக்களை முன்வைத்து வந்தார். இச்சூழலே இவருக்கு கே. டானியல், டொமினிக் ஜீவா, செ. கணேசலிங்கன் போன்றோரின் இறுக்கமான தொடர்புக்கு வழியமைத்திருந்தது.

வீ, ஆண்மை, வலை, அவா, தீ, சடங்கு, மாயினி, ஈடு, முள், பூ, தேடல், முறுவல்,அப்பையா, மத்தாப்பு, சதுரங்கம், என ஒற்றைச் சொல் படைப்புகள் பலவற்றை தந்தவர் இவர்.? (கேள்விக்குறி) யை மாத்திரம் தலைப்பாகக் கொண்ட இவரது மற்றும் ஒரு நூல் வித்தியாசமான தலைப்பு நூலாக அறியப்பட்டது. நூலகப் பட்டியலாக்கத்தில் நூலகர்களை தடுமாற வைத்து வெறுப்பைச் சம்பாதித்த நூல் இது. மேலும் அப்பாவும் மகனும், கீதை நிழலில், எஸ்பொ.கதைகள், தீதும் நன்றும், இஸ்லாமும் தமிழும், பெருங் காப்பியம் பத்து, நனவிடை தோய்தல், நீலாவணன் நினைவுகள், இனி ஒரு விதி செய்வோம், மணிமகுடம், காந்தியக் கதைகள், காந்தி தரிசனம் ஆகிய நூல்களும் குறிப்பிடத்தக்கவை. வரலாற்றில் வாழ்தல் என்ற பெருந்தொகுப்பு இவரது சுயவரலாற்று நூலாகும். எஸ்பொ மகாவம்ச என்ற சிங்கள நூலை தமிழாக்கம் செய்து அண்மையில் வெளியிட்டிருந்தார். வாத்சாயனரின் காம சூத்திரத்தையும் தனது முதுமைக்காலத்தில் தமிழாக்கம் செய்தவர் இவர் என்று நகைப்போரும் எமது இலக்கியவாதிகளிடையே உள்ளனர். இவரது படைப்புக்களைத் தனியாக வேறொரு உரையில் உங்களுக்கு வழங்கவிருப்ப தால் அவை பற்றிய மேலதிக விபரங்களைத் தவிர்த்துக்கொள்கின்றேன்.

(ஐ.பீ.சீ. காலைக் கலசம் உரைத் தொடரிலிருந்து... 2004.)

35

மலையகத்தின் இலக்கிய ஆளுமை

அமரர் சாரல்நாடனின் வாழ்வும் பணியும்

கடந்துபோன ஜூலை மாதத்தின் இறுதிநாளன்று (31.7.2014) எனது இலக்கிய நண்பரும், மலையகத்தின் இலக்கியவாதியும், வெளியீட்டாளருமான, சாரல்நாடன் அவர்களின் மறைவுச்செய்தி எம்மை வந்தடைந்தது. அச் செய்தி யின் பாதிப்பில், அன்பு நண்பர் சாரலின் பிரிவிற்கான அஞ்சலியாக இக் கட்டுரை அமைகின்றது.

இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னர் 1990 ஏப்ரல் மாதம் 6ம் 8ம் திகதிகளில் கண்டியில் உள்ள புஷ்பதான மாவத்தையில் அமைந்துள்ள தோட்டப்பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகத்தின் ஆதரவில் அயோத்தி நூலக சேவையினால் மலையகப் பிரதேச நூலக அபிவிருத்திக் கருத்தரங் கொன்றை நடத்தித் தருமாறு அவ்வமைப்பினரால் கேட்கப்பட்டிருந்தேன். 1990 இல் மலையகத்தில் இடம்பெற்ற இந்தக்கருத்தரங்கை வெற்றிகரமாக நடத்தி முடிக்க ஓடியாடித்திரிந்தவர்கள் இருவர். ஒருவர் மலையக வெளி யீட்டகத்தின் இயக்குநர் திரு. அந்தனி ஜீவா. இந்த நூலகர் கருத்தரங்கை சீராக நடத்தி முடிப்பதில் அதீத அக்கறையுடன் பெரும்பங்கினை வகித்த மற்றொருவர் சாரல்நாடன். அன்றுதான் சாரலின் அறிமுகம் எனக்குக் கிட்டியது.

க. நல்லையா என்ற இயற்பெயர் கொண்ட சாரல் நாடன் அறுபதுகளில் மலையகத்தில் ஏற்பட்ட அறிவியல் விழிப்புணர்வின் காரணமாக எழுச்சி பெற்ற இலக்கியகர்த்தாக்களில் குறிப்பிடத்தகுந்தவர். நல்லதொரு படைப் பிலக்கியவாதியாகவும் ஆய்வாளராகவும் தன்னை இனங்காட்டிக்கொண்டவர். மலையகம் தொடர்பான ஆய்வுகளே இவரது பொதுவாழ்வின் முக்கிய பக்கங்களாக அமைந்துவிட்டன. தான் எழுதிய நூல்களை வெளியிடுவதுடன், மலையக இலக்கியவாதிகளது பனுவல்ககளையும் தனது சாரல் வெளியீட் டகத்தின் வழியாகப் பதிப்பித்து இலக்கிய யாகம் புரிந்துவந்தவர் இவர். மலையக இலக்கியம் தொடர்பாகவும், அரசியல், கலை இலக்கியப் பிரமுகர்கள்

தொடர்பாகவும் ஆழ்ந்த அறிவும் தேடல் வேட்கையும் கொண்டவராக எம்மிடையே வலம்வந்தவர் சாரல்நாடன்.

இவரது முதலாவது நூல் *சி.வி.சில சிந்தனைகள்* என்ற பெயரில் 1986 இல் மலையக வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. ஈழத்தின்-குறிப்பாக மலையகத்தின் இலக்கியப் படைப்பாளியான அமரர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்வும் சிந்தனையும் பற்றிய நூல் இதுவாகும். அமரர் சி.வி.பற்றிய பல புதிய தகவல்களை மறக்கப்பட்ட அவரது வாழ்வின் பக்கங்களை மீட்டெடுத்து எமக்கு இந்நூலில் சாரல்நாடன் அவர்கள் வழங்கி யிருந்தார்.

சி.வி.போன்றே மலையகத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட மற்றொருவரான கோ.நடேசையரை தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தும் வகையில் *தேசபக்தன் கோ.நடேசையர்* என்ற நூலையும் எழுதி கண்டி மலையக வெளியீட்டகத்தின் வழியாக 1988 இல் வெளியிட்டிருந்தார். இலங்கை வாழ் பெருந்தோட்டத் தமிழரின் கடந்த 180 வருடகால வரலாற்றிலே யுகப்புயல் ஒன்றை ஏற்படுத்திய மாமனிதர் கோதண்டராம நடேசையரின் வாழ்க்கை வரலாறே இதுவாகும். மலையக மக்களின் இலக்கிய வரலாற்றின் தோற்றத்துக்கும், அரசியல் விழிப் புணர்வுக்கும் நடேசையர் ஆற்றிய பங்களிப்பு சாரல்நாடனின் முயற்சியால் இந்நூலில் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. 1988 இல் எழுதிய இந்த முன்னோடி நூலின் விரிவாக்கமாக, *பத்திரிகையாளர் நடேசய்யர்* என்ற மற்றொரு ஆய்வு நூலும் டிசம்பர் 1998 இல் சாரல்நாடனால் எழுதப்பட்டு மலையக வெளியீட்டகத்தின் வாயிலாக 208 பக்கங்களில் வெளியிடப் பட்டிருந்தது. மலையகத் தொழிற்சங்கவாதியான தேசபக்தர் கோ. நடேசையரின் பத்திரிகைத்துறைப் பங்களிப்பை இந்நூலில் சாரல்நாடன் அவர்கள் விரிவாக ஆய்வு செய்திருந்தார். மலையக வளர்ச்சிப் போராட்டத்தில் தன்னை இணைத் துக்கொண்டு தம்மையும் வளர்த்துக்கொண்டு தமிழ் இதழ்களையும் வளர்த்த கோ.நடேசையர் 14.01.1887 இல் தஞ்சாவூரில் பிறந்து 07.11.1947 இல் கொழும்பில் அமரரானவர். இவரது வாழ்வின் பல பக்கங்களை இவ்வாய்வு வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது சாரல்நாடனின் நடேசையரின் ஆய்வு நூலுக்காக வழங்கப்பட்டிருந்தது.

1990 இல் *மலையகத் தமிழர்* என்றொரு நூலின் வாயிலாக, மலையக மக்களின் சோக வரலாற்றை உள்வீட்டுப் பிள்ளையின் பார்வையில் இவர் எழுதி வெளியிட்டிருந்தார். இந்த மலையக மக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்துவிட்டதும், அவர்களது வரலாற்றைப் பொதித்து வைத்திருப்பதுமான அவர்களிடையே வழங்கிவந்த நாட்டார் பாடல்களை ஆய்வுசெய்து *மலையக*

வாய்மொழி இலக்கியம் என்ற மற்றொரு விரிவான ஆய்வினையும் பின்னர் மேற்கொண்டிருந்தார். இந்நூலை சென்னை: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ் ஏப்ரல் 1993இல் வெளியிட்டிருந்தது.

எழுத்தறிவற்ற பாட்டாளி மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் நாட்டார்பாடல்கள் எல்லா நாடுகளிலும் எல்லா இன மக்களிடையேயும் இருப்பது போலவே இலங்கை மலையக மக்களிடையேயும் வாய்மொழி இலக்கியமாக இருந்து வருகின்றது. தென்னிந்தியத் தமிழ்மக்களின் வம்சாவளியினர் என்பதால் தென்னிந்திய- தமிழக நாட்டார் பாடல்களையொத்த பல பாடல்கள் இவர் தம்வாய்மொழி வழக்கில் இருந்துவந்துள்ளன. தம் வாழ்க்கைச்சூழல் இயல்புகளுக்கேற்ப அவை திரிபடைந்து மலையக மக்களுக்கேயுரிய தனித்துவமான அந்த மண்ணின் பாடல்களாக அவை இன்று மிளிர்வதைக் காணமுடிகின்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள சாரல்நாடனின் 12 ஆய்வுக் கட்டுரைகளும், மலையக மக்களின் வாய்மொழி இலக்கியங்களை ஆய்வுரீதியாக வெளிக்கொணர்கின்றன. *மலையக வாய்மொழி இலக்கியம்* என்ற இந்நூல் அவ்வாண்டுக்கான மத்திய மாகாணச் சாகித்தியப் பரிசினையும் இவருக்குப் பெற்றுத் தந்திருந்தது.

சாமிமலை சிங்காரவத்தைத் தோட்டத்தில் மதுரை வேலூரைச் சேர்ந்த கருப்பையா கணக்குப்பிள்ளை - சிவகங்கையைச் சேர்ந்த வீரம்மா தம்பதியினரின் மகனாக 1944 இல் பிறந்த நல்லையாவுக்கு உடன்பிறந்த சகோதரிகள் ஐவர். நல்லையா என்ற தனது பெயரைப் பின்னாளில் சங்க இலக்கியங்களினால் இவரிடம் ஏற்பட்ட பாதிப்பினால் ''சாரல்நாடன்'' என்று மாற்றிக்கொண்டார். ஆரம்பக் கல்வியை அப்கொட் மின்னா தோட்டப் பாடசாலையிலும், உயர் கல்வியை ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். ஹைலண்ட் கல்லூரி மாணவர்களிடையே இலக்கியச் சஞ்சிகையொன்று சுவர்ப் பத்திரிகையாக அந்நாளில் அறிமுகமாகியிருந்தது. ''தமிழ்த் தென்றல்'' என்ற அச் சுவர்ப்பத்திரிகையே சாரல்நாடனின் இலக்கிய ஆர்வத்திற்கும் தளம் அமைத்துக்கொடுத்தது. கல்லூரி ஆசிரியர்கள் நவாலியூர் நா.செல்லத்துரை, இர.சிவலிங்கம், நயினை வே. குலசேகரம் ஆகியோர் இவருக்கு நல்லாசான்களாக இருந்து வழிகாட்டியதாக இவர் பின்னாளில் தன் கட்டுரைகளில் நினைவுகூர்ந்துள்ளார்.

ஆரம்ப காலத்தில் ''மலைநாட்டு நல்வாலிபர் சங்கம்'' என்ற அமைப்பில் இவர் ஈடுபாடு கொண்டிருந்து மலையக இளைஞர்களின் கல்வி வளர்ச்சிப் பணிகளிலும் அக்கறை காட்டிவந்தார்.

சாரல்நாடன், படைப்பிலக்கியத்துறையில் தனது முதலாவது சிறுகதையான ''காலஓட்டத்தை'' 1962 இல் வீரகேசரியில் எழுதியிருந்தார். இதனைத் தொடர்ந்து அக்காலகட்ட தேசியப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி ஆகியவற்றிலும் கண்டியிலிருந்து வெளிவந்த மலைமுரசு பத்திரிகையிலும் தொடர்ந்து இவரது சிறுகதைகள் வெளிவரலாயின.

1965ம் ஆண்டு முதல் தேயிலைத் தொழிற்சாலை உத்தியோகத்தராகப் பணியாற்றிய சாரல்நாடன், அத்துறையில் இருந்து 2000ம் ஆண்டு ஓய்வு பெற்றார். அவரது பதவிக்காலத்தில் தொழில்ரீதியாக பல உச்சங்களை இவர் எய்தியுமுள்ளார். தேயிலை ஆராய்ச்சி நிலையமும் தேசிய தேயிலை முகாமைத்துவ நிறுவனமும் இணைந்து நடத்திய தேர்வில் அகில இலங்கை ரீதியில் முதன்மையாகத் தேறிய பெருமையும் இவருக்குண்டு. அக்காலகட் டத்தில் தோட்ட சேவையாளர் காங்கிரஸ் அமைப்பில் பொதுச்செயலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

வெற்றிகரமான இவரது தொழிற்றுறையுடன் தொடர்பற்ற இவரது இலக்கிய, ஆய்வியல் பணிகளும் தங்குதடையின்றி இக்காலத்தில் சமாந்தரமாக இடம்பெற்று வந்துள்ளமை சாரல்நாடனின் மற்றொரு சிறப்பியல்பாகக் கணிக்கலாம்.

1994 இல் *மலைக்கொழுந்தி* என்ற தலைப்பில் பாரிய சிறுகதைத் தொகுப்பு ஒன்றினை சாரல் நாடன் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டிருந்தார். நாவல்களிலோ, சிறுகதை, கவிதைத் தொகுப்புக்களிலோ ஈடுபாடு காட்டாது கற்பனை கலவாத ஆய்வு நூல்களையே அதுவரையில் தந்துவந்த சாரல் நாடனின் படைப்பிலக்கியப் பணியில் வெளியான முதலாவது நூல் இது வாகக் கருதலாம் என நம்புகின்றேன். ஈழத்து எழுத்தாளர் என்.சோமகாந்தன் அவர்களின் ஒத்துழைப்புடன் சென்னை, குமரன் பதிப்பகத்தின் வாயிலாக டிசம்பர் 1994 இல் இவர் இதை தொகுத்து வெளியிட்டிருந்தார். இத் தொகுதி யில் இடம்பெற்ற கதைகள் யாவுமே மலையகத் தேயிலைத் தோட்டங்களில் உழைக்கும் தொழிலாளர்களது யதார்த்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகும். கற்பனை குறைந்து சிறப்புப் பெறும் இக்கதைகள் வளர்ச்சியடையும் சமுதாயத் தின் சமகால வரலாற்று நிகழ்வாகவும் இருப்பதை அவதானிக்கமுடிந்தது. இலைமறை காய்களாகவிருந்த பல படைப்பாளிகளை உலகுக்கு அறிமுகப் படுத்திய இந்த மலையகச் சிறுகதைத் தொகுப்பு அவ்வாண்டுக்கான மத்திய மாகாண சாகித்திய மண்டலப் பரிசினையும் இவருக்குப் பெற்றுக்கொடுத்தது.

மலையகம் வளர்த்த தமிழ் என்ற மற்றொரு கட்டுரைத் தொகுப்பு 1997 இல் சென்னை, துரைவி பதிப்பகத்தின் வாயிலாக வெளிவந்தது. மலையக

படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு மற்றொரு தளத்தில் நின்று அரும்பங்காற்றிய அமரர் துரை விஸ்வநாதன் அவர்களால் இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. 156 பக்கம் கொண்ட இந்நூல் 1990-1995 காலகட்டத்தில் சாரல்நாடன் அவர்களால் எழுதப்பட்ட 13 கட்டுரைகளின் தொகுப்பாகும். மலையகத்தைப் பின்புலமாகக்கொண்ட அது தொடர்பான கலை, இலக்கியம், மொழி, பண்பாடு, நூலகம், நூலியலும் வெளியீட்டுத்துறையும், நாட்டார் வழக்கியல், சிறுசஞ்சிகைகள் எனப் பல்வேறு அம்சங்கள் பற்றி இவரால் எழுதப்பட்ட பத்திரிகைக் கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. சாரல்நாடனின் இலக்கியத் தோழனாகவும், 80களின் ஆரம்பத்திலிருந்து இவரது ஆய்வு முயற்சிகளின் உந்துசக்தியாகவும் இயங்கிவரும் அந்தனி ஜீவா அவர்கள் மலையகம் வளர்த்த தமிழ் என்ற இந்நூலின் இணைநூலான மலையகம் வளர்த்த கவிதை என்ற நூலை 2002 இல் வெளியிட்டிருப்பதையும் இவ்வேளையில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

1920 களில் இலங்கையில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் பெண்ணின் அரசியல் வாக்குரிமைச் சிந்தனைகள் பற்றிக் கூறும் நூலான *இன்னொரு நூற்றாண்டுக் காய்* என்ற நூலை சாரல்நாடன் 1999 இல் எழுதியிருந்தார். இந்நூலின் நாயகி, நல்லம்மாவை உரிய முறையில் வெளிக்கொணர சாரல்நாடன் பல தளங்களில் உழைத்துள்ளார். தீவிரமான ஆய்வுகள் பல செய்துள்ளார். பெண் வைத்தியராகிய நல்லம்மா பெண்களது வாக்குரிமைக்கு ஏனைய பல பெண்களுடன் இணைந்து ஒத்துழைத்து தீவிரமாகப் போராடியுள்ளார். நல்லம்மா பற்றிய சாரல்நாடனின் இன்னொரு நூற்றாண்டுக்காய் என்ற இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி அவரது கருத்தோட்டத் தில் நல்லம்மாவின் பங்கு எத்தகையது என்பதை விளக்குகின்றது. அறிமுகம், பெண் வைத்தியர், சமுதாயப் பணியில் பெண்கள், மகளிர் வாக்குரிமைச் சங்கம், காலப்பின்னணி, பெண்கள் முன்னேற்றம், சர்வஜன வாக்குரிமை, நிறைவாக, அடிக்குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டிருந்தது. இந்நூலின் இரண்டாம் பகுதி பின்னிணைப்பாக, நல்லம்மாவினால் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட இந்திய இல்வாழ்க்கை, ஸ்திரிகளும் வாக்குரிமைகளும் ஆகிய இரு கட்டுரைகளைக் கொண்டுள்ளது. இந்நூலை கொழும்பு 6, பெண் கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினர்', ஆனி 1999இல் தமது வெளியீடாக வெளியிட்டிருந்தனர்.

தொழிற்றுறையில் ஓய்வுபெற்றதன் பின்னர் 2000இல் இவரது இலக்கியப்பணிகள் வீறுடன் செயற்பட்டதை என்னால் அவதானிக்க முடிந்தது. ''சாரல் வெளியீட்டகம்'' என்ற நூல் வெளியீட்டகம் ஒன்றை உருவாக்கி

அதன்வழியாகத் தரமான ஆய்வுகளை நூலுருவில் கொண்டு வரும் பணியில் சாரல்நாடன் அவர்கள் ஈடுபடத் தொடங்கினார். அதன் ஒரு கட்டமாக *மலையக இலக்கியம்: தோற்றமும் வளர்ச்சியும்* என்ற நூலை கொட்ட கலவிலிருந்து அவரது சாரல் வெளியீட்டகம் ஜூலை 2000 இல் வெளியிட் டது. மலையக இலக்கியம் உருவான வரலாறு, அதன் ஆரம்ப நிலைப்பாடு கள் ஆகியவற்றை விளக்கும் நூலாக இந்நூல் அமைந்திருந்தது.

பிணந்தின்னும் சாத்திரங்கள் என்ற மற்றொரு நூலையும் கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், நவம்பர் 2001 இல் வெளியிட்டது. இது சாரல் நாடனின் குறுநாவல் தொகுப்பொன்றாகும். ஜே.வி.பி. ஆயுதம் ஏந்திய காலகட்டத்தில் இலங்கையில் நிலவிய பயங்கரவாதப் பின்னணியில் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நேர்ந்த இன்னல்கள் பற்றிய சித்திரிப்பாகவும், 1983 இன் கறுப்பு ஜூலை காலகட்டத்தில் மலையகத்தில் ஓர் இந்தியப் பத்திரிகையாளனுக்கு நடந்ததைச் சித்திரிப்பதாகவும் அமையும் *பிணந்தின்னும் சாத்திரங்கள்*, *நம்பியவருக்காக*, *சமரசம்*, *பலி* ஆகிய நான்கு குறுநாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன.

அமரர் ஸி.வி.வேலுப்பிள்ளை ஆங்கில மொழி மூலம் எழுதிய நாவ லொன்று வாழ்வற்ற வாழ்வு என்ற தலைப்பில் பொ.கிருஷ்ணசுவாமி அவர்களின் தமிழாக்கத்துடன் தினகரனில் 1960ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தொடராக வெளிவந்தது. இதனை பின்னர் நூலுருவில் சாரல்நாடன் அவர்கள் பதிப்பித்து சாரல் வெளியீட்டக வெளியீடாக டிசம்பர் 2001 இல் வெளியிட்டிருந்தார். பிரபல இலக்கியவாதி அமரர் சிவி அவர்கள் (14.09.1914 -19.11.1984) தலவாக்கல்லையின் மக்கள் பிரதிநிதியாகவும் (1947-1952) நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர். அவரது பார்வையில், 1930களிலும் 1940களிலும் பெருந்தோட்டத்துறை எவ்வாறிருந்தது என்பதை இந்நூலின் வாயிலாக அறிந்துகொள்ளமுடியும். மொழிபெயர்ப்பாளர் பொ.கிருஷ்ணசாமி டெய்லி மிரர் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றவர். மலையக மக்களின் வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாகப் படர ஆரம்பித்த அவலங்கள் எழுத்தில் இந்நாவலில் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தன. பொன். அருணாசலம், ஜவகர்லால் நேரு, பெரி. சுந்தரம், நடேசையர், இலங்கை இந்திய காங்கிரஸ் காரர்கள் ஆகியோர் பற்றிய அமரர் வேலுப்பிள்ளையின் கணிப்பு ஆங்காங்கே நாவலில் இழையோடியுள்ளன.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் எழுதப்பட்டு 2003 இல் வெளியாகிய *மலையகத் தமிழர் வரலாறு* என்ற சாரல்நாடனின் மற்றொரு ஆய்வு நூல் சாகித்திய மண்டலப் பரிசை மீண்டும் அவருக்குப்

பெற்றுக் கொடுத்தது. இந்நூல் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலராக இலங்கை, மத்திய மாகாண கல்வி, கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி, உணவு வர்த்தகம், வாணிப சுற்றுலாத்துறை, இந்து கலாச்சார அமைச்சு வெளியீடாக வெளிவந்தது. நிலவரி, ரயத்துவாரி முறை, பஞ்சம், தமிழர்கள் கடல் கடத்தல், மலையகத் தமிழரின் அரசியல் அனுபவங்கள், நாடற்றோர் பிரச்சினை, மறக்க முடியாத நிகழ்வுகள், மலையக மக்கள் சமூகம், தோட்டப்புறக் கல்வி, வீடுகள், காணிகள், மாறிவரும் நிலைமைகள், மலையக மக்களின் வளர்ச்சிப்படிகளில், நுவரெலியாவின் சரித்திரம் ஆகிய 9 தலைப்புகளில் மலையகத் தமிழரின் வரலாறு இந்நூலில் சொல்லப்படுகின்றது. இந்நூலின் விரிவான பின்னைய பதிப்பொன்றும் *மலையகத் தமிழர் வரலாறு* என்ற அதே தலைப்பில் நவம்பர் 2003இல் கொட்டகலை, சாரல் வெளியீட் டகத்தினால் 330 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளமையையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

பேரேட்டில் சில பக்கங்கள் என்ற தலைப்பிலான தனது நூலை சாரல்நாடன், சாரல் வெளியீடாக, மே 2004இல் வெளியிட்டிருந்தார். மலை யகச் சமூகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள், பாடலாசிரியர்கள், இசை, நாடகக் கலைஞர்கள், நாவலாசிரியர்கள், புலவர்கள், இதழியலாளர்கள், அரசியல், தொழிற்சங்கவாதிகள், என 57 வரலாற்று நாயகர்களை இந்நூலில் சாரல்நாடன் தனது சிரமம் மிக்க தேடலின் வழியாக அடையாளம் காட்டி யிருந்தார்.

சாரல் வெளியீட்டகத்தின் மற்றுமொரு நூலாக சாரல் சாடன் எழுதிய *கண்டிராசன் கதை* என்ற வரலாற்று நூல் ஜுன் 2005 இல் வெளிவந்தது. 1815இல் முடிவுற்ற கண்டி இராச்சியத்தின் வரலாற்றை இந்நூலில் சாரல்நாடன் கூறமுற்பட்டுள்ளார். கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணத்தை இன்றுவரை தீர்க்கமாக அறியமுடியாதுள்ள நிலையில், புலமைத்திறத்துடன் ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட ஆவணங்களிலிருந்தும், சிங்களத்திலும் தமிழிலும் வழங்கிவந்த நாட்டார் பாடல்களிலிருந்தும் தகவல்களைச் சேகரித்து சுவையான வரலாற்று நாவல் போன்ற விறுவிறுப்புடன் இந்நூலை சாரல்நாடன் படைத்துள்ளார். அந்நூலில் இடம்பெற்றிருந்த கண்டிராசன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் தொடர்பான புகைப்படங்களும், சித்திரங்களும் நூலுக்கு மேலும் மெருகூட்டியிருந்தன.

புதிய இலக்கிய உலகம் என்ற இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு சாரல் வெளியீட்டகத்தின் வாயிலாக ஜுலை 2006 இல் வெளிவந்துள்ளது. இந்நூலில், இவர் தனது நாற்பதாண்டு மலையக இலக்கியப் பணியில் பெற்ற

அனுபவத்தை தளமாகக்கொண்டு கடந்த நூற்றாண்டில் இலங்கையில் மலர்ச்சியுற்ற மலையக இலக்கியத்தின் சில வரலாற்றம்சங்களைப் பதிவு செய்திருந்தார். மலையகத்தின் வளர்ச்சி பற்றிய உள்ளப் பதிவுகள் கட்டுரை களாகவும் இரண்டு கதைகளாகவும் இந்நூலில் இடம்பெற்றிருந்தன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம், தேயிலைத் தோட்டத்திலே மீனாட்சி, மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலையகக் கலை இலக்கியப் பேரவை, தொழிற்குலத் தின் கலைத்துறை, துரைவி பதிப்பகம், வாழ்க்கைப் பாதையில் (சிறுகதை), காலம் பதில் சொல்லட்டும் (சிறுகதை), அறுபதுகளில் தமிழ் எழுத்துக்கள், ஆகிய தலைப்புகளில் இப்பதிவுகள் இடம்பெற்றிருந்தன. வேறெங்கும் நிரந்தரப் பதிவு காணாத ஆரம்பகால மலையகச் சிறுகதைகள் மூன்றும் இங்கு தேடிப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய வரலாற்றினை எதிர்காலத்தில் விளங்கிக்கொள்ளவும், அதைப்பற்றி எழுதவும் முற்படுகின்ற எவரும் அமரர் சாரல்நாடனை நினைவுகூராது இருக்கமுடியாது. இவரது நூல்கள் இலங்கையின் மலையக இலக்கிய வரலாறு பற்றிய நுணுக்கமான பல முதன்மைத் தகவல்களைக் கொண்டிருக்கின்றன. இந்நூல் மத்திய மாகாண சாகித்திய விழாவில் 2007ம் ஆண்டுக்குரிய இலக்கிய ஆய்வுக்கான விருதினைப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மலையகக் கவிஞர் குறிஞ்சித் தென்னவன் (இயற்பெயர்: சுப்பையா வேலு) 12.3.1934இல் பிறந்தவர். 19.01.1998 இல் மறைந்தவர். அவர் மறைந்து பத்தாண்டுகளின் பின்னர் அவரது கவிதைகளைத் தொகுத்து *குறிஞ்சித் தென்னவன் கவிச்சரங்கள்* என்ற தலைப்பில் சாரல்நாடன் சாரல் வெளியீட்டக வெளியீடாக டிசம்பர் 2007இல் பதிப்பித்திருந்தார். ஏற்கெனவே குறிஞ்சித் தென்னவனின் கவிதைகள் அவ்வப்போது சிறு நூல்களாக இடம்பெற்றிருந்தன. இந்நூல் தென்னவனின் அச்சு ஏறாத கவிதைகள், சஞ்சி கைகளில் எழுதியவைகள் அனைத்தையும் தொகுத்து கால வரிசை விபரங்களுடன் வெளியிடப்பட்டிருந்தது. கவிதைகளின் முதல் அடியின் அகர வரிசை ஒழுங்கும் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் மலையகப் பெண்கள், புதிய உலகம், தொழிலாளத் தோழர்கள், இரங்கற் பாக்கள், இன வன்முறைகள், புதுக்கவிதை, குறும்பா என்று குறிஞ்சித் தென்னவனின் பரந்து விரிந்த ஆக்கங்களின் செழுமையை இந்நூலின் வழி யாக சாரல்நாடன் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு மீள் அறிமுகம் செய் திருந்தார். கவிஞரும் வாழ்வும் கவிதையும் என்ற தலைப்பில் குறிஞ்சித் தென்னவன் பற்றிய சாரல்நாடனின் கட்டுரையும் பதிவுக்குள்ளாகியுள்ளது.

இந்நூல் வெளியீடும் அதற்கென வழங்கப்பட்ட விருதும், சாரல்நாடனை கசப்பானதொரு சர்ச்சைக்குள்ளும் அக்காலகட்டத்தில் மாட்டிவிட்டிருந்தது.

இலங்கையின் மத்திய மலைப்பிரதேசத்தில் சீர்பெற்று விளங்கும் சிவனொளிபாதமலை பற்றிய வரலாற்றினை சுவைபடக்கூறும் ஒரு பிரயாண இலக்கியநூலையும் பரிசோதனை முயற்சியாக *சிந்தையள்ளும் சிவனொளி பாதமலை* என்ற தலைப்பில் மார்ச் 2009 இல் சாரல்நாடன் எழுதி, சாரல் வெளியீட்டகத்தின் வாயிலாக வெளியிட்டிருந்தார். வண்ணத்துப்புச்சிகள், மலைச்சிகரத்தில், காலடிச் சின்னம், இரு மார்க்கங்கள், சமந்தகூடம், யாத் திரிகைப் பருவம், பார்வை தோற்றமும் சூரிய உதயமும், சிவனொளிபாத மலையின் மாற்றுப் பெயர்கள், சிவனொளிபாத மலைக்கு சிறப்புச் சேர்த்த மன்னர்கள், சிவனொளிபாத மலையடிவாரத்தில் ஊற்றெடுக்கும் பிரதான நதிகள் ஆகிய தலைப்புகளின்கீழ் சுவையான பல தகவல்களைத் தேடிப்பெற்று இந்நூலில் வழங்கியிருந்தார். சுமார் 16 உசாத்துணை நூல்களின் ஆதாரங் களுடன் இந்நூல் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் சகிதம் பதிவாகியிருந்தது.

கொழும்பு குமரன் புத்தக இல்லம், சாரல்நாடனின் இரு நூல்களைத் தனது இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசை நூல்களாக வெளியிட்டுச் சிறப்பித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. மலையக நிர்மாணச் *சிற்பி கோ.நடேசையர்* என்ற தலைப்பில் சாரல்நாடன் எழுதிய நூல், 2009 இல் இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் பன்னிரண்டாவது நூலாக வெளிவந்துள்ளது. இந்நூல், கோ.நடேசையரின் வாழ்வை, மலையகமும் இந்திய வம்சாவளியினரும், நடேசையரின் இலங்கை வருகை, நடேசையரின் தொழிற்சங்க உலகம், நடேசையரும் சட்டசபையும், நடேசையரின் பத்திரிகை உலகம், நடேசையரின் பதிப்பலகம் ஆகிய ஆறு இயல்களில் பதிவுசெய்கின்றது.

மலையகத்தில் வாழ்ந்து 09.07.1999 இல் மறைந்த தனது ஆசானும், கல்வியாளரும், சமூக சிந்தனைவாதியுமான இர.சிவலிங்கம் அவர்கள் பற்றிய நூலொன்றை சாரல்நாடன் *இளைஞர் தளபதி இர.சிவலிங்கம்* என்ற தலைப்பில் எழுதி கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் வாயிலாக ஜூலை 2010இல் வெளியிட்டிருந்தார். இர.சிவலிங்கம் ஆசிரியப்பணியில், கலை இலக்கியப் பணியில், இலங்கைத் தோட்டச் சேவையாளர் சங்கத்தில், தாயகம் திரும்பிய தமிழர்களின் மத்தியில், கனவு காணும் சமூகம், மீண்டும் மலையகத்தில் ஆகிய ஆறு தலைப்புகளில் இந்நூல் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இர. சிவலிங்கம் சாமிமலை ஸ்டொக்ஹாம் தோட்டக் கணக்கப்பிள்ளை இரத் தினசபாபதிக்கும் பச்சையம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும், சென்னை கிறிஸ்தவக்கல்லூரியிலும் பயின்றவர்.

அறிஞர் அண்ணாவிடம் விருதுபெற்றவர். ஆசிரியர் சேவையில் சாரல்நாடன் உட்பட பல நன்மாணாக்கர்கள் உருவாகக் காரணமாகவிருந்தவர். இவரே மலையக இளைஞர் முன்னணியை அன்று உருவாக்கியவர் என்பதையும் பலர் அறிவர்.

ஸி.வி.வேலுப்பிள்ளை என்ற மற்றொரு நூலை குமரன் புத்த இல்லம் தனது இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் 18 ஆவது நூலாக 2013 இல் வெளியிட்டிருந்தது. மலையக அரசியல் மற்றும் இலக்கிய முன்னோடியான கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளை (1914-1984) அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய விரிவான தகவல்களை இந்நூல் உள்ளடக்கியது. பிறப்பும் வளர்ப்பும், முதலாவது நாடாளுமன்றத்தில், ஸி.வி.யின் கவிதைகள், ஸி.வி.யின் கட்டுரைகள், நாட்டுப்பாடல்கள், ஸி.வி.யின் நாவல்கள், சில பிரயத்தனங்கள், மரணப்படுக்கையில் ஆகிய எட்டுத் தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக ஸி.வி. வேலுப்பிள்ளை வாழ்க்கைக் குறிப்பு, ஸி.வி.வேலுப்பிள்ளை எழுதிய நூல்கள் ஆகிய விபரங்கள் பட்டியலிட்டுத் தரப்பட்டிருந்தன.

லோறி முத்துகிருஷ்ணாவின் ஜனமித்திரன் கட்டுரைகள் என்ற நூலை சாரல்நாடன் டிசம்பர் 2011இல் பதிப்பித்து, சாரல் வெளியீடாக வெளியிட்டிருந்தார். இலங்கை தேசிய காங்கிரஸ் தொடங்குவதற்கு ஓராண்டுக்கு முன்னர் இலங்கையில் இயங்கிய இந்தியர் சங்கத்தின் தலைவராகவிருந்து பணியாற்றியவர் லோறி முத்துகிருஷ்ணா. 3.6.1918முதல் வெளிவரத் தொடங்கிய தமிழ்த் தினசரியான ''ஜனமித்திரன்'' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும் இவர் பணியாற்றியவர். அவ்வேளையில் அதன் ஆசிரியராக எம்.ஏ.பீரிஸ் பணியாற்றினார். மூன்றாண்டுகள் தொடர்ந்த ஜனமித்திரனின் தேர்ந்த சில தலையங்கங்கள் அவ்வப்போது இந்தியாவில் பிரபல பத்திரிகையான சுதேசமித்திரனிலும் மீள்பிரசுரம் செய்யப்பட்டிருந்தன. ஜனமித்திரனில் லோறி முத்துக்கிருஷ்ணா எழுதிய முக்கிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. இலங்கையின் எதிர்கால ராஜீய வாழ்வு, இந்தியர்களின் நலவுரிமைகள், தொழிலாளர் இயக்கம், கூலியாட்களின் நிலைமை, படித்த வகுப்பார், சீர்திருத்த விரோதிகள், இலங்கை இந்திய அசோசியேஷன், இலங்கை லேபர் கமிஷன், மிஸ்டர் சீ.எப்.அண்ட்ரூசின் விஜயம், தப்பான எண்ணம், அந்தரங்கம் ஏனோ, தொழிலாளர் இயக்கம், இலங்கை நெஷனல் காங்கிரஸ், போலித் தலைவர்கள், சிலோனில் இந்தியத் தொழிலாளர்கள் ஆகிய தலைப்புகளில் இவர் எழுதிய 15 கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஜனமித்திரன் தினசரி வெளியாகி 93 ஆண்டுகளின் பின்னர்

அவர் எழுதிய கட்டுரைகள் இங்கு சாரல்நாடனின் அரிய முயற்சியின் பயனாக மீள்பிரசுரமாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தவரின் கதைகளை வெளியிடுவதில் அக்கறைகாட்டிவந்த சாரல்நாடன் தான் எழுதிய சிறுகதைகளை மாத்திரம் கொண்ட தனியான சிறுகதைத் தொகுப்புகளை இதுவரை வெளியிட்டதாகத் தெரியவில்லை. இவரது கதைகள் பல்வேறு சிறுகதைத் தொகுப்புகளில் ஏற்கெனவே இடம் பெற்றுள்ளன. கதைக்கனிகள் (1991), இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறு கதைகள் (1994), மலையகச் சிறுகதைகள் (1997), சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள்(1998) ஆகியன அமரர் சாரல்நாடனின் கதைகளை உள்ளடக்கிய தொகுப்புக்களில் சிலவாகும்.

இவரது கட்டுரைகளும் சில தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ளன. இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் 1995இல் வெளியிட்ட தமிழ் நாட்டார் வழக்காற்றியல் என்ற ஆய்வுத் தொகுப்பில் சாரல்நாடனின் ''மலையக நாட்டார் பாடல்கள்'' என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. மத்திய மாகாண அரசின் சாகித்திய மலர்கள் பலவற்றில் இவரது ஆக்கங்கள் இடம்பெறத் தவறுவதில்லை.

2003 மார்ச் 22-23ம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் 61ஆவது ஸ்தாபகவிழாவின்போது இறுதிநாளான 23ம் திகதி சாரல்நாடன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவொன்றை மேற்கொண்டார். அவரது நீண்ட சொற் பொழிவின் எழுத்துரு கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் அதிகாரபுர்வ ஏடான ஓலை 27இல் வெளியாகியிருந்தது. அதில் அவர் கூறியுள்ள கருத்துக்களை மீள இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

''மலையக இலக்கிய கர்த்தாக்கள் என்றறியப்பட்ட பலரின் எழுத்துக்கள் மலையக இலக்கியச்சோலையை வளம்படுத்துவதாக அந்தந்தக் காலங்களில் தோன்றி மறைந்த பத்திரிகைகளிலும் சிற்றேடுகளிலும் எழுதப்பட்டன. இன்றும் இச்சிற்றேடுகளில் தான் இவை உயிர்வாழ்கின்றன. படைத்த அவர்கள் தம் படைப்பின் துடிப்பை மாத்திரமே பிரதானமாக எண்ணினர். அவற்றை மீட்டிப் பார்க்கவோ, மீளப்படைக்கவோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. நினைப்பும் இருக்கவில்லை. அதற்கான அவசியம் இல்லாதது போலத்தான் நமது பெரும்பாலான எழுத்துக்கள் அமைந்திருக்கின்றன. உடல் உழைப்பாளர் களாக அறியப்பட்ட கல்வி அறிவு பெறாதிருந்த அவர்களது காலத்தில் அது சரியாக இருந்திருக்கலாம். இன்று நிலைமை வேறு. தமது காலத்தைய ஆதாரங்களாக எதையுமே விட்டுவைக்காத அவர்களின் வாழ்க்கை முறைமை

நமக்குக் கற்றுத் தந்ததெல்லாம் நம்மை ஆவணப்படுத்தலுக்காக உந்தச் செய்கின்றன.''

மல்லிகை இதழின் ஆகஸ்ட் 1991 இதழின் அட்டைப்படத்தில் இடம் பெற்று சிறப்புச் செய்யப்பட்ட இவர் மீண்டும் ஞானம் சஞ்சிகையின் ஜனவரி 2005 க்குரிய இதழின் அட்டையிலும் இடம்பெற்றிருந்தார். பின்னாளில் இலங்கை அரசின் இலக்கிய வித்தகர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

ஈழத்தின் மலையக இலக்கிய உலகில் இருந்து சி.வி., நடேசையர், லோறி முத்துக்கிருஷ்ணா, இர.சிவலிங்கம் உள்ளிட்ட பலரையும் உலகுக்கு வெளிச்சமிட்டுக் காட்டிய பெருந்தகையாளன் அமரர் சாரல்நாடனை உலகுக்குத் தனியொரு நூலின் வழியாக வெளிச்சமிட்டுக் காட்டிய பெருமை கலாநிதி க.அருணாசலம் அவர்களைச் சாரும். *சாதனையாளர் சாரல்நாடன்* என்ற தலைப்பில் க.அருணாசலம் அவர்கள் பதிப்பித்து சாரல் வெளியீட்டகம் ஜனவரி 2005இல் வெளியிட்டு வைத்த அந்நூலில் ''ஈழத்து இலக்கிய வரலாற்றின் மூல நாயகர்களுள் ஒருவரான சாரல்நாடன் பற்றிய ஒரு குறிப்பு'' என்ற தலைப்பிலான பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கட்டுரையையும், ''சாதனையாளர் சாரல்நாடன்'' என்ற தலைப்பில் கலாநிதி க.அருணாசலம் தான் எழுதிய கட்டுரையையும், ''சாரல் நாடனும் ஈழத்துத் தமிழியல் ஆய்வு வளர்ச்சியும்'' என்ற தலைப்பில் கலாநிதி செ.யோகராசா எழுதிய கட்டுரை யையும் சேர்த்து ஒரு தனி நூலாகப் படைத்திருந்தார். சாரல்நாடன் என்று இலக்கிய உலகில் அறியப்பட்ட அமரர் கருப்பையா நல்லையா அவர்களது மணிவிழா நினைவாக இந்நூல் தொகுக்கப்பட்டது.

அடுத்தவரின் படைப்பிலக்கியங்களை உலகிற்கு அறிமுகப்படுத்துவதில் தான் கொண்ட அக்கறையை, சாரல்நாடன் தனது சிறுகதைகள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவதில் காட்டவில்லை என்பது பெருங்குறையாகும் என்பதை ஏலவே சுட்டிக்காட்டியிருந்தேன். இனிவரும் காலத்தில் அவரது நினைவாக அவர் விட்டுச்சென்ற இவற்றை நாம்தான் தேடித்தொகுத்து ஆவணப்படுத்தவேண்டும். இதுவே அமரர் சாரலின் மலையக இலக்கிய, வரலாற்றுப்பணிகளுக்கு நாம் செய்யும் கைம்மாறாக அமையும்.

மலையகம் கண்ட மாபெரும் இலக்கிய ஆளுமையொன்றின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

(ஞாயிறு தினக்குரல். 17.8.2014: ப.36, 24.8.2014: ப.36.)